# மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக்கல்வி



# பி.ஏ. (தமிழ்)

## இரண்டாம் ஆண்டு

தாள் - IV

# இலக்கணம் : எழுத்தும் சொல்லும்

DEC அங்கீகாரம் பெற்றது

w.w.w.mkudde.org

R 69

© பதிப்புரிமை : தொலைநிலைக்கல்வி

Acc-mku
01226

MKU C / 500 Copies -

# பி.ஏ., இரண்டாம் ஆண்டு

# பகுதி XII (a)– பாகம் III

# தமிழ் – சிறப்புப் பாடம் – தாள் IV

# இலக்கணம் : எழுத்தும் சொல்லும்

## பாட அமைப்பு முறை

அ) எழுத்ததிகாரம்

1. எழுத்தியல்
2. பதவியல்
3. உயிரீற்றுப் புணரியல்
4. மெய்யீற்றுப் புணரியல்
5. உருபுப் புணரியல்

ஆ) சொல்லதிகாரம்

1. பெயரியல்
2. வினையியல்
3. பொதுவியல்
4. இடையியல்
5. உரியியல்

இ) இக்கால மொழியியல்

1. மொழியும் மொழியியலும்
2. மொழி வரலாறு
3. கிளை மொழியியல்
4. தொடரியல் கோட்பாடுகள்
5. இக்காலத் தமிழ்

ஈ) கற்கும் நெறிமுறைகள்

உ) முன்னைய ஆண்டு வினாத்தாள்கள்

# நன்னூல்

## அ) எழுத்ததிகாரம்

*இலக்கணம் எழுத்தும் சொல்லும்* என்ற தாளுக்குரிய பாடப்பகுதி பவணந்தியார் இயற்றிய *நன்னூல்* என்ற இலக்கண நூலை அடிப்படையாகக் கொண்டது. தொடர்பு நூல்களான இக்கால மொழியியல், இக்காலத் தமிழ், தமிழ் மொழி வரலாறு, கிளைமொழியியல், மாற்றிலக்கணக் கோட்பாடுகள் என்பனவும் பாடமாக உள்ளன.

### முன்னுரை

தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள் பல. அவற்றுள் தொன்மைமிக்கது தொல்காப்பியம். அதனை அடியொற்றி எழுந்த நூல் நன்னூல். இந்நூலுக்கு உரைவகுத்தோர் பலர். அவருள் சிறந்தோர் மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், இராமானுசக் கவிராயர், விசாகப்பெருமாள் ஐயர், ஆசிரிய நிகண்டியற்றிய ஆண்டிப்புலவர் என்போர். அவருள் நெல்லைச் சங்கரநமச்சிவாயர் இயற்றிய உரையும், அவ்வுரையை நன்கு செப்பனிட்டும் தம் அரிய கருத்தை வழங்கியும் விரித்துரைத்த மாதவச்சிவஞானமுனிவர் விளக்கமும் இளங்கலைக்குப் பாடமாக உள்ளன.

இதன் ஆசிரியர் பவணந்தியார், சமண சமயத்தைச் சார்ந்தவர். பிறந்த ஊர் சனகாபுரம்; தந்தை சன்மதி முனிவர்; பவணந்தியாரை ஆதரித்தவன் கங்ககுலத்துத் தோன்றல் சீயகங்கன். அச்சீயகங்கன் செய்த திருவிளக்குப் பணிபற்றிய கல்வெட்டால் அவர்கள் குலோத்துங்க சோழன் காலத்தைச் சார்ந்தவர்கள் என்றறிகிறோம். கி. பி. 1205ல் செதுக்கிய கல்வெட்டு ஒன்றில் சீயகங்கனுக்குத் திருவேகம்பமுடையான் என்ற பெயர் இருந்தது என்பதும் தெரிகிறது. பவணந்தியார் நூலை ஆக்கும்போது ஐவகை இலக்கணத்தையும் ஒருங்கே அமைத்தார் எனத் தெரிகிறது. ஆயினும் பிற்காலத்தில் எழுத்தும் சொல்லுமே எஞ்சின.

இந்நூலை எழுத்ததுகாரம், சொல்லதிகாரம் என இருவகையாகப் பகுத்து அவற்றுள் எழுத்தை முதல் சார்பு என்று வகுத்து அவற்றின் இலக்கணமாக எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, ஈற்றுநிலை, இடைநிலை, போலி, பதம், புணர்ப்பு எனப் பன்னிருவகையாக விளக்குவார். எண்முதல் போலிவரையுள்ள பத்தினையும் எழுத்தியல் என ஓரியலாக அமைத்துப் புணர்ப்பு என்பதை உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபுப்புணரியல் என்று மூன்றாகப் பிரித்தும் எழுத்திலக்கணத்தை அமைத்துள்ளனர்.

## 1. எழுத்தியல்

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

*பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த*
*நான்முகன் தொழுது நன்கு இயம்புவன் எழுத்தே* (56)

பூக்கள் மலிந்த அசோக மரத்தினது அலங்கரிக்கும் நிழலின்கண் எழுந்தருளியிருந்த நான்கு திருமுகங்களையுடைய கடவுளை வணங்கி, எழுத்திலக்கணத்தை நன்றாகச் சொல்லுவன்.

எல்லா நூலும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூறவேண்டுதலின் பூமலி என்றும் எல்லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் படைப்பு முதலிய ஐந்தொழிற்கும் உரிய எல்லாக் கடவுளாகியும் நின்றான் ஒருவனே என்பார் அருகனை நான்முகன் என்றும் கூறினார்.

### எழுத்திலக்கணத்தின் பகுதி

*எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை*
*முதலீ று இடைநிலை போலி என்றா*
*பதம்புணர்ப்பு எனப்பன் னிருபாற் றதுவே* (57)

மேற்கூறிய பன்னிரண்டு பகுதிகளில் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, ஈறு, இடைநிலை, போலி என்ற பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம்; பதம், புணர்ப்பு என்னும் இரண்டும் புறத்திலணக்கணம்.

# 1. எண்

## எழுத்து இன்னதென்பதும் அதன் வகையும்

*மொழிமுதல் காரணம் ஆம் அணுத் திரள் ஒலி*
*எழுத்தது முதல்சார் பெனஇரு வகைத்தே.*

**பொருள்**

மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வரும் ஒலியாவது எழுத்து. அது முதலெழுத்து என்றும் சார்பெழுத்து என்றுந் இருவகையினை உடைத்து.

எனவே மொழிக்கு முதற்காரணம் எழுத்தானாற்போல எழுத்திற்கு முதற்காரணம் ஒலி அணுத்திரள் என்பது கருத்து; சீழ்க்கை, வீளை முதலிய ஒலிகள் எழுத்தாகாமையின் மொழி முதற்காரணமாம் ஒலி என்று சிறப்பித்துக் கூறினார்.

### முதலெழுத்து

## முதலெழுத்தின் விரி

*உயிரும் உடம்புமாம் முப்பது முதலே* (59)

உயிரெழுத்துப் பன்னிரெண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்தும் முதலெழுத்தாம்.

### சார்பெழுத்து

## சார்பெழுத்தின் வகை

*உயிர்மெய், ஆய்தம் உயிரளவு ஒற்றளபு*
*அஃகிய இ உ ஐ ஔ மஃகான்*
*தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும்* (60)

**பொருள்**

உயிர்மெய்யும், ஆய்தமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் என்ற பத்தும் சார்பெழுத்து என்று பவணந்தியார் கருதுகிறார். தொல்காப்பியர் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்னும் மூன்றுமே சார்பெழுத்து என்பார்.

உயிர்மெய் என்பது, மெய்யும் உயிரும் கூடிப்பிறக்கிறது. ஆய்தம், உயிர்போன்று அலகு பெற்று அவற்றினிடையே சார்ந்து வருகிறது. ஏனைய தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தால் பிறக்கின்றன. எனவே, இவை சார்பெழுத்தாயின என்று விளக்க முற்படுவர். தொல்காப்பியர் செய்கை ஒன்றனையே நோக்கிச் சார்பெழுத்து மூன்றென வகுத்தார். நன்னூலார் செய்கையும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்தெனக் கூறினார் என்று சிவஞான முனிவர் விளக்கம் அளிப்பார். சார்பெழுத்து பத்து என்று வகைப்படுத்திய நன்னூலார் இனி அவற்றை விளக்கமாக விரிவு செய்து 369 ஆகும் எனக் காட்டுகிறார்.

## சார்பெழுத்தின் விரி

*உயிர்மெய் இரட்டுநூற்று எட்டு உயர் ஆய்தம்*
*எட்டு உயிர் அளபுஎழு மூன்று ஒற்றளபெடை*
*ஆறேழ் அஃகும் இம்முப் பானேழ்*
*உகரம் ஆறா று ஐகான் மூன்றே*
*ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே*
*ஆய்தம் இரண்டொடு சார்பெழுத் துறுவிரி*
*ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப*

**பொருள்**

உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு; முற்றாய்தம் எட்டு; உயிரளபெடை இருபத்தொன்று; ஒற்றளபெடை நாற்பத்திரண்டு; குற்றியலிகரம் முப்பத்தேழு; குற்றியலுகரம் முப்பத்தாறு; ஐகாரக் குறுக்கம் மூன்று; ஔகாரக்குறுக்கம் ஒன்று; மகரக்குறுக்கம் மூன்று; ஆய்தக்குறுக்கம் இரண்டு; இவ்வாறு சார்பெழுத்தின் விரி முந்நூறு அறுபத்தொன்பதாகும்.

## 2. பெயர்

இனி நன்னூலார் எழுத்துக்குப் பெயர் கூறுதற்காக முதலில் பெயர்க்கெல்லாம் பொது இலக்கணம் வகுக்கிறார்.

### பெயர்-பொதுவிலக்கணம்

இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின.

**பொருள்**

பெயர்கள் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இரண்டு வகைப்படும். இவை பல பொருட்குப் பொதுப்பெயராயும் ஒரு பொருட்குச் சிறப்புப் பெயராயும் வருவனவாம்.

இடுகுறிப்பெயராவது ஒரு காரணமும் பற்றாது வழங்கிவரும் பெயர். காரணப் பெயராவது யாதேனுமொரு காரணம் பற்றி வழங்கிவரும் பெயர். மரம் என்பது ஒரு காரணமும் பற்றாது பல மரங்கட்கும் பொதுவாய் நிற்பதால் இடுகுறிப் பொதுப்பெயர். மா, பலா என்பன காரணம் பற்றாது வழங்கினும் ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்பதால் இடுகுறிச் சிறப்புப் பெயர் என்பர். இது போன்று காரணப் பெயரையும் இரண்டாகப் பகுத்துக் காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப்பெயர் என்று வகைபபடுத்தலாம். அணியென்பது அணியப்படுதலாகிய காரணம் பற்றி வழங்கும் காரணப் பொதுப் பெயர். முடி, கழல் என்பன காரணம் பற்றி ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாய் நிற்பதால் காரணச் சிறப்புப்பெயர் ஆகும். எனவே இடுகுறிப்பெயர் 1) இடுகுறிப் பொதுப்பெயர் 2) இடுகுறிச் சிறப்புப் பெயர் என இருவகை: காரணப் பெயர் 1) காரணப் பொதுப்பெயர் 2) காரணச் சிறப்புப் பெயர் என இருவகை ஆகும். இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் இந்நூற்பாவிற்கு வேறுபொருளும் கூறுவர். இடுகுறி என்றும் காரணம் என்றும் இரண்டிற்கும் பொதுவாயும், இடுகுறிக்கே சிறப்பாயும் காரணத்திற்கே சிறப்பாயும் வரும் என்பர். மரம் என்பது இடுகுறிப்பெயர். பரமன் என்பது காரணப் பெயர் முக்கண்ணன், அந்தணன், மறவன், முள்ளி கறங்கு, மொழி சொல் என்பன காரணவிடுகுறிப்பெயர். இவற்றுள் முக்கண்ணன் என்பதை எடுத்துக் கொள்வோம். இப்பெயர், காரணங் கருதியவழி மூன்று கண்ணினையுடையோர் பலர்க்குஞ் சேரலானும், காரணம் கருதாத வழி இடுகுறியாய்ச் சிவனுக்கே சேரலானும் காரண இடுகுறி ஆயிற்று.

அ) இடுகுறிப் பெயர் பொது சிறப்பு:
காரணப் பெயர் பொது சிறப்பு
ஆ) காரணப்பெயர்: இடுகுறிப்பெயர்: காரணவிடுகுறிப்பெயர்.

இவ்விலக்கணத்தை இங்கு ஏன் நினைவுபடுத்த வேண்டும். இவ்விலக்கணத்தால் எழுத்தினது பெயரும் பிறபெயரும் அமைவதால் எடுத்துரைத்தார். பெயரைப் பற்றிப் பொதுவிலக்கணம் சொன்ன நன்னூலார் இனி எழுத்துக்குரிய பெயர்களை வகுக்கிறார்.

**உயிர்**

அம்முதல் ஈரா றாவி கம்முதல்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர் (36)

**பொருள்**

அகர முதல் ஔகாரம் ஈறாக உள்ள பன்னிரண்டு எழுத்தையும் உயிரெழுத்து என்றும், ககர முதல் னகரம் ஈறாகக் கிடந்த பதினெட்டையும் மெய்யெழுத்து என்றும் அறிவுடையோர் சொல்வர்.

இனி மாத்திரை அளவில் குறில், நெடில் என்று பெயர் பெறும் எழுத்துக்களைக் காண்போம்.

## குறில் எழுத்துக்கள்

அவற்றுள் அ இ உ எ ஒக்குறில் ஐந்தே (64)

**பொருள்**

அ இ உ எ ஒ எனப்பட்ட ஐந்தும் குறிலாம்

## நெடில்

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில் (65)

**பொருள்**

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனப்பட்ட இவ்வேழும் நெட்டெழுத்தாம்.

## சுட்டெழுத்துக்கள்

அ இ உம் முதல் தனிவரின் சுட்டே (66)

**பொருள்**

இம்மூன்றெழுத்தும் மொழிக்குப் புறத்தும் அகத்தும் முதற்கண் தனித்துச் சுட்டுப்பொருள் உணர்த்தவதால் சுட்டெழுத்தாம்.

(எ-டு) அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்
அவன், இவன், உவன்

அக்கொற்றன் என்பதிலுள்ள அகரம் தனித்து நிற்கும். அதனைப் புறச்சுட்டு என்பார். அவன் என்பதிலுள்ள அகரம் இணைந்தே நிற்கும். எனவே அது அகச்சுட்டாகும்.

## வினா எழுத்துக்கள்

எயா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினவா கும்மே (67)

**பொருள்**

மொழி முதற்கண் எகரமும் யாவும், மொழி ஈற்றின்கண் ஆகாரமும் ஓகாரமும் இவ்விரண்டிடத்தினும் ஏகாரமும் தனித்து வினாப்பொருள் உணர்த்தவரின் வினாவெழுத்து எனப்படும்.

(எ-டு) எக்கொற்றன், எவன், யாவன் (மொழிமுதற்கண் வந்தன)
கொற்றனா, கொற்றனோ (ஈற்றின் கண் வந்தன)
ஏவன், கொற்றனே (ஈரிடத்தும் வந்தது)

## மெய்

மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும்.

வல்லினம்; வல்லினம் கசடதபற என ஆறே (18)
மெல்லினம்; மெல்லினம் ஙஞணநமன என ஆறே (69)
இடையினம்; இடையினம் யரலவழள என ஆறே (70)

எனும் நூற்பாக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவற்றை வகுத்துக் காட்டுகின்றன.

மேற்கூறிய பதினெட்டு மெய்களுள் கசடதபற என்னும் வல்லினங்களைத் தடையொலி (Stops) என்றும் ஙஞணநமன என்னும் மெல்லினங்களை மூக்கொலி (Nasals) என்றும் இவற்றை இடம் கருதியும், முயற்சி கருதியும் மாத்திரை கருதியும், பொருள் கருதியும், வடிவம் கருதியும், எழுத்துக்களை ஒன்றுக்கொன்று இனமாக்கி இனஎழுத்து என்றும் வகுப்பர். யரலவழள என்னும் இடையினங்களை நெகிழொலி என்றும் மொழிநூலார் வழங்குவர்.

## இனவெழுத்து

ஐஔ இஉச் செறிய முதலெழுத்து
இவ்விரண்டோரினம் ஆய்வரல் முறையே (71)

### பொருள்

இனமில்லாத ஐகார ஔகாரங்களுக்கு ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களைத் தமக்கும் இனமாகப் பொருத்த, முதலெழுத்துக்கள் இரண்டிரண்டு ஓரினமாய் வருதல் முறை. ஆதலால் இனவெழுத்து என்னும் பெயரவாம்.

(எ-டு) அஆ; இஈ; எஏ; உஊ; ஐஇ; ஔ உ ஒ ஓ ஓ (உயிரில் இனமாய் வந்தன) கங; சஞ; டண; தந; பம; றன (மெய்யில் வலியும் மெலியும் இனமாய் வந்தன)

முதலெழுத்துக்களாகிய உயிரும் மெய்யும் இவ்வாறு இரண்டிரண்டாய் வரும் என்று பொதுவாக எடுத்துரைத்தார். இடையின எழுத்தில் இவ்வாறு இரண்டிரண்டாய் இனமாய் வருவதில்லை.

## இனமென்பதற்குக் காரணம்

தானம் முயற்சி அளவு பொருள்வடி(வு)
ஆனவொன்று ஆதி ஓர் புடை ஒப்பு இனமே(73)

தானம் (roughly the same articulatory position) முயற்சி, மாத்திரையளவு பொருள், ஒலி, வரி வடிவுகள் ஆகிய இவற்றுள் யாதேனும் ஒன்று ஒருபுடை ஒத்துவரின் இனமாகும்.

முயற்சி என்பது இதழ், நா முதலியவற்றின் தொழில் (articulatory movements).

## 3. முறை

சிறப்பினும் இனத்தினம் செறிந்துஈண்டு அம்முதல்
நடத்தல் தானே முறை ஆகும்மே. (73)

### பொருள்

சிறப்பினானும் இனத்தினானும் எழுத்துக்களை அகரமுதலாக வழங்குதலே எழுத்தினது முறையாம்.

நாத மாத்திரையாய் எல்லா எழுத்திற்கும் காரணமாய் முன்நிற்றலின் அம்முதல் என்றும், எல்லா எழுத்திற்கும் வைத்த முறைக்குக் காரணம் உயிர்களால் முற்றும் உணர்த்தலாகாமையின் நடத்தல் தானே என்றும் கூறினார். இங்கு அகரவரிசை பற்றிக் குறிப்பிடுகிறார் எனலாம். அகர முதல் பன்னீருயிரும் தனித்தியங்கும் ஆற்றல் உடைமையானும் ககர முதலிய பதினெட்டு மெய்யும் அகரத்தோடு கூடியல்லது இயங்கும் ஆற்றல் இன்மையானும் அவைசிறப்பும் சிறப்பின்மையும் நோக்கி உயிர் முன்னும் மெய் பின்னுமாக வைக்கப்பட்டன என்பார் சிவஞான முனிவர். பிறப்பு முயற்சியை நோக்கி அ, இ, உ என்ற வரிசை அமைந்தது. ஆ, ஈ, ஊ என்பன அவற்றிற்கு இனமாதலின் அடுத்தடுத்து இடம் பெற்றன. அகரமும் இகரமும் இணைந்து எகரம் பிறத்தலால் எகரம் அதன்பின் வந்தது. அகரமும் உகரமும் ஒத்திசைக்கும் ஒகரம் அதன்பின் இடம பெற்றது. ஏ, ஓ, அவற்றின் இனமாதலின் அடுத்தடுத்து இடம் பெற்றன. அ, ய், இ என்பன கூடி ஐகாரம் பிறப்பதால் எகாரத்தின்பின் வந்தது. அ, வ், உ என்பன கூடி ஔ இசைப்பதால் ஔ ஓகாரத்தின் பின் வந்தது. வலியாரை முன் வைத்து மெலியாரைப் பின்வைத்தல் மரபு ஆதலின் க, ங, ச, ஞ, ட, ண என்ற வரிசை முறையில் வைக்கப்பட்டது. ழ, ற, ன என்பன தமிழ் எழுத்து என்பதறிவிப்பதற்கு இறுதியில் வைக்கப்பட்டன என்று விளக்கம் தருவார் சிவஞான முனிவர்.

## 4. பிறப்பு

இதுவரை தமிழ் எழுத்து வரிசையை அறிமுகப்படுத்தி, அவற்றை உயிர்மெய் என்றும்; குறில், நெடில் என்றும்; வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் வகுத்துக் காட்டினார். இங்ஙனம் எழுத்தொலிப் பாகுபாடும் (Phonemic analysis) அவற்றை விளக்கிக் கூறும் செய்திக் குறிப்பும் (Statements describing them) முடிவடைவதால் அவ்வெழுத்துக்களின் பிறப்புப் பற்றியும் ஆராய்கிறார்.

*நிறைஉயிர் முயற்சியின் உள்வளி துரப்ப*
*எழும் அணித்திரள் உரம் கண்டம் உச்சி*
*மூக்குஉற்று இதழ்நாப் பல்அணத் தொழிலின்*
*வெவ்வேறு எழுத்தொலி யாய்வரல் பிறப்பே* (74)

இது ஒருவகையில் பொதுவிதியே ஆகும். நிறைந்த உயிரினது முயற்சியால் உள்நின்ற காற்று எழுப்ப எழும் அணுத்திரள், நெஞ்சு முதலிய நான்கிடத்தையும் பொருத்தி, இதழ் முதலிய நான்கின் தொழில்களால் வெவ்வேறு எழுத்தாகிய ஒலிகளாய்த் தோன்றும்.

உரம், கண்டம், உச்சி, மூக்கு என்னும் நான்கிடத்தையும் இதழ், நா, பல், அண்ணம் எனும் நான்கின் தொழில்களையும் எடுத்துரைக்கிறார்.

### முதலெழுத்துக்களுக்கு இடப்பிறப்பு

*அவ்வழி,*
*ஆவி இடைமை இடம்மிட றாகும்.*
*மேவு மென்மைமூக்கு உரம் பெறும் வன்மை.* (75)

உயிரெழுத்தும் இடையெழுத்தும் மிடற்றில் (கழுத்தில்) பிறக்கும் மெல்லினம் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும். வல்லினம் நெஞ்சை இடமாகக் கொண்டு பிறக்கும்.

### முதலெழுத்துக்களுக்கு முயற்சிப்பிறப்பு

**உயிர்எழுத்து பிறத்தல்**

*அவற்றுள்*
*முயற்சியுள் அஆ அங்காப்பு உடைய* (76)

முதல் எழுத்துக்களுள் அகர ஆகாரங்கள் அண்ணம் அங்காப்பதால் பிறக்கும்.

*இஈ எஏ ஐ அங்காப்போடு*
*அண்பல் முதல்நா விளிம்புற வருமே.* (77)

இவ்வைந்தெழுத்தும் அங்காப்புடனே அண்பல்லை அடிநா விளிம்பு பொருந்தப் பிறக்கும்.

*உஊ ஒஓ ஔ இதழ் குவிவே.* (78)

இவ்வைந்தெழுத்தும் பிறப்பதற்கு ஏதுவாகிய முயற்சி இதழ் குவிதலாம். மொழி நூலார் உயிரின் பிறப்புப் பற்றி எழுதும்போது நாவின் உயரம், நாவின் முன்னோக்கிய இயக்கம், இதழ்குவிவு என்பவற்றை அடிப்படையாகக் கொள்வர். அக்கருத்து இங்கும் பொருந்திவரக் காண்கிறோம்.

**மெய்யெழுத்து பிறத்தல்**

*கஙவும் சஞவும் டணவும் முதலிடை*
*நுனிநா அண்ணம் உறமுறை வருமே,* (79)

என்ற நூற்பாவால்,

*கங முதல்நா முதலண்ணத்தை உறப்பிறக்கும்*
*சஞ இடைநா இடையண்ணத்தை உறப்பிறக்கும்*
*டண நுனிநா நுனியண்ணத்தை உறப்பிறக்கும்*

என்பதை அறிகிறோம்.

*அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.* (80)

அண்பல் அடியை நாநுனி பொருந்தவே தவ்வும் நவ்வும் பிறக்கும்.

*மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும்.* (81)

மேலிதழும் கீழிதழும் பொருந்தவே பவ்வும் மவ்வும் பிறக்கும்.

அடிநா அடியணம் உற யத் தோன்றும். (82)
அடிநா அடியண்ணத்தைப் பொருந்த யகரம் பிறக்கும்.

அண்ணம் நுனிநா வருட ரழவரும். (83)
அண்ணத்தை நுனிநா தடவ, ரவ்வும், ழவ்வும் பிறக்கும்.

அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும் (84)

அண்பல் முதலை நாவிளிம்பு வீங்கியொற்ற லகாரம் பிறக்கும். அண்ணத்தை நாவிளிம்பு வீங்கி வருட ளகாரம் பிறக்கும்.

மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே. (85)
மேற்பல்லைக் கீழிதழ் பொருந்த வகரம் பிறக்கும்.

அண்ணம் நுனிநா நனியுறின் றனவரும். (86)
அண்ணத்தை நுனிநா மிகப் பொருந்தினால் றவ்வும் னவ்வும் பிறக்கும்.

## சார்பெழுத்துக்கு இடமுயற்சிப் பிறப்பு

ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய (87)

ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை; முயற்சி அங்காத்தலாம். ஒழிந்த சார்பெழுத்துக்கள் இடமுயற்சியால் தம் முதலெழுத்துக்களோடு ஒப்பனவாய்ப் பிறக்கும்.

## பிறப்புக்குப் புறனடை

எடுத்தல் படுத்தல் நலிதல் உழைப்பில்
திரிபும் தத்தமில் சிறி துள ஆகும்.

பலவெழுத்திற்குப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டனவேனும் எடுத்தல், படுத்தல், நலிதல் என்னும் எழுத்திற்குரிய ஒலி முயற்சியான் ஒன்றிற்கொன்று பிறப்பு வேறுபாடுகளும் அவ்வவற்றின்கண் சிறிதுசிறிதுளவாம்.

மொழி நூலார் மெய்களின் பிறப்பை விளக்கும்போது ஒலிப்புமுனை (Point of articulation) ஒலிப்பு முறை (Manner of articulation) என்ற இரு நிலையில் நின்றும் எடுத்துரைப்பார். அண்ணம், நுனிநா, பல், இதழ் என ஒலிப்பு முனைகளையும் ஒற்ற, வருட என்று ஒலிப்பு முறைகளையும் இங்கு ஆசிரியர் பயன்படுத்துவதைப் பார்க்கலாம்.

அ ஆ - அங்காத்தல் உடைய (Open Vowels)
இ ஈ எ ஏ ஐ - அங்காப்போடு அண்பல் முதல் நாவிளிம்புறும் (Front Vowels)
உ ஊ ஒ ஓ ஔ - இதழ் குவிவு (Back Vowels)
க ங - முதல் நாமுதலண்ணம் (Velar)
ச ஞ - இடைநா இடையண்ணம் (Palatal)
ட ண - நுனிநா நுனியண்ணம் (இக்காலத்தில் சிறிது வளைநா ஒலி ஆகிறது)
த ந - அண்பல் அடியை நாமுடியுற (Dental)
ப ம - மேல் கீழ்இதழ் பொருந்த (Labials)
ய - அடிநா அடியண்ணம் உற (இக்காலம் நடு அண்ணஒலி)
ர ழ - அண்ணம் நுனிநா வருட (Retroflex)
வ - மேற்பல் இதழுற (Labiodental)
ல ள - நாவிளிம்பு வீங்கி முறையே ஒற்ற, வருட (Laterals)
ற ன - அண்ணத்தை நுனிநா உற (Alveolar)

## சார்பெழுத்துக்கள்

பிறப்பு என்னும் தலைப்பில் உயிர்மெய், முற்றாய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகார, ஔகாரக் குறுக்கங்கள், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் முதலியவற்றை விளக்குகிறார். அவற்றின் தோற்றத்தை மொழிப்படுத்தி உணர்த்த வேண்டுதலின் பிறப்பு என்னும் தலைப்பில் அடக்க நினைத்திருக்கலாம். வரி வடிவம் ஒலி வடிவு போலப் பயன்தரும் ஒற்றுமை குறித்து ஈண்டு அவ்விருதிறனும் விரவிக் கூறுகிறார். சார்பெழுத்திற்குச் சார்ந்து வருமாறும் ஒரு பிறப்பாதலின் பிறப்பதிகாரத்துள் அடக்கி உணர்த்தத் தொடங்கி அவற்றுள் முதற்கண் உயிர்மெய் வருமாறு உணர்த்துகிறார்.

### உயிர்மெய்

*புள்ளிவிட்டு அவ்வொடு முன்உரு வாகியும்*
*ஏனை உயிரோடு உருவு திரிந்தும்*
*உயிரள வாய் அதன் வடிவொழித்து இருவயின்*
*பெயரொடும் ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய்*

**பொருள்**

மெய் அகரத்தோடு கூடிய வழித் தனது புள்ளியை விட்டு முன்னைய உருவே உருவாகிவரும். ஒழிந்த உயிர்களோடு கூடியவழி உருவு வேறுபட்டு வரும் தன் மாத்திரை தோன்றாது உயிர்மாத்திரையே மாத்திரையாய் அமையும். தன் வரிவடிவினது விகார வடிவே வடிவமாய் அமையும். மெய்யுயிர் என்னும் பெயராகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடனே திகழும். ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாகி ஒலிக்கும். இதுவே உயிர்மெய் எழுத்தின் இயல்பு.

இவ்விலக்கணத்தால் ஒவ்வொரு மெய்யிலும் பன்னீருயிம் கூட இருநூற்றுப் பதினாறு உயிர்மெய்கள் பிறக்கும்.

### முற்றாய்தம்

தனக்கு வகுக்கப்பட்ட மாத்திரையளவு முழுமையாக ஒலிக்கப் பெறும் ஆய்தம் முற்றாய்தம்.

*குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி*
*உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.*

**பொருள்**

ஆய்தம் குற்றெழுத்தின் முன்னதாய்; உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறன் மேலதாய் வரும்.

(எ-டு) எஃகு, கஃசு, இருபஃது, அஃகடிய, அஃகான் எனவரும் உயிர் வருக்கத்து இறுதிக்கண் வந்த ஆய்தவடிவைப் பிற்காலத்தார் வேறுபட வரைந்து வழங்குவராதலின் பழைய வடிவு இன்னது என்பது தோன்ற ஆய்தப்புள்ளி என்றார். வல்லின வகையால் இயல்பாக வந்த ஆய்தம் ஆறனோடு புணர்ச்சி விகாரத்தான் வரும் ஆய்தமும் செய்யுள் விகாரத்தான் வரும் ஆய்தமும் கூடி எட்டாய் வருமாறு காண்க.

| | | |
|---|---|---|
| (1) | வல்லெழுத்து ஆறன் முன்னும் வரும் ஆய்தம் இடவகையால் | 6 |
| (2) | திரிதலால் வரும் ஆய்தம் (அவ்+கடிய-அஃகடிய) | 1 |
| (3) | விரித்தலால் வரும் ஆய்தம் (அ+கான்-அஃகான்) | 1 |
| | | --- |
| | ஆக முற்றாய்தம் | 8 |
| | | --- |

### உயிரளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவிக்க நெட்டெழுத்தின் மாத்திரையை நீட்டி ஒலித்தல் உயிரளபெடையாம்.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே.

**பொருள்**

செய்யுட்கண் இசைகுன்றின் மொழி முதலிலும் இடையிலும் கடைசியிலும் நின்ற நெட்டெழுத்தேழும் அவ்விசை நிறைக்கத் தத்தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அவ்வாறு அளபெடுத்தன அறிதற்கு அவற்றின்பின் அவற்றிற்கு இனமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவின்கண் அறிகுறியாய் வரும்.

(எ-டு) ஆஅ அளிய, அறாஅ யாணர்

இசைகெடின் என்று பொதுப்படக் கூறினமையால்,

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

எனக் குறில் நெடிலாய் அளபெடுத்து அலகுபெற்றும் பெறாதும் இன்னிசை நிறைப்ப வருவனவும்,

உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

என அளபெடுத்து அலகுபெற்றும் பெறாதும் சொல்லிசை நிறைப்ப வருவனவும் கொள்க. மொழி முதலடை கடைகளின் நின்று அளபெடுக்குங்கால் ஔகாரம் மொழியிடை கடைகளின் வரப்பெறாமையின் அவ்விடங்களின் அது தவிர நின்று அளபெடுக்கும் அளபெடை பத்தொன்பதோடு, இன்னிசை நிறைப்பவும் சொல்லிசை நிறைப்பவும் அளபெடுக்கும் அளபெடை இரண்டும் கூட்ட உயிரளபெடை இருபத்தொன்றாய் வருமாறு காண்க:

இசை நிறைப்பதற்காக அன்றி இன்னோசைக்காக அளபெடுப்பது இன்னிசையளபெடை. இலக்கணத்தில் சொன்மை நிலையில் மாறுபாடு தோன்ற அளவெடுப்பது சொல்லியசையளபெடை.

## ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குன்றுமிடத்து ஒற்றெழுத்து அளபெடுத்து வருதல் ஒற்றளபெடையாம்

ஙஞண நமன வயலள ஆய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே அவற்றின் குறியாம் வேறே (92)

**பொருள்**

செய்யுட்கண் இசைகுன்றின் குறிலிணைக்கீழும் குறிற்கீழுமாய் மொழி இடையினும் ஈற்றினும் நின்ற ஙஞண நமன வயலள என்ற இப்பத்தொற்றும் ஆய்தமும் அவ்வோசை நிறைக்கத் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும் அவ்வாறு அளபெடுத்தலை அறிதற்கு, அவற்றின் பின் அவ்வெழுத்துக்களே அறிகுறியாய் வரும்.

| | |
|---|---|
| இலங்ங்கு வெண்பிறை சூடுஈசனடியார்க்குக்<br>கலங்ங்கு நெஞ்சமிலை காண். | குறிலிணைக் கீழ்மொழிக்கு டூடையில் அளபெடை. |
| எங்ங் கிறைவனுளன் என்பாய் மன்னே | குறிற் கீழ் மொழிக்கு இடையில் அளபெடை |
| மடங்ங் கலந்தா. . . | குறிலிணைக்கீழ் மொழியின் கடையில் அளபெடை. |
| அங்ங்கனிந்த. . . | குறிற்கீழ்மொழியின் கடையில் அளபெடை. |

ஆய்தம் ஒற்றொடும் ஒருபுடையொத்து வருதலின் ஈண்டுத் தந்துரைத்தார். ஆய்தம், குறிற்கீழ்க்கடை ஆய்தம் என்ற இரண்டையும் விலக்கினால் நாற்பத்திரண்டு ஒற்றளபெடை அமையும்.

## குற்றியலிகரம்

இகரம் தன் மாத்திரையில் குறுகி ஒலித்தல் குற்றியலிகரமாகும்.
யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய. (93)

**பொருள்**

யகரம் வருமொழிக்கு முதலாகிவர, நிலைமொழிக்கு ஈறாகி நின்ற குற்றியலுகரம் திரிந்த இகரமும் மியாவென்னும் அசைச்சொல்லின்கண் உள்ள இகரமும் குற்றியலிகரங்களாகும்.

(எ-டு) நாகியாது; எஃகியாது; வரகியாது; கொக்கியாது
குரங்கியாது; அல்கியாது, கேண்மியா, சென்மியா.

குற்றியலுகரம் முப்பத்தாறு ஆதலின் குற்றியலுகரம் திரிந்த குற்றியலிகரங்கள் முப்பாத்தாறாகும். அத்துடன் அசைச்சொல் மியா எனும் குற்றியலிகரமும் சேர்ந்தால் குற்றியலிகரம் முப்பத்தேழு ஆகும்.

## குற்றியலுகரம்

குற்றியலுகரமாவது உகரம் தன் மாத்திரையில் குறுகி ஒலித்தல், இவ்வுகரமும் வல்லொற்றை ஏறியதாக இருக்க வேண்டும். வரவு, கதவு என்பன குற்றியலுகரம் ஆகா. அவை வல்லொற்றை ஏறி வரவில்லையாதலின் முற்றியலுகரம் ஆகும். அது, இது என்று தனிக்குறிலையடுத்து வரும் வல்லொற்றேறிய உகரமும் முற்றியலுகரமே. இதனை நெஞ்சில் இருத்திக்கொண்டு 1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் 2. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் 3. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் 4. வன்றொடர்க் குற்றியலுகரம் 5. மென்றொடர்க் குற்றியலுகரம் 6. இடைத் தொடர்க் குற்றியலுகரம் என்ற வகைகளைக் காண்போம்.

நெடிலே டாய்தம் உயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே. (94)

**பொருள்**

குற்றியலுகரமானது தனிநெடில் ஏழு, ஆய்தமொன்று மொழியிடையீறுகளில் வரப்பெறாத ஔகார ஒழித்தொழிந்த உயிர் பதினொன்று, வல்லெழுத்தாறு, மெல்லெழுத்தாறு வல்லெழுத்துக்களோடு தொடரா வகரமொழித்து ஒழிந்த இடையெழுத்து ஐந்து ஆகிய முப்பத்தாறு எழுத்தினுள், யாதானும் ஒன்று ஈற்றுக்கயல் எழுத்தாய்த் தொடரப்பட்டு வரும். மொழியிறுதிக்கண் வல்லெழுத்துக்களுள் யாதானும் ஒன்று பற்றுக்கோடாக, அதனையூர்ந்து வரும் அவ்வுகரம் தன் மாத்திரையில் குறுகும். வல்லெழுத்தின் மீது ஏறி நின்ற உகரம் தன்னளவில் தனித்து நின்று குறுகுவதில்லை. அது இது என்பன குற்றியலுகரமாவதுமில்லை. எனவேதான் பிறமேல் தொடரவும் என்றார்.

(எ-டு) நாகு, எஃகு, வரகு, பலாசு, கொக்கு, அலகு

இவ்வாறன் பகுதித் தொடரும் இடமாதலின் இவ்விட வேற்றுமையால் குற்றியலுகரம், முப்பத்தாறு ஆகும். குற்றியலுகரத்துக்கு மாத்திரை 1/2

## ஐகார, ஔகாரக் குறுக்கங்கள்

தற்சுட்டு அளபொழி ஐம்மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற் றாகும் (95)

**பொருள்**

ஐகாரம் தன்னைக்கருதித் தன்பெயர் கூறுமளவில் குறுகாது. மொழி முதலிடை கடையென்னும் மூன்றிடத்தும், முன்னும், பின்னும் இரு மருங்குமாய் எழுத்தின் தொடர்பால் தன்மாத்திரையில் குறுகும். ஔகாரமும் தன்பெயர் கூறுமளவிற் குறுகாது. மொழி முதற்கண் பின்வருமெழுத்தின் தொடர்பால் தன் மாத்திரையில் குறுகும்

(எ-டு) ஐப்பசி, மைப்புறம், வலையன், குவளை, மௌவல்

தற்சுட்டு-தன்னைக் குறித்துத் தன்பெயர் சொலலுகையிலும், அளவு-அளபெடையிலும், ஒழி-ஒழிந்த, ஐ-ஐகாரம், மூவழி-மொழி முதலிடை கடை என்னும் மூவிடங்களிலும், நையும்-தன்னிரண்டு மாத்திரையில் குறுகும் எனப் பொருள் விரிப்பர் இலக்கண விளக்க நூலார்.

இடவகையால் ஐகாரக்குறுக்கம் மூன்றும் ஔகாரக் குறுக்கம் ஒன்றும் ஆயின.

நேமிநாதம், அவிநயம், வீரசோழியம் ஆகிய நூல்கள் ஐகாரக் குறுக்கத்திற்கும் 1/2 மாத்திரை வகுக்கும். நன்னூல், இலக்கண விளக்கம் முதலிய நூல்கள் ஐகாரக்குறுக்கத்திற்கு ஒரு மாத்திரையே வகுக்கின்றன.

**மகரக்குறுக்கம்**

ணன முன்னும் வஃகான் மிசையும்மக் குறுகும் (96)

**பொருள்**

ணகார னகாரங்களில் ஒன்றுநின்று தொடர்ந்திட அதன்முன் வரும் மகரமும், வகரமும் வந்து தொடர்ந்திட அதன்மேல் நிற்கும் மகரமும் தன் அரை மாத்திரையில் குறுகும்.

(எ.டு) மருண்ம், திசையறி மீகானும் போன்ம்; தரும்வளவன்

எனவே மகரக்குறுக்கத்திற்குக் கால் மாத்திரையே அளவென அறியலாம் ஆய்தக் குறுக்கம்.

லளவீற் றியைபினாம் ஆய்தம் அஃகும்

**பொருள்**

லகார ளகாரவீற்றுப் புணர்ச்சியினால் வரும் குறில்வழி லளத்தவ்வணையின் ஆய்தம் ஆகவும் பெறூஉம், என்ற ஆய்தம் தன் அரைமாத்திரையில் குறுகும்.

(எ-டு) கஃறீது; முஃடீது

ஆய்தக்குறுக்கமும் கால்மாத்திரை ஒலியளவு பெறுதலை ஒலித்து அறியலாம்.

## 5. உருவம்

தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்
டெய்தும் எகரஒகர மெய் புள்ளி (98)

**பொருள்**

எல்லாவெழுத்தும் பல்வேறு வகைப்பட வரைந்து வழங்கும் பழைய வடிவினையுடையவாம். அவ்வடிவினவாய் வழங்குமிடத்துத் தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும் ஒகரமும் தனிமெய்களும் தம் வரிவடிவத்தில் உறுப்பாய்ப் புள்ளியைப் பெறும்.

## 6. மாத்திரை

**எழுத்துக்களின் மாத்திரை**

மூன்றுயிரளவு இரண்டாம் நெடில் ஒன்றே
குறிலோடு ஐஔக் குறுக்கம் ஒற்றளபு
அரை ஒற்று இஉக் குறுக்கம் ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை.

**பொருள்**

உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றாம்; நெடிலுக்கு மாத்திரை இரண்டாம்; குறிலுக்கும் ஐகாரக் குறுக்கத்திற்கும் ஔகார குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்கும் தனித்தனி மாத்திரை ஒன்றாம். ஒற்றிற்கும், குற்றியலி கரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும், ஆய்தத்திற்கும் தனித்தனி மாத்திரை அரையாம். மகரக்குறுக்கத்திற்கும், ஆய்தக்குறுக்கத்திற்கும் தனித்தனி மாத்திரை காலாம்.

உயிர்மெய்க்கு அளவுகூறாதுவிட்டார். காரணம் மேல் உயிரளவாய் என்றுரைத்தலின்.

### மாத்திரை இன்னதென்பது

*இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை (100)*

**பொருள்**

மாந்தருடைய இயல்பாக எழும் இமைப்பொழுதும் நொடிப்பொழுதும் ஒரு மாத்திரை என்னும் வரையரைப் பொழுதாம்.

### மாத்திரைக்குப் புறனடை

*ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்*
*மேவும் இசைவிளி பண்டமாற்று ஆதியின்*

**பொருள்**

இசைவிளி பண்டமாற்று முதலியவற்றின் கண் முதல் சார்பனைத்து மாய ஆவியும் ஒற்றும் மேற்கூறிய அளவிறந்து மிக்கொலித்தலையும் பொருந்தும்.

இசையில் அளவிறந்து இசைக்குங்கால் ஆவி பன்னிரண்டு மாத்திரை. ஈறாகவும் ஒற்று பதினொரு மாத்திரையீறாகவும் இசைக்குமென்றார் இசை நூலார்.

## 7. முதனிலை

தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்து இவை, மொழிக்கு இடையில் மயங்கும் எழுத்து இவை, மொழிக்கு இறுதியில் வரும் எழுத்து இவை என்ற கட்டுப்பாடு உண்டு. ஒரு மொழியின் ஒலியசை முறையைக் கட்டிக் காப்பன இத்தகைய கட்டுப்பாடுகளே. *மொழியில் ஒலியன் வருகை* என்று இதனை அழைப்பர்.

### மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

*பன்னீ ருயிரும் கசதந பமவய*
*ஞஙஈரைந்துயிர் மெய்யும் மொழிமுதல் (102)*

**பொருள்**

பன்னிரண்டு உயிரும் உயிரூர்ந்த இப்பத்து மெய்யும் மொழிக்கு முதலாம்.

உயிர்கள் பன்னிரண்டு மொழிக்கு முதலில் வரும். மெய்களில் க ச த ந ப ம வ ய ஞ ங என்ற பத்தும் மொழி முதலில் வரும். (எ-டு) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி.

ஔவியம், களி, சவடி, தளிர், நலம், படை, மலை, வளம், யவனர், ஞமலி, அங்ஙனம்.

இவ்வாறு மொழிமுதலில் வரும் எழுத்துக்கள் இருபத்திரண்டாம்.

## பொதுவிதியுள் சிறப்பு விதி

### வகரம் மொழிமுதலாதல்

*உ ஊ ஒ ஓ அலவொடு வம்முதல் (103)*

**பொருள்**

உ ஊ ஒ ஓ இந்நான்கும் அல்லாத எட்டுயிரோடும் வகரம் மொழி முதலில் வரும்.
(எ-டு) வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேளை, வைகல், வௌவு.

### யகரம் மொழி முதலாதல்

*அ, ஆ, உ, ஊ; ஓ, ஔ வொடு யம்முதல் (104)*

**பொருள்**

அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ இவ் ஆறுயிரோடு யகரம் மொழிக்கு முதலாம் .

(எ-டு) யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம்

## ஞகரம் மொழி முதலாதல்

அ ஆ எ ஒவ்வோடாகு ஞம்முதல் (105)

**பொருள்**

அ ஆ எ ஒ இந்நான்கு உயிரோடும் ஞகரம் மொழிக்கு முதலாம்.

(எ-டு) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று

## ஙகரம் மொழி முதலாதல்

சுட்டியா எகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே

**பொருள்**

மூன்று சுட்டும் யாவினாவும் எகரவினாவுமாய் இடைச்சொற்களின் பின் அகரத்தை ஒட்டி ஙவ்வும் மொழிக்கு முதலாம். (எ-டு) அங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம்

இவற்றை அங்கு இங்கு என்றாற்போல ஒரு மொழிகள் என்றால் என்னையெனின்:- அஞ்ஞான்று எஞ்ஞான்று என்பன போலப் பிளவுபட்டு இடையே மெல்லொற்றுமிக்கு வருதலின் தொடர்மொழிகளே என்பர் சிலர். ஆங்கனம் யாங்கனம் போன்ற வடிவின் திரிபே ஆதலின் ங மொழி முதல் வராது என்பர்.

மொழி முதல் எழுத்துக்களில் ய வ ஞ ங என்ற நான்கிற்கு மட்டும் சிறப்புவிதி கூறினமையால் க ச த ந ப ம என்பன எல்லா உயிரொடும் மொழி முதலாகும் என்பது அருத்தாபத்தியால் அறியலாம்.

ககரம்: கலை, கார், கிளி, கீழ், குடி, கூடு, கெடுதி, கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை.

சகரம்: சங்கு, சால்பு, சிலை, சீர், சுடு, சூறை, செடி, சே, சைவம், சொல், சோ, சௌக்கியம்.

தகரம்: தந்தை, தாய், தித்திப்பு, தீ, துணி, தூணி, தென்றல், தேன், தை, தொண்டு, தோடு, தௌவை.

நகரம்: நந்து, நாரை, நிலம், நுகம், நூல், நெய்தல், நேற்று, நைவளம், நொச்சி, நோக்கு, நௌவி.

பகரம்: படல், பா, பிடி, பீடு, புகழ், பூ, பெடை, பேடு, பைதல், பொன், போது, பௌவம்.

மகரம்: .மடி, மாலை, மிடறு, மீளி, முற்றம், மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி மோது, மௌவல்.

# 8. இறுதிநிலை

## மொழிக்கிறுதியில் வரும் எழுத்துக்கள்

மொழிக்கி றுதியில் வரும் எழுத்துக்களாக
ஆவி ஞண நமன யரலவ ழளமெய்
சாயும் உகரம் நாலா றும் ஈறே (107)

மொழிக்கு ஈறாகவரும் எழுத்துக்கள் இருபத்து நான்காகும். உயிரெழுத்துப் பன்னிரண்டும், ஞண நமன யரல வழள என்ற மெய்களும் குற்றியலுகரமும் என அவை இருபத்து நான்காமாறு காண்க.

(எ-டு) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, விள, பலா, சரி, தீ, சே, தை, கோ, உரிஞ் மண் பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள், அஃகு போல்வன.

## சிலவற்றிற்குச் சிறப்பு விதி

மேற்சொன்னவற்றுள்ளும் குற்றுயிர்கள் அளபெடையில் மட்டுமே தனித்து ஈறாகும். எகரமும் அவ்வாறு அளபெடையில் ஈறாகுமேயன்றி மெய்யோடு இணைந்து ஈறாகாது. ஒகரம், நகரமொடு மட்டுமே ஈறாம், ஔ-ககரவகரமொடு வரும்.

குற்றுயிர் அளபின் ஈறாம் எகரம்
மெய்யோ டேலாதொந் நவ்வொ டாம்ஔக்
ககர வகரமோ டாகும் என்ப (108)

**பொருள்**

குற்றுயிர் அளபெடையின் கண் வரிவடிவில் அறிகுறியாய்த் தனித்து ஈறாம்: எகரம் மெய்யோடு ஈறாகாது, ஒகரம் நகரமொன்றுடன் ஈறாம். ஔகாரம் ககர வகரங்கள் இரண்டுடனும் ஈறாம், என்று சொல்லுவர் புலவர்.

(எ-டு) ஆ அ, ஏ எ, நொ, கௌ வௌ,

## எழுத்தினது முதலும் ஈறும்

நின்ற நெறியே உயிர் மெய்முதல் ஈறே (109)

**பொருள்**

உயிர்மெய்யினது முதல்யாது, அதன் ஈறு யாதெனின் ஒற்று, முன்னும் உயிர் பின்னுமாய் ஒலித்து நின்ற நெறியே மெய் அதன் முதலாம் உயிர் அதன் ஈறாம்.

# 9. இடைநிலை மெய்ம்மயக்கம்

எழுத்துக்கள் அடுத்தடுத்து நிற்றல் மயக்கம் அல்லது கூட்டல் எனப்படும் உயிரும் உயிரும் நின்றால் உயிர் மயக்கம் எனப்படும். மெய்யும் மெய்யும் அடுத்தடுத்து நின்றால் மெய்ம்மயக்கம் எனப்படும். மொழிக்கு இடையிலேயே இம்மயக்கம் நிகழ்வதால் இடைநிலை மெய்ம்மயக்கம் என்று பெயர்பெறும். இது உடனிலை மெய்ம்மயக்கம். வேற்று நிலை மெய்ம்மயக்கம் என இருவகையாம்.

கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக்கு உடனிலை ரழவொழித்தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே

**பொருள்**

மெய் பதினெட்டனுள் கசதப என்னும் நான்கையும் ஒழித்த பதினான்கு மெய்யும் பிறமெய்களோடு கூடும் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாம். ரகார ழகாரம் என்னும் இரண்டனையும் ஒழித்து ஒழிந்த பதினாறு மெய்யும் தம்மோடு கூடும் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கமாம். இவ்விரண்டு பகுதி மயக்கமும் மொழிக்கிடையே வரும். இவ்வாறு மெய்யுடன் மெய் மயங்குதலின்றி, உயிருடன் மெய்யும், மெய்யுடன் உயிரும் ஆக உயிரும் மெய்யும் மயங்கும் மயக்கத்திற்கு வரையறையில்லை. தம்மொடுதாம் மயங்குதல் உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தம்மொடு பிறமயங்குதல் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும் மெய்யுடன் மெய் மயங்குங்கால் கசதப என்னும் நான்கும் தம்மொடு தாமே மயங்கும்., ரழ என்னும் இரண்டும் தம்மொடு பிறனே மயங்கும்; ஒழிந்த பன்னிரண்டு மெய்யும் தம்மொடு தாமும் மயங்கும். எனவே கசதப என்பன வேற்றுநிலை மயக்கத்தில் வாரா. ரழ என்பன உடனிலை மெய்ம்மயக்கில் வாரா· பிற எழுத்து இரண்டு மயக்கிலும் வரப்பெறும்.

எழுத்துக்கள் தொடர்ந்து நின்று மொழியாகும்போது சில வரன்முறைகள் அமைவதுண்டு. அது மொழிக்கு மொழி மாறுபடலாம். Strength என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிமுதல் 3 மெய்களும் இறுதியில் 4 மெய்களும் வரும். இத்தகைய வருகை தமிழில் இல்லை வெட்கம் என்பது போல வெங்டம் போன்ற சொல் தமிழில் இல்லை. எனவேதான் எழுத்தொலிகளின் பாகுபாடும் (Phonemic analysis) எழுத்தொலியின் வருகையும் (Phonemie distribution)இலக்கணத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

## வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதி

**ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே**

**பொருள்**

ஙகர முன்னர் வகரமும் ககரமுன்னர் யகரமும் மயங்கும்

(எ-டு) கங்கன், தெவ்யாது

**ஞநமுன் தம்மினம் யகர மொடாகும்** (112)

**பொருள்**

ஞந என்ற இரு மெய்முன்னரும் தமக்கினமாகிய சகர நகரங்களும் யகரமும் மயங்கும்.

(எ-டு) கஞ்சன், உரிஞ்யாது

கந்தன், பொருந் யாது

**டறமுன் கசப மெய்யுடன் மயங்கும்** (113)

**பொருள்**

டறஎனும் மூன்று மெய் முன்னரும் கசப என்னும் மூன்று மெய்யும் இணங்கி மயங்கும்.

(எ-டு) வெட்கம், கட்சி, நுட்பம், கற்க, கற்சிலை, கற்ப

**ணனமுன் இனங்கச ஞபமய வவ்வரும்** (114)

**பொருள்**

ணன எனும் இரு மெய் முன்னரும் தமக்கினமாகிய டறக்களும் கசஞ பமயவ என்னும் ஏழு மெய்யும் மயங்கும்.

(எ-டு) விண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மலர், மண்யாது, மண்வலிது, புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, தென்புறம், பொன்மலை, பொன்யாது, பொன்வலிது.

**மம்முன் பயவ மயங்கும் என்ப .** (115)

**பொருள்**

மகரமெய் முன்னர்ப் பகர யகர வகரங்கள் மயங்குமென்று சொல்லுவர் புலர்.

(எ-டு) கம்பன், கலம்யாது, கலம்வலிது.

**யரழ முன்னர் மொழிமுதல் மெய்வரும்** (116)

**பொருள்**

இம்மூன்று மெய்முன்வரும் மொழி முதலாய்வரும் என்ற பத்து மெய்யும் மயங்கும்.

| (எ-டு) | வேய் / வேர் / வீழ் | கடிது | பெரிது |
|---|---|---|---|
| | | சிறிது | நீண்டது |
| | | தீது | மாண்டது |
| | | | ஞான்றது |

யாது, வலிது எனவும் வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு எனவும் வரும்.

**வனமுன் கசப வய ஒன்றும்மே** (117)

**பொருள்**

இவ்விரண்டு மெய்முன்னரும் கசபவய என்னும் ஐந்து மெய்யும் மயங்கும்.

(எ-டு) வேல்
வாள் ] கடிது, சிறிது, பெரிது, வலிது, யாது என வரும்.

## உடனிலை மெய்ம்மயக்கத்தில் சிறப்புவிதி

*ரழவல்லன, தம்முன் தாம் உடன்நிலையும் (118)*

**பொருள்**

ரகார ழகாரம் அல்லனவாகிய வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் கூறிய பன்னிரண்டு மெய்யும், உடனிலைக்கேயுரிய கசதப நான்கும் தம் முன் தாம் உடன்நின்று மயங்கும்.

(எ-டு) அங்ஙனம், அவ்வை, அஞ்ஞானம், அந்நீர், அட்டு, அற்றம், அண்ணன், அன்னை, அம்மை, வெய்யது, அல்லி, அள்ளல் எனவும் அக்கு, அச்சு, அத்து, அப்பு எனவும் வரும்.

# தனிமெய்யுடன் தனிமெய்யாய் மயங்குவன

## மொழிக்கு உறுப்பாக மயங்காதன

*யரழவொற் றின்முன் கசதப ஙஞநம*
*ஈரொற் றாம்ரழத் தனிக்குறில் அணையா (119)*

**பொருள்**

ய ர ழ வென்னும் மூன்றொற்றின் முன் கசதபஙஞநம என்ற எட்டு ஒற்றும் ஈரொற்றாயும் மயங்குவனவாம்.

(எ-டு) வேய்க்குறை, வேர்க்குறை, வீழ்க்குறை
வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு
காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம்

## செய்யுளில் ஈரொற்றாய் நிற்கும் எழுத்துக்கள்

*லளமெய் திரிந்த ணனமுன் மகாரம்*
*நைந்து ஈர்ஒற்றாஞ் செய்யுள் உள்ளே (120)*

**பொருள்**

செய்யுளிடத்து லகார ளகார ஒற்றுத் திரிந்த னகார ணகாரங்கள் முன்வரும் மகரவொற்று, முன்னர்க் கூறியவாறே குறுகி அவற்றுடன் ஈரொற்றுடனிலையாம்.

(எ-கா) திசையறி மீகானும் போன்ம்
மயிலியல் மாதர் மருண்ம்

இவ்வாறு வருமிடத்து மகரம் தன் மாத்திரையில் குறுகி ஒலிக்கும்.

## முதனிலை இறுதிநிலை இடைநிலைகளுக்குப் புறனடை

*தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும் இம்முறை மாறியும் இயலும் என்ப.(121)*

**பொருள்**

எழுத்துக்கள் தம் பெயர்களைச் சுட்டி வருமிடத்து முன்னே கூறிய மொழி முதல் விதிகள், இடைநிலை மெய்ம்மயக்க விதிகள் ஆகியவற்றை மீறி எல்லா எழுத்தும் முதலாகும். எல்லா எழுத்தும் மயங்கவும் பெறும். ***அவற்றுள் ல ன*** என்பதில் ள் ல் என்ற மயக்கம் வந்திருப்பது காண்க. *கெப் பெரிது* என எகரம் மெய்யோடு சேர்ந்து ஈறாகியது காண்க.

## 10. போலி

### மொழியிறுதிப் போலி

போலியாவது ஓர் எழுத்தைப் போன்று பிற எழுத்து நின்று ஒலித்தல்.

மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகரமோடு உறழா நடப்பன உளவே. (122)

**பொருள்**

பால்பகா அஃறிணைப் பெயர்களிடத்து இறுதி மகரம் னகரத்தோடு ஒத்து நடப்பன உளவாம்.

(எ-டு) அகம் - அகன்; குளம் - குளன்

மகரம் னகரத்தோடு ஒத்தலாவது பெயரிறுதிக்கண் மகரம் நின்ற நிலைக்களத்து னகரம் நிற்பினும் வேற்றுமையின்றி ஒத்தல். மொழி நூலார் உறழ்ச்சி (Free Variation) என்பர்.

### மொழிமுதற் போலியும், மொழியிடைப் போலியும்

அ ஐ முதலிடை ஒக்கும் சஞயமுன் (123)

**பொருள்**

மொழி முதலினும் இடையினும் அகர ஐகாரங்கள் வேற்றுமையின்றி ஒத்து நடப்பனவாம், சகர ஞகர யகரங்கட்கு முன்னர் வருமாயின்.

(எ-டு) பசல் - பைசல்; மஞ்சு - மைஞ்சு; மயல் - மையல்
அமச்சு - அமைச்சு; இலஞ்சி - இலைஞ்சி; அரயர் - அரையர்

### மொழியிடைப் போலி

ஐகான் யவ்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே (124)

**பொருள்**

மொழியிடைக்கண் சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும் யகரவொற்றின் பின்னும் இயல்பாய் வரும் நகரத்தோடு ஞகரம் உறழும் என்று சொல்லுவாருமுளர்.

(எ-டு) செஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க

இப்போலி அருகி வருதலின் சில்வழி என்று நினைவுபடுத்துகிறார்.

### சந்தியக்கரம்

சந்தியக்கரமாவது சுட்டெழுத்து,

அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத்து இசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன (125)

**பொருள்**

அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் தம்முள் ஒத்தெய்தின் ஐ என்னும் நெட்டெழுத்து ஒலிக்கும்; அகரத்தோடு உகரமும் வகரமும் தம்முள் ஒத்து ஒரு தன்மையவாக ஔ என்னும் நெட்டெழுத்தாக ஒலிக்கும்.

| | |
|---|---|
| அஇ | அஉ |
| > ஐ | > ஔ |
| அய் | அவ் |

- எனக் கொண்டு எழுத்துப்போலி என்போரும் உண்டு. சிலர், *அஇ, அய்* கூட்டொலிகள் (Dipthongs) என்பர்.

## எழுத்தின் சாரியைகள்

*மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்*
*ஐஔ கானும் இருமைக் குறிலிவ்*
*விரண்டொடு கரமுமாம் காரியை பெறும்பிற* (126)

**பொருள்**

மெய்கள் அகரச் சாரியையும், நெட்டுயிர்கள் காரச்சாரியையும் ஐகார ஔகாரங்கள் காரச் சாரியையுடனே கான்சாரியையும் உயிர்க் குறிலும் உயிர் மெய்க்குறிலும் காரம் கான் என்னும் இவ்விரண்டுடனே கரச்சாரியையும் பெறும்.

(எ-டு) க ங எனவும், ஆகாரம் ஐகாரம், ஔகாரம் எனவும், ஐகான் ஔகான் எனவும், அகாரம் அஃகான் எனவும், மகாரம் மஃகான் மகரம் எனவும் வரும்.

உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்

கான்
< கரம்
காரம்

நெடில் . . . காரம்

காரம்
ஐ, ஔ <
கான்

## இயலுக்குப் புறனடை

*மொழியாய்த் தொடரினும் முன்னனைத் தெழுத்தே.* (127)

**பொருள்**

இவ்வெழுத்துக்கள் பதமாயினும் அப்பதம் தம்மோடும் உருபோடும் புணரினும் அவற்றால் பிறழாது முன்னர்க்கூறிய அப்பத்திலக்கணத்தையும் உடையவாம். எழுத்து சொல்லில் இடம்பெறும்போது மாலையின் கண்மலர் போன்று நிற்கும் என்பர் சிவஞான முனிவர்.

### பயிற்சி வினாக்கள்

1. எழுத்தென்றால் என்ன? விளக்கம் தருக.
2. சார்பெழுத்துக்கள் யாவை?
3. இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின - விளக்கு.
4. ஆ, ச, ழ, ற, வ என்னும் எழுத்துக்கள் எவ்வாறு பிறக்கின்றன?
5. மொழிமுதல் மொழியிறுதி மெய்கள் யாவை?
6. இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றி விரிவாக எழுதுக.
7. மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், போலி முதலியவற்றைச் சான்றுடன் விளக்குக.

## 2. பதவியல்

இப்பகுதியில், பதம், பதத்தின் உருபாக வரும் பகுதி, விகுதி, இடைநிலை போன்றவை வடமொழியாக்கம் முதலிய கருத்துக்களை விளக்க முற்படுகிறார். உண்மையில் ஒரு மொழியின் எழுத்தொலிகளை வகைப்படுத்தி அவற்றின் வன்முறைகளை விளக்கிவிடுவதால் மொழியின் இலக்கணம் நிறைவுற்றது என்று நினைப்பதற்கில்லை. கூர்ந்து நோக்கினால் எழுத்தொலிகளுக்கும் பொருளுக்கும் நேரடியான தொடர்பு கிடையாது, பொருளோடு தொடர்புடையன உருபன்களே (Morphemes). உருபன் ஒன்று அல்லது பல எழுத்தொலிகளால் (Phonemes) ஆக்கம் பெற்றுப் பொருள் குறித்து நிற்கும். (Morpheme consists of one or more Phonemes endowed with some grammatical meaning) இவ்வுருபனை நன்னூலார் பதம் என்று கூறி விளக்குகிறார். எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம் என்பார். அது பகாப்பதம், பகுபதம் என இருபாலாகி இயலும். எழுத்து தனித்தும் தொடர்ந்தும் வருமென்று கூறுவது, ஒன்று அல்லது பல ஒலியன்களால் (எழுத்தொலிகளால்) ஆக்கப்பெறுவதே பதம் என்ற உண்மையை எடுத்துக்காட்டும்.

சொற்கள் பல உருபனால் ஆக்கப் பெற்றிருக்கலாம். செய்தான் என்னும் சொல், செய்+த்+ஆன் என்னும் மூன்று உருபன்களை உடையது. இங்கு ஒரு குறிப்பிட்ட நெறியில் பகுதி + இடைநிலை + விகுதி என இணைந்து நிற்பதையும் பார்க்கிறோம். இவை முறைமாறி அமைவதும் இல்லை. இவ்வுணர்வோடு பதங்களையும் பதவுறுப்பின் முறைகளையும் பவணந்தியார் இவ்வியலில் விளக்க முயல்கிறார். முன்னைத் தமிழ் நூல்களில் இல்லாதவைகளை இவ்வாசிரியர் தாமே பகாப்பதம், பகுபதம் எனக்காட்டி இலக்கணமும் கூறி

### பதம்

பதம் இன்னதென்பதும் அதன் வகையும்:

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அதுபகாப் பதம்பகு பதம் என
இருபா லாகி இயலும் என்ப.

**பொருள்**

எழுத்துக்கள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பொருளைத் தருமாயின் அது பதமாம். அப்பதம் பகாப்பதம் எனவும் பகுபதம் எனவும் இரண்டு பகுதியாகி நடக்குமென்று சொல்லுவர் புலவர்.

எழுத்தானாய பதம் அரிசி முதலியவற்றால் சமைத்த சுண்ணம் போலாது மலராற் சமைத்த மாலைபோல் நிற்றலின் எழுத்தே என்றும், ஒரெழுத்தேனும் நின்று பிறபொருள் தருதலின் பதமாம் என்பார் தனித்து என்றும் கூறினார்.

### ஓரெழுத்தொருமொழி

உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும்நெடில் நொது ஆங்குறில் இரண்டோடு
ஓரெழுத் தியல்பதம் ஆறேழ் சிறப்பின (129)

**பொருள்**

உயிர்வருக்கத்தும், மவ்வருக்கத்தும் அவ்வாறும், தவ்வருக்கத்தும், பவ்வருக்கத்தும், நவ்வருக்கத்தும் ஐயைந்தும், கவ்வருக்கத்தும், வவ்வருக்கத்தும், சவ்வருக்கத்தும் நந்நான்கும், யவ்வருக்கத்து ஒன்றுமாகும். நெட்டெழுத்தானாகிய மொழி நாற்பதும், நொவ்வுந் துவ்வுமாகும். குற்றெழுத்தானாகிய மொழி இரண்டுடனே ஓரெழுத்தானாகிய மொழி நாற்பத்திரண்டு ஆகும்.

முன்னர் எழுத்துத் தனித்தும் தொடர்ந்தும் ஒரு மொழியாம் என்றார். அப்பதங்களைப் பகுபதம், பகாப்பதம் என்று இருபிரிவாகக் கொண்டார் இவற்றுள் ஓரெழுத்து இயல்பதங்கள் நாற்பத்திரண்டு என்று எடுத்துரைக்கிறார்.

| | | |
|---|---|---|
| 1. | உயிரில் ஆறு - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ<br>மகரத்தில் ஆறு மா, மீ, மூ, மே, மை, மோ | 12 |
| 2. | தகரத்தில் ஐந்து - தா, தீ, தூ, தே, தை<br>பகரத்தில் ஐந்து - பா, பூ, பே, பை, போ<br>நகரத்தில் ஐந்து - நா, நீ, நே, நை, நோ | 15 |
| 3. | ககரத்தில் நான்கு - கா, கூ, கை, கோ<br>வகரத்தில் நான்கு - வா, வீ, வை, வெள<br>சகரத்தில் நான்கு - சா, சீ, சே, சோ | 12 |
| 4. | யவ்வில் ஒன்று - யா | 1 |
| 5. | நொ, து, ஆம் - குறில் இரண்டு | 2 |
| | | 42 |

ஆ- பசு, ஊ-ஊண், ஐ-அழகு, ஓ-மதகுப்பலகை, மீ-மேல், மூ-மூன்று, முதுமை, தூ-தூய்மை, தே-தெய்வம், பா- பாடல், பே-நுரை, நே-அன்பு, நை-நலிவி, நோ-நோவு, வீ-மலர், சே-எருது, சோ-அரண், வெள-கவர்தல், நொ-துன்புறுத்து, து-உண்.

## தொடரெழுத்தொரு மொழி

பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும்
எழுத்து ஈறாகத் தொடரும் என்ப. (130)

**பொருள்**

பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழெழுத்திறாகவும், பகுபதம் இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்திறாகவும் தொடரும் என்று சொல்லுவர் புலவர்.

(எ-டு) அணி, அறம், அகலம், அருப்பம், தருப்பணம், உத்திரட்டாதி எனப் பகாப்பதம் இரண்டெழுத்து முதலாக ஏழு எழுத்திறாக அமையும். கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான் எனப் பகுபதம் இரண்டெழுத்து முதலாக ஒன்பது எழுத்திறாக அமையும், எழுந்திருக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார், நடத்துவிப்பிக்கின்றார், நடத்துவிப்பிக்கிறார்கள், நடத்துவிப்பிக்கின்றார்கள், நடத்துவிப்பிக்கின்றவர்கள் எனப் பகுதி முதலிய உறுப்பு வேறுபட்டு வருவனவற்றிற்கு இவ்வரையறை இல்லை என்க.

இவ்வாறு தொடர் எழுத்து மொழிகளைப் பற்றியும் சில செய்திகளை அறிந்து கொள்கிறோம். பகாப்பதம் இரண்டெழுத்து முதல் ஏழு எழுத்து ஈறாகத் தொடரும். பகுபதம் ஒன்பதெழுத்து ஈறாகவும் தொடர்வதுண்டு. அடுத்தாற்போல் பகாப்பதங்களையும் பகுபதங்களையும் விளக்கிவிட்டுப் பகுபத உறுப்புக்களை விரிவாகப் பேசுகிறார் ஆசிரியர்.

சொற்களில் சில உட்கூறுகளாகப் பகுக்கப்படும். எடுத்துக்காட்டாகக் கண்ணுதலான் என்ற சொல் கண்-நுதலான் எனப் பகுக்கப்படலாம். நுதலான் என்பதும் நுதல்-ஆன் எனப் பிரிந்து நிற்கும். இங்ஙனம் தனித்தனியே ஏதேனும் ஒரு பொருளை உணர்த்தக்கூடிய கூறுகளாகப் பிரிக்கப்படும் சொற்கள் பகுபதம் எனப்படும். சில சொற்கள் மேலும் பிரிக்கப்பட முடியாமற் - பிரித்தால் பொருளற்று நிற்பதாக இருக்கும். கண், அடு முதலிய சொற்களை மேலும் பிரிக்க இயலாது. பொருள்தரக் கூடிய வகையில் மேலும் பிரிக்கமுடியாத சொற்கள் பகாப்பதம் எனப்படும்.

பகுப்பாற் பயனற்று இடுகுறி யாகி
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடையுரி நான்கும் பகாப்பதம் (1)

**பொருள்**

பகுபதம் போல் இதனைப் பகுத்துப் பார்க்கின் அப்பகுப்பாற் பகுதி, விகுதி முதலிய உறுப்பின் பயன் விளைவதின்றிக் காரணத்தான் வரும் அப்பதம் போலாத இடுகுறியாய்ப் பகுதி, விகுதி முதலிய ஆறு உறுப்பானும் பின்பு முடிக்கப்படும் அப்பத'ம் போலாது படைப்புக் காலம் தொட்டு ஒன்றாய் முடிந்து நடக்கின்ற பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கும் பகாப்பதமாம்.

*(எ-டு)* நிலம், நீர் எனவும், நட, வா எனவும், மன், கொல் எனவும், உரு, கழி எனவும் வரும்.

உருபன் வேறு, சொல் வேறு என்பதை மொழி நூலாரும் எடுத்துக்காட்டத் தவறவில்லை. சொல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருபன் என்று கூறுவதற்கில்லை. அவ்வாறு கூறினால் சொல்லை எவ்வாறு விளக்குவது என்ற வினா எழும். படி - இது ஒரு சொல் ஒரே உருபன். படித்தான் என்பதும் ஒரு சொல். ஆனால் இதில் படி+த்+ஆன் என்று மூன்று உருபன்கள் இருக்கின்றன என்று விளக்குவார் டாக்டர். முத்துசண்முகம் அவர்கள் பவணந்தியாரும் அவ்வாறே சிந்தித்தார் என்று கருத இடமுண்டு.

பகுப்பாற் பயனற்று என்னும் போது மொழியியலாரின் (This form can not be divided into smaller meaningful parts) உருபன் விளக்கம் புலப்படும். முன்னே ஒன்றாய் முடிந்தியல்கின்ற என்னும் போது இரண்டு விட்டிசைகளின் இடையே தனிவடிவாக நிற்கும் கட்டற்ற உருபனைக் (free form) காண்கிறோம். அதனையே நன்னூலார் பகாப்பதம் என்கின்றார். ஆங்கிலத்தில் (Morphemic word) என்றும் அழைக்கலாம். (A morphemic word is defined as a text stretch bounded by characteristic phonetic break), இதில் மூன்று நிலைகளைப் பார்க்கிறோம்.

1. உருபன் அல்லது பதம் (Morpheme)
2. பகாப்பதம் (Morphemic word)
3. பகுபதம் (word)

உருபன்களையே பகுபத உறுப்புக்கள் என்ற நிலையில் விளக்கலாம். பகுதி என்பது ஒரு வகையில் கட்டற்ற உருபன். தத்தம் பகாப்பதங்களே. பகுதியாகும் என்பதால் (Morphemic word) என்ற தகுதியும் வந்து விடுகிறது. இடைநிலை, சாரியை, விகுதி போன்ற பிற உறுப்புக்கள் யாவும் ஒரு வகையில் கட்டுருபுகள் (bound morphs) ஆகும். செய்-த்-ஆன் என்பதில் த்-ஆன் இரண்டும் கட்டுருபுகள். அவை தனித்து நிற்பதில்லை. செய் என்பது தனித்து நிற்கும். ஆதலால் தனியுருபு (free morph) ஆயிற்று. செய்தான் என்னும் சொல்லில் பொருள் சிறந்து நிற்கும்பகுதி செய். ஆதலின் அதுவே வேர் (root) என்றும் அழைக்கப்பெறுவதுண்டு. த் என்னும் இடைச்சொல்லை நினைக்கும்போது செய் என்பதே அடி (stem) என்பதையும், ஆன் எனும் விகுதியை நினைக்கும்போது செய்த் என்பதே அடி (stem) ஆகும் என்பதையும் கருத்தில் கொள்க. (A Morpheme spoken alone with meaning in normal speech is a free form, A fraction that never appears by itself with meaning is a bound form)

## பகுபதம்

பகுபதம் என்ற நிலையில் பெயரும் வினையும் முன்நிற்கும் பெயரைக் குறிப்பிடும்போது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலின் வரு பெயர் என்று விளக்குவார்.

பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின்
வருபெயர் பொழுதுகொள் வினை பகுபதமே(132)

**பொருள்**

இங்ஙனம் கூறிய பொருள் முதலிய ஆறன் காரணமாக வரும் பெயர்ச்சொற்களும், தெரிநிலையாயும், குறிப்பாயும் காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் ஆகிய இரண்டும் பகுபதமாம்.

| | | |
|---|---|---|
| நூலன், பொன்னன் | - பொருளின் | அடிப்படையில் பிறந்த பெயர்ப்பகுபதம். |
| ஊரன், அகத்தன் | - இடத்தின் | அடிப்படையில் பிறந்த பெயர்ப்பகுபதம். |
| ஓணத்தான், ஆதிரையாள் | - காலத்தின் | அடிப்படையில் பிறந்த பெயர்ப்பகுபதம். |
| மூக்கன், கண்ணன் | -சினையின் | அடிப்படையில் பிறந்த பெயர்ப்பகுபதம். |

வெள்ளையன், கரியன் - பண்பின் அடிப்படையில் பிறந்த பெயர்ப்பகுபதம்.
கொல்லன், ஓதுவான் - தொழிலின் அடிப்படையில் பிறந்த பெயர்ப்பகுபதம்.

நடந்தான், நடக்கின்றான், நடப்பான் - வினைப்பகுபதங்கள். அவன், இவன், உவன் என்னும் சுட்டுப் பெயரும் எவன், யாவன் என்னும் வினாப்பெயரும் தமர், நமர் என்னும் சினைப்பெயரும், தந்தை, எந்தை, நுந்தை என்னும் முறைப்பெயரும் இவை போல்வன பிறவும் சுட்டுப் பொருளும், வினாப்பொருளும், கிளைப் பொருளும், முறைப் பொருளும் காரணமாக வரும் பெயராய்ப் பகுதி விகுதி முதலிய உறுப்பும் உறுப்பின் பொருளும் தந்து வெளிப்படையான பகுபதமாய்ப் பகுக்கப்பவன. ஆதலால் இவற்றைப் பகாப்பதம் எனக்கூறின் அது பொருந்தாதென்க என்பர் சிவஞான முனிவர்.

## பகுபத உறுப்புக்கள்

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற ஆறும் பகுபத உறுப்புக்களாம்.

*பகுதி விகுதி இடைநிலை சாரியை*
*சந்தி விகாரம் ஆறி னும் ஏற்பவை*
*முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் (133)*

**பொருள்**

இங்ஙனம் கூறிய பகுதி முதலிய ஆறு உறுப்பினுள்ளும் ஏற்பனவற்றைக் கருதிக் கூட்டி முடிப்ப, எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடியும்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்பினுள்ளும் பொருளமைதிக்கு ஏற்பவற்றைப் பெற்று எல்லாப் பகுபதங்களும் முடிவு பெறும். சந்தி, விகாரம் இரண்டும் அகச்சந்தியில் (Internal Sandhi) அடங்கும். சாரியை என்பது பொருட்குறிப்பில்லா வெற்றுருபன் (empty morph) ஆகும். எனவே பகுதி, விகுதி, இடைநிலை மூன்றும் முக்கியமாகிவிடுகின்றன.

## பகுதி

*பகுதி இன்னதென்பது:*
*தத்தம்*
*பகாப்பதங்களே பகுதி ஆகும். (134)*

**பொருள்**

பெயர்ப் பகுபதங்களுள்ளும், வினைப்பகுபதங்களுள்ளும் தத்தம் முதனிலையாய் அமையும் பகாப்பதங்களே அவற்றின் பகுதியாம்.

பகுபதத்துள் பகுதி, விகுதி முதலிய உறுப்பெல்லாம் பகாப்பதம் ஆயினும், விகுதி முதலியவற்றை மேல் விதந்து கூறலின், ஈண்டு, தத்தம் பகாப்பதங்கள் என்றது முதனிலைகளையே என்பது பாரிசேடத்தால் (ஒலிந்து நின்றதனால் உணர்தல்) விளங்கும். தத்தம் பகாப்பதங்கள் என்னும் நிலையில் பெயர்ச்சொல் பகுதி, இடைச்சொல் பகுதி, பண்புப்பகுதி, ஏவல் வினைப்பகுதி முதலியவற்றை அறியலாம்.

குழையன் - பெயர்ப் பகுதியாயிற்று.
அவன் - இடைச்சொல் பகுதியாயிற்று.
மென்மையள் - பண்புப்பகுதி (மென்மை).
நடந்தான் - தெரிநிலைவினைப்பகுதி (நட).

## பண்புப் பகுதிக்கு எய்தியதன் மேற்சிறப்புவிதி

*செம்மை சிறுமை சேய்மை தீமை*
*வெம்மை புதுமை மென்மை மேன்மை*

திண்மை உண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பின் பகாநிலைப் பதமே (135)

பொருள்

இங்ஙனம் கூறிய பதினொன்றும் இவற்றிற்கு எதிரான வெண்மை கருமை பொன்மை பசுமைகளும், பெருமை அணிமை நன்மை தன்மை பழமை வன்மை கீழ்மை நொய்மை இன்மை பருமையும், இவை போல்வன பிறவும் பகுதியாய்ப் பண்புப் பொருளினின்றும் வேறு பொருள் பகுக்கப்படாத நிலைப்பதமாம்.

இவையெல்லாம் சொல்நிலையால் பொன்+மை, நுண்+மை எனப் பகுபதமாயினும் மைவிகுதிக்குப் பகுதிப் பொருளல்லது வேறு பொருள் இல்லாமையினால் பொருள் நிலையால் பகாப்பதமாம் என்று அறிவிப்பதற்குப் பண்பிற்பகா என்றார். இவை மை விகுதி பெற்றே இயங்கும் என்பதால் இணைத்துக் கூறினர் என்பார். காதன்மை கடவுண்மை போல உண்மையான், மேன்மையான், செம்மையான், புதுமையான் என்று அமைந்திடின் விளக்குவது எளிது, ஆனால் நல்லன், கரியன், பாசி, பைந்தார், வெற்றிலை, சேதாம்பல் முதலியவற்றின் பகுதிகளைக் காண்பது எவ்வாறு? சேனாவரையர் இவற்றைப் *பிரிப்பப் பிரியா* என்பார். ஆனால் பவணந்தியார் பண்புப் பகுதிகளைப் பிரித்துக்காட்டி விதியும் கூறுகிறார்,

ஈறு போதல் இடையுகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடியகரம் ஐயாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே (136)

பொருள்

செம்மை சிறுமை முதலாகத் தெரிந்த பண்புப்பகுதி வாய்பாடுகளின் (1) இறுதி விகுதி போதலும் (2) இடையினின்ற உகரம் இகரமாதலும் (3) முதல் நின்ற குறில் நெடில் ஆதலும் (4) முதல் நின்ற அகரம் ஐகாரமாதலும் (5) இடையே தன்னொற்று மிகுதலும் (6) முன்பு நின்ற மெய்திரிதலும் (7) வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதலும் இவை போல்வன பிறவும் அப்பண்பினுக்கு இயல்பாம்.

| | |
|---|---|
| *ஈறுபோதல்:* | வல்லவன், நல்லன்-நன்மையின் மைவிகுதி கெட்டது (ஈறுபோதல்). |
| *இடைஉகரம் இஆதல்:* | பெரியன், கரியன் - கருமையின் மை கெட்டு இடையுகரம் இய்யாதல். |
| *ஆதிநீடல்:* | பாசடை, பாசி - பசுமையின் மைகெட்டு ஆதிநீடல். |
| *அடிஅகரம் ஐஆதல்:* | பைங்கண், பைந்தார் - பசுமையின் மைகெட்டு உயிர் மெய்கெட்டு அகரம் ஐகாரம் ஆயிற்று. |
| *தன்னொற்று இரட்டல்:* | வெற்றிலை - வெறுமையின் மைகெட்டுத் தன்னொற்று இரட்டல். |
| *முன்னின்ற மெய்திரிதல்:* | சேதா, சேதாம்பல் . . . செம்மையின் மைகெட்டு முன் நின்ற மகரம் தகரமாகத் திரிந்தது. |
| *இனம் மிகல்:* | பசுமை+பொன்-பசும்பொன் என இனமிக்கது. |

## தெரிநிலை வினைப்பகுதி

நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வௌஉரிஞ் உண்பொருந் திரும்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென் று
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே (137)

**பொருள்**

நட வா மடி சீ விடு கூ வே வை நொ பொ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று முதனிலையாய் எய்திக் கிடந்த இவ்விருபத்து மூன்றாகும். உயிரும் ஒற்றும் குற்றுகரமும் ஆகிய ஈற்றினையுடைய இத்தொடக்கத்து வாய்பாடுகள் எல்லாம், செய்யென்னும் ஏவலினது பகாப்பதமாகிய பகுதியும் ஏனை வினையினது பகாப்பதமாகிய பகுதியுமாம். இவற்றுடன் கா, சா, தா என்பன கற்றான், நின்றான், புல்லினான், சொன்னான் என்று பகுதிகள் விகாரமாதலையும் கொள்க. சித்திரி, கடைக்கணி என்பன பெயர்ப்பகுதிகள். பொன் போன்றாள் என்பது இடைச்சொல் பகுதி. சான்றான் உரிச்சொல் பகுதி, இவற்றையும் கொள்க.

ஏவல்வினைப் பகுதிக்கு எடுத்துக்காட்டு: நடந்தான், வந்தான், மடித்தான், சீத்தான், விட்டான், கூவினான், ஏவினான், வைத்தான், நொந்தான், போயினான், வெளவினான், உரிஞ்சினான், உண்டான், பொருமினான், தின்றான், திருமினான், தேய்த்தான், பார்த்தான், சென்றான், வவ்வினான், வாழ்ந்தான், கேட்டான், அஃகினான், கிடந்தான், கண்டான், ஏகினான், குறுகினான், கட்டினான், பொருந்தினான், எய்தினான் என வரும் வினைப்பகுதிகள் ஏவல்வினையாகும். பகாப்பதம் ஏவலாகப் பயன்படும் என்று காட்ட ஏவல்வினைப்பகாப்பதம் என்றார். நடவாய் என்று ஆய்விகுதி பெற்றும் ஏவலாகும். அந்நிலையில் நட என்னும் முதனிலை ஏவல் உணர்த்தாது என்று காட்டுதற்கே ஏவல் வினை என்றார் என உரையாசிரியர்கள் கூறுவர். ஏவல் பகுதிகள் வி, பி, என்னும் விகுதிகளைப் பெற்றும் செய்வி, செய்விப்பி என ஏவலாகும். பவணந்தியார் செய்விப்பி என்பதே ஈரேவல் என்பார்.

(எ-டு) நடப்பியாய், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான்
வருவியாய், வருவிப்பாய், வருவிப்பியாய்

இச்சொற்களைப் பார்க்கும்போது இவற்றின் பகுதி எது என்ற வினா எழுவது இயற்கை, நன்னூலார் *விளம்பிய பகுதி வேறாதலும் விதியே* என்பார் அதனால் இவற்றில் நட என்பது பகுதியாகாமல் நடப்பி, நடத்துவிப்பி, வருவி, வருவிப்பி என்பவையே பகுதியாகிவிடுகின்றன.

## ஏவல்பகுதிச் சிறப்புவிதி

*செய்யென் வினைவழி விப்பி தனிவரின்*
*செய்விஎன் ஏவல் இணையின் ஈரேவல்*

**பொருள்**

மேற்கூறிய செய் என்னும் வாய்பாட்டு முதனிலை தனிவினையின் பின் வி.பி. என்னும் இவ்விரண்டு விகுதியினுள் ஒன்று வருமாயின் செய் என்னும் ஏவல்மேல் ஒரேவலாய்ச் செய்வி என்னும் வாய்பாட்டு ஏவல்பகுதியாம். அவற்றின் பின் இவ்விகுதிகள் தன்னோடும் பிறிதோடும் இணைந்து வருமாயிற் செய்விப்பி என்னும் வாய்பாட்டு ஏவற்பகுதியாகும்.

(எ-டு) நடப்பியாய், நடப்பிப்பாய், நடப்பி, நடப்பிப்பி,
வருவியாய், வருவிப்பாய், வருவி, வருவிப்பி

செய், செய்வி, செய்விப்பி என விதந்து கூறினும் செய் எனும் பொது வாய்பாட்டுள் முன்னர் அடக்கிக் கூறினார் என்க. ஏவல் பகுதி வேறாதலும் வினைப் பகுதி வேறாதலும் விதியாம் விலக்கன்று.

## வினைப்பகுதிக்குப் புறனடை

*விளம்பிய பகுதி வேறாதலும் விதியே* (139)

**பொருள்**

ஏவல்பகுதி வேறாதல்போல அதன்பின்னே விளம்பிய வினைப்பகுதி வேறாதலும் விதியாம் விலக்கன்று.

(எ-டு) நடத்தினான், நடப்பித்தான், நடத்துவிப்பித்தான், இங்குத் தன் வினைப்பகுதிகள் பிறவினைப்பகுதிகள் ஆயின.

தமிழில் பிறவினைகளை உருவாக்குவதற்குத் திருந்து - திருத்து என வலித்தலும் ஓடு - ஓட்டு என்று ஒற்று இரட்டித்தலும் நட, நடத்து என்று துவ்விகுதி பெறுதலும், உருள் - உருட்டு என்று டுவ்விகுதி பெறுதலும், போ - போக்க என்று குவ்விகுதி பெறுதலும், பாய் - பாய்ச்சு என்று குவ்விகுதி பெறுதலும் முதலிய பல முறைகள் கையாளப்படுகின்றன. அவற்றையெல்லாம் மனதில் கருதியே நன்னூலார் இதனைக் கூறியிருத்தல் வேண்டும். அத்துடன் வி.பி. விப்பி, பிப்பி முதலிய பிறவினைவிகுதி இணைப்பையும் அவர் எண்ணியிருத்தல் வேண்டும். இவை தன்வினை (நட), பிறவினை (நடத்து), இருமடிப்பிறவினை (நடத்துவி), மும்மடிப்பிறவினை (நடத்துவிப்பி) ஆகியன தமிழில் உண்டு என்பதை நிறுவச் சான்றாகும்.

## விகுதி இன்னதென்பது:

பெயர்ச்சொல், வினைச்சொல், இரண்டிலும் திணை, பால், எண், இடம் முதலியவற்றை உணர்த்தும் சொல்லின் இறுதி உறுப்பே விகுதியாகும்.

கண்ணன் - கண்+அன்
கண் - பகுதி
அன் - விகுதி (உயர்திணை படர்க்கை ஆண்பால் ஒருமை)

இனிப்படர்க்கையில் உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால், அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றிற்கும், இருதிணைக்கும் பொதுப்பட்ட தன்மை, முன்னிலை, வியங்கோள் வினைகள் ஆகியவற்றிற்கும் உரிய விகுதிகளை உரைக்கின்றார்.

## விகுதிகள்

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் ப மார்
அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்
அம் ஆம் எம் ஏம் ஓம் மோடு உம் ஊர்
கடதற ஐ ஆய் இமின் இர்ஈர்
ஈயர் கயவும் என்பவும் பிறவும்
வினையின் விகுதி பெயரி்னும் சிலவே. (401)

### பொருள்

இங்ஙனம் அன் ஆன் முதல் முப்பத்தேழாகச் சொல்லப்படுவனவும் இவை போல்வன பிறவும் தெரிநிலை வினையின் விகுதிகளாம். பெயரிடத்தும் இவற்றுள் சில விகுதிகளாம்.

இவ்விகுதிகள் வினையோடு வருவதே மிகுதியாதலின் வினையின் விகுதி என்றார். பெயரோடு வருதல் பெரும்பான்மையன்று. பெயரினும் சில என்றதால் குறிப்பு வினையினும் சிலவென்பது கூறாதே அமையும்.

| | | |
|---|---|---|
| படர்க்கை | அன், ஆன் | - வந்தனன், வந்தான் |
| | அள், ஆள் | - நடந்தனள், நடந்தாள் |
| | அர், ஆர், ப, மார் | - செய்தனர், செய்தார், செய்ப, செய்யார் |
| | அ, ஆ | - நடந்தன, நடவா |
| | டு, து, று | - குண்டுகட்டு, நடந்தது, கூவிற்று |
| தன்மை | கு, டு, து, று | - நடக்கு, உண்டு, நடந்தது, சேறு |
| | என், ஏன், அல், அன் | - நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பன் |
| | அம், ஆம், எம், ஏம், ஓம் | - வந்தனம், வந்தாம், வந்தேம், வந்தனெம், வந்தோம் |
| | கும், டும், தும், றும் | - நடக்கும், உண்டும், நடத்தும், சேறும் |
| முன்னிலை | இ, ஐ, ஆய் | - நடத்தி, நடந்தனை, நடந்தாய் |
| | மின், இர், ஈர் | - நடமின், நடந்தனிர், நடந்தீர் |
| | வியங்கோள், ஈயர், க ய | - நீலியர், நடக்க, வாழிய |

இவை திணை பால் இடங்களை உணர்த்தி வினையின் இறுதி நிலையாய் முழுவதும் வந்தன.

வில்லன், வில்லான், வளையள், வளையாள், ஊரர், ஊரார், வில்லி, வாளி, அரசி, செட்டிச்சி, காத்தறை,மூக்கறை இவற்றால் பெயர்களில் விகுதிகள் இடம்பெறுதலை உணரலாம்.

பெயரினும் சில என்பதால் உரையாசிரியர்கள் வேறுபிற விகுதிகளையும் எடுத்துக் காட்டுகின்றனர். மொழி நூலாரும் வகைப்படுத்திக் காட்டுவர்.

## தொழிற்பெயர் விகுதிகள்

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி போல்வன.

(எ-டு). வருதல், ஆடல், வாட்டம், கொலை, செய்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி.

## பண்புப்பெயர் விகுதிகள்

மை, ஐ, சி, பு, வு, கு, றி, று, அம், நர் என்பன.

(எ-டு) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

இவற்றை வேறுமுறையிலும் பிரித்துக் காட்டுவதுண்டு. நினைவுபடுத்துவதற்கு அம்முறை எளிதாகலாம்.

## வினைமுதற்பொருள் (Actor of the action)

அலரி, பறவை, எச்சம் (இ, ஐ, அம் விகுதிகள்)

## கருவிப் பொருள் (Nouns as agents)

கனவி, எழிலி, மண்வெட்டி (இகர விகுதி)

## விளைவுப் பொருள் (Resultant objects & Related things)

உலவை, கறவை, போர்வை, இருக்கை, பிணையல், விடியல், அனல், உடை, கொடை, தொடை (வை, கை, அல், ஐ விகுதிகள்)

## செயல் விளைவு (Consequent of the action)

கிடாவி, காட்சி, கொள்கை, உவகை, வேட்கை (வி, சி, கை விகுதிகள்)

## தொழில் நிலை முடிவு (State or result of action)

அசைவு, அயர்வு, அளவு, அறிவு, பிரிவு, அடக்கம், ஊக்கம் (வு, அம் விகுதிகள்) இவையாவும் பெயர்க்குரிய விகுதிகளைக் காட்டும். பவணந்தியார் இவற்றைக் குறிப்பிட்டு எழுதவில்லை. அதைப்போல இவ்வியலில் பெயரெச்ச விகுதி, வினையெச்ச விகுதி, பகுதிப்பொருள் விகுதி, துணிவுப் பொருள் விகுதி என்றெல்லாம் குறிப்பிடவில்லை. உரையாசிரியரே இவற்றை எல்லாம் காட்டுவார்.

### பெயரெச்ச விகுதி

செய்த, கரிய, செய்யும். (அ, உம் விகுதிகள்)

### வினையெச்ச விகுதி

நடந்து, ஓடி, போய், உண்ணுபு, உண்ணா, காணின், கண்டால், காணாமல், காண்பான். (உ, இ, ய், பு, ஆ, இன், ஆல், மல், பான் முதலிய விகுதிகள்)

### பகுதிப்பொருள் விகுதி

இரு, இடு என்பன தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும் (எ-டு) எழுந்திருக்கின்றான், உரைத்திடுவான்.

### துணிவுப்பொருள் விகுதி

விடு, ஒழி என்பன துணிவுப்பொருள் உணர்த்தும். (எ-டு) செய்துவிட்டான், செய்தொழிந்தான், இவற்றைச் சிலர் துணைவினை என்றும் கொள்வார்.

## இடைநிலை

### பெயரிடை நிலைகள்

இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்
பகுதி விகுதி பகுத்துஇடை நின்றதை
வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனவே (141)

அறிவுடையோர் படைத்த இலக்கியங்களைக் கண்டு இலக்கியங்களின் அமைதியையே இலக்கணமாகக் கூறலின், மேற்கூறிய பகுதியையும், விகுதியையும் பகுத்து இடையே நின்றது எதுவோ, அதனை, வினையாலணையும் பெயரல்லாத பெயர்கட்கு இடைநிலையென்று சொல்லுக என்கிறார். வினையாலணையும் பெயரில் இடம் பெறுவது கால இடைநிலை என உணர்க.

இங்கே பெயரிடைநிலை, வினையிடைநிலை இரண்டையும் எடுத்துக்காட்ட விழைகிறார் ஆசிரியர். பெயரின் இடைநிலையைக் காண்பது எவ்வாறு? இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்புவதால் பெயர்களில் பகுதி விகுதி பகுத்து இடைநின்றதை இடைநிலை என்று கொள்வார்.

(எ-டு) அறி-ஞ்-அன் ஓது-வ்-ஆன்
வினை-ஞ்-அன் புலை-ச்-சி
கவி-ஞ்-அன் வலை-ச்-சி

இவற்றுள் ஞகரம், சகரம், வகரம் என்பன இடைநிலையாய் நிற்றலை அறியலாம்.

### வினைஇடைநிலைகள்

வினைஇடைநிலைகள் காலம் காட்டும் தன்மையுடையன. தடற ஒற்று இன் என்பன ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலம் காட்டி வரும்.

## இறந்தகால இடைநிலை

தடறவொற்று இன்னே ஐம்பால் மூவிடத்து
இறந்த காலம் தரும் தொழில் இடைநிலை (142)

**பொருள்**

தகர டகர றகர மெய்களும் இன் என்னும் குற்றொற்றும் ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம்.

(எ-டு) செய்-த்-ஆன் உண்-ட்-ஆன்
செல்-ற்-ஆன் உறங்கு-இன்-ஆன்

## நிகழ்கால இடைநிலை

ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழுது அறைவினை இடைநிலை (143)

**பொருள்**

ஆநின்று என்பதும், கின்று என்பதும், ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம்.

(எ-டு) நடவா நின்றான், செய்கின்றான், செய்கிறான்.

## எதிர்கால இடைநிலை

பவ்வ மூவிடத்து ஐம்பால் எதிர்பொழுது
இசைவினை இடைநிலை யாம் இவை சிலஇல (144)

**பொருள்**

பகரவொற்றும் வகரவொற்றும் ஐம்பால் எதிர்காலத்தைத் தரும் வினைப்பகுபத இடைநிலைகளாம். இம்முக்காலமும் முறையே காட்டும் தகரவொற்று முதல் வகரவொற்று ஈறாகிய இடைநிலைகள் சில முற்றுவினைகளிலும் எச்சவினைகளிலும் வருவதில்லை.

(எ-டு) நடப்பான், காண்பான், வருவான், போவான் என்பவற்றில் இடைநிலைகளே காலம் காட்டுகின்றன. எனினும் சில வினைகளிலும் எச்சங்களிலும் விகுதிகள் காலம் காட்டுவதாக நன்னூலார் கருதுகிறார்; அவ்வாறு காலம் காட்டும் விகுதிகளைக் காண்போம்.

## காலம் காட்டும் விகுதி

றவ்வொடு உகர உம்மைநிகழ்வு அல்லவும்
தவ்வொடு இறப்பும் எதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வோடு எதிர்வும்மின் ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவும் செய்யும் நிகழ்பு எதிர்வும்
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே (145)

**பொருள்**

றகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறும் இறந்தகாலமும், எதிர்காலமும் தகரத்தோடு கூடிய அவ்விரண்டீறும் அவ்விருகாலமும், டகரத்தோடு கூடிய அவ்விரண்டீறும் இறந்தகாலமும், ககரத்தோடு கூடிய அவ்விரண்டீறும் எதிர்காலமும், மின் ஈறும் ஏனை ஏவலின் வரும் அனைத்தீறும், வியங்கோள் ஈறும் இகர வீறும் மார்ஈறும்

எதிர்காலமும், பகரவீறு இறந்தகாலமும் எதிர்காலமும் செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றீறு நிகழ்காலமும், எதிர்காலமும், முற்று விகுதி எச்ச விகுதிகளோடு புணர்தற்குரிய எதிர்மறை ஆகாரவீறு மூன்று காலமும் ஏற்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | று, றும் என்பன இறந்தகாலம் எதிர்காலம் காட்டுதல் | எதிர்காலம் சேறு, சேறும். | இறந்தகாலம் சென்று, சென்றும் |
| 2. | து, தும் என்பன இறந்தகாலம், எதிர்காலம் காட்டுதல் | வந்து, வந்தும், வருது, வருதும். | |
| 3. | டு, டும் என்பன இறந்தகாலம் காட்டுதல் | உண்டு, உண்டும். | |
| 4. | கு, கும் என்பன எதிர்காலம் காட்டுதல் | உண்கு, உண்கும். | |
| 5. | மின், ஏவல் வியங்கோள், இ, மார், ஆகியன எதிர்காலம் காட்டுதல் | உண்மின், உண்ணீர், உண்ணும் உண்க, வாழிய, வாழியர் சேறி, உண்மார். | |
| 6. | ப விகுதி இறந்தகாலம், எதிர்காலம் காட்டுதல் | உண்பு, என்ப. | |
| 7. | செய்யும் என்பது நிகழ் காலமும், எதிர்காலமும் காட்டல் | உண்ணும். | |
| 8. | எதிர்மறை விகுதிகள் மூன்று காலமும் காட்டுதல் | உண்ணா. | |

விகுதி காலம் காட்டும் என்ற கோட்பாட்டை மொழிநூல் நெறியில் எவ்வாறு விளக்குவது? அறிஞர்கள் உருபு Ø இடையில் நிற்பதாக எண்ணுவர்.

(எ-டு) என் Ø ப; உண் Ø மின்
வாழ் Ø க; வாழ் Ø இய

வந்து, வந்தும், உண்டு, உண்டும் என்பவற்றில் கால உருபு மறையவில்லை, விகுதியே மறை உருபாக **(Zero morph)** அமைந்திருக்கிறது. உண்ணா என்னும் எதிர்மறையில் கால உருபு இருப்பதாக மொழி நூலார் கருதுவதில்லை. கால உருபும் எதிர்மறை உருபும் ஒன்றையொன்று இடம் மாற்றும். இரண்டும் இணைந்து நிற்பதில்லை.

## வடமொழியாக்கம்

வடமொழியாக்கமாவது, வடமொழிச்சொற்கள் தமிழில் எவ்வாறு வழங்கப்படும் என்பதாம். பதவியலில் குறிக்கத்தக்க பகுதி வடமொழியாக்கம்.

*வடசொல் கிளவி வடஎழுத்து ஒரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே*

என்று ஒரே ஒரு நூற்பாவில் வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்குதலைத் தொல்காப்பியர் சுட்டினார். அவ்வாறாக நன்னூலார் வடமொழியாக்கம் என்று ஒரு தனித்தலைப்பமைத்து விளக்க வேண்டிய தேவை என்ன? நன்னூலார் காலத்தில் வடசொற்கலப்பு தமிழில் மிகுதியாயிற்ற. எனவே தமிழின் ஒலியசை முறையைக் காப்பாற்றுதற்கு அவர் வடமொழிச் சொற்கள் தமிழில் இவ்வாறுதான் ஆகி வரவேண்டும் என்று விதித்தார். அவ்விதிகளின் தொகுப்பே வடமொழியாக்கம்.

## ஆரியமொழி தமிழில் வடமொழியாதல்

இடையில் நான்கும் ஈற்றில் இரண்டும்
அல்லா அச்சை வருக்க முதல் ஈறு
யவ்வாதி நான்மை ளவ்வாகும் ஐயைம்
பொதுவெழுத்து ஒழிந்தநா லேழும் திரியும் (146)

என முதலில் எந்தெந்த ஒலிகள் தமிழிற்கும் வடமொழிக்கும் பொதுவானவை எவை வடமொழிக்கு மட்டுமே உரியவை என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

### பொருள்

ஆரியமொழியுள் அச்சென்று வழங்கும் உயிர் பதினாறனுள்ளும் இடைநின்ற ஏழாம் உயிர் முதல் நான்கும் ஈற்றில் நின்ற இரண்டுமான ஆறும் ஒழிந்து, நின்ற அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்னும் பத்தும் அல் என வழங்கும் முப்பத்தேழு மெய்யுள்ளும் க ச ட த ப ற என்னும் ஐந்து வருக்கத்தினிடையில் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் சொல்லப்பட்டு நிற்கும் மூன்றும் ஒழிந்த கங சஞ டண தந பம என்னும் பத்தும், யரலவ என்னும் நான்கும் ளவ்வும் ஆகும். இருபத்தைந்து தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம் எனவே இவற்றால் ஆகிய வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும்போது திரிபின்றி அவ்வாறே வழங்கும். இவையன்றி மேல் உயிருள் ஒழிந்த ஆறும், ஐந்து வருக்கங்களிலும் இடைகளின் ஒழிந்த பதினைந்தும் முப்பதாம் மெய் முதலான எட்டனுள் ளகரமொழிந்த ஏழுமான இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப்பெழுத்தாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்தாகத் திரிந்து வழங்கும்.

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாக உள்ள எழுத்தால் ஆகிய சொற்கள் விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் வடமொழித்தற்சமம் எனப்படும். (எ-டு) அமலம், காரணம், கமலம் போல்வன.

ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் வடமொழித் தற்பவம் எனப்படும். (எ-டு) அரன், செபம், ஞானம்.

## ஆரியமொழி வடமொழியாதற்குச் சிறப்புவிதி

அவற்றுள்
ஏழாமுயிர் இய்யும் இருவும்ஐ வருக்கத்
திடையில் மூன்றும் அவ்வம் முதலுட்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேல்ஒன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே அகவும் ஐந்திரு கவ்வும்
ஆஈ றுஐயும் ஈயீ றுஇகரமுமாம். (147)

### பொருள்

மேல் திரியும் என்றவற்றுள் சிறப்பெழுத்தாகிய ஏழாமுயிர் இகரமும் இருவுமாம்; ஐந்து வருக்கங்களிலும் இடையில் நின்ற மூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம் எட்டாம் மெய்யான சவ்வருக்கத்துள் எடுத்துச் சொல்லும் மெய் ஒரோவிடத்து மகரமுமாம். முப்பதாம் மெய் மொழி முதற்கட்சகரமும், இடைக்கண் யகரமுமாம். முப்பத்தொன்றாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் டகரமுமாம். முப்பத்திரண்டாம் மெய் மொழி முதற்கண் சகரமும் இடைக்கண் தகரமுமாம், முப்பத்து மூன்றாம் மெய் மொழி முதற்கண் அகரமும் இடைக்கண் ககரமுமாம். முப்பத்தைந்தாம் மெய் இரண்டு ககரமாம். பொதுவெழுத்துள் மொழியிறுதி ஆகாரம் ஐகாரமாம். மொழியிறுதி ஈகாரம் இகரமாகும்.

| | | | |
|---|---|---|---|
| க | kh | g | gh |
| ச | ch | j | jh |
| ட | th | d | dh |
| த | t | d | dh |
| ப | ph | p | ph |

ய ர ல வ sh ஷ ஸ ஹ ள க்ஷ

30 31 32 33

(எ-காடு)

1. ரிஷபம் → டபம் - ஏழாம் உயிரான ரு இகரம் ஆயிற்று.

2. பங்கஜம் → பங்கயம் எட்டாம் மெய்யான ஜ யகரமாயிற்று.

3. க ச ட த ப என்ற ஐந்து வருக்கத்திலும் நான்கு வகை ஒலிகள் வடமொழியில் உண்டு. அவை தமிழில் ஆகும்போது அவ்வவ்வருக்கத்தின் முதல் எழுத்தாகும். கவ்வருக்கம் அனைத்தும் தமிழில் ககரமாகவே ஆகும். நகம், நாகம், மேகம் என வரும். தவ்வருக்கமும் அவ்வாறே தலம், தினம், தரை எனத் தகரமாகவே வரும். பவ்வருக்கமும் அது போன்றே பலம், பந்தம், பாரம் என்று பகாரமாகவே வழங்கப்படும்.

4. பாசம், தேசம் என்பதில் முப்பதாம் மெய் சகரமாகவும் யகரமாகவும் ஆயிற்று.

5. சட்டி, விசம் என முப்பத்தொன்றாம் மெய்யாகிய ஷ என்பது ச ட என்றாயிற்று.

6. வாசம், மாதம் என முப்பத்திரண்டாம் மெய்யாகிய ஸ என்பது ச த என்றாயிற்று.

7. அரன், மோகன் என முப்பத்து மூன்றாம் மெய்யாகிய ஹ என்பது அ க என்றாயிற்று.

8. பக்கம் என முப்பத்து ஐந்தாம் மெய்யாகிய க்ஷ என்பது இரு ககரம் ஆயிற்று.

9. சீதா - சீதை என ஆகார ஈறு ஐகாரமாயிற்று.

10. புரீ - புரி என ஈகார ஈறு இகரமாயிற்று.

## மொழி முதலாகி முன்வரல்

தமிழில் மொழி முதலில் வராத எழுத்துக்கள் எனச் சில எழுத்துக்கள் விலக்கப்பட்டுள்ளன. அம்மெய்களை மொழி முதலாகக் கொண்ட வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கும்போது சில உயிரெழுத்துக்களைத் தமக்கு முதலில் பெற்று வரும்.

*ரவ்விற்கு அம்முதலாம் முக்குறிலும்*
*லவ்விற்கு இம்முதல் இரண்டும் யவ்விற்கு*
*இய்யும் மொழி முதலாகி முன்வருமே (149)*

**பொருள்**

ரகரத்தை முதலாகவுடைய வடமொழிச் சொற்கள் தமிழ் மொழியாங்கால் அகர இகர உகரமென்னும் இம்மூன்று உயிர்களில் ஒன்றைப் பெறும்.

ரங்கன் - அரங்கன்
ராமன் - இராமன் (அ, இ, உ)
ரோமம் - உரோமம்

லகரம் முதலாகிய வடசொற்கள் இகரம், உகரம் இவற்றுள் ஒன்றைப் பெறும்.

லாபம் - இலாபம்
லோபம் - உலோபம் (இ, உ)

யகரம் முதலாகிய வடசொற்கள் தமிழில் வரும்போது இகரம் பெற்று வரும்.

யக்கன் - இயக்கன் (இ)

## மெய்ம்மயக்கம்

வடமொழியில் தமிழுக்கு ஒவ்வாத சில மெய்ம்மயக்கங்கள் இடம்பெறும். அத்தகைய சொற்கள் தமிழில் பயன்படும்போது அந்த ஒவ்வாத மெய்ம்மயக்கத்தைத் தவிர்க்க இடையே அகர, இகர, உகரங்கள் பயன்படுத்தப்படும்.

*இணைந்தியல் காலை யரலக் கிகரமும்*
*மவ்வக் குகரமும் நகரக் ககரமும்*
*மிசைவரும் ரவ்வழி உவ்வும் ஆம்பிற (149)*

**பொருள்**

ஆரியமொழியுள் இரண்டெழுத்திணைந்து ஒரெழுத்து நீர்மையாய் நடக்குங்கால் பின்னிற்கும் ய ர ல என்வற்றின் மீது இகரமும் மகர வகரங்கள் மீது உகரமும், நகரத்தின் மீது அகரமும் வந்து தமிழில் வழங்கும். இணைந்து முன்நிற்கும் ரகரத்திற்குப் பின்னர் உகரமும் வரும்.

(எ-டு)

| | | |
|---|---|---|
| ய, ர, ல | என்பவற்றுக்கு இகரம் வருதல் | த்யாகம் - தியாகம்<br>ச்ரமம் - சிரமம்<br>க்லேசம் - கிலேசம் |
| ம, வ | என்பவற்றுக்கு உகரம் வருதல் | பத்மம் - பதுமம்<br>பக்வம் - பக்குவம் |
| நகரத்துக்கு அகரம் வருதல் | | ரத்னம் - அரதனம் |
| ரகரம் உகரம் பெறுதல் | | அர்த்தம் - அருத்தம் |

வாக்கியம், நாட்டியம், அருக்கன், துவேசம், பத்திரம் முதலிய பல சொற்கள் இவ்வாறயினவே.

## தமிழின் சிறப்பெழுத்துக்கள்

இவ்வாறே வடமொழியின் சிறப்பெழுத்துக்கள் தமிழில் திரிந்து வழங்குகின்றன. பொது எழுத்துக்கள் மாற்றம் பெறுவதில்லை. தமிழின் சிறப்பெழுத்துகள் ஆரியமொழியில் எவ்வாறு திரிபடையும் என்பது பற்றி எதுவும் கூறவில்லை. இருப்பினும் தமிழின் சிறப்பெழுத்தைச் சுட்டிக் காட்டுகிறார். ற ன ழ எ ஒ என்பன தமிழுக்கே உரிய சிறப்புடையவை. உயிர்மெய்யும், உயிரளபெடையும் ஒழிய எஞ்சி நிற்கும் சார்பெழுத்துக்களும் தமிழுக்கே சிறப்பாம்.

*றனழஎ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபும்*
*அல்லாச் சார்பும் தமிழ்பிற பொதுவே*

### பொருள்

றகர, னகர, ழகர, எகர, ஒகரமான முதலெழுத்தைந்தும் உயிர்மெய்யும், உயிரளபெடையும் அல்லாத சார்பெழுத்தெட்டும் தமிழிற்கே சிறப்பெழுத்தாம்; ஒழிந்த இருபத்தேழும் தமிழிற்கும், ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம்.

### பயிற்சி வினாக்கள்

1. பதம் என்றால் என்ன? மொழி நூல் நெறியிலும் விளக்கம் தருக.
2. பண்புப் பகுதிகள் திரிபடைதல் எவ்வாறு?
3. பகுபத உறுப்புகள் எவை? சான்று காட்டி விளக்குக.
4. வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்கள் தமிழில் எவ்வாறு மருவி வழங்குகின்றன?
5. பதவியல் என்ற இயலின் தேவையை ஆராய்க.
6. ரம்பை, லாவணி, சுக்லம், தர்மம், தத்வம், வக்ரம் எனும் வட சொற்களைத் தமிழ்ப்படுத்துக.
7. தமிழின் சிறப்பெழுத்துகள் யாவை?
8. காலம் காட்டும் விகுதிகள் யாவை?
9. விளம்பிய பகுதி வேறாதலும் விதியே - விளக்கம் தருக.

# 3. உயிரீற்றுப் புணரியல்

எழுத்து தனித்து நின்றும் தொடர்ந்தும் பொருள்தரின் இதற்குச் *சொல்* என்று பெயர். இதனைப் ***பதம்*** என்பர் நன்னூலார். சொல் பகுக்கும் நிலையில் இருந்தால் அதனைப் பகுபதம் என்றும், பகுக்க இயலாத நிலையில் இருந்தால் அதனைப் பகாப்பதம் என்றும் கூறுவர்.

அப்பதங்களுள் உயிர் எழுத்துக்களை ஈற்றில் உடைய சொற்கள் பிற சொற்களோடு புணரும்போது ஏற்படும் மாற்றங்களை விளக்கி உரைப்பது உயிரீற்றுப் புணரியல் ஆகும்.

**புணர்ச்சி**

பதங்கள் நான்கு வகையாக வரும்
மலர் - மெய் முதல் மெய்யீறு
பலா - மெய் முதல் உயிர்ஈறு
இலை - உயிர் முதல் உயிர்ஈறு
ஊர் - உயிர் முதல் மெய்யீறு

இவ்வாறு மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகக் கொண்டு வரும் பகுபதமும் உண்டு; பகாப்பதமும் உண்டு இத்தகைய பகுபதமும் பகாப்பதமும் தன்னொடு தானுமாயும், தன்னொடு பிறிதுமாயும் புணரும். அல்வழிப் பொருளிலும் புணரும், வேற்றுமைப் பொருளிலும் புணரும். அவ்வாறு புணர்கையில் நிலைமொழியும் வருமொழியும் இயல்பாகவும் இருக்கும். விகாரமும் அடையும். இவ்வாறு பதங்கள் ஒன்றோடொன்று சேர்வதற்குப் புணர்ச்சி என்று பெயர்.

*மெய்யுயிர் முதல் ஈறாம் இரு பதங்களும்*
*தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்*
*பொருளில் பொருந்துழி நிலைவரு மொழிகள்*
*இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே*

இதனால் புணர்ச்சி என்றதும் கீழ்க்காணும் கோணங்களில் நாம் சிந்திக்க வேண்டும் என்றாகிறது.

1. நிலைமொழியீறு குறித்த சிந்தனை - அதாவது உயிரீறா மெய்யீறா? என்ற சிந்தனை வருமொழி முதல் குறித்த சிந்தனை - அதாவது உயிர் முதலா மெய் முதலா என்ற சிந்தனை.

2. நிலை மொழியும் வருமொழியும் வினைச்சொல்லா, பெயர்ச்சொல்லா, என்று சிந்தனை. எனவே புணர்ச்சி அ) வினை+வினை ஆ) வினை+பெயர் இ) பெயர்+பெயர் ஈ) பெயர்+வினை என்றமையலாம். தன்னொடும் பிறிதொடும் என்ற நூற்பாவில் சுட்டியிருப்பது, பகுபதம்+பகாப்பதம் என்பதோடு பெயர், வினை என்ற சொற்களையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்.

3. அவ்வாறு பெயரும் வினையும் புணரும் புணர்ச்சியில் உள்ள பொருள் தன்மையை ஆராய்ந்து இது அல்வழிப் புணர்ச்சியா வேற்றுமைப் புணர்ச்சியா என்பதை ஆராய்ந்தறிய வேண்டும்.

4. அத்துடன் அப்புணர்ச்சி நிகழும்போது இது இயல்பான புணர்ச்சியா விகாரப் புணர்ச்சியா என்பதைக் கண்டறிய வேண்டும். ஒரு புணர்ச்சிக்கு விதிவகுக்குமுன் அப்புணர்ச்சி பற்றித் தீர்மானிக்க வேண்டிய அடிப்படைச் செய்திகள் இவை.

இவற்றையே நன்னூலார் முன்னுரை போல் இங்கே தருகின்றார். பொதுவாக 1) பதப்புணர்ச்சி 2) உருபுப்புணர்ச்சி 3) விகுதிப்புணர்ச்சி 4) சாரியைப் புணர்ச்சி என்று புணர்ச்சிகள் நால்வகையாகப் பாகுபடுவதைப் பின்னர் வரும் இயலில் விளக்குவார்.

## அல்வழிப்புணர்ச்சி, வேற்றுமைப்புணர்ச்சி

ஐ அல் கு இன் அது கண் முதலிய வேற்றுமை உருபுகள், மறைந்தோ வெளிப்பட்டோ வரப் புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

வேற்றுமை உருபுகளோடு தொடர்பில்லாத, 1) வினைத்தொகை 2) பண்புத்தொகை 3) உவமைத்தொகை 4) உம்மைத் தொகை 5) அன்மொழித் தொகை 6) எழுவாய்த் தொடர் 7) விளித்தொடர் 8) பெயரெச்சத் தொடர் 9) வினையெச்சத் தொடர் 10) தெரிநிலை வினைமுற்றுத் தொடர் 11) குறிப்பு வினைமுற்றுத் தொடர் 12) இடைச்சொல் தொடர் 13) உரிச்சொல் தொடர் 14) அடுக்குத் தொடர் என்ற பதினான்கு வகைப் புணர்ச்சிகளும் அல்வழிப் புணர்ச்சிகளாம்.

### வேற்றுமைப் புணர்ச்சி

| வேற்றுமைத் தொகை | வேற்றுமை விரி |
|---|---|
| பொன் பெற்றான் | பொன்னைப் பெற்றான் |
| கல்லெறிந்தான் | கல்லால் எறிந்தான் |
| கொற்றன் மகன் | கொற்றனுக்கு மகன் |
| மலைவீழருவி | மலையின் வீழருவி |
| என் வீடு | எனது வீடு |
| குன்றக்கூகை | குன்றத்தின் கண் கூகை |

### அல்வழிப் புணர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| 1. | கொல்யானை | - | வினைத்தொகை |
| 2. | கருங்குதிரை | - | பண்புத் தொகை |
| 3. | அன்னநடை | - | உவமைத்தொகை |
| 4. | இராப்பகல் | - | உம்மைத்தொகை |
| 5. | பூங்குழல் வந்தாள் | - | அன்மொழித்தொகை |
| 6. | கொற்றன் கொடுத்தான் | - | எழுவாய்த்தொடர் |
| 7. | கொற்றா ! வா | - | விளித்தொடர் |
| 8. | வந்த பையன் | - | பெயரெச்சத் தொடர் |
| 9. | வந்து சென்றேன் | - | வினையெச்சத்தொடர் |
| 10. | கரியன் கண்ணன் | - | குறிப்பு வினைமுற்றுத் தொடர் |
| 11. | வந்தான் கண்ணன் | - | தெரிநிலை வினைமுற்றுத் தொடர் |
| 12. | மற்றொன்று | - | இடைச்சொல் தொடர் |
| 13. | கடிமணம் | - | உரிச்சொல் தொடர் |
| 14. | படை படை | - | அடுக்குத் தொடர் |

இவற்றுள் முதல் ஐந்தும் தொகை நிலைத் தொடர்கள் பின்வருவன அனைத்தும் தொகாநிலைத் தொடர்கள்

**நூற்பா**

*வேற்றுமை ஐம் முதல் ஆறாம் அல்வழி*
*தொழில் பண்பு உவமை உம்மை அன்மொழி*
*எழுவாய் விளி ஈரெச்சம் முற்று இடை உரி*
*தழுவு தொடர் அடுக்கு என ஈரேழு*

*(நன்.152)*

ஆசிரியர் *தழுவுதொடர்* என்றமையால் *தழாத் தொடரும் உள* என்றறிகிறோம். கைக்களிறு-கையையுடை களிறு. பொற்குடம்-பொன்னாற் செய்யப்பட்ட குடம் முதலியன தழுவாது தொடர்ந்தமையால் வேற்றுமை தழாத் தொடர். *கரையாழ அம்மி மிதப்ப* என்பதும் தழுவாது தொடர்ந்தமையால் அல்வழித் தழாத்தொடர்

## இயல்புப்புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி

### இயல்புப்புணர்ச்சி

விகாரம் எதனையும் அடையாது இயல்பாய் வரும் புணர்ச்சி இது.

பொன்+மலை - பொன்மலை
நாற்று+நடுகை - நாற்றுநடுகை
உண்ட+கொற்றன்- உண்டகொற்றன்

**நூற்பா**

**விகாரம் அனைத்தும் மேவலது இயல்பே**

(நன். 153)

### விகாரப் புணர்ச்சி

விகாரம் தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும். இரண்டு பதங்கள் புணரும்போது இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதல் தோன்றல் விகாரம். வேறுபடுதல் திரிதல் விகாரம், மறைதல் கெடுதல் விகாரம். இம் மூவகை விகாரமும் நிலைமொழிகளின் முதல், இடை, கடை என்று மூன்றிடத்தும் ஏற்றபடி வரும்

பூ+கொடி - பூங்கொடி - தோன்றல்
பல்+தலை - பஃறலை - திரிதல்
நிலம்+வலயம் - நிலவலயம் - கெடுதல்
தமிழ்+பிள்ளை - தமிழ்ப்பிள்ளை
பனை+காய் - பனங்காய்

**நூற்பா**

**தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும்**

(நன். 154)

இவ்விகாரங்கள் ஒரு புணர்ச்சிக்கு ஒன்றேயன்றி இரண்டு மூன்று விகாரங்களாய் வரப்பெறுதலும் உண்டு.
யானை + கோடு - யானைக்கோடு - ஒரு விகாரம் - தோன்றல்
நிலம் + பனை - நிலப்பனை - இரண்டு விகாரம் - கெடுதல், தோன்றல்
பனை + காய் - பனங்காய் - மூன்று விகாரம் - கெடுதல், தோன்றல், திரிதல்

**நூற்பா**

**ஒரு புணர்ச்சிக்கு இரண்டும் மூன்றும் உறப்பெறும்**

(நன் . 155)

## செய்யுள் விகாரங்கள்

### ஆறுவகை விகாரங்கள்

இனிச்செய்யுள் விகாரங்களைக் காணலாம். செய்யுளிடத்துச் சீர், தளை, தொடை, ஓசை முதலாவனவைகளை நோக்கி விகாரங்கள் அமையும். இவ்விகாரங்கள் ஆறுவகைப்படும். அவை

| | | |
|---|---|---|
| வலித்தல் | → | மெல்லொற்றை வல்லொற்றாக்கல் |
| மெலித்தல் | → | வல்லொற்றை மெல்லொற்றாக்கல் |
| நீட்டல் | → | குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கல் |
| குறுக்கல் | → | நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கல் |
| விரித்தல் | → | இல்லாத எழுத்தை வருவித்தல் |
| தொகுத்தல் | → | உள்ள எழுத்தை நீக்கல் |

ஆகியனவாம்

| | | |
|---|---|---|
| குறுத்தாள் பூதம் | - | குறுந்தாள் என்பது குறுத்தாள் என வலித்தது |
| தண்டைஇனக்கிளி | - | தட்டை என்பது தண்டை என மெலித்தது |
| போத்தறார் புல்லறிவினார் | - | பொத்தறார் என்பது போத்தறார் என நீண்டது |
| நன்று என்றேன் தியேன் | - | தீயேன் என்பது தியேன் எனக் குறுகியது |
| நெல்வியையும்மே | - | விளையுமே என்பது விளையும்மே என விரிந்தது |
| சிறியிலை வெதிரின் | - | சிறிய இலை என்பது சிறியிலை எனத் தொகுத்தது. |

**நூற்பா**

வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி

*(நன். 154)*

## மூவகைக் குறைகள்

அடி, தொடை முதலியவற்றை நோக்கிச் செய்யுளுள் முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என ஒரு மொழியின் முதலிடை கடை என்ற மூன்றில் ஓரிடத்து எழுத்துக் குறைந்து வருதலும் செய்யுள் விகாரமாகும்.

மரையிதழ் புரையும் அஞ்செஞ்சீறடி - தாமரை என்பது மரை என முதற் குறைந்து நின்றது

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து - ஓந்தி என்பது ஓதி என இடைக் குறைந்து நின்றது.

நீலுண்துகிலிகை கடுப்ப நீலம் என்பது நீல் எனக்கடைக் குறைந்து நின்றது

**நூற்பா**

ஒரு மொழி மூவழிக் குறைதலும் அனைத்தே

*(நன். 154)*

# உயிரீறுகள்

## பொதுப் புணர்ச்சி

1. பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய மெய்யெழுத்துக்களும் குற்றியலுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் மொழி இறுதியில் வரும். இவ்வெழுத்துக்களை ஈறாக உடைய பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச்சொல் முதலியன நிலை மொழியாக நிற்க, ஞ, ந, ம, ய, வ எனும் எழுத்துக்கள் வருமொழியில் வரும்போது அல்வழி, வேற்றுமை என்ற இரு வழிகளிலும் இயல்பாய்ப் புணரும்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| விள ஞான்றது | விள ஞாற்சி |
| விள நீண்டது | விள நீட்சி |
| விள மாண்டது | விள மாட்சி |
| விள யாது | விள யாப்பு |
| விள வலிது | விள வன்மை |

இதைப்போலவே, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, வெள, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், யாழ், வாள், எஃகு, என்ற மொழிகளோடும் ஞான்றது, நீண்டது, ஞாற்சி, நீட்சி முதலியவற்றை இணைத்துக் காண்க. இவையனைத்தும் இயல்புப் புணர்ச்சிகளே.

2. குறிலையடுத்து வரும் யகரமெய், ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் உயிர்: உயிர்மெய் எனும் ஐகாரம், நொ, து என்ற சொற்கள் ஆகிய இவற்றுக்கு முன், வரும் ஞ, ந, ம முன் கூறியது போன்று இயல்பாதலேயன்றி மிகுந்தும் முடியும்.

**குறில்முன் யகரம்**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| மெய்+ஞான்றது -=மெய்ஞான்றது | மெய்+ஞாற்சி - மெய்ஞ்ஞாற்சி |
| மெய்+நீண்டது - மெய்நீண்டது | மெய்+நீட்சி - மெய்ந்நீட்சி |
| மெய்+மாண்டது - மெய்மாண்டது | மெய்+மாட்சி - மெய்ம்மாட்சி |

**தனி ஐ**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| கை+ஞான்றது - கைஞ்ஞான்றது | கை+ஞாற்சி-கைஞ்ஞாற்சி |
| கை+நீண்டது - கைந்நீண்டது | கை+நீட்சி - கைந்நீட்சி |
| கை+மாண்டது - கைம்மாண்டது | கை+மாட்சி - கைம்மாட்சி |

**நொ, து எனுஞ் சொற்கள்**

| | |
|---|---|
| நொஞ்ஞெள்ளா | துஞ்ஞெள்ளா |
| நொந்நாகா | துந்நாகா |
| நொம்மாடா | தும்மாடா |

**நூற்பா**

*எண் மூவெழுத்து ஈற்று எவ்வகை மொழிக்கும்*
*முன் வரும் ஞநமயவக்கள் இயல்பும்*
*குறில் வழிய தனி ஐ: நொ து முன் மெலி*
*மிகலும் ஆம் ண ள னல வழி நத்திரியும்,*

(நன். 158)

மெலி மிகலுமாம் என்ற எச்ச உம்மையால், நொ, து இவற்றின் முன் இடையினம் மி குதலுமாம் என்பது விளங்கிற்று. அவை நொய்யவனா, நொவ்வளவா, துய்யவனா, துவ்வளவா என வரும்.

## பொதுப் பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈறு

1. பொதுப் பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் ஈற்றிலுள்ள மெய்கள் வல்லெழுத்து முதன்மொழிகள் வரின் இயல்பாய் முடியும்.

பொதுப் பெயராவன உயர்திாணைக்கும், அஃறிணைக்கும் பொதுவாகி உரிமைப்பட்டு நடக்கும் பெயர்கள்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| சாத்தன்`+ குறியன் - சாத்தன்குறியன் | சாத்தன் கை |
| சாத்தன் + குறிது - சாத்தன் குறிது | கொற்றன் செவி |

கொற்றன் + சிறியன் - கொற்றன் சிறியன்
கொற்றன் + சிறிது - கொற்றன் சிறிது

இவ்வாறு பொதுப்பெயர் ஈற்று மெய்கள் புணர்ச்சியில் இயல்பாயின.

**உயர்திணைப் பெயர்கள்**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| ஊரன்+குறியன் - ஊரன்குறியன் | ஊரன் செவி |
| அவன்+சிறியன் - அவன்சிறியன் | அவன் புறம் |

*2) உயிர், யகர, ரகர மெய்களை ஈறாக உடைய பொதுப் பெயர்களுக்கும் உயர்திணைப் பெயர்களுக்கும் முன்வரும் வல்லெழுத்து மிகா.*

**பொதுப் பெயர்**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| குறியள் | சாத்தி கை |
| சாத்திகுறிது | சாத்தி செவி |
| கொற்றி சிறியள் | கொற்றி தலை |
| கொற்றி சிறிது | தாய் செவி |
| தாய் சிறியள் | |
| தாய் சிறிது | |

**உயர்திணைப்பெயர்**

| | |
|---|---|
| நம்பி சிறியன் | நம்பிசெவி |
| ஒருவர் குறியர் | ஒருவர் தலை |
| அவர் பெரியார் | ஒருவர் கை |

கபிலபரணர், ஆசீவகப்பள்ளி, குமரக்கோட்டம் எனச்சில விகாரமாயின.

**நூற்பா**

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்கள் ஈற்று மெய்
வலிவரின் இயல்பாம் ஆவியர முன்
வன்மை மிகா சில விகாரமாம் உயர்திணை

(நன். 159)

### வினா, விளி

ஈற்றில் இடம்பெறும் ஆ, ஏ, ஓ என்ற மூன்று வினா முன்னும் யா என்ற வினாப் பெயர் முன்னும் விளிப்பெயர் முன்னும் வல்லினம் இயல்பாகும்.

| | |
|---|---|
| நம்பியா கொண்டான்? | நம்பீசொல் |
| கொற்றனோ சென்றான்? | கிள்ளாய் கூறு |
| கொற்றனே கொண்டான்? | தாயே செல் |
| | சாத்தீ போ |

- என அவை இயல்பாதல் காண்க

**நூற்பா**

*ஈற்று யா வினா விளிப்பெயர் முன்வலி இயல்பே*

*(நன். 160)*

**முன்னிலை, ஏவல்**

உயிர்கள், ய, ர, ழ என்ற இவற்றை ஈறாக உடைய முன்னிலைவினை முன்னும், ஏவல்வினை முன்னும் வரும் வல்லினம் இயல்பாகவும் புணரும், விகற்பமாகவும் புணரும்.

| முன்னிலை | ஏவல் |
|---|---|
| உண்கு சாத்த | கொணா கொற்றா |
| தின்றனை கொற்றா | எறிசாத்தா |
| உண்டாய் தேவா | விடுதேவா |
| தின்றனிர் சாத்தரே | தாழ் கொற்றா |

என இயல்பாய் வந்தன.

நடகொற்றா, நடக்கொற்றா, எய்கொற்றா, எய்க்கொற்றா, ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா, தாழ்கொற்றா, தாழ்க்கொற்றா.

## உயிரீறுகளின் சிறப்புணர்ச்சி

இனி உயிரீறுகளின் சிறப்புப் புணர்ச்சி கூறப்படுகிறது. உடம்படுமெய், தமிழில் இரண்டு உயிர்கள் அடுத்தடுத்து வரும்போது அங்கு உடன்படுத்துவதற்காக ஒருமெய் வந்து இடம்பெறும். அதற்கு உடம்படு மெய் என்று பெயர். உடம்பாக அடுத்து வருதல் என்று காரணம் கூறப்படும். 1) இ, ஈ, ஐ என்ற ஈற்றுச் சொற்களை அடுத்து உயிர்கள் வருமானால் யகரம் உடம்படுமெய்யாகத் தோன்றும்.

மணி + அழகு - மணியழகு
தீ+அணைப்பு - தீயணைப்பு
பனை + ஓலை - பனையோலை

2) அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்ற ஈறுகளையடுத்து உயிர்வருமானால் அங்கு வகரம் உடம்படு மெய்யாகும்.

விள + அழகு - விளவழகு
பலா+அடி - பலாவடி
கடு+அழகு - கடுவழகு
பூ+அழகு - பூவழகு
நொ+அழகு - நொவ்வழகு
கோ+அழகு - கோவழகு

3) ஏ முன் உயிர் வருமானால் ய, வ இரண்டும் உடம்படு மெய்யாகத் தோன்றும்

சேயடி
சேவடி

மாயிறு ஞாலம் என்று ஆகார முன் யகர உடம்படு மெய்வந்தது ஏன்? *மா* என்பது உரிச்சொல்லாதலின் இவ் வேறுபாடு நிகழ்ந்தது. ***விண்வத்துக் கொட்கும்*** என்பது உடம்படுமெய் என்பர் சிலர். உயிரும் உயிரும் புணர்ச்சியில் உடன்படா. எனவே உடம்படுமெய் வரும் விண்+அத்து என்பது மெய்+உயிர் புணர்ச்சியாகும். ஆதலின் அங்கு இடம் பெற்ற வகரம் உடம்படுமெய்யன்று.

**நூற்பா**

*இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை*
*உயிர் வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்*
*உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்*

*(நன். 162)*

## வினா, சுட்டு

1) எ என்ற வினா முன்னும் அ, இ, உ என்ற சுட்டுக்களின் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரம் பெறும்.

| | |
|---|---|
| எ+அணி - எவ்வணி | எ+யானை-எவ்யானை |
| அ+அணி - அவ்வணி | அ+யானை-அவ்யானை |
| இ+அணி - இவ்வணி | இ+யானை-இவ்யானை |
| உ+அணி - உவ்வணி | உ+யானை-உவ்யானை |

யகரம் சேர்ந்து வரும்போது தோன்றும் வகரம் உடம்படு மெய்யன்று.

2) பிற மெய்கள் வரின் அம்மெய்களே மிகும்

| | |
|---|---|
| எ+குதிரை - எக்குதிரை | உ+படை -உப்படை |
| அ+குதிரை - அக்குதிரை | அ+ஙனம்-அங்ஙனம் |
| இ+சேனை - இச்சேனை | இ+ஙனம்-இங்ஙனம் |

3) செய்யுளில் சுட்டு நீண்டால் யகரம் மிகும்.

(எ-டு) ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்

இது செய்யுளில் சுட்டு நீளும்போது நிகழ்ந்தது. இத்துடன், ஆங்ஙனம், ஈங்ஙனம் என்று சுட்டு நீண்டபோது ஙகரம் மிகுந்ததையும் கொள்க. விண்வத்துக் கொட்கும், செல்வுழிச் செல்க. சார்வுழிச்சார்க, என்று மெய்+உயிர் புணர்ச்சியில் இடையில் உடம்படுமெய்யல்லாத வகரம் தோன்றியது.

**நூற்பா**

எகரவினா முச்சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்
பிறவரின் அவையும் தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே

(நன் . 163)

## குற்றியலுகரம் முற்றியலுகரம்

1) குற்றியலுகரத்தின் முன் உயிர்வரின் குற்றியலுகரம் தனக்கு ஆதாரமான மெய் நிற்கத் தான் கெடும்.
நாகு + அரிது - நாகரிது

2) குற்றியலுகரத்தின் முன் யகரம் வரின் குற்றியலுகரம் இகரமாகத் திரியும்.
நாகு + யாது - நாகியாது

3) முற்றியலுகரம் சிலவிடத்து அவ்விரு விதிகளையும் பெறும்
கதவு+அடைப்பு - கதவடைப்பு
கதவு+யாது -, கதவியாது

**நூற்பா**

உயிர்வரின் உக் குறள் மெய்விட்டு ஓடும்
யவ்வரின் இய்யாம் முற்றும் அற்று ஒரோ வழி

(நன். 164)

ஆசிரியர் *கெடும்* என்னாது ஒடும் என்றமையால் குற்றியலுகரம் சில சமயம் இ, ஈ, ஐ வழி என்ற விதிப்படியும் புணர்வதுண்டு.

தானழைப்பதுவே, அதுவும் ஆதுவும் என்பன சான்றுகள்.

## உயிரீறு முன் வல்லினம்

இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் முன்னர் வரும் க,ச,த,ப பெரும்பாலும் மிகும்.

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| ஆடூஉக்குறியன் | ஆடூஉக்கை |
| நம்பிக் கொற்றன் | ஆடூஉச்செவி |
| ஒற்றைக் கை | எட்டிப்பூ |
| வட்டக்கல் | விளக்கோடு |
| | கடுக்காய் |

ஆடிக் கொண்டான், ஆடக் கொண்டான், சாலப் பசித்தது என வினையெச்சங்களின் முன்னும் மிக்கது.

மற்றைச் சாதி - இடைச் சொல்
கடிக்கமலம் - உரிச்சொல்
சான்றிக்குழிசி - திசைச்சொல்
கங்கைச் சடை - வடசொல்

எனும் பிறவகைச் சொற்களின் முன்னும் வலி மிக்கது.

ஏரிகரை, குழந்தைகை, குழவிகை, மலைகிழவோன், கூப்புகரம் என விதவாத சொற்களின் முன் வல்லினம் மிகாவாயின.

## விரவுப் பெயர்கள்

உயிரீற்று மரப்பெயர்கள் முன்னே முன் சொன்ன பொதுவிதியான வல்லெழுத்து மிகாது. வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து மிகப் பெறுதலும் வேற்றுமைப் புணர்ச்சியில் நிகழும். விளங்காய், களங்கனி, மாங்கொம்பு, மாம்பழம் எனவரும்.

**நூற்பா**

மரப்பெயர் முன்னர் இன மெலலெழுத்து
வரப் பெறுநவும் உள வேற்றுமை வழியே

(நன். 166)

## அகர வீற்றுச் சிறப்புவிதி

அகரவீற்றில், செய்யிய எனும் வினையெச்சம், பல்வகைப் பெயரெச்சம், பல்வகை முற்றுக்கள், ஆறாம் வேற்றுமை உருபு, அஃறிணைப் பன்மைப்பெயர். அம்ம எனும் உரையசைச் சொல் ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகப் புணரும்.

**1. செய்யிய**

உண்ணிய கொண்டான்
உண்ணிய சென்றான்

**2. பெயரெச்சம், முற்று**

உண்ட குதிரை
உண்ணாத குதிரை

சினவிய செந்நாய்
அமரியபன்றி
கடுங்கண்ண செந்நாய்
பொன்னன்ன நகர்

**3. ஆறனுருபு**
தன கைகள்
தன செவிகள்

**4. அஃறிணைப் பன்மை**
பல குதிரை
பல செந்நாய்

**5. அம்ம என்னும் சொல்**
அம்மா கொற்றா
அம்ம சாத்தா

இவற்றுள் முற்றுக்கள் எச்சமாய் வரும்போதும் இவ்வாறே வருதலும் கொள்க, உண்டன கண்டன, அமர்முகத்த கலக்கின எனவரும்

**வாழிய, சாவ**

வாழிய எனும் வியங்கோள் வினைமுற்று ஈற்று உயிர் மெய் கெடுதலும் உண்டு. அவ்வாறு கெட்டு *வாழி* என இகர ஈறாக நின்றாலும் அது இயல்பாகவே புணரும்.

ஆ வாழி- ஈற்றுயிர் மெய் கெட்டு வந்தது.
வாழி கொற்ற, வாழி சாத்தா

- என வல்லினம் இயல்பாயின.

வாழி தேவா, வாழி பூதா

- வாழி என நின்றது கடைக்குறை. இது *வாழிய* என்ற வினையெச்சத்தின் நிகழாது வியங்கோள் முற்றிலேயே நிகழும்.

**நூற்பா**

***வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்***
***ஏகலும் உரித்து அஃது ஏகினும் இயல்பே***

*(நன். 168)*

சாவ எனும் செயவென் எச்சத்து ஈற்று உயிர் மெய் கெடுதலும் உண்டு

சாக்குத்தினான் என்று வரும்.

இது ஒரோ வழி அருகி நிகழ்வதே.

**நூற்பா**

***சாவென் மொழி ஈற்றுயிர் மெய் சாதலும் விதி***

*(நன். 169)*

பல, சில பல சில எனும் இச்சொற்கள் தம் முன்னர்த்தாம் வருமாயின் இயல்பாகும். மிகும், அகரம் கெட்டு லகரம் றகரமாகும் பல சில என்பவற்றின் முன் பிற சொற்கள் வருமாயின் அகரம் நிற்பதும் உண்டு. நீங்குதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| பல சில | | பலகலை - பல்கலை |
| சில சில | இயல்பு | பலசாலை - பல்சாலை |
| பலப்பல | | பலதாழிசை - பஃறாழிசை |
| சிலச்சில | மிகுதல் | பலமணி - பன்மணி |
| பற்பல | அகரம் கெட்டு | பலவணி - பல்லணி |
| சிற்சில | லகரம் றகரமாதல் | பலயானை-பல்யானை |

பிற என்ற மிகையால் பலபல, சிலசில என வருதலும் கொள்க.

**நூற்பா**

*பல சில எனும் இவை தம்முன் தாம்வரின்*
*இயல்பும் மிகலும் அகரம் ஏக*
*லகரம் றகர மாகலும் பிறவரின்*
*அகரம் விகற்பமாகலும் உளவிற*

(நன். 170)

### ஆகாரவீறு

ஆ மா என்ற பெயர்கள் அல்வழியில் வரும்போது வரும் வல்லினம் மிகுவதில்லை. மியா என்ற முன்னிலையசைச்சொல் முன்னும் ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை வினைமுற்று முன்னும் வரும் வல்லினம் மிகுவதில்லை.

| | | |
|---|---|---|
| ஆ | குறிது, மாகுறிது | கேண்மியா கொற்றா |
| ஆ | சிறிது, மாசிறிது | கேண்மியா சாத்தா |
| ஆ | தீது, மாதீது | கேண்மியா பூதா |
| ஆ | பெரிது, மாபெரிது | கேண்மியா தேவா |

உண்ணா குதிரைகள்
தின்னா குதிரைகள்
உண்ணா பன்றிகள்

உண்ணா கிடந்தன என்று பொருள்படும் எதிர்மறை வினையெச்சமும் உண்ணா கிடந்தன என்றே மிகாமல் வரும். உண்ணாத குதிரை எனப் பொருள்படும் உண்ணாக்குதிரை என்பதும், உண்டு கிடந்தன என்று பொருள்படும் உண்ணாக் கிடந்தன என்பதும் மிகுந்து வரும்

**நூற்பா**

*அல்வழி ஆமா மியா முற்று முன்மிகா*

(நன். 171)

குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் குறுகுதலுண்டு. குறுகி அத்துடன் உகரம் பெறுதலுண்டு. இயல்பாக நிற்றலும் உண்டு இம்மூன்று விதியும் செய்யுளில் நிகழும்.

சுற மறிவன
நில வரி கானல் ] ஆகாரம் குறுகல்

இறவுப்புறத்தன்ன
சுறவுக் கோட்டன்ன
என் செய்யுமோ நிலவு ] உகரம் பெறல்

நிலா வணங்கும்
நெடிய கழியும் இரா ] இயல்பாய் நிற்றல்

**நூற்பா**

*குறியதன் கீழாக்குறுகலும் அதனோடு*
*உகரம் ஏற்றலும் இயல்புமாந் தூக்கின்* (நன். 172)

## இகரவீற்றுச் சிறப்பு விதி

### அன்றி இன்றி

செய்யுளுள், அன்றி, இன்றி, என்னும் வினையெச்சச் சொற்களின் ஈற்று இகரம் உகரமாய் மாறிவரும் அப்போது க, ச, த மக்கள் பொதுவிதியால் மிகாது இயல்பாம்.

நாளன்று போகி,
உப்பின்று புற்கை உண்கமா

**நூற்பா**
*அன்றி இன்றியென் வினையெஞ்சு இகரம்*
*தொடர்பினுள் உகரமாய் வரின் இயல்பே*
(நன். 137)

### நாழி

நாழி + உரி என்ற புணர்ச்சியில் நாழி என்பதன் ஈற்றுயிர்மெய் கெட. அவ்வழி டகரவொற்று வரும்.

நாழி + உரி - நாட் x உரி - நாடுரி

உரி எனும் அளவுப்பெயரின் பின் சில வருமொழிவரின் யகர உயிர்மெய் வரும்.

உரிய உப்பு, உரிய பயறு, உரிய மிளகு

**நூற்பா**
*உரிவரின் நாழியின் ஈற்றுயிர் மெய்கெட*
*மருவும் டகரம் உரியின் வழியே*
*யகர உயிர் மெய்யாம் ஏற்பன வரினே*
(நன். 174)

ஏற்பன வரின் என்றமையால் ஏலாத வரின் உரியரிசி, உரியாழாக்கு என்று பொது விதிப்படியே புணரும் எனக் கொள்க.

### புளி

புளிச்சுவையை உணர்த்தும் பெயர்முன் வரும் வல்லினம் மிகுதலேயன்றி அவற்றிற்கு இனமாய மெல்லி னமும் ஒரோ வழி மிகும்.

புளிங்கறி, புளிஞ்சோறு, புளிந்தயிர் எனவரும். மென்மையும் தோன்றும் என்று ஆசிரியர் கூறியதால்புளிக்கறி என்று பொதுவிதி பெறுதலே சிறப்புடையது என அறிக.

### இகர ஐகார வீற்றுச் சிறப்பு விதி

அல்வழிக்கண் இகர ஐகார வீற்று அஃறிணைப் பெயர்முன் வல்லினம் வருமாயின் இயல்பாகவும், மிகுந்தும் விகற்பமாயும் வரும்.

பருத்தி குறிது
யானை பெரிது
குதிரை சிறியது — இயல்பாயின

கிளி குறிது, கிளிக் குறிது
தினை குறிது, தினைக் குறிது — விகற்பமாயின

### ஈகார வீற்றுச் சிறப்பு விதி

ஆ+நீ; ஆ முன் பகரவீகாரம் வரும்போது வருமொழியில் எக்கணம் வரினும் பகரவீகாரம் குறுகி நிற்கும். அல்வழியாயின் வல்லினம் இயல்பாகப் புணரும்.

ஆப்பியரிது, ஆப்பிகுளிரும் ஆப்பியருமை
ஆப்பி வன்மை, ஆப்பி நன்மை

**நூற்பா**

**ஆ முன் பகரவீ அனைத்தும் வரக் குறுகும்**
**மேலன அல்வழி இயல்பாகும்மே.** (நன். 177)

பகரவீகாரமும், நீ எனும் முன்னிலை ஒருமைப் பெயரும் மீ என்ற சொல்லும் அல்வழிப்புணர்ச்சியில் வல்லினம் வரின் இயல்பாய்ப் புணரும்.

மீ எனுஞ் சொல்லின் முன் வல்லினம் அல்வழியில் வல்லெழுத்து மிகலுமாம். மெல்லெழுத்து மிகலுமாம்

| **இயல்பு** | **மீ முன் வலி மெலிமிகல்** |
|---|---|
| பீ குறிது | மீக் கூற்று |
| பீ சிறிது | மீக் கோல் |
| பீ தீது | மீத்தோல் |
| நீ குறியை | |
| நீ சிறியை | (மீத்தோல் இக்காலத்து) |
| மீ கண் | மீந்தோல் என மருவியது) |

மீ கண் என்பது இலக்கணப் போலியாய் அல்வழியாயிற்று. மீக்கூற்று என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. மீக்கோன் என்பது ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

## ஒப்பீட்டுச் செய்திகள்

அன்புள்ள மாணவர்களே உங்கள் பாடத்திட்டத்தில் சில மொழி வரலாறு மொழியியல் நூல்களைக் குறிப்பிட்டு அவற்றின் கருத்துக்களை நன்னூலோடு தொடர்புபடுத்திக் கற்கவும் எனக் குறிப்பிட்டிருப்பதால், அந்நூல்களிலிருந்து சில கருத்துக்களை இங்கு மேற்கோளாகத் தந்துள்ளோம். ஒப்பிட்டுக் கற்பது நலம்.

## அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகள்

### அகச்சந்தி, புறச்சந்தி

புணர்ச்சி அல்லது சந்தி இருவகைப்படும். அவை (1) அகச்சந்தி அல்லது ஒரு மொழிப்புணர்ச்சி (Internal Sandhi) (3) புறச்சந்தி அல்லது பன்மொழிப் புணர்ச்சி (External Sandhi) என்பன. ஒரு சொல்லினுள்ளே நிகழும் புணர்ச்சி அகச்சந்தி. தமிழில் ஒரு வேர்ச்சொல்லோடு சில பின்னிணைப்புகள் இணையும், சாரியைப் புணர்ச்சி, விகுதிப்புணர்ச்சி, உருபுப்புணர்ச்சி போன்றவை அத்தகையன. அவையெல்லாம் அகச்சந்தி அல்லது ஒரு மொழிப் புணர்ச்சி எனப்படுகின்றன.

புறச்சந்தியானது இரு சொற்கள் புணரும்போது நிகழ்வது. தொகைச் சொற்களாகவும் தொடர்களாகவும் அப்புணர்ச்சி அமையும்.

புறச்சந்தி தொகை நிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் என்று இருவகைப்படுகிறது.

### தொகை நிலைத் தொடராவன

1) வேற்றுமைத் தொகை, 2) வினைத்தொகை 3) பண்புத் தொகை 4) உவமைத் தொகை 5) உம்மைத் தொகை.

### தொகாநிலைத் தொடராவன

1) எழுவாய்த்தொடர் 2) விளித்தொடர் 3) பெயரெச்சத்தொடர் 4) வினையெச்சத்தொடர் 5) வினைமுற்றுத்தொடர் 6) குறிப்பு வினைமுற்றுத்தொடர் 7) உரிச்சொல்தொடர் 8) இடைச்சொல் தொடர் 9) அடுக்குத் தொடர்.

நன்னூலார் அகச்சந்திக்குரிய உறுப்புகளைப் பதவியலில் கூறுகின்றனர். நன்னூல் உருபுப் புணரியலிலும் தொல்காப்பிய உருபியலிலும் அகச்சந்திகட்கு உரிய விதிகள் வகுக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள புணரியல்களில் புறச்சந்திகள் பேசப்படுகின்றன. பெரும்பாலும் புணர்ச்சி விதிகள் அகச்சந்தி புறச்சந்திகள் இரண்டுக்கும் பொதுவானவையே.

Phonology A Critical Study of Tolkappiyam and Nannul Page 109-100 Dr. S. Subramanian

### விகாரங்கள்

புறச்சந்திகளை மேலும் சில வகை செய்யலாம்.

### (1) முறை மாற்றம், முறையிலா மாற்றம், (Regular and Irregular Assimilation).

புணர்ச்சியில் ஏற்படும் விகாரங்களைப் பவணந்தியார் தோன்றல், திரிதல், கெடுதல் என்று மூவகைப்படுத்துவார். புணர்ச்சியில் ஏற்படும் திரிபுகளை ஒழுங்குள்ளவை அல்லது முறை மாற்றம் என்றும் ஒழுங்கற்றவை அல்லது முறையில்லா மாற்றம் என்றும் இருவகையாக்குவர் மொழிநூலார்.

முறையில்லா அல்லது புறனடைப் புணர்ச்சிகள் குறிப்பிட்ட விதிகட்குக் கட்டுப்பட்டவையல்ல. மருஉச்சொற்கள், மயங்கியல் மொழிகள் எனப்படுபவை இவ்வகையைச் சேர்ந்தவை.

| | |
|---|---|
| முன்+இல் - முன்றில் | பத்து+பத்து = பப்பத்து |
| நாழி+உரி - நாடுரி | சோழன் + நாடு-சோணாடு |

என்பவை அத்தகையவை.

முறை அல்லது விதியுடைய புணர்ச்சிகள் விதிகட்குக் கட்டுப்பட்டுத் திரிதலை *ஓரினமாதல்* என்று சுட்டி, அதனை,

1) வருமொழி முதல் திரிதல் (Progressive Assimilation)

2) நிலைமொழி ஈறு திரிதல் (Regressive Assimilation)

3) இரண்டும் திரிதல் (Reciprocal Assimilation) என்று மூவகையாக்குவர். இவை மூன்றும் ஒழுங்குள்ள புணர்ச்சிகள் விதிகட்குட்பட்டவையாகக் கருதப்படும்.

## வருமொழி முதல் திரிதல் (Progressive Assimilation)

| | | | |
|---|---|---|---|
| கோல் + தீது | ≥ கோறீது | மண்+தீது | ≥ மண்டீது |
| மண்+நன்று | ≥ மண்ணன்று | பொன்+தீது | ≥ பொன்றீது |
| பொன்+நன்று | ≥ பொன்னன்று | | |

## நிலைமொழி ஈறு திரிதல் (Regressive Assimilation)

| | | | |
|---|---|---|---|
| மண்+குடம் | ≥ மட்குடம் | அவ்+கடிய | ≥ அஃகடிய |
| பொன்+சிலை | ≥ பொற்சிலை | மரம்+செதிள் | ≥ மரச்செதிள் |
| கல்+குறை | ≥ கற்குறை | | |

## இரண்டும் திரிதல் (Reciprocal Assimilation)

வருமொழியின் முதலும் நிலைமொழியின் ஈறும் ஆகிய இரண்டுமே திரிதல்

| | |
|---|---|
| கல்+தீமை | ≥ கற்றீமை |
| மண்+தீமை | ≥ மட்டீமை |
| கல்+நன்று | ≥ கன்னன்று |
| பொன்+தீமை | ≥ பொற்றீமை |
| பல்+தலை | ≥ பற்றலை |
| கல்+தாழை | ≥ கற்றாழை |

(Phonology - A Critical study of Tolkappiyam and Nannul, Page 100 - 113 Dr. S. Subramanaian)

## உடன்படுமெய்

இரண்டு உயிர்கள் அடுத்தடுத்து வரும்போது அது உயிர்மயக்கம் (vowel clusters) எனப்படும்.

*அறாஅ யாணர்* என்பது போன்ற அளபெடைகளில் உயிர் மயக்கம் இடம் பெறுகிறது. ஆனால் பொதுவாகத் தமிழில் உயிர்மயக்கம் தவிர்க்கப்படுகிறது. அதற்கு உடம்படு மெய் உதவுகிறது. உடம்படுமெய்யின் வரலாற்றை ஆராயும் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் கருத்து கீழ்வருமாறு அளபெடைகள் எனப்படும் உயிர் மயக்கங்களும் உண்டு. அங்கு நெட்டுயிரானது அதற்கு இனமான குற்றுயிருடன் வருகிறது அவை வருமாறு: ஆஅஇஈஉஊ, மூன்று மாத்திரை அளவுடைய தனியொலிகள் தமிழ் மொழியில் இல்லை. சான்றாக ஊ+உ என்பது உடன்படுமெய் பெறும்பொழுது உவ்உ என்றும், உடம்படுமெய் பெறாதபோது, ஊஉ என்றும் இருந்திருக்க வேண்டும். ஈருயிர்கள் உருபன் எல்லையில் வரும்பொழுது குழப்பத்தைத் தவிர்க்கவும், எல்லையைத் தெளிவாகக் குறிப்பிடவும் முதலுயிர் நெடிலாகிறது. இந்நுட்பம் இன்று கூடப் பேச்சுத் தமிழில் காணப்படுகிறது.

(எ.டு) முத்தைய+ உடையார் - முத்தையா உடையார் தழு+உ > தழூஉ, இது தொல்காப்பியரால் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உடம்படு மெய்களான வகர யகரமெய்கள் பின்னர் வளர்ச்சியுற்றவையாகும். எனினும் அவை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தொடங்கிவிட்டன எனலாம். உயிரொலிகள் உடம்படு மெய்யின்றி உச்சரிக்கப்படும் பொழுது வெடிப்பொலியுடன் உச்சரிக்கப்படுகின்றன.

அ ஆ இ ஈ

குரல்வளை வெடிப்பொலி இங்ஙனம் வருதல் விட்டிசைத்தல் எனப்படும்.

(தமிழ்மொழி வரலாறு பக்.90,91 தெ.பொ.மீ)

**உயிர்-உயிர்**

உயிர் - உயிர் எனும் புணர்ச்சியைத் தொல்காப்பிய அடிப்படை கொண்டு நான்காக வகைமை செய்வார் டாக்டர் எஸ்.சுப்பிரமணியன்.

**1) கெடுதல்**

மக+அத்து > மகத்து

**2) நீடல்**

மர+அடி > மராடி

**3) உடம்படுமெய் பெறல்**

புலி+அடி > புலியடி

தெரு+ஓரம் > தெருவோரம்

**4) விட்டிசையோடு வருதல்**

கிளி+அரிது > கிளியரிது

(Phonolopy A Critical Study of Tolkappiyam and Nonnul P. 125 Dr. S. Subramanian)

**குற்றியலுகரம், குற்றியலிகரம்**

***உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் யவ்வரின் இய்யாம்*** என்றார் பவணந்தியார். யகரம் வரும்போது தோன்றும் இகரம் குற்றியலிகரம் எனப்படுகிறது.

இக்காலத்தில் குற்றியலிகரத்திற்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. குற்றியலிகரம் ஏனைத்திராவிட மொழிகளில் காணப்படவில்லை. தொல்காப்பியர் இதனைச் சார்பெழுத்தாகவே கருதினார்.

நாடி+யாது > நாடியாது (நாடித்துடிப்பு)

இது இகரம்

நாடு+யாது > நாடியாது (நாடு)

இது குற்றியலிகரம்.

ஒலி வேறுபட்டால் பொருளும் வேறுபடுவதால் இதனைச் சார்பெழுத்து எனத் தனியே வகுத்திருக்கக் கூடும்.

(Phonology, A Critical study of Tolkappiyam and Nannul. P. 47 Dr. S. Subramanian)

இதனையே டாக்டர் எஸ். சுப்பிரமணியன்,

வேள்+யாவன் > வேளியாவன் என்பதனையும் குற்றியலிகரமாகவே கருதலாம் என்கிறார்.

இது தொடர்பாகப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கூறுவதைக் காணலாம்.

வெடிப்பொலிகளை உச்சரிக்கையில் ஏற்படும் இகரம் போன்றதொரு விடுப்பொலி உண்டு. அவ்வொலி குற்றியலிகரம் என்று அழைக்கப்படுகிறது.

இது இடச்சார்பான ஊசலாட்ட ஒலியாக வருகிறது. உகரம் போன்ற விடுப்பொலி தொடர்ந்து யகரமெய்யில் தொடங்கும் சொல் வந்தால் இகரம் போன்ற விடுப்பொலியாக மாறுகிறது. சான்று பாக்கு + யாது > பாக்கியாது.

(தமிழ்மொழி வரலாறு பக்93 தெ.பொ.மீ.)

## வாழிய

வியங்கோள் வினைக்குரிய பிற வடிவங்களாகப் பழங்காலத்தில் பொது வழக்காக இருந்த பயனிலைகளாக வாழி > வாழிய > வாழியர் என்பன வழங்கின. ஒன்றில் ரகர மெய் கெட்டுள்ளது. பிறிதொன்றில் யகரமும் மறைந்துள்ளது. இகரம் பழைய சொல்லாக்க விகுதியாகலாம். இவை மாற்று வடிவங்களாகும்.

(தமிழ் மொழி வரலாறு பக்.118 தெ.பொ.மீ.)

## அன்றி > அன்று

இது உயிரொலி மாற்றம் எனப்படும். அடிப்படுத்தி > அடிப்படுத்து என்ற திரிபு எட்டாம் நூற்றாண்டிலேயே நிகழ்ந்திருப்பதை அறிஞர் தெ.பொ.மீ. எடுத்துக்காட்டுவர். பக்174

## வாழி கொற்றா சாக்குத்தினான்

இவை உயிர் கெடலால் நிகழ்ந்தன என விளக்குவார் டாக்டர் எஸ்.சுப்பிரமணியன் பக். 174

## மீகண்

மேல்+கண் என்பதே மீகண் என்று மருவிப் புணர்ந்தது. இது மருவின் தொகுதியே என்பார் அவர். (பக் 111)

## முற்றுகர வீற்றுச் சிறப்பு விதி

மூன்றாம் வேற்றுமை உருபாகிய ஒடு, ஆறாம் வேற்றுமை உரபாகிய அது உகரஈற்று எண்ணுப் பெயர்கள் உகரஈற்று வினைத் தொகைகள் சுட்டுக்கள் ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் மிகுவதில்லை இயல்பாம்.

| | |
|---|---|
| சாத்தனொடு கொண்டான். | ஆடுகளிறு |
| சாத்தனொடு வந்தான். | உறுதுயர் |
| சாத்தனதுகை | அதுகுறிது |
| சாத்தனது செவி | இதுதீது |
| சாத்தனது தலை | அது செகுத்தான் |
| ஒரு தலை | இது தந்தான் |
| இரு செவி | உது படைத்தான் |
| அறுகை | |

இதுக்காண், உதுக்காண் என மிகுந்ததே எனில், அது *இயல்பின் விகாரமும்* என்னும் சூத்திரத்து அன்ன பிறவும், என்றதனான் அமையும்.

**நூற்பா**

*மூன்று ஆறு உருபு எண் வினைத்தொகை சுட்டு*
*ஈறாகும் உகரம் முன்னர் இயல்பாம்*

(நன். 179)

அது என்ற முற்றுகரவீற்றுச் சுட்டுப்பெயர் முன் செய்யுளில் வரும் அன்று என்ற வினைக்குறிப்பு ஆன்று என்று நீளும்.

**அது...அன்று-அதான்று**

ஆன்றே ஆகிவரும் எனக் கூறாமையால் அது+அன்று என்றது அதுவன்று அதன்று என்றும் புணரும் எனக் கொள்க.

இது, உது என்ற சுட்டுக்களின் முன்வரும் அன்று ஆன்று ஆகாது என்பதை உணர்க.

## குற்றுகரங்களின் புணர்ச்சி

### இயல்புப் புணர்ச்சிகள்

குற்றியலுகரங்கள் ஆறு வகைப்படும் என்பதை முன்னரே கண்டோம். ஆறுவகைக் குற்றியலுகரங்களுக்குள்ளும் வன்றொடர் ஒழிந்த ஐந்து வகைக் குற்றியலுகர ஈற்றின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் மிகா.

| | |
|---|---|
| நாகு கடிது | ஏகுகால் |
| எஃகு பெரிது | அஃகு பிணி |
| வரகு சிறிது | அறிந்து கொண்டான் |
| குரங்கு தீது | எய்து கொண்டான் |

என இயல்பாய்ப் புணரும்.

***ஈற்பா***

***வன்றொடரல்லா முன் மிகா அல்வழி*** *(நன். 181)*

இனி வேற்றுமைப் புணர்ச்சியிலும் இடைத்தொடர் முன்னும் ஆய்தத் தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர் முன்னும் வரும் வல்லினம் மிகா.

| | |
|---|---|
| தெள்குகால், தெள்குசிறை, தெள்குதலை | இடைத் தொடர்க் குற்றுகரம் |
| எஃகு கடுமை, எஃகு சிறுமை | ஆய்தத் தொடர்க் குற்றுகரம் |
| நாகுகால், நாகுசெவி, நாகுதலை | நெடிற்றொடர்க் குற்றுகரம் |
| வரகுகதிர், வரகுதாள், வரகுபதர் | உயிர்த் தொடர்க் குற்றுகரம் |

இவை வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாய்ப் புணர்ந்தன.

***நூற்பா***

***இடைத்தொடர் ஆய்தத்தொடர் ஒற்று இடையின் மிகா நெடில்***
***உயிர்த் தொடர் முன் மிகா வேற்றுமை***

*(நன். 182)*

## ஒற்று இரட்டல்

நெடிற்றொடர்க் குற்றுகரத்துள்ளும், உயிர்த்தொடர்க் குற்றுகரத்துள்ளும் இடம்பெறும் ட,ற ஒற்றுக்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டிக்கும்.

| | |
|---|---|
| ஆட்டுக்கால் | முருட்டுக்கால் |
| ஆட்டுச்செவி | முருட்டுச் செவி |
| பாற்றுத்தலை | முயிற்றுத்தலை |
| பாற்றுப்புறம் | முயிற்றுப் புறம் |

**நூற்பா**

நெடிலொடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுட்
டறவொற்று இரட்டும் வேற்றுமை மிகவே.

(நன். 182)

இவ்விரு ஒற்றும் பெரும்பாலும் வேற்றுமையில் இரட்டும் என்றமையால்

1. சிறுபான்மை வேற்றுமையில் இரட்டாது
   நாடுகிழவோன்
   காடகம்
   மிடறணியல்
2. சிறுபான்மை அல்வழியில் இரட்டும்
   காட்டரண்
   களிற்றி யானை
3. சிறுபான்மை பிற ஒற்றுக்கள் இரட்டும்
   வெருக்குக்கண்
   எருதுக்கால்

என்ற செய்திகள் புலப்படுகின்றன.

## மென்றொடர் வன்றொடர் ஆதல்

மென்றொடர்க் குற்றுகரங்கள் வேற்றுமைக்கண் வன்றொடராக ஆவதுண்டு. சில அவ்வாறு வன்றொடர் ஆவதில்லை.

மருந்து+பை - மருந்துப்பை
கரும்பு + நாண் - கருப்புநாண்
கன்று+ஆ - கற்றா
கரும்பு+வில் - கருப்புவில்

வன்றொடராக ஆகாதவற்றை, வழக்கின் கண்ணும் செய்யுளின் கண்ணும் வரும் வழக்குகளைக் கொண்டுணர்க.

வண்டுக்கால், பந்துத்திரட்சி வன்றொடர் ஆகாதவை

நூற்பாவில் இடம் பெறும் *மன்னே* என்ற சொல்லால், அல்வழிக்கண் வன்றொடராதலும் கொள்க.

என்புஉடம்பு-எற்புடம்பு
அன்புறுத்தளை-அற்புத்தளை
குரங்குமனம்-குரக்குமனம்

நூற்பா

*மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில்*
*தம்மின வன்றொடராகா மன்னே*

(நன். 184)

## ஐகாரம் பெறுதல்

சில மென்றொடர்க் குற்றியலுகரங்கள் இறுதியில் ஐகாரச் சாரியை பெற்று வருதலும் உண்டு.

பண்டு+காலம்-பண்டைக்காலம்
இன்று+நாள் - இற்றைநாள்
அன்று+கூலி - அற்றைக்கூலி

நூற்பா

*ஐயீற் றுடைக் குற்றுகரமும் உளவே*

(நன். 185)

நூற்பாவில் *மென்றொடர்* என்ற குறிப்பு இல்லாவிடினும் முந்திய நூற்பா மென்றொடரைப் பற்றிய தாகலின் இதுவும் மென்றொடரைக் குறித்தது என்று அறிகிறோம். வருமொழி கூறாமையால் நாற்கணமும் கொள்க.

ஐயீற்றுடைக் குற்றுகரம் என்று பொதுவாகச் சுட்டியமையால் நேற்றைப்பொழுது என்று வன்றொடர் ஐகாரம் பெறுதல் கொள்க. ஒற்றை, இரட்டை என்று ஒரு மொழியாய் நின்று ஐகாரம் பெறுதல் கொள்க. ஈராட்டை, மூவாட்டை என்று தொடர் மொழியாய் நின்று ஐகாரம் பெறுதலும் கொள்க.

## திசைப் பெயர்களின் புணர்ச்சி

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எனும் நான்கு திசைப் பெயர்களும் குற்றியலுகரங்கள் அல்லவா? எனவே அவற்றின் புணர்ச்சி கூறுகிறார்.

1. திசைப் பெயர்கள் திசைப்பெயர்களோடு புணருமிடத்தும் பிற பெயர்களோடு புணருமிடத்தும் நிலைமொழியின் ஈற்று உயிர்மெய்யும் அதன்மேல் நின்ற ககர வொற்றும் கெடும். அங்கு நின்ற றகரவொற்று னகரவொற்றாகும், அல்லது லகரவொற்றாகும்.

| | |
|---|---|
| வடக்கு+கிழக்கு-வடகிழக்கு | தெற்கு+கிழக்கு-தென்கிழக்கு |
| வடக்கு+மேற்கு-வடமேற்கு | தெற்கு+மேற்கு-தென்மேற்கு |
| வடக்கு+மலை-வடமலை | தெற்கு+குமரி-தென்குமரி |
| வடக்கு+வேங்கடம்-வடவேங்கடம் | தெற்கு+மலை-தென்மலை |
| மேற்கு+பால்-மேல்பால் | குடக்கு+திசை-குடதிசை |
| மேற்கு+நாடு-மேனாடு | குணக்கு+கடல்-குணகடல் |

இவற்றுள் வடகிழக்கு என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறத்த அன்மொழித்தொகை. வடதிசை என்பது பண்புத்தொகை, வடமலை என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை.

நூற்பா

*திசை யொடுதிசையும் பிறவும் சேரின்*
*நிலை ஈற்றுயிர் மெய் கவ்வொற்று நீங்கலும்*
*றகரம் ன, ல வாத் திரிதலுமாம்பிற*

(நன். 186)

பிற என்ற மிகையால் மேற்றிசை, மேலைத்திசை, கீழ்த்திசை, கீழைத்திசை, கிழக்கு மேற்கு, வடக்கூர், தெற்குமலை என்று வருவனவும் கொள்க.

## தெங்கு என்ற சொல்

காய் எனும் சொல் வருமாயின் தெங்கு என்பதன் முதல் நீண்டு ஈற்றுயிர் மெய் கெடும்.

தெங்கு+காய்-தேங்காய்

கெட்டே புணரும் என்று வரையறுக்காமையால் தெங்கங்காய் என்று புணரும் தலையும் கொள்க.

**நூற்பா**

**தெங்கு நீண்டு ஈற்றுயிர் மெய்கெடும் காய்வரின்**

*(நன். 187)*

## எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி

ஒன்று முதல் எட்டுவரையுள்ள எண்கள் நிலைமொழியாக நிற்க எண்ணுப் பெயர்களும், நிறைப்பெயர்களும் அளவுப் பெயர்களும் வருமொழியாக வரின்.

1) ஒன்று, இரண்டு, எனும் எண்கள் முதல் நீளும்.
2) மூன்று, ஆறு, ஏழு எனும் எண்கள் முதல் குறுகும்.
3) ஆறு ஏழு என்பவையல்லாத பிற எண்களின் ஈற்றுயிர் மெய்கெடும்.
4) ஏழு என்னும் எண்ணின் ஈற்றுயிரும் கெடும்.

அறுபது, எழுபது, அறுகழஞ்சு என முதல் குறுகின. பிறவற்றுக்கு எடுத்துக்காட்டு மேலே கூறப்படும்.

**நூற்பா**

**எண்ணிறை அளவும் பிறவும் எய்தின்**
**ஒன்று முதலெட் டீறாம் எண்ணுள்**
**முதலீரெண் முதனீளும் மூன்றா று**
**ஏழ் குறுகும் ஆறுஏழ் அல்லவற்றின்**
**ஈற்றுயிர் மெய்யும் ஏழன்உயிரும்**
**ஏகும் ஏற்புழி என்னார் புலவர்**

## ஒன்று இரண்டு

இறுதி உயிர்மெய் கெட நின்ற ஒன்று என்ற எண்ணினது நகர வொற்று ரகர ஒற்றாகும். அத்துடன் உகரம் சேரும்.

ஓராயிரம், ஒருபது, ஒருகழஞ்சு
ஒருவகை, ஒருநாழி, ஓராயிரம்

இரண்டு என்னும் எண்ணின் இறுதி உயிர்மெய் கெடும் என்பதை முன்னரே கண்டோம். ***இரண்*** என்பதன் ணகர வொற்றும் ரகரத்தை ஊர்ந்த அகதவுயிரும் கெட, அதன்மீது உகரம் வரும்.

இராயிரம், இருபது, இருகழஞ்சு, இருவகை
இருநாழி, ஈராயிரம்

ஓராயிரம், ஈராயிரம் என்பன முதல் நீண்டது முன் நூற்பாவின் படியாம்

**நூற்பா**

ஒன்றன் புள்ளி ரகர மாக
இரண்டன் ஒற்று உயிர்ஏக உவ்வருமே

(நன். 189)

**மூன்று**

இறுதி உயிர்மெய் கெட நின்ற மூன்று என்ற எண்ணின் னகரம் கெடும். வரும் ஒற்றாகத் திரிதலும் உண்டு

மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு

என வரும். முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி எனவும் வரும். முப்பது என முதல் குறுகியது. *மூன்று ஆறு ஏழ் குறுகும்* என்ற நூற்பாவின் படியாம்.

**நூற்பா**

மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும்.

(நன். 190)

**நான்கு**

இறுதி உயிர்மெய் கெட நின்ற நான்கு என்ற எண்ணின் னகரம் லகரமாயும் றகரமாயும் திரியும்.

நாலொன்று, நாலெடை நானாழி, நான்மணி
நாற்பது, நாற்கழஞ்சு, நாற்கலம் எனவரும்

**நூற்பா**

நான்கண் மெய்யே லற ஆகும்மே

**ஐந்து**

இறுதி உயிர்மெய் கெடநின்ற ஐந்து என்ற எண்ணினது நகர ஒற்று வருமொற்றாகும் அல்லது அதற்கு இனமாகும், கெடுதலும் உண்டு.

ஐம்மூன்று, ஐம்மஞ்சாடி, ஐவ்வட்டி
ஐவ்வண்ணம், ஐம்பது, ஐங்கழஞ்சு
ஐங்கலம், ஐம்பொறி
ஐயெடை, ஐயாழாக்கு என வரும்.

ஐந்நூறு, ஐந்தூணி என்பவற்றில் தகர ஒற்று தன்னியல்பில் நின்றது.

**எட்டு**

இறுதி உயிர்மெய்கெட நின்ற எட்டு என்ற எண்ணின் டகரவொற்று ணகரவொற்றாகும்.

எண்பது, எண்கழஞ்சு, எண்கலம் என வரும்.

**ஒன்பது**

1) ஒன்பது+பத்து எனும் புணர்ச்சியில் வருமொழியாகிய பத்தினை நூறாக்குக. ஒன்பது+நூறு என்பதில் ஒகரத்தோடு தகரம் சேர்த்து, னகர வொற்றை ணகரமாக்கிப் *பது* என்பதனை அகற்றுக.

ஒன்பது+பத்து-ஒன்பது+நூறு
தொன்பது+நூறு-தொண்+நூறு-தொண்ணூறு

*2) ஒன்பது+நூறு எனும் புணர்ச்சியில் வருமொழியாகிய நூறினை ஆயிரமாக்குக. ஒன்பது+ஆயிரம் என்பதில் ஒகரத்தோடு தகரம் சேர்த்து னகர வொற்றை ளகரமாக்கிப் பது என்பதனை அகற்றுக.*

*ஒன்பது+நூறு-ஒன்பது+ஆயிரம்-தொன்பது+ஆயிரம்-*
*தொன்பது+ஆயிரம்-தொள்+ஆயிரம்-தொள்ளாயிரம்*

**நூற்பா**

*ஒன்பானொடு பத்தும் நூறும் ஒன்றின்*
*முன்னதின் ஏனைய முரணி ஒவ்வொடு*
*தகரம் நிறீஇப் பஃதகற்றி னவ்வை*
*நிரலே ண, ள வாத்திரிப்பது நெறியே*
*தொள்ளாயிரம் என்பது தொளாயிரம் என மருவிற்று*

*(நன். 194)*

## எண்கள்+பத்து

*ஒன்று முதலாக எட்டெண்களின் முன்னும் வரும் பத்தென்னும் எண்ணிடை நின்ற தகரவொற்றுக் கெடுதலும், ஒருகால் தகரம் நின்றவிடத்து அதுகெட ஆய்தம் வருதலும் நிகழும்.*

*ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது.*
*ஒருபஃது, இருபஃது, முப்பஃது, நாற்பஃது, ஐம்பஃது, அறுபஃது, எழுபஃது, எண்பஃது.*

**நூற்பா**

*முதலிரு நான்காம் எண்முனர்ப் பத்தின்*
*இடை ஒற்று ஏகல் ஆய்தம் ஆகல்*
*என இருவிதியும் ஏற்கும் என்ப.*

*(நன். 195)*

## ஒருபஃது, இருபஃது எண்கள்

*ஒருபஃது, இருபஃது முதலிய எண்களின் முன் ஒன்று முதலாகிய எண்கள் வரின் பஃது என்ற எண்ணின் ஆய்தம் கெட்டு, அங்கு - தகரம் வரும்.*

*ஒருபத்தொன்று, முப்பத்தொன்று, முப்பத்தொரு கழஞ்சு,*

**நூற்பா**

*ஒருபஃதாதி முன் ஒன்று முதல் ஒன்பான்*
*எண்ணும் அவையூர் பிறவும் எய்தின்*
*ஆய்தம் அழிய ஆண்டாகும் தவ்வே*

*(நன். 196)*

## பத்து + ஒன்று முதலாகிய எண்கள், அளவு, நிறை

*பத்து என்ற எண் முன்னே ஒன்று முதலாகிய பத்து, ஆயிரம், கோடி என்ற எண்ணுப் பெயர்களும், நிறைப் பெயர்களும், அளவுப் பெயர்களும் வந்து புணருமானால் பத்து என்பதன் ஈற்றுயிர்மெய் கெட அங்கு இன் இற்று என்ற சாரியைகள் வரும். ஒன்பதும் அவ்வாறே.*

| | |
|---|---|
| பதினொன்று | |
| பதின்மூன்று | ஒன்பதினாயிரம் |
| பதினாயிரம் | ஒன்பதின் கழஞ்சு |
| பதின்கலம் | ஒன்பதின் கலம் |

| | |
|---|---|
| பதின்மடங்கு | ஒன்பதிற்று ஒன்று |
| பதிற்றொன்று | ஒன்பதிற்றிரண்டு |
| பதிற்றுமூன்று | ஒன்பதிற்றுக்குறுணி |
| பதிற்றுக்கோடி | |

என வரும், இவற்றுள் பதினொன்று உம்மைத்தொகை. பதிற்றொன்று பண்புத் தொகை என்றறிக.

பத்து + இரண்டு; பத்து என்ற எண்முன் இரண்டு வரின் பத்தின் ஈற்றுயிர் மெய்கெடும். தகரவொற்று ன கரமாகும்.

பத்து + இரண்டு; பத் + இரண்டு; பன் + இரண்டு பன்னிரண்டு

**நூற்பா**

*இரண்டு முன்வரின் பத்தின் ஈற்றுயிர் மெய்*
*கரந்திட ஒற்றுனவ்வாகும் என்ப.*

(நன். 198)

## எண்கள் இரட்டுதல்

ஒன்பது ஒழிந்த ஒன்பது எண்களும் இரட்டும், இரட்டும்போது நிலைமொழியின் முதல் தவிர ஏனைய கெடும். உயிர் வருமொழியாகின் வவ்வும், மெய் வருமொழியாயின் வந்த மெய்யும் மிகும்.

| | | |
|---|---|---|
| ஒன்று + ஒன்று | - | ஒவ்வொன்று |
| இரண்டு + இரண்டு | - | இவ்விரண்டு |
| மூன்று + மூன்று | - | மும்மூன்று |
| நான்கு + நான்கு | - | நந்நான்கு |
| ஐந்து + ஐந்து | - | ஐயைந்து |
| ஆறு + ஆறு | - | அவ்வாறு |
| ஏழு + ஏழு | - | எவ்வேழு |
| எட்டு + எட்டு | - | எவ்வெட்டு |
| பத்து + பத்து | - | பப்பத்து |

**நூற்பா**

*ஒன்பது ஒழிந்த எண் ஒன்பதும் இரட்டின்*
*முன்னதின் முன்னல ஓட உயிர்வரின்*
*வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல் நெறி*

(நன். 109)

நெறி என்றமையால் ஓரோவொன்று, ஒன்றொன்று, கழக்கழஞ்சு, கலக்கலம் என்று இரட்டித்து வருவனவும் கொள்க.

**ஊகார ஈறு**

பூ என்னும் சொல்முன் வல்லினம் வரின் முன்சொன்ன பொதுவிதியால் க, ச, த, ப என்னும் வல்லினம் மிகுதலேயன்றி அவற்றுக்கு இனமாய் மெல்லொற்றும் தோன்றும்.

பூங்கொடி, பூஞ்சோலை, பூந்தடம், பூம்பணை, பூங்கரும்பு இவற்றுள் பூங்கொடி என்பதில் பூ என்பது மலர் என்று பொருள்பட்டால் இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். பொலிவு என்று பொருள்பட்டால் பண்புத் தொகையாகும்.

முற்கூறிய விதிப்படி பூங்கொடி, பூச்சோலை, பூந்தடம் எனப்புணரும்.

**நூற்பா**

**பூப்பெயர் முன்னின மென்மையும் தோன்றும்**

*(நன். 200)*

**ஏகார, ஓகார ஈறு**

இடைச் சொற்களாகிய ஏ, ஓ என்பவற்றின் முன் வரும் வல்லினம் மிகா இயல்பாம்.

அவனே கொண்டான்
அவனோ கொண்டான்
என வரும்.

**நூற்பா**

**இடைச்சொல் ஏ ஓ முன்வரின் இயல்பே**

*(நன். 201)*

**ஐகார ஈறு**

வேற்றுமைப்புணர்ச்சியில் ஐகார வீற்றுச் சொல், இறுதி ஐகாரம் கெடாது. *அம்* சாரியை பெற்று முடியும். ஐகாரம் கெட்டு *அம்* சாரியை பெற்று முடிவதும் உண்டு.

புன்னை + கானல் - புன்னையங்கானல்
கொல்லை + சாரல் - கொல்லையஞ்சாரல்
முல்லை + புறவம் - முல்லையம்புறவம்
- என *ஐ* கெடாது *அம்* பெற்றன.

வழுதுணை + காய் - வழுதுணங்காய்
ஆவிரை + காய் - ஆவிரங்காய்
- என *ஐ* கெட்டு *அம்* பெற்றன.

**நூற்பா**

**வேற்றுமை யாயின் ஐகான் இறுமொழி**
**ஈற்றழி வோடும் அம் ஏற்பவும் உளவே**

*(நன். 202)*

ஏற்பவும் என்றமையால் *முல்லைப்புறவம்* என்ற புணர்ச்சியும் கொள்க.

**பனை**

1. பனை என்னும் பெயர்முன் கொடியென்னும் பெயர்வரின் வந்த வல்லினம் ஆகும்.

2. பனை முன் க, ச, த, ப க்கள் வரின் நிலைமொழி ஐகாரம் கெட்டு *அம்* சாரியை பெறும்.

3. பனை முன் திரள் வரின் முன் சொன்ன இருவகையும் புணரும்.

4. பனைமுன் அட்டு வரின் *ஐ* கெடும். *அட்டு* என்பதன் அகரம் ஆகாரம் ஆகும்.

பனை + கொடி பனைக்கொடி
பனை + காய் பனங்காய்
பனை + பழம் பனம்பழம்
பனை + திரள் பனைத்திரள்
பனந்திரள்
பனை + அட்டு பனாட்டு

நூற்பா

பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரின்
ஐ போய் அம்மும் திரள்வரின் உறழ்வும்
அட்டு உறின் ஐ கெட்டு அந் நீள்வுமாம் வேற்றுமை
(நன். 203)

இவ்வகையில் உயிரீற்றுப் புணரியல் செய்திகள் முற்றுப்பெறுகின்றன.

## மொழியியல் செய்திகள் ஒப்பீடு

இங்கு மொழி வரலாறு, மொழியியல் நூல்களிலிருந்து சில செய்திகள் தரப்படுகின்றன. இச்செய்திகளை நன்னூல் உயிரீற்றுப் புணரியல் செய்திகளோடு ஒப்பிட்டுக் கற்பீர்களாக!

### குற்றியலுகரம்

உயிர் முதல் மொழி வந்து புணர் மொழியிடைப்பட்ட குற்றியலுகரம் நில்லாது கெடுகிறது, நன்னூலார் இதனை அழகாக உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்கிறார். நச்சினார்க்கினியரும் (தொல். எழு. 105) வேங்கடராசுலு ரெட்டியாரும் குற்றியலுகரம் கெடாது நின்று உயிர்ஏற இடங்கொடுக்கும் என்கின்றனர். எடுத்துக்காட்டாக நாகரிது என்று கூறுகிறபோது. குற்றியலுகரம் எங்குள்ளது என்பது தெரியவில்லை. குற்றியலுகரம் ஈற்றில்தான் வழங்கும் என விதி காணுகிறபோது உயிர்வர இடைப்பட்டும் அது நிற்கும் என்பது வம்புரையே.

- டாக்டர். தி. முருகரத்தினம், தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும், பக். 319 - 420.

இடைக்காலத்து இலக்கியங்களான தேவார திருவாசகங்களில் உயிர் வரினும் உக்குறள் மெய்விட்டு ஓடாது. இரண்டும் நிற்க இடையில் உடம்படு மெய்வரும் புதுமையினையும் காணுகின்றோம்.

புன்மை தவிர்ப்பது நீறு
வோதத்தருவது நீறு; வுண்மையில் உள்ளது நீறு.

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடாது நிற்றலுண்டு என்றும், சங்க இலக்கியங்களில் அதற்குச் சான்றுண்டு என்றும் அவ்வாறு ஓடுதல் பிற்காலத்தில் நிலைபெற்றது என்றும் பேராசிரியர் தெ.பொ. மீ அவர்கள் கூறுகின்றார்கள்.

- டாக்டர். தி. முருகரத்தினம்., தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும், பக். 320 - 321.

### குற்றியலுகரம்

குற்றியலுகரத்தைப் போலவே இதுவும் வல்லின மெய்களுக்குத் துணையாகத் தோன்றும் ஈற்றுத்துணை உயிரொலியே. குற்றியலுகரமே யகரம் வரக் குற்றியலிகரமாகத் திரிகிறது. குற்றியலுகரம் கெட அவ்விடத்தில் குற்றியலிகரம் தோன்றுகிறது. இரண்டு கருத்துக்களிடையேயும் ஒரு வேறுபாடும் இல்லை. குற்றியலுகரத்தையும் குற்றியலிகரத்தையும் உறவுபடுத்திப் பேசவேண்டிய தேவை ஒன்றும் இல்லை. அது வேறு, இது வேறு எனவே கருதலாம். இலக்கண ஆசிரியர்கள் கருத்துக்களால் குற்றியலிகரம் பற்றிய இரு கருத்துக்கள் அமைகின்றன.

ஒன்று: குற்றியலிகரம் புணர்மொழியில் வல்லெழுத்துக்களை அடுத்துத் தோன்றுகிறது.

இரண்டு: வருமொழியில் யகரம் வர அது தோன்றுகிறது.

எடுத்துக்காட்டாக வரகியாது, காசியாது ... என்பனவற்றைத் தருகின்றனர். குற்றியலிகரத்தின் வகைகளாக இலக்கண ஆகிரியர்கள் குற்றியலுகரத்திற்குத்தந்த முப்பத்தாறு வகைகளையும் தருகின்றனர். குற்றியலுகரத்திற்கு இவ்வகை தேவையில்லாதது போன்றே குற்றியலிகரத்திற்கும் தேவை இல்லை. பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்றபோது வல்லெழுத்து அல்லாத மற்ற மெய்யெழுத்துக்களை அடுத்து யகரத்தின் முன் ஓர் இகரம் வழங்குவதைக் காணுகின்றோம்.

இவளி யார் (புறம். 13) இவரியார் (புறம். 201)
ஒப்பாரி யாம் (குறள். 1071) பேரியாற்று (சிலப். இந்தி. 2)
நல்லியாழ் (தொல். பொருள். 92)

இவற்றைக் கருதுகின்றபோது (மொழிக்கு ஈறாகும்) அனைத்து மெய்களை அடுத்தும் யகரம் வருமானால் ஓர் இகரம் தோன்றுகிறது எனக் கொள்ள வேண்டும் போலும். . . ரகர னகர ணகர ளகரம் போன்ற மற்ற மெய்களையடுத்துத் தோன்றும். இகரமும் குற்றியலிகரமாகவே இருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது.

\- டாக்டர். தி. முருகரத்தினம், தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும், பக். 305, 311.

### மென்றொடர் வன்றொடராதல்

கரும்பு, கருப்பு, இரும்பு, இருப்பு என மென்றொடர்க் குற்றுகரம் வன்றொடராவதைப் பற்றிப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் ஒரு கருத்துத் தெரிவிக்கிறார்.

சொல்லின் முதல் வெடிப்பொலி இரட்டிப்பதன் மூலம் தொகைகள் உணர்த்தப்படுகின்றன. தொகைகளில் தனித்து வழங்கும் வடிவங்களிலிருந்து தனித்து வழங்காதவற்றை வேறுபடுத்த இவை பின்னர்ப் பயன்பட்டன.

| தனித்து வழங்காதவை | தனித்து வழங்குவன |
|---|---|
| இருப்பு (வேலி) | இரும்பு |
| மருத்து (ப்பை) | மருந்து |
| யாட்டு (க்கால்) | யாடு |

(தெ.பொ.மீ. - தமிழ் மொழி வரலாறு, பக். 134)

### எண்ணுப்பெயர்கள்

எண்ணுப்பெயர்களிலும் தனித்து வழங்கும் வடிவங்களும் உள்ளன. தனித்து வழங்காத சுட்டு வடிவங்களும் உள்ளன என்று தெ.பொ.மீ. அவர்கள் பிரித்து வகைப்படுத்துவர். ஒரு, ஓர், ஓர், இரு, ஈர், மூ, மு, நால், நான், ஐ, அறு, எழு, ஏழ், எண், ஒன்பதிற்று, பதின், பான், பன் என்பன தனித்து வழங்காத அடைவடிவங்களாம்.

(பக். 133)

ஒன்று + ஆயிரம் → ஓராயிரம்<br>
இரண்டு + ஆயிரம் → ஈராயிரம் ] நீடல்

என்ற இரு புணர்ச்சிகளிலும் உள்ள நீடலைக் குறித்து மலையாளத்திலும் துளுவிலும் வருமொழி முதலில் உயிர் வரும் போது, நிலைமொழி உயிர் வரும் போது, நிலைமொழி உயிர் நீளும் மரபு உள்ளமையைச் சுட்டுவார் டாக்டர் எஸ். சுப்பிரமணியன்.

**(Phonology - A Critical Study of Tolkappiyam and Nannul. P. 123)**

ஒன்று + ஒன்று - ஒவ்வொன்று<br>
பத்து + பத்து - பப்பத்து ] என்று இப்புணர்ச்சிகள் மருவிய வழக்கினால் வந்தவை என்றும்,<br>
ஒன்பது + பத்து → தொண்ணூறு<br>
ஒன்பது + நூறு → தொள்ளாயிரம்

என்ற புணர்ச்சிகள் விதி கூறுதலில் பொருத்தமற்றவையாக உள்ளன என்றும் கூறுவர் டாக்டர் எஸ். சுப்பிரமணியன் (P . 128. P. 153)

### பயிற்சி வினாக்கள்

1. புணர்ச்சியைக் குறித்த அடிப்படைச் செய்திகளை எழுதுக.
2. தழுவுதொடர், தழாஅத் தொடர் - குறிப்பு வரைக.
3. விகாரங்களை வகைப்படுத்துக.
4. இயல்பாகப் புணரும் உயிரீறுகளைச் சுட்டுக.
5. குற்றுகரப் புணர்ச்சிகளை வரையறுக்க.
6. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி விதிகளைச் சுட்டுக.
7. அல்வழி, வேற்றுமை என்று பொருளடிப்படையில் புணர்ச்சியை வேறுபடுத்துவதன் காரணத்தை ஆராய்க.

# 4. மெய்யீற்றுப்புணரியல்

மெய்யெழுத்துக்களை ஈறாக உடைய பதங்கள் புணரும் சிறப்புப் புணர்ச்சி இவ்வியலில் கூறப்படுகிறது.

## மெய்யீற்றின் முன் உயிர்

நிலைமொழியீற்றில் நின்ற மெய்யெழுத்தோடு வருமொழி முதலில் நிற்கும் உயிரெழுத்து ஒன்றுபட்டு இயங்கும். அது இயல்புப்புணர்ச்சியே.

நூற்பா

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

(நன். 204)

கூடல்+அழகர்-கூடலழகர்
நீர்+அலை-நீரலை
புகழ்+ஆரம்-புகழாரம்
ஆல்+இலை-ஆலிலை

இனித் தனிக்குறிலையடுத்து நிற்கம் மெய்யின் முன் உயிரெழுத்துவரின் வந்த மெய் இரட்டிக்கும் எனப்படுகிறது.

பொன்+ஒளி - பொன்னொளி
மண்+அகம்-மண்ணகம்
சொல்+ஓவியம்-சொல்லோவியம்
கண்+உறங்கு-கண்ணுறங்கு

நூற்பா

தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்

(நன். 205)

## மெய்யீற்றின் முன் மெய்

மொழியீற்றில் வரும் மெய்கள் என்று முன்னே சொல்லப்பட்டவற்றுள் யகரம் ஒழிந்த ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்ற பத்து மெய்களின் முன்னும் வருமொழி முதலில் யகரம் வந்தால் இடையே இகரச்சாரியை வந்து பொருந்துதலும் உண்டு.

வேள்+யாவன்-வேளியாவன்
மண்+யாது-மண்ணியாது
வேள்+யானை-வேளியானை
மண்+யானை-மண்ணியானை

இகரச்சாரியை பொருந்தாமல் இயல்பாய்ப் புணர்தலும் உண்டு என்க.

நூற்பா

தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்
துன்னும் என்று துணிநரும் உளரே

(நன். 206)

## தொழிற்பெயர், ஏவல்வினை ஈற்று மெய்கள்

மொழிக்கு ஈறாகும் என்று சொல்லப்பட்ட மெய்யெழுத்துக்களில் ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்ற எட்டு மெய்களையும் ஈறாக உடைய தொழிற்பெயரின் முன்னும், ஏவல் வினையின் முன்னும் யகரம் ஒழிந்த மெய்கள்

வருமாயின் புணர்ச்சியில் இடையே உகரச் சாரியை வரும். சில ஏவல் வினைகள் அவ்வாறுல் உகரச்சாரியை பெறாமல் புணர்தலும் உண்டு.

## தொழிற் பெயர்

உரிஞ்+கடிது-உரிஞுக்கடிது
உண்+கடிது-உண்ணுக்கடிது

எனப்புணரும். பொருநுக்கடிது, திருமுக்கடிது, தின்னுக்கடிது, உரிஞுநீண்டது, பொருநுவலிது, உரிஞுக் கடுமை, பொருது நீட்சி, திருமுவன்மை என இரு வழியும் புணர்ச்சியில் உகரம் பெற்றன.

## ஏவல் வினை

உரிஞு கொற்றா, உண்ணு கொற்றா, பொருது நாகா, திருமுவளவா என ஏவல் வினையிலும் புணர்ச்சியில் உகரம் பெற்றமை காண்க.

உண் கொற்றா என்பது உகரம் பெறாமல் புணர்ந்த புணர்ச்சி

**நூற்பா**

ஞண நமலவளன ஒற்றிறு தொழிற்பெயர்
ஏவல்வினை நனி யவ்வல் மெய்வரின்
உவ்வுறும் ஏவல் உறா சில சில்வழி.

(நன். 207)

இத்துடன் உரிஞு; உண்ணு என்று தொழிற்பெயர்கள் வருமொழியின்றியே உகரம் பெற்றமையையும் வாரு என்று விதி சொல்லப்படாத ரகர ஈறு உகரம் பெற்றமையையும் கொள்க.

## நகர ஈற்றுத் தொழிற்பெயர்

நகர ஈற்றுத் தொழிற்பெயர்கள் முன்னே சொன்ன உகரச்சாரியை மட்டுமன்றி அகரச்சாரியையும் வேற்றுமைப் புணர்ச்சியில் பெறும்.

பொருந்+கடுமை - பொருநக்கடுமை

**நூற்பா**

நவ்விறு தொழிற்பெயருக்கு அவ்வுமாம் வேற்றுமை (நன். 209)

## ணகர னகர ஈறுகள் பொதுவிதி

1. நிலை மொழியீற்றிலுள்ள ணகர னகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் முறையே டகாரமும் றகாரமுமாய்த் திரிபடையும்.

2. நிலை மொழியீற்றிலுள்ள ணகர னகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினம் இடையினம் வந்தால் இயல்பாய்ப் புணரும்.

3. அல்வழிப் புணர்ச்சியாக இருக்குமானால் மூவினம் வரினும் இயல்பாகவே புணரும்.

அ) பொன்+கொடி-பொற்கொடி, பொன்+சிலை - பொற்சிலை.
பொன் + தகடு - பொற்றகடு எனவும்,
மண் + குடம் - மட்குடம்; கண் + களிறு - கட்களிறு; பேரமர்க்கண் + பேதை - பேமரமர்க்கட் பேதை எனவும் திரிபடைந்தன.

ஆ) மண்ஞாற்சி, பொன் ஞாற்சி, மண்மாட்சி, பொன்மாட்சி, மண்வன்மை, பொன்வன்மை என வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் வர இயல்பாய்ப் புணர்ந்தன.

இ) மண் சிறிது, பொன் கடிது, மண் ஞான்றது, பொன் மாண்டது, மண் வலிது, பொன் வலிது என அல்வழிப் புணர்ச்சியில் மூவினமும் வர இயல்பாய்ப் புணர்ந்தன.

**நூற்பா**

ணன வல்லினம் வரட்டறவும் பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்து மெய் வரினும் இயல்பாகும்மே

(நன். 200)

## குறிலைச் சாராத ணகர னகர ஈறுகள்

தனிக்குறிலைச் சாராது, நெடிலையடுத்தோ, தொடர்மொழியையடுத்தோ வரும் ணகர னகரங்கள் வருமொழி முதலில் நகரம் வந்து திரிபடையும் போது கெடும்.

பாண் + நன்று - பாணன்று, தூண் + நன்று - தூணன்று
அரசன் + நல்லவன் - அரசனல்லன், கோன் + நன்மை - கோனன்மை

என நகரம் திரிபடைந்தபோது ஈற்று ணகர, னகரங்கள் கெட்டன.

**நூற்பா**

குறில் அணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணும் கேடே

(நன். 210)

## சாதி, குழு, பரண், கவண்

சாதி குறித்தும் குழுக் குறித்தும் வரும் ணகரவீற்றுப் பெயர்களும், பரண், கவண் எனும் ணகரவீற்றுப் பெயர்களும் வேற்றுமைப் புணர்ச்சியின் வல்லினம் வரினும் இயல்பாகவே புணரும்.

பாண் குடி, உமண் குடி, பாண் சேரி, உமண் பாடி எனச் சாதி குறித்த பெயர்களும், அமண் குடி, அமண் சேரி, அமண் பாடி எனக் குழுக் குறித்த பெயர்களும் இயல்பாய்ப் புணர்ந்தன. பரண் கால், கவண் கால் என்பனவும் இயல்பாய்ப் புணர்ந்தன.

2. எள் எனும் உணவு குறித்த *பெயரும் எண்* எனும் பெயரும், *சாண்*எனும் அளவுப் பெயரும் அல்வழிப்புணர்ச்சியிலும் ணகரம் டகரமாகத் திரியப் பெறும் எட்கடிது, எட்சிறிது, எட்பெரிது, சாட்கோல் என வரும்.

**நூற்பா**

*சாதி குழூஉப் பரண் கவண் பெய ரிறுதி*
*இயல்பாம் வேற்றுமைக்கு உணவு எண் சாண் பிற*
*டவ்வா கலுமாம் அல்வழி யும்மே*

(நன். 211)

எண் கடிது, சாண் கோல் என்று இயல்பாகப் புணர்தலும் உண்டு. பிற என்ற மிகையால் பாணக்குடி என்று அகரம் பெறுதலும் கொள்க. அட்டுண்கழனி என்று திரிபின்றி இயல்பாய்ப் புணர்ந்தமையும் கொள்க. மண்குடம், மட்குடம் என்ற உறழ்வும் கொள்க.

## கிளைப்பெயர் ஈற்று னகரம்

னகரவீற்றுச் சாதிப்பெயர் வேற்றுமைப் புணர்ச்சியில வல்லினம் வர ஈறுதிரியாது. இயல்பாதலும், அகரச் சாரியை பெறுதலும் உண்டு.

எயின் + குடி - எயின்குடி, எயினக்குடி
எயின் + சேரி - எயின்சேரி, எயினச்சேரி
எயின் + பாடி - எயின்பாடி, எயினப்பாடி

இத்துடன் எயின மரபு எயின் வாழ்வு என்று வல்லினமில்லாத பிற மெய் வரும்போது அகரம் பெறுதலும் கொள்க. எயினக்கன்னி, எயினப் பிள்ளை என்று அல்வழியிலும் அகரச்சாரியை பெறுதலையும் கொள்க.

**நூற்பா**

ணஃகான் கிளைப்பெயர் இயல்பும் அஃகான்
அடைவும் ஆகும் வேற்றுமைப் பொருட்கே

*(நன். 212)*

### மீன்

மீன் என்னும் பெயர் வேற்றுமைப்புணர்ச்சியில் வல்லினம் வந்தால், றகரத்தோடு உறழ்ந்து புணரும்.

மீன் + கண் - மீன் கண், மீற்கண்
மீன் + செவி - மீன் செவி, மீற்செவி
மீன் + புறம் - மீன் புறம், மீற்புறம்

**நூற்பா**

மீன் றவ்வொடு பொரூஉம் வேற்றுமை வழியே

*(நன். 213)*

### தேன்

தேன் என்னும் சொல் பல வகையான புணர்ச்சி விதிகளை உடையது.

**1. மூவினம் வர இயல்பாகப் புணரும்.**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தேன்கடிது, தேன்ஞான்றது | தேன் கடுமை |
| | தேன் மலிவு |
| தேன்யாது | தேன்யாப்பு |

**2. மெலிவரின் இயல்பாகவும் கெட்டும் புணரும்**

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| தேன் குழம்பு, தேக்குழம்பு | தேன்குடம், தேக்குடம் |
| தேங்குழம்பு | தேங்குடம் |

**நூற்பா**

தேன் மொழி மெய்வரின் இயல்பும், மென்மை
மேவின் இறுதி அழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலும் ஆம் இருவழி.

*(நன். 124)*

எகின், மரம் அல்லது அன்னத்தை உணர்த்தும். எகின் எனுஞ்சொ[illegible] வா வேற்றுமைக்கண் இயல்பாகப் புணரும். வேற்றுமையிலும் அல்வழியிலும் அகரச்சாரியை பொருந்தப்பெற்று வல்லினமோ மெல்லினமோ மிகவும் பெறும்.

எகின்கால், எகின்சிறை, எகின்தலை, எகின்புறம் என இயல்பாயிற்று. எகினப்புள், எகினம்புள், எகினக்கால், எகினங்கால் என இருவழியும் அகரம் பொருந்தி வலி, மெலி மிகுந்தன.

எகினமாட்சி, எகினவாழ்வு என்று வல்லினமல்லாத பிற மெய் வந்தபோதும் அகரம் போன்றவை கொள்க.

**நூற்பா**

*மரமல் எகின் மொழி இயல்பும் அகரம்*
*மருவ வலி மெலி மிகலும் ஆகும்*

*(நன். 125)*

### குயின், ஊன்

குயின், ஊன் என்பன அல்வழி வேற்றுமை இரண்டிலும் இயல்பாகவே புணரும்.

குயின் கடிது, குயின் கடுமை,
ஊன் சிறிது, ஊன் சிறுமை என வரும்.

**நூற்பா**

***குயின், ஊன் வேற்றுமைக்கண்ணும் இயல்பே***

*(நன். 210)*

### மின், பின், பன், கன்

இந்நான்கு சொற்களும் முன்னே சொன்ன தொழிற்பெயர்களைப் போலவே யகரமல்லாத மெய்வரின், உகரச் சாரியை பெறும். இவற்றுள் கன் எனுஞ்சொல் மட்டும் உகரச்சாரியையயன்றி அகரச்சாரியையும் பெற்று வலி, மெலி மிகும்.

மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது,
கன்னுக்கடிது, மின்னுவலிது, பின்னுநன்று
- என உகரம் பெற்றன.

கன்னத்தட்டு, கன்னத்தூக்கு
கன்னந்தட்டு, கன்னந்தூக்கு
- என அகரம் பெற்று வலி மெலி மிகுந்தன.

**நூற்பா**

***மின் பின் பன் கன் தொழிற் பெயரனைய***
***கண் அவ்வேற்று மென்மையோடு உறழும்***

*(நன். 216)*

### குன், என், நின்

தன் என் என்பவற்றின் ஈற்றின் னகரம் றகரமாகும் அல்லது இயல்பாய்ப் புணரும். நின் என்பதன் ஈற்று னகரம் திரியாது இயல்பேயாகும்.

தன்பகை, தற்பகை
என்பகை, எற்பகை இயல்பாயும், திரிந்தும் புணர்ந்தன.
நின் + பகை என்பது நின்பகை என்றே இயல்பாய்ப் புணர்ந்தது.

**நூற்பா**

*தன் என் என்பவற்றுள் ஈற்றுனவ் வன்மையோடு*
*உறழும் நின் ஈறு இயல்பாம் உறவே*

(நன். 217)

உறவே என்ற மிகையால் மின் கடிது, மின் கடுமை என்று உகரம் பெறாததும் இயல்பாயும் வந்தமை கொள்க. மான்குளம்பு, அழன்கை என் வேற்றுமையில் இயல்பானமை கொள்க. வரிற் கொள்ளூம் என்று வினையெச்சம் திரிந்தமையும் கொள்க.

## மொழியியற் செய்திகள் ஒப்பீடு

கீழ்க்காணும் மொழியியற் செய்திகளையும் நன்னூற் செய்திகளுடன் ஒப்பிட்டு நினைவில் இருத்துக.

வட்டார வழக்குகளில் உள்ள பல சொற்கள் இத்தகைய மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளன. காலப்போக்கில் அவை அவ்வப்போது இலக்கியமொழியிலும் இடம்பெறலாயின.

**சான்று**

எண் > எள்
கொண் > கொள்
இன் > இல்
நோன் > நோல்
ஆண் > ஆள்
அகன் > அகல்

(தெ. பொ.மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 47)

வேள் + யாவன் - வேளியாவன்
மண் + யானை - மண்ணியானை

இதில் இடம்பெறும் இகரம் குற்றியலுகரமேயாதல் வேண்டும். நாடியாது போலவேதான் இதுவும் உருவாகியிருக்கவேண்டும்.

(தெ. கொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 48)

தேன் + சாடி - தேஞ்சாடி
அவ் + ஞான் - அஞ்ஞான்
வன் + சினம் - வஞ்சினம்
மரம் + சாய்ந்தது - மரஞ்சாய்ந்தது
இவற்றை ஓரினமாதல் என்பர்.

(தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 49)

தொல்காப்பியரின் ஒலியியல் கட்டுப்பாடு ஒரு பிற்கால வளர்ச்சி.
முட்டீது
முள் + தீது
முஃடீது

இங்கு வெடிப்பொலி இரட்டை, உரசொலி இரட்டையுடன் உறழ்த்தி வருகிறது. இது ஒரு பயனிலைத் தொடர், அடைத்தொடர் அமைப்பில் இத்தகைய மாறுபாடு இல்லை.

முள் + தீமை - முட்டீமை என்று வருமேயல்லாது முஃடீமை என்று வராது.

பொருளைப் பொறுத்தவரையிலான வரையறை அல்லது கட்டுப்பாடு பிற்கால வளர்ச்சி என்று கொள்ளலாம்.

(தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 95 - 96)

**மரம்**

தொகை வடிவத்தை உணர்த்துவதற்கு அத்துப்போன்ற இடைச்சொற்கள் பயன்படுகின்றன.

மரம் + அத்து - மரத்து
மருந்து + மருத்து
இரும்பு - இருப்பு
யாடு - யாட்டு

போன்ற சான்றுகளைப் பொதுமைப்படுத்திக் காண்கையில் மரத்து என்ற சுட்டு வடிவத்தின் தனித்த வடிவம் மரது என்று ஆகும். ஆனால் இச்சொல் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே வழக்கிழந்து விட்டது. மரம் - மரன் ஆகிய சொற்களே ஆட்சியில் உள்ளன. மகர ஈறு பன்மையைக் குறித்ததால் ஒருமையில் வேற்றுமை ஏற்கையில் அது பயன்படுத்தப்படவில்லை.

மரம் என்பதற்கு மாறாக மரது என்பதே வேற்றுமை உருபேற்கப் பயன்படுத்தப்பட்டது. உருபுகளோடு கூடிய பிற்கால வடிவங்கள் உண்மையில் பழைய வடிவங்கள் ஆகும். தனிவளர்ச்சி உற்ற இடைச்சொற்களை அவை வேற்றுமை உருபுகளாகப் பெற்றிருந்தன.

(தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 137.)

மூக்கொலிகள் மருங்கொலியாகும் தன்மை சங்கத் தமிழில் காணப்படுவதைப் பேராசிரியர் தெ. பொ. மீ. எடுத்துக்காட்டுவர். மூன்றாம் வேற்றுமை உருபான ஆன் ஆல் ஆகிறது. ஐந்தாம் வேற்றுமை உருபான இன் இல் ஆகிறது. வேண் வேள் ஆகிறது.

(தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 133.)

## மெய்யொலித் திரிபுகள்

காலப்போக்கில் மெய்யெழுத்துக்களில் ஏற்பட்ட திரிபுகளை விளக்கும்போது பல்லர், சோழர், நாயக்கர் காலத் தமிழில் பயன்பட்ட மெய்யொலி மாற்றங்களை எடுத்துக்காட்டுவர் பேராசிரியர் தெ. பொ. மீ. அவை கீழ் வருமாறு:

### இடையண்ணச் சாயல்

இரட்டித்த நுனி நா; பல மூக்கொலிகள் இடை அண்ண ஒலிகளை அடுத்து இடை அண்ண மூக்கொலி கள் ஆகின்றன.

ந் ந் - ஞ் ஞ்
ஐந்நூறு - ஐஞ்ஞூறு
இந்நிலம் - இஞ்ஞிலம்

அப்பர் பாடல்களில் இடம் பெறுகிறது.

கைந்நின்ற - கைஞ்ஞின்ற
மெய்ந்நின்ற - மெஞ்ஞின்ற
செய்நின்ற - செஞ்ஞின்ற

த் என்னும் ஒலி கூட அதன் முன்னர் இடை அண்ண ஒலி வருமாயின் அண்ணச் சாயல் பெற்று ச் ஆகிறது.

தைத்த - தச்ச; பொரித்த - பொரிச்ச
மைத்துனி - மச்சினி

## பல்லினச் சாயல்

சோழர் காலத்தில் இடை அண்ண ஒலிகள் பல்லினச் சாயல் பெற்றன.

ஞாயிறு - நாயிறு
சண்டேசுவர - தண்டேசுவர
செருமுனை - திருமுனை

## ஒன்றாதல்

ற கர மெய்யும் ன கர மெய்யும் ஒன்றாதல்.

தொல்காப்பியர் காலத்திலேயே இம்மாற்றத்திற்கான அடிப்படை அமைந்திருக்கக் காண்கிறோம். பல்லவர் காலத்திலும் இது உண்டு.

றகர மெய்யும் ரகர மெய்யும் ஒன்றாதல்

இம்மாற்றத்திற்கான சுவடு 10-ஆம் நூற்றாண்டில் தான் கிடைக்கிறது.

மேற்கு - மேர்க்கு
ஏவற்படி - ஏவர்ப்படி
ஊர்க்கால் - ஊற்கால்
நிறுத்த - நிருத்த
வயிறு - வயிறு

## ளகர மெய்யும் ழகர மெய்யும் ஒன்றாதல்

வட மாவட்டக் கிளை மொழிகளில் ளகரமெய் ழகரமெய்யுடன் ஒன்றாகிறது.

ஆள் > ஆழ்
கேள்வி > கேழ்வி
களம் > கழம்

தென் மாவட்டங்களிலோ ழகரமும் ளகரமும் ஒன்றாதல் உள்ளன.

கிழமை > கிளமை

## மறைதல்

பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் ரகரமெய் மறைவதைக் காணலாம்.

கீர்த்தியை - கீத்தியை
கார்த்திகை - காத்திகை
வார்த்து - வாத்து

## வெடிப்பொலி இழத்தல்

க, ச ஆகிய மெய்கள் இடம் பெறும் சொற்களில் வெடிப்பொலி இழக்கும் போக்குக் காணப்படுகிறது.

வைகாசி - வையாசி
இசைத்த - இயைந்த

## உகரம் பெறுதல்

வெடிப்பொலிகள் மொழிக்கு இறுதியில் வருவதில்லை. வெடிப்பொலி அல்லாத சில மெய்கள் அம் மொழிக்கு இறுதியில் வரும்போது உகரம் பெற்றே முடிகின்றன. (இதனை ஒலித்துணை என்பர். தொழிற்பெயர்கள், ஈற்றில் உகரம் பெறும் என்று தொல்காப்பியம் அனுமதிப்பதால் இப்போக்குத் தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கிவிட்டது)

(உரிஞ் + கடிது - உரிஞுக்கடிது
செம் + சிறிது - செம்முச்சிறிது)

## றகர மெய்

நுனியண்ண வெடிப்பொலியாகிய இது பல்லின ஒலியாகவும் (த) வளைநா வெடிப்பொலியாகவும் (ட) ரகரமாகவும், மூக்கொலியாகவும் (ண) ஆகிறது.

நேற்று - நேத்து - நேட்கு
வயிறு - வயிரு - வயிர்
ஒன்று - ஒண்ணு
உன்றன் - உந்தன்

## வல்லின மெய்கள்

வல்லினமெய்கள் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக வரும்போது ஓரினமாதல் விதிப்படி முதலாவது வல்லினமெய் இரண்டாவது வல்லினமாக மாறி உடனிலை மெய்ம்மயக்கம் ஆகிவிடுகிறது.

மாட்சி - மாச்சி
முற்பிறவி - முப்பிறவி
நற்கீரர் - நக்கீரர்
அற்பம் - அப்பம்

## க, ய

கன்னிகள் > கன்னியன், துகில் > துயில் எனக் ககரம் யகரமாகத் திரிவதோடு, இடையூறு > இடைகூறு என்றும் யகரம் ககரமாகத் திரிந்து வழங்கும் மரூஉ வடிவங்களும் நாயக்கர் காலத்தமிழில் உள்ளன.

## மூக்கொலிகள்

1. வகர உடம்படு மெய் சில இடங்களில் மூக்கொலிச்சாயல் பெறுகின்றது.
   என்ன + ஓ - என்னவோ - என்னமோ
   கவிய > கமிய
   குவிந்து > குமிந்து

2. மூக்கொலியாகிய ன கரம் சில இடங்களில் மறைகிறது.
   நான்முகன் - நாமுகன்

3. மூக்கொலிகள் தம்மை அடுத்துவரும் வெடிப்பொலிகட்கு இனமாக மாறுகின்றன.
   மாண்பு - மாம்பு
   வெண்சாமரை - வெஞ்சாமரை
   இன்சொல் - இஞ்சொல்

4. வெடிப்பொலிச் சொல்லுக்கு முன்னே மூக்கொலி தோன்றுகிறது.

அரு + கலை - அருங்கலை

வெடிப்பொலியல்லா மெய்கள் வரின் இம்மூக்கொலி தோன்றுவதில்லை.

அரு + விலை - அருவிலை

5. ஒப்புமையாக்கத்தின் விளைவால் பிறமெய்கள் வருமிடத்தும் மூக்கொலி தோன்றுகிறது.

## இடையின மெய்கள்

1. இறுதியில் வரும் ர, ல ஆகிய மெய்கள் இழக்கப்படுகின்றன.

தூண்டில் - தூண்டி
தண்ணீர் - தண்ணி
வாய்க்கால் - வாக்கா

நீண்ட ஓரசைச் சொல்லில் இறுதியில் மெய்யொலிச் சேர்க்கையாக ரகரம், புகுத்தப்படுதலும் உள்ளது.

2. கா > கார்
கோ > கோர்

3. லகர ரகர மாற்றமும் உள்ளன.

பந்தல் > பந்தர், சாம்பல் > சாம்பர், அரற்றி > அலற்றி.

### மகரவீறு

மகர வீற்றுச் சொற்கள் இறுதியிலுள்ள மகரம் கெட்டு உயிரீற்றைப் போல நின்று வருமொழி முதலில் உயிரெழுத்துவரின் உடன்படுமெய் பெறும். வல்லினம் வரின் வந்த வல்லினம் மிகும். மெல்லினமும் இடையினமும் வரின் இயல்பாகப் புணரும், ஈறு கெடாது நின்று வரும் வல்லினத்திற்கு இனமாகவும் திரியும்.

| | |
|---|---|
| வட்டம் + ஆழி - வட்டவாழி | மரம் + அடி - மரவடி |
| வட்டம் + கல் - வட்டக்கல் | மரம் + கால் - மரக்கால் |
| வட்டம் + நேமி - வட்டநேமி | மரம் + நார் - மரநார் |
| வட்டம் + வாரி - வட்டவாரி | மரம் + வேர் - மரவேர் |
| நாம் + கடியம் - நாங்கடியம் | நம் + கை - நங்கை |

- என இரு வழியும் வந்தன.

**நூற்பா**

மவ்வீறு ஒற்று அழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்

(நன். 219)

வேற்றுமைப் புணர்ச்சியில் மகர ஈறு கெட அவற்றின் முன்னே வரும் வல்லினம் மிகுதலும், அதற்கினமாகிய மெல்லினம் மிகுதலும் நிகழும். அல் வழியில் உயிரும் இடையினமும் வரின் கெடாது இயல்பாதலும் உண்டு.

குளம் + கரை - குளக்கரை, குளங்கரை
குளம் + அழகிது - குளமழகிது
குளம் + யாது - குளம்யாது
அருளும் + அரசன் - அருளுமரசன்
கொல்லும் + யானை - கொல்லும்யானை

- என வரும்.

**நூற்பா**

> வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்
> அல்வழி உயிரிடைவரின் இயல்பும் உள

*(நன். 220)*

**நும், தம், எம், நம்**

இந்நான்கு மொழிகளின் ஈற்று மகரம், வருமொழி முதலில் ஞ, ந வரும்போது அவையாகத் திரியும்.

| | |
|---|---|
| நும் + ஞாண் - நுஞ்ஞாண் | எம் + ஞாண் - எஞ்ஞாண் |
| நும் + நூல் - நுந்நூல் | எம் + நூல் - எந்நூல் |
| தம் + ஞாண் - தஞ்ஞாண் | நம் + ஞாண் - நஞ்ஞாண் |
| தம் + நூல் - தந்நூல் | நம் + நூல் - நந்நூல் |

- என வரும்.

**நூற்பா**

> நும் தம்
> எம் நம் ஈறாம் ம வரும் ஞநவே

*(நன். 221)*

**அகம் + செவி, கை**

அகம் எனும் இடப்பெயரின் முன் செவி கை எனும் சினைப்பெயர்கள் வருமாயின் நிலைமொழி இறுதி மகரம் வல்லினத்துக்கு இனமாகிய மெல்லினமாகத் திரிதலோடு, அகம் என்பதன் நடுவே நின்ற ககர உயிர்மெய் கெடுதலும் உண்டு.

அகம் + செவி - அஞ்செவி
அகம் + கை - அங்கை
அகம் + சிறை - அஞ்சிறை

அகங்கை, அகஞ்செவி, அகஞ்சிறை என்று பொதுவிதிப்படி புணர்தலும் உண்டு.

**நூற்பா**

> அகமுனர்ச்செவிகை வரின் இடையன கெடும்

*(நன். 222)*

**ஈம், கம், உரும்**

இம்மூன்று சொற்களும் முன்பு சொன்ன தொழிற்பெயர்களின் முடிவுகளைப் போலவே வருமொழி முதலில் யகரமல்லாத மெய்கள் வரின் உகரச் சாரியை பெற்று முடியும். ஈம், கம் என்ற இரண்டும் அகரச்சாரியை பெறுதலுமுண்டு.

| | |
|---|---|
| ஈமுக்கடிது, கம்முக்கடிது | ஈமுக்கடுமை |
| உருமுக்கடிது, ஈமுநீண்டது | கம்முக்கடுமை |
| கம்முவலிது | உருமுக்கடுமை |
| ஈமக்கடுமை | கம்மு நீட்சி |
| கம்மக்கடுமை | உருமு வன்மை |

**ய, ர, ழ, ஈறு**

1. அல்வழிப் புணர்ச்சியில் ய ர ழ என்ற ஈறுகளின் முன்னர்க் க, ச, த, ப வருமாயின் இயல்பாதலும் உண்டு. மிகுதலும் உண்டு.

| இயல்பு | மிகுதி |
|---|---|
| வேய் கடிது | மெய்க்கீர்த்தி |
| வேர் கடிது | போய்க்கொண்டான் |
| வீழ் கடிது | கார்ப் பருவம் |
| | பூழ்ப் பறவை |

2. வேற்றுமையாயின் வல்லினம் மிகும். அல்லது மெல்லினத்தோடு உறழும்.

| வல்லினம் மிகல் | மெல்லினம் உறழ்தல் |
|---|---|
| நாய்க்கால் | வேய்ங்குழல், வேய்க்குழல் |
| தேர்க்கால் | ஆர்ங்கோடு, ஆர்க்கோடு |
| பூழ்க்கால் | |

**நூற்பா**

*யரழ முன்னர்க் கசதப அல்வழி*
*இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை*
*மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்*

*(நன். 224)*

மேல் என்னும் மிகையால், வாய்புகுவதனினும் என வேற்றுமையில் இயல்பாதல் கொள்க. பாழ்க்கிணறு பாழ்ங்கிணணு என்று அல்வழியில் பண்புத்தொகையில் மெல்லினத்தோடு உறழ்தலும் கொள்க.

## தமிழ், தாழ்

தமிழ் எனுஞ் சொல்லானது வேற்றுமையில் அகரச்சாரியை பெறும். தாழ் எனுஞ் சொல்லும் கோல் எனுஞ்சொல் வந்து புணரின் அகரச்சாரியை பெறும்.

தமிழப்பல்லவதரையர், தமிழநாகன், தமிழவளவன், தமிழவரசன், தாழக்கோல் என வரும்.
(தமிழ்ப் பல்லவதரையர் - தமிழையுடைய பல்லவதரையர்
தாழக் கோல் - தாழைத் திறக்கும் கோல்)

**நூற்பா**

*தமிழ் அவ்வுறவும் பெறும் வேற்றுமைக்கே*
*தாழும் கோல் வந்து உறுமேல் அற்றே*

*(நன். 225)*

தமிழின் சுவை என இன் சாரியை பெறலும் உண்டு.

## கீழ்

கீழ் எனுஞ்சொல் முன்வரும் வல்லினம் இயல்பாகவும் மிகுந்தும் விகற்பித்தும் வரும்.

| | |
|---|---|
| கீழ் குலம் | கீழ் சாதி |
| கீழ்க் குலம் | கீழ்ச் சாதி |

**நூற்பா**

*கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்*
*லகர, ளகர, ஈறு*

*(நன். 222)*

ல ள என்ற இரண்டு ஈறும் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வரின் ற, ட என்றாகும். அல்வழிப் புணர்ச்சியாயின் உறழ்ந்து புணரும். அல்வழி, வேற்றுமை இருவழியும் மெல்லினம் வரின் னகார ணகாரங்களாய் மாறும். இடையினம் வரின் இயல்பாம்.

| | |
|---|---|
| கற்குறை | கல்குறிது, கற்குறிது |
| முட்குறை | முள் குறிது, முட் குறிது |
| கன்ஞெரி | கன்ஞெரிந்தது |
| முண்ஞெரி | முண்ஞெரிந்தது |
| கல் யாப்பு | கல்யாது |
| முள் யாப்பு | முள் யாது |

- என வரும்

## குறிலின் பின் லகர ளகரங்கள்

தனிக் குறிலின் பின் நின்ற லகர, ளகரங்கள் அல்வழிக்கண் தகரம் வருமாயின் முன்னே குறிப்பிட்டது போல் ற, ட என்றாதலேயன்றி ஆய்தமாகவும் திரியும்.

கல் + தீது - கஃறீது
முள் + தீது - முஃடீது
- என வரும்.

**நூற்பாக்கள்**

லள வேற்றுமையில் றடவும் அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலி வரின் ஆம் மெலி
மேவின் னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இரு வழியானும் என்ப, (நன். 227)
குறில் வழி லள த அணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழியானே (நன். 228)

## குறில் செறியாத லகர ளகரங்கள்

தனிக் குறிலைச் சாராத லகர ளகரங்கள் அல்வழிக்கண் வந்த தகரம் திரியும் போது கெடும். இருவழியும் வரும் நகரம் திரியும் போதும் கெடும். வல்லினம் வரின் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகும். அல்லது திரியும். வேற்றுமையில் திரியாது இயல்பாதலும் உண்டு.

தோன்றல் + தீயன் - தோன்றறீயன்
வேள் + தீயன் - வேடீயன்
தோன்றல் + நல்லன் - தோன்றனல்லன்
வேள் + நல்லன் - வேணல்லன்
தோன்றல் + நன்மை - தோன்றனன்மை
வேள் + நன்மை - வேணன்மை
கால் + கடிது - கால்கடிது
மரங்கள் + கடிய - மரங்கள் கடிய
வேல் + படை - வேற்படை
வாள் + படை - வாட்படை
கால் + குதித்தோடு - கால்குதித்தோடி
வாள் + போழ்ந்து - வாள்போழ்ந்து
- என வரும்.

இவற்றோடு, தோன்றறீமை, வேடீமை என வரும் வேற்றுமையும், காற்றுணை, தாட்டுணை எனக் கெடாமையும், விற்படை என்ற திரிபையும், கொல் களிறு, கொள் பொருள் என்ற இயல்பையும் கொள்க.

நூற்பா

குறில் செறியா லள அல்வழி வந்த
தகரந் திரிந்த பின் கேடும் ஈரிடத்தும்
வருநத் திரிந்த பின் மாய்வும் வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உள பிற

(நன். 299)

## லகர ளகர ஈற்றுத் தொழிற் பெயர்கள்

லகர ளகர ஈற்றுத் தொழிற்பெயர்கள் புணர்ச்சியில் உகரம் பெறுதலில் லை அல்வழியிலும் உறழாத இயல்பாக நிற்றலும் உண்டு.

| | |
|---|---|
| ஆடல் சிறந்தது | கோள் கடிது |
| ஆடற் சிறந்தது | கோட் கடிது |
| ஆடனன்று | கோணன்று |
| ஆடல் வலிது | கோள் வலிது |
| ஆடற் சிறப்பு | கோட்கடுமை |
| ஆடனன்மை | கோணன்மை |
| ஆடல் வலைமை | கோள் வனமை |

என உகரம் பெறாது முடிந்தன. நடத்தல் கடிது என உறழாது முடிந்தது.

ஆயினும் பின்னல் கடிது, பின்னற் கடிது என்று உறழ்ந்து முடிதலே பெரும்பான்மை என்று உணர்க.

நூற்பா

ல ள இறு தொழிற்பெயர் ஈரிடத்தும் உவ்வுறா
வலிவரின் அல்வழி இயல்பும் ஆவன உள

(நன். 230)

## வல் எனும் பெயர்

வல் என்பது சூதாடு கருவிப்பெயர். அது தொழிற் பெயரைப் போலவே யகரமல்லாத மெய்கள் வரும் போது இருவழியும் உகரம் பெற்று முடியும். பலகை, நாய் என்ற பெயர்கள் வரின் அகரச்சாரியையும் உகரச்சாரியையும் பெறும்.

| | |
|---|---|
| வல்லுக்கடிது | வல்லப்பலகை |
| வல்லுநன்று | வல்லநாய் |
| வல்லுவலிது | வல்லப்புலி |
| வல்லுக்கடுமை | வல்லக்குதிரை |
| வல்லுநன்மை | வல்லுப்பலகை |
| வல்லுவன்மை | வல்லுநாய் |
| | வல்லுப்புலி |
| | வல்லுக்குதிரை |

நூற்பா

வல்லே தொழிற் பெயரற்று இருவழியும்
பலகை நாய்வரினும் வேற்றுமைக்கு அவ்வுமாம்

(நன். 231)

## நெல் செல் கொல் சொல்

இந்நான்கு சொல்லும் வல்லினம் வரின் உறழ்ச்சி பெறாது அல்வழியிலும் திரிந்து முடியும்.

| | |
|---|---|
| நெற்கடிது, செற்கடிது | நெற்சிறிது, செற்பெரிது |
| சொற்கடிது, கொற்கடிது | கொற்சிறிது, கொற்றீது |

நூற்பா

நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்வழியானும் றகரமாகும்

(நன். 232)

## இல்

இன்மைப் பன்மை உணர்த்தும் இல் என்ற சொற்கு ஐகாரச் சாரியை பொருந்த ஆங்கு வரும் வல்லினம் விகற்பிக்கும். ஆகாரச்சாரியை பொருந்துமாயின் வரும் வல்லினம் மிகும். இவ்விருவிகுதியும் பெறாமல் இயல்பாகவும் வரும். இல்லைப்பொருள், இல்லை பொருள், இல்லாப் பொருள், இல்பொருள் ஞானம், வன்மை, அணி என வரும்.

நூற்பா

இல் என் இன்மைச் சொற்கு ஐ அடைய
வன்மை விகற்பமும் ஆகாரத்தோடு
வன்மையாகலும் இயல்பும் ஆகும்.

(நன். 233)

## புள், வள்

இவ்விரு சொற்களும் தொழிற்பெயரைப் போலவே யகரமல்லாத மெய்கள் வரின் உகரச்சாரியை பெற்றுப் புணரும். புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, புள்ளு நன்று, வள்ளுவலிது, புள்ளுக்கடுமை, வள்ளுநன்மை என வரும்.

நூற்பா

புள்ளும் வள்ளும் தொழிற் பெயர் மானும்

(நன். 234)

## வகர வீறு

## அவ், இவ், உவ்

இம் மூன்று சொற்களிலும் ஈற்று வகரம், வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வர முறையானே ஆய்தமாகும்; வரும் மெல்லினமாகும்; இயல்பாகும்.

| | |
|---|---|
| அவ்+கடிய-அஃகடிய | அஞ்+ஞானம்-அஞ்ஞானம் |
| இவ்+கடிய-இஃகடிய | இவ்+யாவை-இவ்யாவை |
| உவ்+கடிய-உஃகடிய | உவ்+யாவை-உவ்யாவை |

நூற்பா

சுட்டு வகரம் மூவினம் உறமுறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பும் ஆகும்

(நன். 235)

## தெவ்

தெவ் எனும் மொழி தொழிற்பெயரைப் போல, யகரமல்லாத வருமொழிவரின் உகரச்சாரியை பெற்றுப் புணரும். மகர வருமொழி வரின் உகரம் பெறுதலேயன்றி ஈற்று வகரம் மகரமாகத் திரியவும் பெறும்.

தெவ்+கடிது - தெவ்வுக்கடிது
தெவ்+மாண்டது - தெவ்வுமாண்டது
தெவ்+வந்தது-தெவ்வுவந்தது
தெவ்+மன்னர்-தெவ்வுமன்னர், தெம்மன்னர்
தெவ்+முனை - தெவ்வுமுனை, தெம்முனை என வரும்.

## வருமொழித் தகர நகரங்களின் திரிபு

1. நிலை மொழியீற்றில் ன, ல, ண, ள என்ற மெய்கள் அமைந்து வருமொழி முதலில் த, ந என்பன வரும்போது குறிப்பிட்ட சில திரிபுகள் இடம்பெறுகின்றன.

அவற்றை,

ன, ல + த - ற
ன, ல + ந - ன
ண, ள+ த - ட
ண, ள + ந - ண
என வகுக்கலாம்.

| | |
|---|---|
| பொன் + தீது - பொன்றீது | மண் + தீது - மண்டீது |
| கல் + தீது - கற்றீது | முள் + தீது - முட்டீது |
| பொன் + நன்று- பொன்னன்று | மண் + நன்று - மண்ணன்று |
| கல் + நன்று - கன்னன்று | முள் + நன்று - முண்ணன்று |

தீமை, நன்மை எனுஞ்சொற்களையும் இவ்வாறே ஒட்டி வேற்றுமையிலும் திரியுமாறு கொள்க.

**நூற்பா**

னலமுன் தனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் ஆயுங் காலே
(நன் 236)

## உருபுப் புணர்ச்சி, பொருட்புணர்ச்சி

முன்னே உருபுப் புணர்ச்சிகளுக்குச் சொன்ன முடிபுகள் அப் பொருட் புணர்ச்சிக் கண்ணும் ஒக்கும்.

| | | |
|---|---|---|
| எல்லாவற்றும் | - | உருபுப் புணர்ச்சி |
| எல்லாவற்றுக் கோடும் | - | பொருட் புணர்ச்சி |
| எல்லாநமதும் | - | உருபுப் புணர்ச்சி |
| எல்லாநங்கையும் | - | பொருட் புணர்ச்சி |
| எல்லீர் நுமதும் | - | உருபுப் புணர்ச்சி |
| எல்லீர் நுங்கையும் | - | பொருட் புணர்ச்சி |

உருபின் முடிபு அவை ஒக்கும் அப்பொருளினும்
(நன் 238)

இடைச்சொல், உரிச்சொல், வடசொல் ஆகியவற்றுள் புணர்ச்சி இலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டு வருவனவும் இலக்கணப் போலிகளும், மரூஉ மொழிகளும் இருவகை வழக்கிலும் முறைமையறிந்து பொருந்துமாறு புணர்த்துக.

| | | |
|---|---|---|
| வண்டின் கால் | - இடைச்சொல் | - திரியாது, இயல்பாயிற்று |
| மழ களிறு | - உரிச்சொல் | - மிக்கது இயல்பாயிற்று |
| தடந்தோள் | - உரிச்சொல் | - மெலி மிக்கது |
| அளிகுலம் | - வடசொல் | - மிகாது இயல்பாயிற்று. |

முன்றில், பொதியில், அருமந்தபிள்ளை, குணாது, தெனாது, வடாது, சோணாடு, மலாடு, ஆறை, ஆந்தை, வடுகந்தை என்ற மரூஉ மொழிகளும் ஏற்கும் செய்கை அறிந்து முடிக்கவும்.

## மொழியியற் செய்திகள் ஒப்பீடு

இனி மொழியியற் செய்திகள் சிலவற்றோடு நன்னூற் செய்தியை ஒப்பிட்டுக் காணலாம்.

வெடிப் பொலியை முதலாக உடைய சொற்களால் தொடரப்படும் பொழுது இரட்டித்த வெடிப் பொலி களைத் தோற்றுவிக்கின்றன. இங்கு அவற்றின் பொருளைப் பொறுத்தவரையில் சில கட்டுப்பாடுகள் உள்ளன. பல பொருள் தரும் ஒரு சொல்லைத் தவிர்க்கும் போக்கும் கிடைக்கக்கூடிய இருவடிவங்களை வேறுபடுத்தும் முயற்சியும் உள்ளன. இத்தகைய பொருள் கட்டுப்பாடுகள் பிற்காலத்தின் வளர்ச்சிகளாயிருக்கக்கூடும். சில சத்தி மாற்றங்களை இங்குக் குறித்துக் காட்டலாம்.

*1) (மெய்) உயிர் வ் + வெடிப்பொலி - (மெய்) உயிர் வெடிப்பொலி அவ+கடிய → அக்கடிய*
*அ) (மெய்) உயிர் ல் + த் → (மெய்) உயிர் ற்ற் கல் + தீது →*
*ஆ) (மெய்) உயிர் ள் + த் → உயிர் ட்ட்*

முள் + தீது - முட்டீது
(அல்லது)
(அ) + (ஆ) என்பனவற்றை இணைத்து (மெய்) உயிர் ல் ள் + த் (மெய்) உயிர் ற் ற் ட்ட என விளக்கலாம்.

முதல் வகையைப் பொறுத்த மட்டில் ஆறு வெடிப்பொலிகளும் இரட்டிக்கப் பெறுகின்றன.

*(தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், தமிழ்மொழி வரலாறு, பக். 94.)*

*2) கல் + தீது = கஃறீது = ஓரளவு ஓரினமாதல்; முட்டீது = முழுமையும் ஓரினமாதல்.*

*3) இக்காலப் பேச்சு வழக்கில், ற எனும் வேறுபாடு ஒலி வேறுபாடாய் ஒலிக்கப்படுவதில்லை என்பதைக் காட்டி ற கரம் தனித்த ஓர் ஒலியன் அன்று என்றும் னல → றண, ள → ட என்றாவதோடும் ழ + த → ட என்றாவதையும் சுட்டுகிறார் டாக்டர் எஸ். சுப்ரமணியன்*

(Phonology. A criticial study of Tolkappiam and Nannool, page 30).

*4) தென்பு → தெம்பு*
*ஒன்பது → ஒம்பது*
*தெவ்-மன்னர் → தெம்மன்னர்*

என ண ன வ என்ற மூன்றுமே மகரமாவதைக் காட்டி மகரம் தனித்த ஒலியன் என்பதைக் காட்டுகிறார் டாக்டர் எஸ். சுப்ரமணியன்.

(Phonology A critical study of tolkappiam and Nannool, page 32 )

### வெவ் என்னும் வேர்

வெவ். . . கா → வெஃகா என்பதில் வெவ் என்பது வேர். இதனுடைய மாற்று வடிவம் வெம் என்பதாகும். வெஃகா என்பது விரும்பத்தகு சோலை எனப் பொருள்படும். காஞ்சிபுரத்தில் அப்பெயரில் ஒருதலம் உண்டு.

### பவ் என்னும் வேர்

பஃது என்பதில் *பவ்* என்பது வேராகும். *பவ்* என்பதன் பொருள் *பரவுதல்* என்பதாகும். பவ்வம் என்ற சொல் இதற்குச் சான்றாகும். *பா* அல்லது *பாவு* என்ற சொற்களோடு இது தொடர்புடையது. *பத்து* என்ற எண்ணுப் பெயரின் மாற்று வடிவம் பஃது என்பதாகும்.

### பல் என்னும் வேர்

பஃறி என்னும் சொல்லின் வேர் பல் என்பதாகும். பல்+தி-பஃறி. தி என்பது சொல்லாக்க அசையாகும்.

(தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 97)

6) பதினோராம் நூற்றாண்டு இலக்கணமான வீரசோழியம் ளகர மெய் முடிவிற்குரிய சந்தி விதிகளை ழகர மெய் முடிவிற்கும் விரிவுபடுத்துகிறது.

வாள். . நாள் → வாணாள்
வாழ். . நாள் → வாணாள்

ழகர மெய்யும் ளகர மெய்யும் ணகர மெய்யாக ஒன்றாதலைச் சில இலக்கண ஆசிரியர்கள் ஒப்புக் கொண்டனர் என்பதை இது காட்டுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்த பவணந்தியார் பழைய சந்தி விதியின் ஆட்சி விரிவானது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.
தெ. பொ. மீ. தமிழ்மொழி வரலாறு, பக். 188

7) ழகரம் ளகரமாகத் திரிதலைப் பதினோராம் நூற்றாண்டுக்குரிய வீரசோழிய இலக்கண ஆசிரியர் உணர்ந்து உடன்படுகிறார். அவர்தம் நூலில் ளகரத்துக்கு உரிய விதிகளையெல்லாம் ழகரத்துக்கும் வகுக்கிறார். அவர் விதிப்படி ழ்+த்=ட் → ட்ட எனவும் ல்+ந் → ண எனவும் திரிபுகள் அமையும் அவ்விதிகளுக்கு ஏற்ற வழக்குகுளும் பிறவும் அக்கால இலக்கியத்திலும் கல்வெட்டுகளிலும் கிடைக்கின்றன.

திகழ் + தசக்கரம் = திகடசக்கரம் (கந்தபுராணம், காப்பு)
வாழ்+நாட்கள் = வாணாட்கள் (சிலம்பு 28-125)
குழிழ் + சிரிப்பு = குமிண் சிரிப்பு (தேவாரராம்)
புகழ்+படர=புகட்படர
கீழ்+நோக்கிய=கிணோக்கிய
சோழ+நாடு=சோணாடு (இவை கல்வெட்டுக்களில்)

- டாக்டர் முருகரத்தினம், தமிழ் எழுத்தியல் இன்றும், அன்றும் (பக். 228)

## மெய்யொலிகள் பற்றிய சிறப்புச் செய்திகள்

தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும் என்ற தமது நூலில் டாக்டர் முருகரத்தினம் அவர்கள், மொழி, வரலாறு, இலக்கணம், பேச்சுமொழி ஆகியவற்றின் அடிப்படையில் மெய்யெழுத்துக்களை ஆராய்ந்து கீழ்க்காணும் முடிவுகளைத் தெரிவிக்கிறார். (பக். 50, 229)

### மெய்வருகை

### ககரம்

1) மொழி முதலிலும இரட்டுகிற போதும் வலிப்பின்னும்
2) மெலிப்பின்னும் 3) உயிரிடையும் இடைப்பின்னும்

கிளி, வாழ்க்கை, துய்க்கும், வேட்கை, இயற்கை, நங்கை, கண்கள், மீன்கள், வாழ்க, வெல்க, பொய்கை.

சகரம்

1) மொழி முதலிலும் உயிரிடையும் இடைப்பின்னும்
2) இரட்டுகிற போதும் வலிப்பின்னும்
3) மெலிப்பின்

சிரிப்பு, இசை, வல்சி, பச்சை, தேர்ச்சி, பாய்ச்சி, தாழ்ச்சி, கட்சி, முயற்சி, வஞ்சி, கொஞ்சும், புன்சிரிப்பு.

டகரம்

1) மொழியிடை இரட்டை
2) வலிமுன்
3) உயிரிடை
4) மெலிப்பின்

திட்டம், இட்டனர், வெட்கம், திட்பம், கண்டம், விண்டது, மடம், கெடுக.

தகரம்

1) மொழி முதலிலும் இரட்டுகிற போதும்
2) மெலிப்பின்
உயிரிடையும் இடைப்பின்னும்
பத்துப்பேர், மொய்த்தனர், சேர்த்தனர், வீழ்தல், விழைதல், தந்தை, குடந்தை, சேர்ந்தார்.

பகரம்

1) மொழி முதலிலும் இரட்டுகிற போதும் வலிப்பின்னும்
2) வலிமுன்
3) மெலிப்பின்
4) உயிரிடை

குறுந்தொகை, பயிற்சி, கற்கிறான், கற்பாளி, சென்றான் இன்றைய பேச்சுத் தமிழில் றகரமும் ஒன்றே

ஙகரம்

இன வலிமுன். . . ங்க்
குரங்கு, இறங்கும்

ஞகரம்

பழைய தமிழில் ஞகரம் மொழியீறாய் வழங்கப்பட்டிருக்கிறது. இப்போதைய ஞ கரச் சூழல்கள்.

1) மொழி முதலிலும் உயிரிடையும் இரட்டுகிறபோதும்
2) சகரத்தின் முன்
ஞாயிறு, அறிஞர், மஞ்ஞை, கொஞ்சம்

ணகரம்

1) வலி முன்னும் மெலி முன்னும் மொழியிறுதியும் இரட்டுகிற போதும்
2) உயிரிடை
பெண்கள், மணம், பூண்டு, பண்பு, திண்மை, தண்ணீர்

### நகரம்

1) தகரத்தின் முன்னும் ய ர ழ பின்னும்
2) மொழி முதலில்
நல்லவர், தந்தை, சேர்ந்தார், உய்ந்தார், சூழ்ந்தார்

### மகரம்

1) மொழிமுதல் 2) உயிரிடை
3) மொழியிறுதி 4) மொழியிடை இரட்டை
5) பம்முன் 6) ண, னப்பின்
7) ய ர ழப்பின்

மரம், இம்மை, மறுமை, பொய்மை, தாழ்மை, மேன்மை, தன்மை, கூர்மை, அம்பு.

### னகரம்

இன்றைய பேச்சு வழக்கில் ந, ன என்ற இரண்டுக்கும் வேறுபாடில்லை.

1)உயிரிடை 2) மொழியிறுதி 3) மொழியிடை இரட்டை 4) வலிமுன் 5)மெய்ம்முன்
இனி, அவன், இன்னும், என்பான், என்கிறான், தன்மை, இன்று, அன்னம்.

### யகரம்

1) மொழிமுதல் 2) மொழியிறுதி 3) உயிரிடை 4) இரட்டை 5) மெய்ம்முன் 6) மெலியிடைப்பின்
யார், பயன், ஆராய்ச்சி, ஆய்கிறான் தாய், பொய்யாமை, ஆய்வு, ஆய்பவன்

### ரகரம்

1) உயிரிடை 2) மொழியிறுதி 3) வலிமுன் 4) மெலிமுன் 5) இடைமுன்
மரம், ஊர், ஈர்க்கு, கூர்மை, சேர்க, சார்பு, போர்வை, தீர்ப்பு, தேர்ச்சி, சேர்ந்தான், தேர்தல்.

### ழகரம்

1) உயிரிடை 2) மொழியிறுதி 3) மெய்ம்முன்
எழில், தமிழ், வாழ்க்கை, தாழ்ச்சி, தாழ்வு, கீழ்மை.

### லகரம்

1) உயிரிடை 2) மொழியிடை இரட்டை 3) மொழியிறுதி 4) மெய்ம்முன்
தோல், தொல்லை, தொலை, கல்வி, செல்கை, சால்பு

### ளகரம்

1) உயிரிடை 2) மொழியிறுதி 3) மொழியிடை இரட்டை 4) மெய்ம்முன்
புளி, புள்ளி, கொள்கை, கேள்வி, கொள்பவன், கேள்

### வகரம்

1) மொழிமுதல் 2) மொழியிடை 3) மொழியிரட்டை 4) இடைப்பின்
வவ்வால், தவிப்பு, கல்வி, வாழ்வு

வல்லெழுத்து ஒவ்வொன்றும் ( க ச ட த ப ) மும்மூன்று எடுத்தொலிகள் பெற்றுள்ளன.

கடல், பக்கம் - K
சங்கம் - G
அகம், வெல்க - H
சேரன் - C
ஊஞ்சல் - J
பசலை - S

(இது போலவே பட்டம், படம், பண்டம் என டகரமும், வித்து, உதவி, பத்து எனத் தகரமும், அப்பம், தபு அன்பு எனப் பகரமும் வருவது காண்க).

**சகரம் தோன்றல்**

பண்டைத் தமிழில் கெட்டு வந்துள்ளது
சிப்பி - இப்பி, சிறகு - இறகு
சுருள் - உருள், சிமிழ் - இமிழ்
இன்றைய தமிழில் சகரம் தோன்றுகிறது.
வரி - வரிசை, குடி - குடிசை
கடை - கடைசி, அரி - அரிசி.

**பகரம் வகரமாகத் திரிதல்**

மார்பு - மார்வு, அளபு - அளவு
முடிபு - முடிவு
இது தமிழில் மட்டுமன்றித் திராவிட மொழிகள் அனைத்திலுமே நிகழ்கிறது.

**றகரம் திரிதல்**

றகரம் டகரமாகத் திரிகிறது.
முயிறு - முகடு, அயறு - அசடு
ரகரமும் றகரமும் ஒலிமாறுதல்
மேற்கு - மேர்க்கு
நீர் வார்த்து - நீற் வாற்த்து, பட்டர் - பட்டற்

**றகரம் தகரமாதல்**

திருவையாற்று - திருவையாத்து
திருச்சிற்றம்பல - திருச்சித்தம்பல

**றகரம் னகரமாதல்: ணகரமாதல்**

கொன்ற - கொன்ன, கொண்ண
மூன்றும் - மூணும்
குன்று - குண்ணு

**ஙகரம்**

இன்றைய பேச்சு வழக்கில் ஙகரம் மொழி முதலாகிறது.
ஙொம்மா, ஙொப்பன், ஙொண்ணன், ஙம்மா, ஙப்பா, ஙப்பன், ஙண்ணன்
உங்கள்+அம்மா, எங்கள்+அம்மா எனப் பொருள்படுகின்றன.

### ஞகரம்

இன்றைய வழக்கில் ஞகரம் னகரமாக ஒலிக்கிறது.

ஞாயிறு - னாயிறு

ஞண்டு - னண்டு

அறிஞர் - அறினர்

கலைஞர் - கலைனர்

சிலர் அறிஞ்சர், கலைஞ்சர் என்று ஒலிக்கின்றனர்.

அன்னை - அஞ்ஞை-அம்மை

பூனை - பூஞை - பூசை

யாளி - ஞாளி - நாளி

ஆகியவற்றைக் காணும்போது,

1. யகரம் ஞகரமாகத் திரிந்திருக்கலாம்
   யாளி - ஞாளி
2. நகரம் - ஞகரமாகத் திரிந்திருக்கலாம் நாடு - ஞாடு
   அறிநர் - அறிஞர்
   செய்கின்ற - செய்ஞ்ஞின்ற

- எனத் திரிகிறது.

### மொழி முதல் வகரம் மகரமாதல்

விழி - முழி, விழுங்கு - முழுங்கு

விசை - மிசை

நகரமும் மகரமாவதுண்டு

நுடம் - முடம், நுடங்கு - முடங்கு

நுனை - முனை

மகரமும் வகரமாவதுண்டு

மழி - வழி

### யகரம்

1. கெடுகிறது
   யாறு - ஆறு, யாடு - ஆடு, யாண்டு - ஆண்டு
2. சகரமாகத் திரிகிறது
   முயல் - முசல், அயல் - அசல்
3. மொழியிறுதியில் பெறுகிறது
   பொய் - பொய்யி, நாய்-நாயி.
4. ஞகரமாகத் திரிகிறது
   யாளி - ஞாளி, யமன் - ஞமன்

### ரகரம்

இன்றைய பேச்சுத் தமிழில் ரகரம் மொழி முதலாகிறது.

ரெண்டு, ரொக்கம், ரொம்ப, ராவு

### லகரம்

இன்றைய பேச்சில் லகரம் மொழி முதலாகிறது

லாத்தினான், லாவாந்தா, லாக்காக.

### ழகரம்

1. ழகரம் கெடுகிறது
   வாழ்வரசி, வாவரசி
2. ழகரம் ணகரமாகிறது, டகரமாகிறது
   வாணாள், புகட்படா
3. ழகரம் ரகரமாகிறது
   இழு, ஈர்

ழகரத்தை மூலத்திராவிடத்துக்குரிய ஓர் எழுத்தாகக் கொள்ள வேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1. புணர்ச்சியில் மெய்யெழுத்துக்கள் அடையும் திரிபுகளை எடுத்துக்காட்டி மொழியியலார் காட்டும் விளக்கங்களையும் தருக.

2. ண ன ல ள ஆகிய ஈறுகளின் புணர்ச்சி விதிகளைக் காட்டுக.

3. மெய்யீறுகளில் இயல்பாய்ப் புணரும் புணர்ச்சிகளைக் காட்டுக.

4. சாதி, குழு, கிளை, தொழில் ஆகிய பெயர்களின் புணர்ச்சி விதிகளைச் சான்றுடன் விளக்குக.

# 5. உருபுப்புணரியல்

பவணந்தியார் 1. பதப்புணர்ச்சி 2. விகுதிப்புணர்ச்சி 3. சாரியைப் புணர்ச்சி 4. உருபுப் புணர்ச்சி என்று புணர்ச்சிகளை நான்கு வகையாகப் பிரிப்பார். பதப்புணர்ச்சியைப் பற்றி நிலைமொழி, வருமொழி, வேற்றுமை, அல்வழி, இயல்பு, விகாரம் என்ற முறைகளில் உயிரீற்றுப் புணரியலில் விளக்கமாகத் தெரிவித்தார். விகுதிகள் பற்றிப் பதவியலில் ஓரளவு கூறப்பட்டது. இவ்வியலில் உருபுப்புணர்ச்சியைப் பற்றிக் கூறுகின்றார் நன்னூலார். சாரியைப் புணர்ச்சி என்பது சாரியைகள் வந்து புணர்வது. சாரியைகள் இன்னின்ன என்ற செய்தி இவ்வியலில் கூறப்பட்டாலும் சாரியைப் புணர்ச்சியென்பது உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி முதலிய பலவகைப் புணர்ச்சிகளுக்கும் பொதுவாதலின் சாரியைப் புணர்ச்சி ஆங்காங்கே கூறப்படுகின்றது.

உருபுகளாவன வேற்றுமை உருபுகள், அவ்வேற்றுமை உருபுகள், நிலை மொழி வருமொழிகளோடு புணரும் விதிமுறைகள் இவ்வியலில் சொல்லப்படுகின்றன. வேற்றுமையைக் குறித்து,

*பெயரே ஐ ஆல் கு இன் அது கண்*
*விளி என்றாகும் அவற்றின் பெயர் முறை* (நன். 292)

என்று பெயரியலில் கூறுவர் நன்னூலார்.

உருபுகளின் புணர்ச்சி குறித்துக் கூறுமுன் நன்னூலார், எட்டு வேற்றுமையும் சாரும் இடவகையால் நாற்பதாகும் என்று வகுத்துக் காட்டுகிறார்.

பெயர்கள் வேற்றுமை ஏற்கும். வினைகள் வேற்றுமை ஏலா. பெயர்களை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்று ஐந்தாகப் பிரிப்பர். இவ்வைந்து வகைப் பெயரோடும் எட்டுவகை வேற்றுமைகளை உறழ நாற்பது உருபுகளாம்.

| | | |
|---|---|---|
| நம்பி | - | பெயர் வேற்றுமை (எழுவாய் வடிவம்) |
| நம்பியை | - | இரண்டாம் வேற்றுமை |
| நம்பியால் | - | மூன்றாம் வேற்றுமை |
| நம்பிக்கு | - | நான்காம் வேற்றுமை |
| நம்பியின் | - | ஐந்தாம் வேற்றுமை |
| நம்பியது | - | ஆறாம் வேற்றுமை |
| நம்பிகண் | - | ஏழாம் வேற்றுமை |
| நம்பீ! | - | எட்டாம் வேற்றுமை (விளி) |

இதுபோலப் பிறபால்களோடு ஒட்டிக் காண்க.

**நூற்பா**

*ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என*
*வரு பெயர் ஐந்தொடு பெயர் முதல் இருநான்கு*
*உருபும் உறழ்தர நாள்பதாம் உருபே*

(நன். 240)

ஆங்கிலத்தில் to him, by him என்னும் முறையில் உருபுகள் பெயருக்கு முன்னே முன்னிணைப்பாக வரும். தமிழில் வேற்றுமை உருபுகள் பெயருக்குப் பின்னே அவனுக்கு, அவனால், அவனொடு என்று பின்னிணைப்பாக வரும். அவ்வாறு வேற்றுமை உருபுகள் இடம்பெறும்போது பொருள் வேறுபடுத்தப்படும்.

*பொருள் வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை*

(நன். 241)

## உருபுப் புணர்ச்சியில் ஏற்படும் திரிபுகள்

உயிரையும் மெய்யையும் முதலும் ஈறுமாகக் கொண்ட உருபுகள் புணர்ச்சியின்பொழுது, உயிரையும் மெய்யையும் முதலும் ஈறுமாகக் கொண்ட பெயர்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் எவ்வாறு புணருமோ அவ்வாறு புணரும்.

நம்பி + கண் = நம்பிகண். இது *ஆவியரமுன் வன்மை மிகா என்றபடி* புணர்ந்தது.

உரி + கண் + தயிர் = உரிக்கட்டயிர். இது *இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்* என்றபடியும், *ணன வல்லினம் வர டறவும்* என்றபடியும் புணர்ந்தது.

பழி + கு + அஞ்சி = பழிக்கஞ்சி. இது *இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்* என்றபடியும், *முற்றும் அற்று ஒரோ வழி* என்றபடியும் புணர்ந்தது.

வினைச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சிக்கு வாரா என்பதால், உருபுப் புணர்ச்சி பெயர்ப் புணர்ச்சியை ஒக்கும் என்று கூறினார், இவை வேற்றுமை உருபுகளின் புணர்ச்சி ஆதலாலும், இவை அவ்வழிப் புணர்ச்சியை ஒவ்வா என்பதாலும் உருபுப் புணர்ச்சிகள் பெயர், வேற்றுமைப் புணர்ச்சிகளை ஒக்கும் என்று கூறினார்.

**நூற்பா**

ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியின்
ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே

(நன். 242)

## சாரியை இன்னதென்பது

ஒரு பதத்தின் முன் மற்றொரு பதமோ, விகுதியோ, வேற்றுமை உருபோ வந்து புணரும்போது சாரியை ஒன்றோ, பலவோ வருதலும் செய்யும். வராதிருத்தலும் செய்யும்.

| | | |
|---|---|---|
| நடந்தான் | - | விகுதிப் புணர்ச்சி; சாரியை பெறவில்லை |
| நடந்தனன் | - | விகுதிப் புணர்ச்சி; சாரியை பெற்றது |
| புளிக்கறி | - | பதப் புணர்ச்சி; சாரியை பெறவில்லை |
| புளியங்காய் | - | பதப் புணர்ச்சி; சாரியை பெற்றது |
| தேனை | - | உருபுப் புணர்ச்சி; சாரியை பெறவில்லை |
| மரத்தை | - | உருபுப் புணர்ச்சி; சாரியை பெற்றது |

**நூற்பா**

பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமும் ஆகும்

(நன். 243)

## சாரியைகள் இவை என்பது

இங்குச் சாரியைகள் இத்துணை என்று வகைப்படுத்திக் கூறப்படுகின்றன. சாரியைகளாவன: அன், ஆன் இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன என்பனவும் இவை போல்வன பிறவுமாம். இவையெல்லாம் பொதுச்சாரியை எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அன் | - | ஒன்றன் கூட்டம் | தம் | - | எல்லார் தம்மையும் |
| ஆன் | - | ஒரு பாற்கு | நம் | - | எல்லா நம்மையும் |
| இன் | - | வண்டின் கால் | நும் | - | எல்லீர் நும்மையும் |
| அவ் | - | தொடையல் | ஏ | - | கலனே தூணி |
| அற்று | - | பலவற்றை | அ | - | நடந்தது |
| இற்று | - | பதிற்றுப்பத்து | ஐ | - | ஏற்றை |
| அத்து | - | மரத்தை | உ | - | சாத்தனுக்கு |
| அம் | - | மன்றம் | கு | - | உய்குவை |

இன்னபிற என்றதனால்,

| | | |
|---|---|---|
| தன் | - | அவன்றனை |
| தான் | - | அவன்றான் |

| | | |
|---|---|---|
| நாம் | - | அவர்தாம |
| ஆம் | - | புற்றாஞ்சோறு |
| ஆ | - | இல்லாப் பொருள் (பண்புத்தொகை) |

என்ற சாரியைகளையும் கொள்க.

**நூற்பா**

**அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து அம்**
**தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன**
**இன்ன பிறவும் பொதுச் சாரியையே**

(நன். 244)

## உருபுப் புணர்ச்சியில் சில சிறப்பு விதிகள்

### எல்லாம்

எல்லாம் என்பது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான பெயர்.

எல்லாம் என்பது அஃறிணையைக் குறிக்குமாயின் உருபுப் புணர்ச்சிகள் அற்றுச் சாரியையும், முற்றும்மையும் பெறும்.

எல்லாம் + அற்று + உருபு (ஐ) + உம் என்று வரும்.

எல்லாம் என்பது உயர்திணையைக் குறிக்குமாயின் உருபு புணர்ச்சியுள் நம்முச்சாரியையும் முற்றும்மையும் பெறும்.

எல்லாம் + நம் + உருபு (ஐ) + உம்

| அஃறிணை | உயர்திணை |
|---|---|
| எல்லாவற்றையும் | எல்லா நம்மையும் |
| எல்லாவற்றுக்கும் | எல்லா நமக்கும் |
| எல்லாவற்றாலும் | எல்லா நம்மாலும் |

**நூற்பா**

**எல்லாம் என்பது இழிதிணை யாயின்**
**அற்றோடு உருபின் மேல் உம்உறுமே**
**அன்றேல் நம் இடையடைந் தற்றாகும்** (நன். 245)

எல்லாம் என்பது இழிதிணையாய் இன் அற்றோடு உருபின் மேல் *உம் உறுமே* என்று இரட்டுற மொழிதலாய்க் கொண்டு எல்லாவற்றினையும் என்று வருதலையும் கொள்க. எல்லாம் என்பது அற்றுச் சாரியையும், இன் சாரியையும் பெற்றது.

### எல்லார், எல்லீர்

எல்லாரும் என்பது உணர்திணைப் பெயர், எல்லீரும் என்பது முன்னிலை குறித்த பொதுப்பெயர். இவ்விரண்டு பெயர்களுடன் உருபுகள் புணரும்போது ஈற்றில் நிற்கும் முற்றும்மைகளைத் தள்ளி *எல்லார்* என்பதற்குத் தம், நும் சாரியையும் இணைக்க வேண்டும். அவற்றின் பின்னர் உருபுகளைச் சேர்த்து இறுதியில் முற்றும்மைகளை இணைத்தல் வேண்டும்.

எல்லார் + தம் + ஐ + உம் = எல்லார் தம்மையும்
எல்லீர் + நும் + ஐ + உம் = எல்லீர் நும்மையும்

நூற்பா

எல்லாரும் எல்லீரும் என்பவற் றும்மை,
தள்ளி நிரலே தம்நும் சாரப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே

(நன். 246)

## நான், தாம், நாம், யான், யாம், நீ, நீர்

இவ்வேழு பெயர்களும் இரு திணைகட்கும் பொதுவாகிய பெயர்கள். இவற்றோடு உருபுகள் புணருமிடத்து தான், தாம், நாம் என்பன மூன்றும், தன், தம், நம், என்று முதல் குறுகும். யான், யாம் என்பன என், எம் என்று நிற்கும். நீ, நீர் என்பன நின், நும் என்றாகும்.

| | |
|---|---|
| நாம் + ஐ = தம்மை | யான் + ஐ = என்னை |
| தான் + ஆல் = தன்னால் | யாம் + ஆல் = எம்மால் |
| நாம் + இன் = நம்மின் | நீ + இன் = நின்னின் |
| | நீர் + ஐ = நும்மை |

நும்மின், தன்னால், எம்மை முதலிய புணர்ச்சிகளில் ஒற்று இரட்டித்தது. நான்காம் வேற்றுமை உருபாகிய கு என்பதற்குப் புணர்ச்சியில் *அகரச் சாரியை* வரும். இவ் அகரச் சாரியை வரினும், ஆறாம் வேற்றுமை உருபாகிய *அது* உருபு வரினும், தனிக்குறிலை அடுத்து வரும் ஒற்றுகள் இராட்டா.

எனப் புணருமே தவிர, தம்மக்கு, நும்மக்கு, என்னது, நின்னது என்று இரட்டித்துப் புணரா.

நூற்பா

தான், தாம், நாம் முதல் குறுகும் யான் யாம்
நீ நீர் என் எம் நின் நும் ஆம் பிற
குவ்வின் அவ்வரும் நான்கு ஆறு இரட்டல்

(நன். 247)

## ஆ, மா, கோ

ஆ, மா, கோ என்ற பெயர்களுடன் உருபுகள் புணருமிடத்து னகரச் சாரியை வரும்.

ஆ + ஐ = ஆ + ன் + ஐ = ஆனை
மா + ஐ = மா + ன் + ஐ = மானை
கோ + ஐ = கோ + ன் + ஐ = கோனை

நூற்பா

ஆ மா கோ னவ்வணையவும் பெறுமே

(நன். 248)

அணையவும் பெறுமே என்றதால் ஆவை, கோவை, மாவை, என்று னகரம் பெறாமல் வருதலுமுண்டு. ஆனுக்கு, மானுக்கு, கோனுக்கு, ஆவுக்கு, மாவுக்கு, கோவுக்கு, ஆவினுக்கு, மாவினுக்கு, கோவினுக்கு என்று குவ்வுருபுக்கு இன்னும் உகரமும் பெறுதல் காண்க.

## ஒருபது, இருபது, முப்பது முன் உருபுகள்

ஒன்று முதல் எட்டு வரையுள்ள எண்களோடு புணர்ந்த பத்து என்ற எண்களின் முன்னர் உருபுகள் புணர்ந்தால் இடையே ஆன் சாரியை வரும். இப்புணர்ச்சியில் *பத்து* என்பதன் பகரமெய் தவிர்த்து எஞ்சிய எல்லாம் கெடும்.

ஒரு பானை, ஒருபதை, ஒருபஃதை என வரும்.

இரு பானை, இருபதை, இருஃபதை என வரும்.

ஒன்பது என்பதோடு உருபு புணரும் போதும் இவ்வாறே வரும்.

ஒன்பதை, ஒன்பஃதை, ஒன்பானை என வரும்.

**நூற்பா**

**ஒன்று முதல் எட்டு ஈறாம் எண்ணூர்**
**பத்தின் முன் ஆன்வரின் பவ்வொற்று ஒழிய மேல்**
**எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே.**

## அவ், இவ், உவ்

இவை வவ்விறு சுட்டுக்கள். இவற்றோடு உருபுகள் புணருமிடத்து அற்றுச் சாரியை வந்து பொருந்தும்.

அவ் + ஐ = அவற்றை
இவ் + ஐ = இவற்றை
உவ் + ஐ = உவற்றை

**நூற்பா**

**வவ்விரு சுட்டிற்கு அற்று உறல் வழியே**

*(நன். 250)*

## அஃது, இஃது, உஃது

இம்மூன்று சுட்டுப்பெயர்களோடும் உருபுகள் புணருமிடத்து இடையே அன் சாரியை வருதலுண்டு. அப்போது அஃது, இஃது, உஃது என்பவற்றின் ஆய்தம் கெடும்.

| | | | |
|---|---|---|---|
| அஃது + ஐ | - | அஃதை | |
| இஃது + ஐ | - | இஃதை | அன் சாரியை பெற்றுப் புணர்ந்தது. |
| உஃது + ஐ | - | உஃதை | |
| அஃது + அன் + ஐ | - | அதனை | |
| இஃது + அன் + ஐ | - | இதனை | அன் சாரியை பெற்றுப் புணர்ந்தது. |
| உஃது + அன் + ஐ | - | உதனை | |

ஆய்தம் கெட்டு நிற்கும். அது, இது, உது என்பனவும் இவ்வாறே புணரும். அதை அதனை, இதை, இதனை, உதை, உதனை என்று வரும்.

**நூற்பா**

**சுட்டின் முன் ஆய்தம் அன் வரின் கெடுமே**

*(நன். 251)*

## அத்துச்சாரியை

அகர ஈற்றுச் சொல்முன் வரும் அத்துச்சாரியை இடையில் உடம்படுமெய் பெற்றுப் புணராது. மாறாக அத்துச்சாரியையின் அகரம் கெட்டுப் புணரும்.

மக + அத்து + கை - மகத்துக்கை
மர + அத்து + குறை - மரத்துக்குறை

நூற்பா

*அகத்தின் அகரம் அகரமுனை இல்லை*

(நன். 252)

## சாரியைக்குப் புறனடை

சாரியைகளைத் தனித்தனியே சொல்லப்புகின் அவை வரையறைக்கு உட்படா. ஆதலின் விகுதிப் புணர்ச்சியையும் பதப் புணர்ச்சியையும் உருபுப் புணர்ச்சியையும் கண்டு பகுத்து நோக்கி இடையே நின்ற சாரியைகளை இவை எழுத்துச் சாரியை, இவை பதச் சாரியை, இவை சாரியையின்றி வந்தன என்று அடையாளம் கண்டு கொள்க.

*ஆன நெய் தெளித்து* - இங்கு னகரச் சாரியையோடு அகரச் சாரியையும் உடன் வந்தது.

பாட்டின் பொருள் - இங்கு *இன்* சாரியை வந்தது

மரத்திரை - இங்கு அத்து சாரியை வந்தது

நூற்பா

*இதற்கு இது சாரியை எனின் அளவு இன்மையின்*
*விகுதியும் பதமும் உருபும் பகுத்திடை*
*நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்*
*ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே*

## நான்கு புணர்ச்சிக்கும் புறனடை

விகுதிப் புணர்ச்சி, பதப் புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி என்ற இந்நான்கு புணர்ச்சிகளுக்கும் விதிகள் பொதுவாகவே கூறப்பட்டன. எனினும் இவ்விதி இப்புணர்ச்சிக்குப் பொருந்தும். இவ்விதி இப் புணர்ச்சிக்குப் பொருந்தாது என்று உய்த்துணர்ந்து கொள்க.

## விகுதிப் புணர்ச்சி

*று* என்ற விகுதி இறப்பும், எதிர்வும் காட்டும் என்றார். இன் விகுதி தான் வருமிடத்தெல்லாம் இரு காலமும் உணர்த்தும் என்று பொருளில்லை. *சேறு* எதிர்காலம் காட்டிற்று. *சென்று* இறந்தகாலம் காட்டிற்று.

## பதப்புணர்ச்சி

இ, ஐ ஈறுகளின் முன் அவ்வழியில் வல்லினம் இயல்பாலாம், மிகலாம், விகற்பமாகலாம் என்றார். அதைக் கருதி, ஆடித் திங்கள், பருத்திக்குறிது என்று முடிவு கொள்ளற்க. ஆடித் திங்கள், பருத்தி குறிது என்றே வரும்.

## சாரியைப் புணர்ச்சி

*சாரியை வருதலும் பெறும் : தவிர்தலும் பெறும்* என்றார். அதைக் கருதி நாட்டினின் நீங்கினான். நாட்டுக் கண் இருந்தான் என்று கொள்ளற்க: நாட்டின் நீங்கினான், நாட்டின் கண் இருந்தான் என்றே வரும்.

## உருபுப் புணர்ச்சி

உருபுப் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியைப் போன்றதே என்றார். அதைக் கருதி நம்பிக்கு, நம்பிக் கண் என்று கூட்டற்க. நம்பி கண் என்றே வரும்.

நூற்பா

*விகுதி பதஞ்சரியை உருபு அனைத்திலும்*
*உரைத்த விதியின் ஓர்த்து ஒப்பவை கொளவே*

(நன். 254)

## வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி பிற வேற்றுமைப் புணர்ச்சிகளிலிருந்து வேறுபட்டது. அது பிற வேற்றுமைப் புணர்ச்சிகளுக்கு விதித்த விதியோடு ஒத்துமுடிதல் சில சமயம் நிகழும். இயல்பு என்று விதிக்கப்பட்ட இடத்தில் விகாரமாகும். விகாரம் என்று விதிக்கப்பட்ட இடத்தில் இயல்பாகும். உயர்திணையிலும் விரவுத் திணையிலும் விரிந்தும், தொக்கும் வரும். இன்னும் பிற வேறுபாடாகவும் வரும்.

| | | |
|---|---|---|
| நிற்புறங்காப்ப | : | இயல்பாக வரவேண்டியது விகாரமாயிற்று. |
| மண் கொணர்ந்தான் | : | விகாரமாக வேண்டியது இயல்பாயிற்று. |
| நம்பியைக் கொணர்ந்தான் | : | உயர் திணையில் உருபு விரிந்தது |
| நான் முதற்றொழுது | : | உயர் திணையில் உருபு தொக்கது |
| கொற்றனைக்கொணர்ந்தான் | : | விரவுத் திணையில் உருபு விரிந்தது |
| ஆண் பெற்றான் | : | விரிவுத் திணையில் உருபு தொக்கது |

வரகு கட்டினான், பலாக் குறைத்தான், விளக்குறைந்தான் என்று பொதுவிதிகளோடு ஒத்து முடிதலும் கொள்க.

வேற்றுமைப் புணர்ச்சியில் மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி குறித்த ஒரு சிறப்புச் செய்தி உண்டு. மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள் நம்மாலாகிய தொழிற்சொல் வரும்போது வல்லினம் விகற்பமாகவும், இயல்பாகவும் வரப்பெறும்.

பேய் கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான்.
சூர் கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான்.
புலி கோட்பட்டான், புலிக்கோட்பட்டான்.

என விகற்பமாய் வந்தன.

பேய் பிடிக்கப்பட்டான், புலி கடிக்கப்பட்டான் என இயல்பாய் வந்தன.

இவ்வாறேயன்றிச் சுறாப்பாயப்பட்டான். அராத்தீண்டப்பட்டான் எனப் பொதுவிதியால் மிக்கு முடிவனவும் உள்ளன.

தம்மினாகிய தொழிற்சொல்லாவது பட்டான் என்பது

**நூற்பா**

***புள்ளியும் உயிரும் ஆயிறு சொல்முன்***
***தம்மினாகிய தொழிலின் மொழி வரினே***
***வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்***

## எழுத்ததிகாரத்திற்குப் புறனடை

இதற்கு இது முடிபாகும் என்று தனித்தனியே வரையறுக்கப் புகுந்தால் அதற்கு வரையறை இல்லை. எனவே வகுத்து விதித்த விதிகளைக் கொண்டு வகுத்து விதி உரையாதவற்றிற்கும் விதித்துக் கொள்க.

*1. பதவியலில் ஆண் பெண்பாலுக்குரிய விகுதி என்றார். பெருமாள் என்றவிடத்து ஆள் ஆண்பாலை உணர்த்தியது.*

*2. நும், தம், எம் என்ற சொற்களின் புணர்ச்சியைப் போலவே அம் என்ற சொல்லும் அம்+நலம்=அந்நலம் எனப் புணரும் என்று கொள்க.*

*அவ், இவ், உவ் என்ற கட்டுரை அற்றுச் சாரியை பெறுதல் போல எவ் என்ற வினாவும், எவ்+அற்று+ஐ=எவற்றை என்று அற்றுச் சாரியை பெற்றுப் புணரும்.*

# மொழியியற் செய்திகள் ஒப்பீடு

இனி மொழியியல் நூல்களோடு ஒப்பிட்டு நன்னூற் செய்திகள் சிலவற்றைக் காணலாம்.

1. முதலில் உருபுப் புணர்ச்சியையும் வேற்றுமைப் புணர்ச்சியையும் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். உருபுப் புணர்ச்சி எல்லாம் வேற்றுமைப் புணர்ச்சியாம். ஆனால், வேற்றுமைப் புணர்ச்சி எல்லாம் உருபுப் புணர்ச்சி ஆகா. உருபுப் புணர்ச்சியில் உருபு வெளிப்பட்டே நிற்கும். வேற்றுமைப் புணர்ச்சியில் உருபு வெளிப்பட்டும் நிற்கும், தொக்கியும் நிற்கும்.

*உருபுப் புணரியல் அகச் சந்தி குறித்தது; புணரியல்கள் புறச்சந்தி குறித்தவை.* டாக்டர் எஸ் சுப்ரமணியன்

2. சாரியைகள் ஒட்டுக்களேயாகும். அவை சொற்களிலும் தொகைகளிலும் இடையில் வருகின்றன. அதிலும் குறிப்பாகப் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் பொழுதோ அல்லது கட்டாயமாக வேற்றுமை உருபுகளை ஏற்க வேண்டிய இடத்திலேயோ பெரும்பாலும் சாரியைகள் வருகின்றன.

தொல்காப்பியரின் கருத்துப்படி பொருளைப் புரிந்துகொள்ள (ஒரு வேளை வேற்றுமை உருபுகளின் பொருளைப் புரிந்துகொள்ள) சாரியைகள் உதவுகின்றன. சொற்களின் இறுதியில் வரும் ஒட்டுக்களாக இருந்திருக்கக்கூடிய சாரியைகள் தொகைகளில் மட்டும் நிலைத்திருக்க வேண்டும் அல்லது கால்டுவெல் விளக்குவது போல அவை பழைய வேற்றுமை உருபுகளாய் இருந்திருக்க வேண்டும். தொடர்ச்சியான வழக்காற்றின் பயனாகத் தமிழில் இடைச்சொற்கள் ஆற்றல் இழக்கும் போக்கு உள்ளது. பின்னர் அவை வேறு புதிய இடைச்சொற்களால் வலுவேற்றப்படும். இதன் விளைவாக இரட்டை விகுதிகள் தோன்றுகின்றன. இந்நிலையில் மிகை ஆகிவிட்ட பழைய இடைச்சொல் சாரியை என்றழைக்கப்படுகிறது. சார் + இயை - சாரியை. சார் என்பது சார்தல் அல்லது சார்ந்திருத்தல் எனப் பொருள்படும். எனவே, சாரியை என்பது தன்னோடு சேர்ந்து வருவதைச் சார்ந்து நிற்பது எனப் பொருள்படும்.

(தெ. பொ. மீ. தமிழ் மொழி வரலாறு, பக். 109)

3. ஒரு பானை, இரு பானை என்பனவற்றில் உள்ள ஆன் என்பது சாரியையா என்பது ஐயமே. ஆயினும் இன், அன், ஆன், ஒன் என்பவற்றுக்கிடையில் உறவு இருப்பதைச் சுட்டுகிறார் டாக்டர். எஸ். சுப்ரமணியன்.

ஒன்றினை - ஒன்றனை (இன் - அன்)
பரணியிற் கொண்டான் - பரணியாற் கொண்டான் (இன் - ஆன்)
கோவினை - கோஒனை (இன் - ஒன்)
- டாக்டர். எஸ். சுப்ரமணியன். **(Phonology - A Critical Study of Tolkappiam and Nanool, P. 121)**

4. தம் நம் நும் என்பனவற்றைக் குறிப்பிட்டு இம்மூன்றும் பொருளுடைய முழு உருபன்களாகவே இருந்து பயன்பட்டிருக்க வேண்டும் என்கிறார் டாக்டர். எஸ். சுப்ரமணியன். **(Phonology - A Critical Study of Tolkappiam and Nanool, P. 122)**

5. வேற்றுமை

| | |
|---|---|
| 1. மரத்தோடு - மரமொடு | பொருள் மாறவில்லை |
| 2. மரத்தை - மரமை | பொருள் மாறும் |
| 3. மரத்துக்கு - மரக்கு | |
| 4. மரத்தின் - மரமின் | |
| 5. மரத்தது - மரம்து | |
| 6. மரத்துக்கண் - மரக்கண் | |

வேற்றுமைத் தொடர்ப்பொருளைச் சரிவரத் தருதற்குச் சாரியை கட்டாயம் தேவை. - டாக்டர். எஸ். சுப்ரமணியன். **(Phonology - A Critical Study of Tolkappiam and Nanool, P. 118)**

6. தொல்காப்பியர் கூறிய இச்சாரியைகள் எல்லாம் பொருள் பயவா இடைநிலை என்று கூறுவதற்கில்லை. சில பொருள் பயக்கும் இடைநிலைகளாகவே இருக்கின்றன. அவற்றில் ஒன்று வற்று என்பது.

சுட்டுப் பெயர்களுக்கும் வினைப்பெயர்களுக்கும் அடிச்சொற்களில் இரண்டு வடிவங்கள் இருப்பதைக் காணலாம். அவ் - இவ் - உவ் - உவ் என்பன ஒரு வகை வடிவம். இவ்வடிவங்கள் எப்பொழுதும் உயிரெழுத்துக்களின் முன்புதான் வரும். (உ-ம்) அவ் + அன், எவ் + அன், இவ் + அன், உவ் + அன் முதலியன. அ, இ, உ என்பன மற்றொரு வகை வடிவங்கள். இவை மெய் எழுத்துக்களின் முன்பு வரும் (உ-ம்) அ+து, இ+து, எ+து. இது போல் பலவ் சிலவ் எல்லாவ் (உ-ம்) பலவ் + அவற்றை, சிலவ் + அவற்றை, எல்லாவ் + அற்றை என்பன. பல, சில, எல்லாம் என்பனவற்றுள் உயிர்முன் வரும் வடிவங்கள். இவ்வாறு இச்சொற்களைப் பகுப்பதால், பகுப்பில் ஒரு வரன்முறையைக் காண்கிறோம். இதனால் இச்சாரியை வற்றெனக் கொள்வதைவிட அற்று எனக் கொள்வதே பொருந்தும். நன்னூலாரும் அற்றுச் சாரியையே வடித்தார். (டாக்டர். முத்துச்சண்முகனார், இக்காலத்தமிழ், பக். 216)

7. அற்று வரும் இடங்களையும் வராத இடங்களையும் கீழே காண்க.

| **பன்மை** | **ஒருமை** |
|---|---|
| யாவற்றை | யாதை |
| அவற்றை | அதை |
| இவற்றை | இதை |
| உவற்றை | உதை |
| எவற்றை | எதை |
| பலவற்றை | |
| பலவற்றிறுதி | |
| பலவற்று மருங்கின் | |
| பலவற்றுப் படர்க்கை | |
| சிலவற்றை | |
| எல்லாவற்றையும் | |

இரண்டு வரிசைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அற்று பன்மையிலேயே வரக் காண்கிறோம். ஒருமையில் வராது. எனவே அற்று இடைநிலையாக வரும் அஃறிணைப் பன்மை உருபு எனக் கொள்வதே பொருந்தும். இவ்விடை நிலை எப்பொழுதும் வேற்றுமை உருபின் முன்பு தான் வரும்.

(டாக்டர்.முத்துச்சண்முகனார், ***இக்காலத்தமிழ்,*** பக். 217).

## பயிற்சி வினாக்கள்

1. சாரியைகளை விளக்கி அவை புணர்ச்சிக்குப் பயன்படும் விதத்தை ஆராய்க.

2. நால்வகைப் புணர்ச்சிகள் - குறிப்பு வரைக.

3. உருபியற் செய்திகளைத் தொகுத்து வரைக.

# தன் மதிப்பீடு - மாதிரி வினா

## எழுத்ததிகாரம்

**காலம்: 3 மணி** **மதிப்பெண்–100**

**எவையேனும் நான்கனுக்கு ஒருபக்க அளவில் விடையிறுக்க:** **(4x10=40)**

1. சாரியைப் புணர்ச்சி குறித்துச் சிறு குறிப்பு வரைக.
2. தேன் எனும் சொல்லின் புணர்ச்சி விதிகளைத் தொகுத்துரைக்க.
3. மெய்ம்மயக்கம் - குறிப்பு வரைக.
4. விகுதிகள் காலம் காட்டுதலை உணர்த்துக.
5. அல்வழிப் புணர்ச்சியின் வகைகளைச் சான்றுடன் தருக.
6. தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களைச் சுட்டுக.
7. பகுபத உறுப்புக்களைக் குறிப்பிடுக.

**எவையேனும் மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் விடையிறுக்க:** **(3x20=60)**

1. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. எழுத்தின் பிறப்புக் குறித்து ஒரு கட்டுரை வரைக.
3. சார்பெழுத்துக்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.
4. பதவியல் செய்திகளைச் சுட்டி அவ்வியரைத் தனியே வகுக்க வேண்டிய தேவையைக் குறிப்பிடுக.
5. உருபியற் செய்திகளைத் தொகுத்துக் கூறுக.

# ஆ) சொல்லதிகாரம்

## 1. பெயரியல்

### சொல்லைப் பற்றிச் சில

எழுத்தினால் ஆக்கப்படுவது சொல். ஆனால் வெறும் எழுத்துக்களின் சேர்க்கை மட்டுமே சொல்லாகிவிட முடியாது. எழுத்துக்களின் சேர்க்கை ஒரு பொருளை உணர்த்தினால் மட்டுமே அது சொல் எனப்படும். அம்முறையில் ஓர் எழுத்து மட்டுமே நின்று ஒரு பொருளை உணர்த்தி ஒரு சொல் ஆகிவிடுதலும் கூடும். இதனை *ஓர் எழுத்து ஒரு மொழி* என்பர் உரையாசிரியர்.

இறிஞி, மிறிஞி-எழுத்துக்களின் சேர்க்கை

பொருள் தரவில்லையாதலால் சொல்லாகாது.

ஆ - ஓர் எழுத்து

பசு என்று பொருள் தருவதால் சொல்லாகிறது.

இதனை,

**எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்...**

(நன். 128)

என்று பதவியலின் தொடக்கத்தில் உரைத்துச் சொல்லை நமக்கு அறிமுகப்படுத்துகிறார் பவணந்தி,

### சொல்லாவது

எழுத்தினால் ஆக்கப்பட்டு இருதிணைப் பொருள் தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாய் ஓசையாகி பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொல்லும் பிறவுமாம் என்பது அதன் விருத்தியுரை.

மேற்கண்டவற்றால், சொல்லினது இயல்பினை உணரலாம்.

### சொல்லின் வகைகள்

சொற்களை இலக்கண அடிப்படையில் உயர்திணை அஃறிணை என இரு வகையாக அல்லது பொருள் முறையடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என்று நால் வகையாகப் பகுக்கலாம். நில அடிப்படையில் அல்லது மொழி வரலாற்றடிப் படையில் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று வகுக்கலாம்.

பவணந்தியார் சொல்லதிகாரத்தில் சொல்லினது இலக்கணங்களையும் இயல்புகளையும் விரிவாக உரைக்கின்றார்.

## சொல்லதிகாரப் பிரிவுகள்

நன்னூல் சொல்லதிகாரம் 1. பெயரியல் 2. வினையியல் 3. பொதுவியல் 4. இடையியல் 5. உரியியல் என ஐந்து பிரிவுகள் கொண்டது. பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்பன அவ்வச் சொற்களின் இலக்கணத்தை உரைக்கின்றன. நடுவேயுள்ள பொதுவியல் முன்னே சொல்லும் பெயர் வினைக்கும் பின்வரும் இடை உரிக்கும் பொதுவாக உள்ள இலக்கணங்களை உரைப்பதற்காக இடையே வைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் முதற் கண் அமைந்த பெயரியலைக் காண்போம்.

# பெயரியல் செய்திகள்

பெயரியலில் காணப்படும் செய்திகளை ஐந்து பகுதியாகக் கூறுபடுத்தலாம்.

1. சொல்லினது இலக்கணம்
2. சொல்லின் வகைகள்
3. பெயர்ச்சொல்லின் இலக்கணம்
4. பெயர்களின் வகைகள்
5. வேற்றுமை, வேற்றுமை உருபு, வேற்றுமை மயக்கம்

## சொல்லினது பொது இலக்கணம்

1. சொல் ஒரு மொழியாகவோ தொடர் மொழியாகவோ, பொது மொழியாகவோ வரும்.
2. இருதிணை ஐம்பாற் பொருளையும், தன்னையும் உணர்த்தும்.
3. தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களில் வரும்.
4. உலக வழக்காகவும் செய்யுள் வழக்காகவும் வழங்கப் பெறும்.
5. குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ பொருள் தரும்.

சொல்லைப்பற்றிய இவ்வைந்து செய்திகளும்,

**ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்மையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே**

*(நன். 259)*

என்ற நூற்பாலில் உரைக்கப்படுகின்றன.

இந்நூற்பாவில், 1. மூவகை மொழி 2. இருதிணை 3. ஐம்பால் 4. மூவிடம் 5. இருவழக்கு 6. வெளிப்படை - குறிப்பு என்ற ஆறு கூறுகளையும் விளக்கப் புகுகிறார்.

### 1. மூவகை மொழி

சொல்லானது ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்று மூவகையாக வகுக்கப்பெறும்.

**ஒருமொழி ஒரு பொருளனவாம் தொடர்மொழி**
**பலபொருளன பொது இருமையும் ஏற்ப**

*(நன்260)*

**அ-ஒருமொழி:** ஒரு சொல்லாய் நின்று ஒரு பொருள் தருவது ஒரு மொழியாகும்.

| | | |
|---|---|---|
| (எ.டு) | நிலம், நிலத்தின், | (பெயர்ச்சொல்) |
| | நட, நடந்தான் | (வினைச்சொல்) |
| | தில், மன் | (இடைச்சொல்) |
| | நவ, நனி | (உரிச்சொல்) |

**ஆ. தொடர் மொழி:** பல சொல்லாய் நின்று பொருள் தருவது தொடர் மொழியாகும்.

(எ.டு) நிலம் வலிது, அது கொல்
சாலப்பகை, நிலத்தைக் கடந்த நெடுமால்

**இ. பொதுமொழி:** ஒரு நோக்கில், ஒரு சொல்லாய் நின்று ஒரு பொருளைத் தருவதாகவும் மற்றொரு நோக்கில், பல சொல்லாய் நின்று பல பொருளைத் தருவதாகவும் அமைவது பொது மொழி.

எட்டு - ஓர் எண் (ஒரு மொழி)

எட்டு-எள்+து(எள்ளை உண்) (தொடர்மொழி)
ஆகவே, எட்டு-பொதுமொழி

வேங்கை-புலி (ஒரு மொழி)

வேங்கை-வேம்+கை (வேகும் கை) (தொடர்மொழி)
ஆதலின், வேங்கை - பொதுமொழி

தாமரை-தாமரைமலர் (ஒரு மொழி)

தாமரை-தா+மரை (தாவுகின்ற மான்) (தொடர்மொழி)
ஆதலின், தாமரை-பொதுமொழி

முட்டாள்-ஒருமொழி, முள்+தாள் தொடர்மொழி
ஆதலின் முட்டாள்-பொதுமொழி

## 2. இருதிணை

திணை, உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

***மக்கள் தேவர் நரகர் உயர்திணை***
***மற்று உயிருள்ளவும் இல்லவும் அஃறிணை***

*(நன். 261)*

என்று வகுப்பர் நன்னூலார்.

மக்களைப் போன்றே தேவரும் நரகரும் உயர்திணையில் அடங்குவதைப் பார்க்கிறோம்.

## 3. ஐம்பால்

ஆண்பால்
பெண்பால் } உயர்திணை
பலர்பால்

ஒன்றன்பால்
பலவின்பால் } அஃறிணை

***ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர் திணை***

*(நன். 262)*

***ஒன்றே பலவென்று இருபாற்று அஃறிணை***

*(நன். 263)*

## பேடும் அலியும்

உலகில் ஆண் தன்மையும் பெண் தன்மையும் கலந்து நிற்கும் பேடுகள் உண்டு. அவை எப்பாலில் சேரும் என்ற ஐயம் எழுமன்றோ? அதனால், பேடுகளை ஆண் தன்மை மிக்கிருந்தால் ஆண்பாலாகவும், பெண் தன்மைமிக்கிருந்தால் பெண்பாலாகவும் வழங்க வேண்டும். ஆராயாமல் வழங்குங்கால் இரண்டையுமே அஃறிணை போலவும் வழங்கலாம்.

(எ.டு)

1. பெண் அவாய் ஆண் இழந்த பேடி அணியாளோ (நாலடி 251)
2. பேடி வந்தது.
3. அலி வந்தான்
4. அலி வந்தது.

## நன்னூலார்

பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்

(நன்.264)

என உரைப்பர்.

சொல் திணையையும் பாலையும் உணர்த்தும் என்று முன்னர் கூறினோம். ஆயின் எல்லாச் சொல்லும் அவ்வாறு திணையும் பாலும் உணர்த்துவதில்லை.

## 4. மூவிடம்

தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடம் மூவகையாகும்

*தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே* என்பது நூற்பா
(நன். 266)

### 1. படர்க்கைச் சொற்கள்

திணை, பால் இரண்டையும் உணர்த்தும், படர்க்கைப் பெயர்ச் சொற்கள் கீழ்க்கண்டவாறு உணர்த்துகின்றன.

அவன்-ஆண்பால்
அவள்-பெண்பால்
அவர்-பலர்பால்
அது-ஒன்றன்பால்
அவை-பலவின்பால்

**படர்க்கை வினை முற்றுக்களும்** அவ்வாறே உணர்த்தும்.

நடந்தான்-ஆண்பால்
நடந்தாள்-பெண்பால்
நடந்தார்-பலர்பால்
நடந்தது-ஒன்றன்பால்
நடந்தன-பலவின்பால்

படர்க்கை வினைமுற்றுக்கள் இடம், திணை, பால் ஆகிய அனைத்தையும் உணர்த்துகின்றன.

போனான்-உயர்திணை, படர்க்கை, ஆண்பால் (ஆங்கிலத்தில் went எனும்போது திணை, இடம், பால் புலப்படுவதில்லை)

படர்க்கை வினை முற்று நாமம் குறிப்பின்
பெறப்படும் திணை பாலனைத்தும் ஏனை
இடத்தவற்றொருமைப் பன்மைப் பாலே

2. தன்மைப் பெயர்ச் சொற்களும், தன்மை வினைமுற்றுச் சொற்களும் முன்னிலைப்பெயர்ச் சொற்களும். முன்னிலைவினைமுற்றுச் சொற்களும் திணையை உணர்த்துவதில்லை, பாலை மட்டுமே உணர்த்தும், அவற்றிலும் ஆண்பாலா, பெண்பாலா என்பது பெறப்படாது ஒருமை பன்மையுமே பெறப்படும்.

### தன்மைப் பெயர்கள்

நான்-ஒருமை
நாம்-பன்மை

### தன்மை வினை முற்றுக்கள்

நடந்தேன்-ஒருமை
நடந்தோம்-பன்மை

### முன்னிலைப் பெயர்கள்

நீ-ஒருமை
நீர்-பன்மை

### முன்னிலை வினை முற்றுக்கள்

நடந்தாய்-ஒருமை
நடந்தீர்-பன்மை

மேற்கண்டவாறு சொற்கள் பால் உணர்த்துகின்றன

### 5. வழக்கும் செய்யுளும் (இரு வழக்கு)

வழக்கு என்பது சொல்நடை, உலகில் மக்கள் வழங்கும் முறையைக் குறிப்பதால் வழக்கு என்பது உலக வழக்கைக் குறிப்பதாயிற்று. செய்யுள் என்பது செய்யுள் வழக்கைக் குறிக்கும். வழக்கையும் செய்யுளையும் விளக்க வந்த நன்னூலார் முதலில் வழக்கைக் கூறுகிறார்

இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழுஉக்குறி
எனும் முத்தகுதியோடு ஆறாம் வழக்கியல்

(நன். 267)

என்பது நூற்பா.

வழக்கு ஆறு வகைப்படும். அவை இயல்பு வழக்கு மூன்றும், தகுதி வழக்கு மூன்றும் ஆக ஆறாகும்

| | | |
|---|---|---|
| இயல்பு வழக்கு | | இலக்கணம் உடையது<br>இலக்கணப் போலி<br>மரூஉ |
| தகுதி வழக்கு | | இடக்கர் அடக்கல்<br>மங்கலம்<br>குழூஉக்குறி |

**இயல்பு வழக்கு**

எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளினை அச்சொல்லால் வழங்குவது இயல்பு வழக்கு

**இலக்கணம் உடையது** என்பது இலக்கண நெறியால் வருவது.

(எ.டு) நிலம், நீர், தீ, காற்று
நன்னிறம், தண்ணீர்

**இலக்கணப் போலி** என்பது இலக்கணம் இல்லையாயினும் இலக்கணம் உடையது போல் சான்றோரால் தொன்றுதொட்டு ஏற்கப்பட்டு வருவது ஆகும்.

(எ.டு) **இல்வாய்** என்பது **வாயில்** என வழங்கப்படுவது இலக்கணப் போலி.

நகர்ப்புறம்-புறநகர்
கண்மீ-மீகண்
புறஉலா-உலாப்புறம்

மரூஉ என்பது மருவி வழங்குவதாகும்.

**மலையமான்** நாடு என்பது **மலாடு** என்று மருவி வரும்.

சோழநாடு-சோணாடு
ஆருமருந்தன்ன-அருமந்த
ஆதன் தந்தை-ஆந்தை
மரனடி-மாரடி
குள ஆம்பல்-குளாம்பல்
என்பன சான்று.

**தகுதி வழக்கு**

தகுதி காரணமாக ஒரு பொருளை அதன் சொல்லால் சுட்டாமல் வேறொரு சொல்லாற் சுட்டுவது தகுதி வழக்கு.

**இடக்கர் அடக்கல்**

இடக்கர் என்பது மறைத்துச் சொல்லும் சொல். இடக்கர் தோன்றாது, அதனை மறைத்துச் சொல்வதால் இடக்கர் அடக்கல் எனப்பட்டது.

(எ-டு)
கால் கழீஇ வருதும் - (மலங்கழீஇ வருதும்)
பவ்வீ, பகர ஈ (பீ)

எனக்கூறுவது அத்தகையன. இது அவையல் கிளவி என்றும் கூறப்படும். அதாவது சான்றோர் அவைக்கண் சொல்லத்தகாத செயல் என்பது.

### மங்கல வழக்கு

மங்கலமல்லாத சொற்களைக் கூறக்கூடாதாகலின் மங்கலமல்லாததை மங்கலமாகு ஆது போலக் கூறுதல்.

| மங்கலம் | அமங்கலம் |
|---|---|
| துஞ்சினார் | (செத்தார்) |
| வெள்ளாடு | (காராடு) |
| திருமுகம் | (ஓலை) |
| நன்காடு | (இடுகாடு) |

### இடக்கரடக்கலும் மங்கல வழக்கும்

சொற்கள் மொழியின் இலக்கணத்தை மட்டும் உணர்த்துவன அல்ல. அம்மொழி பேசும் மக்களின் மனப்பண்பாட்டையும் உணர்த்துகின்றன. இடக்கர் அடக்கல் சமுதாய நாகரிகத்தை உணர்த்துகின்றது. மங்கலவழக்கு நல்நினைப்புப் பண்பாட்டை உணர்த்துகிறது.

### குழூஉக்குறி

ஒரு குழுவினர் ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு ஒரு பொருளை அதன் சொல்லால் குறியாமல் வேறொரு சொல்லால் குறிப்பது குழூஉக்குறி

பறி-பொன் (பொற்கொல்லர் வழங்கும் குழூஉக்குறி)
காரை-ஆடை (யானைப் பாகர் குழூஉக்குறி)
சொல் விளம்பிகள் (வேடர் குழூஉக்குறி)
நீலம்-ஆட்டுச் சாணம் (வண்ணார் குழூஉக்குறி)
வீச்சு-ஐந்து ரூபாய் (மாடு பிடிப்போர் குழூஉக்குறி)

மொழி நூலார் இதனைக் குறு மொழி (Slang) என்பர். குழூஉக்குறி தொழில் அடிப்படையில் பிரிந்த குழுக்களாலேயே பெரும்பான்மை தோன்றுகிறது. சிறுபான்மை, மறைக்கவேண்டும் என்னும் மறைவுணர்ச்சி, புதுமைவிருப்பம், நகைச்சுவையுணர்வு போன்ற காரணங்களாலும் தோன்றுகிறது.

இவ்வாறு வழக்குநடை ஆறு பிரிவினதாய் வழங்குகிறது.

### செய்யுள்

செய்யுள் என்பது யாது? என நன்னூலார் அழகுற விளக்கமளிக்கிறார். தோல், குருதி, தசை, நிணம், எலும்பு, மச்சை, வெண்ணீர் எனும் ஏழுவகைத் தாதுக்களால் உயிருக்கு இடமாகக் கல்வியறிவினால் செய்யுள் செய்ய வல்லார். அழகுபெறச் செய்வன செய்யுள் என்று உவமித்துச் சொல்கிறார் சங்கர நமச்சிவாயர்.

எழுத்து, சொல், பொருள், அணி என நான்கும் இயன்றது யாப்பு செய்யுள்). அது யாக்கைக்கு ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.

## 6. வெளிப்படையும் குறிப்பும்

சொற்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் தரும். **வெளிப்படையாவது** நிலம், தீ, நீர் என்பவை போலப் பொருளை வெளிப்படையாகத் தரும் சொற்களாம். **குறிப்பாவது** எட்டு வகைப்படும். அவை 1. ஒன்றொழி பொதுச்சொல் 2. விகாரம் 3. தகுதி 4. ஆகுபெயர் 5. அன்மொழித்தொகை 6. வினைக்குறிப்பு 7. முதற்குறிப்பு 8. தொகைக்குறிப்பு என்பன.

## 1. ஒன்றொழி பொதுச்சொல்

பலர்பால் என்பது ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவானது. அப்பலர்பாலானது குறிப்பால் ஒரு பாலை ஒழித்து மற்றொரு பாலை மட்டும் உணர்த்துவது ஒன்றொழி பொதுச்சொல் ஆகும்.

**மக்கள்** - ஆண்பால் பெண்பால், இரண்டிற்கும் பொதுவான சொல். **ஆயிரம் மக்கள் போர் செய்தார்** - என்பதில் போர் செய்தார் என்ற வினையால் பெண்டிரை ஒழித்து ஆடவரை மட்டும் குறித்தது.

**கழல் தொட்டனர், களம் நோக்கினார், மீசை முறுக்கினார்** என்பனவும் குறிப்பாகப் பெண்டிரை விலக்கி ஆடவரைக் குறித்தன.

**தேவி கருவுயிர்த்த கட்டிலின் கீழ் நால்வர் உளர்** - என்பது குறிப்பாக ஆடவரை நீக்கிப் பெண்டிரைக் குறித்தது.

**அனைவரும் கூந்தலை அள்ளி முடித்தனர்** - என்பதும் குறிப்பாக ஆடவரை நீக்கிப் பெண்டிரை க் குறித்தது.

பெற்றம் என்பது பசுவுக்கும் காளைக்கும் பொதுச்சொல். ஆயினும் இப்பெற்றம் உழவுக்கு ஏற்றன என்பதில் அச்சொல் காளையையும், இப்பெற்றம் இருநாழி பால் கறக்கும் என்பதில் அச்சொல் பசுவையும் குறிப்பாக உணர்த்தின.

## 2. விகாரம்

குறுத்தாள், ஓதி, மரை என்பன விகாரச்சொற்கள். இவை குறிப்பாகக் குறுந்தாள், ஓந்தி, தாமரை என்பவற்றை உணர்த்தின. உயிரீற்றுப் புணரியலில் செய்யுள் விகாரம் 6 என்று ஓதியதை நினைவுபடுத்துக. வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்பன அவை, ஒரு சொல் முதலிடை கடை என்னும் மூன்றில் ஓரிடத்துக் குறைவதும் அதுவே ஆகும்.

## 3. தகுதி

பலர் நடுவிலும், வெளிப்படையாகவும் கூறத் தகதியில்லனவற்றைத் தகுதிபட மாற்றிக்கூறுவது தகுதி வழக்கு எனப்படும்.

கால்கழீஇ வருதும் - (மலங்கழீ இ வருவதும்) இடக்கர் அடக்கல்
திருமுகம் - (ஓலை) மங்கல வழக்கு
பறி - (பொன்) - குழுஉக்குறி
ஆகிய இவை குறிப்பால் அவ்வப்பொருளை உணர்த்தின.

## 4. ஆகுபெயர்

ஒன்றன் பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்கு ஆகிவருவது ஆகுபெயர்.

காஞ்சிபுரம் என்ன விலை? (காஞ்சிபுரத்தில் நெய்த பட்டாடை)
வெள்ளை அடித்தான் (சுண்ணாம்பு)
கோடை விளைந்தது (நெல்)
என ஆகுபெயர்கள் தத்தம் பொருளைக் குறிப்பால் உணர்த்தின (ஆகு பெயர்கள் பின்வரும் பாடங்களில் விளக்கமாகக் கூறப்பெறும்)

### 5. அன்மொழித் தொகை

பொற்றொடி ஆடினாள் (பொற்றொடியை அணிந்த பெண்) கூடைக் கொண்டை வந்தாள் (கூடை போலும் கொண்டையுடைய பெண்)

என அன்மொழித் தொகைகள் குறிப்பால் வேறு பொருளை உணர்த்தின.

### 6. வினைக் குறிப்பு

குறிப்பு வினைகள் வினைப்பொருளைக் குறிப்பால் உணர்த்தும். இவன் இப்போது பொன்னன் என்றவிடத்துப் பொன்னன் என்பது பெயர்ப்பொருளைத் தராமல் வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்திற்று.

பொன்னன் வந்தான் - பெயர் எழுவாய்
இவன் பண்டு பொன்னன் - குறிப்பு வினைப் பயனிலை
வல்லவன் யார் - பெயர் எழுவாய்
கொற்றவன் மிக வல்லவன்- குறிப்பு வினைப் பயனிலை

மேற்கண்டவற்றில் பெயர்கள் வினைப் பொருளைக் குறிப்பால் உணர்த்துவதைக் காணலாம்.

### 7. முதற் குறிப்பு

செய்யுளின் முதற்குறிப்பை மட்டும் உரைத்து எஞ்சியவற்றைக் குறிப்பால் புலப்படுத்துவது முதற்குறிப்பு எனப்படும்.

அறத்தாறு இது என வெள்ளைக்கு இழிபு

என்ற யாப்பருங்கலக்காரிகை, *அறத்தாறு இதுவென வேண்டா* என்ற திருக்குறளை முதற்குறிப்பாக உணர்த்திற்று.

### 8. தொகைக் குறிப்பு

சில பொருட்களைத் தொகையாக உரைக்கும் வழக்குண்டு, அத்தொகைச்சொல் குறிப்பாக அத்தொகையின் பொருளைத் தரும்.

ஐவர் - தொகைச் சொல்-பாண்டவர்
ஐந்தும் அடக்கி-தொகைச்சொல்-ஐம்புலன்கள்
ஒன்பதோடு - தொகைச்சொல் ஒன்பது கோள்கள்
பதினாறும் பெற்று- தொகைச் சொல்-பதினாறு பேறுகள்
நால்வர் பாடிய நன்மறை-தொகைச்சொல்-அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர்

மேற்கண்ட தொகைச் சொற்கள் அத்தொகைப் பொருளைக் குறிப்பாய்ச் சுட்டின.

### பிற குறிப்புச் சொற்கள்

குறிப்பால் பொருளுணர்த்தும் வேறு பல குறிப்புச் சொற்களும் உள்ளன.

நன்கு பாடினை - நன்கு பாடினாயில்லை என்ற பொருள்
நீர் மிகவும் அறிவீர் - நீர் ஏதும் அறியீர் என்ற பொருள்
பாயாத வேங்கை - வேங்கைமரம் என்ற பொருள்

பூவாத வஞ்சி - வஞ்சி மாநகர் என்ற பொருள்
கடல் போலும் செல்வர் - ஈயாதவர் என்ற பொருள்
பல்சான்றீரே - சான்றீர் அல்லர் என்ற பொருள்

என்பன போன்றனவும், வினையாலணையும் பெயர்களும், எச்சங்களும், செய்யும் என்னும் முற்றும். அஃறிணையிடத்துப் பேசப்படுவனவும் ஆகிய இவையாவும் குறிப்பால் உணர்த்துவனவே.

*ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி*
*ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே*
*முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்*
*குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை*

(நன். 296)

என்ற நூற்பா, குறிப்பு மொழிகளை விளக்குகிறது.

## சொல்லின் பாகுபாடு

சொற்கள் 1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் 3. இடைச்சொல் 4. உரிச்சொல் என நால்வகைப்படும்.

செந்தமிழ் நிலத்து வழங்கும் இவை இயற்சொல்லாகவோ திரிசொல்லாகவோ வழங்குவதால், 1. பெயர் இயற்சொல் 2. வினை இயற்சொல் 3. இடைஇயற்சொல் 4. உரி இயற்சொல் 5. பெயர்த் திரிசொல் 6. வினைத் திரிசொல் 7. இடைத் திரிசொல் 8. உரித்திரிசொல் என மேற்கண்டவாறு எண் வகையாகும். இவற்றோடு திசைச் சொல்லையும் வடசொல்லையும் சேர்த்தால் சொற்கள் பத்து வகையாகும் என்றும் கொள்வர்.

*அதுவே*
*இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை*
*என இரண்டாகும் இடை உரி அடுத்து*
*நான்குமாம் திசை வடசொல் அணுகாவழி*

(நன். 270)

என்பது நூற்பா, இயற்சொல், திரிசொல் என்ற தன்மையினை உடைய பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் இரண்டாகும். இடை உரி அடுத்து நான்கு ஆகும். அதுவே என்ற குறிப்பால் எட்டாகவும் பத்தாகவும் விரித்துக் கூறுவர்.

### இயற்சொல்

இயற்சொல்லானது இயல்பாற் பொருள் விளக்கும் சொல்

*செந்தமிழாகித் திரியாது யார்க்கும்*
*தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்*

(நன். 271)

இயற்சொல் செந்தமிழ் நிலத்து வழங்குவது, திரிசொல் போல அல்லாமல் கற்றோர்க்கும் கல்லாதோர்க்கும் தன் பொருளை விளக்கும் தன்மையை உடையது. உலக வழக்காகி நடைபெறுவது.

(எ.டு)

மண், பொன், மரம் - பெயர் இயற்சொல்
நடந்தான், வந்தான் - வினை இயற்சொல்
அவனை (ஐ) அவனால்(ஆல்) - இடை இயற்சொல்
அழகு, அன்பு, சால - உரி இயற்சொல்

### திரிசொல்

திரிசொல் அரிதில் பொருள் உணரத்தக்கது. அது ஒரு பொருள் குறிக்கும் பல சொல்லாகவும் வரும். பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லாகவும் வரும்.

**நூற்பா**

ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும்
பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்

*(நன். 272)*

### பெயர்த் திரிசொல்

| பல பொருள்கள் | ஒரு பொருள் |
|---|---|
| கிள்ளை, சுகம், தத்தை | கிளி |

இங்கும் பல பெயர் ஒரு பொருளைத் தந்தது.

| ஒரு பெயர் | பல பொருள் |
|---|---|
| வாரணம் | யானை, கோழி, சங்கு |

இங்கு ஒரு பெயர் பல பொருளைத் தந்தது

### வினைத் திரிசொல்

| பல வினைகள் | ஒரு பொருள் |
|---|---|
| சென்றான், ஏகினான், படர்ந்தான் | போனான் |

இங்குப் பல வினைச்சொற்கள் ஒரு பொருளைத் தந்தன.

| ஒரு வினை | பல பொருள் |
|---|---|
| வரைந்தான் | நீங்கினான், கொண்டான், எழுதினான் |

இங்கு ஒர வினை பல பொருளைத் தந்தது.

### இடைத் திரிசொல்

| பல இடைச்சொல் | ஒரு பொருள் |
|---|---|
| சேறும், வருதும் | தன்மைப் பன்மை |
| *(றும், தும்)* | எதிர்காலம் உணர்த்தின |

இங்கும் பல விகுதிகள் ஒரு பொருளை உணர்த்தின

| ஓர் இடைச்சொல் | பல பொருள் |
|---|---|
| கொல் | ஐயம், அசைநிலை, வினா |

இங்கு ஓர் இடைச்சொல் பல பொருளைத் தந்தது.

## உரித்திரிசொல்

| பல உரிச்சொல் | ஒரு பொருள் |
|---|---|
| சால, உறு, தவ, நனி | மிகுதி |

இங்குப் பல உரிச்சொல் ஒரு பொருள் தந்தன.

| ஓர் உரிச்சொல் | பல பொருள் |
|---|---|
| கடி | காப்பு, கூர்மை, அச்சம், சிறப்பு மணம் |

மேற்கண்டவாறு தமிழில் திரிசொற்கள் அமைகின்றன.

## குறிப்பு

1. தமிழில் தொன்றுதொட்டே இவ்வாறு பெயர், வினை, இடை, உரி என்று அமைந்துள்ள நாற்சொல் பாகுபாடு விளக்கமுறை அடிப்படை அணுகல் இலக்கண ஆசிரியரிடம் நிலவியிருந்தது என்பதைக் காட்டும்.

2. பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்தும் திரிசொல் மரபு, தமிழ் மொழியின் சொல்வளத்தைக் காட்டும்.

3. ஒரு சொல் பல பொருளை உணர்த்தும் திரிசொல் மரபு தமிழ் மொழியின் சொற் பொருள் ஆழத்தை உணர்த்தும்.

## திசைச்சொல்

பல்வேறு திசைகளினின்றும் தமிழ் நிலத்துள் வந்து வழங்குவன திசைச்சொல். திசைச் சொற்களை இருவகையாகப் பகுக்கலாம்.

1. செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலிருந்தும் வந்தது. தமிழ் நிலத்தில் வழங்குவன

2. பதினெட்டு மொழிகளுக்குள்ளே செந்தமிழ் ஒழிந்த பதினேழு நிலங்களிலிருந்தும் வந்து தமிழ் வழங்குவன.

*செந்தமிழ் நிலஞ் சேர் பன்னிருநிலத்தினும்*
*ஒன் பதிற்றிரண்டில் தமிழ் ஒழி நிலத்தினும்*
*தம் குறிப்பினவே திசைச்சொல் கிளவி*

(நன். 273)

என்பது நூற்பா.

செந்தமிழ் நிலஞ் சேர்ந்த பன்னிரண்டு நிலமாவன யாவை என்பதற்கு ஒரு வெண்பா விடை பகர்கிறது.

*தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி*
*பன்றி அருவா அதன் வடக்கு - நன்றாய*
*சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்*
*ஏதமில் பன்னிருநாட்டு எண்*

என்பது அவ்வெண்பா, இப்பன்னிரு நிலமும் செந்தமிழ் சேர்ந்த நிலமா, கொடுந்தமிழ் பேசும் நிலமா என்பது பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. இவை கொடுந்தமிழ் நிலமே என்பது சங்கரநமச்சிவாயர் கருத்து. பின்னவர் வட சொல் என்று தனியே பிரிப்பதால் பதினெட்டு மொழியுள் தமிழும் ஆரியமும் தவிர எஞ்சிய பதினாறு நிலத்திலின்றும் போந்த சொல் திசைச்சொல் என்றும் அவர் உரைப்பர்.

**திசைச்சொற்களுக்கு**

| **எடுத்துக்காட்டு** | | **வழங்கும் நிலம்** |
|---|---|---|
| பெற்றம் | (பசு) | - தென்பாண்டிய நாடு |
| தள்ளை | (தாய்) | - குட்ட நாடு |
| அச்சன் | (தந்தை) | - குட நாடு |
| கையர் | (வஞ்சம்) | - கற்கா நாடு |
| கிழார் | (தோட்டம்) | - வேணாடு |
| பாழி | (சிறுகுளம்) | - பூழிநாடு |
| செறு | (வயல்) | - அருவாநாடு |
| எகின் | (புளி) | - அருவா வடதலைநாடு |
| எலுவன் | (தோழன்) | - சிங்களம் |
| அந்தோ | | - சீதநாடு |
| பாண்டில் | (எருது) | - தெலுங்கு |
| கொக்கு | (மாமரம்) | - துளு |

மொழி நூலார் இவற்றைக்கிளைமொழிச் சொற்கள் எனவும் வட்டார வாக்கு எனவும் உரைப்பர்.

1. திசைச்சொற்கள் ஒருமொழிக்கும் அதன் சுற்று வட்டார மொழிகட்கும் இடையேயிருந்த தொடர்பை விளக்குகின்றன.

2. திசைச் சொற்கள் மொழியின் மூலமொழிக்கும், அம்மொழியின் கிளை மொழிகட்கும், அம்மொழியின் இனமொழிகட்கும் இடையே நிலவிய உறவின் வரலாற்றை உணர்த்த உதவுகின்றன.

## வடசொல்

ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்துக்களும் உண்டு. ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவான எழுத்தும் உண்டு.

சிறப்பெழுத்தாலும் பொதுவெழுத்தாலும் இரண்டெழுத்தாலும் இயைந்த வடசொற்கள் வடதிசையினின்றும் வந்து தமிழில் வழங்குகின்றன. இவை வடசொற்கள் எனப்படும்.

ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்து இவை, ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொது எழுத்து இவை என்ற செய்திகளை நன்னூலார் பதவியலில் வடமொழியாக்கம் என்ற பகுதிகளில் விளக்கியுள்ளார்.

**அமலம், கமலம், காரணம், காரியம்** என்பன இரண்டற்கும் பொதுவெழுத்தால் ஆகியவை. சுகி, போகி என்பவை ஆரியச் சிறப்பெழுத்தால் ஆகியவை. **அரண், அரி, கடினம்** போன்றவை பொதுவெழுத்தாலும் சிறப்பெழுத்தாலும் ஆகியவை.

*பொதுவெழுத்தானும் சிறப்பெழுத்தானும்*
*ஈரெழுத்தானும் இயைவன வடசொல்*

என்ற நூற்பா வடசொல்லை உணர்த்துகிறது.

## பெயரின் பொது இலக்கணமும் பெயர் வகையும்

பெயரின் பொது இலக்கணத்தை நன்னூலார்,

*இடுகுறி காரண மரபோடு ஆக்கம்*
*தொடர்ந்து தொழில் அல காலம் தோற்றா*

வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்துஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே

(நன். 275)

என்று விளக்கிச் சொல்வார். இதனால் அறியும் செய்திகளாவன:

1. பெயர் இடுகுறியாகவோ காரணப்பெயராகவோ வரும்.

2. வினையாலணையும் பெயர், தொழிற் பெயர் தவிர மற்றப் பெயர்கள் காலம் காட்டா.

3. பெயர் வேற்றுமை ஏற்கும்.

4. பெயர் திணை, பால், இடம் முதலியவற்றில் ஒன்றையோ பலவற்றையோ ஏற்பதாக வரும்.

**பெயருக்கும் வினைக்கும் உள்ள தெளிவான வேறுபாடு**

1. பெயர் வேற்றுமை ஏற்கும்; காலம் காட்டாது.

2. வினை காலம் காட்டும்; வேற்றுமை ஏலாது.

வினையாலணையும் பெயர் மட்டும் பெயரைப்போல் வேற்றுமையும் ஏற்கும். வினையைப் போல் காலத்தையும் காட்டும். இதனால் வினையாலணையும் பெயர் பெயருக்கும், வினைக்கும் இணைப்புப் பாலம் போலத் திகழ்கிறது. தொழில் பெயருள்ளும் சில, காலம் காட்டுவதுண்டு. ஆகவே தொழிலல காலம் தோற்றா என்பதற்கு, வினையாலணையும் பெயர் தொழிற்பெயர் என்ற இரண்டும் தவிர, எஞ்சிய பெயர்கள் காலம் தோற்றா எனக் கொள்ள வேண்டும்.

## வினையாலணையும் பெயர் காலம் காட்டல், வேற்றுமை ஏற்றல்

நடித்தவளைக் கண்டேன் - இறந்தகாலம்
- *ஐ* இரண்டன் உருபு ஏற்றல்

## தொழிற்பெயர் காலம் காட்டல், வேற்றுமை ஏற்றல்

வந்தமையைச் செவியுற்று வந்தேன் - இறந்தகாலம்
- *ஐ* இரண்டன் உருபு ஏற்றல்

## பெயர்கள் வேற்றுமை ஏற்றல்

| | | |
|---|---|---|
| நூலை எடுத்தான் | - | இரண்டாம் வேற்றுமை |
| வாளால் வெட்டினான் | - | மூன்றாம் வேற்றுமை |
| அவனுக்குக் கொடுத்தான் | - | நான்காம் வேற்றுமை |
| ஊரின் நீங்கினான் | - | ஐந்தாம் வேற்றுமை |
| மரத்தினது கிளை | - | ஆறாம் வேற்றுமை |
| மலையின் கண் ஏறினான் | - | ஏழாம் வேற்றுமை |

## பெயர்கள் திணை, பால், இடம் காட்டல்

பொன்னன் [ உயர்திணை
ஆண்பால்
படர்க்கை

நீ [ முன்னிலை
ஒருமை

## இடுகுறி காரணப் பெயர்கள்

பெயர்களைப் பொதுவாக, 1. இடுகுறிப் பெயர் 2. காரணப் பெயர் என இருவகையாகப் பிரிக்கலாம். இடுகுறிப்பெயராவது, காரணம் அறியப்படாததாய் வெறும் குறியளவாக வழங்கும் பெயர்.

காரணப் பெயராவது யாதானும் ஒரு காரணம் பற்றி வழங்கும் பெயர்.

எழுத்தியலில் பெயரைப்பற்றிக் குறிப்பிடும் நன்னூலார் *இடுகுறி காரணப்பெயர் பொதுச் சிறப்பின* என்பர். இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என்று வகைப்படுத்தியதை இங்கு நினைவுபடுத்திக் கொள்வது நன்று.

மரம் - இடுகுறிப் பொதுப்பெயர்
பலா - இடுகுறிச் சிறப்புப்பெயர்
அணி - காரணப் பொதுப்பெயர்
முடி - காரணச் சிறப்புப்பெயர்

இடுகுறியும் காரணமும் ஆகிய இருபெயரும், மரபு, ஆக்கம் என்று இரு வகைப்படும். இவ்வாறு பெயர் நான்கு வகைப்படும்.

1. இடுகுறி மரபுப்பெயர்
2. இடுகுறி ஆக்கப்பெயர்
3. காரண மரபுப்பெயர்
4. காரண ஆக்கப்பெயர் - என்பன அவை.

இடுகுறி மரபுப்பெயராவது தொன்றுதொட்டு மரபாக வழங்கிவரும் இடுகுறிப்பெயராகும்.

(எ-டு) மரம், பனை, மண், மலை.

இடுகுறி ஆக்கப் பெயராவது இடுகுறிப் பெயரைப் புதிதாக ஆக்கிக்கொள்வதாகும். புதிய ஒளிக்கதிருக்கு **X-ray** என்று வைத்துக்கொண்டோம் அல்லவா, அதைப் போன்றது.

பொய்யாமொழிப் புலவர் முருகனைப் பாட மறுத்துக் *கோழியைப் பாடிய வாயால் முட்டையைப் பாடேன்* என்று உரைத்து விட்டாராம். பின், முருகனைப் பாடவேண்டிய சூழ்நிலை வந்தபோது, முருகனை *முட்டை* என்றே அழைத்து,

**மானவேல் முட்டைக்கு மாறுஆய தெவ்வர்போம்**
**கானவேல் முள்தைக்கும் காடு**

எனப் பாடினாராம். இப்பாட்டில், முருகனை *முட்டை* என்றழைத்தது இடுகுறி ஆக்கப்பெயர்.

காரண மரபுப்பெயராவது காரணம் பற்றி மரபாக வழங்கிவரும் பெயராகும்.

(எ-டு) அவள், அவன்
பறவை, விலங்கு

போன்ற பெயர்கள், காரணம் பற்றி மரபாக வழங்கிவரும் பெயர்கள். காரண ஆக்கப்பெயராவது காரணம் பற்றி நாம் புதிதாக ஆக்கிக்கொள்ளும் பெயராகும்.

(எ-டு) திரைப்படம், ஏவுகணை, வானொலி, தொலைபேசி, புகைவண்டி.

## பெயர்களின் வகைகள்

திணை, பால் அடிப்படையில் மேற்கூறிய பெயர்களை,

1. உயர்திணைப் பெயர்  2. அஃறிணைப் பெயர்
3. பால்பகா அஃறிணைப் பெயர்  4. இருதிணைப் பொதுப்பெயர் என்று வகைப்படுத்துவர்.

இடத்தின் அடிப்படையில்,

1. தன்மைப் பெயர்  2. முன்னிலைப் பெயர்  3. படர்க்கைப் பெயர் என வகுப்பதுண்டு.

இலக்கண அடிப்படையில் பெயரின் இயல்பு கண்டு,

1. வினையாலணையும் பெயர்  2. தொழிற் பெயர்
3. எண்ணால் வரும் பெயர்  4. ஆகுபெயர் என வகைப்படுத்தலும் உண்டு.

இடுகுறி காரணப் பெயர்களைப் பெயர்களின் இலக்கணத்தில் முன்னரே கண்டோம்.

## உயர்திணைப் பெயர்கள் (நன். 276, 278)

உயர்திணை
- ஆண்பால்
- பெண்பால்
- பலர்பால்

என உயர்திணை மூன்று பாலாகும்.

## உயர்திணை ஆண்பாற் பெயர்கள் (நன். 276)

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், இடைச்சொல் ஆகியவற்றின் அடியாகப் பிறக்கும்.

### பொருள்

தமன், நுமன், எமன் (எங்களைச் சேர்ந்தவன்) - கிளைப்பெயர்
ஒருவன் - எண்ணால் வரும் பெயர்
அவையத்தான் - குழுப்பெயர்
பொன்னன் - முதற்பெயர்
அவையத்தான் (குழு) பொன்னி (முதல்)

### இடம்

ஐந்திணை அடிப்படையில்:

வெற்பன், பொருப்பன் - குறிஞ்சி
மறவன், எயினன் - பாலை
இடையன், ஆயன் - மருதம்
சேர்ப்பன், துறைவன் - நெய்தல்

கங்கன், கொங்கன் - தேயம்
கருவூரான், உறையூரான் - ஊர்
வானத்தான், அகத்தான் - இடம்

**காலம்**

மூவாட்டையான் - ஆண்டு; வேனிலான் - பருவம்; சித்திரையான் - மாதம்; ஓணத்தான் - நாள்மீன்.

**சினை**

குடுமியான், நெடுங்கையான், முட்டைக்கண்ணன்.

**குணம்**

பெரியன், சிறியன், கரியன், புலவன், அந்தணன், நல்லன்.

**தொழில்**

ஓதுவான், தச்சன், கருமான்.

**இடைச்சொற்கள்**

அவன், இவன் - சுட்டு; எவன் - வினா; பிறன், மற்றவன்.

**பிறபெயர்கள்**

நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில், தோன்றல், கிள்ளி, சென்னி, செம்மல், ஏனாதி, அண்ணல் முதலிய பல ஆண்பாற் பெயர்களையும் கொள்க.

**உயர்திணைப் பெண்பாற் பெயர்கள் (நன். 277)**

**பொருள்**

தமள், நுமள், எமள் (கிளை, ஒருத்தி (எண்).

**இடம்**

| | | |
|---|---|---|
| குறத்தி, ஏயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, பரத்தி | - | ஐவகை நிலம் |
| சோழிச்சி | - | நாடு |
| கருவூராள் | - | ஊர் |
| வானத்தி, அகத்தி, புறத்தி | - | இடம் |

**காலம்**

பதினாறாட்டையாள் (ஆண்டு); வேனிலாள் (பருவம்); சித்திரையாள் (மாதம்); ஆதிரையாள் (நாள்மீன்).

**சினை**

கருங்குழலி, தடங்கண்ணி, மூக்கி.

**குணம்**

பெரியள், புலமையள், கரியள், பார்ப்பனி, தலைவி, நல்லள்.

**தொழில்**

ஓதுவாள், தக்கிச்சி.

### இடைச்சொற்கள்

அவள், இவள், எவள், பிறள், மற்றையாள்.

### பிறபெயர்கள்

தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல், பேதை, பெதும்மை, இகுளை, மடந்தை, பெண்டு, பெண்டாட்டி போன்றன.

### பலர்பாற் பெயர்கள் (நன். 278)

பலர்பாற் பெயர்களும் முன்னே சொல்லப்பட்ட பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், இடைச்சொல் ஆகியவற்றின் அடியாகப் பிறக்கும். ரகர ஈற்றுப் பெயர்களும், கள் ஈற்றுப் பெயர்களுமாய் உயர்திணைப் பலர்பாற் பெயர் வரும்.

(எ-டு) தமர், நமர், இருவர், குறவர், மலையர், வானவர், அறுபதாண்டினர், கருங்கண்ணர், கரியர், புலவர், மனிதர், அந்தணர், ஓதுவார், தச்சர், அவர், எவர், பிறர், மற்றவர் எனவும், கோக்கள், தமர்கள் எனவும், மாந்தர், மகார், சிறார், வேளிர் எனவும் வரும்.

### அஃறிணைப் பெயர்கள் (நன். 279 - 281)

அஃறிணைப் பெயர்கள் ஒன்றன்பாற்பெயர், பலவின்பாற்பெயர் என இருவகைத்தாகும்.

### அஃறிணை ஒன்றன்பாற்பெயர்கள் (நன். 279)

1. சுட்டிலும் வினாவிலும் இணைந்து *து* கர விகுதி பெற்று வரும். அது, இது, உது, எது, யாது.

2. முன்னர்க் கூறிய பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறையும் பொருந்தித் *து* கர விகுதி பெற்று வரும்.

| | | |
|---|---|---|
| குழையது | - | பொருள் |
| நிலத்தது | - | இடம் |
| கோடையது | - | காலம் |
| குறுங்கண்ணது | - | சினை |
| பெரியது | - | குணம் |
| ஆடவரது | - | தொழில் |

3. சுட்டெழுத்தோடு ஆய்தம் பெற்று இறுதியில் து வ் விகுதி பெற்று வரும்

இஃது, அஃது, உஃது.

### பலவின்பாற் பெயர்கள் (நன். 280)

1. சுட்டுடனும் வினாவுடனும் இணைந்து *வை* விகுதி பெற்று வரும்.

(எ-டு) அவை, இவை, உவை, எவை, யாவை.

2. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுடன் பொருந்தி அகர விகுதியும் *வை* விகுதியும் பெற்று வரும்.

(எ-டு) பொருளன, பொருளவை, அகத்தவை, அகத்தவை, கோட்டன, கோட்டவை, கரிய, கரியவை, பாடுவன, பாடுபவை.

3. வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்களாக வரும்.

(எ-டு) அவ், இவ், உவ்.

4. கள் விகுதி பெற்ற பெயர்களாகவும் வரும்.

(எ-டு) யானைகள், குதிரைகள்.

5. எண்ணாகு பெயர்களாக வரும்.

இரண்டு, மூன்று, பத்து, நூறு.

6. உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள, இல, பல, சில, யா, பிற, மற்றைய, மற்றவை என்றும் வரும்.

## பால்பகா அஃறிணைப் பெயர்கள் (நன். 281)

அஃறிணைப் பெயர்களில் பால் பகுக்கப்படாத பெயர்கள் அஃறிணை இருபாற்கும் பொதுப்பெயராக வரும். இவை பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

பறவை வந்தது, பறவை வந்தன.
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

*பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய* (நன். 281) என்பது நன்னூல்.

## இருதிணைப் பொதுப்பெயர்

உயர்திணை, அஃறிணை இரண்டற்கும் பொதுவான பெயர்களும் உண்டு. அவை இருதிணைப் பொதுப்பெயர் எனப்படும். அவற்றை இவண் காண்போம்:

| | | |
|---|---|---|
| 1. | முதற்பெயர் | 4 |
| 2. | சினைப்பெயர் | 4 |
| 3. | சினைமுதற்பெயர் | 4 |
| 4. | முறைப் பெயர் | 2 |
| 5. | தன்மைப் பெயர் | 4 |
| 6. | முன்னிலைப் பெயர் | 5 |
| 7. | எல்லாம், தான், தாம் | 3 |
| | | 26 |

மேற்கண்டவாறு இருதிணைப் பொதுப்பெயர்கள் இருபத்தாறு ஆகின்றன.

**நூற்பா**

*முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்*
*சினை முதற்பெயர் ஒரு நான்கும் முறை இரண்டும்*
*தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்*
*எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர்*
(நன். 282)

இருதிணைப் பொதுப்பெயர் என்பது இப்பெயர்கள் இருதிணைக்கும் பொருந்திவரும் என்பதனாலாகும். ஒருமைப்பெயர் அஃறிணை ஒருமைக்கும், உயர்திணை ஒருமைக்கும் பொருந்தும்; பன்மைப்பெயர் அஃறிணைப் பன்மைக்கும், உயர்திணைப் பன்மைக்கும் பொருந்தும்.

அவற்றுள்
ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்படும்

(நன். 28)

என்ற நூற்பா இதனை விளக்கும்.

## முதற்பெயர்

ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்
ஆம் அந்நான்மைகள், ஆண்பெண் முறைப்பெயர்

(நன். 283)

என்ற நூற்பாவின்படி முதற்பெயர் 1. ஆண்மை முதற்பெயர், 2. பெண்மை முதற்பெயர், 3. ஒருமை முதற்பெயர், 4. பன்மை முதற்பெயர் என நால்வகைப்படும்.

## ஆண்மை முதற்பெயர்

சாத்தன் : சாத்தன் என் தம்பி - உயர்திணை ஒருமை
சாத்தன் இவ்வெருது - அஃறிணை ஒருமை

## பெண்மை முதற்பெயர்

சாத்தி : சாத்தி என் தங்கை - உயர்திணை ஒருமை
சாத்தி இப்பசு - அஃறிணை ஒருமை

## ஒருமை முதற்பெயர்

கோதை : கோதை இவன் - ஆண்பால்
கோதை இவள் - பெண்பால்
கோதை இது - ஒன்றன்பால்

## பன்மை முதற்பெயர்

கோதைகள் : கோதைகள் இவர் - உயர்திணைப் பன்மை
கோதைகள் இவை - அஃறிணைப் பன்மை

## சினைப் பெயர்

சினைப்பெயரும் அவ்வாறே நால்வகைப்படும்.

## ஆண்மைச் சினைப்பெயர்

முடவன் இவன் - உயர்திணை ஒருமை
முடவன் இவ்வெருது - அஃறிணை ஒருமை

## பெண்மைச் சினைப்பெயர்

முடத்தி இவள் - உயர்திணை ஒருமை
முடத்தி இவ்வெருது - அஃறிணை ஒருமை

## ஒருமைச் சினைப்பெயர்

செவியிலி இவன் - ஆண்பால்
செவியிலி இவள் - பெண்பால்
செவியிலி இது - ஒன்றன்பால்

### பன்மைச் சினைப்பெயர்

செவியிலிகள் இவர் - உயர்திணைப் பன்மை
செவியிலிகள் இவை - அஃறிணைப் பன்மை

### சினை முதற்பெயர்

சினைப்பெயரும், அதனோடு முதற்பெயரும் சேர்ந்து வருவது சினை முதற்பெயராகும்.

### ஆண்மைச் சினை முதற்பெயர்

முடக்கொற்றன் இவன் - உயர்திணை ஒருமை
முடக்கொற்றன் இது - அஃறிணை ஒருமை

### ஒருமைச் சினை முதற்பெயர்

கொடும்புற மருதி இவன் - ஆண்பால்
கொடும்புற மருதி இவள் - பெண்பால்
கொடும்புற மருதி இது - ஒன்றன்பால்

### பன்மைச் சினை முதற்பெயர்

கொடும்புற மருதிகள் இவர் - உயர்திணைப் பன்மை
கொடும்புற மருதிகள் இவை - அஃறிணைப் பன்மை

### முறைப்பெயர்

தந்தை இவன் - ஆண்பால்
தந்தை இவ்வெருது - ஒன்றன்பால்
தாய் இவள் - பெண்பால்
தாய் இப்பசு - ஒன்றன்பால்

### தன்மைப் பெயர்

யான் - யான் நம்பி - ஆண்பால்
யான் நங்கை - பெண்பால்
யான் பூதம் - அஃறிணை (ஒன்றன்பால்)
நான் என்பதும் அவ்வாறே வரும்.

யாம் - யாம் மக்கள் - உயர்திணை
யாம் பூதங்கள் - அஃறிணை
நாம் என்பதும் அவ்வாறே வரும்.

### முன்னிலைப் பெயர்கள்

நீ - நீ நம்பி - ஆண்பால்
நீ நங்கை - பெண்பால்
நீ பூதம் - அஃறிணை (ஒன்றன்பால்)

நீர் - நீர் மக்கள் - உயர்திணை
நீர் பூதங்கள் - அஃறிணை

எல்லீர்
நீயிர் - என்பனவும் அவ்வாறே வரும்.
நீவிர்

### எல்லாம், தாம், தான்

எல்லாம் - அவர் எல்லாம் - உயர்திணை
அவை எல்லாம் - அஃறிணை

தாம் - அவர் தாம் - உயர்திணை
அவை தாம் - அஃறிணை

தான் - அவன் தான் - ஆண்பால்
அவள் தான் - பெண்பால்
அது தான் - ஒன்றன்பால்

**தன்மை முன்னிலைப் பெயர்களை உணர்த்தும் நூற்பா**

தன்மை யான் நான் யாம் நாம் முன்னிலை
எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ
அல்லன படர்க்கை எல்லாம் எனல் பொது
(நன். 285)

எல்லாம் என்ற சொல் இருதிணைப் பன்மையிலும் மூவிடத்திலும் வரும்.

### பொதுப் பெயர்

இடப்பெயர்களில் 12 இருதிணைப் பொதுப் பெயர்களாக வரும் என்கிறார் நன்னூலார். இவற்றில் ஒருமை சுட்டும் இடப்பெயர் நான்கு. அவை தான், யான், நான், நீ எனும் நான்கும் இருதிணையின் மூன்று ஒருமைக்கும் ஆகும்.

பன்மை சுட்டும் இடப்பெயர் எட்டு. அவை தாம், யாம், நாம், எல்லாம், எல்லீர், நீயிர், நீர், நீவிர் என்பன. இவையெட்டும் இருதிணையின் இரு பன்மைக்கும் ஆகும்.

## இன்னும் சில பெயர்கள்

### தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்

தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் ஒன்றோடொன்று குறிப்பிடத்தக்கன.

வினையின் பெயரே படர்க்கை வினையால்
அணையும் பெயரே யாண்டும் ஆகும்
(நன். 286)

என நன்னூல் உரைக்கிறது. (வினைப்பெயராவது தொழிற்பெயர்)

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| (எ-டு) உணல் நன்று | உண்டேனை - தன்மை |
| வருகை நன்று | உண்டாயை - முன்னிலை |
| | உண்டானை - படர்க்கை |
| 1. தொழிற்பெயர் படர்க்கை இடத்திற்கே உரியது. | 1. வினையாலணையும் பெயர் மூவிடத்திற்கும் உரியது. |

2. தொழிற்பெயர் தொழிலை உணர்த்தும். | 2. வினையாலணையும் பெயர் தொழிலை உடைய பொருளை உணர்த்தும்.

**இரு பெயருக்கும் உள்ள ஒற்றுமைகள்**

1. இரண்டுமே, வினையோடு தொடர்புடைய பெயர்கள்.

2. இரண்டுமே, பெயர் போல வேற்றுமை உருபு ஏற்கும். வினை போலக் காலம் காட்டும்.

**எண்ணால் வரும் பெயர்**

எண்ணாற் பெயர் பெறும் ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும் ஒருவன், ஒருத்தி என்ற எண்ணுக்குமேல் பெயர் பெறுவதில்லை.

**ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில**

(நன். 288)

அதாவது இருவன், மூவன், இருத்தி, மூத்தி என்று வருவதில்லை. மாறாகப் பன்மை விகுதியேற்று இருவர் மூவர் என்றே வரும். சில சமயம் ஒருவன் அல்லது ஒருத்தி என்ற பெயரே மரியாதைப் பன்மையாக ஒருவர் என்று பன்மைச் சொல்லாக முடியும்.

**ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்**
**பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப**

(நன். 289)

ஆடவருள் ஒருவர் அறம் செய்வார். பெண்டிருள் ஒருவர் கொழுநன் வழி நிற்பார் என்று பன்மை வினை கொண்டன.

உரையிடற் கோடலால் சாத்தனார் வந்தார், முடவனார் வந்தார், முடக்கொற்றர் வந்தார், தந்தையார் வந்தார் என இருதிணைப் பொதுப்பெயர்களும், நரியார் வந்தார் - எனப் பால் பகா அஃறிணைப் பொதுப்பெயரும் நங்கையார் வந்தார், அகத்தியனார் வந்தார் என்று உயர்திணைப் பெயர்களும் பெறப்படும்.

## ஆகுபெயர்

பெயர்களின் வகைகளிலே ஆகுபெயர் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அது தொன்றுதொட்டு வரும் சிறப்பை உடையது.

***ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர்*** என்பர் மயிலைநாதர். ***வழக்கின் கண்ணும் செய்யுட் கண்ணும் பயின்று வருவனவற்றின் இடையே தோன்றியவாறு ஆக்கப்படுவன அல்ல*** என்பர் சங்கர நமச்சிவாயர்.

ஒரு பெயரினது பொருள், அதனை முடிக்க வரும் சொல்லின் பொருளோடு பொருத்தமின்றிப் போவதுண்டு. அப்போது அப்பெயரில் ஆக்கப்பொருள் கொள்ளப் பெறும். இவ்வாறு ஆக்கப் பொருள் கொள்ளும் மொழியே ஆகுபெயர். ஒரு பொருளினது பெயர், அப்பொருளோடு இயைபுடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருவது ஆகுபெயர். உலகம் என்ற பெயரின் பொருளை அறிவோம். உலகம் சிரிக்கிறது என்றபோது உலகம் என்ற பெயர் உலக மக்களுக்கு ஆகிவிடுமன்றோ?

**பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்குஇயை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே**

(நன். 290)

என்ற நூற்பா ஆகுபெயரின் வகையைச் சுட்டும். இனி ஆகுபெயர்களின் வகைகளைக் காண்போம்.

## 1. பொருளாகு பெயர்

ஆம்பல் மணக்கும்: ஆம்பல் என்பது ஆம்பல் கொடி முழுமையையும் குறிக்கும் முதற்பெயர். இங்கு அதன் பூவாகிய சினைக்கு ஆகி வந்தது.

காஞ்சிபுரம் உடுத்தினாள்: காஞ்சிபுரம் இடப்பெயர். அவ்வூரில் நெய்யப்பட்ட சேலைக்கு ஆகி வந்தது

## 2. இடவாகு பெயர்

தமிழகம் வென்றது: தமிழகம் என்ற இடப்பெயர் அதனைச் சேர்ந்த வீரருக்கு ஆகி வந்தது.

## 3. காலவாகு பெயர்

கோடை விளைந்தது: கோடை என்ற காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.

## 4. சினையாகு பெயர்

அறுகால் பாடும்: அறுகால் என்ற சினைப்பெயர் ஆறுகாலை உடைய வண்டிற்கு வந்தமையால் இது சினையாகு பெயர்.

மருக்கொழுந்து நட்டான்: கொழுந்து எனும் சினைப்பெயர் அதன் முதலுக்கு ஆகி வந்தது.

## 5. குணவாகு பெயர் (பண்பாகு பெயர்)

கார் நிகர்த்த கரம்: கார் (கருமை) என்ற பண்புப்பெயர் அந்நிறத்தையுடைய முகிலிற்கு ஆகி வந்தது.

நீலம் சூடினான்: நீலம் எனும் பண்புப்பெயர் நீலநிறம் கொண்ட குவளைக்கு ஆகி வந்தது.

## 6. தொழிலாகு பெயர்

துவையல் தொட்டான், வற்றல் உண்டான்: துவையல், வற்றல் என்ற தொழிற்பெயர்கள் அவற்றைப் பொருந்திய உணவுக்கு ஆகிவந்தன.

## 7. அளவையாகு பெயர்

**எண்ணல்**

ஆறுகொடு: ஆறு எனும் எண்ணுப்பெயர் ஆறுகனிகட்கு ஆகிவந்தது.

அரை போதும்: அரை எனும் எண்ணுப்பெயர் அரையாக விளக்கப்பட்ட பொருளுக்கு ஆகி வந்தது.

**எடுத்தல்**

மூன்றுவீசை போடு: வீசை என்ற எடுத்தல் அளவைப் பெயர் அவ்வளவையுடைய கிழங்கிற்கு ஆகி வந்தது.

**முகத்தல்**

இருநாழி தந்தான் ஈசன்: இருநாழி என்ற முகத்தல் அளவைப் பெயர் இருநாழி நெல்லை உணர்த்திற்று.

## 8. சொல்லாகு பெயர்

உடுப்பது நான்கு முழம்: முழம் என்ற நீட்டல் அளவைப் பெயர் அவ்வளவு கொண்ட துணிக்கு ஆகி வந்தது.

உரை எழுதினான்: உரை என்ற சொல் எழுதப்படும் எழுத்திற்கு ஆதலால் இது சொல்லாகுபெயராம். *இத்தகையதொரு சொல்லாகு பெயரே இல்லை* என்பர் சங்கர நமச்சிவாயர்.

### 9. தானியாகு பெயர்

தானம் என்பது இடம் - தானி என்பது இடத்து நிகழ் பொருளின் பெயர். அது இடத்துக்கு ஆவது தானியாகு பெயர்.

விளக்கு முறிந்தது: விளக்கு எனும் ஒளியின் பெயர் அதற்குத் தானமாகிய விளக்குத் தண்டினுக்கு ஆகி வந்துள்ளது.

திருவாசகம் கற்றேன்
திருவாய்மொழி கற்றேன்

என *வாசகம், மொழி* என்ற கருவிகளாலேயே அவ்வந் நூல்கள் சுட்டப்பட்டன.

### 10. காரியவாகு பெயர்

இந்நூல் அணி - எனின் இந்நூல் அணியிலக்கணம் கூறும் நூல் எனப் பொருள்படும். காரியத்தின் பெயர் அதனை உடைய நூலுக்கு ஆகி வந்தன.

### 11. கருத்தாவாகு பெயர்

இளங்கோ கற்றேன்
இந்நூல் வள்ளுவர்

என்பனவற்றில், கருத்தாக்களின் பெயர் அவரியற்றிய நூல்களுக்கு ஆகிவந்தன.

### 12. உவமையாகு பெயர்

காளை வந்தான்
பாவை ஓடினாள்

எனும் உவமை, ஆகுபெயர்களையும் கொள்க.

### 13. விடாதவாகு பெயர்

கடுத் தின்றான்
புளித் தின்றான்

என்பவற்றில், கடுவும், புளியும் தத்தம் பொருளாகிய சுவையை விடாமல் நின்று காய், கனி என்பவற்றுக்கு ஆகி வந்தமையால் இவை விடாதவாகு பெயராயிற்று.

### 14. விட்டவாகு பெயர்

ஊர் கூடியது என்பதில் ஊர் என்ற இடப்பெயர். தன்பொருளை விட்டுத் தன்னிடத்தில் உள்ள மனிதரை உணர்த்தலால் விட்டவாகு பெயராயிற்று.

### 15. இருமடியாகு பெயர்

கார் நிகர்த்த கரம் என்பது, கருமை நிறப்பெயர் மேகத்திற்கு ஆகி வந்தமையால் ஆகுபெயர். கார் வந்தது என்னும் போது கார் எனும் கருமை நிறப்பெயர் மேகத்திற்காகி, அதுவே, பின் மேகம் மழைபொழியும் பருவமாகிய கார்காலத்திற்கு ஆகிவரும்போது இருமடியாகு பெயர்.

### 16. மும்மடியாகு பெயர்

கார் அறுத்தது என்புழிக் கருமை நிறப்பெயர் மேத்திற்காகி, அது பின் கார்காலத்திற்காகி, அதுவே பின் கார்காலப் பயிருக்கு ஆகிவருவதால் மும்மடி ஆகுபெயர்.

### 17. அடையடுத்த ஆகு பெயர்

வெற்றிலை நட்டான்
மருக்கொழுந்து நட்டான்

என்பதில் இலை கொழுந்து என்பன வெறுமை மரு என்ற அடைமொழிகளோடு ஆகுபெயராயினவாதலால், அடையடுத்தவாகு பெயர் ஆயின.

### 18. இருபெயரொட்டாகு பெயர்

ஒரு பொருட்கு இருபெயர் ஒட்டி நிற்க அவற்றுள் ஒன்று ஆகுபெயராக நின்றால் அது இருபெயரொட்டாகுபெயர்.

வகரக்கிளவி (வகரமாகிய எழுத்து) இதில் சிறப்புப் பெயரொன்றும் பொதுப் பெயரொன்றும் இணைந்து வருகின்றன. கிளவி எனும் பெயர் எழுத்துக்கு ஆகி வருகிறது.

### ஆகுபெயரும் அன்மொழித் தொகையும்

ஆகுபெயரும், அன்மொழித்தொகையும், தம்பொருளை உணர்த்தாமல் வேறு பொருளை உணர்த்துவதால், ஓரளவு ஒப்புமையுடையன. ஆயின் வேறுபாடும் உண்டு.

| ஆகுபெயர் | அன்மொழித் தொகை |
|---|---|
| 1. ஆகுபெயர் ஒரு சொல்லாய் வரும். | 1. அன்மொழித்தொகை இரண்டு முதலிய பல சொற்களாய் வரும். |
| 2. ஆகுபெயர் தொன்றுதொட்டு வரும். | 2. அன்மொழித் தொகை புலவனால் புதிதாகப் படைக்கப்படுவது. |
| 3. ஆகுபெயர் பொருளிடம் காலம் முதலிய தொடர்பால் வேறு பொருள் உணர்த்தும். | 3. அன்மொழி வேற்றுமை, வினை முதலிய தொகைகள் மீது வரும். |
| 4. ஆகுபெயர் நியதிப் பெயராய் வரும். | 4. அன்மொழி, புல்வன் தன் கூற்றாகவேனும், பிறர் கூற்றாகவேனும் பாடுமிடத்து ஆங்காங்கே வரும். |

## வேற்றுமை

### வேற்றுமை என்பது யாது?

பெயர்கள் வேற்றுமை ஏற்கும் இயல்புடையன. ஆதலால், பெயரியலின் இறுதியில் வேற்றுமை பற்றிய செய்திகளை விளக்குகிறார் நன்னூலார்.

வேற்றுமையாவது பொருளை வேற்றுமைப்படுத்துவது.

இராமன் அடித்தான் (இராமன் - எழுவாய்)

இராமனை அடித்தான் (இராமன் - செயப்படுபொருள்)

இராமன் கொடுத்தான் (இராமன் - கொடுப்பவன்)

இராமனுக்குக் கொடுத்தான் (இராமன் - கொள்பவன்)

என்பவற்றில், வேற்றுமை உருபுகள் எவ்வாறு பொருளை வேற்றுமை செய்கின்றன என்பதை உணரலாம்.

*ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்*
*வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை*

(நன். 291)

என்ற நூற்பாவில் நான்கு செய்திகள் இடம் பெறுகின்றன.

1. எல்லாப் பெயர்களும் எல்லா வேற்றுமையையும் ஏற்பதில்லை.

2. வேற்றுமை உருபுகள் பெயர்களின் ஈற்றில் இடம் பெறும்.

(எ-டு) அவனை, அவனுக்கு, அவனால்.

வேற்றுமை உருபு பெயரின் இறுதியில் இடம்பெறும். அதனால் அதனைப் பின்னொட்டு (Suffix) எனலாம் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் உருபுகள் பெயரின்முன் தனித்து நிற்கும்.

(எ-டு) By him, To him, With him.

3. பொருளை வேற்றுமை செய்வதே வேற்றுமை.

4. தமிழில் வேற்றுமை எட்டு வகைப்படும்.

விளிவேற்றுமை பெயரினது விகாரம் என்று கொண்டு அதனை முதல்வேற்றுமையில் அடக்கி வேற்றுமை ஏழு எனக் கொள்வர் சிலர். அவரது கொள்கையை மறுத்து எட்டே வேற்றுமை எனத் தேற்ற ஏகாரம் தந்து உரைத்தார் ஆசிரியர்.

## வேற்றுமை பெயர் - முறை

*பெயரே, ஐ ஆல் கு இன் அது கண்*
*விளி என்று ஆகும் அவற்றின் பெயர் முறை*

(நன். 292)

என்பது வேற்றுமையின் பெயர்களையும், அவற்றின் வைப்பு முறையையும் உணர்த்தும்.

| | |
|---|---|
| பெயர் | எழுவாய் வேற்றுமை (முதல் வேற்றுமை) |
| ஐ | இரண்டாம் வேற்றுமை |
| ஆல் | மூன்றாம் வேற்றுமை |
| கு | நான்காம் வேற்றுமை |
| இன் | ஐந்தாம் வேற்றுமை |
| அது | ஆறாம் வேற்றுமை |
| கண் | ஏழாம் வேற்றுமை |
| விளி | எட்டாம் வேற்றுமை |

இவற்றுள் எழுவாய் உருபாகிய பெயரே ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளையும் ஏற்றுவரும்.

**ஆறன் உருபும் எற்குமவ் வுருபே**

(நன். 293)

இந்நூற்பாவிற்கு மூன்று விளக்கம் தருவர்.

1. ஒன்றும் எட்டும் உருபேலா; எஞ்சிய ஆறும் உருபேற்கும்.
2. ஆறாம் வேற்றுமையின் மற்றொரு உருபு அ என்பது
3. ஆறன் உருபாகிய *அது* பிற உருபுகளை ஏற்கும்.

### உருபு ஏற்காத பெயர்கள் (நன். 294)

நீயிர், நீவிர், நான் என்ற பெயர்கள் எழுவாய் அல்லாத பிற வேற்றுமைகளை ஏற்பதில்லை. ஏற்பதாயின் வடிவில் திரிபடையும்.

நீ என்ற பெயர் நும் என்று திரிந்து வேற்றுமை எற்கும். யான் என்ற பெயர் என் எனத் திரிந்து வேற்றுமை ஏற்கும்.

## பெயர் வேற்றுமை (முதல் வேற்றுமை)

முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனவும் கூறப்படும். எழுவாய் வேற்றுமைக்கு உருபு கிடையாது. அது திரிபு அடையாத பெயராக வரும் வினை, பெயர், வினா ஆகியவற்றைப் பயனிலையாகக் கொண்டு அவற்றுக்கு வினை முதலாக வருவதே எழுவாய் வேற்றுமையின் பொருள்.

இதற்கு நூற்பா

**அவற்றுள்**
**எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே**
**வினைபெயர் வினாக்கொளல் அதன் பயனிலையே**

(நன். 294)

என்பதாகும்.

| | | |
|---|---|---|
| சாத்தன் வந்தான் | தெரிநிலை வினை | வினை கொண்டு முடிந்தன |
| அவன் பெரியன் | குறிப்பு வினை | |

| | |
|---|---|
| சாத்தன் இவன் | பெயர் கொண்டு முடிந்தன |
| ஆ ஒன்று | |

| | |
|---|---|
| அவன் யார்? | வினாக் கொண்டு முடிந்தன |
| ஆ யாது | |

திரிபு இல்லாத பெயரை வேற்றுமை என எவ்வாறு அழைப்பது என்று சிலர் ஐயுறுவர். திரிபு இல்லாப் பெயராயினும், இங்குக் கருத்தாப் பொருளாக (வினைமுதற் பொருள்) மாறி நிற்கிறதல்லவா? அதனால் ஆகிற்று.

| | |
|---|---|
| சாத்தன் பெயர் | எழுவாய் வேற்றுமை |
| சாத்தன் வந்தான் | |

உரையிற் கோடல் உத்தியால் எழுவாய் வேற்றுமைக்கு உருபு உண்டு என்பாரும் உளர். அதாவது, ஆனவன், ஆகின்றவன், ஆவான் என்பவன் முதலிய சொற்கள் சொல்லுருபுகளாக வந்து எழுவாய் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் என்பர்.

சாத்தனானவன் வந்தான்
சாத்தியானவள் வந்தாள்
சாத்தரானவர் வந்தார்
யானையானது வந்தது
யானையானவை வந்தன

இக்கருத்தை மறுப்பவரும் உண்டு.

தொல்காப்பியர்,1. பொருண்மை சுட்டல் 2. வியங்கொள வருதல் 3. வினை நிலை உரைத்தல் 4. வினாவினை ஏற்றல் 5. பண்புகொள வருதல் 6. பெயர்கொள வருதல் என்று எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகளை ஆறாக வகுப்பர். நன்னூலாரோ அவற்றை வினை, பெயர், வினா என்ற மூன்றாகத் தொகுப்பர்.

## இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை உருபு *ஐ* என்பதாகும். இவ்வேற்றுமை

1. ஆக்கல்
2. அழித்தல்
3. அடைதல்
4. நீத்தல்
5. ஒத்தல்
6. உடைமை

என்ற பொருட்களில் வரும். இதற்கு நூற்பா

*இரண்டாவத னுருபு ஐயே; அதன் பொருள்*
*ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்*
*ஒத்தல் உடைமை ஆதி யாகும்*

இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருள் வேற்றுமையாகும்.

குடத்தை வனைந்தான்---ஆக்கப்படு பொருள்
குடத்தை உடைத்தான்---அழிக்கப்படுபொருள்
ஊரை அடைந்தான்---அடையப்படுபொருள்
வாழ்வைத் துறந்தான்---துறக்கப்படு பொருள் (நீத்தல்)
புலியை ஒத்தான்---ஒப்புப்பொருள்
பொன்னை உடையன்---உடைமைப்பொருள்

குடத்தை வனைந்தான் என்னுமிடத்தே வனைதல் வினைமுதலின் தொழில். அத்தொழிலின் பயன் குடம் தோன்றுதல், அப்பயனை உறுவது குடம் ஆதலின் குடம், செயப்படு பொருள்:

*ஒருவன் ஒருவினை செய்ய அதனால் தோன்றிய பொருள்யாது*
*அது செயப்படுபொருள்*

என்று விளக்குவர் சிவஞான முனிவர்.

ஆதி என்றமையால், செயப்படு பொருளாக வந்து வேற்றுமை செய்வன எல்லாவற்றையும் கொள்க.

வீட்டை விரும்பினான்---விரும்பற்பொருள்

நூலை அறிந்தான்---அறிதற்பொருள்

அவனை ஒவ்வான்---ஒவ்வாமைப் பொருள்

செயப்படு பொருளை,

1 கருத்தில் செய்வது
2 கருத்தின்றிச் செய்வது
3 இருமையில் செய்வது
4 இரண்டு உருபு இணைவது
5 அகநிலை ஆவது
6 தானே கருத்தா ஆதல்

என இவை முதலாகப் பலவகைப்படுத்துவர் உரையாசிரியர்கள்.

1. பாலை அருந்தினான்---கருத்தில் செய்வது

2. சோற்றைக் குழைத்தான்---கருத்தின்றிச் செய்வது

3. பதரையும் நெல்லையும் பணத்திற்குக் கொண்டாள்---கருதியும் கருதாமலும் இருமையிற் செய்வது

4. பசுவைப் பாலைக் கறந்தான்
ஐயுற்ற பொருளை ஆசிரியன் வினவினான்
பகைவரைச் சிறைச்சாலையை அடைவித்தான் — இரண்டு செயப்படுபொருள் உருபு இணைவது

5. நடத்தலைச் செய்தான்
உண்டலைச் செய்தான் — அகநிலையாவது

6. தன்னைக் குத்தினான் — தானே கருத்தா ஆதல்

என்பன காணத்தக்கன.

## மூன்றாம் வேற்றுமை

மூன்றாவதன் உருபுகளாவன

1. ஆல் 2. ஆன் 3. ஒடு 4. ஓடு என்பன.

மூன்றாம் வேற்றுமையின் பொருளாவன

1. கருவிப்பொருள்
2. கருத்தாப் பொருள்
3. உடனிகழ்வுப் பொருள்

என்பன.

**நூற்பா**

மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவிகருத்தா உடன் நிகழ்வு அதன் பொருள்

ஆல், ஆன் என்ற இரண்டு உருபும், கருவி, கருத்தாப் பொருட்களில் வரும், ஓடு, ஒடு என்ற இரண்டு உருபும் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

வாளால் வெட்டினான் கருவிப்பொருள்)
அரசனால் ஆகிய கோயில் (கருத்தாப் பொருள்)

மைந்தனொடு தந்தை வந்தான்
மைந்தனோடு தந்தை வந்தான் (உடனிகழ்ச்சிப் பொருள்)

## கருவிப் பொருள்

கருத்தாவின் தொழிற்பயனைச் செயப்படு பொருளில் சேர்ப்பது கருவி எனப்படும். கருவி, காரணம், ஏது என்ற சொற்கள் ஒரே பொருள் உடையன.

வாளால் மரத்தை வெட்டினான்

என்ற தொடரில் வாளை வீசுதல் கருத்தாவின் தொழில்; மரம் அறுபடுதல் தொழிலின் பயன்; அப்பயனை மரத்திடம் சேர்ப்பது வாள் ஆதலால் வாள் கருவி ஆயிற்று.

## முதற்கருவி துணைக்கருவிகள்

மண்ணால் குடத்தை வனைந்தான்

செயப்படு பொருளாகிய குடத்தோடு மண் ஒற்றுமை உடையது. ஆதலால் மண் - முதற் கருவி.

திரிகையால் குடத்தை வனைந்தான்

என்பதில் குடம் உருவாகும். வரையில் முதற்கருவியாக மண்ணுக்குத் துணையாய் இருப்பதால் திரிகை துணைக்கருவி.

அகக்கருவி, புறக்கருவி, ஒற்றுமைக்கருவி என்று மூன்றாகவும் கொள்வர் சிலர்.

மனத்தால் நினைத்தான் அகக்கருவி
கோலால் அடித்தான் புறக்கருவி
அறிவால் அறிந்தான் ஒற்றுமைக்கருவி

## கருத்தாப் பொருள்

கருத்தா என்பது வினைமுதல் ஆகும். இக்கருத்தா, இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படும்.

தச்சனால் கோயில் கட்டப்பட்டது இயற்றுதற் கருத்தா
அரசனால் கோயில் கட்டப்பட்டது ஏவுதற் கருத்தா

## உடனிகழ்ச்சிப் பொருள்

உடனிகழ்ச்சிப் பொருள் தலைமைப்பொருள், தலைமை இல்பொருள் என இருவகைப்படும்.

ஆசிரியனொடு மாணவன் வந்தான் தலைமைப் பொருள்
மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான் தலைமை இல் பொருள்

இலக்கியத்தில் ஆன் உருபு உடனிகழ்ச்சிப் பொருளிலும், ஒடு உருபு கருவிப் பொருளிலும் வரக் காண்கிறோம்.

*தூங்கு கையான் ஓங்கு நடைய* — *தூங்கு கையொடு* என்று பொருள்படும்.

*ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்* — *ஊசியாற் குயின்ற தூசும் பட்டும்* என்று பொருள்படும்.

*ஆல்* உருபுக்குச் சொல்லுருபாகக் *கொண்டு* என்ற சொல்லும் ஒடு உருபுக்குச் சொல்லுருபாக உடன் என்ற சொல்லும் பயன்படுகின்றன.

## நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமைக்கு உருபாவது கு என்பது. இது,

1. கொடை
2. பகை
3. நேர்ச்சி (நட்பு)
4. தகவு (தகுதி)
5. அதுவாதல் (முதற்காரணம்)
6. பொருட்டு (நிமித்தகாரணம்)
7. முறை (உறவு)

என்னும் ஏழு பொருளில் பயன்படும்.

**நூற்பா**

நான்கா வதற்கு உருபாகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவு அதுவாதல்
பொருட்டு முறை ஆதியின் இதற்கு இது எனல் பொருளே

(நன். 298)

| | |
|---|---|
| கொடைப் பொருள் | இரவலர்க்குப் பொன்னைக் கொடுத்தான் |
| பகைப்பொருள் | பாம்புக்குப் பகை கருடன் |
| நட்புப் பொருள் | சாத்தனுக்கு நண்பன் கொற்றன் |
| தகுதிப்பொருள் | அரசர்க்கு உரியது அருங்கலம் |
| அதுவாதல் பொருள் (முதற்காரணம்) | தாலிக்குப் பொன் |
| பொருட்டு (நிமித்தகாரணம்) | கூலிக்கு வேலை |
| முறை | சாத்தானுக்கு மருமகன் கொற்றன் |

தகுதிப் பொருளாவது, தன்னோடு பொருந்துவதற்குத் தகுதியான பொருள்.
அதுவாதற் பொருளாவது முதற்காரணமாக அமையும் பொருள்.
பொருட்டுப் பொருளாவது நிமித்த காரணமாக அமையும் பொருள்.

இன்னும் நான்காம் வேற்றுமை உருபு கீழ்க்கண்ட பொருள்களில் வரும்.

| | |
|---|---|
| மழைக்கு மின்னல் | அறிகுறிப்பொருள் |
| அவனுக்கு இது போதும் | குறைவின்மைப் பொருள் |
| மதுரைக்கு வடக்குச் சிதம்பரம் | எல்லைப் பொருள் |

இவ்வுருபு நிற்க வேண்டிய இடத்தில் ஆக, பொருட்டு, நிமித்தம் போன்ற சொல்லுருபுகள் பயன்படும்.

## ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமைக்கு உருபாவன இல், இன் என்பன. அவை உணர்த்தும் பொருள் 1. நீக்கல் 2. ஒப்பு 3. எல்லை 4. ஏது என நான்காகும்.

| | |
|---|---|
| நீக்கப்பொருள் | மலையின் வீழ் அருவி |
| ஒப்புப் பொருள் | காக்கையின் கரிது களம்பழம் |
| எல்லைப்பொருள் | மதுரையின் வடக்கு சிதம்பரம் |
| ஏதுப்பொருள் | கல்வியிற் பெரியவர் கம்பர் |

எல்லைப்பொருளாவது அறியப்படாத பொருளினது திசையளவு, வழியளவு, கால அளவு, பண்பு முதலியவற்றைக் குறிப்பிட எல்லையாக நிற்கும் பொருளாகும். அறியப்படாத சிதம்பரத்தின் திசையைக் குறிக்க எல்லையாக நிற்பது அறியப்பட்ட பொருளாகிய மதுரையாதலால் மதுரை எல்லைப்பொருள்.

ஏதுப் பொருளாவது ஒரு பொருளின் பெருமை முதலியவற்றுக்கு ஏதுவாகும் பொருள்.

கல்வியிற் பெரியவர் கம்பர் என்னுமிடத்துக் கம்பருடைய பெருமைக்கு ஏது கல்வியாதலால் கல்வி-ஏதுப்பொருள்.

நின்று, இருந்து என்ற சொல்லுருபுகள் ஐந்தாம் வேற்றுமை உருபுக்குத் துணையாய் வரும்.

ஊரினின்று போயினான்
ஊரிலிருந்து போயினான்

## ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ என்பன, இவற்றுள் அது ஆது என்பன ஒருமைக்கு வருவன. அ என்னும் உருபு பன்மைக்கு வருவது. ஆறாம் வேற்றுமை உருபின் பொருளாவது கிழமைப் பொருளாம். கிழமைப் பொருள் தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகைப்படும்.

ஆறாம் வேற்றுமைப் பொருளை வழங்குங்கால்,

| **தற்கிழமை** | **பிறிதின் கிழமை** | |
|---|---|---|
| பண்பு | பொருள் | காலம் |
| உறுப்பு | இடம் | |
| ஒன்றன் கூட்டம் | | |
| பலவின் கூட்டம் | | |
| திரிபின் ஆக்கம் | | |

என வகுக்கலாம்.

**தற்கிழமை**

| | |
|---|---|
| பண்பு | சாத்தனது கருமை |
| உறுப்பு | சாத்தனது கை |
| ஒன்றன் கூட்டம் | படைகளது தொகுதி |
| திரிபின் ஆக்கம் | நெல்லினது பொரி |

**பிறிதின் கிழமை**

| | |
|---|---|
| சாத்தனது பசு<br>முருகனது வேல் | பொருள் |
| சாத்தனது வீடு<br>முருகனது குறிஞ்சி | இடம் |
| சாத்தனது நாள்<br>மாரனது வேனில் | காலம் |

எனது கை, தனது தலை, என் கைகள், தன் தாள்கள் என்பன இதற்கு எடுத்துக்காட்டுகள்.

*ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்*
*பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புஉறுப்பு*
*ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்*
*திரிபின் ஆக்கமாம் தற்கிழமையும்*
*பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே*

(நன். 300)

தற்கிழமையாவது தன்னோடு ஒத்த ஒற்றுமை உடையது.
பிறிதின் கிழமையாவது தன்னின் வேறாயது.
ஆறாம் வேற்றுமை உருபு

| | |
|---|---|
| இராகுவினது தலை<br>எனது உயிர் | என ஒற்றுமைப் பொருளில் வரும். |

ஆறாம் வேற்றுமை உருபாகிய அது, ஆது என்பன அஃறிணைக்கு இயைந்தவையேயன்றி உயர்திணைக்கு இயையா. அதாவது *எனது மாடு*, என்பது பொருந்தும். *எனது மகன்* என்பது பொருந்தாது.

மிகச் சிறுபான்மை, *அரசனது தோழன், நினது அடியார்* என வரும்.

மற்றும் உயர்திணையைக் குறிக்க வருமிடத்து, *எனக்கு மகன், எனக்குத் தந்தை* என உருபு பெறும். ஆனால், தொல்காப்பியர் *அது* உருபு முறைப் பொருளில் வரக்கூடும் என்று கூறியுள்ளார்.

ஆறாம் வேற்றுமையாகிய *அது* என்பதற்குச் சொல்லுருபாக *உடைய* என்பது பயன்படும்.

(எ-டு) என்னுடைய வீடு, சாத்தனுடைய மாடு.

## ஏழாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமை இடப்பொருள் வேற்றுமை ஆகும். இதற்குக் கண் முதலான 28 உருபுகளாகும்.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆறு பொருளிலும் தற்கிழமை, பிறிதின் கிழமைகளாக வரப்பெறும்.

ஏழன் உருபு கண் ஆதியாகும்
பொருள் முதல் ஆறும் ஓரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப

என்ற நூற்பா (நன். 301) ஏழாம் வேற்றுமைப் பொருளை விளக்கும்.

| | | |
|---|---|---|
| பொருள் | - மணியின் கண் ஒளி | - தற்கிழமை |
| பொருள் | - பனையின் கண் பறவை | - பிறிதின் கிழமை |
| இடம் | - ஊரின் கண் வீடு | - தற்கிழமை |
| இடம் | - விண்ணின் கண் பருந்து | - பிறிதின் கிழமை |
| காலம் | - நாளின் கண் நாழிகை | - தற்கிழமை |
| காலம் | - வேனிலின் கண் பாதிரி | - பிறிதின் கிழமை |
| சினை | - கையின் கண் விரல் | - தற்கிழமை |
| சினை | - கையின் கண் வளையல் | - பிறிதின் கிழமை |
| குணம் | - கறுப்பின் கண் உள்ளது அழகு | - தற்கிழமை |
| குணம் | - இளமையின் கண் வாய்ந்த செல்வம் | - பிறிதின் கிழமை |
| தொழில் | - ஆடற்கண் உள்ளது சதி | - தற்கிழமை |
| தொழில் | - ஆடற்கண் பாடிய பாட்டு | - பிறிதின் கிழமை |

நீங்காது உறைவது தற்கிழமையும், நீங்கி உறைவது பிறிதின் கிழமையும் ஆவதனை மேற்கண்ட எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

ஏழாம் வேற்றுமையின் இடப்பொருளைத் தரும் பிற உருபுகளை,

கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின்,
முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல்,
பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி,
உள், அகம், புறம், இல், இடப்பொருள் உருபே

என்ற நூற்பாவால் (நன். 302) அறியலாம்.

| | | |
|---|---|---|
| கால் | : | ஊர்க்கால் நிவந்த பொதும்பர் |
| கடை | : | வேலின் கடை மணி |
| இடை | : | நல்லாரிடைப்புக்கு |
| தலை | : | வலைத்தலை மான் |
| வாய் | : | கடல்வாய் அமுதம் |
| திசை | : | நேர்த்திசை அமர்ந்தான் |
| வயின் | : | அவன்வயின் செல்க |
| முன் | : | கற்றார்முன் தோன்றாது |
| சார் | : | காட்டுச்சார் ஓடும் |
| வலம் | : | கைவலத்து யாழ் |
| இடம் | : | இவ்விடம் |
| மேல் | : | தன் மேல் |
| கீழ் | : | நிழல் கீழ் எந்தம் அடிகள் |
| புடை | : | எயில் புடை நின்றான் |
| முதல் | : | சுரன் முதல் வந்த |
| பின் | : | காதலி பின் சென்றது |
| பாடு | : | நம்பாடு அணையாத நாள் |
| அளை | : | கல் அளை நீர் |

| | | |
|---|---|---|
| தேம் | : | தோழிக் குரியவை கோடாய் தேஎத்து |
| உழை | : | அவனுழையிருந்தார் |
| வழி | : | வேங்கை நிழல்வழி அமர்ந்தான் |
| உழி | : | உரைப்புழி ஓலை போல் |
| உளி | : | காவுளிச்சேர்ந்த குயில் |
| உள் | : | முல்லையங்குவட்டுள் வாழும் |
| அகம் | : | பல்லாரகம் |
| புறம் | : | என்னுயிர்ப்புறத்து இறுத்த இருள் மாலை |
| இல் | : | ஊரில் இருந்தார் |

- என இட உருபுகள் பயன்படும்.

## எட்டாம் வேற்றுமை

எட்டாம் வேற்றுமையானது விளி வேற்றுமையாகும். விளி என்பது படர்க்கையில் உள்ளவரைத் தன்முகமாகத் தான் அழைப்பது; விளி ஏற்கும்போது பெயரின் ஈறு அடையும் மாறுதல்களே எட்டாம் வேற்றுமையின் உருபுகள் எனப்படுகின்றன. விளி வேற்றுமையில் பெயர்கள் கீழ்க்காணும் நிலைகளை அடையும் 1. திரிதல் 2. கெடுதல் 3. மிகுதல் 4. இயல்பாதல் 5. ஈற்றுக்கு அயல் எழுத்துத் திரிதல்.

இச்செய்திகளை,

*எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்*
*திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்*
*திரியுமாம் பொருள் படர்க்கை யோரைத்*
*தன்முக மாகத் தான் அழைப் பதுவே*

(நன். 303)

என்ற நூற்பா உணர்த்துகிறது.

அன்னை - அன்னாய்! ஈறுதிரிதல்
அரசன் - அரச! ஈறுகெடுதல்
மகன் - மகனே! மிகுதல்
நம்பி - நம்பி! இயல்பாதல்
மக்கள் - மக்காள்! ஈற்றுக்கு அயல் எழுத்துத் திரிதல்

### விளிக்கப்படும் பெயர்கள்

1. இ, உ, ஐ, ஊ, ஓ என்ற ஐந்து உயிர்களும், ன, ள, ர, ல, ய என்ற ஐந்து மெய்களும் ஈறாகக் கொண்ட உயர்திணைப் பெயர்கள் விளிக்கப்படும்.

2. மேற்கண்ட பத்து எழுத்துக்களுள்ளே, ஓ, ர எனும் இரண்டும் தவிர்த்து, ண, ஆ என்னும் இரண்டும் கூட்டி நின்ற பத்து எழுத்துக்களையும் ஈறாகக் கொண்ட பொதுப் பெயர்கள் விளி ஏற்கும்.

3. மொழிக்கு ஈறாகும் என்று முன்பே சொல்லப்பட்ட இருபத்தோரெழுத்துக்களையும் ஈறாகக் கொண்ட அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்கும்.

மேற்கண்ட மூவகைப் பெயர்களும் 1. இயல்பாதல் 2. ஏகாரம் மிகுதல் 3. இகரம் ஆதல் என்றவாறு விளியேற்கும்.

### உயர்திணைப் பெயர்கள்

**இயல்பாதல்** முனி கூறாய்! வேந்து கூறாய்! ஆடுஉ, கூறாய்! விடலை, கூறாய்! கோக்கூறாய்! கோன் கூறாய்! வேள், கூறாய்! மாந்தர் கூறீர்! தோன்றல் கூறாய்! சேய் கூறாய்!

ஏகாரம் மிகுதல் முனியே கூறாய்!

இகரம் ஈகாரமாதல் நம்பீ கூறாய்!

## பொதுப் பெயர்கள்

இயல்பாதல் சாத்தி வருதி! கூற்று, கேளாய்! தந்தை, கூறாய்! சாத்தன், வாராய்! தூங்கல், வாராய்! தாய் கேளாய்! ஆண், கூறாய்!

ஏகாரம் மிகுதல் பிதாவே கூறாய்!

ஈகாரம் ஆதல் சாத்தீ இயம்பு

## அஃறிணைப் பெயர்கள்

இயல்பாதல் புறா, சொல்லாயோ! கிளி, உரையாய்!

ஏகாரம் மிகுதல் புறாவே நீ வா! கிளியே வா!

ஈகாரம் ஆதல் மந்தீ நீ வா! தீ, நீ சேராய்!

இக்கருத்துக்களை,

இம் முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்
இகர நீட்சியும் உருபாம் மன்னே

(நன். 305)

என்ற நூற்பாவால் அறியலாம்.

இவற்றுள் ஐகார ஈற்றுப் பொதுப்பெயருக்கு, முற்கூறிய பொது விதிகளோடு சிறப்பு விதியும் உண்டு.

1. ஆ வாகத் திரிதல் - அன்னை - அன்னா!

2. ஆய் எனத் திரிதல் - அன்னை - அன்னாய்! என்ற இரண்டும் விளி உருபாம்.

உயர்திணை, அஃறிணைப் பெயர்களில், ஐகாரம் ஆவாகத் திரிதல் நிகழும்.

விடலை - விடலாய்!
நாரை - நாராய்!

இனி விளியுருபுகளுக்குச் சிறப்பு விதிகள் காண்போம்.

## னகர ஈற்றுப் பெயர்கள்

னகர ஈற்றுப் பெயர்களை, உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், பொதுப் பெயர் என முப்பெயர்களாக வகுத்து அவை விளி வேற்றுமையில் எவ்வாறு திரிகின்றன எனக் காண வேண்டும்.

## உயர்திணைப் பெயர்கள்

னகர ஈற்று உயர்திணைப் பெயர்கள், கீழ்க்கண்டவாறு விளி ஏற்கும்.

1. அளபெடுத்தல்: அம்பர் கிழான் - அம்பர் கிழா அன்!
2. ஈறுகெடுதல்: புலவன் - புலவ!

3. ஈற்றயல் நீளுதல்: பெருமன் - பெருமான்!
4. ஈறுகெட்டு ஈற்றயல் நீளுதல்: மன்னன் - மன்னா!
5. ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓகாரம் மிகுதல்: ஐயன் - ஐயாவோ!
6. ஈறுகெட்டு ஓகாரம் மிகுந்தல் : திரையன் - திரையவோ!
7. இறுதி யகரமாதல்: வாயிலான் - வாயிலாய்!
8. இறுதி யகரமாகி, ஈற்றயல் ஆகாரம் ஒகரமாகி, ஏகாரம் மிக்கது: வாயிலான் - வாயிலோயே!
9. ஈறுகெட்டு ஈற்றயல் அகரம் ஏகாரம் ஆயிற்று: ஐயன் - ஐயே!

## அஃறிணைப் பெயர்கள், னகர வீற்று அஃறிணைப் பெயர்கள்

1. ஈறு கெடும் : அலவன் - அலவ!
2. ஈறுகெட்டு ஈற்றயல் நீளும்: கலுழன் கலுழா!

## பொதுப் பெயர்கள்

னகரவீற்றுப் பொதுப்பெயர்களும்

1. ஈறு கெடும்: சாத்தான் - சாத்த
2. ஈறுகெட்டு ஈற்றயல் நீளும்: கொற்றன் - கொற்றா!

## ளகர வீற்றுப் பெயர்கள்

ளகரவீற்றுப் உயர்திணைப் பெயர்கள் கீழ்க்காணுமாறு விளி பெறும்:

1. அளபெடுத்தல்: வேள் - வேஎள்!
2. ஈறு கெடுதல்: எல்லாள் - எல்லா!
3. ஈற்றயல் நீளல்: மக்கள் - மக்காள்!
4. இறுதியகரமாதல்: குழையாள் - குழையாய்
5. ஈற்றயல் அகரம் ஏகாரமாதல்: அடிகள் - அடிகேள்!

ளகர வீற்று அஃறிணைப் பெயர்களும், பொதுப்பெயர்களும் ஈற்றயல் நீண்டு விளி ஏற்கும்.

ஈற்றயல் நீளல்: அஃறிணைப் பெயர்
கிளிகள் கிளிகாள்

ஈற்றயல் நீளல்: பொதுப் பெயர்
மக்கள் மக்காள்

## லகர வீற்றுப் பெயர்கள்

லகர வீற்று உயர்திணைப் பெயர்கள்,

1. அளபெடுத்தல்: மால் - மா அல்!
2. ஈற்றயல் நீளல்: தோன்றல் - தோன்றால்

என விளி உருபேற்கும்.

லகர வீற்று அஃறிணைப் பெயரும், பொதுப் பெயரும் ஈற்றயல் நீண்டு விளி பெறும்.

ஈற்றயல் நீளல்: அஃறிணைப் பெயர்: முயல் - முயால்!
பொதுப் பெயர்: தூங்கல் - தூங்கால்

## ரகர வீற்றுப் பெயர்கள்

ரகர வீற்றுப் பெயர்கள் விளியேற்கும் முறைகள்:

1. அளபெடுத்தல்: சிறார் - சிறா அர்!
2. ஈற்றயல் அகரம் இகரமாதல்: தெவ்வர் - தெவ்விர்!
3. ஈற்றயல் அகரம் ஈகாரமாதல்: நாய்கர் - நாய்கீர்!
4. ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகி ஏகாரம் மிகுதல்: கணியார் - கணியீரே!
5. ஈற்றயல் யா கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாகி ஈற்றில் ஏகாரம் மிகுதல்: நம்பியார் - நம்பீரே
6. ஈற்றில் ஈர் ஏற்றல்: எமர் -எமரீர்.

யகர வீற்றுப் பெயர்கள் அளபெடுத்து விளியேற்கும்.

சேய் - சேஎய்!

## விளி உருபு ஏலாப் பெயர்கள்

**பொதுவாக விளிகள்,**
**அண்மையில் இயல்பும், ஈறழிவும், சேய்மையின்**
**அளபும், புலம்பின் ஓவும் ஆகும்**

(நன். 313)

என்பர் நன்னூலார்.

**அண்மை:** தம்பி - தம்பி!
அரசன் - அரச!

**சேய்மை:** மால் - மா அல்!

**புலம்பல்:** ஐயன் - ஐயாவோ!

## விளி உருபு ஏலாப்பெயர்

சில கிளைப் பெயர்களும், வினாப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், பொதுப் பெயர்களும் விளி உருபு ஏலா.

**நுவ்வொடு வினா, சுட்டு உற்ற னளர**
**வை து தாம் தான் இன்னன விளியா**

என்பது நூற்பா.

**கிளைப் பெயர்:** நுமன், நுமள், நுமர்.

**வினாப் பெயர்:** எவன், எவள், எவர், எவை, எது,
யாவன், யாவள், யாவர், யாவை, யாது,
ஏவன், ஏவள், ஏவர், ஏவை, ஏது.

**சுட்டுப் பெயர்:** அவன், அவள், அவர், அவை, அது,
இவன், இவள், இவர், இவை, இது,
உவன், உவள், உவர், உவை, உது.

**பொதுப் பெயர்:** தான்

இவையன்றிப் மற்றையான், பிறன் போன்ற பெயர்களும் விளி ஏலா.

# உருபுகள் கூடிநிற்றல்

## முதலும் சினையும்

முதலை ஐயுருபு பொருந்தினால் சினையினைக் கண்ணுருபு பொருந்தும். அது உருபு முதலோடு நிற்பின் சினையின்கண் ஐ உருபு நிற்கும் என்பது பொருள்.

யானையைக் காலின்கண் வெட்டினான்
யானையது காலை வெட்டினான்

இத்தொடர்களில் யானை என்ற முதலும் கால் என்ற சினையும் வருவதைப் பார்க்கிறோம். ஐ உருபு யானையோடு நிற்கும் வேளையில் கண்ணுருபு கால் எனும் சினையொடு வருகிறது. அது உருபு யானையோடு இணைந்து வரும் வேளையில், ஐ உருபு சினையோடு ஆயிற்று. மேற்கூறிய நூற்பாவுக்கு இரட்டுற மொழிதல் என்னும் உத்தியால் அக்கண்ணுருபு முதலோடு நிற்பின் ஐ உருபு சினையோடு நிற்கும் என்றும் பொருள் உரைப்பர்.

(எ-டு) யானையின்கண் காலை வெட்டினான்

பசுவைப் பாலைக் கறந்தான் என்பதில் தன்வினை பிறவினையால் இரண்டு செயப்படுபொருள் நின்றன; அதுபோல் யானையைக் காலை வெட்டினான் என்ற அமைப்பும் பொருள்தரும். எனவே அது சிறப்பன்று.

## பிண்டப் பொருள்

சிலபோது முதற்பொருள் சினைப் பொருள் என்று வேறுபடுத்த இயலாதவாறு பிண்டப்பொருள் அமைவதுண்டு. அது உரைப்பவரின் குறிப்பால் உணரப்படும். நெற்குவியலின் தலையைச் சீவினான் என்னும்போது மேற்கூறிய விதியைப் பெறலாம்.

*முதல் இவை சினை இவை எனவே றுஉள இல*
*உரைப்போர் குறிப்பின் அன்றே பிண்டமும்*

*(நன். 316)*

(எ-டு) நெல்லைப் பொலியின்கண் வாரினான்.
நெல்லினது பொலியை வாரினான்.

# உருபு மயக்கம்

வேற்றுமை உருபுகளில் ஓர் உருபு வரவேண்டியவிடத்து மற்றோர் உருபு வருவதுண்டு. இதனை உருபு மயக்கம் என்பர். எத்தகைய உருபால் சொல்லப்பட்டதாயினும் பொருள் சென்ற வழியே வேற்றுமை உருபு சேரும். இதனால் பொருளுக்குப் பொருந்திய உருபாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

*யாதன் உருபின் கூறிற்று ஆயினும்*
*பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்*

*(நன். 317)*

(எ-டு) நாகு வேயொடு நக்கு வீங்குதோள்

இங்கு ஒடு நிற்கிறது, ஐ உருபின் பொருளே அமைந்து கிடக்கிறது. ஐ உருபு நிற்க வேண்டிய இடத்தில் ஒடு உருபு வந்து மயங்கிற்று.

கிழக்கு மணற்கு ஈன்ற முளை என்னும் தொடரில் மணலின் கண் ஈன்ற முளை என ஏழாம் உருபு நிற்க வேண்டும். ஆனால் அவ்விடத்தில் நான்காம் உருபு மயங்கிற்று. ஆதலின் உருபு மயக்கம் என்பர். உருபு மயக்கத்திற்கு

நன்னூலார் கூறியுள்ள நூற்பா தொல்காப்பியத்தினின்றும் அவ்வாறே எடுத்தாளப்பட்டிருக்கிறது. (தொல. சொல். 85)

செயப்படுபொருளும் கோடற்பொருளும் சிறுபான்மை எட்டாம் வேற்றுமை (நீங்கலாக) எல்லா வேற்றுமை உருபுகளோடும் வரப்பெறும்.

## செயப்படுபொருள்

அரிசியால் சோறு ஆக்கினாள்
அரிசியைச் சோறு ஆக்கினாள் - ஆலும் ஐயும்

பழியின் அஞ்சும்
பழியை அஞ்சும் - இன்னும் ஐயும்

நூலது குற்றம் கூறினாள்
நூலைக் குற்றம் கூறினாள் - அதுவும் ஐயும்

தூணின் கண் சேர்ந்தான்
தூணைச் சேர்ந்தான் - கண்ணும் ஐயும்

## கோடற் பொருள்

செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்
செய்யவள் தவ்வைக்குக் காட்டிவிடும் - ஐயும் குவ்வும்

நாகரது பலி
நாகர்க்குப் பலி - அதுவும் குவ்வும்

## உருபுகள் திரிதல்

செய்யுளில் ஐ, ஆன், கு என்ற மூன்று உருபுகளும் அகரமாகத் திரிந்து வழங்கவும் பெறும். அஃறிணைப் பெயர்களில் ஆன் உருபு மட்டும் அகரமாகத் திரியும், ஐ, கு என்பன திரிவதில்லை.

காவலோனைக் களிறு அஞ்சுமே
காவலோனக் களிறு அஞ்சுமே

புலவரான் - புலவரான
ஆசிரியற்கு - ஆசிரியற்க - உயர்திணையில்

புள்ளினான் - புள்ளினான - அஃறிணையில்

**ஐ ஆன் கு செய்யுட்கு அவ்வும் ஆகும்**
**ஆகா அஃறிணைக்கு ஆன் அல்லாதன**

(நன். 318)

## வேற்றுமைகளின் முடிக்கும் சொல் (நன். 329)

வேற்றுமை உருபுகள் தாம் கொண்டு முடியும் சொற்களை எண்ணிப் பார்க்கிறார் நன்னூலார். கீழ்க்காணும் மூன்று கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.

1. எல்லைப் பொருள் தரும் ஐந்தன் உருபு இன் என்பதும் ஆறாம் வேற்றுமை உருபு அது என்பதும் பெயர் ...ண்டு முடியும்.

கருவூரின் கிழக்கு, சாத்தனது நாடு.

2. சாத்தன் வந்தான் குடத்தை வனைந்தான்.
கல்லால் உடைத்தான் தம்பிக்குக் கொடுத்தான்.
ஊரின் நீங்கினான் நீதிமன்றத்தில் நின்றான்.
சாத்தா! செல் என்று வினையோடு முடியும்.

3. நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையோடு, பெயரும் பெற்று முடிவதுண்டு.

(எ-டு) சாத்தனுக்கு அளித்தேன்.
சாத்தனுக்கு மருந்து.
குன்றில் இருந்தான்.
குன்றின்கண் கூகை.

## பயிற்சி வினாக்கள்

1. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
2. பெயர்ச் சொல்லின் இலக்கணம் யாது?
3. பெயர்ச் சொல் வகைகளைச் சுட்டுக.
4. உருபு மயக்கம் என்றால் என்ன?
5. வழக்குகளின் வகைகள் யாவை?

# 2. வினையியல்

## வினையியற் செய்திகள்

*நன்னூல்* வினையியலில் செய்திகள் கீழ்க்காணுமாறு அமைந்துள்ளன:-

1. தெரிநிலை வினையின் இலக்கணம்.

2. குறிப்பு வினையின் இலக்கணம்.

3. வினைச்சொற்களின் பாகுபாடு.

3.1 முற்றுவினை - ஆண், பெண், பலர், ஒன்று, பல ஆகிய ஐம்பால் முற்றுக்கள்.

3.2 பொதுவினை - இருதிணைப் பொதுவினை.

3.3 எச்சவினை - பெயரெச்சம், வினையெச்சம்.

3.4 ஒழிபுக் கருத்துக்கள்.

## தெரிநிலை வினைச்சொல்லின் இலக்கணம்

தெரிநிலை வினையாவது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பொருளையும் தரும்.

**செய்பவன் கருவி நிலம்செயல் காலம்**
**செய்பொருள் ஆறும் தருவது வினையே**

320)

என்பது நூற்பா.

(எ-டு) வனைந்தான் என்னும்போது, செய்பவன்-குயவன்; முதற்கருவி-மண்; துணைக்கருவி-சக்கரம்; இடம்-நிலம்; செயல்-வனைதல்; காலம்-இறந்தகாலம் (நேற்று, சென்ற ஆண்டு); செயப்படுபொருள் - குடம் ஆகிய ஏழும் புலப்படுவதும் உண்டு. வனைந்தான் என்றதும் (வனை+ந்த்+ஆன்) வனை என்ற பகுதியில் செயல் புலப்படும். ந்த் என்ற இடைநிலையில் இறந்த காலம் புலப்படும். ஆன் என்ற விகுதியில் செய்தவன் என்ற ஆண்பாலும், படர்க்கை என்ற இடமும் புலப்படும் என்பர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம். வனைதலைச் செய்தான் என்று விரித்துக் கூறும்போது வனைதல் என்பதே செயப்படுபொருள் ஆகலாம் என்பர் டாக்டர் கோதண்டராமன்.

## குறிப்பு வினைச்சொல்லின் இலக்கணம்

குறிப்பு வினையாவது, முன்னே சொல்லப்பட்ட செய்பவன் முதலாகிய ஆறனுள், செய்பவன் எனும் ஒன்றை மட்டுமே குறிக்கும். இக்குறிப்பு வினை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறின் அடிப்படையில் பிறக்கும்.

| | | |
|---|---|---|
| (எ-டு) | குழையினன் | - பொருள் |
| | அகத்தினன் | - இடம் |
| | ஆதிரையான் | - காலம் |
| | செங்கண்ணன் | - சினை |
| | கரியன் | - பண்பு |
| | கடுநடையன் | - தொழில் |

பொருள்முதல் ஆறி னும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே
(நன். 321)

என உரைக்கும்.

## வினைச்சொற்களின் பாகுபாடு

தெரிநிலையாகவும், குறிப்பாகவும் வரும் வினைச்சொற்கள்,

1) முற்றுவினை
2) பெயரெச்சம்
3) வினையெச்சம்

என மூவகைப்படுத்தப்பெறும்.

அவ்வினைகள், திணை, பால் இடங்களுள் ஒன்றுக்குச் சிறப்பாய் வருவனவும், பலவற்றிற்குப் பொதுமையாய் வருவனவும் ஆகும்.

முற்றும் பெயர்வினை எச்சமும் ஆகி
ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்
(நன் 322)

| | | | |
|---|---|---|---|
| (எ-டு) | நடந்தான் | - | தன்வினை |
| | நடத்தினான் | - | பிறவினை |
| | வெளுத்தான் | - | தன்வினை, பிறவினை |
| | | - | இரண்டற்கும் பொது |
| | நடந்தான் | - | உடன்பாட்டு வினை |
| | நடவான் | - | எதிர்மறை வினை |
| | சாவான் | - | உடன்பாடு, எதிர்மறை |
| | | - | இரண்டற்கும் பொது |
| | உண்டான் | - | செய்வினை |
| | உண்ணப்பட்டது- | | செயப்பாட்டு வினை |
| | மீன் | | |
| | விழுங்கினவன் | - | செய்வினை செயப்பாடு வினை |
| | | - | இரண்டற்கும் பொது |
| | தேடிய சாத்தன் | - | பெயரெச்சம் |
| | தேடிய வந்தான் | - | வினையெச்சம் |

(தேடிய என்ற எச்சம் வினையெச்சமாகவும் பெயரெச்சமாகவும் வரும்)

## முற்றுவினை

முற்றுவினையானது வினைமுற்று. அது வினையின் பொது இலக்கணமாகிய செய்பவன் முதல் ஆறையும் தோன்றச் செய்யும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறுவகைப் பெயரில் ஒன்றை முடிவாகப் பெற்றுவரும்.

(எ-டு)

| தெரிநிலை வினைமுற்று | குறிப்பு வினைமுற்று | கொண்டபெயர் |
| --- | --- | --- |
| செய்தான் அவன் | -நல்லவன்அவன் | -பொருள் |
| செழித்தது நாடு | -நல்லது நாடு | -இடம் |
| குளிர்ந்தது கூதிர் | -நல்லதுவேனில் | -காலம் |
| குவிந்த கை | -நல்லது கை | -சினை |
| வளர்ந்தது செம்மை | -நல்லது செம்மை | -பண்பு |
| ஒழிந்தது பிறப்பு | -நல்லது துவையல் | -தொழில் |

என இவற்றை ஒட்டிக் காணலாம்.

## வினைமுற்றின் வகை

தெரிநிலை வினைமுற்று 27 வகைப்படும். ஆண்பால் முதல் ஐந்தையும் படர்க்கையிடத்தும், ஒருமைப் பன்மையைத் தன்மை முன்னிலையிலும் முக்காலத்தொடும் முரண 27 ஆகும்.

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| ஆண்பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| பெண்பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| பலர்பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| ஒன்றன்பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| பலவின்பால் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| தன்மை ஒருமை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| தன்மைப் பன்மை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| முன்னிலை ஒருமை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| முன்னிலைப் பன்மை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | 3 |
| | ஆக வினைமுற்று | | | 27 |

## ஆண்பால் வினைமுற்று

*அன், ஆன் இறுமொழி ஆண்பால் படர்க்கை*

(நன். 325)

(எ-டு) அவன் நடந்தனன், நடக்கின்றான், நடப்பான், குழையன் என வரும்.

## பெண்பால் வினைமுற்று

*அள் ஆள் இறுமொழி பெண்பால் படர்க்கை*

(நன். 326)

(எ-டு) அவள் நடந்தாள், நடக்கின்றாள், நடப்பாள், குழையள் என வரும்.

## பலர்பால் வினைமுற்று

*அர் ஆர் பவ்வூர் அகரம்மார் ஈற்ற*
*பல்லோர் படர்க்கை; மார் வினையொடும் முடிமே*

(நன். 327)

பலர்பால் வினைமுற்று அர், ஆர், ப, மார் என முடியும். இவற்றுள் மார் பெயரொடு மட்டுமின்றி வினையொடும் முடியும்.

(எ-டு) அவர் நடந்தார், நடக்கின்றார், நடப்பார், குழையர்.
கொண்மார் வந்தார் வினையொடு முடிந்தது.

### ஒன்றன்பால் வினைமுற்று

து றுடுக் குற்றியல் உகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை டுக்குறிப்பின் ஆகும்.

ஒன்றன்பால் வினைமுற்றுகள் து டு று என்று முடியப்பெறும். இவற்றுள் டுவ் விகுதி குறிப்பு வினைமுற்றில் வரும். தெரிநிலை வினைமுற்றில் வராது.

(எ-டு) அது நடந்தது அது குழையது
அது கூயிற்று அது அற்று
அது பொருட்டு

### பலவின்பால் வினைமுற்று

பலவின்பால் வினைமுற்று அ, ஆ என்ற விகுதிகளைப் பெற்றுவரும். இவற்றுள் ஆகாரம் எதிர்மறையிலும் வரும்.

(எ-டு) அவை நடந்தன, நடக்கின்றன, கரியன,
அவை நடந்தில, நடவா,

அ ஆ ஈற்று பலவின் படர்க்கை
ஆவே எதிர்மறைக் கண்ணது ஆகும்.

*(நன். 329)*

## இருதிணைப் பொதுவினை

இருதிணைப் பெயர்போல, இருதிணைப் பொதுவினை உண்டு, அவை

தன்மை முன்னிலை வியங்கோள் வே றுஇலை
உண்டு ஈரெச்சம் இருதிணைப் பொ துவினை

*(நன். 330)*

என்ற நூற்பாவில் விளக்கப்படும். தொல்காப்பியர் இதனை விரவுவினை என்பர். ஆனால் தன்மை வினைகளை உயர்திணையில் அடக்குவர். இருதிணைப் பொதுவினைகளாவன:-

### 1. தன்மை வினைமுற்று

அ. தன்மைத் தெரிநிலை வினைமுற்று
ஆ. தன்மைக் குறிப்பு வினைமுற்று
இ. தன்மை ஒருமை வினைமுற்று
ஈ. தன்மைப் பன்மை வினைமுற்று

### 2. முன்னிலை வினைமுற்று

அ. முன்னிலைத் தெரிநிலை வினைமுற்று
ஆ. முன்னிலைக் குறிப்பு வினைமுற்று
இ. முன்னிலை ஒருமை வினைமுற்று
ஈ. முன்னிலைப் பன்மை வினைமுற்று

### 3. வியங்கோள் வினைமுற்று

வேறு, இல்லை, உண்டு என்ற குறிப்பு வினைமுற்றுகள்

### 4. பெயரெச்சம்

அ. தெரிநிலைப் பெயரெச்சம்
ஆ. குறிப்புப் பெயரெச்சம்

### 5. வினையெச்சம்

அ. தெரிநிலை வினையெச்சம்
ஆ. குறிப்பு வினையெச்சம்

இவற்றை இனி நிரலே காண்போம்.

## தன்மை வினைமுற்று

### தன்மை ஒருமை வினைமுற்று

கு டு து று என்னும் குற்றியலுகர விகுதிகளும் அல், அன், என், ஏன் என்னும் விகுதிகளும், தன்மை ஒருமை வினைமுற்றின் விகுதிகளாய் வரும். இவ்வினைமுற்றுகள் ஒருவன், ஒருத்தி, ஒன்று என்ற மூன்று பால்கட்கும் பொதுவாகிய இருதிணைப் பொதுவினைகளாகக் கருதப்படும்.
இதனை நன்னூலார்

**இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை**
என்ற அடியால் விளக்குவர். (நன். 331)

(எ-டு) கு-உண்கு (உண்பேன்)
டு-உண்டு (உண்பேன்)
து-வந்தது (வந்தேன்)
து-வருது (வருவேன்)
று-சென்று (சென்றேன்)
அல்-செய்வல் (செல்வேன்)
அன்-உண்டனன் (உண்டேன்)

உண்கின்றனன் (உண்கின்றேன்)
உண்பன் (உண்பேன்)

என்-உண்டெனன், உண்கின்றனென், உண்பென்
ஏன்-உண்டேன், உண்கின்றேன், உண்பேன்

### குறிப்பு வினைமுற்றுகள்

(எ-டு) குழையன், குழையென், குழையேன்
(குறிப்பு வினைக்குப் பிற விகுதிகள் வாரா)

### தன்மைப்பன்மை வினைமுற்று

தன்மைப் பன்மை வினைமுற்றாவது, தன்மை இடத்தை மட்டுமல்லாமல் முன்னிலையையும் படர்க்கையையும் தன்னோடு சேர்க்கும் இயல்புடையது. அவ்வகையில் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் கீழ்க்காணுமாறு

அமையும். நாம் வந்தனம் என்றபோது முன்நின்றாரை உளப்படுத்துகிறோம். நாங்கள் வந்தோம் எனும்போது படர்க்கையாரை உளப்படுத்துகிறோம்.

1. அம், ஆம் என முடியும் தன்மைப் பன்மை வினைமுற்றுகள் முன்னிலையாரைச் சேர்ந்து வரும்.
2. எம், ஏம், ஓம் என முடியும் தன்மைப் பன்மை வினைமுற்றுகள் முன்னிலையாரைச் சேர்ந்து வரும்.
3. கும், டும், தும், றும் என முடியும் தன்மைப் பன்மை வினைமுற்றுகள் முன்னிலையாரையும் படர்க்கையாரையும் சேர்ந்து வரும்.

*அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்*
*எம்ஏம்ஓம் இவை படர்க்கை யாரையும்*
*உம்ஊர் கடதற இரு பாலரையும்*
*தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை (நன். 332)*

| | | |
|---|---|---|
| (எ-டு) | உண்டனம், உண்கின்றனம், உண்பம்<br>உண்டாம், உண்கின்றாம், உண்பாம் | யானும் நீயும்<br>(தன்மை+முன்னிலை) |
| | உண்டனெம், உண்கின்றனெம், உண்பெம்<br>உண்டேம், உண்கின்றேம், உண்பேம்<br>உண்டோம், உண்கின்றோம், உண்போம் | யாம்<br>யானும் அவனும்<br>(தன்மை+படர்க்கை) |
| | உண்டும், உண்கும்<br>வந்தும், வருதும்<br>சென்றும் சேறும் | யாம்<br>யானும் நீயும் அவனும்<br>(தன்மை+முன்னிலை+படர்க்கை) |

### வினையோடு முடியும் தன்மை முற்றுகள்

செங்கு என்ற தன்மை ஒருமை வினைமுற்றும், செய்கும் என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றும், பெயரோடு மட்டுமின்றி வினையுடனும் முடியினும் அவை வினைமுற்றே ஆகும்.

(எ-டு) உண்கு வந்தேன்
உண்கும் வந்தேம்

*செய்குஎன் ஒருமையும் செய்கும் என் பன்மையும்*
*வினையொடு முடியினும் விளம்பிய முற்றே*
*(நன். 333)*

## முன்னிலை வினைமுற்று

தன்மை வினைமுற்றோடு கூடிய படர்க்கை தன்மையானாற் போல முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையே ஆகும்.

*உண்டனிர், உண்டீர் உண்மின் - நீயும் அவனும்*
*குழையினிர், குழையீர்-நீயும் அவனும்*
*முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை*
*(நன். 334)*

### முன்னிலை ஒருமை வினைமுற்று

ஐ, ஆய், இகர ஈற்றைக் கொண்ட வினைமுற்றுகளும், விகுதி குன்றியும் குன்றாதும் நிற்பதாக வரும். ஏவல் வினைமுற்றுகளும் ஒருவன், ஒருத்தி, ஒன்று என்ற மூன்றுக்கும் பொதுவாக, இருதிணைப் பொது வினைகளாகிய முன்னிலை ஒருமை வினைமுற்றுகளாக வரப்பெறும்.

## முன்னிலைத் தெரிநிலை வினைமுற்று

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நீ | உண்டனை | உண்கின்றனை | உண்பை |
| | உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் |
| | உண்டி | உண்ணாநின்றி | சேறி |

## முன்னிலைக் குறிப்பு வினைமுற்று

நீ
- குழையினை
- குழையாய்
- வில்லி

ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே
*(நன். 335)*

இனி, முன்னிலை வினைமுற்றுகளின் ஈற்றில் ஈகாரமும், ஏகாரமும் அவ்விடத்தில் நிற்பதற்கு ஏற்ற ஒரு மெய்யினை ஊர்ந்து வரப்பெறும். இதனை,

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே
*(நன். 336)*

(எ-டு) சென்றீ பெரும்! - செல் - சென்றீ
தொட்டனை நின்மே - நில் - நின்மே

செல்லாய், நில்லாய் என ஆய் விகுதிபெற்று வரவேண்டிய ஏவல் வினைமுற்றுகள் அவை குறைந்து, செல், நில் என நின்றன. ஈ, ஏ என்ற ஈற்று நிலைகள் முன்னிலை அசைகளாம்.

செல் + ற் + ஈ
நில் + ம் + ஏ

என ஈகார, ஏகாரங்கள் றகர, மகர ஒற்றுகளை ஊர்ந்து வந்தன. ற், ம், இரண்டும் எழுத்துப்பேறு என்பர். சென்றீ சென்றருள் என்று பொருள் தருவதாகவும் சிலர் கருதுவர்.

## முன்னிலைப் பன்மை வினைமுற்று

முன்னிலைப் பன்மை வினைமுற்றுகள் இர், ஈர் என்ற விகுதிகளைப் பெற்று வரும். இவற்றுள் முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றுகள் மின் எனும் விகுதி பெற்று வரும். இவ்விரு வகை முன்னிலை வினைமுற்றுகளும் இருதிணைப் பொதுவினைகளாக வரப்பெறும்.

## தெரிநிலை வினைமுற்று

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| நீர் | உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் |
| | உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் |

**குறிப்பு வினைமுற்று**

நீர் [ குழையீர்
குழையினிர்
உண்மின் - ஏவல் வினைமுற்று

## வியங்கோள் வினைமுற்று

1. வியங்கோள் வினைமுற்று, க ய என்ற உயிர்மெய்களையும் ரகர மெய்யினையும் விகுதியாகப் பெற்று வரும்.

2. வியங்கோள் வினைமுற்று, மூன்று இடத்திலும், ஐந்து பாலிலும் வரும்.

இதனை நன்னூலார்,

கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கும் என்ப

(நன். 338)

என்று கூறுகின்றார்.

3. வியங்கோள் வினைமுற்று வாழ்த்தல், விதித்தல், வேண்டல், வைதல் என்ற பொருள்களில் வரும்.

4. வியங்கோள் வினைமுற்று இருதிணைக்கும் பொதுவாய் நடைபெறும்.

(எ-டு) வாழ்க நற்றமிழர் - வாழ்த்தல்
உண்க - விதித்தல்
போற்றி அருளுக - வேண்டல்
பரந்து கெடுக - வைதல்

வாழிய, மக்கட்பதடி எனல், மாசிலன் ஆதல் - என அ, அல், தல் என்ற விகுதிகளும் வருவதுண்டு.

## வேறு, இல்லை, உண்டு

வேறு, இல்லை, உண்டு என்ற குறிப்பு வினைமுற்றுகள் இருதிணை, (ஐம்பால்) மூவிடங்களிலும் வரும்.

(எ-டு) தன்மை: யான்வேறு, யாம் வேறு
முன்னிலை: நீ வேறு, நீர் வேறு
படர்க்கை: அவன் வேறு, அவள் வேறு

**அவர் வேறு, அவை வேறு, அது வேறு. இப்படியே, இல்லை, உண்டு என்பவற்றையும் ஒவ்வொன்றோடும் சேர்த்துச் கொள்க.**

**நூற்பா**

**வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன** (நன். 339)

வேண்டும், தகும், படும் என்ற முற்றுகளும் இவ்வாறே ஐம்பால் மூவிடத்துக்கும் பொருந்தி வரும் என்று உரைப்பர்.

## பெயரெச்சம்

பெயர் எஞ்ச நிற்பது பெயரெச்சம், என்று பொதுவாகக் கூறினாலும் பின்வரும் மூன்று இயல்புகளை பெற்றிருக்க வேண்டும்.

1. பெயரெச்சம், செய்த, செய்கின்ற, செய்யும் என்ற வாய்ப்பாட்டில் வரும்.

2. பெயரெச்சம் தொழிலையும் காலத்தையும் காட்டும்.

3. பாலுடன், செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்ற ஆறில் ஒன்று எஞ்ச நிற்கும்

(எ-டு) உண்ட - இறந்த காலம்
உண்கின்ற . . . நிகழ்காலம்
உண்ணும் . . . எதிர்காலம்

| | | |
|---|---|---|
| உண்ட | சாத்தன் வினைமுதல் | |
| | இலை | கருவி |
| | அட்டில் | இடம் |
| | துவையல் | தொழில் |
| | நாள் | காலம் |
| | சோறு | செயப்படுபொருள் |

| | |
|---|---|
| முகத்த களிறு | குறிப்புப் பெயரெச்சம் |
| உண்ணாத களிறு | எதிர்மறைப் பெயரெச்சம் |
| இல்லாத களிறு | எதிர்மறை குறிப்புப் பெயரெச்சம் |
| வழங்காப்பொருள் | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |

## செய்யும் என்ற வாய்பாட்டுப் பெயரெச்சம்

1. செய்யும் என்ற வாய்பாட்டுப் பெயரெச்சம் இறுதியில் உள்ள உயிர் மெய் கெடும்.

(எ.டு) ஆகும் பொருள் - ஆம் பொருள்
போகும் போது - போம்போது

2. செய்யுளுள்ளே *உம் உந்து* ஆக மாறும்.

*திரை மிசைப் பாயுந்து* - பாயும்
*கோழி கூப் பெயர்க்குந்து* - பெயர்க்கும்

3. செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்றாயின், ஈற்றிலுள்ள உயிரும் கெடும். உயிர்மெய்யும் கெடும்.

*தோழியும் கலுழ்மே* என்பதில் செய்யுளில் கலுழும் என்பதன் உயிர் கெட்டது.

*அவனொடு மொழிமே* என்பதில், செய்யுளில் மொழியும் என்பதன் உயிர் செட்டது.

உண்ணும் குதிரை-செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்
குதிரை உண்ணும்- செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

சிலபோது,
கேளும்-கேண்மோ
உரையும் உரைமோ
என்று இவ்வாறு எவல் வினை முற்றிலும் நிகழக்கூடும். அதையும் கொள்க.

**நூற்பா**

செய்யும் என் எச்ச ஈற்று உயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம் உந்து ஆகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே

(நன். 341)

# வினையெச்சம்

நூற்பா

தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச்சம்மே

(நன். 342)

வினை எஞ்ச நிற்பது வினையெச்சம் என்று பொதுவாகக் கூறிவிடுகிறார்கள். கண்டனென் என்ற சொல் பார்த்தேன் எனும் வினையெஞ்ச நிற்குமன்றோ? அதனால் அதுபோன்ற ஐயத்தை நீக்கவே பால் ஒழிய நிற்கும் வினை என்கிறார்.

1. வினைஎச்சம் தொழிலையும், காலத்தையும் தோற்றுவிக்கும்.

2. பாலும் வினையும் எஞ்சி நிற்கும்.

இவ்வினையெச்சங்களும் இருதிணைப் பொதுவினையாகவே கருதப்படும்.

(எ.டு) உண்டு வந்தான் - தெரிநிலை வினையெச்சம்
அருளின்றிச் செப்பினாள் - குறிப்பு வினையெச்சம்

## வினையெச்ச வாய்பாடுகள்

1. செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்ற ஐந்து வினையெச்சமும் இறந்தகால வினையெச்சங்கள்.

2. செய என்ற வினையெச்சம், நிகழ்காலம் குறிப்பது.

3. செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்ற ஆறு வினையெச்சமும் எதிர்காலம் குறிப்பன.

நூற்பா

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கு என வினையெச்சம் பிற
ஐந்து ஒன்று ஆறு முக்காலமும் முறை வரும்

(நன். 243)

## இறப்பு

| | |
|---|---|
| கண்டு | செய்து |
| காண்குபு | செய்பு |
| காணா | செய்யா |
| காணூ | செய்யூ |
| கண்டென | செய்தென |

## நிகழ்வு

| | |
|---|---|
| காண | செய |

## எதிர்பு

| | |
|---|---|
| காணின் | செயின் |
| காணிய | செய்யிய |
| காணியர் | செய்யியர் |
| காணுவான் | வான் |
| காண்பான் | பான் |
| காண்பாக்கு | பாக்கு |

உரையிற்கோடலால் செய் என்ற வினையெச்சம் நிகழ்விலேயே இறப்பு, நிகழ்வு, எதிர்வு மூன்றையும் தோற்றுவிப்பதனைக் கொள்க.

| | | |
|---|---|---|
| கதிரவன் எழ வந்தான் | ... | நிகழ்வு உடனிகழ்ச்சி |
| மழை பெய்ய நெல் விளைந்தது | ... | இறப்பு காரணப் பொருட்டு |
| நெல்விளைய மழை பொழிந்தது | ... | எதிர்வு காரியப் பொருட்டு |

### வினையெச்ச முடிபுகள்

மேற்கண்ட வினையெச்சங்களில் முதற்கண் நின்ற நான்கும், ஈற்றில் நின்ற மூன்றம்வினை முதல் கொண்டு முடியும். மற்றயவை வினை முதலையன்றிப் பிறவற்றையும் கொண்டு முடியும்.

| | | |
|---|---|---|
| (எ-டு) | செய்து ... | தான் நடந்து வந்தான் |
| | செய்பு ... | தான் உண்புகு வந்தான் |
| | செய்யா ... | தான் கல்லாக் கழித்தான் |
| | செய்யூ ... | தான் காணுஉ மகிழ்ந்தான் |
| | வான் ... | தான் கொள்வான் சென்றான் |
| | பான் ... | தான் உண்பான் புகுந்தான் |
| | பாக்கு ... | தான் தருபாக்கு வந்தான் |

என்ற ஏழு வினையெச்சங்களும் வினைமுதல் கொண்டன.

| | |
|---|---|
| என ... | தான் உண்டென |
| | பிறன் உண்டென |
| செய ... | தான் உண்ண |
| | பிறன் உண்ண |
| செயின் ... | தான் உண்ணின் |
| செய்யிய ... | தான் உண்ணிய |
| | பிறன் உண்ணிய |
| செய்யியர் ... | தான் உண்ணியர் |
| | பிறன் உண்ணியர் |

என மற்ற வினையெச்சங்கள் வினைமுதலும் பிறவும் கொண்டன.

### சினைவினைகள்

வினையெச்சங்கள், சினைவினையாயின், அவை சினையுடனே முடிவதன்றி ஒற்றுமை பற்றி முதலுடனும் முடியும்.

(எ-டு) கால் ஒடிந்து விழுந்தான்
ஒடிதல் ... சினை வினை
விழுதல் ... முதல் வினை

**நூற்பா**

*சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்*
*(நன். 445)*

### வாய்பாடு திரிதல்

மேற்கண்ட வினையெச்ச வாய்பாடுகள் வேறுபட்டுவரினும் அவற்றின் பொருள் வேறுபடா.

(எ-டு) ஞாயிறு பட்டு வந்தான் . . . பட என்னும செயமவன் வாய்பாட்டு வினையெச்சம் பட்டு என்னும் செய்து வாய்பாட்டு வினையெச்சமாயிற்று.

உண்டு பசி கெட்டது. . . . உண்ணப் பசி கெட்டது.
கோழி கூவிப் பொழுது விடிந்தது. . . கோழி கூவப் பொழிதுவிடிந்தது.

**சொல்திரியினும் பொருள்திரியா வினைக்குறை**

(நன். 446)

## ஒழிபுக் கருத்துக்கள்

### ஆக்க வினைக்குறிப்பு

ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள், விரிந்தாயினும் தொக்காயினும் ஆக்கச் சொல்லைப் பெற்றே வரும்.

| | | |
|---|---|---|
| சாத்தன் நல்லன் ஆயினான் | . . . | ஆக்கச்சொல் விரிந்தது. |
| சாத்தன் நல்லன் | . . . | ஆக்கச்சொல் தொக்கது. |
| கல்வியில் பெரியன் ஆயினான் | . . . | ஆக்கச்சொல் விரிந்தது. |
| கல்வியால் பெரியன் | . . . | ஆக்கச்சொல் தொக்கது. |

**ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம் இன்று இயலா**

(நன். 437)

### செய்யும் என்னும் முற்று செல்லாத இடங்கள்

செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றை முன்னர்க் கண்டோம். அவ்வினைமுற்று, பல்லோர் படர்க்கை (பலர்பால்), முன்னிலை, தன்மை ஆகிய இடங்களில் பொருந்தாது.

(எ-டு) அவன் உண்ணும்
அவள் உண்ணும்
அது உண்ணும்
அவை உண்ணும்

ஆனால் அவர் உண்ணும், நீ உண்ணும், யான் உண்ணும் என வராது.

**பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையின்**
**செல்லாது ஆகும் செய்யும்என் முற்றே**

(நன். 848)

### யார் என்ற குறிப்பு வினைமுற்று

யார் என்ற வினா வினைக் குறிப்புமுற்று உயர்திணையைச் சார்ந்த ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்றுக்கும் பொதுவாக வரும்.

(எ-டு) அவன் யார்?
அவள் யார்?
அவர் யார்? என வரும்.

அது யார், அவை யார், யான், யார், நீயார், நான் யார், நீர் யார் எனப் பிற இடங்களில் வருதல் புதியன புகுதலாகும்.

*யார் என் வினாவினைக் குறிப்பு உயர் முப்பால்*

*(நன். 349)*

### எவன் என்ற குறிப்பு வினைமுற்று

எவன் என்ற வினாவினைக் குறிப்புமுற்று, அஃறிணையின் இரு பாலுக்கும் பொருந்தி வரும்.

அஃது எவன்? - ஒன்றன் பால்

அவை எவன்? பலவின் பால்

எவன் என்பது என், என்ன, என்னை என்றெல்லாம் விகாரப்பட்டும் வரும்.

**நூற்பா**

*எவன்என் வினாவினைக் குறிப்பிழிபு இருபால்*

*(நன். 350)*

### முற்றுகள் முற்றெச்சமாதல்

தெரிநிலை வினைமுற்றுகள் வினையெச்சமாகி வரக்கூடும். (குறிப்பு வினைமுற்றே வினையெச்சமாகியும், பெயரெச்சமாகியும் வரக்கூடும்)

(எ-டு) கண்டனன் வணங்கினான் - கண்டு வணங்கினான்,
முகந்தனர் கொடுத்தார் - முகந்து கொடுத்தார்.

எனத் தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாகப் பொருள்பட்டது.

அவன் வில்லினன் வந்தான் - அவன் வில்லினனாகி வந்தான்

வெந்திறலினன் விறல்வழுதி - வெந்திறலினாகிய விறல் வழுதி

எனக் குறிப்பு வினைமுற்று வினையெச்சமாகவும், பெயரெச்சமாகவும் பொருள்பட்டது.

வினைமுற்றுகள் வினையெச்சமாகப் பொருள்படும்போது, அவை முற்றெச்சங்கள் எனப்படும் என்பர் உரைகாண்போர். இவ்வாறாக, நன்னூல் வினையியற் செய்திகள் அமைந்துள்ளன.

### பயிற்சி வினாக்கள்

1. தெரிநிலை வினையின் இலக்கணம் யாது?
2. குறிப்பு வினையின் இலக்கணம் யாது?
3. வினைச் சொற்களின் பாகுபாடு பற்றி எழுதுக.
4. முற்று வினை, எச்ச வினை - விளக்குக.
5. இருதிணைப் பொதுவினையை விளக்குக.
6. எச்சவினையின் இருவகைகள்?

## 3. பொதுவியல்

நன்னூலின் சொல்லதிகாரத்தில் முதலில் அமைந்த பெயர்க்கும், வினைக்கும், இனிச் சொல்லப்படும் இடைக்கும், உரிக்கும், பொதுவிலக்கணங்களை உணர்த்தும் இயலாதலின் இது *பொதுவியல்* என்ற பெயரைப் பெற்றது. இவ்வியல் *சிங்க நோக்காக* அமைந்துள்ளது.

### பெயரும் வினையும் பாற்பொதுமை நீங்குதல்

*இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்*
*பெயரும் வினையும் குறிப்பி னானே*

(பொதுவியல்: 1)

**பொருள்**

உயர்திணை ஆண்பால், பெண்பால் இருபால்கட்கும் பொதுவான பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், அஃறிணை ஆண்பால், பெண்பால் என்ற இருபால்கட்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் அவ்விரு பால்களும் குறிப்பினால் ஒரு பாலை ஒழிக்கும்.

(எ-டு) ஆயிர மக்கள் போருக்குப் போயினர்.

இதில் *மக்கள்* என்பது உயர்திணை இருபாலுக்கும் பொதுப்பெயர் *போயினர்* என்பது உயர்திணை. இருபாலுக்கும் பொதுவினை. இப்பொதுப்பெயரும், பொது வினையும், *போருக்கு* என்ற குறிப்பினால், பெண்பாலை ஒழித்தன. (அக்காலத்தே, போருக்குப் போதல் ஆடவர்க்கே உரியதாய் இருந்தது. எனவே *மக்கள்* என்பது ஈண்டுப் பெண்மக்களைக் குறிக்காது. ஆண் மக்களையே குறித்தது என்பதாம்) பெண்டிரும் போருக்குச் செல்லும் நிலை இன்றுள்ளதால் இவ்வெடுத்துக்காட்டு இக்காலத்திற்குப் பொருந்தாது.

(எ-டு) இப்பெற்றங்கள், பால்சொரிந்தன.

இதில் *பெற்றங்கள்* என்னும் அஃறிணை, ஆண், பெண் இருபாலுக்கும் பொதுப்பெயரும், *ஒழிந்தன* என்னும் அஃறிணை ஆண், பெண் இருபாலுக்கும் பொதுவினையும், *பால்* என்ற குறிப்பினால், ஆண்பாலை ஒழித்தன (பெற்றம் என்பது பசு, காளை இரண்டற்கும் பொதுப்பெயர். பால் தருவது பசுவாதலின், ஈண்டுப் பெற்றங்கள் என்பது காளையைக் குறிக்காது பசுவையே குறித்தது)

### பெயரும் வினையும் செய்யுளில் திரிதல்

செய்யுளில் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் ஆன், ஆள், ஆர், ஆய் என்னும் விகுதிகளின் முதலெழுத்தாகிய ஆகாரம் ஓகாரமாகவும் ஆகும். இதைனையே பின்வரும் நூற்பா கூறும்.

*பெயர்வினை யிடத்து ன ள ர ய ஈற்றயல்*
*ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே* (2)

(எ-டு) *வில்லோன் காலன கழலே*

*பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்*
*சென்றோர் அன்பிலர் தோழி*

இவற்றுள் முறையே வில்லான், கொடுத்தாய், சென்றார் என வரவேண்டியவை செய்யுளாதலின் ஆன், ஆய், ஆர், எனும் விகுதிகள், ஓன், ஓய், ஓர் என ஆகாரங்கள் ஓகாரங்களாயின.

இங்ஙனம் மாறியே ஆக வேண்டும் என்பதில்லை. வில்லாய், கொடுத்தாய், சென்றார் என ஓகாரமாகலுமுண்டு. அவ்வாறே, வண்ணான் என்பதும் ஓகாரம் பெறாமலும் வரும். மேலும், கிழவனே என்பது கிழவோனே என அகரமும் ஓகாரமாக ஆதலும் உண்டு.

## உருபும் வினையும் எதிர்மறையில் திரியாமை

*உருபும் வினையும் எதிர்மறுத்துரைப்பினும்*
*திரியா தத்தமீற் றுருபின் என்ப (3)*

**பொருள்**

எட்டு வேற்றுமை உருபுகளும் (Markers) மூவகை வினைச் சொற்களும் (Verb) எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும், தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ் உருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர். அஃதாவது எதிர்மறுத்துக் கூறினும் உருபு உருபினின்றும் திரியாது; வினை, ஈற்றினின்றும் திரியாது என்பதாம்.

*(எ-டு) சாத்தன் வாரான், குடத்தை வனையான்*

இவற்றில் ***வாரான், வனையான்*** என்பன எதிர்மறுத்துக் கூறப்பட்டவை, இவை முறையே எழுவாய் வேற்றுமையும், இரண்டாம் வேற்றுமையுமாகும். இவ் வேற்றுமைக்குரிய உருபுகள் திரியாமல் வந்துள்ளன. வாரான், வனையான் என்ற வினைகளும், தத்தம் ஈற்றினின்றும் திரியாவாயின.

இவற்றுள் ***மூவகை வினைச்சொற்கள்*** என்பன, முற்றுவினைச் சொல், பெயரெச்ச வினைச் சொல், வினையெச்ச வினைச்சொற்கள் ஆகும். நடவான்-முற்றுவினைச் சொல்; நடவாத-பெயரெச்ச வினைச்சொல்; நடவாது-வினையெச்ச வினைச்சொல். இம் மூன்றும் எதிர்மறுத்தலில் வந்துள்ளன எனினும் ஈறுகள் திரியவில்லை.

இனி ஓடாத குதிரை, ஆனாத அறிவு என்பன, ***ஓடாக் குதிரை*** என்றும், ***அறிவு*** என்றும் வருகின்றனவே எனலாம். இவற்றுள் ***த எனும் ஈறு குறைந்ததே யன்றி ஈறு*** திரிந்ததாகாது.

## உருபும் வினையும் அடுக்கி முடிதல்

*உருபுபல அடுக்கினும் வினைவே றடுக்கினும்*
*ஒருதம் எச்சம் ஈறுற முடியும் (4)*

என்பது இது பற்றிய மற்றொரு நூற்பா. வேற்றுமை உருபுகள் பல விரிந்தும் தொக்கும் தம்முன் விரவி அடுக்கி வரும்; தனித்தனியாக ஒரே உருபு பலமுறை அடுக்கி வரும்; முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமுமாகிய வினைச்சொற்கள் தனித்தனியே பல அடுக்கி வரும். இங்ஙனம் வருமிடத்துத் தத்தம் எச்சம் இறுதியில் ஒன்றுவர அதனோடு அனைத்தும் முடிவனவாம்.

*(எ-டு) சாத்தன் யானையது கோட்டை, நுனிக்கண், பொருட்கு, வாளால் குறைத்தான்.*

இதனுள், இரண்டாம் வேற்றுமை முதலான உருபுகள் விரிந்து தம்முள் விரவி அடுக்கி வந்தன.

*(எ-டு) சாத்தனையும் கொற்றனையும், தேவனையும், பூதனையும் வாழ்த்தினான்.*

இதில் ***ஐ*** என்ற 2ஆம் வேற்றுமை உருபு, பலமுறை அடுக்கி வந்து, வாழ்த்தினான் என ஒருவினை கொண்டு முடிந்தது.

*(எ-டு) வாள் கைக் கொண்டான்.*

***வாளைக் கையின் கண் கொண்டான்*** என்று பொருள், எனவே 2, 7 ஆம் வேற்றுமை உருபுகள் தொக்கன

*(எ-டு) உண்டான், நின்றான், ஓடினான், பாடினான், சாத்தன்-இதில்,* ***உண்டான்*** முதலான வினைமுற்றுக்கள் அடுக்கிவந்து, ***சாத்தன்*** எனும் பெயர்கொண்டு முடிந்தன.

*(எ-டு) வருதி பெயர்தி வருந்துதி பொருதி புலம்புதி நீ*

இதில் *வருதி* முதலான வினைமுற்றுக்கள் அடுக்கிவந்து, *நீ* எனும் பெயர் கொண்டு முடிந்தன.

(எ-டு) இளையன் மெல்லியள் மடந்தை.

இதில், ***இளையன், மெல்லியள்*** என்ற குறிப்பு முற்றுக்கள் அடுக்கி வந்து *மடந்தை* எனும் பெயரைக் கொண்டு முடிந்தன.

(எ-டு) கற்ற, கேட்ட பெரியோர்

இதில், *கற்ற, கேட்ட* எனும் பெயரெச்ச வினைகள் பெரியோர் எனும் பெயரைக்கொண்டு முடிந்தன.

(எ-டு) கற்றுக் கேட்டு அறிந்தார்.

இதில், *கற்றுக் கேட்டு* எனும் வினையெச்ச வினைகள், *அறிந்தார்* எனும் வினை கொண்டு முடிந்தன.

இவ்வாறே பிறவும் வரும்.

## இடைப் பிறவரல்

வேற்றுமை உருபுகளும், முற்றுகளும் பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே பொருந்தக்கூடிய முறையில் பிற சொற்களும் வரும், இதற்கு, இடைப் பிறவரல் என்று பெயர்

(எ-டு) சாத்தன் வயிறார உண்டான்.
அறத்தை அழகுபெறச் செய்தான்

இவற்றில் வயிறார, அழகுபெற என்பன இடைப்பிறவரல்கள்.

(எ-டு) சாத்த விரைந்து ஓடி வா,
வந்த அவ்வூர்ச் சாத்தன்,

இவற்றில் ***விரைந்து, அவ்வூர்*** என்பன இடைப்பிறவரல்கள்.

(எ-டு) வாளால் மருவாரை மாய வெட்டினான்.

இதில், மருவாரை, மாய, என்பன இடைப்பிறவரல்கள் என்று மயிலை நாதர் போன்றோர் கூறுவர். ஆனால், சிவஞான முனிவரோ, வாளால் மருவாரை என்பன உருபுபல அடுக்கி வந்தன; எனவே, மாய என்ற ஒன்றுமட்டுமே இடைப்பிறவரல் என்பர்.

இவ்வாறே (எ-டு) கருதலர்ச் சீறிய கடுங்கொல் யானை, என்பதில் சீறிய என்ற பெயரெச்சத்திற்கும், யானை என்ற பெயர்க்கும் இடையே கொல் என்பதை இடைப்பிறவரல் என்று கூறலாகாது. கொல்யானை என்பது வினைத்தொகை, அஃதாவது காலங் கரந்த பெயரெச்சம். எனவே, சீறிய கொல் என்ற பெயரெச்சங்கள் அடுக்கி, யானை எனும் பெயர் கொண்டு முடிந்தன என்று கொள்ள வேண்டாம். இவ்வாறே அடுக்காய் வருவதற்கும் இடைப் பிறவரலாய் வருவதற்குமுள்ள வேறுபாட்டினைக் கண்டுகொள்ள வேண்டும்.

**உருபு முற்றீ ரெச்சம் கொள்ளும்**
**பெயர்வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன**

என்பது நூற்பா.

## முடிக்கும் சொல் நிற்குமிடம்

உருபுகளும், முற்றுக்களும், பெயரெச்சங்களும் வினையெச்சங்களும், கொண்டுமுடியும் எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கு ஈற்றினும் வரும்.

எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும் (ப)

என்பது நூற்பா, *ஈற்றினும்* என்ற உம்மையால, மேற்கூறியன முதலிலும் வரும் எனலாம்.

(எ-டு)

| ஈற்றில் வருவன | முதலில் வருவன | |
|---|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் | |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை | முற்றும் உருபும் இங்ஙனம் |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் | முன்னும் பின்னும் வரும் |
| சாத்தா வா! | வா சாத்தா | |
| வந்து போயினான் | போயினான் | *வந்து - வந்து* எனும் வினையெச்சம் முன்னும் பின்னும் வரும். |

ஆனால் *வந்த சாத்தன்* என்பது சாத்தன் வந்த என்று வராது. அஃதாவது *வந்த* என்பது பெயரெச்சம். அஃது இங்ஙனம் வராது என்பதாகும்.

*சாத்தன் வந்தான்* எழுவாய்த் தொடர். இதில் *வந்தான்* என்பது ஈற்றில் வந்தது. இது *வந்தான் சாத்தன்* என முதலிலும் வரும் என்று கண்டோம். இவ்விரண்டிற்கும் வேற்றுமை யாது என்றால் கேட்பவர்கட்குச் சாத்தன் இன்னது செய்தான் என வினைய்ய உணர்த்தும்போது *சாத்தன் வந்தான்* என்றால் சிறப்பு. *இது செய்தான் சாத்தன்* என வினைமுதலை உணர்த்தும்போது *வந்தான் சாத்தன்* என்றால் சிறப்பு என்பர் சிவஞான முனிவர்.

## நால்வகைச் சொற்குரிய இலக்கணம்

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் நால்வகைச் சொற்களுள், ஒவ்வொன்றும் எஞ்சிநின்ற தத்தம் இனங்களைக் கொள்ளுவதற்கு உரித்தாம்.

ஒரு மொழி ஒழிதன் னினங்கொளற் குரித்தே (7)

என்பது நூற்பா.

(எ-டு) சோற்றை நனி உண்டான்.

இதில் சோற்றை நனி உண்டான், என்று கூறியவுடனே, அதனோடு தொடர்புடைய *கறியையும் நனி தின்றான்* என்பதும் கொள்ளலாம். இதில் *சோறு* என்பது பெயர்ச்சொல்; ஐ என்ற உருபு இடைச்சொல். அப் பெயர்ச்சொல்லும் இடைச்சொல்லும் முறையே *கறி* என்ற பெயர்ச்சொல்லையும் *ஐ* என்ற உருபு இடைச்சொல்லையும் கொள்ளுவதற்கு உரியவாய் நிற்றல் காணலாம். இவ்வாறே நனி உரிச்சொல்லும் கொள்ளுவதற்கு உரியவாய் நிற்றல் காணலாம். இவ்வாறே *நனி* உரிச் சொல்லும் *உண்டான* என்ற வினைச் சொல்லும் முறையே, *நனி* என்ற உரிச் சொல்லையும் *தின்றான்* என்ற வினைச் சொல்லையும் கொள்ளுவதற்கு உரியவாய் நிற்றல் காணலாம்.

(எ-டு) நஞ்சுண்டான் சாவான்.

இவ்வாறு சொல்லியதும், நஞ்சுண்டவள் சாவாள் எனப் பெண்பாலையும் நஞ்சுண்டது சாம் என ஒன்றன்பாலையும் குறிக்கும் என்பதாம். இவ்வாறே பிறவும் வரும்.

## திணை, பால், இடப்பொதுமை நீங்குதல்

சிறப்புப்பெயர் வினைகள், திணை பால் இடம் காலங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளுடைய பொதுத் தன்மையினை நீக்கி ஒன்றற்கு உரிமை செய்யும்.

*பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்*
*மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே (8)*

என்பது நூற்பா.

(எ-டு) சாத்தன் இவன்: சாத்தன் இது;
சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது.

இவற்றில் சாத்தன் என்பது உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுப்பெயர் இவன் என்னும் பெயரும், வந்தான் என்னும் வினைச்சொல்லும் பொதுத் தன்மையினை நீக்கிச் சாத்தன் என்று உயர்திணை ஆண்பாலுக்கே உரிமை செய்தன. இவ்வாறே இது என்ற பெயரும், வந்தது என்ற வினைச்சொல்லும், பொதுத் தன்மையினை நீக்கிச் சாத்தன் என்ற அஃறிணைக்கே உரிமை செய்தன.

(எ-டு) ஒருவர் என் ஐயர்; ஒருவர் என் தாயார்

இவற்றில் ஒருவர் என்பது பொதுப்பெயர். ஐயர் ஆண்பால். எனவே ஈண்டு ஒருவர் என்பது ஆண்பாலைக் குறித்தது. அடுத்துள்ள தாயார் என்பது பெண்பால். எனவே, அவ்விடத்துள்ள ஒருவர் என்பது பெண்பாலைக் குறித்தது.

(எ-டு) மரம் வளர்ந்தது; மரம் வளர்ந்தன.

இவற்றில், *மரம்* என்பது ஒன்றன்பாலுக்கும், பலவின்பாலுக்கும் பொதுப்பெயர். ஈண்டு வளர்ந்தது என்பதனைக் கொண்டு *மரம்* என்பது ஒன்றன்பாலைக் குறிப்பதாகவும் ***வளர்ந்தன*** என்பதனைக் கொண்டு அவ்விடத்துள்ள *மரம்* என்பது பலர்பாலைக் குறிப்பதாகவும் கொள்ள வேண்டும்.

(எ-டு) அவர் எல்லாம் இருந்தார்
யாம் எல்லாம் வருவம்
நீவிர் எல்லாம் போமின்

இவற்றில் *எல்லாம்* என்பது ஒருபொதுப் பெயர். அவர், யாம், நீவிர் முதலான சிறப்புப் பெயர்களும், இருந்தார், வருவம், போமின் என்ற வினைகளும் இடப் பொதுமையை நீக்கி ஒவ்வோரிடத்தை உணர்த்தின.

(எ-டு) வாழ்க அவன்! | வாழ்க யான்!
வாழ்க அவள்! | வாழ்க யாம்!

வாழ்க அவர்! | வாழ்க நீ!
வாழ்க அது! | வாழ்க நீர்!

வாழ்க அவை!

இவற்றில் பின்வரும் சிறப்புப் பெயர்களால், திணை, பால், இடம் இவற்றை அறியலாம். இவ்வாறே பிறவும் வரும்

## எச்சங்களின் முடிபு

எச்சங்கள் எவ்வாறு முடியும் என்பதைப் பின்வரும் நூற்பா கூறும்:

*பெயர்வினை உம்மைசொல் பிரிப்பென ஒழியிசை*
*எதிர்மறை இசைஎனும் சொல்லொழி பொன்பதும்*
*குறிப்புத் தத்தம் எச்சம் கொள்ளும் (9)*

இதன் பொருள் எச்சம் 2 வகைப்படும். (1) சொல்லெச்சம் (2) குறிப்பெச்சம்.

## சொல்லெச்சம்

சொல்லெச்சம் ஒன்பது வகைப்படும். அவையாவன:

**1) பெயரெச்சம்:** (எ-டு) செய்த சாத்தன், நல்ல சாத்தன், இவற்றில் செய்த, நல்ல என்ற பெயரெச்சங்கள் ***சாத்தன்*** என்ற பெயர் கொண்டு முடிந்தன.

**2) வினையெச்சம்:** (எ-டு) செய்து வந்தான். இங்கு ***செய்து*** எனும் வினையெச்சம் ***வந்தான்*** என்ற வினை கொண்டு முடிந்தது.

**3) உம்மையெச்சம்:** சாத்தனும் வந்தான் - உம் என்ற எச்சமானது முன்பு கொற்றன் வந்தான் எனத் தன் எச்சம் கொண்டது.

**4) சொல்லெச்சம்:** இசையா ஒரு பொருள் இல்லென்றல் யார்க்கும் வகையன்று, இதில் இல் என்றல் என்பதற்கு இல் என்று சொல்லுதல் என்று பொருள். எனவே சொல் என்னும் தன் எச்சம் கொண்டது.

**5) பிரிநிலையெச்சம்:** சாத்தனே கொண்டான் - பிறர் கொண்டிலர் எனத் தன் எச்சம் கொண்டது.

**6) *என* எச்சம்:** கடல் ஒல்லென ஒலித்தது - என என்பது தன் எச்சமாகிய வினை கொண்டு முடிந்தது. என என்பது மிகுதிப் பொருள் தரும் ஓர் இடைச்சொல்.

**8) எதிர்மறையெச்சம்:** யானா செய்தேன்! - யான் செய்திலன் என எதிர்மறைப் பொருள் தந்து தன் எச்சம் கொண்டது.

**9) இசையெச்சம்:**

(எ-டு) **இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று** (குறள்)

இதற்குப் பின்வருமாறு பொருள் கொள்ள வேண்டும் என்கிறார் சிவஞான முனிவர்: (1) பிற உயிர்க்குத் துன்பம் செய்தால் அது, தவறாமல் தமக்கும் வரும். எனவே, தம்மாட்டு அன்புடையராயிருத்தல் வேண்டும். (3) பிற உயிர்களுக்குத் துன்பம் செய்தால் மேன்மேலும் பிறப்பும் இறப்பும் உண்டாகி அச்சம் ஏற்படும். (4) நம்மால் துன்பமுற்றோரை நாமே அடைந்து இரத்தலும் கூடும். ஆதலின், யார்மாட்டும் இன்னா செய்யக்கூடாது என்ற வருங்கால உணர்ச்சியுடையவராய் நிற்றல் வேண்டும். (5) இத்தகைய உணர்ச்சி இல்லாமல் எவரேனும், பொறுக்கமுடியாத துன்பத்தைத் தன்பால் செய்தாலும் அவரே பின்னொருகால் தமக்கு வேண்டும் குறை முடித்தல் கருதி நாணமின்றித் தன்னிடத்துவருவாராயின், அவர் முன்பு செய்த அவ் இன்னாமை கருதி, அவரை வெகுளாமல், அதனை மறந்து அவரது குறைமுடித்து அவர்க்கு இ,னியனாகி நிற்றலே தன் சால்புக்கு நன்று.

-இவ்வாறெல்லாம், வேண்டும் சொற்களையெல்லாம் வருவித்துப் பொருள் கூறுமாறு அமைவது இசையெச்சமாகும்.

## குறிப்பெச்சம்

குறிப்பினால் பொருள் தருவது, முன்பே சொல்லப்பட்ட ***ஒன்றொழி பொதுச்சொல்*** எனும் நூற்பாவில் குறிக்கப்பட்ட குறிப்புச் சொற்களே ***குறிப்பெச்சங்***களாகும்.

(எ-டு) பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிலிற்கீழ் நால்வர் மக்கள் உளர்.

இதில் ***மக்கள்*** எனும் பொதுப் பெயர், ***பெண் மக்கள்*** எனப் ***பெண்*** என்னும் சிறப்புப் பெயர் கொண்டது.

(எ-டு) *பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்* (குறள்)

*மெல்லியராயினும் பலர் தொகின் வலியரையும் வெல்வர்* என்று குறிப்பினால் பொருள் கொள்ளுமாறும் இஃது அமைந்துள்ளது. இத்தகு குறிப்பெச்சங்கள் தம் எச்சம் கொண்டன.

எனவே எச்சமானது சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்று இரு வகைப்படும் என்பதாம். சொல்லெச்சவகை ஒன்பதினுள் *சொல்லெச்சம் என்பதொன்றும் உள்ளதே* என்ற வினாவுக்குச் சிவஞான முனிவர் பின்வருமாறு விளக்கம் தருவார்: *சொல்லெச்ச வகையினுள் ஒன்றாகிய சொல்லெச்சம் என்பது சொல் விகற்பங்களின்றி சொல் என்னும் சொல் எஞ்சி நிற்பது.* ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்ல தெஞ்சுதல் இன்றே
(தொல். எச்சவியல் 45)

என்று கூறியதும் இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

## தொகைநிலைத் தொடர்மொழி

பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என்ற அறுவகைப் பொருட் புணர்ச்சியில் அவற்றின் உருபுகள் இடையே தொக்கு நிற்ப இரண்டு முதலாகப் பல சொற்கள் தொடர்ந்து ஒருமொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்மொழிகளாம். (தொகை உருபு மறைதல்)

வினைச் சொல்லோடு வினைச்சொல் தொகைநிலைத் தொடர் ஆகாது.

பெயரோடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல் (10)

என்பது நூற்பா. இதில் *ஒருமொழி போல் நடப்பன* என்பதற்குச் சிவஞான முனிவர், பெயர்ச்சொல்லோடு *பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச் சொல்லும் முதலாயின தொடர்ந்து ஒரு மொழிபோல் வருமேயன்றி வினைச் சொல்லோடு வினைச்சொல் தொகை நிலைத் தொடராக வராது* என்பர். ஆனால் *ஒரு மொழிபோல் நடத்தலாவது, கொல் யானை வந்தது, நிலம் கடந்தான் சாத்தான் என இரண்டு முதலிய பல சொல் தொடர்ந்து ஒரு பெயராயும் வினையாயும் நின்று தம்முடி பேற்றல்* எனப் பொருள் கூறுவர் சிலர். இதற்கு முனிவர், *இவ்வாறு பொருள் கூறினால் தொகாநிலைத் தொடரும் கொன்ற யானை வந்தது. நிலத்தைக் கடந்தான் சாத்தன் என நடக்குமாதலின் அது பொருந்தாது* என மறுப்பர்.

இத் தொகைநிலைத் தொடர்மொழி 6 வகைப்படும். அவை: வேற்றுமைத் தொகைநிலை, வினைத் தொகைநிலை, பண்புத் தொகைநிலை, உவமைத் தொகைநிலை, அன்மொழித் தொகைநிலை, உம்மைத் தொகை நிலை என்பது நூற்பா.

## வேற்றுமைத்தொகை (declension)

2, 3, 4, 5, 6, 7 எனும் ஆறு வேற்றுமை உருபுகளும் தொக்க (மறைந்த) தொடர் மொழிகள் *வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்* எனப்படும்.

(எ-டு) நிலம் கடந்தான் 2-ஆம் வேற்றுமைத் தொகை. நிலத்தைக் கடந்தான் என்று பொருள். எனவே, 2ஆம் வேற்றுமைக்குரிய *ஐ* உருபு தொக்கு நின்றதால் 2ஆம் வேற்றுமைத்தொகை எனப்பட்டது.

இவ்வாறே (எ-டு) தலை வணங்கினான், *சாத்தன் மகன், ஊர் நீங்கினான், சாத்தன் கை, குன்றக் கூகை* எனப் பிறவேற்றுமைத் தொகைகளும் வரும்.

இனி ஒரே தொடரில் ஒன்றுக்கு மேற்பட்ட உருபுகளும் மறைந்து வரலாம்.

(எ-டு) யானைக் கோட்டு நுனிக் குறைத்தான்.

இதற்கு, *யானையினது கோட்டின் நுனியைக் குறைத்தான்* என்று பொருள். இதில் 6, 5, 2 ஆகிய மூன்று வேற்றுமை உருபுகள் மறைந்தன. *நிலம் கடந்தான்* என்பது *கடந்தான் நிலம்* என்றும் *குறைத்து இருந்தான்* என்பது *இருந்தான் குறைத்து* என்றும் வரலாம். அப்படி வரினும் வேற்றுமைத் தொகைகளே. இனிப் *பொற்குடம்* என்பது *பொன்னால் செய்த குடம்* என்ற பொருள்படும். இதனை மூன்றாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்க தொகை எனல் வேண்டும்.

இரண்டு முதலாம் இடைஆ றுருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே

என்பது நூற்பா.

## வினைத் தொகை

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை (8)

என்பது நூற்பா. *காலம் பற்றிப் புடைபெயர் வினை உருபாகிய தம் இறுதிகள் தொக்க பெயரெச்சங்கள் வினைத் தொகைகள் எனப்படும்.* என்பது இதன் பொருள். வினைப்பகுதி தொகாது நிற்ப, வினைப்பகுதியின் புடைப் பெயர்ச்சியைக் காட்டும் விகுதியும், காலம் காட்டும் இடைநிலை முதலியனவும் தொக்கும் வரும்.

(எ-டு) *நேற்றுக்கொல் களிறு* - இறந்தகால வினைத்தொகை
*இன்றுக்கொல் களிறு* - நிகழ்கால வினைத்தொகை
*நாளைக்கொல் களிறு* - எதிர்கால வினைத்தொகை

கொல் களிறு, என்பது, *கொன்ற, கொல்கின்ற, கொல்லும் களிறு,* என விரியும். இஃது, ஒவ்வொரு காலத்தையே பற்றாது முக்காலமும் பற்றி, நேற்றும் கொன்ற யானை, இன்றும் கொல்கின்ற யானை, நாளையும் கொல்லும் யானை என விரிய வருமானால், இது *முக்கால வினைத்தொகை* என்ப்படும். *கொல் களிறு* என்பது *இத்தொழிற்கு உரியது இஃது* என்ற பொருள்பட வருமாயின், *வினைத் தொகைக் குறிப்பு* எனப்படும். அஃதாவது, *குறிப்பு வினைமுற்று* மூன்று காலத்தையும் குறிப்பாகக் காட்டுதல் போல இதுவும் மூன்று காலத்திற்கும் பொதுவாய் இத் தொழிலுக்கு உரியது இது என்பது மட்டும் காட்டி நிற்கும்.

## பண்புத் தொகை

பண்பை விளக்கும் மொழித்தொக் கனவும்
ஒரு பொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை (14)

என்பது நூற்பா. குணப்பெயரோடு குணப்பெயர் புணரும்போது இவ்விரண்டிற்கும் உண்டாகிய ஒற்றுமை நயத்தை விளக்குவதற்கு வரும் ஆகிய என்ற பண்பு உருபு தொக்கு நிற்பனவும், அப்பண்பு தொக்கு நிற்கப் பொதுப்பெயரும், சிறப்புப் பெயருமாய் ஒரு பொருட்கு இருபெயர் வந்தனவுமாகிய இவ்விரண்டும் பண்புத் தொகைகளாம்.

(எ-டு) செந்தாமரை (செம்மை ஆகிய தாமரை) எனப் பொருள் கொண்டு, *ஆகிய* என்ற பண்பு உருபு தொக்கதாகக் கொள்ள வேண்டும். செம்மை - குணப்பெயர்; தாமரை - பொருட்பெயர் - இவ்விரண்டிற்கும் உண்டாய ஒற்றுமை நயத்தை விளக்குவதற்கு *ஆகிய* என்ற பண்பு உரு வந்து தொக்கது. இவ்வாறே, கருங்குவளை வட்டக்கலை முதலானவும் வரும்.

(எ-டு) ஆயன் சாத்தன் (*ஆயன்* என்ற பொதுப்பெயர் சாத்தன் என்ற சிறப்புப் பெயரை விசேடித்து வந்தது. ஆயன் ஆகிய சாத்தன் என்று பொருள்) இவ்வாறே வேழக் கரும்பு, சாரைப் பாம்பு முதலியனவும் வரும். இதனை இரு பெயரொட்டுப் பண்புத்தொகை என்று கூறுவர்.

*இலக்கண விளக்க* உரையாசிரியர், இந்நூற்பாவில் வரும் *பண்பை விளக்கும் மொழி* என்பதற்கு, *ஆகிய* என்ற உருபு கொள்ளலாகாது; *மை* விகுதியே கொள்ளவேண்டும் என்று உரை கூறினார். சிவஞான முனிவர் அதனை மறுத்து, *ஒரு மொழிக்கு உறுப்பாகவுள்ள விகுதியை மொழி என்று கூறல் பொருந்தாது. அது மட்டுமன்றி, வட்டம் சதுரம் என்ற பண்புப்பெயர்களில் மை விகுதி கிடையாது. எனவே, அவ்வுரை தவறு!* என்பர். இவ்வாறே மயிலைநாதர், இளம்பூரணர் முதலானோர் கூறும் உரைகளையும் மறுப்பர்.

இனிச் செந்தாமரை என்பதற்கச் *செம்மை ஆகிய தாமரை* எனப் பொருள் கொள்ளுமிடத்துப் பண்புத்தொகையாம். அங்ஙனமின்றிச் *செம்மையுடைய தாமரை* எனப் பொருள் கொண்டால் இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்கத் தொகை எனல் வேண்டும்.

## உவமத்தொகை

உவம உருபில்ல துவமத் தொகையே (15)

என்பது நூற்பா. வினை, பயன், மெய், உரு என்பன பற்றி வரும் உவம உருபுகள் தொக்க தொடர்ச் சொற்கள் உவமத் தொகைகளாம்.

(எ-டு) புலிக் கொற்றன்! மழைக்கை; குருவி கூப்பிட்டான்; இருள் மழைக்கை.

இவை முறையே புலியைப்போலும் கொற்றன்; மழையைப் போலும் கை; குருவியைப்போலும் கூப்பிட்டான்; இருளைப்போலும், மழையைப்போலும் கை என விரியும். இவற்றில் *போலும்* என்ற உவம உருபு மறைந்தது. *புலி போலப் பாயும்* என வினையைக் குறிப்பதால் இது வினை உவமத் தொகை. *மழைக்கை* என்பது *மழைபோல் பயன்தரும் கை*, எனவே பயன் உவமத் தொகை. இவ்வாறே பிறவும் வரும்.

*இருள் மழைக்கை* என்பது *உவமைக்குவமை* என்று கூறலாகாது. *இருள்மழையை* உரு உவமத்தொகை என்றும், மழைக்கையைப் பயன் உவமத் தொகை எனவும் கொள்ள வேண்டும்.

*குருவி கூப்பிட்டான்* என்பது, குருவியைப் போலக் கூப்பிட்டான் என்று பொருள் தருவதால் இதனை இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை என்றும் கூறலாம். செயப்படு பொருளைக் கருத்திற் கொண்டு கூறினால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாம். உவமைப் பொருளைக் கருத்திற் கொண்டு கூறினால் உவமைத் தொகையாம்.

## உவம உருபுகள்

உவம உருபுகள் தொக்க தொடர்ச் சொற்கள் உவமத் தொகைகள் என்று கண்டோமல்லவா? இத்தகைய உவம உருபுகள் எவையென்பதைப் பின்வரும் நூற்பா கூறுகின்றது.

போல புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே (16)

போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர என்று வரும் *செயவென் எச்சம்* பத்தும், அன்ன, இன்ன என்று வரும் பெயரெச்சக் குறிப்பு இரண்டும், பொருவ, ஏற்ப முதலாயின பிறவும் உவம உருபுகளாம்.

(எ-டு) குருவி போலக் கூப்பிட்டான் (குருவி - பெயர், கூப்பிட்டான் - வினை, பெயரொடு வினை) புணரும்போது *போல* எனும் வினையெச்ச உருபு விரிக்கலாம்.

(எ-டு) புலியன்ன கொற்றன் (புலி - பெயர், கொற்றன் - பெயர் பெயரோடு பெயர்புணருங்கால் *அன்ன* எனும் பெயரெச்ச உருபு விரிந்தது.

## உம்மைத் தொகை

எண்ணல் அளவை, எடுத்தல் அளவை, முகத்தல் அளவை, நீட்டல் அளவை என்ற நால்வகை அளவைகளால், பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள் *உம்* என்ற உருபு தொக்கு நிற்பன உம்மைத் தொகைகளாம்.

(எ-டு) கபிலபரணர் - எண்ணல் உம்மைத்தொகை (கபிலரும் பரணரும் என எண்ணி வரும்)

(கழஞ்சே கால் - எடுத்தல் உம்மைத் தொகை (கழஞ்சும் காலும் என்பது பொருள். கழஞ்சு - எடுத்தல் அதாவது நிறுத்தல்)

(எ-டு) நாழி யாழாக்கு - முகத்தல் உம்மைத் தொகை (நாழியும் ஆழாக்கும் என்பது பொருள். நாழி ஆழாக்கு - முகத்தல் அளவை)

(எ-டு) சாணரை - நீட்டல் உம்மைத் தொகை (சாணும் அரையும் என்று பொருள். சாண், அரை - நீட்டல் அளவை)

*இனிக்* கபில பரணர்ப் பரவினான் என்றால் *கபிலனையும் பரணனையும் பரவினான்* என வேற்றுமை உருபும் உடன் விரிகின்றதே என்ற கேள்வி எழும். இதற்குச் சிவஞான முனிவர் பரவினான் என வருமொழி நோக்கி, வேற்றுமைத் தொகை என்றும்; கபில பரணர் என நிலைமொழி இரண்டனையும் நோக்கி உம்மைத்தொகை என்றும் கூறலாம் என்பர்.

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனும்நான் களவையும் உம்மில தத்தொகை (17)

என்பது உம்மைத்தொகை பற்றிய நூற்பா.

இனி, உயர்திணை ஒருமைப்பாலில் வரும் உம்மைத் தொகைகள் *ர், கள்* என்ற பலர்பால் விகுதியை உடையனவாகும். (எ-டு) கபில பரணர்; சேர சோழ பாண்டியர்; தேவன் தேவிகள். (குறிப்பு): கபிலன் என்பதில் உள்ள *ன்* ஈறு, *சில விகாரமாம் உயர்திணை* (உயிரீற்றுப் புணரியல்9) என்ற விதிப்படிக் கெட்டது.

பரணன் என்பதில் உள்ள ன் ஈறு,

உயர்திணை உம்மைத் தொகை பல ரீறே (21)

என்ற நூற்பாவில் *பலரீறே* என்ற விதிப்படி கெட்டது.

இந்நூற்பாவில் *பலரீறே* என்று கூறியதனால், அஃறிணை ஒருமையில் வரும் உம்மைத் தொகைகளும், பொதுத்திணை ஒருமையில் வரும் உம்மைத் தொகைகளும், தத்தம் பன்மை ஈறாகவே வரவேண்டும் என்பதில்லை; பன்மையீற்றாலும் ஒருமையீற்றாலும் வரலாம் என்பதாம்.

(எ-டு) நன்மை தீமைகள்; நன்மை தீமை
தந்தை தாயார், தந்தை தாய்கள், தந்தை தாய்

## அன்மொழித்தொகை

வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை என்னும் இவ் ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே, அவையல்லாத புறமொழிகளாகிய உருபுகள் தொக்கு வருவன அன்மொழித் தொகைகளாம்.

(எ-டு) பூங்குழல்; பொற்றொடி

இவற்றிற்கு முறையே *பூவையுடைய குழலினை* (கூந்தலை) உடையாள், என்றும், ***பொன்னால் ஆகிய, தொடியினையுடையாள்*** என்றும் பொருள். பூவை - இதில் *ஐ* என்பது இரண்டாம் வேற்றுமை உருபு, குழல் குழலினையுடையாள் - இங்ஙனம் உருபும் பிறமொழியும் தொக்குவரும். எனவே இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும். *பொற்றொடி* என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இவ்வாறே பிற வேற்றுமைகளும் வரும்.

இவ் வேற்றுமைகள் தவிர, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமத் தொகை, உம்மைத் தொகை ஆகியனவும் இவ்வாறு வரும்.

(எ-டு) தாழ் குழல் - வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை
கருங்குழல் - பண்புத் தொகை
துடியிடை - உவமத் தொகை
தகர ஞாழல் - உம்மைத் தொகை

இவை முறையே, *தாழ்ந்த குழலினை* (கூந்தலை) உடையவள், கருமையாகிய குழலினை உடையாள். துடியன்ன இடையினை உடையாள், தகரமும், ஞாழலும் (வாசனைப் பொருள்) விராய்ச் சமைந்த சாந்தை அணிந்த முலையினையுடையாள் என விரியும்.

இனி ஒரே தொடரில் பல தொகைகளும் வரும். (எ-டு) திகழ் செய்வான் மதித் திருமுகப் பூங்குழல். இது திகழ்ந்த செம்மையாகிய வானத்தின் கண் மதிபோலும் திருமுகத்தினையும் பூவையுடைய குழலினையும் உடையாள் என விரியும். இத்துணையும் உள்ளடக்கியது பின்வரும் நூற்பா

ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி (18)

## தொடர் மொழிகளுள் பொருள் சிறக்கும் இடம்

முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும் நான் கிடத்தும் சிறக்கும் தொகைப்பொருள் (19)

என்பது நூற்பா. தொகை நிலைத் தொடர் மொழிகளில் முன்மொழியிலும் பின்மொழியிலும், அனைத்து மொழியிலும், அனைத்து மொழிக்கும் புறத்து வருமொழியிலும், பொருள் சிறந்து நிற்கும் என்பது இதன் கருத்து.

(எ-டு) குடம் வனைந்தான் - இதில் குடம் - முன்மொழி; வனைந்தான் - பின்மொழி. குடத்தை வனைந்தான் என்று பொருள். எனவே, வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். இத்தொடரில் முன்மொழியாகிய *குடம்* என்பதில் பொருள் சிறந்து நின்றது. (வனைதற்கு உரியன பல, அவற்றுள் வனையப்பட்டது குடமே! எனவே, முன்மொழியில் தொகை நிலைப் பொருள் சிறந்தது)

(எ-டு) நிலம் உழுதான் - இதில் *பின்மொழி* யாகிய *உழுதான்* என்பதில் பொருள் சிறந்தது.

(எ-டு) கபில பரணர் - இவ் உம்மைத் தொகையில், கபிலன் என்ற முன்மொழிக்கும், பரணன் என்ற பின்மொழிக்கும் ஆகிய அனைத்து மொழிக்கும் பொருட்சிறப்பு உண்டு.

(எ-டு) பூங்குழல் - இவ் அன்மொழித் தொகையில், பூ என்ற முன்மொழிக்கும் குழல் என்ற வருமொழிக்கும் பொருட் சிறப்பில்லை. இவ்விரண்டும் அல்லாது புறத்து வருமொழியாகிய *உடையாள்* என்பதற்கே பொருட்சிறப்பு உண்டு.

இவ்வாறு தொகைநிலைத் தொடர் மொழிகளில் மட்டுமின்றித் தொகா நிலைத்தொடர் மொழிகளிலும் முன்மொழி, பின்மொழி, அனைத்து மொழி எனும் இம்மூன்றிடத்தும் பொருள் சிறந்து நிற்கும் என்பர் சிவஞான முனிவர்.

## இடத்தொகை பெயர்த்தொகை வேறுபாடு

சில புணர்ச்சிகளில் வல்லொற்றும் மிக்கு வருகின்றது. (அதாவது வடுகன் + கண்ணன் = வடுகக் கண்ணன்) இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைப் பின்வரும் நூற்பா விளக்குகிறது.

வல்லொற்று வரினே இடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும் (20)

வல்லொற்று இடையில் வந்தால் இடத்தின் கண் தொக்க தொகை. மெல்லொற்று இடையில் வந்தால் பெயரின் கண் தொக்க தொகை என்பது இதன் பொருள்.

(எ-டு) வடுகக் கண்ணன் - இஃது இடத்தின்கண் தொக்க தொகை (வடுக நாட்டில் பிறந்த கண்ணன் என்று விரியும்)

வடுகக் கண்ணன் - இது பெயரின்கண் தொக்க தொகை (வடுகற்கு மகனாகிய கண்ணன் (அல்லது) வடுகனாகிய கண்ணன் என விரியும்)

வல்லினம் தவிர மெல்லினமும் இடையினமும் உயிரினமும் வரின் இங்ஙனம் இடத்தொகை, பெயர்த்தொகை வேறுபாடு காண முடியாது, வடுக நாகன் - மெல்லினம் வந்தது; வடுக வணிகன் - இடையினம் வந்தது. வடுக வரசன் உயிரினம் வந்தது (வடுகன் + அரசன், எனவே உயிர்). இத்தகு இடங்களிலெல்லாம் சொல்லுபவனது குறிப்பினாலேதான் இடத் தொகையா பெயர்த்தொகையா என வேறுபாடு காண முடியும்.

## தொகைநிலைத் தொடர்கள் பல பொருள்படுதல்

தொகைநிலைத் தொடர்ச் சொற்கள், உருபு தொக்கு நின்றமையின் சில பொருளால் மயங்கியும் வரும்.

தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப (22)

என்பது நூற்பா. வேற்றுமை முதலான தொகைநிலைத் தொடர்கள் 2 முதல் 7 ஈறாகவுள்ள பொருள்களால் மயங்கும் என்பர் புலவர் என்பது இதன் பொருள்.

(எ-டு) தெய்வ வணக்கம் - தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம். எனவே, இரண்டு பொருள்களினால் மயங்கியது.

(எ-டு) தற்சேர்ந்தார் - தன்னைச் சேர்ந்தார், தன்னோடு சேர்ந்தார், தன் கண் சேர்ந்தார். எனவே மூன்று பொருள்களினால் மயங்கியது.

(எ-டு) சொல்லிலக்கணம் - சொல்லினது இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லின் கண் இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல் எனவே நான்கு பொருள்களினால் மயங்கியது.

(எ-டு) பொன்மணி - பொன்னின் ஆகிய மணி. பொன் ஆகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னோடு சேர்ந்த மணி, பொன்னும் மணியும். எனவே ஐந்து பொருள்களினால் மயங்கியது.

(எ-டு) மரவேலி - மரத்தைக் காக்கும் வேலி, மரத்துக்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரத்தால் ஆகிய வேலி, மரம் ஆகிய வேலி. எனவே ஆறு பொருள்களினால் மயங்கியது.

(எ-டு) சொற்பொருள் - சொல்லான் அறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப் பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லும் பொருளும், சொல் ஆகிய பொருள், சொல்லானது பொருள். எனவே ஏழு பொருள்களினால் மயங்கியது.

(எ-டு) புலி கொல் யானை - புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை. இது 2ஆம் வேற்றுமையும், எழுவாய் வேற்றுமையும், 3ஆம் வேற்றுமையும் ஆகிய 2 பொருளால் மயங்கிய பல தொடர்த் தொகைச் சொல்.

## தொகாநிலைத் தொடர்மொழி

இதுகாறும் தொகைநிலைத் தொடர்மொழி பற்றிக்கண்டோம். பின்வரும் நூற்பா, தொகாநிலைத் தொடர்மொழி (உருபுகள் முதலாயின மறையாது நிற்றல்) பற்றிக் கூறுவது:

*முற்றீரெச்சம் எழுவாய்விளிப் பொருள்*
*ஆறுரு பிடைஉரி அடுக்கிவை தொகாநிலை* (18)

வினைமுற்றும் பெயரெச்சமும், வினையெச்சமும், எழுவாயும், விளியும் ஆகிய ஐவகைப் பொருள்களில் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், 2 முதல் 7 ஐவகைப் பொருள்களில் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், 2 முதல் 7 ஆம் வேற்றுமை முடியவுள்ள 6 வேற்றுமை உருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர், வினைகள் புணரும் புணர்ச்சியும், இடைச் சொல் புணர்ச்சியும், உரிச் சொல் புணர்ச்சியும், ஒரு சொல் அடுக்கிவரும் புணர்ச்சியும் ஆகிய இவ் ஒன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகள் எனப்படும். அவை:

1. வினைமுற்றுத் தொடர் - (எ-டு) உண்டான் சாத்தன்
2. பெயரெச்சத் தொர்டர் - (எ-டு) உண்ட சாத்தன்
3. வினையெச்சத் தொடர் - (எ-டு) உண்டு வந்தான்
4. எழுவாய்த் தொடர் - (எ-டு) சாத்தன் வந்தான்
5. விளித் தொடர் - (எ-டு) கொற்றா கொள்!
6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் - (எ-டு) குடத்தை வனைந்தான்
(2ஆம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்)
7. இடைச் சொற்றொடர் - (எ-டு) அதுகொல் தோழி, காமநோயே
8. உரிச் சொற்றொடர் - (எ-டு) நனி பேதையே நயனில் கூற்றம்
9. அடுக்குத் தொடர் - (எ-டு) பாம்பு பாம்பு

## வழு விகற்பங்கள்

*திணையே பாலிடம் பொழுது வினாஇறை*
*மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே* (24)

என்பது வழு விகற்பங்களைப் பற்றிய நூற்பா. இருதிணை, ஐம்பால், மூவிடம், முக்காலம், வினா, விடை பலவகைமரபு - இவ் ஏழும் தத்தம் நெறியினின்று மயங்கினால் *வழு* அல்லது *குற்றம்* ஆகும் என்பது இதன் கருத்து

(எ-டு) அவன் வந்தது - திணை வழு, (*அவன் வந்தான்* என்பதற்குப் பதிலாக *அவன் வந்தது* என்றால் உயர்திணைக்கு உரிய முடிவைக் கூறாமல் அஃறிணைக்கு உரிய முடிவு. ஆதலின் குற்றமாம். இவ்வாறே, பி வழுக்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்)

(எ-டு) அவன் வந்தாள் - பால்வழு

(எ-டு) யான் வந்தான் - இடவழு

(எ-டு) நாளை வந்தான் - கால வழு

(எ-டு) கறக்கின்ற எருமை. பாலோ? சினையோ? - வினா வழு. (சினை என்பது *காம்பைப்* குறிக்கும். இவ்வினாவே தவறு).

(எ-டு) *கடம்பூர்க்கு வழி யாது* என்று வினாவின் *இடப்பக்கத்திற் பூட்டப்பட்டது எனது பசுவின் கன்றன்று* என விடை தருவது விடைவழு.

(எ-டு) ஆடு மேய்ப்பானைப் *பாகன்* என்றும், *எருமைச் சாணி* என்பதை *எருமையிலத்தி* என்றும் கூறுதல் மரபு வழு.

**வினா விடைகள் வழுவாமற் காத்தல்**

திணை ஐயத்தையும், பால் ஐயத்தையும், அவற்றின் பொதுச் சொல்லாலும் துணிந்த பொருள்மேல் அல்லாத நன்மையை வைத்தும் சொல்லுவர் புலவர். அஃதாவது ஒரு பொருள் உயர்திணையா அஃறிணையா என்ற ஐயம் தோன்றும்போது இரு திணைக்கும் உரிய பொதுச்சொல்லால் வினவ வேண்டும். அவ்வாறே உயர்திணையில் பால் ஐயம் தோன்றினாலும் அஃறிணையில் *பால்* ஐயம் தோன்றினாலும் பொதுச்சொல்லால் வினவ வேண்டும் என்பதாம்.

(எ-டு) மரக்கட்டையா? மகனா? என்று திணையில் ஐயம் எழுந்தால் குற்றியோ, (மரக்கட்டை), மகனோ அவ்விடத்துத் தோன்றும் உரு என்று வினவ வேண்டும். *உரு* என்பது இருதிணைக்கம் பொது. இவ்வாறு வினவாமல் *குற்றியோ மகனோ தோன்றுவது* என்றோ *குற்றியோ மகனோ தோன்றுபவன்?* என்றோ வினவினால் வினா வழுவும், திணை வழுவும் ஆகும். இவ் வழு வராமற் காக்க, இரண்டிற்கும் உரிய பொதுச் சொல்லால் வினவ வேண்டும்.

(எ-டு) *ஆணா? பெண்ணா?* என்று உயர்திணையில் *பால்* ஐயம் எழுந்தால், *ஆணா பெண்ணா அங்கே தோன்றுபவர்* என்று இருதிணைக்கும் பொதுவான ஒரு சொல்லால் வினவ வேண்டும். இல்லையேல் பால் வழுவாகும்.

(எ-டு) ஒன்றோ? பலவோ? என்று அஃறிணையில் *பால்* ஐயம் தோன்றினால், *ஒன்றோ பலவோ இவ் வயல் புக்க பெற்றம்?* என்று ஒன்றன் பாலுக்கும், பலவின்பாலுக்கும் உரிய பொதுச் சொல்லால் வினவ வேண்டும்.

இவை வினா பற்றியன. இனி, விடை பற்றியன வருமாறு:

(எ-டு) குற்றியோ மகனோ என்று ஐயம் வந்தபோது, குற்றியே என்று துணிந்துவிட்டால், மகன் அன்று என்று விடையிறுக்க வேண்டும். மகன் என்று துணிந்துவிட்டால், குற்றியல்லன் என விடையிறுக்க வேண்டும்.

(எ-டு) ஆண் மகனோ? பெண் மகளோ? என்று ஐயம் வந்தபோது, ஆண் மகனே என்று துணிந்துவிட்டால், பெண்மகள் அல்லள் என விடையிறுக்க வேண்டும். பெண் மகளே என்று துணிந்துவிட்டால், ஆண்மகன் அல்லன் என்று விடையிறுக்க வேண்டும்.

(எ-டு) ஒன்றோ? பலவோ? ஐயம் வந்தபோது, ஒன்று எனத் துணிந்துவிட்டால் பலவன்று என விடையிறுக்க வேண்டும். பல என்று துணிந்துவிட்டால் ஒன்றல்ல என விடையிறுக்க வேண்டும்.

இவ்வாறு துணிந்த பொருள்மேல், மற்றொன்று அல்லாத தன்மையை வைத்துக் கூற வேண்டும்.

*ஐயம் திணைபால் அவ்வப் பொதுவினும்*
*மெய்தெரி பொருள்மேல் அன்மையும் விளம்புப* (25)

என்பது நூற்பா.

### திணை வழுவமைதி

உயர்திணை எழுவாயைச் சார்ந்து நிற்கும் அஃறிணைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறும் அவ்வுயர் திணையோடு சேர்த்து முடித்தால், அவ்வுயர்திணை முடிவைப் பெறும்.

> **உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்**
> **அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின** (26)

என்பது நூற்பா.

(எ-டு) நம்பி பொன் பெரியன்

நம்பி - உயர்திணை; பொன் - அஃறிணை, *நம்பி* என்ற உயர்திணை எழுவாயைச் சார்ந்து *பொன்* என்ற அஃறிணை எழுவாயும், *பெரியது* என்ற அஃறிணை முடிபுகொள்ளாமல், *பெரியன்* என உயர்திணை முடிபு கொண்டது. இங்குப் *பொன்* என்பது *பொருள் இடம் காலம்* முதலான ஆறில் பொருள் என்பதாகும். இவ்வாறே, நம்பி நாடு பெரியன், நம்பி வாணாள் பெரியன். நம்பி மூக்குக் கூரியன், நம்பி குடிமை நல்லன். நம்பி நடை கடியன் என ஏனைய இடம், காலம், சினை, குணம், தொழில் முதலான ஐந்தும் வரும். இங்ஙனம் *பொன், நாடு* முதலான அஃறிணைப் பெயர்கள் *பெரியன் கூரியன்* முதலான உயர்திணை முடிபு ஏற்றல் *வழு*வாயினும், *நம்பி* என்ற உயர்திணையுடன் தொடர்பு பற்றி இங்ஙனம் வந்தன. எனவே இவை *திணை வழுவமைதி* எனப்படும்.

(எ-டு) கிணறு நீர் ஊறிற்று; பொன் பெரிது

என்றும் வரும். கிணறு அஃறிணை நீர்-அஃறிணை, எனவே ஊற்றிற்று என அஃறிணை முடிபு ஏற்றது. பொன் - அஃறிணை; இஃது, உயர்திணையோடோ, அஃறிணையோடோ சேர்ந்து வந்தது. எனவே பெரிது என அஃறிணை முடிவு ஏற்றது.

### திணைபால் மரபு வழுவமைதி

> *திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்*
> *மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே* (27)

என்பது, திணைபால் மரபு வழுவமைதி கூறுவது. திணைகளும், பால்களும் வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும், தத்தம்மில் கலந்து ஒரு தொடராக வருமானால், அவை சிறப்பினாலும், மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிபினவாகும்.

### திணை முடிபு

(எ-டு) திங்களும் சான்றோரும் ஒப்பர்

திங்கள் அஃறிணை; சான்றோர் -உயர்திணை ஒப்பர் என உயர்திணை முடிபு ஏற்றன. திங்களை விடச் சான்றோர் சிறப்புடையர். எனவே, இச்சிறப்பு நோக்கிப் பயனிலையும் உயர்திணை முடிபு ஏற்றது.

(எ-டு) பார்ப்பார், தவரே, சுமந் தார், பிணிப்பட்டார்.
மூத்தார் இளையார், பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு

இதில், *பசு* என்பது ஒன்றுமட்டும் அஃறிணை; பார்ப்பார் முதலாவோர் உயர்திணை. எண்ணிக்கையில் அஃறிணையை விட உயர்திணை மிகுந்துள்ளமையால், இம்மிகுதி நோக்கி, *இவர்கட்கு* என உயர்திணை முடிபு ஏற்றன.

(எ-டு) மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா

மூர்க்கன் - உயர்திணை; முதலை - அஃறிணை. இழிவு நோக்கி விடா என அஃறிணை முடிபு ஏற்றன.

### பால முடிபு

(எ-டு) தானும் தேரும் பாகனும் வந்து என் நலன் உண்டான். இதில் தேர் - அஃறிணை; பாகன்-உயர்திணை. இருதிணையும் கலந்து சிறப்பினால் உண்டான் என உயர்திணை ஆண்பால் முடிபு ஏற்றன.

(எ-டு) தானும் தன் தையலும் தாழ் சடையோன் ஆண்டிலனேல்

தையல்-பெண்பால்; தாழ் சடையோன் - ஆண்பால், சிறப்பினால் ஆண்டிலன் என ஆண்பால் முடிபு ஏற்றன.

### மரபு முடிபு

(எ-டு) மாலையும் முடியும் கவித்தான்

சூடுவதற்குரியது மாலை; கவிப்பதற்குரியது முடி (கிரீடம்). சிறப்பினால் கவித்தான் என்ற முடிபு ஏற்றன.

இவ்வாறே பிறவும் வரும்.

### பால் திணை வழுவமைதி

*உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்*
*இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே* (28)

என்பது பால் திணை வழுவமைதி கூறும் நூற்பா.

### பால் வழுவமைதி

(எ-டு) தன் மகனை என் அம்மை வந்தாள் எனல் - மகிழ்ச்சியால் ஆண்பாலைப் பெண்பாலாகக் கூறுதல்.

(எ-டு) ஒருவனை அவர் வந்தார் எனல் - உயர்வினால் ஒருமைப் பாலைப் பன்மைப் பாலாகக் கூறுதல்.

(எ-டு) தாதாய்! (தந்தையே!) மூவேழ் உலகுக்கும் தாயே! சிறப்பினால் ஆண்பாலைப் பெண்பாலாகக் கூறுதல்.

(எ-டு) எனைத்துணையராயினும் . . . தேரான் (குறள்) - எனைத் துணையர்-பன்மை, தேரான் ஒருமை. கோபத்தினால் பன்மைப் பாலை ஒருமைப் பாலாகக் கூறுதல்.

(எ-டு) பெண்வழிச் செல்வானை, இவன் பெண் எனல், பழிப்பினால் ஆண்பாலைப் பெண்பாலாகக் கூறுதல்.

### திணைவழுவமைதி

(எ-டு) ஒரு பசுவினை, என் அம்மை வந்தாள் எனல், மகிழ்ச்சியின் அஃறிணையை உயர்திணையாகக் கூறுதல்.

(எ-டு) செந்தார்ப் பசுங்கிளியார் - உயர்வினால் அஃறிணையை உயர்திணையாகக் கூறுதல்.

(எ-டு) தம்பொருள் என்ப தம் மக்கள் (குறள்) - சிறப்பினால் மக்கள் என்ற உயர்திணையைப் பொருள் என அஃறிணையாகக் கூறுதல்.

(எ-டு) ஏவவுஞ் செய்கலான் . . . நோய் (குறள்) - கோபத்தினால் செய்கலான் என்ற உயர்திணையை நோய் என அஃறிணையாகக் கூறுதல்.

(எ-டு) நாம் அரன் உடைமை - பழிப்பினால், நாம் என்ற உயர்திணையை உடைமை என அஃறிணையாகக் கூறுதல்.

## பால் இடவழுவமைதி

ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே (29)

ஒருமைப்பாலின் பன்மைப்பாற் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப் பாற்சொல்லையும், ஓரிடத்தின்கண் பிற இடச்சொல்லையும் தழுவிக்கூறுதலும் உண்டு. அவற்றிற்குப் பால், இட வழுவமைதிகள் என்று பெயர்.

**பால்:** (எ-டு) அகுதை தந்தை - அடுபோர்ச் சோழர்.

உயர்திணையில், தந்தை என்ற ஒருமைப்பாலில், சோழர் என்ற பன்மைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதாவது, ஒருமைப்பாலில் பன்மைப்பாலைத் தழுவிக் கூறுதலும் உண்டு.

(எ.டு) இரண்டு கண்ணும் *சிவந்தது*

அஃறிணையில் *இரண்டு* என்ற பன்மைப் பாலில் சிவந்தது என்ற ஒருமைச் சொல் சேர்ந்துச் சொல்லப்பட்டது அஃதாவது பன்மைப்பாலில் ஒருமைப்பாலைத் தழுவிக் கூறுதலும் உண்டு.

இங்ஙனம் வருவன *பால்வழுவமைதி* எனப்படும்.

**இடம்:** (எடு) *சாத்தன் தாய் இவை செய்வலோ?*

இதற்குச் *சாத்தான் தாயாகிய யான் இவை செய்வலோ?* என்று பொருள். யான் என்ற தன்மையில், *சாத்தன் தாய்* என்ற படர்க்கை சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

(எ.டு) *எம்பியை ஈங்குப் பெற்றேன்*

தன் முன்னால் நிற்கும் தம்பியைப் பார்த்து, நின்னை ஈங்குப் பெற்றேன் என்று முன்னிலைப்படுத்திச் சொல்ல வேண்டும்; மாறாக எம்பியை எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது.

(இங்ஙனம் வருவன இடவழுவமைதி எனப்படும்)

இவ்வாறே பிறவும் வரும்.

## இடம் வழுவாமற் காத்தல்

*தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை*
*எழுவாய் இரண்டு எஞ்சிய ஏற்கும்* (30)

தா, வா, கொடு, செல்-இம் முதனிலையிற் பிறந்த சொற்களாகிய தரல், வரல், கொடை, செலல் இந்நான்கும் படர்க்கை இடத்தில் வரும். இவற்றுள் தரல் வரல் என்ற இரண்டு தன்மை, முன்னிலை இடத்தும் வரும், என்பது இதன் கருத்து.

(எ.டு) அவனுக்குத் தந்தான்; அவன்பால் வந்தான்; அவனுக்குக் கொடுத்தான்; அவன்பால் சென்றான். (இவை, படர்க்கையில் வந்தன)

(எ.டு) எனக்குத் தந்தான்; என்பால் வந்தான், (இவை தன்மையிடத்தில் வந்தன)

(எ.டு) நினக்குத் தந்தான்; நின்பால் வந்தான் (இவை முன்னிலையில் வந்தன)

இங்ஙனமின்றி, எனக்குக் கொடுத்தான்; என்பால் சென்றான். நினக்குக் கொடுத்தான்; நின்பால் சென்றான் என்று வந்தால், இவற்றை இடவழுவமைதி என்று கொள்ள வேண்டும் என்று சிவஞான முனிவர் கூறுவார்.

## காலம்

*இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே* (31)

என்னும் நூற்பா காலம் இறந்தகாலமும், எதிர்காலமும், நிகழ்காலமும் என மூன்றாம் என்பது இதன் கருத்து.

காலம் என்பது ஒன்று இல்லை என்றும், காலம் ஒன்றே, அது நிகழ்காலம் என்றும்; இறந்தகாலம், நிகழ்காலம் என்ற இரண்டே என்றும் கூறுவர் சிலர். இதனை மறுப்பது இந்நூற்பா எனத் தெளிவுபடுத்துகின்றார் சிவஞான முனிவர். எந்த ஒரு பொருளும், தோன்றுமளவில் தோன்றி வருமளவில் வளர்ந்து முதிருமளவில் முதிர்ந்து, அழியுமளவில் அழியுமே அல்லாமல், உயிர்கள் வேண்டியவாறெல்லாம் ஆகாமையின் அவற்றை அவ்வளவில் அவ்வாறு இயற்றுவது காலம்; அதனால் இயலும் பொருள்களின் தொழில் இறப்பு, எதிர்வு, நிகழ்வு ஆதலின் அவ்வாறு இயற்றும் காலமும் மூன்றுவகையாம் என்பது அவர் விளக்கம்.

## கால வழுவமைதி

*முக்கா லத்திலும் ஒத்தியல் பொருளைச்*
*செப்புவர் நிகழுங் காலத் தானே* (31)

என்பது நூற்பா. தம் தொழில், இடைவிடாமல் 3 காலத்திலும் ஒரு தன்மைபவாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தில் கூறுவர் புலவர் என்பது இதன் பொருள்.

(எ.டு) மலை நிற்கிறது; தெய்வம் இருக்கிறது.

மலை நிற்றலும், தெய்வம் இருத்தலும் முக்காலும் உண்மை. எனவே நிற்கிறது, இருக்கிறது என நிகழ்காலத்தில் கூறலாம். ஆதலின் *கால வழுவமைதி* எனப்படும்.

*விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்*
*பிறழவும் பெறூஉமுக் காலமும் ஏற்புழி* (33)

என்பது மற்றொரு நூற்பா. விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும் இயல்பினாலும் இம்மூன்று காலங்களும், பொருந்துமிடத்து ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும்.

(எ.டு) சோறு வேகாமலிருக்க, அதனை உண்டு போவதற்கு இருப்பவனிடம் மற்றொருவன் வந்து, இன்னும் உண்ணவில்லையோ? என்று கேட்டால் அவ்ன் ***உண்டேன் உண்டேன்,*** என்பான். எதிர்காலமும் நிகழ்காலமும் இவ்விடத்து இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன. விரைவு பற்றி வந்தது.

(எ.டு) ***களவு செய்ய நினையின் கையறுப்புண்டான்***

களவு செய்ய நினைத்தால் கை அறுபட்டாலும் படும்; பெரும்பாலும் அறுபடும். எனவே எதிர்கலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. மிகுதி பற்றி வந்தது.

(எ.டு) ***அறம் செய்தால் சுவர்க்கம் புக்கான்***

சுவர்க்கம் உறுதியாகக் கிட்டும் என்ற பதளவனால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது.

(எ.டு) *யாம் பண்டு (முன்பு) விளையாடுவது இச்சோலை*

காரணமின்றி இயல்பினால், இறந்தகாலம், எதிர்காலமாகச் சொல்லப்பட்டது. இவ்வாறே பிறவும் வரும்.

## அறுவகை வினா

*அறிவறி யாமை ஐயுறல் கொளல் கொடை*
*ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார் (31)*

என்பது நூற்பா. ***அறிவு, அறியாமை, ஐயம், கொளல், கொடை, ஏவல் இவற்றினைத் தரும் வினாக்கள் ஆறனையும் நீக்காமற் கொள்வர் புலவர்*** என்பது இதன் பொருள். இவ்வகையில் வினாக்கள் 6 வகைப்படும்.

1. அறிவினா: ஆசிரியர் ஒருவர், தம் மாணவனிடம் இந்நூற்பாவுக்குப் பொருள் யாது? எனல்.
2. அறியா வினா: மாணவன் ஒருவன், தன் ஆசிரியரிடம் இந்நூற்பாவுக்கு பொருள் யாது? எனல்.
3. ஐய வினா: குற்றியோ (மரக்கட்டையோ) மகனோ?
4. கொளல் வினா: பொன் உளவோ? மணி உளவோ?
5. கொடை வினா: சாத்தனுக்கு ஆடை இல்லையோ?
6. ஏவல் வினா: சாத்தா உண்டாயா?

## எண்வகை விடை

*சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்*
*உற்ற துரைத்தல் உறுவது கூறல்*
*இனமொழி எனுமெண் இறையுள் இறுதி*
*நிலவிய ஐந்துமப் பொருண்மையின் நேர்ப (35)*

என்பது நூற்பா. சுட்டு, மறை, நேர், ஏவல், வினா, உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி என விடை எட்டு வகைப்படும். (அஃதாவது நேருக்கு நேராக, விடை கூறல்) பின்னைய 5-ம் இறை பயப்பது எனப்படும் (அஃதாவது நேர்விடையாகாது!)

1. சுட்டு விடை: வஞ்சிக்கு வழி யாது? என்று கேட்பார்க்கு இது எனல்
2. மறை விடை: சாத்தா இது செய்வாயோ? என்றால் செய்யன் எனல், (மறை=எதிர்மறை)
3. நேர்விடை: சாத்தா இது செய்வாயோ? என்றால் செய்வேன் எனல்
4. ஏவல் விடை: சாத்தா இது செய்வாயோ? என்றால், நீ செய் எனல்.
5. வினா விடை: சாத்தா இது செய்வாயோ என்றால் செய்வேனோ? எனல்.
6. உற்றது உரைத்தல் விடை: ***உடம்பு நொந்தது*** (உற்றது உரைதல்= உண்டானதைச் சொல்லல்)
7. உறுவது கூறல் விடை: ***உடம்பு நோம்.*** உறுவது இனி உண்டாவது
8. இனிமொழி விடை: ***மற்றையது செய்வேன்.*** இனம் வினாவுடன் தொடர்புடையது.

## வினா விடைகளில் சினை முதல் வழுவாமை

*வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல் (36)*

என்பது நூற்பா. வினாவும் போதும், விடை கொடுக்கும்போதும், சினையும் முதலும், ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படா என்பது இதன் பொருள்.

எ.டு கண் பிறழ்ந்ததோ? கயல் பிறழ்ந்ததோ? என்று வினவுவோர்க்குக் கண் பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது என விடை கொடுக்க வேண்டும். கண் பிறழ்ந்தது என்பதில் கண் - சினை உறுப்பு. இவ்வாறு சினையை வினவின் இச்சினையையுடைய முதலாகிய பெண்ணைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ? கயல் பிறழ்ந்ததோ? என வினவுதல் வழுவாகும். இதற்கு இவள் பிறழ்ந்தாள் என விடை கொடுத்தாலும் வழுவாகும்.

## மரபு

*எப்பொருள் எச்சொல்லின் எவ்வா றுயர்ந்தோர்*
*செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (37)*

என்பது நூற்பா. யாதொரு பொருளை, யாதொரு சொல்லால், யாதொரு வழியால், அறிவுடையார் சொன்னார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியாற் சொல்லுதற் மரபு என்பது இதன் பொருள்.

(எ.டு) குதிரைக் குட்டி, பசுவின் கன்று முதலாயின.

இவ்வாறன்றிக் குதிரைக் கன்று பசுவின் குட்டி என்று கூறுதல் வழுவாகும்.

## மரபு வழா நிலை

*வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொல்லும்*
*வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும் (38)*

என்பது நூற்பா. வெவ்வேறு வினைகட்குரிய பல பொருட்களையும், ஒருங்கு தழுவி நிற்கும் ஒரு பொதுச் சொல்லும். அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பல சொற்களும் எல்லாவற்றிற்கும் உரியதோர் பொதுவினையைக் கொண்டு முடியும்.

எ.டு அடிசில் என்பது, உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன ஆகியவற்றிற்கெல்லாம் பொதுச் சொல். எனவே அடிசில் அயின்றார், அடிசில் மிசைந்தார் எனலாம். அணி என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுப் பெயர். எனவே அணி அணிந்தார். அணி தாங்கின . எனலாம். இவ்வாறே குழையும் நெடுநாணும் அணிந்தார். பறையும் குழலும் இயம்பினார்; வாளும் வேலும் வழங்கினார் என வரும்.

*வினைசார் பினமிடம் மேவி விளங்காப்*
*பல பொருள் ஒரு சொல் பணிப்பர் சிறப்பெடுத்தே (39)*

என்பது மற்றொரு நூற்பா.

வினை, சார்பு, இனம், இடம் முதலானவைகளைப் பொருத்திக் குறித்த பொருள் விளங்காத பல பொருள் ஒரு சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்ல வேண்டும் என்பது இதன் கருத்து.

(ம டு) ம்ா என்பது மாமரம். வண்டு ஒருவகை விலங்கு. திரு எனப் பல பொருள்தரும் ஒரு சொல். மாப் பூத்தது-பூத்தது என்ற வினையால் மா என்பது மாமரத்தைக் குறிக்கும். மா வீழ்மலர்-வீழ் (விரும்பு) மலர் என்ற சார்பால் மா என்பது வண்டினைக் குறிக்கும். தேர், கரி, மா, காலாள் - தேர், கரி (யானை, காலாள் என்ற இனத்தால் மா என்பது குதிரையைக் குறிக்கும். மா மறுத்த மார்பன்-மார்பன் என்ற இனத்தில் மா என்பது திரு ஆயிற்று.

இனிச் சிலவிடங்களில், குறித்த பொருள் விளங்காதிருத்தலும் உண்டு. அவ்விடங்களில் சிறப்புச் சொல்லுடன சேர்த்துக் கூறவேண்டும் (எ.டு) மா ஏறினான். இங்கு மாமரத்தில் ஏறினானா? அன்றி விலங்காகிய குதிரையில் ஏறினானா? என்று குறித்த பொருள் விளங்கவில்லை. இவ்விடத்தில் மா மரம் எறினான் என்றோ பாய்மா ஏறினான் (பாய்மா-பாய்ந்து செல்வதில் வல்ல குதிரை) என்றோ கூறுகிறோம். மா அல்லது பாய் என்ற சிறப்புச் சொல்லுடன் சேர்த்துக் கூறினால் குறித்த பொருள் விளங்கும்.

எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளி வெய்தும் என்ப (40)

என்பது மற்றொரு நூற்பா.

எழுத்தினது தன்மை வேறுபடாது, பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்கும் தொடர்மொழிகள் குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற இசை (ஒலி) யறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே துணியப்படும் என்பர் புலவர் என்பது இதன் பொருள்.

(எ.டு) செம்பொன் பதின்றொடி, இதனைச் செம்பொன்-பதின்றொடி என இசையறுத்துக் கூறினால் செம்பொன் பத்துப்பலம் (பதின்றொடி-பத்துப்பலம்) என்று பொருள். இங்ஙனம் கூறாமல், செம்பு ஒன்பதின் பலம் என இசையறுத்துக் கூறினால் செம்பு ஒன்பது பலம் என்று பொருள். இவ்வாறே நாகன்தேவன் போத்து என்பதை நாகன்-றேவன்-போத்த என்றும் நாகன்றே வன்போத்து என்றும் இசையறுக்கலாம். இவ்வாறே பிறவும் வரும்.

## மரபுவழா நிலையும் வழுவமைதியும்

ஒருபொருள் மேற்பல பெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப தனியும் ஓரோ வழி (41)

என்பது நூற்பா. ஒரு தொடரினுள், ஒரு பொருளுக்கே பல பெயர்கள் வருமாயின் பொருள் ஒன்றே என்பது தோன்ற, இறுதியில் ஒரு முடிக்கும் சொல்லைக் கொடுத்தும், ஒரு பொருளே என்பது தெரியவருமிடத்தே பெயர்தோறும் முடிக்கும் சொல்லைக் கொடுத்தும் கூறுவர் புலவர் என்பது இதன் கருத்து.

(எ.டு) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான். இதனுள், ஆசிரியன் பேரூர்கிழான் என்பன சாத்தன் என்ற ஒரு பொருளின் மேல் வந்த பல பெயர்கள். இவை வந்தான் என்ற முடிக்கும் சொல்லை இறுதியில் பெற்றன.

(எ.டு) மின்தோய் வரைகொன்ற வேலோன் புகுதக
இன்தேன் கமழ்தார் இயக்கன் புகுதக
வென்றோன் புகுதக, வேலோன் புகுதக

இதனுள் வேலோன், இயக்கன், வென்றோன், வேலோன் என்பன, பெயர்தோறும் புகுதக என்ற முடிக்கும் சொல்லைப் பெற்றன.

திணைநிலம் சாதி குடி உடைமையே
குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு
இயற்பெயர் ஏற்றிடில் பின்வரல் சிறப்பே (42)

என்பது மற்றொரு நூற்பா. ஐந்திணையும், நிலமும், சாதியும், குடியும், உடைமையும், குணமும், தொழிலும், கல்வியும் ஆகிய இவற்றைப்பற்றி வரும் சிறப்புப் பெயருடனே இயற்பெயரை ஒரு பொருள் ஏற்குமாயின் அவ்வியற்பெயர், பின்வருதல் சிறந்த மரபாகும் என்பது இதன் பொருள்.

(எ.டு) குன்றவன் கொற்றவன்-கொற்றவன் என்பது திணை பற்றி வந்த சிறப்புப் பெயர்; கொற்றவன்-இயற்பெயர். இது குன்றவன் என்ற சிறப்புப் பெயருக்குப் பின்னால் வந்தது.

(எ.டு) அருளாளன் அழகன் (நிலம் பற்றி வந்தது)

(எ.டு) பார்ப்பான் பாராயணன் (சாதி பற்றி வந்தது)

(எ.டு) ஊர்க்கிழான் ஓணன் (குடிபற்றி வந்தது)

(எ.டு) பொன்னன் பொறையன் (உடைமை பற்றி வந்தது)

(எ.டு) கரியன் கம்பன் (குணம் பற்றி வந்தது)

(எ.டு) நாடன் நம்பி (தொழில் பற்றி வந்தது)

(எ.டு) ஆசிரியன் அமிழ்தன் (கல்வி பற்றி வந்தது)

இவற்றில், சிறப்புப் பெயர்களுக்குப் பின்னால் இயற்பெயர்கள் வந்தன. இனி இந்நூற்பாவில் சிறப்பே என்று வருவதால்,

(எ.டு) கொற்றவன் குன்றன், அழகன் அருளாளன்

என இயற்பெயர்கள் முன்னும், சிறப்புப் பெயர்கள் பின்னும் வருதலும் உண்டு. இயற்பெயர் முன்னாக வருங்கால் (எ.டு) வெண்கொற்றப் படைத்தலைவன் என நிலைமொழியீறு விகாரப்பட்டு வருதலும் உண்டு.

படர்க்கைமுப் பெயரோ டணையின் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனில்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட்கேற்புழி (43)

என்பது மற்றொரு நூற்பா.

படர்க்கை இடத்தவாகிய உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப்பெயர் என்னும் மூவகைப் பெயரோடு சுட்டுப்பெயர் சேர்ந்துவரின் அச்சுட்டுப் பெயர், அப்பெயர்க்குப் பின்னால் வரும். ஆனால், இங்ஙனம் வருதல், வழக்கினிடத்தேயாம்! செய்யுளில் இங்ஙனம் முன், பின் வேறுபாடின்றி வரும் என்பது இதன் பொருள்.

(எ-டு) நம்பி வந்தான், அவனுக்குச் சோறிடுக. இதில் *நம்பி* என்ற உயர்திணைப் படர்க்கைப் பெயருக்குப் பின்னால் *அவனுக்கு* என்ற சுட்டு வந்தது.

(எ-டு) எருது வந்தது, அதற்குப் புல்லிடுக. இதில் எருது என்ற அஃறிணைக்குப் பெயருக்குப் பின்னால் *அதற்கு* என்ற சுட்டு வந்தது.

(எ-டு) சாத்தன் வந்தது, அதற்குப் புல்லிடுக, இதில் சாத்தன் என்ற விரவுப் பெயருக்குப் பின்னால் அதற்கு என்ற சுட்டு வந்தது.

(எ-டு) நம்பி அவன்: அவன் நம்பி, இதில் *அவன்* என்ற சுட்டு பெயருக்குப் பின்னும் முன்னும் வந்தது.

(எ-டு) அவன் அணங்கு நோய் செய்தான் - விழைவு

இச்செய்யுளில் அவன் என்ற சுட்டு முன்னால் வந்தது. இவ்வாறு செய்யுளில், சுட்டுமுன் வருதல் வழுவமைதியாகும்.

## அடுக்குத் தொடர்

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை அடுக்கும். (44)

என்பது நூற்பா. சொல்லானது அசைநிலையில் 2ம் விரைவு வெகுளி உவகை, அச்சம், அவலம் முதலான பொருள் நிலையில் 2 அல்லது 3ம் இசைநிலையில் 2 அல்லது 3 அல்லது 4ம் அடுக்கிவரும்.

(எ-டு) அன்றே அன்றே - அசைநிலை
உண்டேன் உண்டேன் - விரைவு
எறி எறி எறி - வெகுளி
பொலிக பொலிக பொலிக - உவகை
பாம்பு பாம்பு -அச்சம்
உய்யேன் உய்யேன் - அவலம்
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ - இசைநிலை

ஒரு சொல்லைப் பலமுறை கூறுதல் வழுவாயினும், இவ்விடத்து இவை வழுவமைதியாகக் கொள்ளப்படும்.

## இரட்டைக் கிளவி

*இரட்டைக் கிளவிஇரட்டிற்பிரிந்த திசையா (45)*
என்பது நூற்பா.

இரட்டைச் சொற்கள், அவ்விரட்டிப்பினின்றும் பிரிந்து தனித்து ஒலிக்க மாட்டா. எனவே இரட்டிக் கூறுதலே மரபாகும் என்பது இதன் கருத்து.

(எ-டு) சலசல மும்மதம் பொழிய, குறுகுறு நடந்தும்
வற்றியவோலை கலகலக்கும், துடி துடித்துத் துள்ளிவரும்

## ஒரு பொருட் பல் பெயர்

*ஒருபொருட் பல்பெயர் பிரிவில வரையார் (46)*
என்பது நூற்பா.

*ஒரு பொருளின் மேற் பல்பெயர் சொல்லும்போது அப்பொருளினின்றும் பிரிதல் இல்லாதவற்றை நீக்காது கூறுவர் புலவர் என்பது பொருள்.* எனவே பிரிவு உள்ளனவற்றைப் புலவர் நீக்குவர் என்பதாம்.

(எ-டு) ஆசிரியன் பேரூர் கிழான் சாத்தன் வந்தான்; பாண்டியன்
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தான்

-இவை, பிரிவு இல்லாதவனாய்ப் பல பெயரும் ஒரு பொருள்மேல் சென்று கேட்போர்க்குக் குறித்த பொருளை விளக்கி நின்றன. இவ்வாறே பிறவும் வரும். ஆனால், *பகை இயல்பாயிலி, படைக்கை மறவன்* என்றால் *பகை இயல்பாகவே இல்லாத ஒருவனைப்* படைக்கை மறவன் என்பது பொருள் பொருத்தம் இல்லையாதலின் இதனைப் *பிரிதல் உள்ளது* எனக் கொண்டு புலவர் நீக்குவர் என்பதாம்.

## ஒரு பொருட் பன்மொழி

*ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின்வழா (47)*

என்பது நூற்பா. *ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொற்கள், அவ்வாறு வருவதற்குக் காரணம் இல்லாவிட்டாலும், செவிக்குச் சொல்லின்பம் தோன்ற நிற்றலால், அவை வழுவென்று தள்ளப்படா!* என்பது இதன் பொருள்.

(எ-டு) *மீமிசை ஞாயிறு* (மீ - மேல்: மிசை - மேல்)
(எ-டு) *புனிற்றிளங் கன்று* (புனிறு - இளமை; இளம் - இளமை)

ஒரு பொருளே தரினும், செவிக்கு இன்பம் தருவனவாத

ின் ஏற்கப்பட்டது. இவ்வாறே பிறவும் வரும். இங்ஙனம் வருதல் *ஒருபொருட் பன்மொழி* ஆகும்.

**முற்றும்மை**

**இனைத்தென் றறிபொருள் உலகினிலாப்பொருள்**
**வினைப்படுத் துரைப்பின் உம்மை வேண்டும்** *(48)*

என்பது நூற்பா. இவ்வளவினது என்று வரையறை உணரப்படும் பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும் வினைப்படுத்திச் சொல்லும்போது, முற்றும்மை பெற வேண்டும் என்பது கருத்து.

(எ-டு) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்; இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சுடர். தமிழ்நாட்டில் அரசோச்சிய வேந்தர் மூவரே. எனவே மூவேந்தரும் என முற்றும்மை கொடுக்க வேண்டும். இவ்வாறே சிவனுக்குக் கண்கள் மூன்றே. எனவே மூன்றும் என முற்றும்மை கொடுக்க வேண்டும். இவை இவ்வளவினது என்று வரையறை உணரப்படும் பொருள் பற்றியன.

(எ-டு) **ஒளிமுன் இருள் எங்கும் இல்லை; முயற்கோடு ஆகாயப்பூ என்றும் இல்லை.**

இவை *எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருள்* பற்றியன.

இனி, உலகின்கண் நிலையில்லாப்பொருள் வினைப்படுத்துரைக்கும்போது எச்சவும்மை வேண்டும் என்பர் சிவஞான முனிவர். அதற்கு அவர் காட்டும் சான்று:

(எ-டு) செல்வமும் நில்லாது.

இங்ஙனம் கூறாது, செல்வம் நில்லாது, என எச்சவும்மை கொடாது கூறினால், *இளமை யாக்கை முதலியன நிலைபெறும்* என்ற பொருளும் வந்துவிடும்.

## செயப்படுபொருள்

**செயப்படு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே**

என்பது நூற்பா. *செயப்படு பொருளை, வினைமுதலைப் போலக் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளும்போது, அதன்மேல் அவ்வினை முதல்வினையேற்றிக் கூறுதலும் வழக்கிடத்து உரித்து* என்பது இதன் பொருள்.

(எ-டு) இம்மாடு யான் கொண்டது; இச்சோறு யான் கொடுத்தது.

இவை முறையே *இம்மாடு என்னாற் கொள்ளப்பட்டது. இச்சோறு என்னால் கொடுக்கப்பட்டது* என்று வரல்வேண்டும். ஆனால், மாடு, சோறு என்பன செயப்படுபொருள் ஈண்டு வினைமுதலைப் போலக் கொள்ளப்பட்டன.

நூற்பாவிலும் *கிளத்தலும்* என்றதால், வினைமுதல் மட்டுமின்றிக் கருவி, நிலம், செயல் இவற்றையும் வினைமுதலாகக் கூறினாலும் தவறில்லை.

(எ-டு) இவ் எழுத்தாணியான் எழுதியது; இவ்வீடு யான் இருந்தது.
இவ்வாறே பிறவும் வரும்.

ஆனால், இல்லம் மெழுகிற்று, எழுத்தாணி எழுதிற்று என்று கூறல் தவறு என்பர் சிவஞான முனிவர்.

## அடையடுத்துவரும் மொழிகள்

பொருள்முத லாறாம் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆயிரு வழக்கினும் (50)

என்பது நூற்பா. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறாகிய அடைகள் அடுத்துவரும் மொழிகள், இனம் உள்ளவையாகவும் இனம் இல்லாதவையாகவும் வரும். இவை உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரண்டிலும் வரும் என்பது இதன் பொருள்.

(எ-டு) நெய்க்குடம், குளநெல், கார்த்திகை விளக்கு, பூ மரம், செந்தாமரை, குறுங்கலி.

-இவை முறையே பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் பற்றி வந்தவை. *நெய், குளம்* என்ற அடைமொழிகள் இனமுள்ளன. ஆனால்

(எ-டு) உப்பளம், ஊர் மன்று,

முதலாயின, இனமில்லாதன. அஃதாவது *அளம்* என்றாலே *உப்பளம்* தான். *மன்று* என்றாலே *ஊர்மன்று* தான்! எனவே இவண் வந்த *உப்பு, ஊர்* எனும் அடைமொழிகள் இனமில்லன்வாம்! ஆனால் *குடம்* என்றால் நெய்க்குடமா, பாற்குடமா என்று தோன்றாது. ஆதலின் *நெய்* என்ற அடைமொழி இனமுள்ளதாம்! இவை உலக வழக்கில் வரும்.

செய்யுளில் *பொருட் பெண்டிர், கான்யாறு* என வருவன இனமுள்ளன; வடவேங்கடம், முழங்கு கடல் என வருவன இனமில்லாதன.

அடைமொழி இனமல் லதும்தரும் ஆண்டுறின் (51)

என்பது மற்றொரு நூற்பா. *பொருள் முதலாகிய அடைகள் அடுத்துவரும் மொழியானது, இனத்தைத் தருதலோடு பொருந்துமிடத்து, அதனோடு இனமில்லாததையும் தரும்* என்பது இதன் பொருள்.

(எ-டு) பாவஞ் செய்தான் நரகம் புகும்

இவ்வாறு சொல்லியவுடனே, *புண்ணியம் செய்தான் சுவர்க்கம் புகும்* என இனமான பொருளையும் தரும்; *அவன் இது செய்யின் இதுவரும் என்னும் அறிவிலி* என இனமில்லாத பொருளையும் தரும்.

இந்நூற்பாவில், *இனமல்லதும் தரும்* என்றதால் இனத்தைத் தருதலை ஒழித்து இனமல்லாததனையும் தரும் என்று கொள்ளலாம்.

(எ-டு) *காலை எழுந்து கருமத்திற் செல்வான்* கோழி கூவிற்று என்னும்போது, *ஏனைப் பறவைகள் கூவுகில* என்ற கருத்து ஏற்படாமல் பொழுது புலர்ந்தது என இனமல்லாத பொருள் தோன்றுதல் காணலாம்.

## அடை, சினை, முதற்சொற்கள்

அடைசினை முதன்முறை அடைதலும் ஈரடை
முதலோ டாதலும் வழக்கியல் ஈரடை
சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே (52)

என்பது நுற்பா. ஓர் அடைச்சொல்லும், ஒரு சினைச் சொல்லும், ஒரு முதற் சொல்லும் ஒன்றையொன்று விசேடித்து வரும்; இரண்டு அடைச் சொற்கள் முதல் பொருளை விசேடித்து வரும். இங்ஙனம் உலக வழக்கில் வரும். ஆனால் செய்யுள் வழக்கிலோ, இரண்டு அடைச்சொற்கள், சினையை விசேடித்து வரும்; வரம்பின்றி மயங்கி வரும்.

(எ-டு) *வேற்கை முருகன்*

-இதில் வேல்-அடை; கை-சினை; முருகன்-முதற்சொல், இவ்வாறு ஓர் அடைச் சொல்லும் ஒரு சினைச் சொல்லும் முதற்சொல்லை விசேடித்து நின்றன.

(எ-டு) *சிறுகருங் காக்கை.*

-இதில் சிறு, கரும் என்பன 2 அடைகள் காக்கை என்ற முதலை விசேடித்தன. இவ்வாறு உலக வழக்கில் வரும்.

(எ-டு) *கருநெடுங் கண்*

-இதில் கரு, நெடும் என்ற 2 அடைகள் கண் என்ற சினையை விசேடித்து நின்றன.

(எ-டு) *பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை*

-இதில் பெரும் சிறு, பேரமர் ஆகிய 3 அடைகளும் முறையே தோள், மருங்குல், கண் என்ற 3 சினைகளை விசேடித்து நின்றன. இவ்வாறு செய்யுள் வழக்கில் வரும்.

## இயற்கைப் பொருள்

**இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்** (53)

என்பது நூற்பா. *இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என 2 வகைப்படும். பொருள்களில், செயற்கைப் பொருளை இத்தன்மைத்து என்று சொல்ல வேண்டும்* என்பது இதன் பொருள்.

(எ-டு) நிலம் வலிது; நீர் தண்ணியது.

*நிலம் வலிமையானது; தண்ணீர் குளிர்ச்சியானது* என்று பொருள்.

## செயற்கைப் பொருள்

**காரண முதலா ஆக்கம் பெற்றும்**
**காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்**
**ஆக்கம் இன்றிக் காரணம் அடுத்தும்**
**இருமையும் இன்றியும் இயலும் செயும் பொருள்** (54)

என்பது நூற்பா.

முதல், துணை நிமித்தங்களால் செய்யும் பொருளாகிய செயற்கைப் பொருளானது காரணச் சொல் முன்வர, ஆக்கச் சொல் பின்னே வரப்பெறும். காரணச் சொல் தொக்கு நிற்க, ஆக்கச் சொல் வரும்; ஆக்கச் சொல் தொக்கு நிற்பக் காரணச் சொல் வரும்; காரணம், ஆக்கம் என்ற 2 வகைச் சொல்லும் நிற்கும் என்பது இதன் பொருள்.

(எ-டு) எருப்பெய்து, இளங் களைகட்டு நீர்கால் யாத்தமையான்
பயிர் நல்ல வாயின.

-இதில் *எருப்பெய்து, களைகட்டு நீர் கால் யாத்து* என்பன காரணச் சொற்கள். இவை முன்னே வரப், *பயிர் நல்ல வாயின* என்னும் ஆக்கச் சொற்கள் பின்னே வந்தன.

(எ-டு) பயிர் நல்ல வாயின

-இதில் *எருப்பெய்து, களைகட்டு, நீர் கால் யாத்தமையால்* என்ற காரணச் சொற்கள் தொக்கு நிற்கப் *பயிர் நல்லவாயின* என்னும் ஆக்கச் சொற்கள் வந்தன.

(எ-டு) எருப்பெய்து இளங் களைகட்டு, நீர்கால் யாத்தமையால்
பயிர் நல்ல,

-இதில் *ஆயின* என்னும் ஆக்கச் சொல் தொக்கு நிற்க *எருப்பெய்து* முதலான காரணச் சொற்கள் வந்தன.

(எ-டு) பயிர் நல்ல,

-இதில் *எருப்பெய்து* முதலான காரணச் சொற்களும், *ஆயின* என்ற ஆக்கச் சொல்லும் தொக்கன.

## வினா விடைமரபு

தம்பால் இல்ல தில்லெனில் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே (55)

என்பது நூற்பா.

வினாவும் விடையுமாகிய சொற்கள் சுருங்குதற் பொருட்டுத் தம்மிடத்து இல்லாத பொருளை இல்லை எனச் சொல்ல வேண்டியவிடத்து; விருப்பப்பட்டதற்கு இனமாய்த் தம்மிடத்து உள்ள பொருளைச் சொல்லலாம், உள்ள பொருளாக இருந்தால் இத்துணை உண்டு என்றும் கூறுவர் புலவர் என்பது இதன் கருத்து.

(எ-டு) *பயறு உண்டோ வணிகிரே* என்று கேட்பவருக்கு, அஃது இல்லை

எனச் சொல்ல வேண்டியவிடத்து, உழுந்து உண்டு, உழுந்தும் துவரையும் உண்டு எனப் பயறு என்பதற்கு இனமான உழுந்து, துவரை உண்டு எனலாம். இங்ஙனம் கூறுவதால், *பயறு இல்லை* என்பதோடு *உழுந்து உண்டோ? துவரை உண்டோ?* என்று கேட்கப்படும் வினாக்களுக்கும் விடை அமைந்து விடும்.

(எ-டு) *பயறு உண்டோ வணிகிரே* என்று கேட்பவர்க்கு, அஃது உண்டு,

எனக் கூற விரும்பினால், இருகலம் உண்டு என அதன் அளவைச் சொல்லலாம். இங்ஙனம் சொல்லுவதால், *பயறு உண்டு* என்பதோடு எவ்வளவு உண்டு எனக் கேட்கப்படும் வினாவுக்கும் விடை அமைந்து விடும்.

## இரக்கும் சொற்கள்

ஈதா கொடு எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை (56)

என்பது நூற்பா.

*ஈ* என்பது இழிந்தவன் ஒருவன் தன்னைவிட உயர்ந்தவனிடத்து இரக்கும் சொல்லாகும். *தா* என்பது ஒப்போன்,ஒப்போனிடத்து இரக்கும் சொல்லாகும். *கொடு* என்பது உயர்ந்தோன் ஒருவன், தன்னைவிட இழிந்தவனிடத்து இரக்கும் சொல்லாகும் என்பது இதன் பொருள்.

(எ-டு) தந்தையே ஈ! தோழா தா! மைந்தா கொடு!

## குறிப்புப் பொருள்

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே (57)

என்பது நூற்பா. *வெளிப்படையாக அல்லாமல் குறிப்பினாற் அறியப்படும் சொற்களும் சில வுள* என்பது இதன் பொருள்.

(எ-டு) *குழை கொண்டு கோழி எறியும் வாழ்க்கையர்*

என்று சொல்லுமிடத்துப் *பெருஞ் செல்வ வாழ்க்கையர்* என்பது குறிப்பினால் அறியப்பட்ட பொருள். அஃதாவது *மகளிர், தம் காதணிகளைக் கழற்றிக் கோழிகளை விரட்டுவர்* என்று பொருள். அத்துணைச் செல்வவளம் படைத்தவர் என்பதாம். இவ்வாறே பிறவும் வரும்.

இவைதவிர, ஒன்றொழி பொதுச் சொல் விகாரம் தகுதி என்ற பெயரியல் நூற்பாவிற் (42) கூறப்படுவனவும் ஈண்டுப் பொருந்தும் என்பர் சிவஞான முனிவர். (*ஆயிரம் மக்கள் பொருதார்* என்றால், ஈண்டு *மக்கள்* எனும் சொல்; *பெண்மக்களைத்* தவிர்த்து *ஆண் மக்கள்* என்பதைக் குறிப்பால் உணர்த்தியது என்பன போன்ற எடுத்துக்காட்டு ஈண்டும் பொருந்தும் என்பதாம்!)

## அஃறிணையிடத்துச் சொல்லுதல்

கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே (58)

என்பது நூற்பா. கேளாதனவற்றைக் கேட்பன போலவும், சொல்லாதனவற்றைச் சொல்லுவன போலவும் அஃறிணையிடத்துச் சொல்லப்படும் என்பது இதன் பொருள்.

(எ-டு) *நன்னீரை வாழி அனிச்சமே*

-இதில் கேளாத அனிச்சமலரைக் கேட்பதுபோலக் கருதி வாழி எனல் காணலாம்.

(எ-டு) *பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்*

-இதில் சொல்லாதவனாகிய பகைமையும் கேண்மையும் (நட்பு) உரைக்கும் எனச் சொல்லுவன போலக் கூறப்பட்டமை காணலாம்.

(எ-டு) *இவ்வழி அவ்வூர்க்குப் போகும்*

-இதில், நடவாததாகிய வழி நடப்பது போலப் பேசப்பட்டது.

(எ-டு) *தன்னெஞ்சே தன்னைச் சுடும்*

-இதில் செய்யாததாகிய *நெஞ்சு* செய்தது போலச் சொல்லப்பட்டது.

நூற்பாவில் *அஃறிணை மருங்கினும்* என்று கூறியதால், உயர்திணையிடத்தும் *புலம்பல்* முதலியவற்றில் இங்ஙனம் சொல்லப்படும் எனலாம்.

## உருவக உவமைகள்

உருவக உவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே (59)

என்பது நூற்பா.

உருவகத்திலும் உவமையிலும் உயர்திணை, அஃறிணை ஆகிய இவை தம்முள் மயங்குதலும், பிறவும் போற்றிக் கொள்ள வேண்டும் என்பது இதன் பொருள்.

(எ-டு)

*மன்னர் மடங்கல் மறையவர் சொன்மாலை*
*அன்ன நடையினர்க் காரமுதம்- துன்னும்*

பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப்பூம் பைந்தார்
எரிசினவேல் தானையெங் கோ

-இதில், அரசனைப் பகைமன்னர்க்குச் *சிங்கமாகவும், மறையவர்க்குச் சொல் மாலையாகவும்,* உருவகித்தமை காணலாம். அரசன் உயர்திணை, மடங்கல் (சிங்கம்) - அஃறிணை; இவ் உருவகத்தில், உயர்திணை அஃறிணைகளோடு மயங்கி வந்தமை காணலாம். இவ்வாறே பிறவும் காணலாம்.

(எ-டு) மல்லன் மலையனைய மாதவரை வைதுரைக்கும்

-இதில் *மலையனைய* எனும் உவமை வந்துள்ளது. மலை-அஃறிணை மாதவர்-உயர்திணை, இவ் உவமையில், உயர்திணையோடு அஃறிணை மயங்கிற்று.

(எ-டு) முகமதி

-இஃது உருவகம். முகம்-சினை; மதி-முதல். இவ் உருவகத்தில் சினை முதலோடு மயங்கிற்று.

(எ-டு) கயற்கண்

-இஃது உவமை. கயல்-முதல், கண். சினை இவ் உவமையில் சினை முதலோடு மயங்கிற்று.

நூற்பாவில் *பிறவும்* என்றதால், *இவள் பாரதி.* இவள் பாரதியனையாள் என்று பால் மயங்கக் கூறுதலும்; *கயலினது பிறழ்ச்சி போலும் கண்ணினது பிறழ்ச்சி* எனக் கூறவந்தவர் *கயல்கண்* என்று கூறுதலும் செங்கோல், கொடுங்கோல் என ஒரு பொருள் தன்மையை மற்றொரு பொருள்மேல் வைத்துக் கூறுதலும், *துஞ்சாக் கண்ணே! வடபுலத்தரசே!* என உயர்திணையை அஃறிணையாகக் கூறுதலும் இவை போல்வன பிறவும் கொள்ளலாம் என்பர் சிவஞான முனிவர்.

## பொருள்கோள்

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே (60)

என்ற நூற்பா, பொருள்கோளின் பெயரும் தொகையும் உணர்த்துவது.

யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழி மாற்றுப் பொருள்கோள், நிரனிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறி மாற்றும் பொருள்கோள் எனப்பொருள்கோள் எட்டாம்.

*பொருள்கோள் என்பது பொருளைக் கொள்ளும் முறை*யாகும்.

## யாற்றுநீர்ப் பொருள்கோள்

மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே (61)

என்பது நூற்பா. மொழிமாற்று முதலியவை போலப் பிறழ்ந்து செல்லவேண்டாது. ஆற்று நீரின் ஒழுங்கு போல நெறிப்பட்டு அடிதோறும் சிறந்த பொருள் அற்று அற்று ஒழுகுவதாகிய அப்பொருள்கோள், *யாற்றுநீர்ப்பொருள் கோள்* எனப்படும். யாற்றுநீர் ஓர் ஒழுங்குபட்டுச் செல்வது போலப் பாட்டின் பொருளும் ஒரே தொடர்ச்சியாய்ச் செல்லும் என்பதாம்.

(எ-டு) சொல்லரும் சூற்பகம் பாம்பின் தோற்றம்போல
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

-இதில் *சொல்* என்ற எழுவாய், முதலில் உள்ளது. அஃதனையடுத்து *இருந்து ஈன்று நிறுவி, இறைஞ்சி* என்னும் வினையெச்சங்கள் தொடர்ந்து வந்தன. இறுதியில், காய்த்தவே என்ற பயனிலை வந்தது. இங்ஙனம் ஆற்றுநீர் போல ஒழுங்குபட்டு நடப்பதால், இது யாற்றுநீர்ப் பொருள்கோள் எனப்பட்டது.

இந்நூற்பாவுக்குச் சிலர், அடிதோறும் பொருள் முடிந்துவருவது யாற்றுநீர்ப் பொருள்கோள் என்று பொருள்கூறி, *அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்* என்ற பாடலைச் சான்றாகக் காட்டுவர். யாற்றுநீர்ஒழுக்கு இடையறுதல் இல்லை. அங்ஙனம் இடையறுவதாயின் அதனை ஒழுக்கு எனல் பொருந்தாது என்ற காரணம் காட்டிச் சிவஞான முனிவர் ஏனையோர் கூற்றை மறுப்பர்.

## மொழிமாற்றுப் பொருள்கோள்

ஏற்ற பொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கல்மொழி மாற்றே (62)

என்பது நூற்பா. ஏற்ற இரண்டு பயனிலைக்கும் பொருந்து மொழிகளை ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனி கூட்டி, ஓரடிக்குள்ளே சொல்லும் பொருள்கோள், *மொழிமாற்றுப் பொருள்கோள்* என்பது இதன் பொருள்.

(எ-டு) சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலைஎன்ப
கானக நாடன் சுனை

-இதில் *சுரை மிதப்ப அம்மி ஆழ* என்று ஓரடியில் வரும் மொழிகளை மாற்றிப் பொருளுரைக்க வேண்டும். இவ்வாறே அடுத்த அடியிலும் *யானைக்கு நிலை, முயற்கு நீத்து* என்று மொழிகளை மாற்றிப் பொருளுரைக்க வேண்டும். இங்ஙனம் ஓரடிக்குள் மொழிகளை மாற்றுவதே மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகுமேயன்றி, 2 அடிகளில் மாற்றி உரைப்பது பொருந்தாது என்பர் சிவஞான முனிவர்.

## நிரனிறைப் பொருள்கோள்

பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறீஇ முறையிலும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே (63)

என்பது நூற்பா. பெயரும் வினையும் ஆகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையும் ஆகிய பயனிலைகளையும், வேறு வேறு வரிசையாக நிறுத்தி முறையாகவோ எதிராகவோ இதற்கு இது பயனிலை என்பது படக்கூறும் பொருள்கோள் *நிரனிறைப் பொருள்கோள்* என்பது இதன் பொருள்.

(எ-டு) கொடி குவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகவாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்

-இதில் முதலடியில் 1. கொடி 2. குவளை 3. கொட்டை என்பனவும் 1. நுசுப்பு 2. உண்கண் 3. மேனி என்பனவும் வந்துள்ளன. இவற்றை நிரனிறையாக அஃதாவது வரிசையாகக் கொடி நுசுப்பு, குவளை உண்கண் கொட்டைமேனி எனக்கொண்டு *கொடி போன்ற நுசுப்பு (இடை), குவளை மலர் போன்ற மையுண்ட கண், கொட்டைப்பாக்கு போன்ற மேனி* எனப்பொருள் உரைக்க வேண்டும். இவ்வாறே, அடுத்த அடிகளிலும், மதி முகம் பவளவாய், முதல்

... என்றும்; பிடி நடை, பிணைநோக்கு, மஞ்ஞை சாயல் என்றும் நிரனிறையாகப் பொருள் கொள்ள வேண்டும். இங்ஙனம் கொள்ளுவது *முறை நிரனிறை* எனப்படும்.

இனி எதிராகவும் நிரனிறை வருவதுண்டு.

(எ-டு) *களிறும் கந்தும் போல நளிகடற்*
*கூம்பும் கலனும் தோன்றும்*
*தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே*

-இதில், *1. களிறு 2. கந்து; 1. கூம்பு 2. கலன்* என வந்துள்ளன . இவற்றைக் ***களிறு கூம்பு கந்து கலன்*** என வரிசையாகக் கூறாமல் எதிர் நிரனிறையாகக் களிறு கலன், கந்து கூம்பு எனக்கொண்டு, களிறு போன்ற கலன் (தோணி). *கந்து* (கட்டுத்தறி) போன்ற கூம்பு (பாய்மரம்) எனப் பொருளுரைக்க வேண்டும்.

(எ-டு) காவி கண்மதிமுக மென்மருங்குல் செய்யவாய்
தோமில் துகடினி சொல்லமிர்தம். . . . .

என்ற பாட்டில் ***காவி கண், மதிமுகம்*** என எழுத்து நிரனிறையாகப் பொருளுரைக்க வேண்டும். இப்படியும் வரலாம் என்பர் சிவஞான முனிவர்.

## பூட்டுவிற் பொருள்கோள்

எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்
பொருள் நோக்குடையது பூட்டுவில் லாகும் *(64)*

என்பது நூற்பா.

***செய்யுளில், முதலிலும், இறுதியிலும்; நிற்கும் மொழிகள் தமிழுள் பொருள் நோக்கமுடைய பொருள்கோள், பூட்டுவிற் பொருள் ஆகும்*** என்பது இதன் பொருள். இருதலையும் சேரப் பூட்டி நிற்பது நாண்; அதுபோலப் பொருள் நோக்கம் செய்யுளின் இருதலையையும் பூட்டி நிற்றலின் இது பூட்டுவில் ஆயிற்று.

(எ-டு) *திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்*
இறந்துபடின் பெரிதாம் ஏதம் - உறந்தையர் கோன்
தண்ணார மார்பில் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு

இதில் ***திறந்திடுமின்*** என முதலில் நிற்கும் மொழியினையும், கதவு என, இறுதியில் நிற்கும் மொழியினையும் இணைத்துத் ***திறந்திடுமின் கதவு*** எனப்பொருள் கொள்ள வேண்டும்.

## தாப்பிசைப் பொருள்கோள்

இடைநிலை மொழியே ஏனையீ ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை *(65)*

என்பது நூற்பா.

***ஒரு பாட்டின் இடையல் நிற்கும் மொழியானது*** எஞ்சிய முதலினும் ஈற்றினும் சென்று பொருளைக் கூறும் பொருள்கோள் ***தாப்பிசைப் பொருள்கோள்*** ஆகும். என்பது இதன் பொருள். தாம்பு-ஊஞ்சல், இடை-சொல் நடுவில் நிற்கும். ஊஞ்சற்பலகை, முன்பின் ஆகிய இருபுறமும் செல்வது போல் ஒருபாட்டின் இடைநிற்கும் சொல் முதலிலும் இறுதியிலும் சென்று பொருந்துவது இது.

(எ-டு) உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு (65)

-இக்குறள் வெண்பாவில், இடையில் உள்ள ஊன் என்பது ஊன் உண்ணாமையுள்ள துயிர்நிலை என்று முதலிலும் ஊன் உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது என்று இறுதியிலும் இணைத்துப் பொருள் காணவேண்டும்.

### அளைமாறிபாப்புப் பொருள்கோள்

செய்யுள் இறுதி மொழியிடை முதலிலும்
எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே (66)

என்பது நூற்பா.

*செய்யுளில் இறுதியில் நின்ற சொல்லானது. அதன் இடையிலும் முதலிலும் சென்ற பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆகும்* என்பது இதன் பொருள். அளை-புற்று; மறி-மடங்குதல்; பாப்பு-பாம்பு; புற்றினுள் தலைகீழாக நுழைந்து பின்மடிந்து உடலோடும் வாலோடும் ஒட்டி மேல்வரும் பாம்புபோல, ஒரு செய்யுளின் இறுதியில் நின்ற சொல்லானது, இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள் தரும் என்பதாம்.

(எ-டு) தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைத்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியில் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே

இதில், 4ஆவது அடியிலிருந்து தொடங்கிப் பின்னர் இடையிலும் முதலிலும் ஆகப் பொருள் உரைக்க வேண்டும்.

### கொண்டுகூட்டுப் பொருள்கோள்

யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே

என்பது நூற்பா.

*செய்யுள் அடிகள் பலவற்றிலும் சேர்க்கப் படுதலையுடைய சொற்களை எடுத்துப் பொருளுக்கு ஏற்ற இடத்தில் கூட்டும் பொருள்கோள் கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகும்* என்பது இதன் பொருள்.

(எ-டு) தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்

-இதில் *வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனைத் தன்ன வைபங்கூந்தல் (உடையாள்) மாமேனி (மேல்) தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட கோழி வெண்முட்டை உடைதன்ன பசலை தணிவாமே* எனப் பல்வேறு அடிகளிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு பல்வேறு சொற்களுடன் கொண்டு கூட்டிப் பொருள் உரைக்க வேண்டும்.

### அடிமறி மாற்றுப் பொருள்கோள்

ஏழ்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியவும
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியும் மாறா அடியவும் அடிமறி (68)

என்பது நூற்பா.

பொருளுக்கு ஏற்குமிடத்து, எடுத்து நீங்காது கூட்டும் அடியினையுடையவும். ஏதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி, நடு, முதல்களில் ஏதேனும் ஓரிடத்துக் கூட்டினாலும் பொருளோடு ஓசைமாட்சியும், ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடா மாட்சியும் உடைய அடிகளை உடையவும், *அடிமறி மாற்றுப் பொருள்கோள்* ஆகும்.

(எ-டு) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்
கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்

இதில் *கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும் (2-வது அடி) விடுக்கும் வினையுலந்தக்கால் (4 ஆவது அடி), மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம் (3 ஆவது அடி), (இஃது அறியார்) நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார் (1ஆவது அடி)* எனப் பொருந்தும் வகையில் அடிகளை மாற்றிப் பொருள் உரைக்க வேண்டும்.

(எ-டு) மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
ஏறா மென்தோள் வளைநெகிழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே

-இதில் எந்த ஒரு அடியை எப்படிக் கூட்டி உரைத்தாலும் பொருளும் ஓசையும் வேறுபடா.

(எ-டு) அலைப்பான் பிறிதுயிரை யாக்கலும் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலும் குற்றம்
சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்
கொலைப்பாலும் குற்றமே யாம்

-இதில் முதல் 3 அடியுள் எந்த ஓர் அடியை எப்படிக் கூட்டி உரைப்பினும் பொருளும் வேறுபடா; 4ஆம் அடியைப் பிற அடிகளோடு கூட்டினால் ஓசை வேறுபடும்; ஆனால் பொருள் வேறுபடாது.

(**குறிப்பு:** இங்குக் கூறப்படும் *பொருள்கோள்* செய்யுட்கு உரியன. அவற்றைச் சொல்லதிகாரத்துக் கூறலாமோ என்ற ஐயம் எழலாம். *செய்யுள்* என்பதற்குத் *தொடர்* என்ற வேறொரு சொல்லும் உண்டு. மொழி தொடர்ந்தால் *தொடர்* எனும் காரணக்குறி பெறுவதாயிற்று எனவே, இதுவும் தொடர்மொழி இலக்கணம் ஆதலின் இவண் உரைக்கப்பட்டது பொருந்தும் என்பர் சிவஞான முனிவர்.

**பயிற்சி வினாக்கள்**

1. *பொருள் கோள்* என்பது யாது? அஃது எத்தனை வகைப்படும்?
2. *யாற்றுநீர்ப் பொருள்கோள்* என்பது யாது? விளக்குக.
3. மொழிமாற்றுப் பொருள்கோளைச் சான்றுடன் விளக்குக.
4. *நிரனிறைப் பொருள்கோள்* என்பது யாது? விளக்குக.
5. பூட்விற் கொருள்கோளை விளக்குக.
6. *தாப்பிசைப் பொருள்கோள்* என்பது யாது? சான்றுகாட்டி விளக்குக.
7. கொண்டுகூட்டுப் பொருள்கோளை விளக்குக.
8. *அடிமறிமாற்றுப் பொருள்கோள்* யாங்ஙனம் வரும்? சான்றுடன் விளக்குக.
9. *அளைமறிபாப்பு பொருள்கோள்* என்பது யாது? சான்றுடன் காட்டுக.

# 4. இடையியல்

## இடைச்சொல்லின் பொதுவிலக்கணம்

வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெண்ணண் பகுதியுள் தனித்தியல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்து
ஒன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல் (1)

என்பது நூற்பா. *ஐ முதலான வேற்றுமை உருபுகள்; விகுதி, இடைநிலை ஆகிய வினை உருபுகள்; அன், ஆன் முதலான சாரியை உருபுகள்: பிறவாறு தத்தமக்கு உரிய பொருளை உணர்த்திவருபவை; இசை நிறைப் பொருளாக வருபவை; அசை நிலையை பொருளாக வருபவை! ஒலி, அச்சம் விரைவு இவற்றைக்குறிப்பால் உணர்த்தி வருபவை. இவை தனித்துநடத்தல் இல்லாமல்; பெயரின் அகத்தும் வினையின் அகத்தும், பெயரின் பின்னும் முன்னும், வினையின் முன்னும் பின்னும் ஆகிய அவ்விடங்களில் ஏதேனும் ஓரிடத்தில் ஒன்றோ பலவோ வந்து அப்பெயர், வினைகளுக்கு அகத்து உறுப்பாகவும் புறத்து உறுப்பாகவும் ஒன்றுபட்டு நடக்கும் தன்மையன.* இவைபெயர்ச்சொல்லோ, வினைச்சொல்லோ ஆகாமல், அதே நேரத்தில் அவற்றின் வேறுமாகாமல் இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் எனப்பட்டன. *இது பாலைத்திணை, நடுநிலைத்திணை எனப்பெயர் பெற்றது போலும் என்க* என்பர் சிவஞான முனிவர். இனிப் *பெயர்* வினைகள் இடமாக நடத்தலின் இடைச்சொல் என்ற பெயர் பெற்றது என்று கூறினும் பொருந்தும்.

(எ-டு) நம்பியை நம்பியால் - இவற்றில் பெயரின் புறத்துப்பாம். *ஐ* ஆல் முதலான வேற்றுமை உருபுகள் இடைச்சொற்களாக வந்தன.

(எ-டு) முடியினன் - இதில், அன் என்ற விகுதி, இடைச்சொல்லாகப் பெயரின் அகத்துறுப்பாக வந்தது.

(எ-டு) அதுமன் - *அது* என்ற பெயருக்குப் பின்னால் *மன்* என்ற அசைநிலை இடைச்சொல்லாக வந்தது. இவ்வாறே பிறவும் வரும்.

மொழியியல் அடிப்படையில், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் மொழி வரலாறு என்ற நூலில் இதனை வேரல்லா உருபன்கள் என்பர். ( Non root Morphemes) இவ்வகையில்,

1. காலம் காட்டும் இடைநிலைகள்
2. வேற்றுமை உருபுகள்
3. உவம உருபுகள்
4. அசைநிலை
5. இசைநிறை
6. தத்தம் குறிப்பாற் பொருள் உணர்த்துவன
7. சாரியை

ஆகியவற்றை அடக்குவர். இவற்றில் நான்காவதான *அசைநிலைகள்* என்பவை சொல்லாக்கக் கூறுகளாகவும், பிந்து நிலைகளாகவும் (Encitic) வருவனவாகும். இடப்பெயர்களை எப்பொழுதாவது இவை குறிப்பால் உணர்த்துகின்றன என்பதைத் தவிர இவற்றின் பொருள் இழக்கப்பட்டு விட்டது என்றே கொள்ள வேண்டும். இவை பழங்காலத்தில் ஒட்டுக்களாக இருந்திருக்க வேண்டும்.

*இசைநிறைகள்* என்பதும் சொற்களுள் அமையும் இடைநிலைகள் ஆகும். அவற்றின் பொருள் முழுவதும் இழக்கப்பட்டு விட்டதால், அவை இசைக்காகச் சொற்களின் நீட்சியுடைய மாற்று வடிவங்களாக வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் வழங்குகின்றன.

*தத்தம் குறிப்பிற் பொருள் செய்கும்* இடைச்சொற்கள் என்பன வியப்பிடைச் சொற்கள் (Interjections) போல்வன ஆகும். இவை இக்காலத்தில் தொடரிசை மாற்றத்தால் (Intonation) உணர்த்தப்படுகின்றன.

சாரியை ஒட்டுக்களேயாகும். அவைசொற்களிலும்.தொகையிலும் இடையில்வருகின்றன. தொல்காப்பியரின் கதுத்துப்பகு பொருளைப் புரிந்து கொள்ள (ஒரு வேளை வேற்றுமை உருபுகளின் பொருளைப் புரிந்து கொள்ளச்) சாரியைகள் உதவுகின்றன. சார் + இயை < சாரியை *சார்* என்பது *சார்தல்* அல்லது *சார்ந்திருத்தல்* என்று பொருள்படும். இயை என்பது *சேருதல்* அல்லது *சேர்த்தல்* எனப் பொருள்படும். எனவே *சாரியை* என்பது, தன்னோடு சேர்ந்து வருவதைச் சார்ந்து நிற்பது எனப் பொருள்படும்.

- இவ்வாறு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இவ் *இடைச்சொல்* பற்றி விளக்குவதும் கவனிக்கத்தக்கது.

## இடைச்சொற் பொருள்

தெரிநிலை தேற்றம் ஐயமுற் றெண்சிறப்
பெதிர்மறை எச்சம் வினாவிழைவு ஒழியிசை
பிரிப்புக் கழிவாக்கம் இன்னன இடைப்பொருள் (2)

என்பது நூற்பா.

*தெரிநிலை, தெளிவு, ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம் வினா, விருப்பம், ஒழியிசை, பிரிநிலை, கழிவு, ஆக்கம் என்ற பதினான்கும் இவைபோல்வன பிறவும் இடைச்சொற்பொருள்களாகும்* என்பது இதன் பொருள்.

(எ-டு) நக்கீரர், நப்பாலத்தனார் - *தகர* இடைச்சொல் சிறப்புப் பொருள் தந்தது.

நூற்பாவில் ***இன்னன*** என்றமையால் இடைச்சொற்களில், சுட்டுப் பொருளும், வினாப்பொருளும், இரங்குதற் பொருளும், இடப்பன்மைப் பொருளும், காலப்பொருளும், பிறவும் தரும் எனலாம்.

(எ-டு) அக் கொற்றன் - சுட்டுப் பொருள்
(எ-டு) எக் கொற்றன் - வினாப்பொருள்
(எ-டு) *அந்தோ விசையை பட்டனள்* - இரங்குதற் பொருள்.
(எ-டு) *அறிதோறறியாமை கண்டற்றால்* - *தோறு* என்ற இடைச்சொல் இடப் பன்மைப் பொருள் தந்தது
(எ-டு) இனிச் செய்வான் - காலப் பொருள். - இவ்வாறே பிறவும் வரும்.

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனவா றேகா ரம்மே

என்பது நூற்பா. ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம் (தெளிவு) இறைநிலை என்ற ஆறு பொருளையும் தரும் என்பது இதன் கருத்து.

(எ-டு) அவனே கொண்டான். (ஒரு கூட்டத்தினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலின் பிரிநிலை)
(எ-டு) அவனே கொண்டான்? (வினாவி நிற்பின் வினா)
(எ-டு) நிலனே நீரே தீயே வளியே - (நிலனும் நீரும் தீயும் வளியும் என்ற பொருள்பட எண்ணி நிற்றலின் எண்)
(எ-டு) *கடல்போல் தோன்றல காடிறந் தோரே* (சொல்லிறுதியில் அசைத்தற் பொருள் தருதலின் ஈற்றசை.
(எ-டு) அவனே கொண்டான் (துணிதற் பொருள் தருவதாயின் தேற்றம்)
(எ-டு) *ஏ ஏ இவளொருத்தி பேடியே* (இசைநிறைத்தற்பொருள் தருதலின் இசைநிறை)

இனி, *அவனே கொண்டான்* எனும்போது சிலசமயம் *அவன் கொள்கிலன்* என எதிர்மறைப் பொருள் தருவதுண்டு இங்ஙனம் வருதல் புதியன புகுதல் ஆகும்.

## ஒகார இடைச்சொல்

ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனஎட் டோவே (4)

எனபது நூற்பா. *ஓகார இடைச்சொல், ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை கழிவிரக்கம், அசைநிலை, பிரிநிலை என்ற எட்டுப் பொருளையும் தரும் என்பது* இதன் கருத்து. இவற்றுள் சிறப்பு, உயர்வு-சிறப்பு இழிவு சிறப்பு என இரண்டு வகைப்படும்.

(எ-டு) படுக்கவோ வந்தாய்? (*படிக்க அன்று விளையாட* என ஒழிந்த பொருளைத் தருதலின் ஒழியிசைப் பொருள்)

(எ-டு) குற்றியோ? மகனோ? - வினாப்பொருள்.

(எ-டு) ஓ ஓ பெரியன் உயர்வுசிறப்புப் பொருள்.

(எ-டு) ஓ ஓ கொடியன் - இழிவுசிறப்புப் பொருள்.

(எ-டு) அவனோ கொண்டான் (*கொண்டிலன்* என்ற பொருள் தந்தால் எதிர்மறை)

(எ-டு) அலியை நோக்கி, *ஆணோ அதுவும் அன்று, பெண்ணோ அதுவும் அன்று* தெரிநிலைப் பொருள்.

(எ-டு) உறுதியுணராது கெட்டாரை, *ஓஓ தமக்கோர் உறுதி உணராரோ* - கழிவிரக்கப் பொருள் தருதலின் கழிவு.

(எ-டு) *காணிய வம்மினோ கங்குலது நிலையே* - அசைநிலைப் பொருள்.

(எ-டு) அவனோ கொண்டான் பலருள் நின்று ஒருவனைப் பிரித்தமை கருதியவழிப் பிரிநிலைப் பொருள்.

## என, என்று - இடைச்சொற்கள்

**வினைப்பெயர் குறிப்பிசை எண்பண் பாறினும்**
**எனவெனும் மொழிவரும் என்றும் அற்றே** (5)

என்பது நூற்பா. *என, என்று இடைச் சொற்கள், வினை, பெயர் குறிப்பு, இசை, எண், பண்பு என்ற ஆறுபொருளில் வரும்* என்பது இதன் பொருள்.

(எ-டு) *மைந்தன் பிறந்தான் எனத் தந்தை உவந்தான்* - வினைப் பொருள்.

(எ-டு) *ஊரெனப் படுவது உறையூர்* - பெயர்

(எ-டு) *பொள்ளென ஆங்கே புறம் வேரார்* - குறிப்பிசை

(எ-டு) *நிலயருங் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து* - இசை

(எ-டு) *நிலன்என, நீர்எனத், தீஎன, வளிஎன வரும் பூதம் நான்கும் உருவம்* - எண்

(எ-டு) மெல்லென நடந்தது - பண்பு

*என* என்பதற்குப் பதிலாக *என்று* என்பதும் இவ்வாறே வரும்.

*என, என்று இவ்விரண்டு இடைச் சொற்களும் தமக்கு என ஒரு பொருளின்றி வினை முதலியவற்றின் பொருளே பொருளாக வரும்* என்பதைக் குறிக்கவே, *ஆறினும் வரும்* என்றார் ஆசிரியர்.

## உம்மை இடைச்சொல்

**எதிர்மறை சிறப்பையம் எச்சமுற் றளவை**
**தெரிநிலை யாக்கமோ டும்மை எட்டே** (6)

என்பது நூற்பா. *உம்* என்ற இடைச்சொல், எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் எனும் எட்டுப் பொருளையும் தரும் என்பது பொருள்.

(எ-டு) கொற்றன் வருதற்கும் உரியன் - எதிர்மறை (இங்கு வந்த *உம்* வராமல் இருத்தற்கும் உரியன் என்ற எதிர்மறைப் பொருள் தந்தது. இவ்வாறே பிறவும் வரும்)

(எ-டு) *குன்றவரும் மருளும் குன்று* - உயர்வு சிறப்பு

(எ-டு) *படியாதவனும் விரும்பாப் புத்தகம்* - இழிவு சிறப்பு

(எ-டு) பத்தானும் எட்டானும் கொடு - ஐயம்

(எ-டு) சாத்தனும் வந்தான்- எச்சம் (*கொற்றன் வந்ததன்றிச் சாத்தனும் வந்தான்* என்று பொருள் தந்ததால் இறந்தது தழீ இய எச்சம் எனப்படும்).

(எ-டு) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் - முற்று.

(எ-டு) சாத்தனும், கொற்றனும், தேவனும், பூதனும் வந்தார் - எண்ணும்மை (அளவை)

(எ-டு) ஆணும் அன்று பெண்ணும் அன்று - தெரிநிலை

(எ-டு) பாலும் ஆயிற்று - ஆக்கம் (*அதுவே மருந்தும் ஆயிற்று* என்று பொருள் தந்தால் ஆக்கவும்மை)

## முற்றும்மையும் எச்சவும்மையும்

முற்றும்மை ஒரோவிடத்து எச்சவும்மையாகவும் வரும்.

(எ-டு) எல்லோரும் இது செய்யார். (*சிலர் இது செய்வார்* என்ற பொருள் தருமானால் எச்சவும்மையாம்).

எச்சவும்மை, செவ்வெண்ணில் (அதாவது *உம்* மறைந்துவரும் எண் இடைச்சொல்) வருமானால் கடைசியில் வரும்.

(எ-டு) கல்விச் செல்வம், ஒழுக்கம், குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர். இதில் *குடிப்பிறப்பும்* என இறுதியில் *உம்மை* வந்தது. (இவற்றுட்சில பெறுவாரும் உளர் என்பது பொருள்).

முற்றும்மை ஒரோவழி யெச்சமும் ஆகும் (7)
செவ்வெண் ணீற்றாம் எச்ச வும்மை (8)

என்பன நூற்பாக்கள்.

## சில எண்ணிடைச் சொற்கள்

பெயர்ச் செவ்வெண்ணே என்றா எனா எண்
நான்கும் தொகைபெறும் உம்மையென்றெனவோ
டிந்தான் கெண்ணும் அஃதின்றியும் இயலும் (9)

என்பது நூற்பா. பெயர்களிடையே எண் இடைச்சொல் மறைந்து நிற்க வரும் செவ்வெண்ணும், பெயரோடு மறையாமல் வரும் ஏகார எண்ணும், *என்னா* எண்ணும் *எனா* எண்ணும் என்ற இந்த நான்கும் தொகை பெற்றே வரும். *உம்மை என்று, என ஒடு* என்ற இந்த நான்கு எண்ணும், தொகை பெற்றும் பெறாதும் நடக்கும் என்பது இதன் பொருள்.

(எ-டு) சாத்தன், கொற்றன், தேவன், பூதன் நால்வரும் வந்தார். (இதில் *நால்வரும்* எனத் தொகை பெற்று வந்தது)

(எ-டு) சாத்தன் எனா கொற்றன் எனாத் தேவன் எனாப், பூதன் எனா-நால்வரும் வந்தார்.

(எ-டு) சாத்தன் என்றா கொற்றன் என்றா தேவன் என்றா, பூதன் என்றா-நால்வரும் வந்தார். -இவை தொகை பெற்றே வந்தன.

(எ-டு) சாத்தனும் கொற்றனும் இருவரும் வந்தார். *உம்* எண் இருவரும் எனத் தொகை பெற்றது.

(எ-டு) சாத்தனும் கொற்றனும் வந்தார். *உம்* எண், இருவரும் எனத் தொகை பெறாது வந்தது. இவ்வாறே பிறவும் வரும்.

என்றும் எனவும் ஒடுவும் ஒரோவழி
நின்றும் பிரிந்தெண் பொருள்தொறும் நேரும் (10)

என்பது மற்றொரு நூற்பா.

*என்று, என, ஒடு என்ற 3எண் இடைச்சொற்களும் எண்ணப்படும் பொருள்தோறும் நிற்றலேயன்றி ஓரிடத்து நின்றும் பிரிந்தும் எண்ணப்படும் பொருள்தோறும் சென்று பொருந்தும் என்பது* இதன் பொருள்.

(எ-டு) *வினைப்பகை என்றிரண்டின் . . . தெறும்*

இதில் *என்று* எனும் எண்ணிடைச் சொல், வினை என்று பகை என்று எனப் பிறவழிவும் என்று பொருந்தியது. இவ்வாறே *என ஓடு* என்பனவும் வரும்.

**வினையொடு வரினுமெண் ணினைய ஏற்பன** (11)

என்பது மற்றொரு நூற்பா.

*எண்ணிடைச் சொற்கள், வினையோடுவரினும், பெயரோடு வந்தாற் போலவேயாம்* என்பது இதன் பொருள்.

(எ-டு) மயில் ஆடக் குயில் பாட மாமுகில் எழுந்தது.

இதனை *மயில் ஆடவும் குயில் பாடவும் மாமுகில் எழுந்தது* என்று விரிக்கலாம். *ஆட, பாட* என்று வினைகளோடு *உம்* வந்தது.

(எ-டு) *உண்ண என்று உடுக்க என்று வந்தான்*

இதில் *உண்ண உடுக்க* வினைகளோடு என்று வந்தது. இவ்வாறே பிறவும் வரும்.

## *தில் மன் மற்று* இடைச்சொற்கள்

**விழைவே காலம் ஒழியிசை தில்லே** (12)

என்பது. *தில்* என்ற இடைச் சொல்லில் இலக்கணம் உணர்த்துவது. *தில் என்ற இடைச்சொல், வேட்கை, காலம், ஒழியிசை என்ற இம் மூன்று பொருளையும் தரும்* என்பது இதன் பொருள்.

(எ-டு) *அரிவையைப் பெறுகதில் அம்மயானே* - வேட்கை
(எ-டு) *பெற்றாங் கறிகதில் அம்ம இவ்வூரே* - காலம்
(எ-டு) *வருகதில் அம்ம* - ஒழியிசை

**மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபேறாகும்** (13)

*என்பது. மன்* என்ற இடைச்சொல்லின் இலக்கணம் கூறுவது, *மன் என்ற இடைச்சொல், அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்ற 6பொருளையும் தரும்* என்பது பொருள்.

(எ-டு) அதுமன் கொண்கள் தேரே - அசைநிலை
(எ-டு) கூரியதோர் வாள்மன் - ஒழியிசை
(எ-டு0 பண்டு காடுமன் - ஆக்கம்
(எ-டு) சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே கழிவு
(எ-டு) எந்தை எமக்கருளுமன் - மிகுதி
(எ-டு) மன்னா உலகத்து மன்னியது புரியுமே - நிலைபேறு

***வினைமாற் றசைநிலை பிறிதெனும் மற்றே***

என்பது மற்று என்ற இடைச்சொல் பற்றியது. மற்று என்ற இடைச்சொல் வினைமுற்று. அசைநிலை, பிறிது என்ற 3 பொருள்களில் வரும் என்பது இதன் பொருள்.

(எ-டு) *மற்றறிவாம் நல்வினை* - வினைமாற்று
(எ-டு) *மற்றடிகள் கண்டருளி* - *அசைநிலை*
*(எ-டு) ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று* - பிறிது
*மற்றைய* தென்பது சுட்டிய தற்கினம் (15)

என்பது மற்றொரு நூற்பா. *மேற்கூறிய 3 பொருள்களில் மற்றையது என்னும் பொருளாகிய வினைமாற்றுப் பிறிதும் - அங்ஙனம் கருதியதற்கு இனமாகிய வினைமாற்றும் இனமாகிய பிறிதுமாம், அன்றி வேறு வினைமாற்றி வேறு பிறிது அல்லவாம்* என்பது இதன் பொருள்.

(எ-டு) *மற்றறிவாம் நல்வினை*

இது, விரைந்து அறிவாம் என்ற வினையை ஒழித்து விரையாது அறிவாம், என்ற வினையைத் தந்து நின்றது. இதில் இனம் வந்தவாறு காணலாம்.

## கொல் முதலான இடைச்சொற்கள்

*கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே* (16)

*என்பது கொல் என்ற இடைச்சொல்லின், இலக்கணம் உணர்த்துவது கொல் என்ற இடைச்சொல், ஐயம் அசைநிலை என்ற பொருளைத் தரும் என்பது இதன் பொருள்.*

(எ-டு) *இவ்வுருக் குற்றிகொல், மகன்கொல் - ஐயம்*
(எ-டு) *கற்றதனா லாய பயனென்கொல் - அசைநிலை*
*ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே* (17)

*என்பது நூற்பா ஒடு தெய்ய - என்ற இவ்விரு இடைச்சொற்களும் இசை நிறை என்ற ஒரு பொருளைத் தரும் என்பது கருத்து,*

(எ-டு) *விதைக்குறு வட்டி போதொடு பொதுள - இசைநிறை*
(எ-டு) *சொல்வேன் தெய்ய நின்னோடு பெயர்த்தே - இசைநிறை*
*அந்திலாங் கசை நிலை இடப்பொரு ளவ்வே* (18)

*என்பது நூற்பா. அந்தில் ஆங்கு - என்ற இவ்விரு இடைச்சொற்களும் அசைநிலை, இடம் என்ற 2 பொருளில் வரும் இதன் கருத்து.*

(எ-டு) *அந்திற் கழலினன் கச்சினன் அசைநிலை*
(எ-டு) *சேயிழை அந்திற் கொழுதற் காணிய - இடம்*
(எ-டு) *ஆங்கத் திறனல்ல யாம் கழற - அசைநிலை*
(எ-டு) *ஆங்காங் காயினும் ஆக - இடம்*
*அம்ம உரையசை கேண்மினென் றாகும்.* (19)

*என்பது அம்ம என்ற இடைச்சொல்லின் இலக்கணம் உணர்த்துவது. அம்ம என்ற இடைச்சொல், உரையசைப் பொருளையும் ஏவற் பொருளையும் தரும் என்பதாம்.*

(எ-டு) *அதுமற்றம்ம - உரையசை*
(எ-டு) *அம்ம வாழி தோழி - ஏவல்*
*மாவென் கிளவி வியங்கோள் அசைசொல்.* (20)

*என்பது மா என்ற இடைச்சொல். வியங்கோளின் கண் அசைச் சொல்லாக வரும் என்பது பொருள்.*

(எ-டு) *உப்பினின்று புற்கை உண்கமா கொற்கை யோனே உண்க* என்ற வியங்கோளின் கண் *மா* இடைச்சொல், அசைச்சொல்லாக வந்தது.

### அசைச்சொற்கள்

*மியாயிக மோமதி அத்தை இத்தை*
*வாழிய மாளவீ யாழமுன் னிலையசை* (21)

*என்ற நூற்பா மியா முதலிய இடைச்சொற்களின் இலக்கணம் கூறுவது மியாஇக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ. யாழ, என்ற இப் பத்து இடைச்சொற்களும், முன்னிலையில் அசைநிலைகளாக வரும் என்பது கருத்து.*

(எ-டு) *சென்மியா வென்று*

(எ-டு) *தண்டுறையூர காணிக எனவே*

(எ-டு) *காமம் செப்பாது கண்டது மொழிமோ*

(எ-டு) *சென்மதி பெரும*

(எ-டு) *உள்ளிச் செல்வத்தை*

(எ-டு) *நீயொன்று பாடித்தை*

(எ-டு) *காணிய வா, வாழிய*

(எ-டு) *தவிர்த்தீக மாளநின் பரிசிலர்*

(எ-டு) *சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே*

(எ-டு) *செலவயர்ந்தி யாழ*

இவை, முன்னிலையில் அசைநிலைகளாக வந்தன.

யாகா பிறபிறக் கரோபோ மாதிகும்.
சின்குலை ஒரும் போலும் இருந்திட்
டன்றாந் தாந்தான் கின் றுநின் றசைமொழி

*என்பது யா முதலிய இடைச்சொற்களைப் பற்றிக் கூறுவது யா கா பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குலை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, என்ற இவ் 20 இடைச்சொற்களும், எல்லா இடத்தினும் எல்லாச் சொல்லினும் வரும் அசைச், சொற்களாம்* என்பது கருத்து.

(எ-டு) *வடுவென்று கண்ணாய் வருந்திணை போலும் !* - போலும் என்பது முன்னிலையில் வந்தது.

(எ-டு) *நனவென், றெழுந்திருந்தேன், நல்வினையொன் றில்லேன்ன இருந்து,* என்பது தன்மையிடத்தில் வந்தது.

(எ-டு) *பிறக்கிதனுட் சொல்லான் பெருந்தவப் பட்டான்* - பிறக்கு என்பது படர்க்கையில் வந்தது. இவ்வாறு பிறவும் வரும்.

## பயிற்சி வினாக்கள்

(1) இடைச்சொல்லின் பொதுவிலக்கணம் யாது? மொழியியலார் கூறும் கருத்துடன் விளக்குக.

(2) இடைச்சொற்கள் எவ்வகைப் பொருளைத் தரும்?

(3) பின்வரும் இடைச் சொற்கள் எவ்வகைப் பொருளைத் தரும்?

அ. *ஏகார* இடைச்சொல்.

ஆ. *ஓகார* இடைச்சொல்

இ. என்று, *என,* இடைச்சொற்கள்.

ஈ. *உம்* இடைச்சொல்

(4) தொகை பெற்றே வரும் எண்கள் யாவை? பெற்றும் பெறாதும் வரும் எண்கள் யாவை?

(5) என்று, என, ஒடு இடைச்சொற்கள் எங்ஙனம் நின்று பொருந்தும்?

(6) வினையோடு வரினுமெண் ணினைய வேற்பன - இதனை விளக்குக.

(7) *தில் கொல் ஒடு தெய்ய* எவ்வகைப் பொருள்களைத் தரும்?

(8) *மன் மற்று* - இடைச்சொற்கள் எவ்வெவ்பொருளில் வரும்?

(9) *அந்தில் ஆங்கு அம்ம மா* - எப்பொருளில் வரும்?

(10) முன்னிலையிடத்து வரும் அசைச்சொற்கள் யாவை?

(11) எல்லா இடத்தும் வரும் அசைச் சொற்கள் யாவை?

# 5. உரியியல்

## உரிச்சொல் விளக்கம்

உரிச்சொல்லாவது *உரிமைப்பட்டுவரும்சொல்* என்றுபொருள்படும்.

ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும் (தொல், சொல் 297)

*எனும் தொல்காப்பிய நூற்பா பொருளுக்கு உரிமை பூண்டது உரிச்சொல், என்ற கருத்தை நிறுவும் இடைச்சொல் போலாது (போலல்லாமல்) இசை குறிப்பு பண்பு என்னும் பொருட்குத் தாமே உரிய ஆதலின் உரிச்சொல்லாயிற்று என்று சேனாவரையர் விளக்குவர்.*

ஒரு வாய்பாட்டால் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாக்கி வருவது என்று தெய்வச்சிலையார் உரைவகுப்பார்.

வீரமாமுனிவர் உரிச்சொல்லை *உரிய பல்குணச் சொல்* என்று அழைப்பதைக் காணும் போது, உரிச்சொல் என்பது பண்பை விளக்கும் மொழி அல்லது பண்பிற்கு உரிமை பூண்ட மொழி என்பது புலனாகிறது.

நன்னூலுக்கு உரை எழுதிய சடகோபராமானுஜாச்சாரியார் முதலானோர் பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதால் உரிச்சொல் எனக் காரணப்பெயர் பெற்றது என, விளக்கம் தருவர். இதனால் *பெயர் வினைகளுக்கு உரிமை பூண்டு நிற்பதால் அவை உரிச்சொல் எனப்பெயர் பெற்றன* என்ற கருத்தும் புலனாகிறது.

*சொல்பிறப்பதற்கு உரியசொல் உரிச்சொல்* என்பது டாக்டர் இலக்குவனார் அவர்கள் தரும் விளக்கம்.

*செய்யுட்கு உரியவாய் வருவதால்* என்று கருதுபவரும் உள்ளனர். இதனைச் சேனாவரையர் உரையில், பெரும்பான்மையும் செய்யுட்கு உரியவாய் வருதலின் உரிச்சொல் ஆயிற்று என்பாரும் உளர் என்பதால் அறியலாம்

உரிச்சொல்லாவது பல வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங்ஙனம் உணர்த்தும் போது ஒரு சொல் ஒரு பண்பை உணர்த்துவனவும் பலபண்பை *உணர்த்துவனவுமாகிப் பெயர்வினைகளை விட்டு நீங்காதனவாகிச் செய்யுளுக்கு உரியனவாகிப் பொருட்கு உரிமை பூண்டு வருவன உரிச்சொல்லாகும்* என்பது நன்னூலார் கருத்து.

**நூற்பா**

பல்வகைப் பண்பும் பகர் பெயராகி
ஒரு குணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்

(நன். 442)

**உரியியற் செய்திகள்:** நன்னூல் உரியியல்.

1. உரிச்சொல்லின் இலக்கணம்
2. உயிர் உள்ளதும் உயிர் இல்லதும்
3. உயிருள்ள பொருளின் பண்பு
4. உயிரில்லாப் பொருளின் பண்பு
5. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்
6. பல குணம் தழுவிய உரிச்சொல்
7. இயலுக்குப் புறனடை

8. அதிகாரத்துக்குப் புறனடை

9. நூலுக்குப் புறனடை

எனும் பகுதிகளாய் அமைந்துள்ளது.

## பண்பு என்பதன் விளக்கம்

உரிச்சொல் என்றால் என்ன என்பதை நன்னூல் (1) உரிச்சொல்லாவது பல்வேறு வகைப்பட்ட பண்புகளை உணர்த்தும் பெயராக வரும். (2) அவ்வாறு உணர்த்தும் போது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவதாகவும் வரும். பல குணத்தை உணர்த்துவதாகவும் வரும். (3) அத்தகைய உரிச்சொல் பெயர் வினைகளை விட்டு நீங்காதனவாய்ச் செய்யுட்கு உரியனவாய்ப் பொருட்கு உரிமைபூண்டுவரும் என்ற மூன்று செய்திகளையும் அறிந்தோம். பல்வகைப் பண்பு என்று கூறிய பவணந்தியார் பண்பு என்பதற்கு விளக்கம் தருகிறார்.

உலகப் பொருள்களின் பண்புகள், உயிருள்ளது உயிரில்லாதது என இருவகைப்படும்.

**நூற்பா**

உயிர் உயிரல்லதாம் பொருட்குணம் பண்பே

(நன். 443)

## உயிருள்ள பொருள்

இனி, உயிருள்ள பொருட்களின் புலன் உணர்வுகளை முறையே நிரல்படுத்தி ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர் வரை வகைப்படுத்திக் காட்டுகிறார்.

மெய், நாக்கு, மூக்கு, கண், காது, எனப்பட்ட ஐந்துபொறிகளாலும் ஐந்து புலன்களை உணர்வது உயிர்ப்பண்பு, இவ்வாறு ஐம்புலன்களையும் உணருங்கால் மெய்யால் உணரப்படும் ஊற்று உணர்வு (தொடு உணர்ச்சி) முதலாக மேல் வரும் ஒவ்வோர் உணர்வையும் சேர்த்து எண்ணி ஓரறிவுயிர் ஈரறிவுயிர் என்று முறையே வகுப்பர்,

மெய்-ஓரறிவுயிர்
மெய், நாக்கு- ஈரறிவுயிர்
மெய், நாக்கு, மூக்கு-மூவறிவுயிர்
மெய், நாக்கு, மூக்கு, கண்-நாலறிவுயிர்
மெய், நாக்கு, மூக்கு, கண், செவி-ஐயறிவுயிர்

**நூற்பா**

**மெய், நா, மூக்கு, நாட்டம், செவிகளின்**
**ஒன்று முதலாக் கீழ்க்கொண்டு மேல் உணர்தலின்**
**ஓர் அறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும்..**

(நன். 444)

## ஓரறிவுயிர்

மெய்யால் ஊறு அறியும் ஓரறிவுயிர்கள், அவை புல், மரம் முதலியன.

**நூற்பா**

புல்மரம் முதல உற்று அறியும் ஓரறிவுயிர்

(நன். 445)

## ஈரறிவுயிர்

மெய்யால் அறியப்படும் ஊறு உணர்வோடு நாவால் அறியும் சுவை உணர்வும் உடையன ஈரறிவுயிர்கள் அவை, இப்பி, சங்கு முதலியன.

**நூற்பா**

*முரள் நந்து ஆதி நா அறிவோடு ஈரறிவு உயிர்*

*(நன். 446)*

## மூவறிவுயிர்

மெய்யால் அறியும் ஊறு உணர்வு நாவால் அறியும் சுவையுணர்வு மூக்கால் அறியும் உணர்வு ஆகிய மூன்றறிவும் உடைய மூவறிவு உயிர்கள். அவை கரையான், எறும்பு முதலியன.

**நூற்பா**

*சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூவறிவு உயிர்*

*(நன். 447)*

## நாலறிவுயிர்

மேற்கூறிய மூன்று உணர்வோடு பார்வை உணர்வுமாக நான்கறிவை உடையன நாலறிவு உயிர்கள். இவை தும்பி, வண்டு முதலியன.

**நூற்பா**

*தும்பி வண்டு ஆதிக் கண்ணறிவின் நாலறிவுயிர்*

*(நன். 448)*

## ஐயறிவுயிர்

மேற்சுட்டிய நான்குணர்வோடு செவியால் ஓசை உணரும் அறிவுமாக ஐந்தறிவை உடையன ஐயறிவு உயிர்களாம். அவை வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள் முதலியன.

**நூற்பா**

*வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்*
*ஆதிசெவி அறிவோடு ஐயறிவு உயிரே*

*(நன். 449)*

தொல்காப்பியர் *மக்கள் தாமே ஆறறிவுயிரே* என்று கூறுவர். அவ்வாறாக மக்களை ஐயறிவுயிர் என்று கூறல் பொருந்துமா? மக்கள் ஐயறிவோடு மன அறிவாகிய ஆறாவது அறிவும் உடையர் என்பதாலே மக்கள் தேவர் நரகர் உயர்திணை என்று முன்னே சொன்னார். எனவே இங்குச்சுட்டியது ஐம்புலன் மட்டுமே உணரும் விலங்கை ஒத்த மக்களையே.

## உயிரில்லாப் பொருள்

அறிவுமயமாகிய உயிர் ஒன்றைத்தவிர உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிரல்லாத பொருள்களாம்.

*உணர்வியலாம் உயிர் ஒன்றும் ஒழிந்த*
*உடல் முதல் அனைத்தும் உயிர் அல் பொருளே*

*(நன். 450)*

ஒற்றுமை நயம் கருதியவழி உயிரும் உடம்பும் ஒன்றுபோல் தோன்றுமாயினும் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்பன. எனவே வேற்றுமை நயம் கருதியவழி உயிரும் உடம்பும் வேறு ஆதலின் உடம்பு உயிரில்லாத பொருளே ஆகும்.

## உயிருள்ள பொருட்களின் பண்பு

உயிர்ப் பொருள் அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாணம், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி என முப்பத்திரண்டு பண்புகளை உடையன.

**நூற்பா**

அறிவு அருள் ஆசை அச்சம் மானம்
நிறைபொறை ஓர்ப்புக் கடைபிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொசசாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல்கொள் உயிர்க்குணம்

(நன். 452)

## உயிர்ப் பொருட்களின் தொழில்கள்

துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் ஆகியன உயிர்ப் பொருட்களின் தொழிலாகும்.

**நூற்பா**

துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல்
உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழில் குணம்

(நன். 453)

## உயிரில்லாப் பொருட்களின் பண்புகள்

உயிரற்ற பொருள்கள் வட்டம், கோணம், சதுரம், முதலிய பலவகை வடிவை உடையன. நல்லது, கெட்டது என்ற இருவகை மனம் உடையன. வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐந்து வண்ணம் உடையன. கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் ஆறுகளை உடையன. வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, தொய்ம்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்னும் எட்டுவகை ஊறுகள் உடையன.

**நூற்பா**

பல்வகை வடிவு இருநாற்றம் ஐ வண்ணம்
அறுசுவை ஊறு எட்டு உயிரல் பொருட்குணம்

(நன். 154)

## உயிர்ப்பொருள் உயிரல் பொருள் - பொதுப்பண்புகள்

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் இத்தகையன இருபொருட்கும் பொதுவான தொழில் பண்புகளாம்.

**நூற்பா**

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்
ஈதல் இன்னன இருபொருள் தொழிற்குணம்

(நன். 455)

### ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல்

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்ற ஆறு உரிச்சொவ்லும் *மிகுதி* என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள்.

**நூற்பா**

சால உறுதவ நனிகூர் கழிமிகல்

(நன். 456)

(எ-டு) பருவத்து சாலப் பலகொல் என்று எண்ணி
உறுவளி துரக்கும் உயர்சினை மாவின்
தவச்சேய் நாட்டார் ஆயினும்
நனிபே தைய நயனில் கூற்றம்
பொறை நில்லா நோய் கூரப் புல்லென் றிசினே
காமங் கழி கண்ணோட்டம்

மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி ஆகிய உரிச்சொற்கள் *சொல்* எனும் ஒரு குணத்தை உணர்த்தும் சொற்களாம்.

மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடியிசை
கூற்று புகறன் மொழி கிளவி விளம்பறை
பாட்டு பகர்ச்சி இயல்பம் சொல்லே

(நன். 458)

(எ-டு) *கோவலர் வாய் மாற்றம் உணர்ந்து*
*இருபிறப் பாளர் பொழுதறிந்து துவல*
*தெருண்டார் அவை செப்பல் உற்றேன்*
*உரைப்பார் உரைப்பவை எல்லாம்*
*அறங்கரை நாவின் நான் மறை முற்றிய*
*நசையுநர்க் கடையா நன்பெரு வாயில் இசையெனப் புக்கு*
*உற்றது நாங்கள் கூற உணர்ந்தனை*
*புகன்ற அன்றியும்ம பூமி கவருமே*
*காமஞ் செப்பாது கண்டது மொழிமோ*
*கிளக்கும் பரண கேளினி*
*மெய்ம் மூ வாறென விளம்பினர் புலவர்*
*அறிவினது அடிதொழுது அறைவகுவன் எண்ணே*
*ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க்கு*
*உய்தி இல்லென அறம் பாடிற்றே*
*வார்த்தை பகர்குற்றேன்*
*இடிபோல இயம்பி னானே*

முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரக்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை,இ கனை, சிலை, சும்மை, கவ்வை, கம்பலை, அரவம், ஆரப்பு என்ற இருபத்திரண்டு சொற்களும் ஓசை என்ற ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.

**நூற்பா**

முழக்கு இரட்டு ஒலி கலி இசை துவை பிளிறிரை
இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர் குறை
கனை சினை கம்மை கௌவை கம்பலை
அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை

(நன். 459)

*முழங்கு முந்நீர் முழுவதும் வளை இ*
*குடிஞை இரட்டும் கோடுயர் நெடுவரை*
*ஒல்லென ஒலிக்கும் ஒலிபுனல் ஊரற்கு*
*கலி கெழு மூதூர்*
*பறையிசை அருவி:*
*தோல் துவைத்தல்*
*பிளிறுவார் முரசம்*
*இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள்*
*இரங்கு முரசினம்*
*இரும்பிழி மாரி யழுங்கின மூதூர்*
*காலை முரசம் அது இயம்ப*
*இமிழ்கடல் வளைஇய ஈண்டகன் கிடக்கை*
*குளிறு முரசம் குணில் பாய*
*களிறு களித்தது இருங் கார்*
*குரைபுனல் கன்னி*
*கனைகடற் சேர்ப்ப*
*சிலைத்தார் முரசம் உறங்க*
*தன்னா சும்மைமிகு தக்கின நாடு நண்ணி*
*கௌவை நீர் வேலி*
*வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்*
*அறைகடல் அரவத்தானை*
*ஆர்த்த பல்லியக் குழாம்*

## பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல்

கடி என்னும் உரிச்சொல் பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல். இது காப்பு, கூர்மை, விரை, விளக்கம், அச்சம் சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், விரைவு, மன்றல், கரிப்பு என்றும் பொருள்களைத் தரும்.

நூற்பா

கடி என் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்

(நன். 457)

| | |
|---|---|
| *ஒண்சுடர் நல்லி ருங்கடி நீவி* | (காப்பு) |
| *கடி நுனைப் பகழி* | (கூர்மை) |
| *கடி மாலை சூடி* | (நாற்றம்) |
| *கண்ணாடியன்ன கடி மார்பன்* | (விளக்கம்) |
| *கடியா மகளிர்க்கே பைவிளக்காகி* | (அச்சம்) |
| *கடியா மிசைப்பூத்துக் கம்புளோ டன்னி மார்க்கும்* | (சிறப்பு) |
| *எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்* | (விரைவு) |
| *கடியரண் கடவுட்கு இட்ட செழுங்குரல்* | (மிகுதி) |
| *கடிமுரசு* | (ஆர்த்தல்) |
| *கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி* | (விரைவு) |
| *கடிவினை முடுகினி* | (மன்றல்) |
| *கடிமிளகு தின்ற கல்லா மந்தி* | (கரிப்பு) |

## இயலுக்குப் புறனடை

இனி, நன்னூலார் உரியியலுக்குப் புறனடை கூறுகிறார். இச்சொல் இவ்விடத்தில் இவ்விலக்கணத்தால் நடக்கும் என்று சொல்லும் நன்னூலும் அவ்விலக்கணம் காட்டுவதற்கு வேண்டிய அளவே கூறப்பட்டுள்ளது. உரிச்

சொற்கள் அனைத்தும் நிகண்டு நூல்களுள் கூறினாற் போல் விரித்துக் கூறவில்லை. எனவே அவற்றை விரிவாகக் கண்டறிய வேண்டினர் பிங்களம் முதலாகிய நிகண்டுகளுள் உரிச்சொல் தொகுதியினைக் கண்டு கொள்க.

நூற்பா

இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
என்று இசை நூலுள் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலில் பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே

(நன். 460)

## அதிகாரத்திற்குப் புறனடை

சொல்தோறும் இத்தன்மைத்து இதன் இலக்கணம் என்று முழுமையாக மொழியப் புகுந்தால் அதற்கு வரம்பில்லாமல் போகும். ஆதலால் எடுத்துக்கூறிய சொற்களின் இலக்கணங்களை வைத்துக்கொண்டு சொல்லாதவற்றின் இலக்கணங்களையும் ஒப்புமை கருதித் தெளிந்து உணர்தல் அறிவுடையோர் கடனாகும்.

நூற்பா

சொல்தோறும் இற்று இதன் பெற்றி என்று அனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில ஆதலின்
சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும்
தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே

(நன். 461)

## நூலுக்குப் புறனடை

முற்காலத்து இலக்கணங்களுள் சில, பிற்காலத்து இறத்தலும் முற்காலத்து இல்லன சில பிற்காலத்து இலக்கணமாய் வருதலும் குற்றம் அல்ல, கால வேற்றுமை அதுவாதலின்.

நூற்பா

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

(நன். 462)

## உரிச்சொல் பற்றிச் சில செய்திகள்

இலக்கண நூலார் உரிச் சொற்களைத் தனியாகச் சொற்கள் என்று கருதினாலும் பெயர் வினைக்குக் கொடுத்த சிறப்பினை அவர்கள் உரிச்சொல்லுக்குத் தரவில்லை. இதனால் பல்வேறு காலங்களில் உரிச்சொல்லைப்பற்றி எழுந்த பல்வேறு கோட்பாடுகள் உரிச்சொல்லின் செயல்பாட்டையும் இன்றியமையாமையையும் உணர்த்துகின்றன.

1. தெய்வச்சிலையார் உரிச்சொற்களைத் தாதுச் சொற்கள் எனக் கருதுகிறார். (வேர்ச் சொற்கள்)

2. உரிச்சொற்கள் பெயரடையாகவும் வினையாகவும் வருவதை நோக்கிக் ***கமில் சுவலபில்*** அவர்கள் உரிச்சொற்களைப் பெயரடை, வினையடைச் சொற்கள் எனக் கொள்வார்.

3. சிவஞான முனிவர் எல்லா அடிச்சொற்களும் உரிச்சொற்களே என்பதை ஒப்புக் கொள்கிறார்.

4. உரிச்சொல் என்பது வினையும் குறிப்புமாய்ச் சொற்களுக்கெல்லாம் பகுதியாகிய வேர்ச்சொற்கள் என்பதும் குறைச்சொற்களாகிய இவற்றை முதனிலையாகக் கொண்டே எவ்வகை வினைச்சொற்களும் தோன்றுவன என்பதும் புலனாதல் காண்க என்பர் தி.க. வெள்ளைவாரணர்.

5. பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தொல்காப்பியர் அடிச்சொற்கள் என்ற நிலையில் உரிச்சொற்களை எடுத்துக் கூறுகிறார். கறுப்பு என்பதில் கறு என்பதே உரிச்சொல்லாகும். பு என்பது விகுதியே. முழுச் சொல்லாகச் சொன்னால் உரிச்சொற்கள் பெயர்வினை என்று ஆகிவிடும். பல பொருள் ஒரு சொல் ஒரு பொருள் பல சொல் என்றும் பன்மை திரிசொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் பொதுவாக அமைந்திருத்தலால் பவணந்தியார் திரிசொல்லையும் உரிச்சொல்லையும் ஒற்றுமைப்படுத்தி மயங்கினார் என்று கருத்துத் தெரிவிப்பார். ஆனால் நன்னூலார் ஒரு குணம் பல குணம் என்று பண்பு பற்றிக் குறிப்பிட்டிருப்பதால் அவர் அவ்வாறு மயங்கவில்லை என்பதை அறியலாம்.

6. இலக்கண நூலார் உரிச்சொல் எனத் தொகுத்திருப்பன எல்லாம் பொருள் வெளிப்படையாக விளங்காத சில அருஞ்சொற்களேயாகும். அவற்றில் பல வழக்கு இறந்தவை. உரியியல் காலப் போக்கில் ஒரு நிகண்டு போலக் கருதப்படலாயிற்று என்பர் டாக்டர். இசரயேல்.

## திரிசொல்-உரிச்சொல்

திரிசொல் செய்யுள் ஈட்டச்சொல் எனப்படுகிறது. உரிச்சொல் செய்யுட்குரியது எனக் கூறப்படுகிறது. ஒரு பொருள் குறித்த ஒரு சொல் பல பொருள் குறித்த ஒரு சொல் என்று திரிசொல்லுக்கு விடை தரப்படும். உரிச்சொல்லுக்கு ஒரு சொல் பல பொருட்கு உரிமைப்படுத்திப் பல சொல் ஒரு பொருட்கு உரிமைப்படுவது என்று விளக்கம் தரப்படும். எனவே ஒரு சொல் பல பொருளைச் சுட்டலும், பல பொருள் ஒரு பொருளைச் சுட்டலும் திரிசொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் பொதுவான இயல்பே என்பதை அறியலாம்.

அவ்வாறெனில் திரிசொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் வேற்றுமை யாது?

திரிசொல்லாவது திரிபுபட்ட சொல்லாம். உரிச்சொல் திரிவதன்று. திரிபுடைமையே, திரிசொல்லின் தலையாய இயல்பு, குறிப்பு, பண்பு ஆகியவற்றுக்கு உரிமைப்பட்டு வருதல் உரிச்சொல்லின் தலையாய இயல்பு. திரிசொல்லாவது முழுச்சொல், உரிச்சொல் சொல்லாம். திரிசொல் இயற்சொல்லின் திரிபுபட்ட வடிவம். உரிச்சொல் அடிச்சொல்லாக அமையக்கூடிய வேர்த்தன்மை உடையது. இவ்விரு சொற்களையும் வேறுபடுத்திக் காட்டலாம்.

## பயிற்சி வினாக்கள்

1. உரிச்சொல்லின் இலக்கணம் யாது?
2. இருவகை உரிச்சொற்கள் யாவை?
3. உயிருள்ள பொருளின் பண்புகள் யாவை?
4. உயிரற்றப் பொருள்களின் பண்புகள் யாவை?
5. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்லைச் சான்றுடன் விளக்குக.
6. பலகுணம் தழுவிய உரிச்சொல்லைச் சான்றுடன் விளக்குக.

# தன்மதிப்பீடு - மாதிரிவினா

## இளங்கலை - இரண்டாம் ஆண்டு

### பகுதி XIII (a) - பாகம் III

### சிறப்புப்பாடம் - தாள் - IV

### இலக்கணம் : எழுத்தும் சொல்லும்
### சொல்லதிகாரம்

*நேரம் - 3 மணி* **மதிப்பெண் - 100**

**I ஒரு பக்க அளவில் விடையெழுதுக** **40**

1.1 எழுவாய் வேற்றுமை பற்றி எழுதுக.

1.2 சொல்லெச்சங்கள் எத்தனை? குறிப்பெச்சங்கள் எத்தனை? இவை எங்ஙனம் முடியும்?

1.3 இருதிணைப் பொதுப்பெயர்கள் என்றால் என்ன? சான்று தருக.

1.4 பால், இடவழுவமைதிகளைச் சான்றுடன் விளக்குக.

**II மூன்று பக்க அளவில் விடை தருக** **60**

2.1 *தொகைநிலைத் தொடர்* பற்றி நன்னூலார் கூறும் கருத்துக்களை விளக்குக.

2.2 *செய்யுளும் பொருள்கோளும்* குறித்துக் கட்டுரை வரைக.

2.3 வினை எச்சங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

# இ) இக்கால மொழியியல்

மொழியியலைப் பற்றிய பொதுக் கருத்துக்களும் விளக்க மொழியியல் (Descriptive Linguistics), மாற்றிலக்கணம் (Transformational Generative Grammar), மீட்டுருவாக்கம் (Historical Reconstruction) ஆகியவை பற்றியும் எளிய தமிழில் இக்கால மொழியியல் என்ற தலைப்பில் நூலொன்று யாத்து வழங்கியுள்ளார். பேராசிரியர் டாக்டர் முத்துச்சண்முகன். ஆங்காங்கே இந்நூலில் தமிழ் எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கியுள்ளார். மேலை நாட்டில் வளர்ந்து வரும் இம் மொழியியற்கலை தமிழ் கூறும் நல்லுலகிலும் கால்கொண்டு வளர்வதற்கு உரிய பயிற்சியை இந்நூல் வழங்குகின்றது. நம் பழைய இலக்கண ஆசிரியர் தம் இலக்கணக் கோட்பாடுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு மொழியியற் பயிற்சி இன்றியமையாததொன்றாம். இவ்வகையில் இக்கால மொழியியல் பற்றிய இப்பாடமும் இதற்கு அடுத்துள்ள பாடமும் அமைக்கப் பெற்றுள்ளன. ஊன்றிப் படித்துப் பயனடையுங்கள்.

## 1. மொழியும் மொழியியலும்

### மக்கள் பேச்சு
### பேசும் விலங்கு

மனிதன் ஒரு பேசும் விலங்கு; உயிரினங்களில் மனிதன் ஒருவனே பேசிக்கருத்தை வெளியிடும் ஆற்றலுடையவன். விலங்குகளும் பறவைகளும் ஒலிகளால் சிற்சில கருத்துக்களைத் (தம் உணர்வுகளைத்) தெரிவிக்கின்றன.

### பேசும் கருவி

உண்ணவும் மூச்சு விடவும் அமைந்த உறுப்புகளை மனிதன் பேசவும் பயன்படுத்திக் கொண்டான்; அதன் விளைவாக விரைந்த முன்னேற்றம் நாகரிகவுலகில் கண்டான்.

உதடு, நா, மூக்கு, தொண்டை இவைகளின் அடிப்படைத் தொழில்கள் வேறு, ஒலித்தசைகள், நுரையீரல் ஆகியவையும் அத்தகையனவே.

### பேசும் மூளை

ஒரு நோக்குடனேயே நம் பேச்செல்லாம் அமையும். ஒரு நிகழ்ச்சியைத் தூண்டவும், அதற்குத் துணை நிற்கவும், சூழ்நிலையை ஆட்டிப்படைக்கவும் பேச்சு அமையும். ஒரு வன்முறைக்கு உட்பட்டே பேச்சு நிகழ்கின்றது. இவ்வரன்முறையும், பேச்சு மரபும் நாமாக உருவாக்கிக் கொண்டவை. ஒவ்வொரு மொழிக்கும் இவ்வரன்முறையும், பேச்சு மரபும் தனித்தனியே அமைந்துள்ளன. உலக இயல்போடு தொடர்படுத்திப் பேச்சு நிகழ்வதற்குரிய வரன் முறையை விடுத்து விலகாமல், பேச்சு நிகழ்வதற்குத் துணை புரிவது மனித மூளையே. அழுதல், சிரித்தல், பால்குடித்தல், கைகால்களை ஆட்டுவித்தல் எனப் பல்வேறு தொழில்களைச் செய்யும் உறுப்புக்களைத் தொடர்புபடுத்தித் தக்கவகையில் காரியமாற்ற உதவுவது மூளையே. அம்மூளையே பேச்சுறுப்புக்களைத் தக்கவாறு தொடர் படுத்திப் பேச்சுக்களை நிகழ்த்துகிறது. *ஒலி எழுப்பும் ஆற்றல் மட்டுமே நம்மோடு பிறந்தது. ஆனால் பேச்சு நாம் கற்றறிதற்குரிய ஒன்று* என்பர் மொழியியல் அறிஞர்.

### பேசும் குழந்தையும் பேசும் மனிதனும்

குழந்தை பேசப் பழகிக்கொள்ளும் நிலையை நாம் கவனிப்பதில். அது அழும் நிலைமாறி, உளறும் நிலைக்கு, அதனையும் தாண்டிப் பேசும் நிலைக்கு நாளும் வளர்ந்து வருகிறது. இத்தகைய வளர்ச்சியோடு இணைந்தே குழந்தையின் பேச்சு வளர்ச்சியும் அமைந்திருக்கிறது. பேச்சு மனிதனோடு உடன் பிறந்ததன்று; எனினும் பேச்சை மனிதன் தன்னைச் சுற்றியுள்ள மக்களிடமிருந்து கற்றுக் கொள்கிறான் என்பதே விளக்க மொழியியலார் கருத்து. பிறந்த ஆறு ஆண்டுக்குள்ளேயே தன் தாய் மொழியின் அடிப்படை அனைத்தையும் அவன் கற்றுணர்ந்து விடுகிறான் பேச்சே மனிதனுக்குச் சமூகத்தில் அவனுக்குரிய இடத்தைப் பெற்றுத் தருகின்றது.

## மொழியும் சமூகமும்
## சமூக நிகழ்ச்சியும் உயிரியல் நிகழ்ச்சியும்

மொழி ஒரு சமூக நிகழ்ச்சி மற்றவரோடு தொடர்பு கொண்டு வாழ்வதற்கு உதவும் சமூக நிகழ்ச்சி. இதில் செல்வம், திருமணம், பிற உறவுகள் ஆகிய அனைத்தும் அடங்கும். உளவியல் சார்ந்த நிகழ்ச்சியாகவும் மொழியைக் கொள்வதுண்டு. சமயம், கலை, தத்துவம் போன்றவை உளவியல் சார்ந்த மொழி நிகழ்ச்சியே. உண்பது, உறங்குவது போல்வன சமூக நிகழ்ச்சியோடு தொடர்பு கொண்டுள்ளன. உண்பதிலும் சைவ உணவே உண்பது, கையால் (முள்ளுக் கத்தியும் கரண்டியும் பயன்படுத்தாமல்) உண்பது என்பது ஒரு சமூக நிகழ்ச்சியாகி விடுகின்றது. பேச்சும் ஒரு சமூக நிகழ்ச்சியே; ஆதலின் தான் இருக்கின்ற சமூகச் சூழலுக்குத் தக்கவாறு அமைந்துள்ள மரபுவழிப்பட்ட பேச்சைக் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும். இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் காரணமின்றிப் பேச்சு மொழி அந் நிகழ்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டே இயங்குகிறது. இவை அனைத்தும் சேர்ந்தே ஒரு சமூகத்தின் பண்பாடு அமைகிறது.

## தொழில்பற்றிய சில உண்மைகள்

### தேவை

ஒவ்வொரு இனத்திலும் புராணக்கதைகள் மொழியின் தோற்றத்திற்குக் கடவுளைக் காரணமாகக் கூறுகின்றன. இவையனைத்தும் மனிதனின் கற்பனையே.

ஒவ்வொரு மொழியும் அந்த அந்த இனத்தின் தேவைக்கு ஏற்பவே அமைந்திருக்கிறது. தமிழ் மொழியில் இன்று நாம் ***வணக்கம்*** என்று கூறுகிறோம். ஆங்கிலேயர் போல் ***காலை வணக்கம்***(good morning) என்றும் ***மாலை வணக்கம்*** (good evening) என்றும், ***இரவு வணக்கம்*** (good night)என்றும் சொல்வது தமிழர்களுக்கு இயல்பாக இல்லை. எனவே தமிழ்ப் பேச்சிலும் தனிதனிச் சொல்லாகவோ தொடராகவோ இயல்பாக இப்பொருள் தரும் வடிவுகள் இல்லை. ஒவ்வொரு மொழியும் எங்ஙனம் தேவைக்கு ஏற்ப அமைகிறது வளர்கிறது என்பனவற்றை இவற்றின் வழியே அறியலாம்.

### உயர்வும் தாழ்வும்

மொழிகளிடையே உயர்வு தாழ்வு காண்பது பொருத்தமற்ற போக்கு. உயர்வு தாழ்வு மொழியில் இல்லை. பண்பாட்டுக் கூறுகளை ஒப்பிடும்போது ஒரு மொழியிலுள்ள ஒன்று பிறிதொன்றில் இல்லையாயின் அதனைக் குறையாக எண்ணுகின்ற மனத்தின் நிலையே உயர்வு தாழ்வு கற்பிக்க முயல்கிறது. சீன நாட்டு உணவுவகைகள் தமிழரிடையே இல்லை. அது போலவே தமிழர்தம் கொழுக்கட்டை, அதிரசம், தேன்குழல் பிட்டு போன்றவை பிறரிடம் இல்லை. தமிழ் மொழியில் மட்டுமே இதனைச் சொல்லிடவியலும். எனவே இவற்றைச் சொல்லாகக் கொண்டில்லாத மொழிகள் அனைத்தும் குறைவு உடையன-தாழ்ந்தமொழிகள்-என எண்ணுவது பொருந்தாத போக்காம். இத்தகைய குறை நிறைகள் மொழியைப் பொறுத்தவையல்ல.

# மொழியியல் வல்லுநன்

## மொழியை ஆராய்வோர்

மொழியியல் ஆய்வில் நேராகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டிருப்போர் பலர், உடற்கூற்று வல்லுநர் (Physiologist) மூளைக்கோளாறுகள் நரம்புகளின் செயல்கள் ஆகியவற்றை ஆராய மொழியைப் பயன்படுத்துகின்றனர். பேச்சைத் திருத்துவோர் (Speech Corectionist) ஒலியுறுப்புக்களின் குறைகளைக் கண்டறிந்து திருத்துகின்றனர். செய்திச் செலவுமுறைகளைச் செம்மைப்படுத்தத் தொடர்புப் பொறியியல் வல்லுநர் (Communication Engineers) மொழியைப் பயன்படுத்துகின்றனர். தர்க்கவியல் வல்லுநர் (logicians) கருத்துக்கும் சொல்லுக்கும் உள்ள தொடர்பு பற்றி ஆய்கின்றனர். உளவியல் வல்லுநர் (Psychologists) மானிடவியல் வல்லுநர் (Anthropologists)வரலாற்று ஆசிரியர் (Historians)தூய மொழியியலார் (Pure Linguists) பயன்பாட்டு மொழியியலார் (Applied Linguists) ஆகிய பல்வேறு துறையினரும் வேறு வேறு கோணங்களிலிருந்து மொழியின் தன்மை வளர்ச்சிப் போக்கு போன்றவற்றை ஆய்ந்து வருகின்றனர்.

## மொழியியல் வல்லுநன் ஆராய்வது

மொழியின் எல்லா வகைகளையும் (பேச்சு மொழி, எழுதப் பெறும் மொழி, இலக்கிய மொழி போல் வன) மொழியியல் வல்லுநன் ஆய்வான். இருப்புநிலையை எடுத்துச் சொல்வதே (descriptive) ஒரு மொழியியல் ஆய்வாளனின் நோக்கம். இவ்வாறுதான் பேச வேண்டும் என்றோ எழுத வேண்டும் என்றோ (prescriptive) கூறுவது அவன் பணியன்று.

## எழுத்தும் மொழியும்

எழுதப்படுவது மட்டுமே மொழி எனக் கருதுவோர் உண்டு. ஒலியை எழுதிக்காட்டுவதற்குத் துணையாக உள்ள ஒரு குறியீட்டு மரபே எழுத்தாம். அதுவே முழுதும் மொழியாகிவிடாது. ஆங்கிலத்தைத் தமிழில் (தமிழ் எழுத்துக்களில்) எழுதிக்காட்டினால் அது தமிழ் மொழியாகிவிடாது. அது போலவே தமிழையும் ஆங்கில எழுத்துக்களில் எழுதினால் அது ஆங்கிலமும் ஆகிவிடாது. குறியீடுகள் மாறுகின்றனவே தவிர மொழி அமைப்பு மாறுவது இல்லை. ஒவ்வொரு குறியீட்டிற்கும் உரிய ஒலி யாது எனக் கண்டுணர்வது அம்மரபைப் பின்பற்றிப் படிக்கவும் எழுதவும் பயன்படும்.

## இலக்கியமும் மொழியும்

இலக்கியமே மொழி, இலக்கியம் இன்றேல் மொழி இல்லை. இலக்கிய ஆசிரியனின் படைப்புக்குக்கருவியாய் அமைவது மொழி எனினும் இலக்கியம் வேறு, மொழி வேறு, அன்றாடச் செய்திகள் நடைமுறை நிகழ்ச்சிகள் ஆகியவையும் மொழியைக் கருவியாகக் கொண்டு உலவிவருவன. இவை இலக்கியம் அல்ல.

அறிவியலுக்கும் கலைக்கும் பாலமாக அமைகின்ற தன்மை மொழிக்கு உண்டு. அறிவியல் போக்கைக் கலையியலில் கொண்டு வந்து சேர்த்து ஆய்வு நெறிமுறைகளில் புதுமை விளைவிக்கிறது மொழி.

மொழியியல் வல்லுநர் மொழியைப் பலவாறாக ஆராயலாம். ஒரு மொழி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட வகையில் பேசப்படுவதைப் புலப்படுத்துவது விளக்கமுறை மொழியியலாம் (Descriptive Linguistics) பல்வேறு காலங்களில் இவ்வாறு வழங்கியது எனக் காட்டுவது வரலாற்று மொழியிலாம் (Historical Linguistics); ஒரே குடும்பத்தைச் சார்ந்த பல்வேறு மொழிகளை ஒப்பிட்டு அவற்றின் மூல மொழி வடிவைக் கண்டு அம்மூலமொழியிலிருந்து மற்ற மொழிகளெல்லாம் எவ்வாறு வெவ்வேறு மொழிகளாகக் கிடைத்தன என்று ஆராய்வது ஒப்பீட்டு மொழியியலாம் (Comparative Linguistics), ஏதேனும் இரண்டு மொழிகளை ஆராய்ந்து அவற்றின் ஒலியனியல் இலக்கணம் முதலானவற்றைக் கண்டு அவற்றுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைத் திரட்டிக்காட்டுவது உறழ்நிலை மொழியியல் (Contrastive Linguistics) என்பார்கள். இதனைப் பேராசிரியர் முத்துச் சண்முகன் அவர்கள் ஒப்புநிலை மொழியியல் என்பர்.

# மொழியியலின் வரலாறு

## பண்டைக்காலம்

மொழியின் தோற்றம் பற்றிப் பல மொழிகளிலும் பல்வேறு கதைகள் வழங்குகின்றன. மக்கள் எல்லோரும் கூடி விண்ணுலகு அடையவேண்டும் என்று கோபுரம் ஒன்றை அமைக்கத் தொடங்கினர். அவர்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசி வந்தனர்; ஒற்றுமையாக உழைத்து வந்தனர். அதனால் அவர்கள் விரும்பியதைச் செய்தனர்; அதனை யாராலும் தடுக்க முடியவில்லை. கடவுளும் அந்நிலையைக் கண்டு அஞ்சினாராம். எனவே விண்ணுலகுக்கு அனைவரும் வருதலைத் தடுத்திட எண்ணி, ஒருவருக்கொருவர் புரியாத மொழியில் பேசுக என ஆணையிட்டாராம்; அவ்வாறே மக்கள் பேசத் தொடங்கினர்; கோபுரம் கட்டும் முயற்சியும் தடைப்பட்டது; அம்மக்கள் உலகின் வெவ்வெறு மொழிகள் உருவாயின என்று கதை ஒன்று வழங்குகின்றது. இத்தகைய கதைகள் பல உள. இவை அறிவியல் முறைப்படி ஆய்ந்து மொழியின் தோற்றம் பற்றிக் கூறவில்லை.

தத்துவ ஆராய்ச்சியும் மொழிக்கு இலக்கணம் காணும் முயற்சியும் தோன்றிய பின்னரே முறையாக மொழியைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கியது எனலாம். இவ்வாறான ஆராய்ச்சியில் முன்னணியில் நிற்பவர் இந்தியர்களே. மேலைநாடுகளில் கிரேக்கர் குறிப்பிடத்தக்க வகையில் மொழி ஆய்வில் ஈடுபட்டுத் தொண்டாற்றியுள்ளனர்.

தமிழில் தொல்காப்பியமும், வடமொழியில் பாணினியமும் இவ்வாறு மொழியியல் ஆய்வில் ஈடுபட்டமைக்குச் சான்றாக அமைந்துள்ளன. விளக்க முறை மொழியியல் (Descriptive Linguistics) என இன்று அழைக்கப்பெறும் ஆய்வு முறையின் சாயலை இந்நூல்களில் காணலாம். மொழியின் இலக்கண அமைதியை ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல்,தொடரியல் என்று பல்வாறாகப் பிரித்து விளக்கும் முயற்சி இந் நூல்களில் காணப்படுகின்றது. இன்றைய மொழியியலின் தந்தை எனப் போற்றப்பெறும் அமெரிக்க மொழியியல் அறிஞர் இலெனாட்டு புளூம் பீல்டு (Leonard Bloom field) வடமொழிப் பாணினியின் இலக்கணம் கற்றபின்னரே தமக்கு இத்தகைய விளக்கமுறை மொழியியல் நோக்கில் மொழிகளைக் காணும் இயல்பு பிறந்தது என்பார்.

இந்தியர்கள் இவ்வாறு விளக்கமுறை மொழியியல் வழி (Descriptive approach) மொழியை ஆராய்ந்து கொண்டிருந்த போது கிரேக்கர்கள் ஊக முறையில் (Speculative approach) மொழியை ஆராய்ந்து கொண்டிருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தகுந்த அறிஞர்கள் பிளேட்டோ (Plato) வும் அரிட்டாடிலும் (Aristotle) ஆவர். பொருளுக்கும் அதன் பெயருக்கும் தொடர்பிருப்பதாகக் கருதியவர் பிளேட்டோ. அவரது மாணவர் அரிட்டாடில் மொழி என்பது மரபாலும் (Convention) உடன்பாட்டாலும் (agreement) உருவாகி வழங்குகிறது என்பார். ஒவ்வொரு பொருளின் பெயருக்கும் காரண காரியம் காண அரிட்டாடில் முயலவில்லை. பொதுவாகக் குறைந்தது இருவர் ஒரு பொருளுக்கு ஒரு குறிப்பிட்ட ஒலிக்குறியைச் சார்த்தி வழக்கில் பெயராகப் பயன்படுத்துவராயின் அப்பெயரே அப்பொருளுக்கு உரியதாகிவிடும் என்ற கொள்கையை அரிட்டாடில் கொண்டிருந்தார். அக்கோட்பாட்டை இன்றைய மொழியிலறிஞர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ் இலக்கண நூலார் இடுகுறி என இதனைக் குறிப்பிடுவர். காரணப் பெயர்களும் அமைவதுண்டு என்பதும் தமிழர் ஒப்பியதொரு கொள்கையேயாகும். இக்காரணப் பெயர்க் கொள்கை பிளேட்டோவின் மொழியியல் நோக்கை நமக்கு நினைவூட்டுகிறது. இவையனைத்தையும் பின்னர் உரோமானியர்களும் கைக்கொண்டனர் இந்தியர்களும் கிரேக்கர்களும் தத்தம் மொழிகளையே ஆராய்ந்தனர். தம் மொழிக்கும் பிற மொழிக்கும் உள்ள தொடர்புகளை ஆராய்ந்தனர். தம் மொழிக்கும் பிற மொழிக்கும் உள்ள தொடர்புகளை நேரடியாக அவர்கள் ஆராயவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இடைக்காலம்

கிறிஸ்தவ சமயம் உலகநாடுகளில் பரவத் தொடங்கியதும் பன்னாட்டு மொழிகள் பற்றிய ஆய்வில் ஆர்வம் தழைத்தது. விவிலிய நூல் (Bible) மொழி பெயர்ப்பும் போதனையும் ஒரே மொழியிலுள்ள சொற்றொடர்களுக்கு நேரான பிற மொழித் தொடர்களைக் கண்டு தொகுப்பதிலும் இருமொழி இலக்கணக் கூறுகளுக்கு நேரான இலக்கணக் கூறுகளைக் கண்டறிவதிலும் கிறித்துவ சமயத் தொடர்களைத் தூண்டியது. இதன் விளைவு இருமொழி, பன்மொழி அகராதிகள், இலக்கணங்கள் (இலத்தீன் மொழி இலக்கண அமைப்பை ஒட்டி அமைத்த வேறு மொழி இலக்கணங்கள்) இடைக்காலத்தில் உருவாயின. இவை, பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த அச்சுபொறிவளர்ச்சியின் துணையால் மக்களிடம் மிகுதியும் பரவலாயின.

அறிவியல் முறைப்படி மொழியை ஆய்வதில் பததொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னருள்ள கால கட்டத்தில் சிறந்து விளங்கியவர் மூவராவர் , வழக்கில் இருக்கும் மொழிகளை ஆய்ந்து இலக்கணம் காண வேண்டும். என்று கூறி உருசியாவில் வழங்கும் மொழிகளுக்கெல்லாம் இலக்கணம் காண உருசிய அரசி காத்ரின் (Catherin II) என்பாரைத் தூண்டிச் செயல்பட்ட லெப்னிஸ் (Leibniz, 1646 - 1746) எனும் செர்மன் (German) நாட்டு அறிஞரும் இம்மூவருள் ஒருவராவர். அந்நாளில் மேலை நாட்டு மக்களெல்லாம் இலத்தீனும், பிரெஞ்சும் எழுதுவதற்கும் பேசுவதற்கும் ஏற்ற பெருமையுடைய மொழிகள் என எண்ணி வந்தபோது அவர்களது மூட நம்பிக்கையை ஒழிக்கும் வகையில் லெப்னிஸ் கணிதம் தத்துவம், மொழி ஆகிய பல்வேறு துறையைச் சார்ந்த ஆய்வுகளில் தாம் கண்ட முடிவுகளைத் தம் தாய்மொழியாம் ஜெர்மானிய மொழியிலேயே எழுதி வெளியிட்டார். உரையும் ஆற்றினார்.

அடுத்து, எர்டா (Herder 1746 - 1806) என்பார் மொழிகள் தோற்றம் பற்றிய தம் ஆய்வில் மொழிகள் தெய்வத்தின் கொடை என எண்ணிய எண்ணத்தை மறுத்து, மனிதனிடம் இயல்பாகவே பேச வேண்டும் என்று உள்ள தூண்டுதல்தான் மொழியின் தோற்றத்திற்குக் காரணம் என்பதைத் தெளிவுபடுத்தினர்.

கல்கத்தாவில் உயர்நீதி மன்ற நடுவராக இருந்த சர்வில்லியம் சோன்சு (Sir William Jones, 1746 - 94) என்பார் வடமொழியை நன்கு கற்றுத் தேர்ந்த நிலையில், கிரீக்கு, (Greek) இலத்தின் (Latin) பழஞ் செர்மானிய மொழிகள் ஆகியவற்றோடு வடமொழிக்கு உறவு உண்டு எனவும், அவை அனைத்தும் ஒரு மூல மொழியிலிருந்து கிளைத்த மொழிகளே எனவும் முதன் முதலில் உலகுக்கு எடுத்துக் காட்டினார். பின்னாளில் எழுந்த வரலாற்று மொழியியல், ஒப்பீட்டு மொழியியல் எனும் மொழியியல் ஆய்வுகளுக்கு வித்திட்ட சிறப்பு இவருக்கே உரியது.

## பத்தொன்பதாம் நூற்றாண்டு

தேனிஷ் நாட்டைச் சார்ந்த இராசுமசு கிரிசுதியன் இராசுக்கு (Ramsu Kristain Rask 1789-1832) என்பார் பழைய நார்ச்சு மொழியின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை 1814 -ம் ஆண்டில் வெளியிட்டு, மொழிகளின் இலக்கண அமைதியை ஒப்பிட்டுக் காணுதல் வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தினார். சொற்கள் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு எளிதில் கடன் வாங்கலாம்: எனவே மொழி ஒற்றுமை காண்பதற்குச் சொற்களின் ஒற்றுமை முழுமையாகப் பயன்படாது. இலக்கண இயல்புகள் எளிதில் கடன் வாங்குவதற்கும், வெளி மொழிகளின் உறவால் பாதிக்கப்படுவதற்கும் எளிதில் இடமளிப்பதில்லை: எனவே இலக்கண அமைதியில் ஒற்றுமை காண்பதே சிறந்தது என்பார் இராசுக்கு. இரு மொழிகளுக்கிடையே உள்ள உறவைக் காண்பவர்கள் சொற்களைத் தொகுத்துக் காணும்போதே, பொருளை அடிப்படையாகக் கொண்டு, இரு மொழியில் ஒரு மொழிச் சொல்லுக்கு நேராக அமையும் பிறமொழிச் சொல் என்ற வகையில் தொகுத்திடுவர். அங்ஙனம் தொகுப்போர் மொழி உறவைக் காண்பதற்கு உதவியாக விஞ்ஞான அடிப்படை நோக்கில் அமைவது, ஒலி வேற்றுமை இடையே அமைந்துள்ள முறையான ஒலியியைபே (regularity in phonetic Correspondence).

இராசுக்கு வலியுறுத்திச் சொன்ன இவ்வொலியைபுக் கொள்கையை மேலும் தெளிவாக்கியவர் சேக்கப்புகிரிம். (Jacob Grimm 1785-1863) கிரிம் பின்வருமாறு இவ்வொலியியைபை ஜெர்மானிய ஒலி மாற்றச் சட்டத்தில் அமைத்து விளக்கினார்.

| கிரேக்க மொழி | | பழைய செர்மனிய கோதிக்கு மொழி |
|---|---|---|
| p | மாற்றம் | f |
| t | " | o |
| x | " | k |
| d | " | t |
| g | " | k |
| f | " | b |
| o | " | d |
| x | " | g |

கிரிம் காலத்தில் ஒலியியல் அறிவு அவ்வளவாக வளரவில்லை. அதனால் அவர் எழுத்தையும் ஒலியையும் வேறுபடுத்திக் கண்டார் அல்லர்.

வடமொழி அறிவும் ஆய்வும் பெருகிய நிலையில் பிரான்சு பாப்பு (Franz Bopp, 1791-1860) என்பார் வடமொழி, கெண்ட்டு, கிரீக்கு, இலத்தீன் முதலிய மொழிகளை ஒப்பிட்டு இவற்றின் ஒப்பிலக்கண நூலை வெளியிட்டார். ஆனால் இருவருக்கும் முன்னாக டாக்டர் ரெவரெண்டு கால்டுவெல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான இலக்கிய வளம் படைத்த திராவிட மொழிகளோடு மேலும் ஐந்து பழங்குடி திராவிட மொழிகளை ஒப்பிட்டுத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் ஒன்று 1856 ஆம் ஆண்டில் வெளிக்கொணர்ந்தார். இது ஒப்பியல் மொழி ஆய்வின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு செய்தியாகும்.

ஆகஸ்ட்டு சிலைட்சர் (August Shleicher, 1821-68) என்பார் எக்லியன் தத்துவத்திலும் (Hegelian Philosophy), தார்வினுடைய பரிணாமக் கொள்கை (Darwinian Evolutionary Theory) யிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவற்றின் அடிப்படையில் மொழித் தொடர்பு (genetic relationship) மூலமொழி காண்பதற்குரிய ஒப்பீட்டு முறை (proto language reconstruction) மொழிவகை (language types-taxonomy) ஆகிய துறைகளில் சில கருத்துக்களை வெளியிட்டார். மொழிகளின் வளர்ச்சி உயிர்களின் வளர்ச்சியைப் போன்றது என்பது இவர்தம் கருத்து. இதன் விளைவாக

மொழிகளின் தோற்றத்தை விளக்கப் பரிணாம வளர்ச்சி மரபை அடிப்படையாகக் கொண்டார். இரண்டு மொழிகளுள் ஒரே விதமான இயல்புகள் காணப்படுமாயின், அவ்வியல்புகள் இரண்டு மொழிகளும் ஒன்றாக ஒரே மூல மொழியாக இருந்த காலத்தைச் சார்ந்தவை என்பதைச் சுட்டும். அம்மொழிகள் தனித்தனியாகப் பிரிந்த பின்னரும் தம் முந்தைய சில இயல்புகளை இழக்காமல் பழைய உறவை நினைப்பூட்டிக் கொண்டு உள்ளன. இவ்வாறு மூல மொழியைக் கண்டு அறிதற்கு ஆய்வு நெறிகளைச் சிலைட்சர் ஒப்பீட்டு மொழியியலில் வழிவகுத்துக் காட்டினார். எக்லியன் (Heglian) தத்துவத்தின் அடிப்படையில் மொழி என்பது வடிவாலும் (Form), பொருளாலும் (Content or meaning) அமைந்ததொன்று என்று சிலைட்சர் கருதினார். இந்தக் கருத்தினடிப்படையில் உலக மொழிகளை அவர் மூன்றாகப் பிரித்துக் கொண்டார். தனிமொழி (Isolating language), ஒட்டுமொழி (agglutinative language), விகுதி மொழி (inflexional language) என அவர் மொழிகளை வகைப்படுத்தினார். முதல்வகைக்குச் சீன மொழியும் இரண்டாம் வகைக்குத் திராவிட மொழிகளும், மூன்றாம் வகைக்கு லத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகளும் சான்றுகளாக அமைகின்றன.

## இருபதாம் நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டு விளக்க மொழியியல் வளர்ச்சியிலும் மாற்றிலக்கண வளர்ச்சியிலும் ஒரு பொற்காலமாகத் திகழ்கிறது. பெர்டினாண்டு சசூர் (Ferdinand de Sausure 1857-1913) என்பார் விளக்க மொழியியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார். செவிகளில் வந்து விழுகின்ற ஒலிக்கூறுகளுக்கும் அவை சுட்டும் பொருளுக்கும் கருத்துக்கும் உள்ள தொடர்பைக் குறியீட்டுப் பொருள் (signified), செயற்பாடு (funcrtion), மொழியியல் குறி (linguistic sign) என மூன்றாகப் பிரித்து அவற்றிற்கிடையேயுள்ள உறவை விளக்கி மொழி ஒரு பரம்பரைச் சொத்து என்றும் இக்குறியை அடிப்படையாகக் கொண்டே மொழி இயங்குகிறது என்பதையும் அவர் வலியுறுத்தினார். மேலும் அவர் பேச்சுமொழி (le parole) என்பதற்கும் அதற்குப் பின்னணியாக விளங்கும் மக்கள் தம் கருத்தளவில் வாழும் பொதுமொழி (le language) என்பதற்கும் இடையே உள்ள பிணைப்பு எத்தகையது என்பதனை, விளக்கியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டே இந் நூற்றாண்டில் விளக்க மொழியியலும், வரலாற்று மொழியியலும் வளரத் தொடங்கின.

வில்கெம் வான் எம்போல்டு (Wilhelm Von Humboldt 1767-1835) என்பார் மொழியியல் பரப்புக் கோட்பாடு என்றதொரு கோட்பாட்டினை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். மொழி ஒரு பொருளன்று. அது ஒரு செயற்பாடு (function) என்பதே அவர்தம் கோட்பாடு. ஒரு பண்பாட்டை அறியவேண்டுமானால் அப் பண்பாட்டுக்குரிய மொழியில் காணப்படும் சொற்கள் எவ்வாறு உலகைப் பற்றிய எண்ணத்தை அம்மொழி பேசும் மக்களுக்குத் தோற்றுவிக்கின்றன என்பதைக் கண்டறிவதன் மூலமே அறிய முடியும். மக்களின் மதிப்பீடும் (values) நோக்கும் (outlook) அம் மக்கள் வழங்கும் மொழிச் சொற்களிலேயே வெளிப்பட்டு நிற்கும் என்பதே அவர்தம் கொள்கை எனலாம். இதனைப் போன்று அமெரிக்காவில் பெஞ்சமின் லீவார்ப்பு (Benjamin Lee Whorf 1897-1941) மொழிச்சார்பியல் (linguistic relativity) என்ற கொள்கையை வகுத்துக்கொண்டு அமெரிக்க இந்திய மொழிகளை ஆய்ந்தார். மக்களுக்கு அவர்தம் உலகைப் பற்றிய கோட்பாடுகள் அவரவர் பேசுகின்ற மொழியில் கட்டுண்டு இருப்பதிலே அமைந்துள்ளது என்பதே அறிஞர் வார்பின் மொழிக் கொள்கையாம். உட்ரபட்குதாய் (Tubektoy 1890-1938) உரோமன் யாகப்சன் (Roman Jakobson 1896) ஆகிய இருவரும் பிராக்கக்குழு (Praguecircle) என்பதனைத் தோற்றுவித்து மொழியியல் ஆய்வுக் கொள்கையில் சிறப்பாக ஒலியனியல் (Phonology) ஆய்வில் பேச்சொலிகளின் செயற்பாட்டினைப் (functionalist approach) பற்றிய ஆய்விற்கு முக்கியத்துவம் தந்து மொழியியல ஆய்வினை வளர்த்தனர். வரலாற்று மொழியியலில் மொழியின் இலக்கண அமைதிகளில் காணப்படும் வேறுபாடுகளுக்கு அடிப்படை, ஒலி மாற்றங்களே, அம்மாற்றங்கள் செயற்பாட்டு மாற்றங்கள். அம்மாற்றங்களில் இழைவும் (harmony) சிக்கனமும் (economy) இருக்கின்றன என்பதனை அவர்கள் இருவரும் சுட்டிக் காட்டுகின்றனர். லூயிசு எம்சுவேல் (Louis Hielmslev 1899-1955) என்பார் சசூருடைய கோட்பாடுகளைத் தழுவி கிளாசமாடிச்சு (glossematics) எனும் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். இக்கோட்பாடு நுண்கணிதம் (calculus) போன்ற அமைப்புடையது.

இங்கிலாந்தில் என்றி சுவீட் (Henry Sweet 1845-1955) தேனியல் சோன்சு (Daniel Jones 1881) ஆகிய இருவரும் பொதுவாக ஒலியியலைப் பற்றி ஆராய்ந்தனர். குறிப்பாக ஆங்கில மொழியின் ஒலியியலைப் பற்றிப் பிரித்தும் (J.R. Firth 1880 1960) இவர்தம் ஆராய்ச்சியைத் தழுவி பிரோசாடிக்கு (prosodic) எனும் ஒலியனியல் கோட்பாட்டை ஆலிடே (M.A.K. Hallady) என்பாரும் இந்நாளில் விரிவாக விளக்கி வருகின்றனர். மூலப்பொருள் (Substance) வடிவம் (form) சூழ்நிலை (situation) என்ற மூன்று முக்கிய நிலைகளோடு ஒலியனியல், இடம் என்பவற்றைத் தொடர்புபடுத்தி மொழி ஆய்வு செய்வதே ஆலிடேயின் ஆய்வு முறையாகும்.

புளூம்பீல்டு (Bloomfield) அறிவியல் கண்ணோட்டத்தில் மொழியியலை உலகுக்கு அறிமுகப்படுத்தினார் இவர்தாம் துணைநிலை வழக்கு அல்லது துணைநிலைக் கொள்கை (Complementary distribution) என்பதனையும் வேற்றுநிலை வழக்கு அல்லது வேற்றுநிலைக் கொள்கை (Constrastive distribution) என்பதனையும் மொழியியல் ஆய்வில் அறிமுகப்படுத்தியவர். போயஸ் (Boas), சப்பீர் (Sapir) என்போர் மானுட இயலில் (Anthropology) ஆர்வங்கொண்ட அறிஞராயிருந்தும் மொழியியல் ஆய்வில் ஈடுபாடு கொண்டு மொழியை மனிதப் பண்பாட்டோடு இணைத்து ஆய்ந்தனர். இம்மூவர் வழியையும் பின்பற்றி H.A. கிளீசன் என்பார் An Introduction to discriptive Linguistics எனும் நூலையும் C.F. ஆக்கெட் A Course in Modern Linguistics எனும் நூலையும், Z.S. ஆரிசு என்பார், Methods in Structural Linguistics எனும் நூலையும், கென்னது L. பைக்கு என்பார் Phonetics எனும் நூலையும் Phonemics எனும் நூலையும் யூகேன் A. நைடா என்பவர் Morphology எனும் நூலையும் எழுதி மொழியியல் ஆய்வினை வளரச் செய்துள்ளனர்.

மோரிசுவாதேசு (Morris Swadesh 1809) என்பார் சொற்புள்ளியியல் (Lexico Statistics) அல்லது *கிளாட்டோ கிரோனாலஜி* (Glatto chronology)என்ற பெயரில் சொற்களின் வாழ்வை அறுதியிட வரலாற்று மொழியியலில் ஒரு புதிய முறையினைக் கண்டுள்ளார். K.L. பைக்கு டாக்மீமிக்ஸ் (tagmemics) என்ற பெயரில் மனிதப் பண்பாடுகளையும், மொழிகளையும் ஆராயப் பயன்படும் வழிமுறைக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார்.

அண்மையில் மாற்றிலக்கணக் கோட்பாடு (transformational generative Grammar) எனும் புரட்சிகரமான மொழியியல் கோட்பாட்டை நோம்சாம்சுகி (Noam Chomsky) என்பார் உருவாக்கியுள்ளார்.

## ஒலியியல் (Phonetics)

ஒலியியல் என்பது பேச்சொலியை ஆராயும் ஒரு அறிவியல் துறை. பேசும்பொழுது ஒவ்வொரு மொழியிலும் அதற்குரிய பற்பல ஒலிகள் தோன்றுகின்றன. அவ்வொலிகளே அம்மொழியின் பேச்சொலிகளாகும். அவ்வாறு பேசுவதை ஒலிமுறை தவறாமல் எழுதிக்காட்டும் கலையே ஒலியியல் (Phonetics) எனப்படும். பெரும்பான்மையான மொழிகளில் எழுதும்முறை (writing) பேசும்முறையோடு (speech or pronounciation) ஒத்திருப்பதில்லை. அதற்குச் சான்றாக விளங்குவது ஆங்கில மொழியாம். தமிழ் அத்தகையதொன்றே. மொழியின் ஒலியன்களை வகை செய்து அதன் அடிப்படையில் எழுதும்முறை அமைந்திருந்தால்தான் எழுதும்முறையோடு பேசும்முறை ஒத்திருக்கும். பொதுவாகப் பேச்சு வழக்கில் நீண்டகால வரலாறுடைய மொழிகளுக்கு இவ்வியல்பு அமைவதில்லை. உலகின் பெரும்பான்மையான மொழிகள் இத்தகையனவே.

ஒலியை ஆராயும் முறையில் மூன்று முறைகள் குறிப்பிடத்தக்கன.

1. பௌதீக ஒலியியல் (acoustic phonetics)
2. கேட்பொலியியல் (auditory phonetics)
3. உச்சரிப்பு ஒலியியல் (articulatory phonetics)

பௌதீக ஒலியியல் பேச்சொலியின் பௌதீகத் தன்மையை (Physical Properties) ஒலியுறுப்புகளின் அசைவுகளால் காற்றணுக்களில் உண்டாகும் அதிர்ச்சிகளையும் அவை ஒலியலைகளாக வரும் தன்மையையும் அளந்து கணக்கிடும் ஆய்வினைக் கொண்டு விளங்குகின்றது. கேட்பொலியியல் மனிதனுடைய கேட்கும் தன்மையை ஆராய்வதாகும். உச்சரிப்பொலியியல் மனிதனுடைய உச்சரிப்பு ஒலியுறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு, அவ்வுறுப்புக்களின் அசைவுகளால் எழும் ஒலியின் பிறப்பை ஆராய்வதாகும்.

### ஒலியுறுப்புகளும் அவற்றின் தொழிலும்

மனிதனுடைய ஒலியுறுப்புகள் அனைத்தும் ஒலிகளை எழுப்புவதற்கென்றே அமைந்தவையல்ல. உண்பதற்கும் (உதடு, பல், நா) மூச்சு விடுவதற்கும் (நுரையீரல்) பயன்படுபவை. இவ்வுறுப்புக்களின் தொழில்களில் சிலவற்றை மட்டுமே கண்ணால் காண முடியும். பிறவற்றை எக்ஸ்ரே கருவியின் மூலமும் லாரிங்காஸ்கோப் மூலமுமே கண்டுணர முடியும். இவ்வொலியுறுப்புகள் பற்றிய முழு விளக்கத்தையும் அவ்வுறுப்புகளின் வரைபடத்தையும் இக்கால மொழியியல் (ஆசிரியர். டாக்டர் முத்துச்சண்முகன்) எனும் நூலில் (பக்கங்கள் 34 - 33இல்) விரிவாகக் கண்டு கொள்க.

## மெய்யொலிகள் (Contoids or Consonants)

ஒலியுறுப்புகளை, 1. ஒலிப்பான் (articulator) என்றும் 2. ஒலிப்பு முனை (point of articulation) என்றும் இருவகையாகக் பிரிக்கலாம். ஒலிப்பானும் ஒலிப்புமுனையும் பொருந்துவதை ஒலிப்பிடம் (position of articulation) என்பர். மெய்யொலிகளின் பிறப்பை விளக்குவதற்கு ஒலிப்புமுறை (manner of articulation) என்பதையும் கூறி விளக்குவர். அடைப்பொலி (stop), உரசொலி (fricative), மூக்கொலி (nasal), மருங்கொலி (lateral), ஆடொலி (trill) என ஒலிப்பு முறையைப் பின்பற்றி ஒலிகளைப் பிரிப்பர். நுனி நாக்கு, இடை நாக்கு, கடை நாக்கு என்பவற்றோடு, கீழிதழையும் சேர்த்து ஒலிப்பான் (articulators) என வாயின் அடிப்பாக உறுப்புகளை ஒலியுறுப்புகளாகக் குறிப்பிடுகின்றனர். ஒலிப்பான் சென்று வாயின் மேற்பகுதியிலுள்ள ஒலிப்பு முனையைத் தொடலாம். இவ்வாறு ஒலிப்பு முறையைப் பலவகையில் நுணுகிக் காண்கின்றபோதுதான் பேச்சொலிகளை உயிர் (Vowel or Vocids) எனவும், மெய் (Consonant or Contoids) எனவும் பிரித்தல் கூடும். நுரையீர ருந்து வெளிவரும் காற்று மற்ற ஒலி யுறுப்புகளால் எத்தகைய தடையுமின்றி வெளிவரும் பொழுது எழும் ஒலிகள் உயிரொலிகள் (Vowels). ஒலி யுறுப்புக்களால் சிறிதளவு தடையேனும் ஏற்பட்டாலும் ஒலியுறுப்புக்கள் அதிர்ந்தாலும், அல்லது வெளிவரும் காற்றை அதிரச் செய்தாலும் அதன் விளைவாகப் பிறக்கும் ஒலிகள் மெய்யொலிகள் (Consonants).

## உயிரொலிகள் (Vocids or Vowels)

உயிரொலிகள் உச்சரிப்பில் 1. உதடுகளின் வடிவம், 2. நா அண்ணத்தை நோக்கிச் செல்லும் உயரம், 3. முன்னோக்கிச் செல்லும் அளவு ஆகிய மூன்று ஒலியுறுப்புக்களின் தொழில்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. இவையன்றி, 4. மூக்கறை வாயிலைத் திறந்தோ அடைத்தோ வைத்துக் கொள்வதாலும், 5. நாவின் விறைப்பாலும் (tenseness) 6. வளைவாலும் உயிரொலிகளின் உச்சரிப்புத்தன்மை வடிவு கொள்கிறது.

உதடுகள் குவிந்தெழும் உயிர்களை இதழ்குவி உயிர் (Rounded Vowels) என்றும் உதடுகள் விரிந்தோ அல்லது இயற்கையாகவோ இருக்க எழும் உயிர்களை இதழ்குவியா உயிர் அல்லது இதழ் விரி உயிர் ( Unrounded Vowels) என்றும் பெயரிட்டு வழங்குவர்.

டேனியல் ஜான்ஸ் ( Daniel Jones) என்பவர் உயிரெழுத்துக்களின் பிறப்பிடங்களை எட்டு அடிப்படை உயிர்களை ( cardinal vowels) ஆதாரமாகக் கொண்டு விளக்கினார். (இதுபற்றிய விளக்கமும் வரைபடமும் *இக்கால மொழியியல்* பக்கம் 48-49இல் காண்க) இவ்வடிப்படை உயிர்களை ( cardinal vowels) ஆதாரமாகக் கொண்டு ஒவ்வொரு மொழியிலும் உள்ள ஒலிகளை வரையறை செய்தல் இன்று மொழியியலில் காணும் மரபு, உயிரெழுத்துக்களை முன் (Front), பின்( Back), நடு ( Central) என்ற அமைப்பிலும், மேல் ( High), இடை( Middle), கீழ் ( Low) என்ற வேறொரு அமைப்பிலும் இனங்காண்பது இன்றைய மொழியியலில் ஒரு மரபாகும். இவையன்றி, உயிர்களின் உச்சரிப்பின்போது விறைப்பாக ( tense)வும், நெகிழ்வாக ( lax) வும் உதடு, நா முதலிய ஒலியுறுப்புக்கள் செயல்படுவதை ஒட்டி உயிர் ஒலிகளின் ஒலிப்பை வகை செய்வதும் உண்டு. எடுத்துக்காட்டாக உயிர் உச்சரிப்பில் தமிழில் உள்ள நெடில் உயிர்கள் விறைப்புடையன. குறில் உயிர்கள் நெகிழ்ச்சியுடையன. எந்த உயிரொலியையும் வாயொலியாகவும் ( Orals), மூக்கொலியாகவும் ( Nasals), உச்சரிக்கலாம். எடுத்துக்காட்டாக, தமிழ் மொழியில் ம், ன், என்ற மெல்லின எழுத்துக்களில் முடியும் சொற்களை இன்று மெல்லின மெய்களாக உச்சரிப்பதில்லை. அவற்றைச் சொல்லீற்றில் மூக்குயிர்களாகவே உச்சரிக்கிறோம். மரம், வந்தான் ( maram, vantan) போல்வன உச்சரிக்கும்போது இறுதி மகரமும், னகரமும் முழுமையாக ஒலிக்கப்படாமல் அவற்றுக்கு முன்னே உள்ள உயிர்கள் இம்மூக்கொலிச்சாயலைப் ( maro vanta) பெற்றுவிடுகின்றன. சாதாரணமாக உயிர்களை உச்சரிக்கும்போது அவை காற்றுக்குழலின் ஒலித்தசைகள் அதிர்வு பெற ஒலிப்பு ( voiced) உடையனவாக விளங்குகின்றன. ஒலிகளை உச்சரிக்கும்போது ஒவ்வொன்றையும் ஒலித்து நிறுத்தி அடுத்த ஒலியைத் தொடங்குவதில்லை. ஒன்றன் முடிவில் அடுத்தது தோன்றி ஒலித்து, அதற்கு அடுத்த ஒலியில் கலக்கிறது. இவ்வாறு ஒலிக்கும் போது சில ஒலிகளை உச்சரிக்கும் நேரம் குறுகியும் ( short), சிலவற்றின் நேரம் நீண்டும் ( long) அமைகின்றன. இவ்வொலிப்பு நேரத்தைத் தமிழிலக்கண ஆசிரியர்கள் கண் இமைப்பையும், கை நொடிப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு மாத்திரை, இரு மாத்திரை எனக் கணக்கிட்டுள்ளனர். இதனை இந்நாளைய மொழியியலாரும் தழுவிக் கொண்டுள்ளனர். இலக்கண ஆசிரியர்கள் தமிழிலுள்ள உயிர்களில் அ, இ, உ, எ, ஒ எனும் ஐந்தினைக் குறிலென்றும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகியவற்றை நெடிலென்றும் வகுத்துள்ள அடிப்படை மொழியியல் விஞ்ஞானத்தின் அடிப்படையிலே அமைந்ததாகும். தமிழில் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்பன முழுவதும் தனி நெடில் உயிர்களாக விளங்க ஐ, ஔ எனும் உயிர்களை அ(ய்)இ, அ(ய்)உ எனக் கூட்டொலியாக உச்சரிப்பதன் அடிப்படையில் நெடிலாகக் கொள்வர் தமிழ் இலக்கண ஆசிரியர்.

## மொழி இயலார் பேச்சொலிகளைப் ( Speech Sounds) பகுத்துக் காணும் நெறி

மொழி இயலார் பொதுவாக ஒலிகளைத் தடையொலி (stop) எனவும், நெகிழ்வொலி ( resonant) எனவும் பகுப்பர். க், ச், ட், த், ப் என்பன தடையொலி, பிறவெல்லாம் நெகிழ்வொலி எனப்படும்.

## ஒலிப்பு முறை பற்றிய பாகுபாடு ( Manner of Articulation)

### தடையொலி அல்லது அடைப்பொலி ( Stop)

குரல்நார்கள் இறுகப் பொருந்தக் காற்றுத் தடையேற்படுவதால் உண்டாகும் ஒலி தடையொலி அல்லது அடைப்பொலியாகும். க், த், ப் முதலியன இவ்வகையைச் சேர்ந்தனவாகும்.

### உரசொலி ( Fricative)

காற்று வெளிப்படுவதில் ஒலி உறுப்புக்கள் மிகச் சிறிய தடையை ஏற்படுத்தி ஒருவகை எதிர்ப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துவதால் பிறக்கும் ஒலி உரசொலி எனப்படும். ஸ், ஷ். எப் ( F) போன்றவை உரசொலி வகையாகும்.

### மூக்கொலி ( Nasal)

காற்று, மூக்கு வழியே வெளிப்படும் பொழுது உண்டாகும் ஒலி மூக்கொலியாகும். இது உயிரொலிகளைப் போன்று நெகிழ்வுத்தன்மை உடையது. வெடிப்புத்தன்மை இல்லாதது. *ங், ஞ், ண், ந், ம், ன்* இத்தகையனவாகும்.

### உரப்பொலி ( Trill)

வெளிவரும் காற்றால் நாக்கு வேகமாக அசைக்கப்படும்போது உண்டாகும் ஒலி உரப்பொலியாகும். தமிழில் உள்ள *ற்* இத்தன்மையது.

### மருங்கொலி அல்லது பிரிவளி ஒலி ( Lateral)

காற்று இடையில் தடைப்பட்டு இருமருங்கும் பிரிந்து செல்லும் இயல்புடைய ஒலியாதலால் இது ***பிரிவளி ஒலி அல்லது மருங்கொலி*** எனப்பெயர் பெற்றது. *ல், ள்* என்பன இதற்கு உதாரணங்களாகும்.

### வருடொலி ( Flap)

ஒரே முறை நா மடிந்து மேற்பகுதியை வருடக்காற்றுப் பிரிந்து இவ்வொலி பிறக்கிறது. *ர்* இத்தகையதாகும்.

## உறுப்பும் இடமும பற்றிய அமைப்பு வழிப் பாகுபாடு ( Modification of articulator and position of articulation)

### பின் அண்ண ஒலி ( Velar Sound)

பின் அண்ணப் பகுதியில், நாவின் பின்பகுதி பொருந்துவதால் பின் அண்ண ஒலி பிறக்கிறது. *க், ங்* என்பவை இவ்வகைக்குச் சான்றாகும்.

### இடையண்ண ஒலி ( Palatals)

நாவின் இடைப்பகுதி, நாவின் பின்பகுதி பொருந்துவதால் இடையண்ண ஒலி பிறக்கும். *ய்* அத்தகையது.

## நாமடி ஒலி அல்லது வளை நா ஒலி ( Retroflex)

நா மடிந்து, நா நுனியின் பிற்பகுதி அண்ணத்தைப் பொருந்துவதால் பிறக்கின்றது. *ட், ண்* அத்தகையன. இவ்வகை ஒலிகள் ஆங்கில மொழியில் இல்லை.

## அண்பல்லொலி ( Alveolar)

அண்பல்லை நா நுனி சென்று பொருந்தப் பிறக்கிறது. *ன், ல்* அத்தகையன.

## பல்லின ஒலி ( Dental)

மேற்பல்லில் நாநுனி பரந்து ஒற்ற இவ்வொலி பிறக்கிறது. *த், ந்* என்பன இவ்வகையைச் சார்ந்தன.

## பல்லிதழ் இனம் ( Labio Dental)

கீழ் இதழ் மேற்பல்லில் பொருந்தப் பிறப்பது பல்லிதழ் இனம், *வ்* அத்தகையதாகும்.

## இதழ் ஒலி ( Bilabial)

இரண்டு இதழ்களும் பொருந்தப் பிறக்கிறது. *ப், ம்* என்பன இத்தகையன.

## ஒலித்தன்மை பற்றிய பாகுபாடு ( Vibration of the vocal cords)

ஒலித்தன்மை பற்றி, ஒலிப்புடை ஒலி (Voiced sound) ஒலிப்பில் ஒலி (Voiceless sound) என்று வகுப்பர். *ப்* (p), *த்* (t), *ச்* (c), *ட்* (t), *க்* (k), *ப்* (f), *ஸ், ஷ்* போன்றவை ஒலிப்பில் ஒலிகள். *ப்* (b), *த்* (dh), *ஜ்* (j), *க* (g), *ங், ஞ், ண், ந், ம், ன்* போன்றவை ஒலிப்புடை ஒலிகள்.

இவ்வாறு மொழி நூலார் எந்த ஒலியையும் அதன் ஒலித்தன்மை (manner of vocal cords vibration), அமைப்பு (modification, உரசொலி, மூக்கொலி, தடையொலி என்பன) வகை (classification, நா, இதழ் பொருந்தும் வகை பற்றியன) என்ற மூன்று நிலைகளில் ஆராய்வர்.

# ஒலியனியல் ( Phonemics)

## ஒலியனியல் - அதன் நோக்கம் (Phonemics and its goal)

ஒலி உறுப்புக்களின் செயல் முறையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஒலியையும் விளக்கி, அதற்கென ஒரு குறியீடும் அமைத்திடல் ஒலியனியலின் நோக்கமாகும். ஒரு மொழியிலுள்ள எல்லா ஒலிகளும் வரிவடிவம் பெறுவது குழப்பத்தை விளைவிக்கும். எனவே அம்மொழியின் அடிப்படைப் பேச்சொலிகளைக் கண்டறிந்து அவற்றுக்கு வரிவடிவம் கொடுப்பதையே ஒலியனியல் வற்புறுத்துகிறது. வரிவடிவம் பெறாது பேச்சு மொழியாகவே வழக்கிலிருக்கும் பல்வேறு உலகப் பழங்குடி மக்களின் மொழிகளும் இன்று வரிவடிவம் பெறுதற்கு விஞ்ஞான முறையில் அமைந்த இவ்வொலியனியல் அணுகுமுறை உதவியாகவுள்ளது.

## தாய்மொழியாளர் தம் இயல்பான மொழி உணர்வு

ஒவ்வொரு மனிதனும் இயற்கையாகவே தன் தாய்மொழியின் அடிப்படைப் பேச்சொலியன்களை உணர்ந்திருக்கின்றான். வெவ்வேறு சொற்களைத் தன் தாய்மொழியில் வேறுபடுத்திக்காட்டும் ஒலிக்கூறுகளை இயல்பாகவே அவன் உணர்ந்திருக்கிறான். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கு அடி, ஆடி என்னும் சொற்கள் வேறுவேறு பொருள் கொண்டவை எனவும் அவ்வேறுபாட்டுக்குக் காரணமாக ஒலிவடிவில் அமைந்திருப்பது மொழி முதல் உயிரை நீட்டியும் குறுக்கியும் ஒலிக்கும் தன்மையே என்பதும் தெரிந்ததொரு உள்ளார்ந்த உணர்வுவழிச் செய்தியாகும். ஆனால் தமிழ் கற்கத் தொடங்கும் ஆங்கிலேயர் போன்ற பிறமொழியாளர்

இந்நுட்பமான குறில் நெடில் வேறுபாட்டைத் தொடக்கத்தில் உணரமாட்டாது, பிழைபட இவ்விரு சொற்களை (அடி, ஆடி) உச்சரிப்பதைக் காணலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் இவ்வகைக் குறில் நெடில் பிழையை, உச்சரிப்பில் செய்தல் இல்லை. இதுபோலவே வல்லின ஒலிகள் என்று இலக்கண நூலார் அழைக்கும் ஆறு ஒலிகளும் க, ச, த, ப எனும் நான்கு மெய்ஒலிகளும் தமிழ்ச் சொற்களில் பொதுவாகத் தமிழரால் கீழ்க்கண்டவாறு ஒலிக்கப் பெறுகின்றன.

**க், ச், த், ப் :** 1. மொழி முதலிலும் மொழியிடையிலும் *இரட்டித்தும்* நகரத்திற்கு முன் வரும்போதும் [K] [C] [t] [p] என முறையே ஒலிக்கப்படுகிறது.

(எ-டு) *காலை, அக்கா, கற்பு, சட்டி, பச்சை, பயிற்சி, தலை, பத்து, பசி, அப்பம், அற்பம்.*

**க், ச், த், ப் :** 2. மொழியிடையில் தனித்து இரு உயிர்களுக்கிடையே வரும்போது [g] அல்லது [h] [-s-] [-d-] [b] என முறையே ஒலிக்கின்றன.

(எ-டு) *நகம்* (naham *அல்லது* nagam), *விசிறி, காதல், மதுரை, உருபொலி*

**க், ச், த், ப் :** 3. மொழியிடையில் மெல்லின ஒலி அல்லது மூக்கின் ஒலியினை அடுத்து வரும்போது [g] [j] [d] [b] என முறையே ஒலிக்கப்படுகிறது.

(எ-டு) *தங்கம், பஞ்சம், பந்து, அம்பு, அன்பு*

மேலே கூறியவாறு, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் க், ச், த், ப் எனும நான்கு மெய் எழுத்துக்களுக்குரிய ஒலிகள் அனைத்தையும், அவை வரும் இடச்சூழல் (Environment condition) நோக்கிப் பிழைபடாமல் இயல்பாக உச்சரிப்பதைக் காணமுடியும். ஆனால் இத்தமிழ் ஒலியனியலின் இயல்பு அன்னியர் அறியாதபோது அவர்கள் தமிழ் கற்குங்கால் இடர்ப்படுகின்றனர். தமிழரும் பிறமொழிகளைக் கற்கும் போது இத்தகைய ஒலியனியல் மரபுகள் பிற மொழிகளிலிருப்பதை உணர்ந்து உச்சரித்துப் பயிற்சி பெறும்வரை இடர்ப்படுவது உண்டு. இவை தவிர்க்க முடியாத இடர்ப்பாடுகள். இவை மொழியின் குறையன்று. மொழி கற்போரின் குறையுமன்று.

## மொழியியலார் ஒலியன்களைப் பகுத்துக்காண உதவும் நெறிகள் அல்லது கொள்கைகள்(Identification of Phonemes)

நான்கு வகை நெறிகள் அல்லது கொள்கைகள் ஒரு மொழியின் ஒலியன்களைப் பிரித்துக்காண உதவுகின்றன. அவை வருமாறு:

### 1. அ. வேற்றுநிலைக் கொள்கை (Principle of contrast)

தமிழ்ச்சட்டம், பட்டம், கட்டம் என்ற சொற்களைக் காண்போம். அல்லது ஆங்கிலத்தில் cat. rat. mat என்பவற்றைக் காண்போம். இவற்றிடையே காணும் பொருள் வேறுபாட்டுக்கு அவற்றின் முதல் ஒலியே காரணம். முதல் ஒலியைத் தவிர இவற்றுக்கிடையே வேறுபாடு இல்லையல்லவா? வேறுபட்ட ஓர் ஒலியால் பொருள் வேறுபடும் இந்நிலையைத்தான் வேற்றுநிலைவழக்கு அல்லது வேற்றுநிலைக் கொள்கை என்கின்றனர்.

நீண்ட ஒலித்தொடரை உறழ்ந்து பார்த்தால் ஒலியன்களை அறிவது கடினம். முற்றிலும் வேறுபட்ட ஒலியீட்டமுடைய சொற்களை உறழ்ந்து பார்த்தாலும் பயன்கிட்டாது

நீர் நிலைப்பூக்கள் காடு
கார் ஒலி முழவு முள்

என்பவற்றை உறழ்ந்து பார்க்க இயலுமா? இயலாது.

ஆகவே குறைந்த அசைகளைக் கொண்டு பெரும்பான்மை ஒற்றுமைப்பட்டு ஓர் ஒலியால் மட்டுமே வேறுபடும் இணைகளைத்தான் (minimal pair) ஒப்பிட்டுக் காணவேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆடு | மடம் | பழம் | அவன் | pin |
| ஓடு | குடம் | படம் | அவள் | Bin |

இவ்வாறு ஒப்பிடுவதால் ஒலியன் இதுதான் என்பதை அறிய முடியும் இவ்வாறு ஒரே ஒரு ஒலியன் வேறுபாட்டால் பொருள்ய வேறு பயக்கும் இணையைக் குறை ஒலி இணை (minimal pair) அல்லது உறழ்வு இணை என்பர்.

**1. ஆ) துணை நிலைக் கொள்கை (principle of Complementation)**

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஒலிகளில் ஒன்று வரும் சூழ்நிலைகளில் மற்றையது வராமல் நிற்குமெனில், அவை ஒரே ஒலியனின் மாற்றொலிகள் என்றாகுமாயின் அச் சூழ்நிலையைத் துணை நிலை வழக்கு என்போம்.

கடல், அகம், தங்கம் இவற்றில் k. h. g எனற மூன்று ஒலிகளைச் செவியுறுகிறோம். ஆனால் வரிவடிவம் ஒன்றே, அது எப்படி இயன்றது? ஒவ்வொரு க வும் ஒவ்வொரு வகையான வேறுபட்ட சூழலில் வருவதைக் காண்கிறோம். இவை ஒரே சூழ்நிலையில வைத்து வேற்றுநிலை வழக்கை (contrastive distribution) உருவாக்காமல், துணை நிலை வழக்காக (complementary distribution) வந்து நிற்கும். இவ்வொலிகள் ஒரு குழுவாக(class) இயங்கும். அவற்றில் ஒன்று மட்டும் ஒலியின் நிலை பெறும். K. என்பதன் மாற்றொலிகள் (allophones) k. g. h என்பன, மாற்றொலிகட்குச் சூழ்நிலை (condition for the allophone distribution_) கூறும் போது எப்போதும் ஒலியன்களால் ஆகிய சூழ்நிலையிலே (phonemic environment) கூற வேண்டும். உருபன்களால் ஆகிய சூழ்நிலை (morphemic environment) கூறலாகாது. ஒலி ஒற்றுமை உடையவற்றையே ஓர் ஒலியனின் மாற்றொலிகளாகக் கருத இடமுண்டு.

**1. (இ) ஒலியின் உறழ்ச்சி அல்லது ஊசலாட்டம் (phonemic free variation)**

மகன், மவன் என்ற சொற்கள் குறையொலி இணை (minimalpair) போல் அமைந்தாலும் அவை வேற்று நிலை வழக்கில் (contrast) இல்லை. ஏனெனில், பொருள் வேறுபடவில்லை. மரம்-மரன், குளம்-குளன், அகம்-அகன், பங்கயம்-பங்கசம், இவற்றில் இரு-வேறு ஒலியன்கள் உறழ்ந்தன. இவ்விணைகளில் பொருள் வேறுபாடு இல்லை.

வட்டி என்பதை Waddi என்றும், திட்டம் என்பதை Thiddam என்றும் உறழ்ந்து ஒலிக்கக்கூடும். இவை மாற்றொலி உறழ்ச்சி (allophonic free variation) எனப்படும்.

**2. ஒலி ஒற்றுமை (Phonetic similarity)**

ஒலி ஒற்றுமையுடைய (Phonetic similarity) ஒலிகளையே ஓர் ஒலியனின் (Phoneme) மாற்றொலிகளாகக் (allophones) கருதுகிறோம். ஒலி ஒற்றுமை என்பது மொழிக்கு மொழி மாறுவதுண்டு. எடுத்துக்காட்டாகத் தமிழில் மூக்கொலியையும், உரசொலியையும் (ம கரமும்,ச கரமும்) ஒலி ஒற்றுமையுடையன (Phonetic similarity) என்று கருதுவதில்லை. ஆனால் ஒலிப்புடைய ஒலிகளையும்(voiced allophones) அதனதன் ஒலிப்பிலா ஒலிகளையும் (voiceless allophones)ஒலி ஒற்றுமையுடையன (phonetic similarity) என்று கருதுகிறோம். எடுத்துக்காட்டாகத் தமிழில் வரும் மொழி முதல் ஒலி க கர ஒலியும் (K) மொழியிடை மூக்கின மெய் கரத்திற்கு அடுத்து வரும் ஒலிப்புடைய க கரமும் (g) ஒலி ஒற்றுமையுடையன எனக் கருதுகின்றோம். இவை இரண்டும் துணை நிலை வழக்கில் (complementary distribution) தமிழில் வருவதனால் ஒரே ஒலியன் (Phoneme) க கரத்தின் ( மாற்றொலி யன்களாக (K) (g) (allophones) கருதுகின்றோம். எனவே இவை இரண்டிற்கும் தனித்தனி எழுத்து, தமிழில் வழங்கப்பெறுதல் இல்லை. ஒத்த ஒலிகளான மாற்றொலிகளை ஒரு குழுவாகச் சேர்த்து (class) ஓர் ஒலியனை அமைக்கும் முறையும் உச்சரிப்புச் சூழ்நிலையில் (Phonological condition) ஒலிகள் மாறுகின்றன என்ற கொள்கையை ஓரளவு அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒலியன்களைப் பகுத்துக் கண்டுணர உதவும் கொள்கைகளில் இவ்வொலி ஒற்றுமைக் கொள்கையை (Phonetic similarity) இரண்டாவதாக மொழியியலார் வலியுறுத்துகின்றனர்.

**அழகமைப்பு (Neatness of Pattern)**

அஆ, உ, ஊ, ஒ, ஓ என குறில் நெடிலாக ஒலித்துப் பார்க்கிறோம்.

க, ங; ச, ஞ; ப, ம என்று வலியும், மெலியுமாக எழுதிப் பார்க்கிறோம். இவையெலலாம் சீரமைப்புக்களாக அமைத்துக் கொண்டவை ஒலியன்களைப் பாகுபடுத்த இது போன்ற சீரமைப்பு முறையை மனத்தில் கருதி முயலலாம்.

## 4. சிக்கனக் கொள்கை (Priniple of Economy)

இது தெளிவற்ற கோட்பாடு. ஒரு மொழியிலுள்ள ஒலியன்களை இருவகையாகப் பகுக்கும்போது ஒரு முறையில் 26 ஒலிகளும் மற்றொரு முறையில் 23 ஒலிகளும் வருவதானால் 23 ஒலிகளை ஏற்றுக் கொள்வதைச் சிக்கன நெறிக் கொள்கை என்பர்.

## உருபனியல் (Morphology)

கீழிருந்து மேல் நோக்கி மொழியை ஆராய்ந்து அதன் இலக்கண அமைதியை விளக்குவது ஒரு முறை, இது ஒலியனியலில் (Phonology) தொடங்கித் தொடரனியலில் (Syntax) முடியும். மற்றொரு முறையில் மேலிருந்து கீழ்நோக்கி மொழியை ஆராய்கின்றனர். இவர்கள் தொடரனியலில் தொடங்கி உருபொலியனில் (morpho phonemics) முடிக்கின்றனர்.

கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் நிலையில் முதல் நிலை ஒலியனியல் இதில், மொழிக்கு இன்றியமையா அடிப்படைக் கூறுகளாகிய ஒலியன்களைக் கண்டு அவ்வொலியன்களின் மாற்றொலிகள், அவை வருகின்ற முறை, அவைகளை ஆராய்கின்ற முறை இவைகளைக் கண்டோம். இதற்கு அடுத்த நிலை, மொழியின் இலக்கணத்தை உருபனியல் (morphology). தொடரனியல் (syntax) என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து விளக்குவது மரபு. இவற்றை மேலும் சில பிரிவுகளாகப் பிரிப்பாரும் உளர். சிலர் ஒலியனியலுக்கும் உருபனியலுக்கும் இடையே இரண்டையும் இணைக்கும் உருபொலியனில் (morpho phonemics) (இலக்கண ஆசிரியர் கூறும் *புணர்ச்சி*) ஒன்றை வகுத்துப் பேசுவர். இதைப் போன்று உருபனியலுக்கும், தொடரனியலுக்கும் இடையேயும் ஒரு நிலையைக் கருதுவாரும் உளர். இப்போது உருபனியல் பற்றி இங்குக் காண்போம்.

## உருபன்களைக் கண்டறிதல்

## தனி உருபன் (Free morpheme) கட்டு உருபன் (Bound morpheme)

1. கொய்தேன்
2. கொய்கிறேன்
3. கொய்வேன்
4. கொய்தோம்
5. கொய்தாய்
6. கொய்தீர்
7. கொய்

மேலே உள்ள ஏழு சொற்களையும் ஊன்றி ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். 1,2,3 சொற்களையும் 4ஆம் சொல்லையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவற்றின் விகுதிகளில் 1,2,3-ஏன் என்றும் 4ஓம் என்றும் விகுதி வடிவங்கள் வேறுபட்டு நிற்பதைக் காணலாம். ***ஏன்*** என்பது ஒருமைப் பொருள் சுட்டும் உருபன் - ***ஓம்*** என்பது பன்மைப் பொருள் சுட்டும் உருபன் எனப் பிரித்துக் கண்டறிய முடியும். ஆனால் ஏன் என்பதோடு 5ஆம் சொல்லில் வரும். ***ஆய்*** என்பதைக் காணும் போது - ***ஆய்*** என்பதும் ஒருமைப் பொருள் சுட்டுவதை உணரலாம். 5ஆம் சொல்லில் வரும் ***ஆய்***விகுதியாகிய உருபனோடு 6ஆம் சொல்லின் - ***ஈர்***விகுதியின் பொருள் வேறுபட்டு நிற்கிறது; ஈர் என்பதும் பன்மைப் பொருளைச் சுட்டுகிறது; 7ஆம் சொல் தனி உருபனாகத் துலங்குகிறது. ***ஏன், ஓம், ஆய், ஈர்*** என்பன போன்ற வெவ்வேறு விகுதி அதில் இல்லை. எனவே, விகுதிகள் நீங்கிய கொய் என்ற வடிவம் ***பறித்தல்*** என்னும் வினைப் பொருள் தருவதை ஏழு சொற்களையும் அடுக்கி வைத்துத் தொகுத்துப் பார்க்கும் அதன் ஒரே வடிவ வாய்ப்பாட்டால் (paradigm) புலனாகின்றது. எனவே ***கொய்*** என்பது பறி என்னும் ஒரு வினைப் பொருளைச் சுட்டும் தனி உருபனாம். உண்மையில் ஊன்றி நோக்கினால் விகுதி உருபன்கள் (suffix morphemes) ***ஏன், ஓம், ஆய், ஈர்*** என்பன முறையே தன்மை ஒருமைப் பொருளையும், தன்மைப் பன்மைப்பொருளையும், முன்னிலை ஒருமைப் பொருளையும், முன்னிலைப் பன்மைப் பொருளையும் சுட்டுகின்ற வேற்றுநிலை வழக்கில் (contrastive distribution) வரும் தனித்தனி உருபன்களாகும் (morphemes).

| | | | |
|---|---|---|---|
| மரம் | தாய் | அண்ணன் | மரங்கள் |
| செடி | தங்கைமார் | அண்ணன்மார் | செடிகள் |
| கொடி | தம்பி | தம்பிமார் | கொடிகள் |

மேலே கண்ட சொற்களின் தொகுதியின் ஒரே உருவத்திலும் ஒரே பொருளிலும் மீண்டும் மீண்டும் வருவனவாக உள்ளவற்றை வகைப்படுத்திப் பிரித்துப் பார்த்தலே உருபன்களைக் கண்டறிதற்குரிய முதல் படிநிலையாகும். அங்ஙனம் வகைப்படுத்தும்போது மரங்கள், செடிகள், கொடிகள் என்ற சொற்களில் கள் என்ற வடிவம் மீண்டும் மீண்டும் விகுதியாக வருகிறது. இதுபோலவே அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார் என்ற சொற்களில் - மார் என்ற வடிவம் மீண்டும் மீண்டும் விகுதியாக வருகிறது. இவ்வாறு இவ்விரண்டு வடிவங்கள் வருகின்ற எல்லா இடங்களிலும் பன்மைப் பொருள் ஒன்றையே இவை சுட்டுகின்றன. ஒரு பொருளையே சுட்டும் இவ்விரு உருபுகளும் (morphs / allomorph) ஒரு குழுவைச் சார்ந்த (a class) ஓர் உருபன் (morpheme) என்பதைக் கண்டறிகின்றோம். பன்மைப் பொருள் நீக்கியபின் மீண்டும் மீண்டும் வரும் ஒரே வடிவமான மரம், செடி, கொடி, அண்ணன், தம்பி, தங்கை ஆகிய இவற்றோடு பன்மைப் பொருள் வராமல், ஒருமைப் பொருளோடு வரும் தாய் என்பதும் சேர்த்துத் தனித்துப் பொருள் உடைய வடிவங்களாக இவை விளங்குவதால் தனித்தனி உருபன்களாகக் (morpheme) கொள்ளப்படுகின்றன.

இங்கு - மார், -கள், என்ற பன்மைப் பொருளைச் சுட்டும் உருபுகள் எப்போதும் ஒருமைப் பொருளைச் சுட்டும் ஓர் உருபனுக்குப் பின் ஒட்டியே வருகின்றன. தனித்து வருதல் இல்லை. எனவே இத்தகைய தனித்து வாரா உருபன்களைக் கட்டுருபன் (bound - morpheme) என்பர். எப்போதும் தனித்து வரும் நிலையைப் பெற்றும், மேலும் பகுத்துப் பொருள் காண முடியாததும் கட்டுருபன்களோடு சேர்ந்து வருவதற்கு இடமளித்தும் செயல்படுகின்ற உருபன்களைத் தனி உருபன்கள் (free - morphemes) என்பர். மரம், செடி, கொடி, அண்ணன், தம்பி, தங்கை, தாய் போல்வன தனி உருபன்களாகும்.

### உருபு (morph) மாற்றுருபு (allomorph) - உருபன் (morpheme) உருபொலியனியல் (morpho - phonemics)

ஒலியனியலில் பின்பற்றிய முறைகளையே உருபன்களைக் (morphemes) கண்டறிவதற்கும் பயன்படுத்துகிறோம். உருபுகள் (morphs) துணைநிலை வழக்கில் வருகின்றனவா வேற்று நிலை வழக்கில் வருகின்றனவா என முதலில் ஆராய்வோம். பின்னர்த் துணை நிலை வழக்கில் வரும் உருபுகளை முதலில் ஆராய்வோம். பின்னர்த் துணை நிலை வழக்கில் வரும் உருபுகளை (morphs) ஒரு குழுவாகத் (a class of morphs) தொகுத்து ஒரே உருபன் (morphemes) என வரையறுக்கின்றோம். வேற்று நிலை வழக்கில் வரும் உருபுகளை (morphs) வெவ்வேறான உருபன்கள் (morphemes) என முடிவு செய்கின்றோம். ஒலியால் ஒற்றுமையுடையனவாக மாற்றொலிகள் (allophones) இருத்தல் சிறந்தது என்பது போன்ற நெறி, மாற்றுருபுகள் (allomorphs) ஒரு குழுவாகி ஒரே உருபன் என்று வரையறுப்பதற்குத் தேவை இல்லை. ஆனால் அவை துணை நிலை வழக்கில் (Complementary distribution) மட்டும் வருதல் வேண்டும் என்பது இன்றியமையாத கோட்பாடாகும். த், ட், ச் எனும் தமிழ் ஒலியன்களுக்குச் சொற்பொருளோடு நேரடியான தொடர்பு கிடையாது. ஆனால் அவற்றுக்கே பொருள் சொல்லும் நிலை இருக்குமானால் அவையே உருபன்கள் (morphemes), உருபுகள் தொகுதி (a class of morphs) ஒவ்வொன்றும் பொருளோடு நேரடியான தொடர்புடையன. விகுதிகளாக வரும் *அர், ஆர், கள்* என்பன தமிழின் எழுத்து வழக்கில் பன்மை எனும் ஒரே பொருளைச் சுட்டும் மூன்று உருபுகளாகும். (morphs) இவை ஒரே உருபனின் ஒருமித்த உருபுகளின் தொகுதி, இவை பன்மை உருபன் (morpheme) என்னும் ஒன்றன் மூன்று மாற்று உருபுகள் (allomorphs). இம்மாற்றுருபுகளிடையே ஒலி ஒற்றுமை குறைவு. எழுத்து வழக்கில் தமிழில் இறந்த காலத்தைக் காட்ட இ, இன், ந், த், ட், ண், ற் என வரும் இறந்தகாலம் காட்டும் உருபுகள் (past tense morphs) ஓர் உருபனுக்கு உண்டு. இவை இறந்த காலம் என்ற பொருளைச் சுட்டும் உருபன் ஒன்றன் மாற்று உருபுகளே.

### ஒலியன் சூழ்நிலையும் (Phonological condition) உருபன் சூழ்நிலையும் (Morphological condition)

துணை நிலை வழக்கில் வரும் மாற்றொலியன்கள் (allophones) ஒலியால் கட்டுண்டிருக்கும் (Phonological conditioned) என ஒலிச் சூழ்நிலையை முன்னே குறித்தோம். இது போலவே மாற்றுருபுகளும் ஒலியன் சூழ்நிலையாலும் (Phonological condition) அவையல்லாமல் சில போது உருபன்கள் சூழ்நிலையாலும் (Morphological condition) கட்டுண்டிருத்தல் இயல்பு. தமிழ் எழுத்து வழக்கில் *த* எனும் இறந்த கால உருபு (morph) இ, ஐ, உ, ஆகிய உயிர்களின் பின்பும் ய், ர், ன் ஆகிய மெய்களின் பின்பும் வரும். இவ்வொலியமைப்புக் கட்டுப்பாட்டு முறை (Phonological condition)யை ***அவிழ்த்தான், உடைத்தான், அறுத்தான், சாய்ந்தான், வளர்த்தான், தாழ்த்தினான்*** எனும் இறந்தகாலத் தமிழ் வினைச் சொற்களைக் கொண்டு வரையறுத்துக் காட்ட முடியும். இதுபோலவே இறந்த காலம் காட்டும் ட்

எனும் உருபு ண், ன் ஆகியவற்றின் பின் வரும் என்பதும், ஒலிக்சூழலின் கட்டுப்பாட்டைத் தமிழருக்குத் தெளிவுபடுத்தும். இதனைக் *காண், கேள்* என்ற ஏவல் வினைகள் இறந்த கால வினை முற்றுக்களாக உருவம் பெற்று வரும்போது *கண்டான், கேட்டான்* என வரும் சொற்களில் அமைந்திருக்கக் காண்கின்றோம். இறந்த காலப் பொருளைச் சுட்டும் *ற்* எனும் இறந்தகால உருபு, ன், ல் ஆகியவற்றின் பின்வரும் என்ற ஒலிச்சூழற் கட்டுப்பாட்டை (Phonological condition) ஏவல் வினையாகிய *கல்* என்ற சொல் இறந்தகால வினைமுற்றாக வரும்போது. *கற்றான்* என்று வரும் வடிவத்தில் அமைந்திருக்கக் காண்கிறோம்.

தமிழில் உள்ள *இ* என்னும் இறந்தகால உருபு *சொல்ல* எனும் வினை எச்சத்திலும் *போ* எனும் இறந்த கால வினை முற்று ஏவலிலும் அச்வெச்சமும் ஏவலும் மாறி வரும்போது மட்டும் இடம்பெறக் காண்கின்றோம். இங்கு இறந்தகால உருபு (morph) *இ*, என்பது செல், போ உருபுகள் சூழலினாலேயே (morphologically conditioned) *சொல்லி னான், போயினான்* என்னும் வடிவங் கொள்கிறது. இவ்வாறு இறந்தகால இகர உருபு வினைமுற்றில் பெறும் இடத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைவதையே உருபனின் சூழ்நிலைக் கட்டுப்பாடு (morphologically conditioned) என வழங்குவர். இங்கு ஒலியன் சூழ்நிலைக் கட்டுப்பாடு ஏதும் இவ் இ கர உருபனின் வருகைக்குக் காரணமாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு எடுத்துக்காட்டு *து* என்ற அஃறிணை ஒருமை உருபனின் (morph) முன் வருகின்ற இறந்தகாலங் காட்டும் *இன்* என்னும் உருபு *கூவிற்று* என்னும் வினைமுற்றுச் சொல்லில் வரும்போது, மேற்கண்டவாறே *து* என்று விகுதி உருபனின் (suffix morpheme) சூழ்நிலைக்கட்டுப்பாட்டினால் (morphologically conditioned) *இற்* என மாறியமைவதைக் காணலாம். *கூவு* என்ற ஏவல் வினை இன் என்ற இறந்தகால உருபினை *து* என்னும் விகுதி உருபுக்கு முன்தேர்ந்தெடுத்து உருபொலியமாற்றம் (morphophoemic change) செய்யலாம். *இற்* என மாற்றி அமைத்துக் கொண்ட நிலையை இவ்வுருபின் சூழல் கட்டுப்பாடு விளக்குகின்றது. இங்கே ஒலியன் சூழல், எவ்வகையிலும் *இன்* என்பதைத் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்ள உதவவில்லை என்பதை உணர்வோமானால் ஒலியன் சூழல் பற்றியும், உருபன் சூழல் பற்றியும் தெளிவாக விளங்கிக் கொண்டவர்களாவோம். உருபனுக்குத்தக்க உருபு அமைவதே உருபன் சூழ்நிலைக் கட்டுப்பாடு (morphological condition) என்பதால், ஒலியன் சூழலுக்கு ஏற்ப ஒலியன் அமைவதே ஒலியன் சூழல் கட்டுப்பாடு என்பதாம், எழுத்துவழக்கில் தமிழில் ஒருமைப் பொருள் சுட்டும் ஓர் உருபனின் இரு உருபுகள் (*ஓர், ஒரு*) ஒலியன் சூழலுக்குக் கட்டுப்பட்டவை (Phonologically conditioned). *ஓர்* என்பது உயிர் ஒலியினை முதலாக உடைய சொற்களுக்கு (உருபன்களுக்கு) முன் மட்டும் வரும். *ஒரு* என்பது, பிற சொற்களுக்கு (மெய்யொலியினை முதலாகவுடைய உருபன்களுக்கு) முன் வரும்.

எடுத்துக்காட்டு ஓர் ஆடு, ஓர் அணில், ஒரு குடை, ஒரு மரம் போல்வன காண்க.

## உருவிலா உருபு (Zero allomorph)

மற்றொரு வகை மாற்றுஉருபு (allomorph) உருவில்லா மாற்றுருபாம் (zeroallomorph). இதனை 0 என எழுதிக் காட்டுவர் மொழியியலார். மேலே கண்டவை அனைத்தும் உருபுடைய மாற்றுருபுகளே. ஒரே வடிவுடைய உருபு இரு வேறு வாய்பாட்டில் (Paradigm) நின்று இரு வேறு பொருள் தந்து துலங்குமானால் அத்தகைய உருபு, ஒரு வாய்பாட்டில் நிற்கும்போது அதனை உருவிலா மாற்றுருபு என அழைப்பர். எடு - எடுத்தான் - எடுத்து; கொடு - கொடுத்தான் - கொடுத்து; காண் - கண்டான் - கண்டு என்னும் சொல்லடுக்கு வாய்ப்பாடு (Paradigm) கொண்டு, எடுத்து, கொடுத்து, கண்டு என்ற வடிவங்களில் *உ* கர இறுதியைப் பிரித்துப் பொருள் காணுங்கால் உகரம் வினையெச்சப் பொருள் சுட்டி உருபனாக விளங்கக் காணலாம். தூங்கு - தூங்கி; வருந்து - வருந்தி; பொருந்து - பொருந்தி என்ற வடிவ வாய்ப்பாட்டில் *இ* கரத்தை இறந்த காலமாகப் பொருள் கொண்டால், அதே *இ* கரம் வினையெச்சப் பொருள்தரும் வாய்ப்பாட்டிலும் சென்று அமைவதைக் காணலாம். எனவே இவ் *இ* கரம் இறந்த காலங்காட்டும் உருபன் என ஒரு வடிவ உருபாகக் கொள்வதனால் இச்சொற்களில் (தூங்கி, பொருந்தி, வருந்தி என்பனவற்றில்) நிற்கும் வினையெச்ச உருபு ஓர் வடிவிலா உருபு (zero allomorph) எனக் கொள்ளுதல் வேண்டும்.

## உருபொலியனியல் (Morpho phonemics)

வடிவால் வேறுபடுகின்ற மாற்றுருபுகளை (allomorphs) வகை செய்தலுக்கும், எளிதாக அவ்வகைகளைக் கண்டு விளக்குவதற்கும் துணை செய்வனவே உருபொலியனியலின் (morphophonemics) பல்வேறு பிரிவுகளாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன இயல்பு மாற்றமும் (Automatic alternation) முறை மாற்றமும் (Regular alternation) முறையில்லா மாற்றமுமாகும் (Irregular alternation). தமிழ் எழுத்து வழக்கில் *ட்த்* என வரும் மெய்மயக்கம் இல்லை.

ஆகவே டகரத்தை அடுத்து வரும் தகரம், டகரமாக மாறுகிறது. இம்மாற்றமும் இயல்பானது (Automatic alternation). முள் + தீது > முட்டீது, முள் + தாமரை > முட்டாமரை என வரும் முறை மாற்றம் என்பது இ, ஈ, ஐ, ஒழிந்த உயிர்களின் பின் உயிர்கள் எழுத்துத் தமிழில் வரும்பொழுது வகர உடம்படு மெய் வருவது போன்ற முறையான மாற்றத்தைச் சுட்டும். பெரும்பாலும் இது எல்லா இடங்களுக்கும் பொருந்தும். ஆனால் அ + இரு > ஆயிரு என யகர உடம்படு மெய் பெறுவது முறையல்லா மாற்றமாம்.

மரம் + கிளை > மரக்கிளை என்னும் இரு தனித்தனி உருபன்கள் புணர்ந்து நிற்கும் புணர்ச்சியைப் புறப்புணர்ச்சி (External sandhi) என்பர். அ + நூல் > அந்நூல் அ + படி > அப்படி என்னும் புணர்ச்சி வடிவங்களில் முறையே கூட்டுருபும் தனி உருபும் புணர்தலும், கூட்டுருபும் புணர்தலும் என அமைந்துள்ளதைக் காணலாம். இத்தகைய புணர்ச்சியை அகப்புணர்ச்சி (Internal sandhi) என்பர் மொழியியலார்.

உருபொலியனியல் (morpho - phonemic) என்பது உருபன் (morpheme) ஒன்றின் பல்வேறு மாற்றுருபுகள் (allomorphs) வரும் இடம் நோக்கித் தம் ஒலியனின் வடிவுகளில் கொள்ளும் வேறுபாடுகள் பற்றியனவற்றைக் கண்டுகொள்ள உதவும். ஓர் அறிவியல் துறை என்பதனை இதுவரை பல சான்றுகளால் கண்டு தெளிந்தோம்.

ஒரு சொல்லின் பொருள் சிறந்து நிற்கும் பகுதியாக வேரும் (root), அவ்வேருடன் பிரிதற்குரிய வண்ணம் இணைத்து வரும் ஒட்டுகளும் (affixes), அவ்வொட்டுக்களில் பின்னொட்டு (suffix) எனவும் முன்னொட்டு (perfix) எனவும், உள்ளொட்டு (infix) எனவும் உருபன்களை வகைப்படுத்தி மொழியியலார் ஆய்வார்கள். தமிழில் *கொடுத்தான்* என்னும் இறந்தகால வினைமுற்றுச் சொல்லை உருபன்களாகப் பிரித்துக் கொண்டேபோனால் *த், த்* என்ற இறந்தகால ஒட்டுருபனை (affix) ஏற்கும் வேர் உருபனே (root) *கொடு.* இவ்வேர் உருபன் இறந்த கால ஒட்டு உருபனோடு ஓர் அடி உருபன் (stem) வடிவு பெற்று *அன்* என்ற விகுதி (suffix) உருபன் ஏற்கிறது தமிழில் வரும் *சாப்பாடு - சாப்பிடு; கூப்பாடு கூப்பிடு* எனும் சொற்களின் வேரையும், விகுதியையும் நீக்கிப் பார்க்கும்போது முறையே அவற்றில் *அ* கரமும், *இ* கரமும் உள்ளொட்டுக்களாகக் (infix) கருதும் வகையில் அமைந்து காணப்படுகின்றன.

உருபுகளில் ஏற்படுகின்ற வேறுபாடுகளை முன்னோக்கிய ஓரினம் (progressive assimilation), பின்னோக்கிய ஓரினம் (reciprocal assimilation), அடுக்குத்தன்மை பெறல் (reduplication), எதிரொலி (echo), ஒலியன் அல்லது அசை இடமாற்றம் (metathesis), வேறினமாதல் (dissimilation), கெடுதல் (reduction), தொடர்பிலா உருபாதல் (discontinous morph), மாற்றுச்சொல் வடிவு ஆதல் (suppletions) என வகை செய்து காண்டல் கூடும். விரிவாக இவை பற்றி இக்கால மொழியியல் பக்கம் 132 - 137இல் விளக்கம் சான்றுகளோடு உள்ளது; அவற்றைக் கண்டு படித்துப் பயன்பெறுக.

# 2. ஒலியன் இயல் - மொழி வரலாறு

மொழி என்ற சொல்லிற்கு *மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது* என்ற விளக்கத்தோடு சைகையாலோ, படத்தாலோ, குறியீட்டாலோ ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதும் மொழியே என விளக்குவர் மொழிநூலார். இம்மொழியின் தோற்றம், வரலாறு, வளர்ச்சி நிலைகள் தனித்தன்மைகளை ஆராய்வதே மொழியாராய்ச்சியாகும்.

அறிஞர் தெ. பொ. மீ. அவர்கள் கால வாரியாகத் தமிழ் ஒலி, உருபு, சொல் அமைப்பு மாறுபாடுகளைத் தம் *தமிழ் மொழி வரலாறு* நூலில் விளக்கிச் செல்கின்றார். அறிவியலின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை மொழி ஆய்விற்குப் பயன்படுத்தாமை, பழமையில் ஊறிய மக்களின் புராதன மரபு, மொழியைத் தெய்வீக நிலைக்கு ஏற்றி வழிபட்டமை இவை மொழி ஆய்விற்குத் தடையாக அமைந்தன என்பது அவர் கருத்து.

## மொழி வரலாற்றுப் பகுதிகள் - சொல்லும் பொருளும்

தமிழ் மொழி வரலாற்றில், அரசியல், பண்பாடு, வணிக அடிப்படையில் தமிழில் புகுந்த பிறமொழிச் சொற்களை இனங்கண்டு கொள்வதும் (External History of Tamil), தமிழின் சொற்றொகுதி வளர்ச்சியையும் (Vocabulary), சொல்மாற்றங்களையும் (Lexical Change) ஆராய்தலும் தேவையானது. இயற்சொல், கடன்பெற்ற சொற்களில் ஏற்பட்ட பொருள் மாற்றங்களையும் ஆய்தல் வேண்டும். மேலும், துறை, சமுதாய, கால மாறுபாடு காரணமாக ஏற்படும் பொருள் மாற்றமும் (Semantic Change) மொழி வரலாற்றில் ஆராயப்படுதல் வேண்டுமென்பர் தெ. பொ. மீ.

## ஒலியன் இயல் (Phonology)

மொழி வரலாற்றின் அடுத்த பகுதி ஒலியன் இயல். உரசொலி *ர* வும் நுனியண்ண வெடிப்பொலியாக இருந்து ஆடொலியாக மாற்றம் பெற்ற *ற* வும் எல்லாக் கிளை மொழிகளிலும் ஒன்றாகிவிட்டன. இது போன்ற ஒலியனியல் மாற்றங்களைக் காலவாரியாக ஆய்வது இன்றியமையாதது.

## உருபொலியன் இயல் (Morpho - Phonemics)

உருபுகள் புணர்கின்றபோது அவற்றின் ஒலியமைப்பு மாறுபடுகின்றது. இது வரி வடிவ மாற்றம், இலக்கண அமைப்பு மாற்றம் என இரு வகையில் அமையும். ஓர் உருபனில் உள்ள ஒலியன் காலப்போக்கில் கூட்டியும் குறைத்தும் உச்சரிக்கப்படுதல் வரிவடிவ மாற்றமாகும். (மண் > மண்ணு; பொலன் > பொன்)

இரு உருபுகள் புணரும்போது ஏற்படும் இலக்கண மாறுபாட்டிற்குப் புறம்பாகச் சில மாற்றங்கள் வழக்கில் ஏற்படுதல் இலக்கண அமைப்பு மாற்றமாகும். *அதன்* என்ற உருபு கு வரும் போது *அதற்* என மாறுவது இலக்கண முறை, இதற்கு மாறாகப் பிற்காலத்தில் *அதனு* (அதனுக்கு) என்றாகிறது. இத்தகைய உருபொலியன் மாற்றங்களை ஆராய்வதும் மொழி வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

## உருபனியல் (Morphology)

புதியதாக அல்லது பழைய உருபுகளுக்குப் பதிலாக உருபன்கள் தோன்றுதல், உருபுகளின் வரிசையில் மாற்றம் ஏற்படல், செயப்படு பொருள் தரும் வடிவங்களின் வளர்ச்சி (விபி), துணை வினை வளர்ச்சி, பால் காட்டும் விகுதிகளின் தோற்றம் முதலியன இங்கு ஆராயப்படுதல் வேண்டும்.

## தொடரியல் (Syntax)

எழுவாய்க்குப் பின்வரும் பயனிலைக்கு மாறாகச் சங்க இலக்கியத்தில் *நோகோ யானே* எனப் பயனிலை முதற்கண் வருகின்றது. இத்தகைய தொடரியல் மாற்றங்களையும் மொழி வரலாறு நன்கு விளக்கிச் செல்லுதல் வேண்டும்.

# ஒலியன் இயல்

## 1. தமிழ்மொழி வரலாறு மூல ஆதாரங்கள்

தமிழ்மொழி வரலாற்று மூல ஆதாரங்களாக: 1. இலக்கியம், 2. இலக்கணம், 3. உரைநூல், 4. வெளிநாட்டாரின் இலக்கண நூல், 5. அகராதி - நிகண்டு, 6. கல்வெட்டு, 7. பிறமொழிக் கல்வெட்டு, 8. பிற மொழியாளர் குறிப்பு, 9. கிளைமொழிகள், 10. ஒப்பியல் முறை முதலியன அமையும்.

இலக்கியம், செய்யுள், உரை, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களால் அமையலாம். இவை இலக்கிய, பேச்சு மொழிகளில் அமையலாம். பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், கதைப்பாடல் (Ballad), இக்கால நாவல், சிறுகதை, நாடகம் முதலியன பேச்சு மொழியை ஆராயத் துணை செய்யும். இருப்பினும் இவை முழு அளவில் பயன்படுவதில்லை. நல்ல பதிப்புக்கள் இன்மை, பேச்சு மொழியை எழுத நல்ல வரிவடிவம் இன்மை முதலியன காரணமாகும்.

தமிழின் மொழி அமைப்பை அறியத் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் பெருந்துணை செய்யும். உச்சரிப்பு முறையை விளக்கும் *பிறப்பியல்,* உருபொலி மாற்றம் பேசும் *புணரியல், உருபனியல்* பகுதிகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. ஆயினும் இவை தம் காலப் பேச்சு வழக்காறுகளையும், உச்சரிப்பு முறைகளையும் தெளிவாக உணர்த்துகின்றன எனக் கூற முடியாது.

உரை நூல்கள், பழைய நூல்கள் குறிப்பிட்ட வழக்காறுகளிலிருந்து மாறுபட்டன பற்றியும், புதிதாகத் தம்காலத்து எழுந்த வழக்காறு பற்றியும் அறிய உதவுகின்றன. பிற்காலத் திரிபுகட்கு இடம் அமைத்துச் செல்லும் முயற்சியும் இவற்றில் உண்டு.

தமிழகம் வந்த வெளிநாட்டார், தமிழைக் கற்க உதவும் வகையில் பல இலக்கண நூல்கள் எழுதியுள்ளனர். போர்த்துக்கீசிய மொழியில் அமைந்த தமிழ் இலக்கண நூல், தமிழின் உச்சரிப்பு, வேற்றுமை, வினை விகற்ப வாய்பாடு பற்றி டச்சுக்காரர் பால்தே எழுதிய நூல், கோஸ்டா பால்ஸ்ரா இலத்தீன் மொழியில் எழுதிய நூல், புருனோவின் நூல், சீகன் பால்குவின் நூல், பெஸ்கியின் (வீரமா முனிவர்) பேச்சுத்தமிழ் இலக்கண நூல், எல்லீஸ், கால்டுவெல் போன்றோரின் நூல் முதலியன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஒலி, வரி வடிவக் குறிப்பு (Phonetic Chart) இன்மையால் உச்சரிப்பு விளக்கங்களைச் சரிவர விளங்கிக் கொள்ள முடிவதில்லை. இவர் தம் உச்சரிப்பு முறையிலும் (காகம் > சாகம் என) பிழைகள் காணப்படுகின்றன.

போர்த்துக்கீசிய மொழியிலும், தமிழிலும் பெஸ்கி எழுதிய அகராதி கிறிஸ்தவ போதகர்களின் அகராதி, வையாபுரி பிள்ளை தலைமையில் வெளியான *தமிழ்ச் சொற் களஞ்சியம்* முதலான நிகண்டுகள் மொழி வரலாற்றில் சிறப்பிடம் பெறுவன.

கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், அரசினர் - தனியார் ஆவணங்களும், ஓலைச் சுவடிகளும் அக்காலப் பேச்சு வழக்குகளைத் தெரிந்து கொள்ளத் துணை செய்கின்றன. இவற்றில் எழுதியோர் பிழை, அவர் தம் தனி நடை காணப்படுதலின் இவற்றை ஆராய்ந்து மொழி வரலாற்றைக் கணித்தல் வேண்டும். தமிழ்ச் சொற்கள், தமிழர் தம் பெயர், தமிழர் ஊர்ப் பெயர் பற்றிய பிறமொழிக் கல்வெட்டுக்களும் மொழியாய்விற்குப் பயன்படுவனவே, இலங்கைச் சிங்கள மொழிக் கல்வெட்டுகள், அரிக்கமேடு மட்பாண்டங்களில் காணப்படும் தென் பிராமி எழுத்துக்கள், பண்டைய நாணயங்களில் காணப்படும் எழுத்துக்கள் முதலான இவ்வகையில் சிறப்பிடம் பெறுகின்றன.

தமிழ்ப் பெயர்கள், சொற்கள் பற்றிய பிற மொழியாளரான வரருசி-பதஞ்சலியின் குறிப்பும், பாலி சமஸ்கிருத பிராகிருத இலக்கியக் குறிப்பும், குமாரிலப்பட்டரின் *தந்திர வார்த்திகம்* நூலும், மலையாள இலக்கண நூலான *லீலா திலகமும்,* மெகஸ்தனிஸ், பெரிப்ளூஸ், பிளைனி, டாலமி, யுவான் சுவாங், மார்க்கோபோலோ போன்றோரின் குறிப்புக்களும் கிருஸ்தவ சமயப் போதகரின் கடிதங்களும், தமிழ்ச்சொற்களை ஆங்கிலத்தில் எழுதிய அரசுப் பதிவேடுகள், சட்ட நூல்கள், அகராதிகள் முதலானவும் மொழி ஆய்விற்குத் துணை செய்வனவே. ஆயினும், தமிழ் ஒலிகளைப் பிறநாட்டார் உள்ளவாறே உணர்ந்து எழுதியிருப்பார்கள் எனக் கூற முடியாது. தம் மொழியின் ஒலியமைப்பிற்கு ஏற்பச் சொற்களை மாற்றியும் எழுதியிருப்பார் என்பதை இங்கு மறந்துவிடக்கூடாது.

கிளை மொழிகளில், பேச்சு மொழியின் அடிப்படை இயல்பும் பழைய வழக்காறுகள் சிலவும் இடம்பெறும். இவை மொழி ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன. திராவிட மொழியியலார் பயன்படுத்தும் ஒப்பியல் முறையும் உறுதுணை செய்யும். இத்துறையில் எமனோவும், பர்ரோவும் பெரும்பணி ஆற்றியுள்ளனர். *திராவிட மொழிகளின் அடிச்சொல் அகராதி* இவ்வகையில் சிறப்பிடம் பெறும். இங்ஙனம் மொழி வரலாற்றை விளக்கத் துணை செய்யும் மூல ஆதாரங்கள் குறித்து விளக்கிச் செல்கிறார் தெ. பொ. மீ.

## 2. மூலத் திராவிட மொழி ஒலியன்கள்

திராவிட மொழி பற்றிய ஆய்வு 19ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. முதன்முதல் எல்லீஸ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளுக்கிடையே உள்ள உறவுகளை விளக்கினார். பின் 1859-இல் கால்டுவெல் *திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்* நூலை வெளியிட்டார். இவருக்குப் பின் எல். வி. இராமசாமி ஐயர் குறிப்பிடத்தக்கவர். யூல்ஸ் பிளாக்கின் *திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு* (1946), எமனோவின் *கோலமி மொழிச் சொற்பட்டியல்,* எமனோவும் பர்ரோவும் வெளியிட்ட *திராவிட மொழிகளின் அடிச்சொல் அகராதி* (1961) முதலான நூல்களும், பிற ஆய்வுக் கட்டுரைகளும் திராவிட மொழி ஆய்வில் முதலிடம் பெறுவன.

1798 இல் ராபர்ட்ஸ் கூர்க், துளு மொழிகளை ஆராய்ந்தார். 837இல் பொன்காடு சிக்மண்ட, தோதர் மொழியை அறிமுகம் செய்தார். 1838இல் லிச் பிராகூய் மொழியையும், 1849இல் திரிபெர்க்கும், காரிசனும் கோண்டி மொழியையும், 1853இல் லெட்சுமாஜி, கூய் மொழியையும், 1856இல் கிஸ்லோப் கோலாயி மொழியையும், 1884இல் துரோஸ்ப் பால்டோ மொழியையும் அறிமுகம் செய்தனர். பின் கொண்டா, கதபா, பார்ஜி முதலான மொழிகள் அறியப்பட்டன. ஏறத்தாழ 25 திராவிட மொழிகள் இவ்வகையில் அறிமுகமாயின.

அவையாவன: 1. தெலுங்கு, 2. தமிழ், 3. கன்னடம், 4. மலையாளம், 5. கோண்டி, 6. குருக், 7. துளு, 8. கூய், 9. குவி (கோந்த்), 10. கோயா, 11. பிராகூய், 12. மால்டோ, 13. குடகு, 14. படகா, 15. கோலமி, 16. இருளா, 17. குறவா, 18. பார்ஜி, 19. கொண்டா, (கூயி) 20. கதபா, 21. நாய்க்கி, 22. பெங்கோ, 23. கோட்டா, 24. ஒல்லாரி, 25. கோதா.

### ஒலி அமைப்பு

மீட்டுருவாக்க முறையில் (Reconstruction) எமனோ மூலத்திராவிட மொழி ஒலியன்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பார்.

### உயிர் ஒலியன்கள்

1. உயிரின் நீட்சி ஓர் ஒலியனாகும் (எடு, ஏடு, அடு, ஆடு)
2. முன் உயிர்கள் இரண்டு (இ, எ)
3. பின் உயிர்கள் இரண்டு (உ, ஒ)
4. அகாரம் கீழ் உயிராகும்.
5. உயிர் ஒலிகள் இடம் பெற (vowel shift) வாய்ப்ட, மிகுதி (எ-டு) இரவு > ராவு)
6. இன்றைய கிளை மொழிகளில் - குறிப்பாகத் தமிழ், கூய்மொழிகளில் காணப்படும் முன்மேல் இதழ் விரி உயிர் ய், குரல்வளை வெடிப்பொலி (ஃ) மூலத் திராவிட மொழியில் இல்லை.

### மெய் ஒலியன்கள்

ஆறு ஒலிப்பில்லா வெடிப்பொலியன்களும் (voiceless plosive) மூன்று மூக்கொலியன்களும் (nasal), மருங்கொலி முதலான ஆறும் மூலத் திராவிட மொழியில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதுவர் எமனோ' சொல் நடுவில் தனித்தும், இரட்டித்தும் வேற்று நிலை வழக்கில் வெடிப்பொலிகள் வருகின்றன. இங்கு நீட்சி ஒலியன் தன்மை பெறுகிறது. (எ-டு: பகல், பக்கல்).

இரட்டித்த வெடிப்பொலிகளும் இனமூக்கொலி வெடிப்பொலி மயக்கங்களும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. (மச்சம் - மஞ்சம்).

ல், ர், ழ், ற் ஒலிகளை அடுத்து வெடிப்பொலி நின்று ஏற்படும் உடன்பாடற்ற மெய்ம்மயக்கமே இரட்டித்த வெடிப்பொலிக்குக் காரணம் (நக்கீரர்).

மொழியிடையில் *ப்* வராது; அது வகரமாக மாறும் என்பர். எமனோ, ஆயின் *தபு* என்ற சொல்லில் *ப்* மொழியிடையில் வருவதை எடுத்துக்காட்டுவர் தெ. பொ. மீ.

### மூக்கொலிகள்

எமனோ ம, ன, ண ஆகிய மூன்று மூக்கொலிகள் குறிக்க பர்ரோ *ஞ* வையும் குறிப்பார். *ஞ* மொழி முதல், இடை, கடையில் வருகின்றது (ஞமலி, மிஞிறு, உரிஞ்). ஆதலின், அதனைத் தனி ஒலியன் என்பர். இது *ய* அல்லது *த்* வின் மாற்றொலி அன்று எனவும் துணிவர். *ண* கரத்தின் மாற்றொலியே *ந* கரம் இது *ற* வுக்கு முன் *ன* வாகவும் *த* வுக்கு முன் *ந* வாகவும் ஒலிக்கிறது. *ங* மொழி முதல் வரினும் (அங்ஙனம்) இது கடையண்ண வெடிப்பொலியால் (க) தொடரப்படும். பிற மூக்கொலிகளே இங்ஙனம் மாறுகின்றன (அம் + கனம் > அங்ஙனம் > அங்ஙனம்). எனவே ந, ங - பிற மூக்கொலிகளின் மாற்றொலிகளே.

### மருங்கொலி முதலான

தமிழில் *இடையினம்* எனப்படும் ஆறு மெய் ஒலியன்களும் ஆடொலி *ற* வும் மூலத் திராவிட மொழியில் இருந்தனவாக எமனோ குறிப்பர். நுனியண்ண வெடிப்பொலி *ற* ஆடொலியாக மாறிய நிலையையும் அவர் சுட்டுவர். *ழ* தமிழிலும் மலையாளத்திலும் தொடர் ஒலியாக உச்சரிக்கப் பெறுகின்றது.

### ஒலியன்களின் வருகை (Phonemic distribution)

ட், ற், ண், ன், ல், ள், ழ், ர் தவிர்த்த ஏனைய மெய்கள் மொழி முதல் வரும். எல்லா மெய்களும் மொழி இறுதியில் வரும். வெடிப்பொலியன்கள் உகரம் பெற்று மொழியிறுதியாகும்.

### அசை (Syllable)

அசை மூன்று உறுப்புக்களை உடைய்து. அசைமுதல், அசைமுடி, அசை ஈறு என்பன. உயிரே அசை முடியாகும் (peak). மெய் அசை முதலாகவும் (onset) அசை ஈறாகவும் (code) அமையும் ஓர் அசையின் அடுத்து வரும் அசைக்கு, அசை முதலாக அமையும். இதனை இடைநிலை (interlude) என்பர்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ | | ஒ உ |
| (எ-டு) | கல் - | ^ | கொடு | N |
| | | க்ல் | | க் ட் |

மூலத் திராவிட மொழியின் அசை அமைப்பு [ (C) V C) ] என்ற வாய்ப்பாட்டில் அமையும் [C - மெய்; V - உயிர்; V - நெடில்உயிர்; V - இரட்டைஉயிர் ].

தெலுங்கு கூய் மொழியில் மொழி முதல் மெய்ம்மயக்கங்களை (Initial cluster) இடம்பெயரல் விதியால் (Metathesis) விளக்கிவிடலாம். கோண்டா மொழியில் உயிர்கள் நெகிழ்வதால் மெய்கள் தொடர்ந்து நிற்கின்றன (Anzreyrdk).

## 3. தென் திராவிட மொழிகளும் தமிழும்

வடதிராவிடம், மத்திய திராவிடம், தென் திராவிடம் என மூலத் திராவிடமொழி மூன்று கிளைகளை உடையது. பிரா கூய், குருக், மால்டோ முதலான வடதிராவிட மொழிகள் மத்தியபிரதேசம், வட ஆந்திரா, ஆந்திரத் தீவுகளில் மத்தியத் திராவிட மொழி வழங்குகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, படகா, கோதா, கோட்டா, குடகு முதலான தென் திராவிட மொழிகள்.

வடதிராவிட மொழிகளிலிருந்து சமஸ்கிருதம் பல சொற்களைக் கடன் பெற்றுள்ளது. வடதிராவிட மொழிகளை மீட்டுருவாக்கப் பயன்படும் தென்திராவிட வேர்ச் சொற்கள் பலவும் வடமொழியில் கலந்துள்ளன. இங்ஙனம் கலந்த வட, தென் திராவிட வேர்ச் சொற்களை நிறுவிவிட்டால் மூலத் திராவிட மொழி தமிழ் அல்லாத திராவிடம் என ஒன்று இருந்ததை அறியலாம் என்பர் தெ. பொ. மீ.

## தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

1. தென் திராவிட மொழிகளில் உயர்திணைப் பெண்பால் ஒருமைக்கெனத் தனி விகுதியுண்டு, ஆயின் இது மத்திய, வட திராவிட மொழிகளில் அஃறிணையில் அடக்கப் பெறும்.

2. உயர்திணைப் பெண்பால் விகுதி *இ* ஒரு காலத்தில் அஃறிணை ஒன்றன்பால் விகுதியாக இருந்து பின் இரண்டிற்கும் பொதுவாயிற்று.

(எ-டு) கிழவி - உயர்திணைப் பெண்பால்
மண்வெட்டி - அஃறிணை
நாணிலி - பொது

3. முன்னிலையில் *ஞ* இருந்து இழப்புற்றது. இவ்வடிப்படையில் ஞ ந ய ஆராயப்பட வேண்டும். (ஞான் > நான் > யான்) மொழி முதல் *ய* மறைகிறது (யாய், யானை > ஆய், ஆனை). சிலபோது அடுத்து வரும் உயிரை இடையண்ண உயிராக மாற்றிப்பின் மறைவதுண்டு (யாவை > எவை). மொழி முதல் சகரமும் மறைகிறது (சுப்பு > உப்பு; சீ > ஈ).

4. தெலுங்கிலும் பிற திராவிட மொழிகளிலும் ஏற்படும் மெய் இடம் பெயரல் தென்திராவி. மொழிகளில் இல்லை. தமிழில் இரண்டு ரெண்டு என ஆவது தெலுங்கிலிருந்து கடன் பெற்றதாகும்.

5. உயிர் இடம் பெயரல் தெலுங்கில் மிகுதி (அவர் அவரு அ + வ + ரு > வ + அ + ரு > வாரு).

6. கன்னடத்தில் இ எ பெற்று அமையும் மொழி முதல் கடையண்ண ஒலி (க) தமிழ், தெலுங்கு, மலையாளத்தில் இடையண்ண ஒலியாக (ச) மாறும் (கேரி > சேரி, கின்ன > சின்ன).

7. மொழி முதல் க் ஐ அடுத்து வளைநா ஒலிவரின் மேற்கண்ட மாற்றம் தெலுங்கில் மட்டும் அமையும் (கிளி > கிளி தெலுங்கு).

8. பழைய வடிவங்களில், பின் உயிரோடு தொடங்கும் க் > ச் ஆகிறது (குருள் > சுருள்).

9. மூலத் திராவிட மொழி, எ, ஒ தமிழில் இ உ ஆகும். மூலத் திராவிட. மொழி இ, உ தெலுங்கு, கன்னடத்தில் எ, ஒ ஆகும். பு. கிருஷ்ணமூர்த்தி, மூலத் திராவிட மொழி, இ > எ எனவும், உ > ஒ எனவும் தென்திராவிட மொழியில் ஒன்றாகிவிட்டன என்பர்.

10. அடுத்துவரும் அசையில் *அ* இருந்து முதலசையிலுள்ள மூலத் திராவிடமொழி எ > இ ஆகும். தமிழில் இது போல ஒ > உ ஆகும் (வெளிச்சம் > விளக்கு; நெஞ்சு > நினை). இக்காலத் தமிழ் இதற்கு நேர் மாறுபட்டது (இலை > எலை; உரல் > ஒரல்).

## 4. குகைக் கல்வெட்டு மொழி ஒலியன்கள்

தென் தமிழக மாவட்டங்களில் உள்ள பிராமி வரி வடிவக் குகைக் கல்வெட்டுகள் கி.மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தன.

1 ஒலிப்புடை மூச்சுடை வெடிப்பொலிகள் (Voiced aspirated plosives) இவற்றில் காணப்படவில்லை. 2. குற்றுயிர் அ, எ, ஒ வரிவடிவில் தெளிவாக வேறுபடுத்தப்பட்டுள்ளன. 3. ழ், ள் - ஆகிய இரண்டு நாவளை ஒலிகளும் காணப்படுகின்றன. 4. ஐ, ஔ சந்தியக் கரங்களும், ரு, லு ஆகிய அசைகளும் காணப்படவில்லை. 5. ச தவிரப் பிற குழிந்துரசொலிகள் (sibilants) காணப்படவில்லை.

### மெய் ஒலியன்கள்

ஆறு வெடிப்பொலிகளும் காணப்படும். இவை அனைத்தும் மொழி இறுதியாக, க, ச, த, ப நான்கு மட்டும் மொழி முதலாகும். இவை அனைத்தும் மொழியிடையில் தனித்தும் (உயிர்பெற்று), இரட்டித்தும் வரும். *க* தவிர (ங்க்) ஏனைய இணைமூக்கொலி பெற்று அமையும் **dh th** தவிரப் பிற ஒலிப்புடை வெடிப்பொலிகள். இல்லை.

ஞ், ண், ன், ம், ந் ஆகிய ஐந்து மூக்கொலிகள் உண்டு, ம், ந் - உயிர் பெற்று மொழி முதலிலும், தனித்து நின்று மொழி இறுதியிலும் அமையும். *ஞ்* - மொழியிடையில் *ச்* க்கு முன்னர் மட்டுமே ஈரொற்றாகும்.

ஆறு இடையின ஒலிகளும் காணப்படுகின்றன. ல், ள், ழ், ர் நான்கு மொழி முதல் ஆவதில்லை. ய், வ் - உயிர் பெற்று மொழி முதலாகும். *ய* கரம் உடன்படு மெய்யாகவும் அமையும். பிராகிருதத்தின் செல்வாக்கால், ***யுன்*** என்பதில் யகரம் உகர உயிர் பெற்று மொழி முதலாகிறது.

### உயிர் ஒலியன்கள்

ஐ, ஔ - தவிர ஏனை உயிர் ஒலிகள் உண்டு. இவை அனைத்தும் மொழி முதலாகும். அஇ, இஒ, அஆ ஆகிய உயிர் மயக்கங்கள் உண்டு. ஆன் > ஒன் ஆகிறது.

### ஒலித் திரிபுகள்

மொழி இறுதி மூக்கொலி அதற்கு முன் நெட்டுயிர்வரின் இழப்புறுகிறது. (செய்தான் > செய்தா) புணர்ச்சியில் மூக்கொலி தோன்றுகிறது. (நெடு + தொகை > நெடுந்தொகை) ன, ண ஒலிகள் ன, ல வாதல் இல்லை.

### பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கல்

சமஸ்கிருதச் சொற்களைத் தமிழாக்குகின்றபோது அஃறிணை *ம* கர இறுதியும் உயர்திணை ஆண்பால் ***ன*** கர இறுதியும், பலர்பால் *ர* கர இறுதியும் பெறுகின்றன.

*(எ-டு)* காஞ்சன் > காஞ்சனம்; வணிக் > வணிகன் - ய் > க்; ச் > ப்; ஐ > ச ஆக மாறுகின்றன. மொழி முதல் *வ்ற்* மறைகிறது.

*(எ-டு) சாரியன் > சாரிகன்; காசிபன் > காயிபன்; ஹரித > அரிதன்; ஜய > சயன்.*

ஒலிப்புடை வெடிப்பொலிகள் ஒலிப்பிலா ஒலியாகவும் (**GK = nigama > nikamam**) மூச்சுடை வெடிப்பொலி மூச்சிலா ஒலியாகவும் (**dh > th = siddhi < citti**) மாறுகின்றன. க்ஷ > க்க ஆகிறது (யக்ஷ > யக்கன்). ஸ்ய > ச வாகிறது (ஸீயாலாம் > சாலகன்).

## 5. தொல்காப்பியர் காலத் தமிழ் ஒலியன்கள்

தொல்காப்பியத்தில் ***என்ப, என்றிசினோர் என்மனார், புலவர்*** என வருவ்ன அவர் காலத்திற்கு முற்பட்ட காலத் தமிழின் இயல்பு அறிய உதவும். தொல்காப்பியத் தமிழ் சங்கத்தமிழுக்கு முற்பட்டது. இது குகைக் கல்வெட்டு மொழியோடு நெருங்கிய தொடர்புடையது.

*தொல்காப்பியப் பிறப்பியல்* உச்சரிப்பு ஒலிப்பியலை விளக்குகிறது. ஒலிப்பான் (**Articulator**) ஒலிப்பிடம்(**Point of articulation**) அடிப்படையில் இதனைக் காப்பியர் விளக்குவர். அன்றியும் சார்பு ஒலிபற்றியும் பேசுகிறார். ***மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்*** என்றும், ***மூக்கின் வளியிசையாப்புறத் தோன்றும்*** என்றும் ஒலியன்களின் ஒலிப்புடைமையைச் (**Voiced**) சிலவிடங்களில் சுட்டுகிறார். ஒலியினைக் குறிக்க எழுத்து என்ற சொல்லை ஆளுகிறார். இது எழுது > ஏழு > எழுத்து என ஒலி அடிப்படையில் தோன்றியதாகும். வரிவடிவ நிலையில் பேசும் இடமும் உண்டு.

ஒலிப்பானாக நாவையும் அண்ணத்தையும் குறிப்பர் தொல்காப்பியர். இவற்றைக் கடை இடை நுனி எனவும் பகுப்பார். மெய் ஒலியன்களின் பிறப்பை ஐந்து நிலைகளில் விளக்குவர்.

1. கடைநா கடையண்ணம் பொருந்த க் ங் பிறக்கும்.

2. இடைநா இடையண்ணம் பொருந்த ச் ஞ் பிறக்கும்.

3. நுனிநா நுனி அண்ணத்துடன் அணரி ஒற்றவும் வருடவும் செய்யும்; வளைந்து இடை அண்ணத்தையும் தொட்டும்; பல் அல்லது ஈற்றையும் தொடும்; இந்நிலையில் ட், ண், ன், ர், ற், ழ், ல், ள், த், ந் ஆகிய பத்து ஒலியன்கள் பிறக்கின்றன.

4. கீழ் இதழ் ஒலிப்பானாக அமையப் பிறக்கும் ஒலிகள் மூன்று. இவற்றில் ப்ம் ஈரிதழ் ஒலியாகும்; *வ்* பல்லிதழ் ஒலியாகும். *வ்* வும் ஒரு காலத்தில் ஈரிதழ் ஒலியாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதுவர் தெ.பொ.மீ.

5. யகர மெய் ஒலிப்புடை ஒலியாகும். இதற்குக் காப்பியர் தரும் விளக்கம் பொருந்தவில்லை என்பது தெ.பொ.மீ. கருத்து.

## உயிர் ஒலியன்கள்

பன்னிரு உயிரும் மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும் என்கிறார். இவற்றை ஒலிப்பு முறையால் மூன்றாக வகைப்படுத்துவர். 1. அ, ஆ வாயைத் திறப்பதால் பிறப்பன. இவை கீழ் நடு உயிர் 2. இ, ஈ, எ, ஏ, ஐ ஐந்தும் முன்னுயிர், அண்பல் முதல் நா விளிம்புற இவை பிறக்கும். 3. உ, ஊ, ஒ, ஓ, ஔ. இதழ் குவியப் பிறப்பன.

## ஒலியன்களின் வருகைமுறை

தொல்காப்பிய நூற்பாற்களில் ஆறுவெடிப்பொலியன்களும் வ், தவிர்த்த ஐந்து மூக்கொலிகளும், இடையினம் ஆறும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. இதே நிலையில் இரட்டித்த வெடிப்பொலியும் இன மூக்கொலி வெடிப்பொலியும் அமையும். மொழி இடையில் ந், ஞ் க்கு வேற்றுநிலை வழக்குதொல்காப்பியத்தில் இல்லை *த்* மொழி இறுதியில் இரு சொற்களில் ஆகும் (வெரிந், பொருந்) *ஞ்* உரிஞ் என்ற சொல்லில் மட்டுமே மொழி இறுதியாகும். மொழியிடையிலும் இதன் வருகை குறைவு, ர், ழ் இரட்டித்து வருவதில்லை. மூக்கொலி வெடிப்பொலி மயக்கத்திற்கு முன்னும் இரட்டித்த வெடிப்பொலிகட்கு முன்னும், ய், ர். ழ் வந்து மூன்று மெய்ம்மயக்கம் ஏற்படும் (வேய்ங் குழல், கீழ்க்கணக்கு)

ஆவோடல்லது யகரம் முதலாகாது என்பர் காப்பியர்., இது இ + ஆ > யா ஆகியது என்பர் பர்ரோ, ஓரசை வேரிலுள்ள யகர மெய் இறுதி இகரத்தின் மற்றொலி என்பர் (மெஇ > மெய்).

## மொழி முதல் மெய் ஒலியன்கள்

க், த், ந், ப், ம் ஆகியன எல்லா உயிருடனும் கூடி மொழிமுதலாகும் ங், ட், ண், ர், ழ், ல், ற், ள், ன் இவை எந்த உயிருடனும் கூடி மொழி முதல் ஆகா சகரம், ஆ, ஐ, ஔ ஆகிய உயிர்களுடன் கூடி மொழி முதலாகாது ஞ கரம் ஆ, எ, ஒ, என்ற உயிருடன் கூடி மட்டுமே மொழி முதலாகும். ய் ஆவுடன் கூடி மட்டுமே மொழி முதலாகும் வ் கரம், உ, ஊ, ஒ, ஓ, ஆகிய உயிருடன் கூடி மொழிமுதலாகாது.

## சந்தியக்கரம்

ஐந்து உயிர், அவற்றின் நீட்சி தவிர, ஐ, ஔ ஆகிய சந்தியக்கரம் பற்றிப் பேசுவர் காப்பியர். *ஔ* தமிழில் நிலையாக அமையவில்லை, சமஸ்கிருத எழுத்தை அடியொற்றி இது தமிழில் புகுந்தது. அ+உ> ஔ என்றாகியதென்பர் காப்பியர், *அவ்* என எழுதப்படுவதை இவர் *ஔ*, எனக் குறிப்பர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ- டு) | அவ்வை | - | ஔவை | தவ்வை | - | தௌவை |
| | நவ்வி | - | நௌவி | பவ்வம் | - | பௌவம் |
| | மவ்வல் | - | மௌவல் | வவ்வல் | - | வௌவல் |

இவற்றில் *வ்* ஈரிதழ் ஒலியாக இருந்துபின் பல்லிதழ் ஒலியாக மாறியிருக்க வேண்டும் என்றும், அது காப்பியர் காலத்தில் பழைய அமைப்பில் ஈரிதழ் ஒலியாக ஒலித்தது என்றும் தெ.பொ.மீ கருதுவர்.

அ+இ> ஐ (அய்) ஆகியது என்பது தொல்காப்பியர் கருத்து. மொழி இறுதி இ> ய் ஆவதை அவரே சுட்டுவர். (ஆஇ> ஆய்; போஇ >போய் ) எனவே காப்பியர் காலத்தேஜ > அய் ஆகி விட்டது என்பது தெளிவு. உயிர் அளபெடைகளில் உயிர் மயக்கம் உண்டு. (ஆஅ, ஈஇ, ஊஉ ,ஏஎ,ஓஒ ) உருபன் நிலையில் ஈருயிர் வரும் பொழுது முதல் உயிர் நெடிலாகிறது தழு+உ> தழுஉ).

## குற்றியலுகரம்

குற்றியலுகரம் *ஆடு* என நெடிலைத் தொடர்ந்தும், சுக்கு சங்கு சால்பு எஃகு வரகு என்ற தொடர்மொழி இறுதியிலும் வல்லெழுத்தைச் சார்ந்து வரும். தனிக் குறிலை அடுத்து அமையாது. வெடிப் பொலிகளை உச்சரிக்கையில் ஏற்படுகிற உயிர்போன்ற விடுப்பொலியே (Vowel like release) குற்றியலுகரம். எனவே இவற்றின் பிறப்பிடம் அவ்வெடிப்பொலிகளைச் சார்ந்தே அமையும். மொழிமுதல் குற்றியலுகரமாக *நுந்தை* யைக் குறிப்பர் காப்பியர்.

## குற்றியலிகரம்

குற்றியலுகரத்தைத் தொடர்ந்து ய் வரின் குற்றியலிகரம் தோன்றும் (பாக்கு+யாது> பாக்கியாது) இது இடச்சார்பான திரிபாகும். (Positional Variant) ஒரே சொல்லினுள் உருபன் எல்லையில் இவ்விடுப்பொலி தோன்றலும் உண்டு. (கேண்ம்+யா > கேண்மியா)

## ஆய்தம்

வ், ல், ள்- என முடியும் ஓரசைச்சொற்கள், வெடிப்பொலியை முதலாகவுடைய சொற்கள் வரும்போது திரிபடைந்து இரட்டித்த வெடிப்பொலியன்களாகின்றன. இவை இரு அமைப்புடையன.

1. [C]Vv + P > (c) VPP = அவ் + கடிய > அக்கடிய

2.1 [C] VL + t [c] Vr rV கல் + தீது > கற்றீது

2.2 [C] VL+t> [c] Vtt = முள் + தீது > முட்டீது

முதல் வகையில் ஆறு வெடிப்பொலி இரட்டைகளும் அடுத்ததில் நாவளை அல்லதுநுனியண்ணவெடிப்பொலி இரட்டைகளும், இடம் பெறும் இவற்றிற்கு இணையான மாற்று வடிவங்களை (அஃகடியகஃறீது, முஃடீது) நெடில் உரசொலியாகக் கொள்வர் தெ.பொ.மீ.

தொல்காப்பியர் அஃகு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இது அன் + கு < அல்கு > அற்கு > அக்கு > அஃகு என்றாகியிருக்க வேண்டும். மேலும் பயனிலைத் தொடரில் முள்+தீது> முஃடீது என ஆகும் என்றும் எழுவாய்த் தொடரில் இவ்வாறு ஆகாது என்றும் காப்பியர் குறிப்பிடுவார். இதனால் காப்பியர் காலத்திற்கு முன் வெடிப்பொலி உரசொலியாக மென்மை பெற்றது எனலாம். காப்பியரே, ஆய்தம் ஓர் எழுத்தன்று என்கிறார் யாப்பருங்கல விருத்தியில் ஓர் ஆசிரியர், ***ஆய்தம் ஓர் எழுத்தன்று வெறும் குறியீடே*** **(Diacratical Mark)** ***என்பது தொல்காப்பியர் கருத்து*** என்கிறார். ஆய்தம் என்பது தொடர்ந்து வரும் நெடில் வெடிப்பொலியை உரசொலியாக உச்சரிக்க வேண்டும் என்பதைக் குறிக்கவரும் ஒருகுறியீடே.

# 6. சங்க காலத் தமிழ் ஒலியன்கள்

உயிர்களில் சில மாற்றங்களைத்தவிரச் சங்கத்தமிழ் தொல்காப்பியத் தமிழை அடியொற்றியதாகும். உயிரிடை வகர,யகர உடன்படுமெய் வழக்குமிகுதி. உருபுகளில் மரீஇ > மருவி போன்ற மாற்றங்கள் இடம் பெறும். அளபெடைகளும், நெட்டுயிர்களும், குற்றுயிரும் ஒன்று வருகின்ற இடத்து மற்றொன்று வரும் (free variants) (எடு : எடுப்பதும் = எடுப்பதூம் = எடுப்பதூஉம்)

செய்யுளில் குறில், நெடில், உயிர்கள் வேற்றுநிலை வழக்கின்றி அமையும். (எ-டு: என்னோடு: கலை...) எகர உயிர் அகரமாகிறது (கண்டெனம் > கண்டனம்) ஊ > ஆ ஆகிறது (மெய்யூ > மசயயா)

தொல்காப்பியத்துக்கு மாறாக ச். ஞ், ய், ஆகியன அகரத்துடன் கூடி. மொழி முதலாகின்றன (சமம், ஞமலி , யவனர்) யகர மெய் ஊ காரத்துடன் கூடியும் வருகிறது. (யூபம்) மொழி இறுதியன்றி, மெய் தொடர மொழியிடையிலும் குற்றியலுகரம் அமைகின்றது. (அக்குழு) மெய்ஒலியன்களில், மொழி இறுதி மூக்கொலி மருங்கொலியாகிறது. ஆ > ஆல்; இன் > இல்; வேண் > வேள் இவையன்றிப் பழைய மூக்கொலி பேணப்படும் இடமும் உண்டு. *போன்ம்* என்ற ஒரே மெய்ம் மயக்கம், தொல்காப்பியர் குறிக்க. சங்க இலக்கியத்து, மருண்ம் கேண்ம் சென்ம் போன்றவை காணப்படுகின்றன. கு கரமாக ஆய்தம் எழுதப்பட்டது (அஃது > அகுதை) இதனைத் தனி ஒலியனாக எண்ணத் தோன்றுகிறது.

## 7. பல்லவர், சோழர் காலத் தமிழ் ஒலியன்கள்

இக்காலத்தும் ஐந்து உயிர்களும் அவற்றின் நீட்சியும் வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. எ, ஒ மொழி இறுதி ஆவதில்லை எஞ்சியன மூவிடத்தும் வரும்.

பல்லவர் காலத்தில் ங், ந், தவிரப்பிற மெய்கள் வேற்றுநிலை வழக்கில் வரும். ங், ந், முறையே ம்,ன் இன் மாற்றொலியன்களாகும். சோழர் காலத்தில், ங், ந், ஞ் தவிர எஞ்சிய மெய்கள் வேற்று நிலை வழக்கில் வருகின்றன. வடமொழியின் செல்வாக்கால் kh, g, gh, d, dh, th, bh, b, bh, S,s, ksh, s, d- ஆகிய ஒலியன்கள் கற்றோர் மொழியில் இடம் பெறுகின்றன. ஒட்டக்கூத்தர் (கிபி.12ம் நூ ஆ) பாடலில் ர்,ல் உயிருடன் கூடி மொழி முதலாகின்றன. வட மொழிச் செல்வாக்கால், தமிழில் இல்லாத உயிர், மெய்ம் மயக்கங்கள் இடம்பெறுகின்றன.

### உயிர் ஒலி மாற்றம்

1. நெடில்மெய் அல்லது மெய்ம் மயக்கங்களுக்கு முன்னுள்ள நெட்டுயிர் குறுகும் (நீங்கி > நிக்கி: திருவேட்களம் > திருவெக்களம்)

2. மெய்ம் மயக்கங்களைத் தவிர்க்கச் சுரபத்தியாக இ. உ. சேர்க்கப்படுகின்றன. முந்திய அல்லது ஒலி இதழ் அல்லது நாவளை ஒலியாக இழுப்பின் உகரம் வரும், பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும் போது இ சுரபத்தியாகிறது. (த்ரிசி > திரிசி; ப்லா > பிலா)

3. பல்லவர் காலத்தில் அ > இ, உ, ஐ, எ, ஐ, ஒ ஆக மாற்றம் பெறுகின்றது.

(எ-டு) மங்களம் > மங்கிலம்.
கொண்டது > கொண்டுது
அரசர் > அரைசர்; அத்தை > ஐத்தை
கங்கை > கெங்கை; களிறு > கெளிறு
அனுபவித்து > அனுபொவித்து
உங்கள் > உங்கொள்

4. உ > இ, ஒ ஆகிறது.

(எ-டு) அமுது > அமிது! களஞ்சு > களஞ்சி
உலகம் > ஒலகம்; குலோத்துங்கன் > கொலோத்துங்கன்

5. எ > இ ஆகிறது. (பெயரால் > பியரால்) இதுவே இதழ், நாவளை, நுனியண்ண ஒலிக்கு முன் அல்லது பின் ஒ ஆகிறது.

(எ-டு) தென்றிசை > தொன்றிசை;
செம்பாதி > சொம்பாதி; நெளிந்து > நொளிந்து

உருபன், ஒலியன் நிலைகளில் இ > உ ஆகிறது. தமிழ் > தமுழ்

7. இ, ஈ, எ, ஏ ஆகிய உயிர்கள் யகரமெய் இறுதி பெற்றுச் சந்தியக்கரம் ஆகின்றன. ஐ என்பது கூட ஐய் என எழுதப்படுகிறது.

8. ஐ அ, எ ஆகிறது (ஐந்து > அஞ்சு; தலை > தலெ). இங்கு ஐ எ மாற்றத்தில் எகரம் தொல்காப்பிய விதிக்கு முரணாக மொழி இறுதியாகிறது.

9. மொழி முதலில் யகரம் உடம்படு மெய்யாகிறது (யிக்கோயில்).

## மெய் ஒலியன்கள்

1. இடையண்ணச் சாயல் பெறும் நிலையில் இடையண்ண முன்னுயிர் காரணமாக ந் > ஞ் ஆகிறது (கைந்நின்ற > கைஞ்நின்ற).

2. இடையண்ண முன்னுயிர் வர த் > ச் ஆகும் (வைத்த > வைச்ச).

3. வேர் இறுதி யகர மெய் கெடுகிறது (மேய்ந்த > மேந்த).

4. இடையண்ண ஒலிகள் சில பல்லினச்சாயல் பெறுகின்றன (ஞாயிறு < நாயிறு).

5. பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் சமஸ்கிருதப் பகுதியில் வரும் தமிழ் இடப்பெயர்கள், உயர்திணைப் பெயர்களில் வெடிப்பொலிகள் ஒலிப்புடை ஒலியாக எழுதப்பட்டன (**Rajagecari Laugarivam**). ஏனையவற்றில் உயிரிடை வெடிப்பொலி ஒலிப்பின்றியே அமைந்தது. பாரகன், வடகளவழி.

6. இன மூக்கொலிகளைத் தொடர்ந்து வரும் வெடிப்பொலிகளும் சமஸ்கிருதச் சொல் தவிரப் பிற சொற்களில் ஒலிப்பில்லா ஒலியாகவே அமைந்தது.

(எ-டு) வேம்பநாடு செங்குடி
**Cangaman** - சமஸ்கிருதச் சொல் (ஒலிப்புடைமை)

7. வெடிப்பொலிகளின் ஒலிப்புடைமை மிகுதியாக மூக்கொலிகளை அடுத்து அமைகிறது. பின் இவை மூக்கொலிச் சாயல் பெறுகின்றன. முதற்கண் கடையண்ண வெடிப்பொலியே மூக்கொலிச்சாயல் பெற்றிருக்க வேண்டும். (அங்கனம் > அங்ஙனம்) ஏனை வெடிப்பொலிகள் சோழர் காலத்தில் ஒரோ வழி மூக்கினச் சாயல் பெறுகின்றன. (முகத்து > முகந்து; அம்பது > அம்மது).

8. ந், ன் ஒன்றாதலுக்கான அடிப்படை தொல்காப்பியத்திலேயே இடம்பெறுகின்றது. பல்லவர் காலத்தில் ந வுக்குப் பதில் ன வருமிடம் 10% ன் வுக்குப் பதில் ந் வருமிடம் 2% இது னகர மெய் ந வின் இடத்தைப் பிடித்துள்ளதைக் காட்டும்.

9. ற், ர் - ஒன்றாதலுக்கான சுவடு பத்தாம் நூற்றாண்டில் காணப்படுகிறது.

(எ-டு) மேற்கு > மேர்க்கு; ஏவற்படி > ஏவர்ப்படி;
கார்க்களிறு > காற்களிறு; ஊர்க்கால் > ஊற்கால்;
தரை > தலை; நிறுத்த > நிருத்த.

10. வட மாவட்டக் கிளைமொழிகளில் 7-ஆம் நூற்றாண்டு முதல் ள ழ வாகிறது (வேள்வி > வேழ்வி; வளம் > வழம்).

11. தென் மாவட்டங்களில் 8-ஆம் நூற்றாண்டு முதல் ழ ள வாகிறது (கிழமை > கிளமை; புகழ் > புகள்).

12. கல்வெட்டுக்களில் ல ள ஒன்றாதல் காணப்படினும், இதனை எழுத்துப்பிழை என்பர்.

13. ய் > யி ஆகிறது (செய் > செய்யி).

14. ர கர மெய் ன், வ், ம், நெடில் வெடிப்பொலி, ந்த், இடையீடு (Pause) ஆகியவற்றிற்கு முன்வரும்போது மறைகிறது. (கீர்த்தி > கீத்தி; கிளர்ந்த > கிளந்த; அவர் நாடு > அவநாடு).

15. ப் > ம் ஆவதும் உண்டு உயிரிடையில் (நிபந்தம் > நிமந்தம்).

16. உயிரிடை வெடிப்பொலி இழப்பு சவில் நிகழ்கிறது. பதிலாக ய கரம் தோன்றும் (வைகாசி > வையாசி; இசைத்த > இயைத்த).

17. ய > ச வாகும் இடமும் உண்டு (உயர்ந்த > உசந்த).

18. வெடிப்பொலி அல்லாத மெய்யீற்றுச் சொற்கள் குற்றியலுகரம் போன்று உகர ஈறு பெறுகின்றன (கல் > கல்லு).

19. பல்லவர் காலத்தில் மொழியிடையிலும் குற்றியலுகரம் அமைகின்றது.

20. ஆய்தம் தேவாரத்தில் ஒலிப்புடை ஒலியாகிறது. (அழகு > அழஃகு) யகரத்திற்கு எதுகையாகப் பெருங்கதையிலும், நம்மாழ்வார் பாடலிலும் அமைகிறது. அவிநயத்தில் ஆய்தத்திற்கும் ய கரத்திற்கும் ஒப்புமை இருப்பது சுட்டப்படுகிறது.

குகைக் கல்வெட்டு ஆய்த வரிவடிவம் இகர வடிவை 90 டிகிரி திருப்பி அமைத்துத் தரப்படுகிறது. ய - இ ஒலி அமைப்பில் ஒன்றே. எனவே குகைக் கல்வெட்டு ஆய்தத்திற்கு ய அல்லது இ மதிப்பைத் தருவதாகக் கொள்ளலாம். இதனை உறுதி செய்வது போல வேள்விக்குடிச் செப்பேட்டில் ஈது - இஃது - இது மாற்று வடிவம் ஆகும்.

## 8. நாயக்கர் காலத் தமிழ் ஒலியன்கள்

உயிர் ஒலிகள் அளவு, தன்மை நிலையில் மாற்றம் அடைவது இக்காலத்திற்குரிய சிறப்புக் கூறாகும்.

1. நெடில்மெய் அல்லது மெய்ம்மயக்கங்களுக்குப் பிறகு உயிர் குறுகும்போக்கு உள்ளது. (காண்போம் > காண்பம்)

2. மெய்கட்கு இடையில் உயிர் மறைந்து ஏற்படும் மெய்ம்மயக்கம் தவிர்க்க இ, உ. சுரபத்தியாகிறது. இச்சுரபத்தி இ இதழ் ஒலி மெய் வரும் போது உ ஆகிறது. (அடிமை > அட்மை > அடுமை)

2:1 வேர்கள் ($C_1 V_1 C_2 V_2 C_3$) வாய்ப்பாட்டில் அமைந்து $C_3$ ழ், ல், ர் - இல் ஒன்றாக அமைந்து $V_1$ உயிர் இ கரமாக இருப்பின் அது உகரமாகும். (சிவிர் > சிலுர்; தமிழ் > தமுழ்; மதில் > மதுலு)

2:2 பகற்குறித்த வாய்பாட்டில் அமையும் மொழி இறுதி று > ரு > ர் ஆகும். (வயிறு > வயிர் > வயர்)

2:3 மொழியிறுதி உ > இ ஆகும் (புக்கு > புக்கி) மொழியிடையிலும் இம்மாற்றம் உண்டு. $C_1 V_1$, $C_2 V_2$, $PV_3$ வாய்ப்பாட்டில் $V_3$ குற்றியலுகரம் ஆயின் $V_2$ உயிர் இதழ் விரியாக மாறும். (எ-டு) இருப்பு > இரிப்பு.

3. அ > இ, உ ஆகிறது. (தண்டனை > தண்டினை; வந்தது > வந்திது)

3:1 ஐ > அய், அ, எய், எ ஆகிறது. (ஐம்பது > அம்பது; நைவேத்யா > நெய்வேத்தியம்)

3:2 எய் > அய் > ஐ ஆகிறது. (கண்ணிலெயும் > கண்ணிலயும் > கண்ணிலையும்)

3:3 ஔ > அவு, எவு - என ஆம். (கௌதமன் > கவுதமன் > கெவுதமன்)

3:4 எ > அ (எல்லாம் > அல்லாம்)

3:5 ய > எ, அ (யமன் > எமன்; யமுனை > அமுனை)

**மெய்கள்**

1. சமஸ்கிருதச் சொற்களைத் தமிழ்வரிவடிவில் எழுதக் கிரந்த எழுத்துக்கள் இக்காலத்தில் புகுத்தப்பட்டன. கற்றவர் மொழியில் சமஸ்கிருத உச்சரிப்புப் பின்பற்றப்பட்டது, வடசொற்களைத் தமிழாக்கம் செய்யும் போது நாவளை உரசொலி இடையண்ண வெடிப்பொலியாகவும் (risi > rici) நுனியண்ண ஒலியாகவும் (kastam > kasti) மாறுகின்றன. மேலும் அம் > ஐ ஆகவும் (மாதம் > மாத்தை) ர் ழ் ஆகவும் (அமிர்தம் > அமிழ்தம்) மாறுகின்றன.

2. ற் உயிரிடையில் த் ஆகவும் மூக்கொலியை அடுத்து ட் ஆகவும் ஒலிக்கப் பெறுகிறது. (நேற்று > நேத்து > நேட்டு)

3. ழ், ள் - வரும் சூழலில் ந்த் > ண்ட ஆகிறது. (சூழ்ந்த > சூண்ட, ஏந்தலர் > ஏண்டலர்)

4. ஒரினமாதல் விதிப்படி மாட்சி > மாச்சி, செல்வம் > செல்லம் ஆகிறது.

5. க வுக்கு முன் அல்லது பின் உயிர் வரின் ய ஆகும். (கன்னிகம் > கன்னியம்) மொழியிடையில் இவ்வெடிப்பொலி இழப்புறவும் செய்கிறது. (நான்முகன்)

6. சமஸ்கிருதச் செல்வாக்கால் ஈஸ்வரன் > ஈஸ்பரன் ஆகிறது.

7. ன் நெட்டுயிர் ம் க்கு முன் இழப்புறுகிற்து. (நான்முகன் > நான்முகன்)

8. மூக்கொலி வல்லொலிக்கு முன் இனமூக்கொலியாகிறது. (மாண்பு < மாம்பு)

9. மூக்கொலி, வெடிப்பொலிக்கு முன் பெற்றும் (அருங்கலை), பிற சூழலில் இன்றியும் (அருவிலை) அமையும். பின் ஒப்புமையாக்கத்தால் எல்லாவிடத்தும் மூக்கொலி தோன்றும். (பூம்வாவி)

10. மொழி இறுதி ர், ல் -லும், மொழி இடை ய், ர், ல் -லும், இழப்புறுகின்றன. (தண்ணீர் > தண்ணி; வாய்க்கால் > வாக்கா)

11. ஓரசை வேரில் ர் தோன்றும். (கோ > கோர்)

12. ல, ர - இரு வேறு கிளைமொழிகளில் மொழி இறுதியிலும், மொழி இடையிலும் உறழ்ச்சியாக வரும்.

(எ-டு) பந்தர் > பந்தல்; அரற்றி > அலற்றி.

## 9. தமிழின் புற வரலாறு

ஒலியின் இயல் நிலையில் இங்குத் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குச் சென்ற சொற்களின் ஒலிமாற்றங்களையும். வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்த சொற்களின் ஒலி மாற்றங்களையும் ஆய்கிறார் தெ. பொ. மீ

1.0 தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்தில் இடம்பெறும்போது, ப > ர ல வாகிறது. (தூத்துக்குடி > Tuticorin, சஞ்சாடி > mangellin ) இரண்டாவதில் குற்றியலுகரம் மூக்கொலியைப் பெறுகிறது.

1.1 ச > sh, ss, s - ஆகிறது. (எ-டு) காசு > Cash; வீசை > Viss; சோலை > Solai.

1.2 த், ட், > ற் ஆகிறது. (தேயிலை > (tea) (ற்றீ)

1.3 எ > இ (ய்) ஆகிறது (பிள்ளை > Poly)

1.4 மொழி இறுதி இ > எ ஆகவும் (Kanchi காஞ்சி > Conje), உ > oo ஆகவும் (சுருட்டு > Cheroot ), அ > o ஆகவும் (கணக்க > conico ) மாறுகின்றன.

1.5 அ > aw ஆகவும் (தண்ணி > tawney), அ > an ஆகவும் (சிந்தாதிரிப்பேட்டை > Cintaudripet), ஆ > எ ஆகவும் (mancati > mangellin), அ > எ ஆகவும் (marakkal > mercal), ஐ > ay ஆகவும் (palai > palay) மாறுகின்றன. தமிழ் நெட்டுயிர் குறுகுகிறது. (மரக்கால் > mercal)

1.6 குற்றுயிருக்குப் பின்வரும் வெடிப்பொலி நீட்சி குறிக்கப்படுவதில்லை (திருச்சி > Trichy), அதோடு மொழியிடை உயிர், விட்டிசை ஒலியாகிறது. இது சுரபத்தி உயிரால் தடுக்கப்படலும் உண்டு. (கணக்க > கணிக்க > Conico)

1.7 ப > F ஆகிறது. (பணம் > Fanam) யகர உடன்படுமெய் மறைகிறது. (கயிறு > coir), ற் > r ஆகிறது (கறி > carry) ள் > (l) ஆகிறது. (மிளகு > mulliga), குற்றியலுகரம் மறைதலும் (காசு > cash ), இறுதி அசைவிடப்படலும் உண்டு (ஆணைகொண்டான் > anacond), மூக்கொலிக்குப் பின்வரும் வெடிப்பொலி, ஒலிப்புடை வெடிப்பொலி யாகவும், மூக்கொலியாகவும் மாறுகிறது, (மஞ்சாடி > mangelin) குற்றியலுகரம் சிலபோது ing என ஆகிறது. (சுண்ணாம்பு > chunaming) வ > ப வாதலும் உண்டு. (வெற்றிலை > betel)

2. ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தும்போது சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவற்றில் மொழி முதல் n இழந்தாலும் hearing ஈரங்கி வ ஆதலும் (affidvait> அவிடவெட்டு), மொழி முதல் அ இழத்தலும் (attorney > தரணி) b > வ ஆதலும் (bank > வங்கி) மொழி முதல் மெய்ம்மயக்கம் சுரபத்தி உயிரால் தடுக்கப்படுதலும் (plauge > பிளேக்கு) ஆங்கில மருங்கொலி பலவிடங்களில் தமிழில் நாவனை மருங்கோலியாதலும் முதலான மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன.

3.0 வட சொற்களைத் தமிழ்ப்படுத்துகின்ற நிலையில் அதன் ஒலிப்புடை ஒலிகள், அச்சொற்கள் குழிந்துரசொலிகள் முதலான தமிழில் ஒலியன் நிலைபெற்றுள்ளன.
(pavam, bhavam; kuru, guru)

3.1 ஒலியன் மாற்றங்களில் ஒ > உ ஆதல், அ > ஐ ஆதல் குறிப்பிடத்தக்கன. (gauri > கவுரி; sita > சீதை)

3.2 ஒலியன் சமன்பாட்டு நிலையில் ஐ > w ஆதல் (aja > அயன்) S > சத ஆதல் (isa > ஈசன்; masam > மாதம்). S > ச, ட, ழ (visam > விசம் > விடம்; hasa > பாழை) h > அ, க ஆதல் (hara > அரன்) (vahana > வாகனம்) ks > ச்ச், ட்ச், க்க் ஆதல் (paksi > பட்சி > பச்சி; aska > அக்கம்) முதலான மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன.

3.3 முன்வைப்புயிராக (prothetic vowel) அ, இ, உ ஆகியன ர்ல், ங் -ஐ மொழி முதலாக உடைய வடசொற்களில் வரும்.

(எ-டு) ratna > அரத்தன் இரத்தினம்
loha > உலோகம், yaksa > இயக்கன்.

3.4 தமிழில் வாரா வடமொழி மெய்ம்மயக்கங்கள் சுரபத்தி, ஓரினமாதல், நிலையில் தவிர்க்கப்படுகின்றன. ர், ல், ய் - மெய்களுடன் வரும் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இகரச் சுரபத்தியும் வ் அல்லது ம் இருப்பின் உகரச் சுரபத்தியும் அமையும்.

(எ-டு) brahman > பிரமன்; plava > பிலவம் இ
phaga > பாக்கியம்
padma > பதுமம்; pakva > பக்குவம் உ

3.5 ஓரினமாதல் நிலையில், முதல் மெய்க்கேற்ப இரண்டாவது மெய் திரிதலும், இரண்டாவது மெய்க்கு ஏற்ப முதலாவது திரிதலும் உண்டு.

mh > mm - Simham > சிம்மம்
st > tt - Kastom > கட்டம்

3.6 மெய்ம்மயக்கத்தில் இரண்டாவது மெய் ய் அல்லது ர் இருப்பின் இழப்புறும். (sraman > சமண)

3.7 அநுஸ்வரமாக மகர மெய் அமையும். இது பின்வரும் வெடிப்பொலிக்கு ஏற்பத் திரியும். (simhan < cimkam)

3.8 ரகர மெய்க்குப் பின்வரும் மெய் குறிலாகிறது. (karma > கர்மம்)

3.9 வெடிப்பொலி, தனக்குமுன் மூக்கொலி பெற்றிருக்கவில்லையாயின் இரட்டிக்கும் (cakra > சக்கரம்)

இங்ஙனம், *தமிழின் புறவரலாறு* பகுதியில் தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்திலும் ஆங்கிலச் சொற்கள் தமிழிலும், வடசொற்கள் தமிழிலும் எழுதப்படும்போது ஏற்படுகின்ற ஒலித்திரிபுகளை விளக்குகிறார் தெ. பொ. மீ.

## 10. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் ஒலியன்கள்

இருபதாம் நூற்றாண்டில், பொது மொழியன்றி, வட்டார அளவில் மட்டும் வழங்கும் கிளைமொழிகள் பல உண்டு. இதனைத் திசைச்சொல் என்பர் காப்பியர். நச்சினார்க்கினியர் மயிலைநாதர் வீரசோழிய உரைகாரர் முதலானோர் பல திசைச்சொற்களைக் குறிப்பர்.

1. இன்றைய வடஆற்காடு மாவட்ட வேலூர்ப்பகுதிகளிலும் சென்னைத் தமிழிலும் இசுலாமியச் செல்வாக்கால் இருக்கிறது > கீது என ஆகிறது. மேலும் ழ > ச, ய ஆதல் மிகுதி. (இழு > இசு; பழம் > பயம்).

2. தென் ஆர்காடு மாவட்டச் சிதம்பரத் தமிழில் ழ < ஷ வாகிறது. (திருவிழா > திருவிஷா). தென் மாவட்டங்களிலும், இலங்கையிலும் ழ > ள ஆகிறது. (பழம் > பளம்).

3. *அவர்கள்* பிராமணர் தமிழில் *அவா, அவாள்* என்றும், வட ஆர்க்காட்டுத் தமிழில் *அவுங்க* என்றும், கோவை, நெல்லை மாவட்டங்களில் *அவிய* என்றும் வழங்குகிறது.

4. குழிந்துரசொலியாகிய (s) மதுரை மாவட்டத் தமிழில் *ஜ* ஆகிறது. (samam < jam am)

5. எண்பது > எண்பளது > என்பளது - எனத் தென்தஞ்சைத் தமிழில் ஆகிறது.

6. ஈரோட்டுத் தமிழில் ல், ள் வேற்றுநிலை வழக்கில் வருவதில்லை. தென் மாவட்டங்களில் ழ, ண வேற்றுநிலையாவதில்லை. நாஞ்சில் நாடு நீங்கலாக ஏனைய பகுதிகளில் ர், ற் வேற்றுநிலையாவதில்லை. சேலம், கோவைத் தமிழில் ஞ், ன் - வேற்றுநிலையாவதில்லை. நாஞ்சில் தமிழில் *ங்* தனி ஒலியனாகிறது (அங்ஙனம் > அங்கனம்).

7. காயல்பட்டின இசுலாமியர் தமிழில் ae.e வேற்றுநிலைவழக்கில் வருகிறது. (vangi > vengi)

8. கல்லூரி மாணவர் தமிழில் f p (v) வேற்றுநிலை வழக்கில் வருகிறது (Coffee, Copy). படித்த, இஸ்லாமியர் மொழியிலும் இந்தியில் புலமை பெற்றார். தமிழில் z j வேற்றுநிலையாகின்றன.

9. மொழியிடை உ > அ ஆகிறது. மொழி முதலில் அ > எ நிபந்தனையற்ற மாற்றமாக (free variation) சில கிளைமொழிகளில் வருகின்றது. (வாங்கி oo வேங்கி) ஐ > எ > எE ஆகிறது. அகரம் முன்னுயிர் (ae) ஆகிறது.

10. மேல் உயிரால் தொடரப்படாத போது இ, உ முறையே எ, ஒ ஆகும். ஈரிதழ் நாவளை ஒலிகட்கு முன் எ > ஆகும். (பெண் > பொண்ணு, மிடா > மொடா).

11. குற்றியலுகரம் பெறும் சொல்லின் முந்திய அசையில் உகரம் இருப்பின் அது குற்றியலுகரமாகும். (திரும்பு)

12. சில கிளைமொழிகளில் அசை முடிவில் தொடங்கும் சொற்கள் அசை முதலைப் பெறுகின்றன (இலை > யிலை).

13. மூக்கின் உயிரொலிகள் தனி ஒலியனாகின்றன. இவை வேற்றுநிலை வழக்கில் வருகின்றன. (அவ - அவன், அவ - அவள்).

14. ஒலிப்புடை வெடிப்பொலிகள் தனி ஒலியன்களாகின்றன. (Kuru > guru; Pavam > bavam)

15. பழந்தமிழில் இல்லாத மெய்ம்மயக்கங்கள் விரைந்தொலித்தல், கடன்வாங்கல் காரணமாக வழக்குப் பெறுகின்றன. (கட்டில் > கட்லு, மண்ணலெ > பல்லெ).

16. மொழி முதல் ஆகா மெய்களான ர், ல், ட் மொழி முதல் ஆகின்றன. (டப்பா, லாபம், ராசன்). மொழி முதல் ச > J ஆகிறது. (சாமான் > ஜாமான்) க < g ஆகிறது. (குதிரை > guthirai).

17. பகுப்பிற்கு அடங்கா ஒலியன்களாக (Supra Segmental Phonemes) நிறுத்திசை (Juncture) தொடர் இறுதி விட்டிசை (Terminal Juncture) தொடரிசைச் சுரம் (Intonation or Pitch) என்று மூன்று அமையும்.

இவற்றில் நிறுத்திசை, ஒட்டிசைச்சந்தி (Close Juncture) நிறுத்திசைச் சந்தி (Open Juncture) என இருவகைப்படும் தொடர் இறுதி விட்டிசைச் சமநிலை (l), எழுச்சி (l), வீழ்ச்சி (l), என மூவகை, தொடரிசைச் சுரம் கீழ் (1), நடு (2) மேல் (3), உயர் (4) என நான்கு வகைப்படும்.

# மொழி வரலாறு - உருபனியல்

உருபன், உருபு, மாற்றுருபு பற்றி விளக்குவது உருபன் இயல் மேலும் பகுக்க முடியாத மிகச் சிறிய பொருள் தருகின்ற வடிவமே உருபனாகும். மொழியில் அமையும் பொருள் தருகின்ற வடிவங்கள் அனைத்துமே உருபுகளாகும். இவற்றில் ஒரு பொருள் தரும் பல வடிவங்களில் ஒன்றைப் பழமைச் சிறப்பு, பெருவாரியான வழக்கு காரணமாக உருபன் எனக் கொள்வர். இது ஒரு கற்பனை வடிவாம். இங்ஙனம் ஒன்றை உருபனாகக் கொண்டபின் எஞ்சியவற்றை அதன் மாற்றுருபாகக் கொள்வர்.

தமிழில் ன், இ, ன், த், ட், ற், த்த், ந்த், முதலான இறந்த கால வடிவங்கள். இவற்றில் ***இன்*** ஐ உருபனாகக் கொண்டால் எஞ்சியன அதன் மாற்றுருபுகளாகும். உருபன்கள் கட்டு வடிவம் **(Bound form)**, தனி வடி வம் **(free form)** என இருவகை, தனித்தியங்கும் ஆற்றல் உடையன தனிவடிவம்; அல்லாதன கட்டு வடிவம்.

## 1. மூலத் திராவிட மொழி உருபன்கள்

1. மூலத் திராவிடமொழி இடப்பெயர்ப் பதிலிகளில் ***ஙகர*** விகுதி ஒருமையும், மகரம் பன்மையும் காட்டும் (நான், நாம்)

2. படர்க்கைப் பெயர்ப் பதிலிகள், தான், தாம் என்பன தற்கட்டுப் பெயர்ப்பதிலிகளாயின. பிராகூப் மொழியிலும் இந்நிலை உள்ளது அவனும் தான் அவரும் தாம்

3. தென் திராவிட மொழிகளில் உயர் திணையில் ஆண், பெண் எனப் பால்வேறுபாடு உண்டு. அஃறிணையில் இல்லை; ஒன்று பல என்ற பாகுபாடே உண்டு.

4. வட, மத்திய திராவிட மொழிகளில், ஆண்பால், ஆண்பால் அல்லாதன என்ற பாகுபாடே உண்டு. தமிழ், மலையாளத்தில் உள்ள பால் காட்டும் நிலை பிற்கால வளர்ச்சியே.

5. பெண்பால், அஃறிணைப் பெயர்களிலிருந்து வேறுபட்டு உயர்திணைப் பன்மையில் புகுத்து பின் ஆண்பால் ஒருமையிலிருந்து வேறுபட்டது.

6. பிந்திய வேற்றுமைத் தொகை வடிவங்கள் மூலத் திராவிடத்தில் அடையாக வந்திருக்கலாம் (எ.டு) பொன் (அடை) + குடம் (அடைகொளி)

## 2. மூலத் தென்திராவிட மொழி உருபன்கள்

மூலத் தென் திராவிட மொழி வாக்கியங்கள் பெயர்த்தன்மையதாக இருந்தன எனச் சில பயனிலை வடிவங்கள் கொண்டு நிறுவுகிறார் தெ.பொ.மீ, தமிழ் வினைமுற்றுக்களில் ஒருவகை காலத்தால் முந்தியன; ஐம்பால் மூவிடம் காட்டும் விகுதிகளைப் பெறாதன. மற்றவை இவ்விகுதிகளைப் பெற்றன.

செய்யும் எனும் வாய்பாட்டு வினை வடிவம் மிகப்பழையது. இதனை முக்காலத்திற்குரிய தென்பர் கால்டுவெல், இதன் வேருடன் ***கு*** அல்லது ***து*** சேர்ந்து பின் உம் பெற்று வரும் வடிவங்களும் உண்டு. (செய்கம் செய்தும்) செய்யும் வடிவு படர்க்கை அஃறிணை ஒருமை, பன்மையிலும், படர்க்கை உயர்திணையில் ஆண்பால், பெண்பாலிலும் மட்டுமே வரும். (அது செய்யும், அவை செய்யும், அவன் செய்யும், அவன் செய்யும்)

***கு*** அல்லது ***து*** பெற்றுத் தன்மைப் பன்மைக்கு வரும் (நாம் செய்கும், நாங்கள் செய்தும்) கன்னடத்தில் இவ்வடிவம், துகு-அசையுடன் மூவிடத்திற்கும் வரும். தமிழில் ஏன், ஆய் வடிவம் பழைய வடிவத்தன்மை, முன்னிலையில் வழக்கிழக்கச் செய்துவிட்டன.

செய்கு, செய்கும் எனும் ஒருமை பன்மை குறிக்கும் இரு பழைய வடிவங்கள் கிடைக்கின்றன. இன்று *ன்* ஒருமையும் *ம்* பன்மையும் குறிக்கும். எனவே செய்கும் வடிவில் பன்மை வடிம் இன்றளவு நிலைத்திருப்பதால் ஒருமை வடிவமும் *ன்* இருந்து மறைந்திருக்க வேண்டுமென்பர் (செய்குன் செய்கு), *செய்யும்* வடிவில், *செய்யுன் ந் ன்* வடிவம் இன்றேனும் தமிழில் இதனை மீட்டுருவாக்கலாம் புறம் 24-ம் பாடலில் செய்யுந்து, பாய்ந்து, தூக்குந்து, தரூஉந்து வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றில் *து,* கர விகுதியை நீக்கின், செய்யுந், பாயிந் தூக்குந், தரூஉந் வடிவங்கள் கிடைக்கும். ன்,ந் மூலத் திராவிட மொழியில் ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது. செய்யுநன், செய்யுநர் வடிவிலும் *செய்யுந்* வடிவை மீட்டுருவாக்கலாம் அஃறிணையில் *ன், ம்* மயங்கும் என்பர் காப்பியர் எனவே செய்யுந் செய்யுன் செய்யும் - வடிவங்கள் ஒன்றே, ஒருமையாகவும் பன்மையாகவும் வழங்கிய இவ்வடிவம் காலப்போக்கில் ஒருமை பன்மைக்குத் தனித்தனி வடிவங்களாயின.

## பழைய பயனிலை வடிவம்

நின்றோர்-நின்று+ஓர்-என்பதில் *ஓர்* வடிவை நீக்கின் *நின்று* வடிவம் கிடைக்கும். இதனை வினைமுற்று என விளக்குவர் பழைய உரைகாரர். *உணர்ந்திசின்* (உணர்ந்து+இசின்) *வந்தை (வந்து+ஐ) மறைந்தைக்க* (மறைந்து+ஐ+க) போன்ற வடிவங்களில் *செய்து* வடிவமே பழைய வினைமுற்று வடிவம் என்பதைத் தெளிவுபடுத்தும். இதனை *நின்றாங்கு* (நின்று+ஆங்கு), கண்டாங்கு (கண்டு+ஆங்கு) செய்தென (செய்து+என), உற்றென (உற்று+என) முதலான வடிவங்களும் வலியுறுத்தும்.

செய்து, செய்யும், செய்கும், செய்வல் போன்ற பழைய வடிவங்கள் காலம் காட்டும். ஆயின் *செய்து* வடிவம் துணை வினையோடு வரும்போது காலங்காட்டாது (வந்துவிடுவான்). இதனால் செய்து முதலான வடிவங்களில் ஆரம்பத்தில் காலங்காட்டவில்லை எனத் தெளியலாம் வருகிறேன் வடிவம் நிகழ்காலமாயினும், *நாளை வருகிறேன்* வடிவம் எதிர்காலத்திற்கு வருகிறது.

இறந்த காலம் குறிக்கும் உணர்ந்து, நுவன்று வடிவங்கள் பழைய நூல்களில் இறந்த காலம் அல்லாத காலம் குறித்தன. சென்றீ, வருதி போதி வடிவங்கள் உள்ளன (சென்று, வருது, போது) - *து* இறந்தகாலம் காட்டவில்லை. இது சொல்லாக்க அசையாக இருந்திருக்கலாம். *க* சொல்லாக்க அசையாக இல்லாதபோது காலங்காட்டும். சொல்லாக்க அசை, பிற்கால இடைநிலையாயின என்ற யூல்ஸ்ப்ளாக் கருத்துக்கு இது சான்றாகிறது.

தமிழ் வாக்கியங்கள் இணைப்புக்கள் இன்றி எழுவாய்+பயனிலையாக *இது மரம்* என்பது போல இருந்திருக்கலாம். அவன் *செயல்* என்பதில் தொழிற்பெயர் *செயல்* பயனிலையாகி அவன் செய்கிறான். அவன் செய்யட்டும் என ஆகிறது. இதுபோலத் *து* முதலான ஆக்க அசையும் வளர்ந்து பின்னர்க் கால இடைநிலைகளாயிருக்கலாம்.

ஒப்புமையால் காலங்காட்டும் (Relative Tense) முறையில், செய்து வடிவம் முற்றுக்களைச் சார்ந்தே காலம் காட்டும்.

(எ.டு) உண்டு வந்தான்-இறந்தகாலம்
உண்டு வருவான்-எதிர்காலம்

இதனாலும், *து* என்ற ஆக்க அசை பின்னரே இறந்த காலம் காட்டப் பயன்பட்டது எனத் தெளியலாம்.

## இறந்த காலம் அல்லாதன

*து* இறந்த காலம் காட்டலின் *ப* இறந்த காலம் அல்லாதன காட்டின. நிற்க நிற்ப வடிவங்களில் *க* வினை எச்ச விகுதியாயும், *ப* எதிர்கால விகுதியாயும் வரும். எல்லா எதிர்கால வினைமுற்றுக்களிலும் *க* ஆக்க அசையாக வரும் என்கிறார் சேனாவரையர். இதில் ப வின் மாற்று வடிவான *வ* எதிர்காலம் காட்டும் (உண்குவ, தின்குவ)

## உருபொலி மாற்றம்

இறந்த காலம் காட்டும் ஆக்க அசை *து* ன, ல்-க்குப் பின்வரின் *ற்* ஆகவும், ண், ள்-க்குப் பின்வரின் *ட்* ஆகவும் மாறும் (நின்று, தின்று உண்டு, கொண்டு) இதற்கு மாறாக அமையும் து இறந்த காலம் அல்லாதன காட்டும் (வருது, சேறு)

செல், கொள், எள், அகம் முதலான வடிவில் ஆக்க அசைசேரச் சென், கொண், எண், அகன் என ஆவதாகக் காட்டுவர். ஆயின் தெ.பொ.மீ. அவர்கள் சென், கொண், அகன் என்பதே மூல வடிவம் என்பர். காரணம், எள் + கடிது - எட்கடிது எனவும், அகல் + தலை - அகன்றலை எனவும் ஆதற்கு விதியில்லை. வை எண், அகன்-என இருப்பின் இவற்றை எளிதாக விளக்கிவிட முடியும் என்பது அவர் கருத்து.

## குரல்வளை வெடிப்பொலி

கூய், நாய்கி மொழி தவிரப் பிற திராவிட மொழிகளில் இவ்வொலி கிடையாது. தமிழ், கோலமி, கோந்த்-மொழிகளின் வட்டார வழக்கில்-குறிப்பாக எண்ணுப்பெயர்களில் இது காணப்படுகிறது.

திராவிட மொழிகளில் மொழி இறுதி உயிருக்கு முன்வரும் முதல் வெடிப்பொலி இரட்டிப்பதற்கும் (இறு-இற்று) இரட்டித்த வெடிப்பொலி பெற்ற ஈரசைச் சொல்லிறுதி உயிருக்குப் பின்வரும் வெடிப்பொலி இரட்டிப்பதற்கும் (பாக்கு+கடிது-பாக்குக்கடிது). குரல்வளை வெடிப்பொலியுடன் கூடிய இடைவெளியே காரணம் என்பர்.

இதுபோலக் கேள், கல், பார் முதலான வேர்களை வெடிப்பொலி தொடர்கின்றபோது இவை இரட்டிப்பதற்குக் காரணம் கேட்டான், கற்றான், பார்த்தான் இவ்வினை வேர்களில் குரல்வளை வெடிப்பொலி இருந்தமையே என்றும் தெளிவுபடுத்துவார். இவ்வினை வேர்கள் அடுத்துவரும் வெடிப்பொலி இரட்டிக்கவில்லை எனின், அதில் குரல்வளை வெடிப்பொலி இல்லை எனக் கொள்ள வேண்டும் (சேர் + த் + ஆன்) சேர்ந்தான்; (அணி + த் + ஆன்) அணிந்தான்.

அணி, சேர் என்பதன் இறந்தகால வடிவில் மூக்கொலி இருப்பதால் இதன் வேரில் மூக்கொலிஇருந்தது (அணிந், சேர்ந்) என்றும் இது எதிர்கால, ஏவல், வியங்கோள் வடிவில் இழப்புறுகிறது என்றும் கருதுவர் (அணிவர் அணிக).

# 3. குகைக் கல்வெட்டு மொழி உருபன்

1. குகைக் கல்வெட்டுகள் சிறியனவாதலின் இவற்றில் *செய்து* எனும் வினை எச்சம் காணப்படவில்லை ஆயின், பிறந்த, செய்த முதலான பெயரெச்சங்கள் காணப்படுகின்றன.

2. வினைமுற்றில் பெயரெச்ச வடிவோடு ஆண்பால் *அன்* விகுதியும் பலர்பால் *ஆர்* அல்லது *ஓர்* விகுதியும் சேர்க்கப்படுகின்றன.

3. இறந்தகால வினைகளில் வேருக்குப் பின் ந்த், த்த்-வடிவங்கள் உள்ளன.

4. ஏவுவோன்-இயற்றுவோன் வினைக்கும் (Causal) அங்ஙனம் அல்லா வினைக்கும் வேறுபாடு உண்டு முன்னதில் *பி* விகுதி இடம் பெறும் (கொட்டுவித்தோர்)

5. பெயர்களில் பெண்பால் விகுதி கிடைக்கவில்லை. இந்நிலையில் *பாழி* போன்ற சொற்களை ஆராய்தல் வேண்டும்.

6. தொடரியல் நிலையில் எழுவாய்-பயனிலைக்கு இடையே *இயைபு* இருக்கின்றது. (நிகமத்தோர் கொட்டியோர்)

7. வாக்கியம் தலைப்பு (topic) விளக்கம் (comment) என்ற அமைப்பில் பெயர்த் தன்மை கொண்டன.

8. சிறப்புப் பெயரும் இயற்பெயரும் இரு பெயர் ஒட்டாகவே அமைகின்றன. இங்குச் சிறப்புப்பெயர் இயற்பெயருக்கு முன்வரும் (வேண்-கோசிபன்; கணியன் இயக்குவன்).

9. இடப் பெயர்களும் இயற்பெயருக்கு முன் வரும் (எருக்கோட்டூர் ஈழக் குடும்பிகன்).

10. பண்புப் பெயர்களும் இயற்பெயருக்கு முன் ஒட்டாகின்றன. (இளங்குமரன்)

## 4. தொல்காப்பியர் காலத் தமிழ் உருபன்கள்

தொல்காப்பியர் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி எனப் பகுக்கிறார். உரிச்சொல் வேர் உருபனையும், இடைச்சொல் பிற உருபனையும் குறிக்கும். வேரல்லா உருபனை ஓரசை அல்லது ஈரசைகளில் தருகிறார். எல்லா வேர்களையும் குறிக்கச் செய் எனும் வடிவினைப் பயன்படுத்துகிறார்

### வேரல்லா உருபன்கள் (Root Morphemes)

உரிச்சொல், இசை, பண்பு, குறிப்பு எனப் பொருள்படும். இவை ஒரு பொருட் பன்மொழியாகவும், பல பொருள் ஒரு சொல்லாகவும் வரலாம்; வினையாகவும், பெயராகவும் அமையலாம். தொழிற் பெயர் வடிவில் இவ் வேர்களைத் தருகிறார் காப்பியர்.

### வேரல்லா உருபன்கள் (Non-root Morphemes)

வேரல்லா உருபனாகக் கால இடைநிலை, வேற்றுமைஉருபு, உவம உருபு, அசைநிலை இசைநிறை, தத்தம் குறிப்பிற்பொருள் உணர்த்துவன சாரியை முதலான அமையும். அசைநிலை, இசைநிறை, சாரியை முதலான அனைத்துமே பழைய சொல்லாக்க அசைகளாக இருந்திருக்க வேண்டும் அல்லது துணை வினைகளாக ஒட்டுக்களாக இருந்திருக்க வேண்டும் எனக் கருதுவார் தெ.பொ.மீ.

### பெயர் வினை வேறுபாடுகள்

பெயர் எழுவாயாகும்; வேற்றுமை உருபு ஏற்கும் வினை முற்று பயனிலையாகும்; எழுவாயாக வரும்போது தவிரப் பிறவிடத்து உருபுகளை ஏற்காது. பயனிலை அல்லது வினை தெரிநிலை குறிப்பு, என இருவகை. பயனிலை தெரிநிலையாக இல்லாதபோது தமிழ் வாக்கியம் இருக்கின்றது போன்ற- இணைப்பு (copula) இன்றி அமையும் (இவன் இராமன்)

**வினை எச்சம்** வினை, பெயர் என இருவகை. இவை முறையே வினை பெயருக்கு அடையாகும். செய்து செய்யும் என்பன பெயரெச்ச வாய்பாடுகள், செய்து எச்சத்துடன் அ கர விகுதி சேர்த்தும், பெயர் வேருடன் அகர விகுதி சேர்த்தும் செய்த வடிவைப் பெறலாம் (செய்த, நல்ல) செய்யும் என்பது உண்மையில் பெயர் எச்சம் அன்று; வினை முற்றே காப்பியர் காலத்தில் பெயரடையாகிவிட்டது.

### வினை எச்சம்

செய்து, செய்யூ, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு-எனும் ஒன்பது வாய்பாடுகளில் இது அமையும்.

இவற்றில் முதல் மூன்றும் ஒருவகை, சார்ந்துவரும். வினை முற்றை அடியொற்றி காலம் காட்டும் *செய்*-வேர்: *து* - இறந்தகால இடைநிலை. *செய்து* -விலுள்ள வெடிப்பொலி *த்* நீங்கச் *செய்யூ* வடிவு அமைகிறது.

செய்தென என்பது செய்து+என என்பதன் கூட்டுவடிவாகும். செயற்க என்பதும் செயல்+கு என்பதன் தொகையே, *செயின்*-இல் உள்ள *இன்* *இல்*-லின் மாற்று வடிவாகலாம். இது நிபந்தனையாகவும், எதிர்காலங்காட்டுவதாயும் வரும் *செய்பு* வில் உள்ள *பு* சொல்லாக்க அசையே. இது இறப்பு அல்லாக் காலம் காட்டும். செ, செய்யிய, செய்யியர் எச்சங்கள் வியங்கோள் வினையிலிருந்து வளர்ச்சியுற்றிருக்க வேண்டுமென்பர் தெ.பொ.மீ. வியங்கோள் வடிவங்களான வாழி - வாழிய - வாழியர் என்பன பழைய பயனிலைகளை. இவற்றில் உள்ள இ,அர் பழைய சொல்லாக்க விகுதியே. இவை பின்னர் நோக்கத்தைக் குறிக்கும் எதிர்கால வினைஎச்சங்களாக மாறின எனலாம்.

### இறந்தகால இடைநிலை

*இ* இறந்த காலம் காட்டினும் காப்பியர் இதனை இறந்தகால விகுதி எனக் குறிக்கவில்லை. காப்பியர் மொழியில் எல்லாச் சொற்களும் இவ்விடை நிலை பெறுகின்றன. (உரீஇ+புகீஇ, கெழீஇ) இறந்த கால இடைநிலை பெறுகிறது. ட், ற் என்ப *த்* இன் மாற்று வடிவமே.

மொழி இடையில் இ > இன்= ஆகும். கொண்டாமொழியில் இஜின் (ijin) என வரும் இசின் இறந்தகாலம் ..ட்டும். இதில் ச் இழப்புற்று இ இன் > ஆயிற்று என்பர். தெ. பொ. மீ தொல்காப்பியத்தில் வரும் நுவன்றிசினே என்பதில் இசின் வருகிறது என்றும், இதனை இ + இசின் எனப் பிரிக்க முடியாது என்றும் அவர் கருதுவர்.

**வினைமுற்று**

வினைமுற்றாக வரும் ஆக்கப் பெயர்களையும் குறிப்பு வினையையும் காப்பியர் குறிப்பர். முதலதில் வேரில் அல்லது தொழிற் பெயர் வடிவில் திணைபால் விகுதி சேர்க்கப்பெறும் (நல் + அள் > நல்லள்) குறிப்பு வினையில் பெயரெச்ச வடிவில் சேர்க்கப் பெறும் (நல்ல அள் > நல்லாள்) இது *வ*கர உடன்படு மெய்பெற்று நல்லவன் என்றும், நல்லோள் என்றும் ஆகிறது. *அவள்* விகுதி ஓரிடத்து மட்டும் காணப்படுகிறது. ஒன், ஒன், ஒர் விகுதிகளின் வருகை காப்பியத்தில் மிகுதி.

## பெயர்ப்பதிலி விகுதிகள்

*1. தன்மை ஒருமை; கு, டு, து, று, அன், ஆன், என், ஏன், அல்*

*தன்மை ஒருமை; கும், டும், தும், றும், அம், ஆம், எம், ஏம்.*

*2. முன்னிலை ஒருமை; இ ஐ ஆய்; பன்மை: இர், ஈர், மின்*

*3. படர்க்கை உயர் திணை ஆண்பால்: அன் ஆன்: பெண் பால்: அள் ஆள் பலர்பால்: அர் ஆர்.*

*படர்க்கை அஃறிணை ஒருமை: று, டு, து; பன்மை: அ, ஆ, வ.*

விகுதிகளில் தன்மை, முன்னிலையில ஒருமை, பன்மையே உண்டு படர்க்கையில் மட்டுமே உயர்திணை அஃறிணைப்பாகுபாடு உண்டு. படர்க்கையிலும், உயர்திணை ஒருமையில் மட்டுமே ஆண், பெண்பால் பாகுபாடு உண்டு.

பெயர்ப்பதிலி விகுதிகள், நெடில் குறில் உயிர்களை முதலாக உடையன என இருவகை (அன் ஆன்). இவற்றில் குறில் உயிர்களை முதலாக உடைய விகுதியே காலத்தால் முந்தியது.

## பெயர்ப்பதிலி விகுதிபெறாவினை முற்றுக்கள்

ஒருமையில் கு, து, டு, று இசின் விகுதிபெறும் (செய்.., செய்து, உண்டு, சேறு, நுவன்றிசின்) வடிவங்களும் பன்மையில் கும், தும், றும், டும் விகுதி பெறும் வடிவங்களும் (செய்கும், செய்தும், உண்டும், சேறும்). இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இவை தொடக்கத்தில் காலங்காட்டாது பின்னர்க் காலங்காட்டத் தொடங்கின.

**முன்னிலை**

தமிழில் வேர்ச் சொற்கள் ஏவலாகும். பழைய பயனிலைகளும் ஏவலாக வழங்கியிருக்க வேண்டும். முன்னிலை அசை *இக* இலங்கைத் தமிழில் வழங்குகிறது. (சொல்லிக) முன்னிலை அசைமியாவில், பன்மை விகுதி *ம்* இழக்க *இயா* வாகும். இது *இக்* என்பதன் மாற்றுருபு ஆகலாம். இதுபோல் ஆகும் இசின் ஆகி இருக்கலாம்.

பழைய பயனிலை வடிவங்களான செய்யும். செய்து, தொல்காப்பியத்தில் பேணப்படுகிறது. இவற்றுடன் பெயர்ப்பதிலி விகுதி சேர்க்கப்படுதலும் உண்டு (செய்மனார், கண்டிசினோர்). *செய்து* வடிவில் *இசின்* விகுதி சேர்ந்து :பின் பெயர்ப்பதிலி விகுதி சேர்கிறது.

செய்யுந் வடிவை அடியாகக் கொண்டு பலவடிவங்கள் தோன்றியுள்ளன. (செய்யுநன், அறிஞர் தகுந) *செய்யுந்து* என்பது *செய்யும்* என்பதன் மாற்றுவடிவாக அமைகின்றது.

வினைமுற்று அடை + எழுவாயின் கூட்டுவடிவம் சேர்ந்து சாரியை பெற்றும், பெறாமலும் அமையும் (மரபு+இன் (சாரியை) + அ > மரபின) வேற்றுமை ஏற்கத் திரிந்த வடிவொடு பெயரெச்ச விகுதிகளையும், பின் பெயர்ப்பதிலி விகுதிகளையும், சேர்க்க வினைமுற்று அமைதலும் உண்டு. (புறம் + அத்து + அன் > வந்தனன்)

## மூவிடப்பெயர்

1. தன்மை ஒருமை: யான், என், பன்மை: யாம், நாம், எம், நம்
2. முன்னிலை ஒருமை: நீ, நின் பன்மை நீயிர், நீவிர் நும்.
3. படர்க்கை ஒருமை: தான், தன்; பன்மை: தாம், தம்.

இவற்றில் தம், நம், நும்-சாரியையாகவும்; தான் தாம் ஒன்றை வலியுறுத்திக் கூறவும் தொல்காப்பியத்தில் ஆளப்படுகின்றன.

## எண்ணுப்பெயர்

ஒன்று, இரண்டு, மூன்ற, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, ஒன்பான், ஒருபஃது, தொண்டு, பத்து, பஃது, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினைந்து, பதினேழ், இருபஃது, முப்பஃது, நூறாயிரம் ஆம்பல், தாமரை, வெள்ளம் - ஆகிய தனிவடிவங்களும்.

ஒரு, ஓர், ஓர், இரு, ஈர், மு, மூ, நால், நான், ஐ, அறு, எழு, எண் ஒன்பதிற்று, பதின், பான், பதின்ஓர், பன்ன்-ஈர், பன்ன்-இரு, முப்பத் (இரு) முப்-பத்தின், முப்பதிற்று, ஆயிரத்து ஆகிய ஆக்க வடிவமும் காணப்படும்.

எண் அடைப்பெயர் (ordinals) *முதல்* மட்டுமே அமையும். ஒருமை, இரட்டை, ஒருவன், ஒருத்தி, ஒருவர், நால்வர்-ஆகிய ஆக்க வடிவங்களும் காணப்படுகின்றன.

## தொகை

வேற்றுமைத் தொகை, அல்வழித்தொகை என இரண்டு உம்மை, உவமை, பண்பு, வினை அன்மொழி - என அல்வழித் தொகை, ஐந்து, அன்மொழி - குறிப்புப் பொருள் தரலின் அது பொருளனியலில் (Semantics) அடங்கும். உம்மைத் தொகை; இணை நிலைத்தொடர் (Co-ordinative Construction) ஆகும் பிற அடைத்தொடர் (attributive Construction) ஆகும். இத்தொகையில் உள்ள அடை தொடக்கத்தில் பெயருக்கும் வினைக்கும் வேறுபாடு இல்லாததால் இரண்டுக்கும் அமைந்தன, (நனிபேதை, நனிதின்றான்) பிற்காலத்தில் பெயர், வினை அடைகள் தனி வளர்ச்சி பெற்றுப் பெயரெச்சம், வினை எச்சம் ஆயின. தொகைகள், தனித்து வழங்கா வடிவங்களைக் கண்டறிய உதவும்.

வேற்றுமைத் தொகையும் அடைத்தொடரே என விளக்க முற்படுவர் தெ. பொ. மீ. இது உருபு தொகைலைச் சுட்டவில்லை என்பர் சேனாவரையர். இதில் சிறப்புப் பொருள் குறிக்க வரும் இடைச் சொற்களே பின்னர் வேற்றுமை உருபுகளாக வளர்ச்சியுற்றன.

ஆறாம் வேற்றுமை அடைத்தொடரின் விரிவே இது. ஏழாம் வேற்றுமைப் பொருளையும் கொண்டிருக்கிறது. (மரக்கிளை > மரத்தினது கிளை மரத்தின் கிளை) திசை - நோக்கம் குறிக்கும் நான்காம் வேற்றுமை உருபு. பெயர்ச் சொல்லின் அடையாக இருந்திருக்கலாம். (புணர் நிலைக்கு) ஐந்தாம் வேற்றுமையும் பொன்வளை) அடைத்தொடரின் விரிவே.

## வேற்றுமை உருபுகளின் வளர்ச்சி

பழைய விகுதி அன் அ, 6-ஆம் வேற்றுமை குறித்துப் பின் பெயரெச்சம் குறித்துப் பின் கு சேர்த்து இரட்டை உருபாகி ஆறாம் வேற்றுமை உருபாயது (என் + அ + கு > எனக்கு) பலவின் விகுதி *அ* மயங்க *அது* ஆறாம் வேற்றுமை உணர்த்திற்று (எனது). இதில் *து* பழைய சொல்லாக்க அசையே.

நான்கன் உருபு கு வடக்கு போன்ற திசைச் சொல் ருந்து வந்திருக்க வேண்டும். இது உயர்திணையில் 6, 7-ஆம்-வேற்றுமைப் பொருள் தரலின் (எனக்கு மகன், மணற்கு ஈன்ற முளை) இதனை வேற்றுமை மயக்கம் என்பர்.

7-ஆம் வேற்றுமை உருபுகள் இடப்பெயர்களே. ஐந்தன் உருபு *இன்* இல்லொடு மயங்கும். ஒப்புமைப் பொருள் குறிக்கும் பின்னர்த் தவறாக நீங்கல் பொருள் குறிப்பதாக எண்ணப்பட்டது. மூன்றன் உருபு *ஆன், அவ்விடம்* எனும் இடப்பொருள் குறித்துப்பின் இடப்பொருள் அல்லாப்பொருள் குறித்தது. *மரம்* என்பதிலுள்ள *அம்* விகுதி செயப்படுபொருள் உறுப்பாகிப் பின் அது *அம்* > *ஐ* > என மாற்றம் பெற்றது (பனங்கள் > பனை) எனவே அடைத்தொகைகளின் மாறுபட்ட பொருள் நுட்பங்களைச் சிறப்புற வளர்க்கச் செய்யப்பட்ட முயற்சிகளே விகுதிகள் அல்லது இடைச்சொற்கள், பின்னர் வேற்றுமை உருபுகளாக வளர்ச்சி பெற்றன எனத் தெளிவுபடுத்துகிறார் தெ. பொ. மீ.

### சாரியை

தொல்காப்பியர் சிலசாரியைகசுள் பற்றிக் குறிப்பர். ஆயின் தெ. பொ. மீ அவர்கள் சாரியை என்று ஒன்று இல்லை; தொசைகளின் முதற் சொற்களின் பழைய ஈறுகளே என்பர்; குன்றம். குன்று இதில் *அம்* சாரியை என்பதைவிட அது பழைய சொல்லில் இருந்தது எனக் கருதுவர். இதுபோலப் *பான்* என்பதில் உள்ள *அன்* சாரியை அன்று, இது பழைய மாற்று வடிவம் என்பர் (ஒன்பான் ஒன்பது பான்)

## 5. சங்க காலத் தமிழ் உருபன்கள்

### 1. தன்வினை - பிறவினை

து, ந்து-தன்வினையும், *த்து* பிற வினையும் குறிக்கும். (வருந்து வருத்து). ஆயின் ந் த், த், த் - எல்லா இடங்களிலும் தன் வினை - பிறவினையாவதில்லை. *பார்த்து* - தன்வினையே, ஈந்து - ஈத்து இரண்டுமே தன்வினை. எனவே தன்வினை பிறவினை வேறுபாடு பிற்கால வளர்ச்சியே பிறவினை இறந்த கால வடிவில் இரட்டித்துவரும் *த* கரத்தில் ஒன்று பிறவினை, மற்றது இறந்த காலம் காட்டும்.

### 2. ஈரேவல், ஈரேவல் அல்லாவினை

*ப்* விகுதி ஈரேவல்வினையையும், இது இன்றி வருவது ஈரேவல் அல்லா வினையையும் குறிக்கும் தன்வினை பிறவினை அஃறிணைக்கு வர, இது உயர்திணைக்கும் வரும் (போர்ப் பித்து) ஈரேவல் வினை வருகை தொல்காப்பியத்தை விடச் சங்க இலக்கியத்து மிகுதி, ப், ம் - மெய் அடுத்து *ப்* - பும் பிற சூழலில், இகரமும் ஈரேவல் வினையாகிறது.

### 3. முற்று

தன்மையில் கு, து, டு, டும், தும், டும் - விகுதிகள் மெல்ல மறைகின்றன. அம் எம் வருகை குறைந்து அம் ஓம்; எம் > ஓம் ஆகின்றன என் > அன் - ஆகிறது.

முன்னிலையில் *போதாய்* போன்ற வழக்கு மிகுதி இர். அய் வழக்கு குறைந்து. ஈர், ஆய் வழக்கு மிகுகிறது. *ஐ* விகுதி இடம் பெறும் வியங்கோளில் வாழிய-வாழிக்குப் பதில் *வாழ்க* வழக்குப் பெறுகிறது *அல்* விகுதி எதிர்மறை வியங்கோள் ஆகிறது.

படர்க்கைப் பலர்பாலில் *செய்யா* வழக்கு குறைவு *செய்ம்மனார் என்மார்* மறைந்து *செய்வார்* வழக்கு மிகுகிறது. அஃறிணை வினை முற்றில் ஒருமை, பன்மை வேறுபாடு குறைகிறது. எல்லாம் ஒருமை, பன்மை குறிக்கிறது. புறநானூற்றில் இது உயர்திணைக்கும் வருகிறது. இதேபோல் உண்டு வடிவமும் அமையும் முற்றில் அன் சாரியை மறைகிறது. கள் விகுதி இரட்டைப் பன்மையாக உயர்திணையிலும் வருகிறது. (மற்றையவர்கள்-குறள்)

### 4. எச்சம்

கொளீஇ போன்ற இறந்தகால வடிவம் உடம்படுமெய் பெற்று அமைகிறது படு > பட்டு ஆகாது *படுத்து* என்றும் புகு புக்கு என ஆகாது. *புகுந்த* எனவும் ஆகின்றன.

நிபந்தனை காட்டும் *செயின் > செயில்* ஆகிறது. செய்து எச்சம்

*ஆல்* விகுதி பெற்றுச் *செய்தால்* என்றும் *செய்யும்* வடிவம் *ஏல்* பெற்றும் வறக்குமேல் பெயரெச்சம் கால் விகுதி பெற்றும் நிபந்தனையாகும் ப்ப க்க நிபந்தனை உருபாகும்.

எதிர்கால எச்சம் *செய்ப* மறைந்து *செய்பான்* செய்வான் செய்பவர்க்கு வடிவம் நோக்கத்தைக் காட்டுகின்றன. இதுபோலச் செய்யிய, வடிவிற்குப் பதில் *செய்* வருகிறது.

### 5. துணைவினைகள்

*செய்* எச்சம், *வேண்டும், படும், தரும்* வடிவுடன் சேர்ந்து துணை வினையாகிறது (வரவேண்டும்), *படும்* என்பது கலித்தொகையில் செயப்பாட்டு வினையாகிறது. (கைப்படுக்கப்பட்டாய்). சிலம்பில் உண் (கடியுண்ட) செயப்பாட்டு வினையாகிறது. இடு, வீடு முதலான துணை வினையாகின்றன.

## 6. பல்லவர் சோழர்கால உருபன்கள்

1. உயிர் உடம்படுமெய்யின்றி அமையும் (கோஇல்), இது இடையீட்டுடன் உச்சரிக்கப் பெறுவதைக் காட்டும்.

2.மூக்கொலியுடன் கூடிய வடிவம் பிறவினையாகிறது (அழுந்து தவிந்து)

3. *இல்* இடைச்சொல் வேர்ச்சொல்போல வருகிறது (கிற்பான்)

4. இறந்த காலம் அல்லாத குறிக்கும் ப் வ் இல் இருந்து மாறுபட்டு நிகழ்காலம் குறிக்கக் *கிறு, கின்று* அமைந்தன.

5. வியங்கோள் படர்க்கைக்கே அன்றி மூவிடத்திற்கும் வருகின்றது. (கடவெனாகவும், கடவீராகவும், சடவாராகவும்).

6. *செய* வடிவுடன் *இரு, கிட, நில்* எனும் துணை வினைகள் சேர்ந்து நிகழ்காலம் காட்டும் (செய்யா கிடந்தான்) இவற்றின் பிறழ்பிரிப்பால் ஆகிந்து ஆநின்று ஆவிருந்து என்பன நிகழ்கால வடிவங்களாகக் கொள்ளப்பட்டன.

## 7. நாயக்கர் கால உருபன்கள்

1. சங்க கால ஈந்து ஈத்து வடிவங்கட்கு இணையான வடிவங்கள் இக்காலத்துத் வரும் (பூண்டு-பூட்டு )

2. குற்றாலக் குறவஞ்சியில் *போகினும்* எனும் குறவர் வழக்குச் சொல் காணப்படுகிறது.

3. கு பல வேர்களில் சொல்லாக்க அசையாகிறது (அழு + கு > அழுகு சிற + கு > சிறகு).

4. *பல்* வேர் குகரச் சொல்லாக்க அசைவுடன் உயரமும் பெறுகின்றது (பலுக்கு ) *குளிக்கை இருக்கையில்* என்ற தொழிற்பெயருக்குப் பதில் *குளிக்கு* இருக்கில் வடிவம் வந்து நிபந்தனைப் பொருள் தருகினறன.

5. *செய்தால்* வடிவுக்குப் பதில் *செய்கின்றால்* வருகின்றது. (நீர் ஆடுகின்றதால்) *உம்* சேர்த்துச் செய்தாலும் எனவினை எச்சமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது செய் + அல் > உம் *செயலும்* என்பதும் வினை எச்சமாக வளர்ந்துள்ளது.

6. *கனவு* என்ற பெயர்ச்சொல் கனிமை எனப் பண்புப் பெயராகிறது.

7. எதிர்காலத்திற்கே சேர்க்கப்பட்ட *மை* விகுதி பிறவற்றிற்கும் சேர்க்கப்பட்டுத் தொழில்அல்லது பண்புப் பெயரைத் தோற்றுவிக்கிறது. (செய்தமை, செய்கின்றமை) மை > மல் எனப் பின்னர் மாறுகின்றது (செய்யாமை > செய்யாமல்).

8. செய + > அ *செயர்* - என எதிர்மறை வடிவம் அமைகிறது. ஒப்புமையாக்கத்தால் செய்யது செய்யாத வடிவங்களும் அமைகின்றன.

9. செய்திலன், செய்கின்றிலன் முறையே இறந்த, நிகழ்காலம் உணர்த்தலின் செய்யான் எதிர்காலமாயிற்று.

## பெயர்ச் சொற்கள்

1. வேற்றுமையில் கருவிப்பொருளும் நீங்கற் பொருளும் ஒன்றாகும் போக்கு உள்ளது. (பகையுடைமையால், பகையுடைமையின்) இதுபோல இடப்பொருள் நீங்கற்பொருள் வேற்றுமைகள் ஒன்றாகின்றன.

2. வேற்றுமை உருபுகளின் ஆட்சி மிகுதி; சாரியை பொருளற்றனவாகின்றன. அஃறிணைப் பெயர்ச் சொற்களில் சாரியை இன்றி வேற்றுமை உருபுகள் புணர்கின்றன. (மாடத்து > மாடக்கு)

3. வயின், மிசை, கண், உழி முதலான வேற்றுமை உருபுகளின் வழக்குக் குறைகிறது.

4. வேற்றுமை உருபு ஆன் > ஆல் ஆகிறது இன் > இல் ஆகிறது ஒடு ஒடு ஆகிறது.

5. வேற்றுமை உருபுகட்குப் பதில் சில சொற்கள் நின்று அப்பொருளை உணர்த்துகின்றன. (வாள் கொண்டு-வாளொடு) பொருட்டு, *ஆக* சொற்கள் நான்காம் வேற்றுமையும் (அவன் பொருட்டு, அவனுக்காக); *இருந்து, நின்று* சொற்கள் ஐந்தாம் வேற்றுமையும் (வீட்டிலிருந்து, வீட்டில் நின்று) உடைய ஆறாம் வேற்றுமையும் (அவனுடைய) உணர்த்துகின்றன.

## பெயர்ப்பதிலிகள்

1. சுட்டுப்பெயரில் *இதோ* (இந்தா) வடிவின் வழக்கு மிகுதி.

2. *தான்* - தன்மை ஒருமை வடிவம் பெருவழக்குப் பெறுகிறது.

3. முன்னிலையில் உருபு ஏற்க *நுன்* வடிவம் வருகிறது. *உம், உன்* வழக்கு மிகுதி நீவிர்வடிவங்கட்குப் பதில் நீர் வழக்கு, மிகுதி.

4. படர்க்கையில் *தான், தாம்* - வடிவங்கட்குப் பதில் அவன், அவள் வழக்குப் பெறுகின்றன. தான், தாம் - தற்சுட்டாக - சாரியையாக - அழுத்த அசைநிலையாக ஆயின. காலப் போக்கில் இடைச் சொற்களாகவும் வேற்றுமை உருபுகளாகவும் ஆயின.

5. வடமொழித் தொடர்பால் காரன், சாலி, அரவு - ஆகிய புதிய விகுதிகள் தோன்றின. (புத்திசாலி, வேலைக்காரன், தோற்றரவு)

6. தொடரில் வினை எச்சம் போல, உடன்பாட்டுப் பெயரெச்சமும் அடுக்கி வருகின்றன. 6-ஆம் வேற்றுமை உருபைத் தொடர்ந்து தனித்து வழங்கும் வடிவமும் வருகிறது. (பிள்ளையின் அந்த வினையால் அணையும் பெயர் காலங்காட்டாது பெயர்ச் சொல்லாகிறது (கேட்டது).

# 8. தமிழ் மொழியின் புற வரலாறு

பண்பாடு, அரசியல் கலப்பின் காரணமாகப் பல தமிழ்ச் சொற்கள் பிறமொழிக்குச் சென்றுள்ளன. பல பிறமொழிச் சொற்கள் தமிழில் புகுந்துள்ளன.

## பிறமொழியில் தமிழ்ச் சொற்கள்

1. முண்டா மொழியில் மயில், மஞ்ஞை > மரக் என்றாகிறது. இது போலக் கேரள முரள ஆகிறது.

2. வட மொழியில், வேதகாலத்தில் வழங்கும் மயூர, Khala (கல) Phala பல முதலான சொற்கள் மயில் , களம், பழம் ஆகிய திராவிடச் சொற்களிலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். வல் > Pala (பலம்) ஆகியிருக்க வேண்டுமென்பர் எமனோ. மேலும் பல தமிழ்ச் சொற்கள் வடமொழியில் மாறி அமைகின்றன. கைதை > கைதகா: எலம் > ஏலா : பல்லி > பல்லி புற்று> புத்திக தமிழில் உள்ள நீர், மீன் மின் - சொற்கள் நீர மீன என வழங்குகின்றன.

3. *காஞ்சி* என்ற தமிழ்ச்சொல் சீன மொழியில் உறவாங் - த்சே (hcuangtche) என வழங்குகிறது.

4. சப்பான் மொழியிலுள்ள *கடனா* நெடுங்கணக்கில், தமிழின் செல்வாக்கு இருப்பதாகக் கருதுவர்.

5. சிங்கள மொழி யாப்புமுறை தமிழிலிருந்து வந்ததாகக் கருதுவர் தமிழன் > damila என இம் மொழியில் வழங்குகிறது. சிங்களக் கல்வெட்டில் *பெருமகன்* என்ற தமிழ்ச் சொல் காணப்படுகிறது.

6. சம்பாவில் பரவியுள்ள வரிவடிவம் தென்னிந்திய வகையைச் சேர்ந்ததாகக் கருதுவர்.

7. தோகை > துகி என உறிப்ரு மொழியில் ஆகிறது. சுமேரியத் தலைநகர் *ஊர்* என்பது தமிழ்ச் சொல் *ஊர்* என்பதுடன் தொடர்புடையது.

8. அரிசி > oruza என்றும், தமிழகம் > damearica என்றும் ஆர்க்காடு > ஆர்க்காடு என்றும் கிரேக்க மொழியில் ஆகிறது.

9. ஆங்கிலத்தில் 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் பல தமிழ்ச் சொற்கள் புகுந்துள்ளன. வெற்றிலை (betel), காசு (cash), மாங்காய் (mango), வீசை (viss) முதலான பல சொற்கள் 17-ம் நூற்றாண்டிலும்; பந்தல் (Pandal), வண்டி (bondy), சட்டி (chatty) முதலான சொற்கள் 18ம் ஆம் நூற்றாண்டிலும்; காணி (cawney), குயில் (Koel), வெட்டிவேர் (vettiver) முதலான சொற்கள் 19-ம் நூற்றாண்டிலும் ஆங்கிலித்தில் புகுந்துள்ளன.

## தமிழில் பிற மொழிச் சொற்கள்

1. முண்டா மொழிச்சொல் tabeg, தமிழில் தவளை என்றும்; tiong, வழுதுணை என்றும் ஆஸ்டிரிக் மொழிச்சொல் niyor, தமிழில் இளநீர் என்றும் misi, bisai என்பது தமிழில் மீசை வீசை என்றும் அமைகின்றன. *சம்பளம், கிம்பளம்* எனும் எதிரொலிச் சொற்களும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையும் முண்டாமொழிச் செல்வாக்கால் அமைந்தனவே.

2. தொல்காப்பியர் வடசொல் எனப் பாலி சமஸ்கிருத, பிராகிருத மொழிச் சொற்களைக் குறிக்கிறார். அவர் காலத்து உலகம் (லோக) காலம் (கால) முதலான சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் புகுந்தன. பின் சங்க இலக்கியத்தில் யவனர் யூபல் முதலான சொற்களும், சிலம்பில் தருமம், ஞானம், இயக்கி, முதலான சொற்களும், குறளில் ஆதி பகவன் முதலானவும் பிராகிருத பாலி மூலங்களிலிருந்து புகுந்தன. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில்தான் உண்மையான சமஸ்கிருதப் பாதிப்பு ஏற்பட்டது. பல்லவர், பாண்டியர், சோழர், நாயக்கர் கால அரசர் பெயர்களும் இடப்பெயர்களும் வடசொல் சிறப்பிடம் பெற்றது. 20 ஆம் நூற்றாண்டில் தனித்தமிழ் இயக்கம் தோன்றினும் இருடி, (rsi) இடவம் (r'sapa), அயன் (ajan), ஈசன் (isa), அரண் (hara) ராகம் (ra'gam) முதலான வடசொற்கள் வழக்கில் புகுந்தன.

3. சிங்கள மொழியிலிருந்து ஈழம் (simhala > s la > ila)முருங்கை (Murunga), பில்லி (pilli) ஆகிய சொற்கள் இடம் பெற்றன.

4. *Keoah* என்ற தாய்லாந்துச் சொல் ருந்து *காழகம், கடாரம்* என்ற சொற்களும், gadong என்ற மலாய்ச் சொல் ருந்து *கிடங்கு, கிட்டங்கி* என்ற சொற்களும் gaang என்ற ஜவானியச் சொல் ருந்து சொங்கு என்ற சொல்லும் வந்துள்ளன.

5. சாம்பான் (Sampon), காங்கு (Kang), பீங்கான் முதலான சொற்கள் சீன மொழியிலிருந்து வந்துள்ளன

6. மத்திகை, கருங்கை, சன்னல், ஓரை முதலான சொற்கள் கிரேக்கத்திலிருந்து வந்ததாகக் கமிழ் சுவலபில் கருதுவர்.

7. யூதர் (Yaudi) ஜேசு (Jeshua) சொற்கள் ஹீப்ரு மொழியிலிருந்து வந்துள்ளன.

8. இலாக்கா, இஸ்லாம், இசும், கொசுரு, கசர், சுபேதார் முதலான சொற்கள் அரேபியச் சொல்லிருந்து தமிழுக்கு வந்துள்ளன.

9. டபேதார், தவாலி, திவான், ரஸ்தா, சமீன், சர்க்கார், சர்தார் முதலான பெர்சியச் சொற்கள் உருமொழி வழியே வந்துள்ளன.

10. கலிங்கம், கத்தரி, கடப்பாரை, பாயாசம், தரகர், குப்பம், பக்தர் முதலான சொற்கள் தெலுங்கிலிருந்து தமிழில் புகுந்துள்ளன.

11. *வடுகர்* என்ற சொல் கன்னடத்திலிருந்து வந்ததாகும். சக்கை கஞ்சி, வெள்ளம், அவியல், அங்கணம் முதலான மலையாள மொழிச் சொற்களாகும். இதன் செல்வாக்கு நாஞ்சில் தமிழில் மிகுதி.

12. பட்டாணி, காயம், கச்சாயம், கிச்சடி, கேசரி, சேமியா முதலான 56 மராத்தி மொழிச் சொற்கள் தமிழில் புகுந்துள்ளதாகக் குறிப்பர்.

13. கெடுபிடி, சராய், கைதி, சப்பரம், சீனி, சீட்டு தயார், சாமான் முதலான உருதுச் சொற்கள் தமிழில் இடம் பெற்றுள்ளன.

14. போர்த்துக்கீசிய *frank* என்ற சொல் ருந்து பறங்கியர், பறங்கிப்பழம், பறங்கிக்காய் முதலான சொற்கள் பிறந்தன. branco என்ற நோய் *பறங்கிப்புண்* என்றாகிறது. பீரங்கி, பாதிரி, கடுதாசி, பேனா, அலமார்ரி, தோசை, வாத்து, மேசை, சாவி முதலான சொற்களும் போர்த்துக்கீசியச் சொற்களே.

15. *கக்கூசு, துட்டு* முதலான டச்சுச் சொற்கள்.

16. பத்தாய், பாட்டில், போத்தல், லாக்கர், தம்பூர் முதலான பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் புகுந்தன.

17. ஆட்சித் தொடர்பான கவர்னர், போலீசு முதலானவும் சட்டத் தொடர்பான ஜட்ஜு, ஈரங்கி, உயி மவுண்டு, தரணி முதலானவும் ராணுவம் தொடர்பான பட்டாளம், துருப்பு முதலானவும் அறிவியல் பண்பாடு தொடர்பான டெலிபோன், டிராம் முதலானவும்; நோய் தொடர்பான பிளேக்கு முதலானவும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் புகுந்தன.

## 9. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உருபன்கள்

### வினை

1. வினை முற்றுக்களில் இறுதி ள், ன், ர் மறைகின்றன. (செய் தான் > செய்தா படித்தான் > படிச்சா).

2. இறந்த கால இடைநிலைகளாக த் ச், த்த ச்ச் ந்த ஞ்ச் ண் ட் ன்ன் இ இன் ன் ஆகியன அமையும்.

3. *கொண்டு* எனும் துணைவினை, கொண்டு > கொணு > க்னு *க்னு* (எடுத்துக்னு) எனவும்; கொண்டு > கொடு > க்கு (எடுத்துக்டு) எனவும் இருவகை மாற்றம் பெறுகின்றது.

4. நிகழ்காலத்தில் வேரின் உகர முடிவு பலவிடங்களில் மறைகிறது. இங்கு ற் அல்லது ச்ற் நிகழ்காலங் காட்டும்; வேரின் இறுதி ல், ள், ர் மெய்களும் இழப்புறும்.

5. *வ், ய்* எதிர்காலம் காட்டும்; இங்கு எல்லா வேரும் (யகரத்தில் முடியும். வேர் தவிர, செய் > செய்ய) உகர முடிவு பெறும். (தின்னுவா தின்குவா).

6. அஃறிணையில் எதிர்காலம் காட்ட, ஒருமையிலும் பன்மையிலும் செய்யும், வாய்ப்பாடு பயன்படுத்தப்படுகிறது. நிகழ்காலத்திலும் ஒருமை பன்மைக்கிடையில் பலவிடங்களில் வேறுபாடு இல்லை, அது விகுதி பெற்ற அஃறிணை வினைமுற்றில் *த்*, க்ற் நிகழ்காலம் காட்டும் (செய்யிறது).

7. மரியாதை விகுதி (Honorific Suffix) *ஆர்* விகுதி சேர்க்கப்பட்டன. அவர்+கள் சேர்ந்து உயர்திணை ஒருமை குறித்தது, முன்னிலையில் இதன் காரணமாக நீ, நீர், நீம், நீங்கள் - ஆகிய உயர்திணைப் பன்மை வடிவங்கட்கிடைபே' வேறுபாடு தோன்றியது; நீ, தாழ்ந்தோரையும் நீர், நீம் சமமானவரையும், நீங்கள் உயர்ந்தோரையும் குறித்தன.

ஏவல் வினையையும், இம்மரியாதை விகுதி பாதிக்கிறது. நட தாழ்ந்தோரையும், நடவும் சமமானவரையும், நடவுங்கள் உயர்ந்தோரையும் குறித்தன. அருளும்-சேர்ந்து நடந்தருளும் என்பது மிகுந்த மரியாதை குறித்தது. கடவுளரையும் சாமியையும் அஃறிணை ஒருமையில் குறித்தல் (சாமி தந்தது) மரியாதையாகக் கருதப்பட்டது. ஆண், பெண்பால் குறித்தற்கு அஃறிணை ஒருமை (அண்ணன் வந்தது. அக்காள் வந்தது) மரியாதை குறித்தது.

ஏடா, ஏடி, அடி, அய்யா, ஓ அய்யா, ஓய் - முதலான விளிச்சொற்கள் டா, டீ யா, மா, பா ஆகி உயர்வு ஒருமையாகின்றன. வந்தாண்டி, வந்தாண்டா தாழ்ந்தோரையும், வந்தாயா, வந்தாம்மா, சமமானவரையும்; வந்தாம்பா-உயர்ந்தோரையும் *வந்தாங்கோ*-மிக முக்கியமானவரையும் குறித்தன.

8. துணை வினைகள் பலபொருள் தரப் பயன்பட்டன. (மேல்+பார்வை > மேற்பார்வை; கீழ்+அடங்கும் > கீழடங்கும்) வினைகட்குப் புதிய பொருளைத் தரவும் இவை பயன்பட்டன (செய்தருள்).

*போ* நிகழவிருப்பதையும் (செய்யப் போகிறான்) மூலவினையின் பொருளையும் (தூங்கிப் போனான்) குறிக்கும் *வா* வழக்கத்தைக் குறிக்கும் (செய்து வருகிறான்) *இரு* காத்திருப்பதை அல்லது தயாராக இருப்பதைக் குறிக்கும் (வந்திரு) கொண்டிரு-செயல் தொடர்வதைக் குறிக்கும் (செய்து கொண்டிருந்தான்) *இடு, வீடு*- செயல் முடிவையும் (வந்துவிட்டான்) உறுதியையும் (வந்துவிடுவான்) குறிக்கும். *போடு* முடிந்த நிலை குறிக்கும் (கொன்று போட்டான்).

ஒழி, தொலை, அழு என்ற துணை வினைகள் வெடிப்புணர்ச்சியைக் குறிக்கும். (சொல்லி ஒழி, சொல்லித் தொலை, சொல்லி அழு), ஆ, ஆக்கு பண்ணு பெயரை வினையாக்கும் (ஆக்ஸிஜனாக்கு) *மாட்டான்* என்பது எதிர்மறைத் துணைவினை; *ஒட்டும்* என்பது *முடியும்* அல்லது *அனுமதிக்கப்பட்டுள்ளது* என்ற பொருள் தரும் (வரட்டும், போகட்டும்).

9. ஈரேவல் வினைவிகுதி வி > வை ஆகிறது (செயவைத்து)

10. விரைவு காரணமாக ற்ற் > க்க் ஆகிறது. ன்ற் > ன்ன் ஆகிறது நெடில் வெடிப்பொலி குறிலாகிறது. உயிரிடை வெடிப்பொலி உரசொலியாகிறது. த்த், ந்த் > ச்ச், ஞ்ச்-ஆகின்றன. மொழியிறுதி *ன்* மறைந்து அதனை அடுத்துள்ள உயிர் மூக்கொலிச் சாயல் பெறுகிறது.

11. காரன், காசி போன்ற விகுதிகள் தொடர்ந்து பெருவழக்கும் பெறுகின்றன. (வேலைக்காரி, தயிர்க்காரி, வண்டிக்காரன்) *த்வ்* என்ற சமஸ்கிருதப் பண்புப்பெயர் பெருவழக்குப் பெறுகின்றது. (முதலாளித்துவம், முக்கியத்துவம்) *ந்தன்* அல்லது *வந்தன்* என்பதும் விகுதியாகிறது (செல்வந்தன்) *அடமு, அடம்* என்ற தெலுங்குப் பெயர் விகுதி செயப்படு பொருளை அல்லது *செயலின் பயனைக்* குறிக்க வருகின்றது. (கட்டடம், தாழ்வடம், கரவடம்)

## 3. கிளைமொழியியல்

கோ. சீனிவாச சர்மா

(நூல் இருபாகங்களைக் கொண்டது முதல் பாகம் (1-7) கிளை மொழியின் ஆய்வு பற்றிய சிறப்புக் கூறுகளையும், அடுத்த பாகம் தமிழின் கிளைமொழிகள் பற்றியும் அமையும்)

### முன்னுரை

கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை நிற்பது மொழி; இது பேச்சு மொழி, எழுத்து மொழி என இருவகைப்படும். பேச்சு மொழியே எழுத்து மொழிக்கு அடிப்படை; காலத்தால் முந்தியதும் கூட, கிளைமொழி என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சு மொழியின் வகையைக் குறிக்கும். ஒன்றிலிருந்து கிளைத்தது கிளைமொழி எனல் பொருந்தாது.

பல தனி மனிதப் பேச்சு வழக்கு **(Idolect)** ஒரு கிளைமொழியையும் **(Dialect)**, பல கிளைமொழிகள் ஒரு மொழியையும் உருவாக்குகின்றன. தனி மனிதப் பேச்சு வழக்கில் நடை **(Style)** வேறுபாடு அமைதலும் உண்டு. இதனை 1. மரியாதையுடன் பேசும் நடை **(Formal Style)** 2. நண்பருடனும் உறவினருடனும் உரிமையாகப் பேசும் நடை **(Intimate Style)** 3. இலக்கிய நடை **(Frozen Style)** 4. செயற்கை கலவா இயல்பான நடை **(Informal Style)** 5. உரையாடல் நடை **(Conversational Style)** என ஐந்தாக வகைப்படுத்துவர். இத்தனி மனித நடையே கிளைமொழி ஆக்கத்திற்குக் காரணம் எனலாம்.

### 1. கிளைமொழிகள் வகை

காலம், இடம், சமூகம், சாதி, சமய அடிப்படையில் கிளைமொழிகளை வகைப்படுத்துவர். இவ்வகையில் வட்டாரக் கிளைமொழி (Regional Dialect) காலக்கிளைமொழி (Temporal Dialect) சமூகக் கிளைமொழி (Social Dialect) சாதிக் கிளைமொழி (Caste Dialects) ஆகியன குறிப்பிடத்தக்கன. சமகாலக் கிளை மொழி வகையும் (Contemporary Dialects), எழுத்து மொழியுடன் பெரும்பாலும் ஒத்துள்ள *பொதுப் பேச்சுமொழி* (Standard spoken Language) அல்லது *பொதுக் கிளைமொழியும்* (Standard Dialect) கிளைமொழிவகையில் குறிப்பிடத்தக்கன.

கிளைமொழிகள் ஒலியமைப்பு, ஒலியன் எண்ணிக்கை, ஒலியன் தனித்தும் தொடர்ந்தும் வரும்இயல்பு அதன் ஓசை (melody), ஏற்ற இறக்கம் (intonation), ஒலி அழுத்தம் (Stress), நிறுத்த அளவு (Juncture) அடிப்படையிலும், அவை உருபன்களாகவும் சொற்களாகவும் தொடர்களாகவும் அமைகின்ற நிலையிலும் மாறுபடுகின்றன. இம்மாறுபாட்டிற்குச் செய்தித் தொடர்பில் ஏற்படும் குறுக்கீடும் பிற மொழிக் கலப்பும் காரணமாகலாம். இருப்பினும் இவற்றிடையே புரிந்து கொள்ளும் தன்மை (mutual intelligibility) பெரும்பான்மையும் அமையும். இத்தன்மை *தொலைவு* (distance) அடிப்படையில் மாறுபடவும் செய்யும். அடுத்தடுத்து வழங்கும் வட்டாரக்கிளைமொழிகளில் புரிந்து கொள்ளும் தன்மை மிகுந்தும், இருவேறு எல்லைப் பகுதிக் கிளைமொழிகளில் இத்தன்மை குறைந்தும் காணப்படும். இனி ஒருகிளைமொழி வழங்கும் பகுதியில் கூட எல்லா இடத்தும் ஒரே மாதிரி அமைவதில்லை. அதன் மையப் பகுதியில் அக் கிளைமொழியின் தன்மைகள் மிகுந்தும், எல்லைப் பகுதியில் பிற கிளைமொழிகளின் செல்வாக்கால் அதன் தன்மை குறைந்தும் காணப்படும்.

### 2. கிளை மொழிகளை அறியும் முறை

கிளைமொழிகளைக் கண்டறிய மொழியியலார் *கிளைமொழிப் பாகுபாட்டுக் கோடு* (isogloss) என்ற கருத்தினை வலியுறுத்துவர். இது ஒலிப் பாகுபாட்டுக் கோடு (isophones) சொல்பாகுபாட்டுக் கோடு (isolexes) பொருள் பாகுபாட்டுக் கோடு (isosemes) என மூவகைப்படும்.

ஒலி, ஒலியன் அடிப்படையில் கிளைமொழிகளைப் பாகுபடுத்தல் ஒலிப் பாகுபாட்டுக் கோடாகும். காட்டாக க் > வ், ஹ் ஆகத் தென்ஆர்க்காடு மாவட்டக் கிளைமொழியில் மாறுவதையும் (மகன் > மவன், மஹென்) க் > ய் ஆகப் புதுக்கோட்டை மாவட்டக் கிளைமொழியில் மாறுவதையும் (மகன் > மயென்) காட்டலாம்.

ஒரு பொருள் குறிக்கும் பல சொற்கள் வழங்குமிடங்களைக் குறிக்கச் *சொல் பாகுபாட்டுக் கோடு* உதவும். அம்மாவின் அம்மாவைக் குறிக்கும் *பாட்டி* என்ற சொல் சேலம் மாவட்டத்திலும், *அம்மாயி* என்ற சொல் தென்னார்க்காடு மாவட்டத்திலும், *ஆயா* என்ற சொல் சென்னையிலும், *ஆச்சி* என்பது முகவை மாவட்டத்திலும் வழங்குதல் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

பல பொருள் குறித்த ஒருசொல் வழங்குமிடங்களை வரையறுக்கப் *பொருள் பாகுபாட்டுக் கோடு* துணை செய்யும். *அம்மெ* என்ற சொல் குமரி மாவட்டத்தில் அன்னையையும், பிறவிடத்து *அம்மை* நோயையும் குறித்தல் இதற்குச் சான்று.

## 3. கிளைமொழி ஒப்பீட்டு முறை

கிளைமொழி ஒப்பீட்டில் பழைய ஒப்பீட்டு முறை (Traditional comparative Method) பின்பற்றப்பட்டது. இங்கு ஒலியனின் வடிவம் மட்டுமே ஒப்பிடப்பட்டது. ஆதலால், அது, ஒலியன்கள் வருமிடத்தாலும் பிற ஒலி யன்களுடன் சேர்ந்துவரும் முறையாலும் வேறுபட்டு விளங்குவதைக் காட்ட முடிவதில்லை. எடுத்துக்காட்டாக, தென்னார்க்காடு மாவட்ட அரிசனர் (அ) மீனவர் (மீ) பேச்சுத் தமிழை ஒப்பிடலாம்.

### உயிர் ஒலியன்கள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | M | ஒ | ஓ |
| அ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | | ஒ | ஓ |

### மெய் ஒலியன்கள்

| | |
|---|---|
| மீ | க் ச் ட் த் ப் ஜ் ஷ் ம் ன் ண் ஞ் ங் ல் ள் ழ் ர் ற் வ் ய் |
| அ | க் ச் ட் த் ப் ஷ் ம் ன் ண் ல் ள் ழ் ர் ற் வ் ய் |

மேற்காட்டிய அட்டவணை மூலம் மீனவர் பேச்சில் மட்டும் உள்ள (ஜ் ங் ற்) ஒலியன்களைப் பழைய ஒப்பீட்டு முறை கண்டறிய உதவும். ஆயின் இம்முறை ஒலியன் மாற்றம், வரும் இடம் முதலானவற்றை விளக்க முடியாததால் இருமை முறை (Dia-System) கிளைமொழி ஆய்வில் கொள்ளப்பட்டது. இம்முறையில் ஒரு மொழியின் பல கிளை மொழிகளையும் ஒரே நேரத்தில் ஒப்பிட்டு ஆராய முடியும். இம்முறைப்படி, ஒரு கிளை மொழியிலுள்ள சொல் பிறிதொரு கிளைமொழியில் எவ்வாறு மாற்றம் பெறுகிறது என்பதை அறிய முடியும்.

(எ-டு) ழ் = மீ/-ழ/ ஆழு/
------- ஆளு/
அ/-ள்/

அன்றியும், இருகிளை மொழிகளில் உள்ள ஒத்த இணைகளைக் (Regular Correspondence) கண்டறியவும் இவ் இருமை முறை ஒப்பீடு துணை செய்யும்.

(எ-டு) 1மீ & அ ^ அ // இ =உ=எ=-ஒத்த இணை.
2 = = மீ -- எ ^
----------- மாறுபட்ட இணை.
அ/எ/

இங்கு முதல் எடுத்துக்காட்டு, மீனவர், அரிசனர் பேச்சில் உள்ள ஒத்த ஒலியன்களையும், அடுத்தது, ஒன் றுக்கொன்று மாறுபட்ட ஒலியன்களையும் குறிக்கும்.

### மாற்றிலக்கண முறையில் கிளைமொழி ஒப்பீடு

ஓர் அடிப்படைப் பொதுமையிலிருந்து மாற்றிலக்கண விதிகள் மூலம், ஓர் மொழியின் எல்லாக் கிளைமொழிகளையும் தோற்றுவிக்க முடியும். இப் பொதுமை வடிவம் ஒரு கற்பனை வடிவாகவோ ஒப்பிடப்படும்

கிளைமொழிகளில் ஒன்றாகவோ எழுத்து மொழி வடிவாகவோ இருக்கலாம். அதன் அடிப்படையில் மாற்றங்களை கிளைமொழி-1 (கி $_1$) கிளைமொழி 2 (கி $_2$) என அமைத்துக் கொள்ளலாம். இவ்வடிப்படையில் தென்னார்க்கா( மாவட்டப் பேச்சுத் தமிழ்: (கி $_1$) குமரி மாவட்ட விளவங்கோட்டுப் பேச்சுத் தமிழ் (கி $_2$) இரண்டையும் ஒப்பிட்( மாற்றங்களை மாற்றிலணக்கண முறைப்படி ஒன்பது விதிகளில் தருகிறார் ஆசிரியர் அவை:

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | [(. . உ =) (. . ஏ =) (. . ஐ =)] | - | [(உ) கி $_1$, கி $_2$ (எ) கி $_1$, கி $_2$ (ஏ) கி $_1$, கி $_2$] | பேச்சு > பேச்சு<br>நேரே > நேரெ<br>தேரை > தேரெ |
| 2. | (-அ) | - | [(எ). . ன், கி $_1$, கி $_2$ (ஒ). . ம், கி $_1$, கி $_2$] | -பேரன் < பேரென்<br>-ஏனம் - ஏனொம் |
| 3. | (-நெடில்+ய்) | - | (நெடில் + 0) கி $_1$, கி $_2$- தேய் > தேயி | |
| 4. | (உயிர்மெய் + மெய்) - | | ( உயிர்மெய் + மெய் + இ உ )<br>தேய்ங்கா > தேங்கா<br>தேள் தேளு | |
| 5. | (== எ. . ) | - | (யே) கி $_2$ ஏறு > யேறு | |
| 6. | ( = மெய் ஏ) | - | (மெய் + யே) கி $_2$ - தேள் > த்யேளு | |
| 7. | (-ச் ச் உ == ) | - | ( - ச்ச்இ ) கி $_2$- பேச்சு > பேச்சி | |
| 8. | (ற்) - > (ர்) கி $_1$ - | | சோம்பேறி > சோம்பேரி | |
| 9 | (ழ்) (ள்) கி $_1$ | - | ஏழு > ஏளு | |

## 4. கிளைமொழிக் கள ஆய்வு முறைகள்

மொழி எண்ணிக்கை அதிகமாக, மொழிக் குறுக்கீடுகளும் (interference) மாற்றங்களும் ஏற்பட்டுக் கிளை மொழி வடிவம் மாறுபடுகின்றது. எனவே கள ஆய்வு மிகத் தேவை. பரந்த அளவு கள ஆய்வு மேற்கொள்ளுமு முன்னோடி ஆய்வு (pilot survey) சிறிய அளவில் நடத்தப்பட வேண்டும். கள ஆய்வு நடத்தத் திட்டமிடுகிறவ அவ்விடத்திற்குச் சென்று கீழ்க்காணும் செய்திகளைச் சேகரிக்க வேண்டும்.

1. ஆய்வு நடத்தும் பகுதியின் பரப்பு, மக்கள் தொகை பேசும் மொழிகள், சாதி சமூகப் பிரிவுகள், சமய முதலியன.
2. மக்களின் வாழ்க்கை முறை, உணவு, உடை, தொழில் வீட்டமைப்பு.
3. மக்களின் கல்வி, பொருளாதார நிலை.
4. போக்குவரத்து வசதி, தங்கும் வசதி, குடிநீர், உணவு வசதி.
5. தகவலாளியைத் தேர்ந்தெடுத்து ஆய்வு நடத்த இட, பொருள் வசதி.
6. ஒலிப்பதிவு செய்ய மின்சக்தி, பாட்டரி பெற வசதிகளை அறிதல்.
7. குடியேறிய மக்களின் அன்றைய, முன்னைய மொழி அறிதல்.
8. கள ஆய்வுப் பருவத்தைத் தேர்ந்தெடுத்தல்.
9. துன்பம், இடையூறுகளைத் தாங்கும் மனநிலையை ஆய்வாளர் பெறல்.
10. கிளைமொழி பேசும் மக்களின் மொழி உணர்வு, தன்னுணர்வு அறிதல்.
11. கிளைமொழி பேசுவோர் பண்பாட்டினை அறிதல்.

இலி. கள ஆய்விற்குரிய பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல், தகவலாளியைத் தேர்ந்தெடுத்தல், தகவல் பெறு இடம் தேர்தல், அதற்குரிய கால அளவு முதலானவற்றில் கவனம் தேவை. கள ஆய்விற்கு ஓர் ஊரைத் தேர்ந்தெடுக்க மக்கள் தொகை, இயற்கை அமைப்பு, சாதி சமூகப் பிரிவு, தொழில் வளம், வாணிபம், வரலாற்றுச் சிறப்பு. அரசியல முக்கியத்துவம், சமயச் சார்பு முதலியன அடிப்படையாக அமைதல் வேண்டும். பொதுவாக, நவ நாகரிகத்திலிருந்து விலகி ஆற்றங்கரை, மலையடிவாரம் கடற்கரைப் பகுதி ஊர்களைத் தேர்தல் சிறப்பு.

தகவலாளியைச் சாதி, படித்தோர், படிக்காதோர், முதியவர், இளைஞர், பள்ளி செல்லும் மாணவர், ஆண், பெண் எனப்பல அடிப்படையில் தேர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவர்தம் வீட்டிலோ அல்லது தொழில் செய்யும் இடத்திலோ கள ஆய்வினை, மேற்கொள்ளுதல் சிறப்புடையதாகும். அத்தோடு தகவலாளி ஓய்வாக இருக்கும்போது ஆய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும். தகவல் அறியப் பலமணி நேரம் ஆகுமானால் இடையில் ஓய்வு எடுத்துக்கொண்டு ஆய்வு மேற்கொள்வது நல்லது. அது தகவலாளியின் உச்சரிப்பு முறை, ஆய்வாளரின் கேட்கும் திறன் முதலியவற்றைக் கூர்மைப்படுத்த உதவும்.

## வினா ஏடு

(Questionnaire) கிளைமொழிக் கள ஆய்வில் வினா ஏடு முக்கியமானது. இது செம்மையாக அமைக்கப்பட்டு விட்டால் ஆய்வு மிக எளிதில் சிறப்பாக அமையும். இது ஐந்து வகையில் அமையும். 1. பெயர் கூறும் வகை (Naming type) 2. பூர்த்தி செய்யாத வாக்கிய வினா (Completing type) 3. உரையாடல் வினா வகை (Conversational type) 4. கூறியபடி மாற்றும் வினாவகை (Reverse type) 5. திருப்பிக் கேட்கும் வினா வகை

பொருளையோ அல்லது அதன் வரைபடங்களையோ நிழற்படங்களையோ காட்டி அதன் பெயர் கூறுமாறு கேட்டால் பெயர் கூறும் வகையாம். இம்முறை ஒரு மொழி பேசும் பழங்குடி மக்கள் மொழி அறிய உதவும். இரண்டாவது வகை வினாக்கள் கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்வதாகும். உரையாடல் வினா தகவலாளியுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் தமக்குத் தேவையான ஒலி, சொல் இலக்கணக் கூறுவரும் வகையில் பேசி அவற்றைப் பெறுதல். இம்முறை சற்றுக் கடினமானதோடு நேரமும் அதிகமாகும். ஒரு சொல்லின் ஒரு வடிவத்தைக் கொடுத்து, அதன் வேறு ஒரு வடிவத்தைக் கேட்பது நான்காவது வகையாகும். ஒரு சொல்லைக் கொடுத்து அது எந்தப் பொருளில் வழங்குகிறது எனக் கேட்பது ஐந்தாவது வகையாகும்.

இவ்வகையில் அமையும் வினா ஏடுகள் ஒலியன் இயல்வினா ஏடு (Phonological Questionnaire) இலக்கணவியல் வினா ஏடு (Grammatical Questionaire)சொல்லியல் வினா ஏடு (Lexical Questionnaire) என மூன்று வகைப்படும். ஒலியியல் வினா ஏடு அம்மொழியின் ஒலிக் கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கி இருக்க வேண்டும். இலக்கணவியல் வினா ஏடுஉருபன் இயல் சொற்றொடர் இயல் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலையில் அமைதல் வேண்டும். பெயர் வினை இடை உரிச்சொற்கள் ஐம்பால் மூவிடம்காட்டும்கூறுகள், இருதிணை ஏவல் - கால இடைநிலை, முற்று எச்சம் எதிர்மறை - துணைவினை - தொழிற்பெயர் முதலான இலக்கணக்கூறுகளை அறியும் வகையில் இவ்வினா ஏடு அமைதல் வேண்டும்.

சொல்லியல் வினா ஏடு இருவகையில் அமையும். ஒன்று நேர்முக ஆய்விற்காக அமைவது. மற்றது அஞ்சல் வழியில் அறிய உதவுவது. இங்கு ஒரு சொல் பல பொருள் குறித்தலையும், பல சொல் ஒரு பொருள் குறித்தலையும் அறிவது, முக்கியமானது. இவ்வினா ஏடு குடியிருப்பு, ஆடை ஆபரணம், உணவு, மளிகைச் சாமான்கள், செடி,கொடி - விலங்கு, பறவை பயிர், காய்கறி, பழம், போக்குவரத்துச் சாதனம், விபத்து, நோய், சிகிச்சை, எண்ணுப்பெயர், மாதம், வாரம், கிழமை, பருவம், சாதிமதம - உறவுமுறை பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்கு முறைகள், நம்பிக்கை முதலான, ஆறு,குளம்,ஏரி முதலான வரலாலற்றுக் கதைகள், நாடோடிப் பாடல்கள் முதலான அடிப்படையில் இவ்வினா ஏடு தயாரிக்கப்படுதல் வேண்டும். மேலும் வெவ்வேறு தொழில் செய்வோருக்கு ஏற்பத் தனித்தனி வினா ஏடு அமைக்க வேண்டுவதும் மிக இன்றியமையாதது. இதனைச் சொல்லியல் வினா ஏட்டின் சிறப்புப் பகுதியாக அமைத்துக் கொள்ளலாம்.

## 5. கிளைமொழி வரைபடங்கள்

கிளைமொழிக் கூறுகளைப் புரிந்து கொள்ளத் தேசப் படத்தில் குறியீடு மூலமோ பாகுபாட்டுக்கோடுகள் மூலமோ வரைந்து விளக்குவதைக் கிளைமொழி வரைபடம் (Dialect Areas) என்பர். அது இருவகைப்படும். ஒன்று மொழிச் செய்தியைச் சேகரித்து ஒலிக்குறிப்பு எழுத்தில் உள்ளபடி வகைப்படுத்தாமல் அப்படியே தருவதாகும்.

மற்றது மொழிச் செய்தியை ஆராய்ந்து அதன் முடிவுகளை மட்டும் தருவது. இவ்வரைபடச் செய்திகளுக்கு ஏற்ப ஒலியன்கள், உருபன்கள், சொற்கள் சொற்றொடர்கள் பற்றியன என நான்கு வகைப்படும்.

## 6. இந்தியாவில் கிளைமொழி ஆய்வுகள்

கிரியர்சன் (G.A. Grierson) நடத்திய இந்திய மொழிகளின் ஆய்வு (Linguistic Survey of India) பரந்த அளவில் செய்யப்பட்ட முதல் ஆய்வு ஆகும். இது 11 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இதில் 179 மொழிகளும், 544 கிளைமொழிகளும் இடம் பெற்றுள்ளன. இங்கு ஆசிரியர் ஒவ்வொரு மொழியின் சிறு இலக்கணம், அதன் சிறப்பு, அக்கிளைமொழி பேசுபவர் பற்றிய குறிப்பு முதலான தந்து அம்மொழியின் வரலாறு, இலக்கியச் சிறப்பு முதலானவற்றையும் விளக்கியுள்ளார். இக்கள ஆய்விற்கான வினா ஏடு 241 வினாக்களையும், அவை எண், மூவிடப்பெயர், உடல் உறுப்புகள், உலோகம், உறவுப் பெயர், தொழில், செடி, கொடிகள், பறவை விலங்குகள், வினைச் சொற்கள், முன் உருபுகள், வினா, விகுதி இணைந்த வடிவம், அடைமொழி ஒருமை பன்மை, ஆண் பெண் பால் வாக்கியம் என பதினைந்து பிரிவுகளில்அமைந்தது.

அடுத்து கிளைமொழி ஆய்வில் குறிப்பிடத்தக்கது சாகித்திய அக்காடமியின் வேளாண்மைக் கலைச் சொற்கள் என்ற (A Telugu Dialect Dictionary of occupational vocabularies on Agriculure) நூல் குறிப்பிடத்தக்கது. இவ்ஆய்விற்குரிய வினா ஏடு *இதன்பெயர் என்ன?* அதனை என்ன வென்று சொல்வீர்? என்ற அமைப்பில் அமைந்தது. தகவலாளி, 50,70 வயதினராகவும் கல்விகற்காத, வெளியுலகத் தொடர்பில்லாதவராகப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர், ஆய்விற்கு ஆந்திரகடலோரப் பகுதிகள், தெலுங்கானா, ராயல்சீமை ஆகிய முன்று பிரிவுகளாகக் கிளைமொழிப் பாகுபாடு தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ் ஆய்வில் கிடைத்த சொற்களைப் பதின்முன்று தலைப்புக்களில் வகைப்படுத்தி அகராதி அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டது. இவை வழங்கும் இடங்களும் சுட்டப்பட்டன. இதன் அடிப்படையில் 1. கருப்பு மண் 2. மணல் நிலம் 3. கிணற்றில் நீர் இறைக்கும் கருவி, 4. மதகுகண்மாய் வழி, மூடு பலகை முதலியன 5. நுகத்தடி, 6. ஏர், 7. மேழி, 8. கொழு, 9. ஏர்க்கால், 10. மாட்டின் சாணம், 11. ஏர்க்கால் ஆணி, 12. ஆர்க்கால், 13. கட்டை வண்டிச் சக்கரம், 14.வடக்கயிறு, 15. இருசுக் கட்டை, 16. சோளக் கதிர்க்கட்டு, 17. பயிர்நோய், 18. கொடிவகை, 19. கக்காண சணல், 20. வரகு, 21. தினை 22 பயிறு 23. சக்கரத்தில் ஒருபகுதி 24. மாட்டின் செந்நிறம், 25. களை எடுத்தல், 26. வேலியிடுதல், 27. நாற்றங்கால் நடுதல் 28. நன்செய் என்னும் 28 - கருத்துக்களை விளக்கும் சொற்பட்டியல் அவை வழங்கும் பகுதிகள் அடிப்படையில் *வரைபடங்கள்* தயாரிக்கப்பட்டன. இவ்வாய்வில் கிடைத்த 9000 சொற்களில் பல தொல் வழக்காக அமைந்தன. இவை தெலுங்கு மொழிக்கு வளமூட்டுவதோடு திராவிட மொழிகளின் சொல்லிலக்கண அகராதி (Dravidian Etymological Dictionary) நூலுக்குப் பல புதிய சொற்களும் கிடைத்தன.

அடுத்து இராமசுப்பையா அவர்கள் மலேசியாவில் *லோயர் பெயராக்* பகுதியில் நடத்திய கிளைமொழி ஆய்வு குறிப்பிடத்தக்கது. தமிழ்க் கிளை மொழிச் சொற்கள் ஓர் ஆய்வு (A Lexical Study of Tamil Dialects in Lower Perak) என்ற நூல் இவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. இவ்வாய்விற்கு 44 தோட்டத் தொழிலாளர்கள் (பெண் 19: ஆண் 25) தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து வந்து குடியேறி 40 ஆண்டுகளாகத் தோட்டத்தொழில் செய்பவர்கள். எனவே இவர் தம் பேச்சில் மலாய், ஆங்கிலம் வடமொழிகளும் கலந்துள்ளன. இதன் வினாஏடு 13 தலைப்புகளில் 314 கேள்விகளைக் கொண்டது. இதன் முலம் 561 அருஞ்சொற்கள் கிடைத்தன. ஆண், பெண் என்ற பாகுபாட்டு அடிப்படையில் கிளை மொழிகளை வகைப்படுத்தலாம் என்பது இவ்வாய்வின் முலம் கண்டறியப்பட்டது. சீலை ஆண், பொடவ பெண் மேலும் இவர்களிடம் சொந்தமாவட்ட வழக்குகள் நிலைத்துள்ளதும் அறியப்பட்டது. இவ்வாய்வு முலம் இவர் தம் சமுக அமைப்பும் ஓரளவு தெரிய வந்தது. மாரியம்மன், பிள்ளையார், சுப்பிரமணியர் வணக்கம் உண்டு. சிவன்கோயில் காணப்படவில்லை. தீ மிதித்தல், காவடி எடுத்தல், பாரதக்கதை படித்தல் நிகழ்ச்சிகள் சிறப்பிடம் பெறும்.

மேற்கண்ட ஆய்வுகள் தவிர மானிடவியல் ஆராய்ச்சித் துறையில் பல பழங்கடி மொழிகளை ஆராய்ந்துள்ளனர். இவ்வகையில் பார்ஜி நாய்க்கி, பெங்கோ, ஒல்லாரி, கொண்டா, முண்டா மொழிகள் ஆராயப்பட்டன. நீலகிரிப் பழங்குடியினரின் மொழிகள் பலவும் ஆராயப்பட்டன.

## 7. மேலைநாடுகளில் கிளைமொழி ஆய்வு

வெங்கார் (Georg wenker) முதன் முதலில் 1876 இல் ஜெர்மன் மொழிகளை ஆராய்ந்தார். அடுத்து ஜில்லியரோன் (Jules Gillieron)பிரெஞ்சுக் கிளைமொழிகளை ஆராய்ந்து சிறந்த முறையில் வரைபடம் தயாரித்துள்ளார்

இவர் 660 இடங்களில் 2000 சொற்கள் அடங்கிய வினா ஏட்டினைப் பயன் படுத்தி மொழியாய்வு செய்தார். ஜார்ஜ் & ஜீந்த் சுவிஸ் கிளை மொழிகளை ஆராய்ந்தனர்.

அமெரிக்காவில் ஹான்ஸ்குரத் (Hans kurath) கிளைமொழி ஆய்வை மேற்கொண்டு (Linguistic Atlas of New England Michigan) நூலை வெளியிட்டார். இதன் மூலம் வடக்கு, தெற்கு, இடைப்பகுதி என அமெரிக்காவில் மூன்று வட்டாரங்கள் உள்ளன என அறிய முடிகிறது. மேலும், செம்மையான பேச்சு நகர்ப்புறத்தும், சாதாரண பொதுப்பேச்சு விவசாயப் பண்ணைகளிலும் கிழக்கு மாநிலங்களிலும், கொச்சைப் பேச்சு வடநியூ இங்கிலாந்து பகுதிகளிலும் உள்ளன என்றும் அறித்தார். இவர் ஆய்வை ஒட்டி, பாக்பி-அட்வூட் (Bagby Atood) என்பார் வினைச்சொல் ஆய்வில் சமூகநிலை அறிய முடியும் என்றார். உயர் நிலையில் உள்ளவரிடம் செம்மையான வினைவடிவமும், தாழ்ந்தோரிடம் கொச்சை வினைவடிவமும் இருந்ததாக அவர் காட்டுவார்.

ஆங்கிலக் கிளைமொழி ஆய்வுப் பேராசிரியர் ஹெரால்டு ஆர்ட்டன் (Herald Orton) தலைமையில் ஒன்பது ஆய்வாளர் துணையுடன் 3145 ஊர்களில் நிகழ்ந்தது. இதன் அடிப்படையில் Survey of English Dialects Introduction நூலும், the Basic Material, தலைப்பில் நான்கு நூல்களும் வெளிவந்துள்ளன. தற்போது இதற்கு வரைபடம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

ஸ்காட்லாந்தில், கேலிக் ஆங்கிலக் கிளைமொழிகளை ஆராய எடின்பரோ பல்கலைக் கழகத்தில் ஒரு தனித்துறை நிறுவப்பட்டது. இதுசொல் நிலையில், ஒலியின் நிலையில் தகவல் சேகரித்தது. மெக்கன்டொஷ் (Mcontosh) ஸ்காட்லாந்து கள ஆய்வு ஓர் அறிமுகம் (An Introduction to Scottish Dialects) என்ற நூலை வெளியிட்டார். டாக்டர் ஸ்பெயிட்டல் (Spetial H.H) சொல் பாகுபாட்டுக் கோடுகளைக் கொண்டு, இங்கிலாந்து ஸ்காட்லாந்து எல்லைகளை வரையறுத்தார்.

வெல்ஸ்மொழி ஆய்வுமூலம் அங்கு வடக்கு தெற்கு இடைப்பகுதி என மூன்று கிளைமொழிகள் உள்ளன என அறியப்பட்டது. நியூகாசில் பல்கலைக் கழகப் பேராசிரியர் பார்பராஸ்ட்ராங் (Barbara Strang) தலைமையில் அந்நகரப் பேச்சு மொழி ஆராயப்பட்டது. இங்கு எவ்வித வினா ஏடும் இன்றித் தகவலாளியுடன் உரையாடி மொழிச் செய்தியைச் சேகரிக்கின்றனர். மேலும் பேசும் போதே அவர் இன்ன சமூகத்தைச் சார்ந்தவராதல் வேண்டும் என்ற ஆய்வாளர் ஊகமுறை (Impressionistic Approach) இங்குக் குறிப்பிடத்தக்கது. தொழில் சமூக அடிப்படையில் பேச்சு மொழி மாறுபடுவதை இவ்வாய்வில் எடுத்துக் காட்டுவர் ஜான்பெல்லோ (John Pellowe).

## 8. தமிழில் கிளைமொழிகள்

தொல்காப்பியர் *திசைச்சொல்* எனக் கிளைமொழிகளைக் குறிப்பதோடு, இவை வழங்கும் பன்னிரு பகுதிகளையும் குறிப்பிடுவர். மயிலைநாதர் கொடுந்தமிழ், சான்றோர் வழக்கு குழுஉக்குறி, தொழில் பற்றிய வழக்கு என இதனைக் குறிப்பர். தாயைத் *தள்ளை*, என்றும் சோற்றைச் *சொன்றி* என்றும், ஆவினைப் பெற்றம் என்றும் தந்தையை அச்சன் என்றும் வழங்குவது கிளைமொழி வழக்காக உரையாசிரியர் கருதுவர்.

1910இல் ஜுல்ஸ் பிளாக் சாதிக்கிளை மொழிகளை ஆய்ந்தார். கமில் கவலபில் தமிழின் கிளைமொழிகளை விரிவாக ஆராய்ந்து, இதில் வடக்குக் கிளைமொழி, கிழக்குக் கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, தென்கிளை மொழி, இலங்கைத் தமிழ் என ஐந்து பெரும் கிளைகள் உள்ளனவாகக் கருதுவர். இவ்வகையில் சேதுப்பிள்ளையின் பாண்டி நாட்டுத் தமிழ் நூலும், ஏ.கே. இராமானுஜனின் ***சாதிக் கிளைமொழிகள்*** பற்றிய ஆய்வும் ஆண்ட்ரனோவின் ***தமிழும் அதன் பேச்சு மொழிகளும் நூலும்*** கணபதிப் பிள்ளையின் ***யாழ்ப்பாணத் தமிழ், மீனவர் தமிழ்*** பற்றிய ஆய்வும் சுசீந்திரராஜாவின் ***இலங்கைத் தமிழ்*** பற்றிய ஆய்வும், குய்ப்பரின் ***யாழ்ப்பாணத் தமிழும் சங்ககாலத் தமிழும்*** என்ற கட்டுரையும், டாக்டர் அகத்தியலிங்கத்தின் மாற்றிலணக்கண முறையில் அமைந்த ***நாஞ்சில் நாட்டுத் தமிழ் காணிக்காரர் கிளைமொழி, மூன்று கிளைமொழிகள்*** முதலான ஆய்வும், டாக்டர் செ. வை சண்முகத்தின் ***கல்வெட்டுக் கிளைமொழி,*** பற்றிய ஆய்வும் சுப. திண்ணப்பனின் ***செட்டி நாட்டுத் தமிழ்*** பற்றிய ஆய்வும் டாக்டர் சக்திவேலின் ***சமூக வட்டாரக் கிளைமொழி*** பற்றிய ஆய்வும் குறிப்பிடத்தக்கன.

இந்நூலாசிரியர் தமிழ்க்கிளை மொழிகளை வட்டாரம், சாதி தொழில் அடிப்படையில் பகுக்கிறார் வட்டாரக் கிளை மொழிகளில் (தென்கிளை மொழி, மத்தியக் கிளைமொழி, மேற்குக் கிளைமொழி, வடக்குக் கிளைமொழி) அந்தணர், வேளாளர், நகரத்தார், படையாச்சி, கள்ளர், அரிசனர் முதலானோர் பேச்சு அடங்கும் தொழில் கிளைமொழியில் மீனவர், குயவர் உட்படத் தொழிலாளர் பேச்சு அமையும்.

# 9. வட்டாரக் கிளைமொழிகள்

## I. தென்கிளைமொழிகள்

மதுரை, நெல்லை, முகவை, குமரி மாவட்டங்களில் வழங்குவது தென் கிளைமொழி, இதில் குமரித்தமிழ் ஒரு உட்கிளை மொழியாயும், அதனுள் மூன்று இடைக்கிளைமொழிகளும் (Local dialects) அமைகின்றது.

**குமரித் தமிழ்:** இதில் ங, ந, ழ் காணப்படவில்லை, ங, ந-மாற்றொலியாக மட்டும் விளங்குகின்றன. ழகரம் ளரகத்துடன் இணைந்து விட்டது பிறமொழிச் செல்வாக்கால் *ஜ்* ஒலியன் நிலை பெற்றுள்ளது. இக்கிளைமொழியில் மட்டுமே றகரம் உச்சரிக்கப்பெறுவதால் இதனை *றகரக் கிளைமொழி* என்பர்.

ஒலி மாற்றத்தில் ச > ய ஆவதும் (ஊசி > ஊயி). முதல் அசையில் ஏ > இருப்பின் யகரம் பெற்று வருதலும் (பேச்சு > ப்யேச்சி) முதலசை உயிர்கெட்டு மெய்யாகி வரலும் (கிடாரி > க்டாரி) இம்மொழியின் சிறப்பியல்பாகும். மேலும் இரு > இரி என வரும் மாற்றங்களும் குறிப்பிடத்தக்கன.

இலக்கண நிலையில் பெயர்ச் சொல்லுடன் ஆமார், அக்கமார் விகுதி சேறலும் (நாடாக்கமார், நாடாமார்) எண்ணுடன் *ஆத்த, ஆமத்த* விகுதி சேறலும் (ஒண்ணாத்த, ஒண்ணாமத்த) மூன்றாம் வேற்றுமை உருபாக ஆலெ; யிட்டு எவச்சி, எக்கொண்டு, எக்கொண்டுவச்சி முதலான வருவதும் (கத்தியாலெ, கத்தியிட்டு, கத்தியவெச்சி, கத்தியெக் கொண்டு, கத்தியெக் கொண்டு வச்சி) இம்மொழியின் சிறப்பியல்பாகும்.

வினைமுற்றில், நாங்கள் வந்துனம், *நீவியர் போவினம், நீவிரு போவீரு, நீவியள் போவியள் அவனுவன் போவானுவன், அவளுவள் போவாளுவள்* முதலான வடிவங்களும், எதிர்மறையில் வரெலெ (ஏலே) வடிவும் நிகழ்கால உருபாக *இ* யும் (சுக்கியான் ஓடியான்) வருவது இம்மொழியின் தனித்தன்மையாகும். அரி, கொள்ளாம், அங்஼னம், சாடுசக்கெ, கண்டு, கொமெ, ஈச்ச, செரட்டே, நிசாரம் முதலான அரிய பல சொற்களும் இம்மொழியில் நிறைந்துள்ளன.

**நெல்லை, மதுரைத்தமிழ்:** தென்கிளைமொழியின் உட்கிளை மொழியான நெல்லை, மதுரைத் தமிழில் நிகழ்கால உருபாக *த்* - வருவதும் (சொல்லுதான்) முன்னிலையில் நீ, நீரு, நீங்க வருதலும், படர்க்கையில் இவன், இவரு, இவுக, இதுக என்பன வருவதும், விளியில் ஏப்பா, வாடா, வாலே, ஏலே, டேய், ஏத்தா, எம்மா, ஏட்டி, வாத்தா, வாம்மா, வாட்டி முதலான வழங்குவதும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கன. *ஆக,* விகுதி *ஆவ* (எனக்காவ) எனத் திரிந்து வழங்குகிறது.

அங்னெ, அந்தானெக்கி, அப்பலெ, அர்னாக்கொடி, எடவாரு, எத்து, எம்புட்டு, ஒக்டு, ஒவல, கம்மா, களவாணி, சீமத்தண்ணி முதலான சொற்கள் இக்கிளை மொழிக்கே உரியன.

## II. மத்தியக் கிளைமொழி

தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டப் பெரும் பகுதியும், புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதியும் இக்கிளைமொழி பேசும் இடமாகும். இங்குத் தெலுங்கு உருதுச் சொற்கலவை மிகுதி. ல், ழ், ள், மூன்று ஒலியும் வழங்கும் பகுதி இதுவே. எனவே இதனை ழகரக் கிளைமொழி என்பர். இதில் றகரம் ரகரத்துடன் இணைந்து விட்டது. எம்பளது. மள்ளாட்ட (மணிலாக் கொட்டை) முதலான இப்பகுதியின் சிறப்புமிக்க வழக்கு.

ஒலி நிலையில் க், ப் இரண்டும் வகரமாகவும் (போவெ கோவொ(ம்) ள > ழ், ஆகவும் (கேழ்வி) மாறுவதைக் காணலாம்.

முற்றுவினையில் பால்காட்டும் இறுதிநிலை மறைந்து ச்சி-து இடம்பெறும் நிலை உண்டு. (அண்ணென் வந்திச்சி, வந்தது) மூவிடப் பெயரில், *உவொ, வொ* பன்மை விகுதியாக அமைகின்றன. (அவனுவொ, அவளுவொ, அதுவொ), இப்பன்மை விகுதி பல பெயர்ச் சொற்களிலும், வினைமுற்றுகளிலும் வழங்குகிறது. (மாடுவொ, வந்தானுவொ) நிகழ்கால உருபாக-க்கு, க்ர், வு அமையும் (போரா(ன்) பாக்குது, பாக்ரா(ன்), போவுது)

எம்பளது, அப்ரொ(ம்), சும்மா(ம்) ஒப்படியாள், கவ்ளி, கம்னாட்டி, கெழ்வி, நெவத்தடி, பரியாறி, திருவுஷா முதலான சொற்கள் இக் கிளைமொழிக்குச் சிறப்பாக உரியன.

## உட்கிளை மொழி (Sub Dialect)

புதுக்கோட்டைப் பகுதியில் இதன் உட்கிளைமொழி வழங்குகிறது. இம்மொழியில் க,ச > ய்,வ் ஆதல் (மகன் > மயென், தோசை > தோவெ). மொழி முதல் கெடுதல் (வியாழன் > சாளன், இலக்கு > லக்கு. நிலாவெளிச்சம் > லாவெளிச்சம்) யகரம் தோன்றல் (அத்தை > அய்த்தே) முதலான மாற்றங்கள் காணப்படுகின்றன.

வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், ஒடு முறையே எயெ, அயாலெ, ஊடெ (உன்னெயே, என்னயாலெ, என்னூடே) என மாறியுள்ளன. க விகுதி பன்மை சுட்டும் (அவுக, சொன்னாக) இச்சி, அத்தி விகுதிகள் கோளிச்சி. பிராம்ணத்தி எனப் புதிய சொல்லாக்கத்திற்கு வழிவகுக்கின்றன.

நன்னியம்மா (பாட்டி) கிட்டம் (அருகில்), வெள்ளென, இங்கிட்டு, அங்கென, கேதம் முதலான சொற்கள் இப்பகுதிக்கே சிறப்பாக உரியன.

## III. மேற்குக் கிளைமொழி

சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி மாவட்டங்களில் இக் கிளைமொழி வழங்கும். இங்குத் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் தாக்குதலும், நீலகிரியில் பழங்குடியினர் மொழிச் செல்வாக்கும் காணப்படும். இங்கு ல, ழ, ள மூன்றும் ஒன்றாகி விட்டதால் இதனை லகரக் கிளைமொழி என்பர். இங்கு புதிதாக b, d, d, ஜ், g ஆகிய ஒலிப்புடை வெடிப்பொலிகள் காணப்படுகின்றன.

ஒலியியல் மாற்றமாக ன் > ண் எனக்கு > எணக்கு) ண் > ன் கண் > கன்னு), ழ > ள (கழுதை > களுதே), ழ > ர (புழுக்கடை > பொர வடெ) ல < ள (காலை > காளெ), ற > ர (கயிறு > கவ்ரு) ச் > ஸ (சாப்பாடு >) ஸாப்பாடு (ஜ் > ராஜா > ராஸா) ஆகியவற்றைக் குறிக்கலாம். இகர உகர மாற்றம் (பிள்ளை > புள்ளே), எ > ஒ - மாற்றம் (பெட்டி > பொட்டி) ஒ > எ ஆதல் (சொல்லு > செல்லு), முதலானவும் இம்மொழியின் சிறப்புக் கூறுகளாகும்.

கொங்குத் தமிழில் மரியாதை அதிகம் என்பர். ஏனுங்க கேட்டுப்புடுங்க, வந்தாங்க, பாத்தமுங்க முதலான வடிவம் இதனைத் தெளிவுபடுத்தும். *ஒணும்* என்ற வடிவம் வரோணும், தேக்கோணும் முதலான பல வடிவங்களில் வருகிறது. பொழுது என்ற வடிவிற்கு இணையாகக் *குள்ள*வடிவம் அமைகிறது. (வரக்குள்ள, கேக்கக்குள்ள), மேலும், வரப்போ வரய்லெ போன்ற வடிவமும் உண்டு.

சேலம் கிளைமொழியில்-ன் உருபு இறந்த காலம் காட்டும் *போனுது, சோறுகுடி* என்ற சொல்வழக்கும் இங்குச் சிறப்பானது. தனக்கு, நாங்களுக்கு என்ற வடிவங்களும் இம்மொழிக்கே உரிய சிறப்புக் கூறாகும். ச்சி விகுதி சேர்ந்து அய்யச்சி சகலச்சி நாடாச்சி முதலான சொல்லாக்கங்களுப் இக்கிளைமொழியில் காணப்படுகின்றன.

## IV. வடக்குக் கிளைமொழி

வடஆர்காடு, செங்கற்பட்டு, சென்னை மாவட்டங்களில் இக்கிளை மொழி வழங்குகிறது. இதில் உருது தெலுங்குச் சொல் மிகுதி ழ > ய், ன, ஸ வாக மாறி ஒலிக்கிறது. இதனை யகரக் கிளைமொழி என்பர். ஒலிப்புடைத் தடையொலியன்கள் இம்மொழியில் ஒலியன் நிலை பெறுகின்றன.

சங்கிலி > செக்கிலி விளைச்சல் > வெளெச்லு, விக்கல் > விக்குலு முதலான மாற்றம் இம்மொழியில் இயல்பாக அமைகிறது. மேலும் கய்தே (கழுதை) கெய்வி (கிழவி), கொயா, (குழாய்) பயொ(ம்) (பழம்) இஸ்து (இழுந்து) முதலான மாற்றங்கள் இம்மொழியில் சிறப்பிடம் பெறுகின்றன.

-ச்சி விகுதி ஸி, சி ஆக மாற்றம் பெறுகிறது. (துலுக்கசி, செட்டிசி), (பாஸ்ரான் > பாய்ச்சினான்) பாசி (பாய்ச்சி) ஒட்ஸி, கீசென், கீசாசி, கீது முதலான சொல்வழக்குகள் இக்கிளைமொழியில் மிகுதி. *காட்டி* விகுதி இல்லாகாட்டி வராகாட்டி என அமைகிறது. கொண்டிரு > கினுரு என மாற்றம் அடைகிறது (சொல்லிக்கினுரு)

அ + ⋯ அத்தெ என 2ம் வேற்றுமையும், என்னாண்ட ஊட்ட ாண்ட என 7-ஆம் வேற்றுமையும் அமைவது இம்மொழியின் சிறப்பியல்பே. தெலுங்கில் உள்ள *கோசரம்* என்ற சொல் இம்மொழியில் *ஆக* என்ற பொருளில் வருகிறது (எனுக்கோசரொ(ம்)

*அதே மேரி (மாதிரி) கீது, ஏ(ன்) நயினா அய்வுரெ, ஸும்மானாங் காட்டியும் ஸொன்னியா* முதலான தொடர்களும் இம் மொழியின் பேச்சு வழக்கைச் சிறப்பித்துக் காட்டும். *இஸ்துகினான்* கட்டெ தொட்டி (விறகுக்கடை), கொடக் கூலி (வீட்டு வாடகை), கொசுரு, பிசுக்கு, கஸ்மாலம், சர்தான், சோமாரி, டபாயி, துட்டு நாஸ்டா, பேஜாரு முதலான சொற்களும் இம்மொழிக்குரியனவாகக் கொள்ளப்படும்.

## V. இலங்கைத் தமிழ்

இலங்கைத் தமிழ் யாழ்ப்பாணக் கிளைமொழி, மட்டக் கிளப்பு கிளைமொழி என இருவகையுடைத்து, இவற்றுடன் திரிகோணமலைத் தமிழ் கொழும்புத் தமிழ் இரண்டையும் சேர்த்து நான்கு என்பர் கமில் சுவலபில் தெ. பொ. மீ. தென்கிழக்கு இலங்கைத்தமிழ் இசுலாமியர் தமிழ், கொழும்புத் தமிழ் மூன்றையும் சேர்த்து ஐந்து என்பர். இதனை இந்துக்கள் தமிழ் முஸ்லீம்கள் என்றும் வகைப்படுத்துவர்.

இலங்கைத் தமிழில் ற t ஆக ஒலிக்கிறது. ழ, ள, வுடன் இணைந்து விட்டது. பழந்தமிழ் வழக்குகள் நிறைந்துள்ளது.

**இந்துக்கள் தமிழ்:** புதிய b b : i i ஆகிய உயிர் ஒலியன்களும், ஸ, ஷ், b, ஜ் ஆகிய மெய் ஒலிகளும் புதிதாக இடம் பெறுவன ன் ற் > ண்ட் ஆகிறது (அன்று < அண்டு)

சொற்றொடர் நிலையில் நான் - செய்த *நான்* நாங்கள் - செய்த நாங்கள் நீ - செய்த நீ அவள் - செய்த அவள் நீங்கள் வந்திங்கள் முதலான வடிவம் அமைகின்றன. பன்மை விகுதியாக-கள் (அவன்கள்)-அன் (பெட்டே அன்) உஅள் (மானு அள்) அவெ (தம்பீ அவெ), மேர் (அம்மான்மேர்) முதலான அமையும்.

6-ஆம் வேற்றுமை உருபாக றெ, டெ, ன்றெ என்பனவும் (என்றெ அவள்டெ மாமியின்றே) 7-ஆம் வேற்றுமையில்-ட்டெ, இலெவும் (அம்மாட்டே, மொத்திலே) அமையும். இத்தமிழில் உடனம், எஞ்சு (ஐந்து) கூளெ (குட்டை) பொத்தி (வாழைப்பூ) முதலான புதிய சொல் வழக்காறுகளும் காணப்படுகின்றன.

### முஸ்லீம்களின் தமிழ்

பிறமொழிச் செல்வாக்கால் b, g, j ஒலியன் நிலைபெற்றுள்ளன. ழ, ள வுடன் இணைத்து விட்டது. ற தடை ஒலியாக (t) (ன்ற > ண்ட்) மாறியுள்ளது. ஆறு புதிய ஒலியன்கள் இடம் பெற்றுள்ளன. ஒய்த்தா (நாவிதன்) ஓடாவி (தச்சன்) கலம் (பேனா) நவிசி (பேராசை) முதலான பல புதிய சொற்கள் வழக்கில் உள்ளன.

## 10. சாதிக் கிளைமொழிகள்

சாதி ஏற்றத்தாழ்வு காரணமாக அவர்தம் மொழியும் வேறுபடுகின்றது. இருப்பினும் இதற்கிடையே புரிந்து கொள்ளும் தன்மைமிக்கிருக்கிறது.

### (i) பிராமணர் தமிழ்

இதனை அம்மாஞ்சித் தமிழ் என்பர். இவர்தம் மொழி இட இயல் அடிப்படையில் மிகுந்த வேறுபாடு அடைவதில்லை. அய்யர், அய்யங்கார், தீட்சிதர் முதலான பிரிவுகள் உண்டு. ஒரே ஊரிலுள்ள அய்யர், அய்யங்கார் பேச்சு வேறுபடுவதாக இராமானுஜம் குறிப்பிடுவர்.

| அய்யர் | அய்யங்கார் |
|---|---|
| கறி | காரமுது |
| தூத்தம் | தீர்த்தோ(ம்) |
| நெய்வேத்தியம் | அம்து |
| ரசம் | சாத்தமுது |

அது போலச் சமயச் சார்பான சொற்களும் வேறுபடுகின்றன. மெய் ஒலியன்களில் p, d, ḍ, ஜ, g, ஸ், ஷ், ஹ் ஆகிய புதிய ஒலியன்கள் இடம் பெறும். ன் ற் > ன் ன் ஆகிறது. (நன்னா) மொழி முதல் மெய்ம் மயக்கம் ஸ்நேகம் வ்யாழன், ன்யாயம், ப்ரீதி த்ராசு முதலான பல சொற்களில் அமைகின்றது.

வயது வேறுபாடின்றி - டா, டீ- விகுதிகள் ஆண், பெண் பாலரைக் குறிக்கிறது. நேக்கு, அவா - மூவிடப் பெயராக வருகின்றன. *கிட்டே*, ட்டெ வடிவம் ஏழாம் வேற்றுமை உருபாகிறது. (அவள்ட்டெ ஓம்மட்டே)-அலம்பு, நோய் (துவை), வெய், சேவி, லாந்து, (உலர்ந்து, முக்ளி மூழ்கு முதலான சொற்கள் இக்கிளை மொழியில் சிறப்பாக வழங்குகின்றன.

முன்னிலை விகுதியாக - ஏன், ஈர் (வந்தேன், வந்தீர்) படர்க்கை விகுதியாக ஆர், ஆ (வந்தார் வந்தா), அஃறிணை விகுதியாக - ட்டு, - த்து (வந்தாய்டுத்து - ஓடித்த நன்னாய்ட்டு) முதலான வழங்குகின்றன. நிகழ்கால உருபாக *ற*(நடக்றது) பயன்படுகிறது. அதோடு ஸ-வும் வரும். (வெஸ்ஸான்-திட்டினான்) ஏவல் பன்மையாக - ங்கோ (வராங்கோ, போங்கோ) பயன்படுகிறது. துணைவினை கொள், கொண்டிரு என்பன ண்ட், ண்மரு என ஆகின்றது (செஞ்சிண்ட்ருந்தான்) தோப்பனார், ஆத்துக்கார், ஆம்படையான், அத்திம்பேர், மாட்டுப்பெண், அக்ரகாரம் முதலான சொற்கள் இம்மொழிக்கே உரியன.

## (ii) வேளாளர் மொழி

இவர் தம் பேச்சு மொழியைத் தமிழின் பொதுப்பேச்சு மொழிக்கு அடிப்படையாகக் கொள்வாரும் உளர். வேளாண்மைக் கலைச் சொற்கள் இம்மொழியில் மிகுதி b, g,ஜ ஒலியன் நிலை பெற்றுள்ளன ழ ள பெரும்பாலும் ஒன்றாகிவிட்டன. இவர்தம் மொழியில் > பதனீர் பயிணி, பழ்ணி என உச்சரிக்கப் பெறுகின்றது. இன்னுமெ, ஏந்திரி, அத்தினி, அத்தாச்சி, கவ்ரு, அம்புட்டு, நொப்பு, தென்னலு முதலான சொல்வழக்குகள் இம்மொழிக்கே சிறப்பாக உரியன.

## (iii) நாட்டுக்கோட்டை நகரத்தார் மொழி

இம்மொழியில் அப்பச்சி, ஆத்தாள், பாட்டி, ஆயாள், சம்மந்தியாள், அயித்தான், அயித்தே, அயித்தியாண்டி, மச்சினமண்டி, அப்பச்சிபண்டி முதலானவும், நொக்காள், நாத்தாள், நொப்பச்சி, நப்பச்சி முதலானவும், உறவுமுறைப் பெயர்களாக வழங்குகின்றன. இவை தவிர, அண்டினெ. (அண்டா, போசணி) கொச்சிக்காய், கயிறு (woobea ropc), கிச்சிலிப்பழம் (orange) சீமை இலுப்பை (sapota) முதலான சொற்களும் இம்மொழிக்கே உரியன.

## (iv) படையாச்சிமொழி

மத்தியக் கிளைமொழிக்கு இவர்தம் பேச்சு அடிப்படையாகிறது. றகரம் *ர* வுடன் இணைந்து விட்டது. மொழியிறுதி *ம்*, ன் மறைத்து அடுத்துள்ள உயிர் மூக்கொலிச் சாயல் பெறுகிறது. ஷ, ஜ இரண்டும் *ஸ* வாகிறது. ரோசா வெசொ(ம்). எ யியெ 2-ஆம் வேற்றுமை உருபாகவும் (கொல்லிய நிலத்தை அவனெ) ஏ சிலபோது நான்காம் வேற்றுமை உருபாகவும் அமைகிறது (காட்டெ போரான்), 6ஆம் வேற்றுமை உருபாக *ன், ஓடெ* அமைகின்றன. (மாட்டுன், ஆட்டுன், மாட்டோடெ) அப்பாரு, அப்பிச்சி, ஓப்பிடியா, அங்காலே, ஒசெக்க, மச்சினிச்சி, கெடாசு, போழெப்பட்டி முதலான சொல் வழக்குகள் இம்மொழிக்குரியன.

## (v) கள்ளர் மொழி

இவர் தம் பேச்சு மொழியில் பல புதிய சொல் வழக்குகள் காணப்படுகின்றன. பொண்டு, பொண்டுக, ஆம்பளெக, தாபாசெ (தாய்மொழி) எனப்பத்து, ஒரமொரக, மொரெதலெ, (உறவினர்) உளுப்பெ (தாய் மாமன்சீர்) பேயம் (கிட்டங்கி) செல்பம் (பொருள்) ஜாங்கா (போது) மளெவாயக் கட்டெ அத்திமளெ (மாலைப்பொழுது) கேராத்தி (பெட்டி) குள்ளுமேலு (தில்லுமுல்லு) முதலான இவர்தம்மொழியைத் தனிக்கிளை மொழி என வகைப்படுத்தத் துணை செய்கின்றன. அலமுருகு, அரணா ஒண்ணப்பு, பூடி மேளுடு முதலான ஆபரணப் பெயர்களும் இம்மொழி வழக்கில் குறிப்பிடத்தக்கன.

### (vi) அரிசனர் மொழி

ஐ, ஔ முறையே அய் அவ் என உச்சரிக்கப் பெறுகின்றது ழ > ள, ற > ர, மாற்றம் மிகுதி ந், ஞ், ங் சார்பு ஒலிகளாயின. கும்ளு; முழங்கில் (மூங்கில்), தேழ்வை (தேவை) முதலான சொற்கள் இம்மொழியைப் பிரித்துக் காண உதவும். உவொ எல்லாப் பாலிலும் வந்து பன்மை சுட்டுவது (வந்தானுவொ) இம்மொழிக்கே உரிய சிறப்புக் கூறாகும். வடக்கு முகமாக > வடக்கோம என மாறுவதும் இதன் சிறப்பியல்பாகும். ஊத்தா ஒப்பெண் யெப்பாரு; பெயரு, பசரு, வாசாசங்க (திட்டுதல்) முதுக்கான், (பெரிய வீடு) வேசநாளு, (வெயில்காலம்) பிசினி முதலான சொற்கள் இம்மொழி வழக்கில் சிறப்புடையன.

## 11. தொழில் பேச்சு வழக்குகள்

### 1, மீனவர் பேச்சு மொழி

இது வடபகுதி மீனவர் தமிழ், தென்பகுதி மீனவர் தமிழ் என இருவகைத்து, மேலும் மீனவரில் ஆண்கள்-பேசும். தமிழுக்கும், பெண்கள் பேசும் தமிழுக்கும் வேறுபாடு காணப்படுகிறது. சென்னை - அயோத்திக்குப்பம், தென்னார்க்காடு - எக்கிக் குப்பம் சிதம்பரத்தை அடுத்துள்ள பகுதிகளில் ழ கரம் ஒலிக்கிறது. அதோடு ற கரமும், ஒலியன் நிலை பெறுகிறது. Σ உயிர் ஒலியாகிறது ஜ், ஷ ஒலியன்களாக வழங்குகின்றன. ள் > ழ், ற் > த், ர் > -மாற்றம் காணப்படுகிறது. (மூளை > முழெ; அறு > அது; அரவம் > அதெவரம்)

நான்காம் வேற்றுமை உருபாக - Σ அமைகின்றது. (ஊடு, காடு) சுட்டுப்பெயர்கள் அஞ்செ, இஞ்சே, எஞ்சே, அம்மான், இம்மான், எம்மான் என வழங்குகின்றன. *ஆலெ - ஆண்டே* ப விகுதிகள் சேர்ந்து திசைச் சொற்கள் மேக்காலெ, மேக்காண்டெ, மேலெபாவந்து என வழங்குகின்றன. அணை (கட்டு) பூரெயெ பொத்து (கிளிசலை தை) வெலெக்கு (நகர்த்து) ஏறு (போ) வெலெக்கு வை (கட்டு) முதலான சொற்கள் புதிய பொருளில் பயன்படுகின்றன. கண்ணப்பா, பெதுப்பா, பெதும்மா உறவுப் பெயர்களில் புதியன.

பல அருஞ்சொற்கள் வலையின் பெயர் (றாளலெ முதலான 27 பெயர்) வலையின் பாகம் (மடங்கு, மா.லு 15) தோணியின் பெயர் (கல், ஆசினி பூவாசினி முதலான ஏழு) துடுப்பின் பாகம் (தாவு 4) காற்றின் பெயர் (கொண்டல், கட்சான் சல்வா -20) திசைப்பெயர் நீரின் பெயர் (எறினி மிதாவலு 22) மீனின் பெயர் (அர்ணவாலு எர்தி கழுத்தி முதலான 12க்கும் மேற்பட்ட சொற்கள்) நண்டின் பெயர் (கழி நண்டு (கவ்டிகா நண்டு - முதலான 12 சொற்கள்) - முதலான அமைகின்றன.

### 2. உப்பளத் தொழிலாளர் பேச்சு

இத்தொழிலில் பல சாதியினர், ஈடுபட்ட போதிலும் தொழில் அடிப்படையில் பல கலைச் சொற்கள். வழங்குகின்றன. இவற்றில் - பொன்னுப்பு, கல்லுப்பு, முத்னெஉப்பு, நஞ்சுப்பு, தவுடுப்பு, மழலெஉப்பு, மௌன் முதலான. உப்பின் பெயர்களும், பரவல், தொட்டம், கெடங்கு, பெண்பாத்தி, ஆண்பாத்தி, வார்பாத்தி, கார்னெ வண்டு தொவரை வட்டி, தூக்கு, கர்சம், முதலான சொற்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

### 3. குயவர் மொழிக் கலைச்சொற்கள்

இவர் தம் மொழியில் கலைச் சொற்களே குறிப்பிடத்தக்கன. மற்றபடி அவர்கள் தாம் வாழுகின்ற பகுதிமக்களின் பேச்சு மொழியையே பேசுகின்றனர். கலைச் சொற்களாகத் திருவை, திருவைக்கழி, இடுமம் இடுமக்கட்டி, சூதும்பை, நொவல்கட்டை, பலக்கட்டை, நீர் சீலைத் துணி, கருக்காய் முதலான 22-கருவிகளின் பெயரும், கெளெடுப்பு ஆசெட்டி கலயம், மொந்தை, சாலுங்கவரம், பாளி, ஒரே முதலான மட்பாண்டப் பெயர்கள் 28உம் பானையின் பாகங்களின் பெயர்களாகத் தலெ; சூத்து கொடே, பாதொம், அடிக்கலொம், புருவம், கழுத்து முதலானவும், வேலைப்பாடு அடிப்படையில் பூகுத்ரது மாலெகுத்ரது முதலான சொற்களும், செய்முறை குறித்து தும்பெ, நொவெல் ஒணத்து, திலுப்பு முதலான 20 சொற்களும் பயன்படுகின்றன.

### முடிவுரை

இதுவரை கிளைமொழியியல் ஆய்வு குறித்துக் கண்டோம். இங்குக் குறிப்பிட்டவை மட்டுந்தான் கிளை மொழிகள் என்று கூறுவதில்லை. முறையான கள ஆய்விற்குப் பின்னரே இத்தனை கிளைமொழிகள் என்று கூறமுடியும் என்கிறார் ஆசிரியர். இக்கிளைமொழி ஆய்வு மேலும் வளம் பெற்றால் தமிழாராய்ச்சி. தமிழ்ச் சொல் அகராதி வரலாற்று மொழியில் முதலான துறைகளில் தமிழ்மொழி சிறப்புற்று நிற்கும் என்பது திண்ணம்.

# 4. தொடரியல் கோட்பாடுகள

ஒலியனியல், உருபனியல் ஆய்வைத் தொடர்ந்து தொடரியல் ஆய்வு இன்றைய மொழியியல் துறையில் ஓர் உன்னத நிலையை எட்டியுள்ளது. மொழியின் மிகச் சிறியகூறாகிய ஒலியனிலிருந்து தொடங்கி மிகப்பெரிய கூறாகிய தொடரியலை அணுகும் நிலை மாறி, தொடரியலில் தொடங்கி ஒலியனியல் வரை சென்று முடிகின்ற தொடரியல் ஆய்வே இன்றைய மொழி ஆய்வில் பேரிடம் பெறுகின்றது.

1930 இல் தான் மொழி அறிவியல் அடிப்படையில் ஆராயப்பட்டது. இக்காலம் மொழியியலின் பொற்காலம் எனப்படும். இக்காலகட்டத்தே அமைப்பு மொழியியல் (Structural Linguistics) ஆய்விற்கு வித்திட்டார் புளூம்பீல்டு. இவர் தொடரியலை அண்மை நிலை உறுப்பாய்வு (Immediate Constituent Analysis or I.C. Analysis) மூலம் விளக்கினார். இது மொழியின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு, தொடர் இலக்கணத்தை வரையறுப்பதாகும். இங்குப் பொருளுக்கு முக்கியத்துவம் இல்லை. சொற்கள் ஒரு வரன்முறையில் நின்று வாக்கியத்தை உருவாக்குகின்ற நிலையே இங்கு ஆராயப்பட்டது. இது தொடர் அண்மையுறுப்பு ((Continuous I.C.), தொடரா அண்மையுறுப்பு ((Discontinuous I.C.), மயக்கும் அண்மையுறுப்பு (Ambiguous I.C.), பன்மை உறுப்பு ((Multiple I.C.), ஒத்தியல் அண்மையுறுப்பு (Simultaneous I.C.) என ஐந்தாக வகைப்படுத்தப்பட்டது.

பொருள் இயையுடைய உறுப்புக்கள் அடுத்தடுத்து நிற்பது தொடர் அண்மையுறுப்பு ஆகும். இதனை,

நன்கு படித்த மாணவன் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறலாம்.



என்ற வரைபடத்தின் மூலம் விளக்கலாம். இதற்கு மாறாக அடுத்தடுத்து நிற்க வேண்டிய உறுப்புகள் மாறி நின்று செயல்படுவன தொடரா அண்மைநிலை உறுப்பாகும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டு விளக்கும்.

சிறப்பாகப் படித்துச் செம்பியன் முதல் வகுப்பில் தேறினான்.



பொருள் மயக்கமாக அமையும் தொடர்களில் ஓர் உறுப்பு ஒன்றிற்கு மேற்பட்ட நிலையில் இணையலாம் இதனை மயக்கும் அண்மை உறுப்பு என்பர். *புலிகொல்யானை* என்ற தொடர், புலி யானையைக் கொன்றது அல்லது யானை புலியைக் கொன்றதா என்று மயக்க நிலையில் அமைவது. புலியை யானை கொன்றது என்றால்

புலி கொல் யானை



என உறுப்புக்கள் இணையும். யானையைப் புலி கொன்றது என்றால் உறுப்புக்கள்

புலி கொல் யானை



என இணையும். *சேர சோழ பாண்டியர் வந்தார்* தொடரில் *சேர, சோழ, பாண்டியர்* மூன்றும் ஒரே நேரத்தில் வினையுடன் இணைவது பன்மை அண்மை உருபாகும்.

சேர சோழ பாண்டியர் வந்தார்.



ஒத்திசை அண்மையுறுப்பு குரலிசையை (Intonation) அடிப்படையாகக் கொண்டது.

இவ் அண்மைநிலை உறுப்பாய்வைத் தொடர்ந்து கே. எல். பைக் என்பார் டேக்மீமிக் கோட்பாடுகளை (Tagmemic Theories) உருவாக்கித் தொடரியலை ஆய்ந்தார். பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்ட இக் கோட்பாட்டில் உறுப்புக்களுக்குச் சில குறிப்பிட்ட கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வடிப்படையில் தொடர், எழுவாய்ச் சட்டமும் (Slot) பயனிலைச் சட்டமும் கொண்டது என விளக்கப்பட்டது. எழுவாய்ச் சட்டம் பின்னரும் பெயரடைச் சட்டம், பெயர்ச்சட்டம் எனவும், பயனிலைச்சட்டம் வினை அடைச்சட்டம், வினைச்சட்டம் எனவும் பகுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மார்க்கோவினுடைய முடிவுறுநிலை இலக்கண உத்தி (Finite state grammar) தொடரியல் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. இவை ஒரு மொழியின் எல்லா இலக்கணத் தொடர்புடைய வாக்கியங்களையும் உருவாக்கப் பயன்படாததால் தொடரமைப்பு இலக்கணம் (Phrase structure grammar) உருவானது. இது திருத்தி அமைக்கப்பட்ட அண்மை நிலை உறுப்பு ஆய்வே என்பர். இங்கு உறுப்புக்களின் தன்மைகளை விளக்கக் குறியீடுகள் (Labels) பயன்படுத்தப்பட்டன.

| | | |
|---|---|---|
| வா | → | பெ. தொ. + ப. தொ. |
| பெ. தொ. | → | பெ. அ. + பெ. |
| ப. தொ. | → | பெ. தொ. + வி. |
| பெ. தொ. | → | பெ. வி. பெ. |

இவ்வகையில் ஒரு மொழியின் அனைத்து வாக்கியங்களையும் கொண்டு வந்துவிடலாம் எனக் கருதினார். ஆயின் இதிலும் சில குறைபாடுகள் உண்டு.

1. பொருள் நிலையில் ஒன்றுபட்ட வாக்கியங்களின் தொடர்பு விளக்கப்படவில்லை.
(எ-டு) நான் ஓடப் பார்த்தேன்.
நான் ஓடுவதற்குப் பார்த்தேன்.

2. வாக்கியங்களுக்கும் தொடர்களுக்கும் இடையிலான தொடர்பும் விளக்கப்படவில்லை.
(எ-டு) குதிரை வந்தது → வந்த குதிரை.

3. சொற்களின் வரிசை மாற்றத்தால் பொருள் மாறாநிலை விளக்கப்படவில்லை.
(எ-டு) *நேற்று மாலையில் நான் விரைவாக நடந்து ஊர்க்கோடியை அடைந்தேன்.*
நான் விரைவாக நேற்று மாலையில் நடந்து ஊர்க்கோடியை அடைந்தேன்.

4. அமைப்பு மயக்கமும் (Structural Ambiguities) விளக்கப்படவில்லை. இக்குறைபாடுகளைக் களையவே மாற்றிலக்கணம் (Generative Transformational Grammar) தோன்றியது.

## மாற்றிலக்கணத்தின் சிறப்பியல்பு

அமைப்பு மொழியியலுக்கு மாறாக மாற்றிலக்கணம் வாக்கியத்தினை அடிப்படையாகக் கொண்டு மொழியாய்வைத் தொடங்குகிறது. வாக்கியம் புதையமைப்பிலிருந்து (Deep Structure) புறநிலை அமைப்பாக (Surface Structure) உருவாகுவதை இவ்வாய்வு வெளிப்படுத்தும். அமைப்பிலக்கணம் செயல்திறனை (Performance)

அடிப்படையாகக் கொள்ள மாற்றிலக்கணம் அறிதிறனை (Competance) அடிப்படையாகக் கொள்கிறது. எனவே ஒரு மொழியில் உள்ள எல்லா வகையான இலக்கணத் தொடர்புடைய வாக்கியங்களையும் இதனால் உருவாக்க முடிகின்றது.

இம்மாற்றிலக்கண ஆய்வு முறை *தொடர் அமைப்பு இலக்கண முறை, அண்மைநிலை உறுப்பாய்வு முறையிலுள்ள* குறைகளைக் களைவதோடு, வாக்கியங்களின் உள்ளார்ந்த பொருண்மை நிலையினையும் விளக்கும். எடுத்துக்காட்டாக,

*கால் சுடுகிறது, தரை சுடுகிறது.*

வாக்கியங்களின் பொருண்மை, *தரை காலைச் சுடுகிறது* என்பதை உணர்கிறோம். ஆயின் அதனை அமைப்பிலக்கண முறைப்படி விளக்க முடியாது. இதற்கும் மாற்றிலக்கணமே விளக்கம் தருகின்றது.

மேலும், உடன்பாட்டு நிலையில் அமைந்த செய்வினை வாக்கியத்தின் புதையமைப்பிலிருந்து செயப்பாட்டு வினை வாக்கியங்கள், ஏவல் வாக்கியங்கள், எதிர்மறை வாக்கியங்கள், வினா வாக்கியங்கள் முதலானவற்றை உருவாக்க வகை செய்வதும் மாற்றிலக்கணக் கோட்பாட்டின் தனித்தன்மையாகும்.

## மாற்றிலக்கணக் கோட்பாட்டின் வளர்ச்சி நிலை

தொடரியல் ஆய்வில் 1957-இல் நோவம் சாம்சுகி மாற்றிலக்கணக் கோட்பாட்டை உருவாக்கினார். இவ்வடிப்படையில் தொடர் மூன்று பகுதிகளாக விளக்கப்பட்டது. 1. தொடர் அமைப்புப் பகுதி (Phrase Structure Component), 2. விகாரப் பகுதி (Transformational Component), 3. உருபொலியன் இயல் பகுதி (Morphophonemic Component).

### தொடரமைப்புப் பகுதி

இதில் ஒவ்வொரு தொடரும் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பது விதிமூலம் விளக்கப்பட்டிருக்கும். இதனைத் தொடரமைப்பு விதிகள் என்பர். சான்றாகக் கமலா கல்லூரிக்குச் சென்றாள் என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இதன் தொடர் அமைப்பு விதிகள் வருமாறு:

1. வா → பெ. தொ. + ப. தொ.
2. ப. தொ. → வே. தொ. + வி
3. வே. தொ. → பெ. தொ. + வே. உ.
4. பெ. தொ. → பெ.
5. வே. உ. → ஐ
6. வி → வி. ப. + கா.
7. கா → இறப்பு
8. பெ. → கமலா, கல்லூரி
9. வி. ப. → செல்

இதன் கிளைமரப்படம் (Tree Diagram) வருமாறு:



இங்ஙனம் கிளைமரப்படத்தின் ஈற்றுக்கோவை வரையுள்ள (Terminalsting) பகுதியே தொடரமைப்புப் பகுதியுள் அடங்குவன.

## விகாரப் பகுதி (Transformation Component)

இதுவே இம்மாற்றிலக்கணத்தின் ஆற்றல் வாய்ந்த பகுதியாகும். இங்கு மாற்றல் விகுதிகள் (Transformational Rules) செயல்படும் எடுத்துக்கொண்ட வாக்கியத்தின் புதையமைப்பிற்கும் புறநிலை அமைப்பிற்கும் ஏற்ப இம்மாற்றல் விதிகள் செயல்படும் மாற்றல் விதிகளில் 1. நீக்கல் விகாரம் (Deletion Transformation), 2. பிரதியாக்க விகாரம் (Copying Transformation), 3. பெயர்ச்சி விகாரம் (Movement or shift or Hopping Transformation), 4. பதிலியாக்க விகாரம் (Pronominalization Transformation), 5. சேர்க்கை விகாரம் (Adjunction Transsformation), 6. சுற்று விகாரம் (Cyclic Transformation) முதலியன குறிப்பிடத்தக்கன. இவ் விகாரங்கள் பல நிலைகளில் செயல்பட்டுத் தாய் வாக்கியத்திலிருந்து (Kernal Sentance) பிறவகையான - வினா எதிர்மறை வாக்கியங்களை உருவாக்குகின்றன.

எடுத்துக்காட்டாக, மேலே காட்டிய தொடரின் ஈற்றுக் கோவையில் கமலா + கல்லூரி + செல் + இறப்பு வடிவம் கிடைக்கிறது. இதன்மேல் இயைபு விகாரம் செயல்பட,

கமலா + கல்லூரி + கு + செல் + இறப்பு [ + படர்க்கை<br>+ பெண்பால்<br>+ உயர்திணை

என்ற அமைப்பு கிடைக்கின்றது.

## உருபொலியன் இயல்பகுதி (Morphophonemic Component)

இப்பகுதியில் கிளவியாக்க விதிகளும் (Lexical rule), சந்தி விதிகளும் அடங்கும். இப்பகுதியில் உருபொலி மாற்றங்களும் தரப்படும். மேற்கண்ட வாக்கியத்திற்கு வருமாறு கிளவியாக்கச் சந்தி விதிகள் தரப்படும்.

1. இறப்பு > ற் / சென்

2. + படர்க்கை<br>+ பெண்பால்<br>+ உயர்திணை ] > ஆள்

3. செல் > சென்/ற்<br>கு > க்கு/கல்லூரி

இங்ஙனம் சாம்சுகி 1957இல் தொடரியலை மூன்று பகுதிகளாக்கி விளக்கிய முறை கடும் விமர்சனத்துக்குள்ளாகியது. காரணம், இக்கோட்பாடு மூலம் சில இலக்கணத்தன்மையற்ற வாக்கியங்களையும் உருவாக்க முடிந்தது.

(எ-டு) *இராமன் படம் பார்த்தான்*<br>*படம் இராமனைப் பார்த்தது*

போன்ற வாக்கியம் உருவாதலைத் தடுக்க சாம்சுகியே 1965இல் தம் மாற்றிலக்கணக் கோட்பாட்டில் சில திருத்தங்கள் செய்து வெளியிட்டார். இங்குப் புதிதாகப் *பாகுபாட்டு விதிகள்* (Sup-categorization rules)தோற்றுவிக்கப்பட்டன. இவ்விதிகள் தேர்வுவிதிகள் (Selectional restriction rules) என்றும், இனச்சுட்டு விதிகள் (Strict Sub-categorization rules) என்றும் இரு வகைப்படும்.

தேர்வு விதிகள், சரியான வேற்றுமை உருபுகளைத் தேர்ந்து கொள்ளும். இதனால்,<br>***வளவன் வீட்டால் இடித்தான்,***<br>***தம்பி வீட்டைப் போனான்.***

இலக்கணப்பிழையான வாக்கியங்கள் உருவாகாமல் காக்கப்படுகின்றன. இது போலச் சில வினைகள் சில [illegible]த்தான் தேர்ந்து கொள்ளும். *குடி* என்ற வினை திரவப் பொருளையும், *தின்னு* என்ற வினை திடப்பொருளையுமே சேரும். இவைகள் தேர்ச்சி இனச்சுட்டுவிதிகள் எனப்படும். இவ்வழி,

*காப்பி தின்றான்*
*மாங்காய் குடித்தான்*

முதலான வாக்கியங்கள் அமையாமல் காக்கப்படுகின்றன.

சாம்சுகி அவர்கள் மேற்கண்ட இரு விதிகளை மாற்றிலக்கணக் கோட்பாட்டில் புதிதாகச் சேர்த்துக் கொண்டது மட்டுமின்றித் தம் முன்னைய வகுப்புமுறையையே மாற்றி அமைத்துக் கொண்டார். 1965 -ஆம் ஆண்டுக் கோட்பாட்டில் அவர் தொடரியலை, தொடரியற் பகுதி, பொருண்மைப் பகுதி, ஒலியனியல் பகுதி என அமைத்துக் கொண்டார். இதன் முதற்பகுதியில், தொடரமைப்புப் பகுதி, விகாரப்பகுதி, பாகுபாட்டு விதிகள் ஆகியவற்றை அடக்குவர். மேலும், இத்திருந்திய கோட்பாட்டில் புதையமைப்பின் ஈற்றுக் கோவையில் நேரடியாகச் சொல்லுருபுகள் சேர்க்கப்படாது. அவற்றின் தன்மைகள் குறிக்கப்பட்டன. சான்றாக,

ராமு வீட்டை இடித்தான்

என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். இதன் கிளை மரப்படமும், அதன் ஈற்றுக் கோவையும் வருமாறு அமையும்.




**நற்கால நிலை**

சாம்சுகியின் கோட்பாடுகளிலிருந்து சிறிது மாறுபட்ட ஆய்வுப் போக்கு தற்காலத்தில் வளர்ந்து வந்துள்ளது. சாம்சுகியின் ஆய்வில் தொடரியலே முக்கியமானதாகும். ஆயின் அவருக்குப் பின் வந்தோர் குறிப்பாக மெக்காலே, லேக்காப், ராஸ்பொஸ்டால் போன்றோர், தொடரியல் ஆய்வில் சொற்பொருளே முக்கியமானது என், வாக்கியத்தின் புதையமைப்பிற்கு இச்சொற்பொருளே அடிப்படை என்றும் கருதினர். இதனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே *உருவாக்கப் பொருண்மைக் கோட்பாடுகள்* (Generative Semantic Theories).

இப்பொருண்மைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழியின் தொடரியலை ஆராய்வோர், புதையமைப்பில் tode எனப்படும் (ஆகு) பொருட்கூறு எல்லாத் தொடர்களிலும் இருப்பதாகக் கொண்டு தம் ஆய்வை மேற்கொண்டனர். எடுத்துக்காட்டாக,

*அவன் வந்தான்*

*அவன் வருதலைச் செய்தான்*

என்ற தொடர்களில் முன்னது *புறநிலை வாக்கியம்.* இப்புறநிலை வாக்கியத்தில் ***அவன் வருதலைச் செய்தான், அவன் வந்திருந்தான்*** எனப் புதையமைப்பில் செயல் (action) இருத்தல் (stative) முதலான அமைப்பில் இருத்தல் வேண்டும் என விளக்க முற்பட்டனர். இவ்வடிப்படையில் தமிழ் வினை முற்றுக்களில் உள்ள பால், எண், இடம் காட்டும் இறுதிநிலைகள், இப்பொருட்களை மட்டுமின்றி, செயல் (action) இருப்புப் (stative) பொருளையும் தருவதாகக் கொண்டனர். அதுபோல் இறந்தகால இடைநிலைகளும் செயல் (action), இருப்பு முதலான பொருளையும் உணர்த்தின எனக் கருதுவர். மேலும், இறந்தகாலப் பொருண்மையில், கழி விறப்பு (Past perfect), நிகழ்வு இறப்பு (Presernt perfect) ஆகிய *பொருண்மையும்* இருப்பதாகக் கொள்வர். *போனேன்* என்பதும் *போயிருந்தேன்* என்பதும் பொருள் நிலையில் ஒன்றாக இருத்தலின் *போனேன்* என்பதிலும் இருப்புப் பொருள் உண்டு என விளக்கப்பட்டது.

நிகழ் கால இடைநிலையும், இடையீடுற்ற தொடர் நிகழ்வு (Durative), இடையீடற்ற தொடர் நிகழ்வு (Progressive) ஆகிய பொருளைக் கொண்டுள்ளதாக விளக்கப்பட்டது. எதிர்கால இடைநிலைக்கும், எதிர்காலப் பொருண்மையோடு நிகழ்விருப்புப் பொருண்மையும் (Present perfect), பழக்கத் தன்மைப் பொருண்மையும் (Habituality) உண்டு எனக் கருதப்பட்டது.

இங்ஙனம் புதையமைப்பில் பல பொருள் இருப்பதாகக் கொண்டு இப்பொருள் ஈர்ப்புக் கோட்பாடு (X attraction Transformation) விளக்கப்பட்டது. இங்கு *ஆகு* என்பது தமிழில் பொருள் ஈர்ப்பு வடிவாக (Semantic absorber) கொள்ளப்பட்டது.

சான்றாக, *வாரன்மின்* (நீங்கள் வராதீர்கள்) என்ற வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். *உருவாக்கப் பொருண்மைக் கோட்பாடு* அடிப்படையில் இதன் கிளைமரப்படம் வருமாறு அமையும்.




இக்கிளை மரப்படத்தின் ஈற்றுக்கோவை மீது ஆகு பிரதி ஆக்க விகாரம் செயல்படும்.

1. ஆகு பிரதி ஆக்க விகாரம்.




அமா - 123444

(அமைப்பு மாற்றம்)

**மேற்கண்ட அமைப்பு மாற...**

பொ. உ. + பெ. + வி. + ஆகு. + ஆகு. + ஆகு. என்ற அமைப்பினைத் தரும். காரணம் பொருள் உறுப்பில் மூன்று பொருள் இருப்பதாலும், ஏவல் வினை வடிவில் இவற்றை உணர்த்த மூன்று வடிவங்கள் இருப்பதாகக் கொள்ளப்பட்டதாலும் (வாரன்மின் - வார் + அன் + மி + ன் = அன் எதிர்மறை) மி.இருப்பு: - ஏவல் & முன்னிலைப் பன்மை, இவற்றைக் கவர்ந்து கொள்ளப் பொருள் ஈர்ப்பு வடிவம் *ஆகு* மூன்று முறை பிரதியாக்கம் செய்யப்பட்டது.

இங்ஙனம் பிரதியாக்கம் செய்யப்பட்ட *ஆகு* வின் மேல் பொருள் உறுப்புப் பெயர்ச்சி விகாரம் செயல்படும். இவ்வாறு செயல்படும் போது இவை சுற்றுவிதி அடிப்படையில் பொருள் உறுப்பில் உள்ள ஒவ்வொரு பொருளும் தனித்தனியாக *ஆகு* வால் ஈர்க்கப் பெறும். இதனைச் *சுற்று விகாரப்பொருள் உறுப்புப் பெயர்ச்சி* **(Movement Transformation in Circle)** என்பர்.

## 2. பொருள் உறுப்புப் பெயர்ச்சி விகாரம்

**i) எதிர்மறைப் பொருள் உறுப்புப் பெயர்ச்சி விகாரம்:** இவ்விதி செயல்பட்டு, இருப்பு + ஏவல் + பெ + ஆகு + (எம.) + ஆகு + ஆகு வடிவம் கிடைக்கும்.

**ii) இருப்புப் பொருட் பெயர்ச்சி விகாரம்:** இவ்விதி மூலம், ஏவல் + பெ + ஆகு (எம.) + ஆகு (இருப்பு) + ஆகு வடிவம் அமையும்.

**iii) ஏவல் பொருட் பெயர்ச்சி விகாரம்:** இவ்விதி செயல்பட, பெ - ஆகு (எம.) + ஆகு + (இருப்பு) + ஆகு (ஏவல்) வடிவம் கிடைக்கும். இங்ஙனம் பொருள் உறுப்புக்கள் அனைத்தும் பிரதி ஆக்கம் செய்யப்பட்ட *ஆகு* வால் ஈர்க்கப்பட்ட பின் இயைபு விகாரம் **(agreement T)** செயல்படும். இதனையே தொல்காப்பியர் ***பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்*** வினையில் தோன்றும் பாலறி கிளவியும் தம்மில் மயங்கல்கூடா என்கிறார். இவ்வியைபு விகாரம் பெயரில் உள்ள *பெயர்* முன்னிலை, பன்மை, காட்டும் தன்மையை வினை முற்றில் கொண்டு இயைபு படுத்தும்.

## 3. இயைபு விகாரம்

இவ்விதியின் செயலாக்கமாக.

பெ + ஆகு (எம) + ஆகு - (இருப்பு) - (ஆகு) | ஏவல் + [ + பெயர் + முன்னிலை + பன்மை ]

என்ற வடிவம் கிடைக்கும். இதனை அடுத்துக் கிளவியாக்க விதி செயல்படும்.

1) ஆகு + (எ,ம) > ஆன்
2) ஆகு + (இருப்பு) > மி/அன் -
3) ஆகு + | ஏவல் + [ + பெயர் + முன்னிலை + பன்மை ] மின் -

இப்பொழுது நீங்கள் வா - அன் - மி - ன் - , என்ற வடிவம் கிடைக்கும். இனி இவ்வடிவின் மேல் நீக்கல் விகாரம் செயல்படும்.

## 4. நீக்கல் (பெயர்) விகாரம்

இவ்விதி செயல்பட,

வா + அன் + மி + ன்

என்ற வடிவம் கிடைக்கும். இது பின்னர் சேர்க்கை விகாரத்திற்கு உட்படும்.

## 5. சேர்க்கை விகாரம்

சேர்க்கை விகாரம் செயல்பட,

வா அன் மின் > *வாரன்மின்* என்ற வடிவம் அமையும். இங்கு ஒலியன் இயல் பகுதி **(Phonological rule)** செயல்படுத்தப்படும்.

### ஒலியன் இயல் விகுதி

1) வா > வார்/அன்

இங்கு முன்னர்ச் சுட்டப்பட்ட, விகாரப் பகுதியில் பதிலியாக்க விகாரம் தவிர, அனைத்து விகாரங்களும் செயல்பட்டு வந்துள்ளமையை அறியலாம்.

*நேற்று வந்த ஆசிரியரைவிட இன்று வந்தவர் நல்லவர்*

என்ற தொடரில், *வந்தவர்* , *நல்லவர்* என்பன முறையே *வந்த ஆசிரியர், நல்ல ஆசிரியர்* என்பதற்குப் பதிலாக நின்கின்றன. இதனையே பதிலியாக்க விகாரம் என்பர்.

இனி மேலே காட்டிய *வாரன்மின்* என்ற கிளை மரப்படத்தில் *வாரன்மின்* என்பதிலுள்ள கிளைப்பகுதி *வா* - படத்தில் வினைப்பகுதியாகவே காட்டப்பட்டு விளக்கமும் தரப்பட்டது. இதனை *வருதல்* எனக் கொண்டு (வா > வருதலைச் செய; வாரன்மின் > வருதலச் செய்யன்மின்) பெயராகவே விளக்குகின்ற நிலையும் உண்டு. இப்பயெரை வினையாக மாற்றுவது பொருள் உறுப்பில் உள்ள செயல் என்னும் பொருளே என்பர். இதனை *ஆகு* என்பது கவர்ந்து பெயர்ச்சொல்லை வினையாக்குகிறது எனக் கொண்டு விளக்கம் தருவாரும் உண்டு. இவ்வடிப்படையில் மேற்கண்ட வாரன்மின் தொடரின் கிளைமரப்படம் **(Tree diagram)**வருமாறு அமையும்.



# 5. இக்காலத் தமிழ்

-டாக்டர் முத்துச்சண்முகன்

## முன்னுரை

இக்காலத் தமிழின் தன்மைகளைப் பற்றிப் பயில, டாக்டர். முத்துச்சண்முகன் அவர்களின் நூல் பாடமாக அமைந்துள்ளது. இக்காலத் தமிழின் நிலை குறித்து அறிய ஓரளவு துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. இது இருபது உள் தலைப்புக்களில் அமைகின்றது. இவற்றில் *திருவாசகத் தமிழ், தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாடு, தொல்காப்பியர் கூறும் குற்றியல் உகரம், ஙனமா? அனமா?, வற்றென்சாரியை, குற்றியலுகரமும் அற்றென மொழிப* ஆகிய ஆறு கட்டுரைகள் நீங்கலாக எஞ்சிய பதினான்கு கட்டுரைகள் இக்காலத் தமிழின், தன்மைகளை ஆராய்வனவாக உள்ளன.

### 1. மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும்

இலக்கியத் தமிழும் மக்கள் தமிழும் (பேச்சுத்தமிழ்) இன்று ஒன்றுடன் ஒன்று கலந்து நிற்கின்ற நிலை காணப்படுகிறது. இன்றைய பத்திரிக்கைகள், இன்றைய இலக்கியப் படைப்பாளிகளின் கதைகள், மேடைப் பேச்சு, வானொலி நிகழ்ச்சிகள், நாடகம், திரைப்படப் பாடல் முதலியன இப்பணியைச் செய்கின்றன. இவையும் முற்றிலுமாக இதனைச் செயல்படுத்தவில்லை. பத்திரிக்கைகள் இலக்கிய, பேச்சு வழக்கினைக் கலந்து எழுதுவன, இலக்கிய வழக்கில் எழுதுவன, பண்டிதர் நடையில் எழுதுவன என மூன்று வகை. முதல் வகையில் விகடத் துணுக்குகள் எழுதும்போது மிகுதியும் மக்கள் தமிழ் பயன்பட்டது. இன்றைய எழுத்தாளர் கூடக் கட்டுரை எழுதும் போது மக்கள் தமிழைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. மேடைப் பேச்சில் மக்கள் தமிழைப் பயன்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் காமராசரும் பெரியாருமே.

கிராமத்துக் கதை நிகழ்ச்சிகள், கதாகாலட்சேபம் முதலானவற்றில் பாடல் வருமிடம் தவிரப் பிறவிடங்களில் மக்கள் தமிழ் பயின்று வருகின்றது. திரைப்படங்களில், புராண, வரலாற்றுப் படங்கள் தவிரப் பிறவற்றில் மிகுதியும் மக்கள் தமிழே ஆளப்படுகின்றது. இருப்பினும், இன்று வரை இலக்கியத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் ஒரு மோதல் இருந்து வருவதைக் குறிப்பிடத் தவறவில்லை ஆசிரியர்.

### 2. யாழ்ப்பாணத் தமிழ்

தமிழின் வட்டாரக் கிளை மொழிகளில் ஒன்று யாழ்ப்பாணத் தமிழ் இதன் பேச்சுவழக்கில் ஒவ்வொரு சொல்லின் முதலசையும் எடுத்தொலிக்கப்படுகிறது. இதுவன்றி, நம் தமிழுக்கும், யாழ்ப்பாணத் தமிழுக்கும் எழுத்து, சொல், தொடர்நிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1. வந்தா, மரொ போன்ற சொற்களில் மூக்குயிர்கள் நம் தமிழில் காணப்பட, யாழ்ப்பாணத் தமிழில் இது இல்லை.
2. நாரி, பாரி, லாரி, மாரி - போன்ற சொற்களில் உள்ள ஆ காரம் Σ ஆக உச்சரிக்கப்படுகிறது.
3. இ > எ, உ > ஒ என்ற மாற்றம் (பிரண்டை > பெரண்டை உலகம் > ஒலகம்) யாழ்ப்பாணத் தமிழில் இல்லை.
4. மொழி முதல் இகரம் யாழ்ப்பாணத் தமிழில் மறைவதில்லை இரண்டு > ரண்டு என)
5. சொற்களின் இரண்டாவது அசை நம் தமிழில் போல (திட்டினான் > திட்னா) மறைவதில்லை.
6. உயிர் முன் இ, அ விட்டிசைத்தல் யாழ்ப்பாணத் தமிழுக்கே உரியது, வர இல்லை, போக இல்லை, அதுஅள்)
7. ஒலிப்புடை அடைப்பொலிகள் யாழ்ப்பாணத் தமிழில் மொழிமுதல் வருதல் இல்லை.
8. ஓரசைச் சொற்கள் பல (நெய், மெய், கண், வில், கள்) நம் தமிழ் போல ஒலித்துணை உயிர் பெறுதல் இல்லை.
9. சுட்டுப் பெயர் *உது* யாழ்ப்பாணத் தமிழில் வழக்கில் உள்ளது.
10. மூவிடப் பெயர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத் தமிழில் புத்தகத் தமிழாகவே உச்சரிக்கப் பெறுகின்றன அவெயன் (அவர்கள்) அவளவே (அவளுக). அது அள் (அவைகள்) முதலான குறிப்பிடத்தக்க மாற்றங்கள்.
11. தன்மைப் பன்மை, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்ற வேறுபாடு யாழ்ப்பாணத் தமிழில் இல்லை.

12. ஆறாம் வேற்றுமை உருபாக ரெ எடே யாழ்ப்பாணத் தமிழில் பயன்படுகிறது (அவன்ரெ பென்சில், அவளெடெ பென்சில்)

13. வினைமுற்றைப் பொறுத்தவரை போறன் போவென், போனென், போனாங்கள், போறியள், போவியள். போனியள், போனனான், போனனீர், போன நீங்கள் முதலான வடிவங்கள் யாழ்ப்பாணத் தமிழில் குறிப்பிடத்தக்கன.

14. கங்குவடலி (இளம்பனை), காவி (தூக்கி), காட்டாடியார் (வண்ணான்), கதைக்கிறது (சொல்கிறது) கக்கட்டமிட்டு (உரக்கச் சத்தமிட்டு) முதலான பல யாழ்ப்பாணத் தமிழ்ச்சொல் வழக்குகள் நம் தமிழில் காணப்படாதன. மேலும் பறைந்தான் (சொன்னான்) போகட்டெ (போகட்டும்) முதலான மலையாளச் சொல்லமைப்பும் இதில் காணப்படுகிறது.

இங்ஙனம் பல நிலைகளில் நம் பேச்சுத் தமிழிலிருந்து யாழ்ப்பாணத் தமிழ் மாறுபட்டாலும், புத்தகத் தமிழோடு அது மிகுந்த தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணம், யாழ்ப்பாணம் தமிழின் புகுந்த இடமாக அமைவதும், பிறமொழித் தாக்கம் குறைவாகவும் அமைதலே எனலாம்.

## 3. திருவாசகத்தமிழ்

1. ஒலியன் நிலையில் ய > அ ஆகும். தென்பாண்டி வழக்குக் காணப்படுகிறது. (யார் > ஆர் யானை > ஆனை யாக்கை > ஆக்கை)

2. க்த் > த்த் ஆகிறது. (பக்தி > பத்தி முக்தி > முத்தி)

3. த்த் > ச்ச் ஆகிறது. (வித்தை > விச்சை)

4. ற்ற் > த்த் ஆகிறது. (பற்றேதும் > பத்தேதும்)

5. *ஆமல்* விகுதி *ஆம்* என்றும் (பிறவோமே), ஆக ஆறு என்ற உருபுகள் ஆ என்றும் (கோவணமா (க), வியப்புறுமா (று) ஆகின்றன.

6. நிகழ்கால உருபாக *உ* வருதல் தென்பாண்டி வழக்கு. இது திருவாசகத்தில் காணப்படுகிறது (சொல்லுகோம்).

7. இன்றைய தென்பாண்டி வழக்குச் சொற்கள் சில அலம்பு, சாடு, தீட்டார், நாசி, தொண்டை முதலான வாசகத்தில் இடம் பெறுகின்றன.

8. அச்சோவே (அச்சன்), கொட்டாமோ (பறையாமோ), தேடிற்றிலேன் (தேடிற்றில்லா), மிண்டுகின்றேனை (மிண்டுந்து), அதெந்துவே (அதெந்து) முதலான மலையாள வழக்குகள் வாசகத்தில் இடம் பெறுகின்றன.

இதனால் திருவாசகம், மக்கள் தமிழையும், இலக்கியத் தமிழையும் கொண்டமைந்த படைப்பு என்பது தெளிவாகிறது.

## 4. சாதிப்பேச்சும் உறவுமுறைப் பெயரும்

வடஆர்க்காடு மாவட்டப் பறங்கிப்பேட்டைக் கிராமத்தில் உள்ள பதின்மூன்று சாதியினரிடையே உள்ள உறவுப்பெயர்கள் இங்கு ஆராயப்படுகின்றன. இங்கு முகமதியர், அந்தணர், முதலியார், பரதவர், படையாச்சி, நெசவுச் செட்டியார், நாடார், பறையர், இடையர், வெள்ளாளர், தட்டர், வர்ணியச் செட்டி, அம்பட்டன் ஆகிய சாதியினரிடை வழங்கும் உறவுப்பெயர்கள் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன.

முகமதிய உறவுப்பெயர்கள் 17-இல் அம்மா, உம்மம்மா, வாப்பா, சேச்சி, நானா, பூவா (அக்கா) ஆகியனவும், அந்தணர் உறவுப்பெயர்கள் 14-இல் அம்மாஞ்சி, அம்மங்கா, அத்திம்பேர், அத்தங்கா, ஆத்துக்கா, சடகர் முதலானவும், முதலியார் உறவுப்பெயர்கள் 9-இல் அம்மாணி, சின்னண்ணி, அம்மணி ஆகியனவும், பரதவரில் பெத்தப்பா, பெத்தம்மா, சித்தியம்மா, அப்பச்சி, ஓரவத்தி ஆகிய ஆறு உறவுப்பெயர்களும், நெசவுச் செட்டியார் உறவுப்பெயர்கள் 8-இல் தம்முண்டு, வதனை, பாவா ஆகியனவும் குறிப்பிடத்தக்கன.

பதின்மூன்று சாதிகளிடையே வழங்கும் 133- உறவுப்பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் முகமதியர்களிடையேதான் உறவுப்பெயர் மிகுதி. இந்துக்களில் அந்தணர்களிடம் மிகுதி. அம்பட்டன் சாதியில்

உறவுப்பெயரோ காணப்படவில்லை. சாதி உயர்வு தாழ்வுக்கு ஏற்ப உறவுப்பெயர் கூடியும் குறைந்தும் அமைவதாகக் கருதுவர். முகமதியர்களிடம் மிகுதியான சாதிப்பெயர்கள் காணப்படுவதற்குக் காரணம் அவர்கள் தனித்து வாழ்ந்தமையே, சாதிப்பெயர்கள் விழுக்காடு, அந்தணர், முதலியார் தவிர்த்த எஞ்சிய தாழ்ந்த சாதியினரிடம் குறைந்து கொண்டே செல்லினும் அக்குறைதல் மிகச்சிறுபான்மையாக அமைகிறது. இது அச்சாதியினருக்கிடையிலான நெருங்கிய தொடர்பினைக் காட்டும் என்பர். மேலும் உறவுப் பெயர்களில் இவர்களிடம் பொதுமைப்பண்பு நிறைந்து காணப்படுவதும் இதனை வலியுறுத்தும்.

## 5. தமிழா ஆங்கிலமா

இன்றைய பேச்சுத் தமிழில் ஆங்கிலம் கலந்து பேசப்படும் நிலை மிகுதியாக அமைகின்றது. படித்தவர் முதல் படிக்காத விவசாயி வரை இந்நடையில் பேசுகின்றனர். பேசுவோர், பேசும் இடம், பொருளுக்குத் தக்கக் கூடியும் குறைந்தும் ஆங்கிலச் சொல் இடம்பெறும். இங்குக் கல்லூரி மாணவர் பேச்சில் வரும் ஆங்கிலச் சொற்கள் ஆக்கப்படும் நிலை விளக்கப்படுகின்றது. அதாவது ஆங்கிலச் சொல் தமிழில் எடுத்தாளப்படுகின்றபொழுது அவை தமிழ்மொழி இயல்புக்குத்தக்க அமைகின்றனவா, அன்றி மாறி அமைகின்றனவா எனக் காண முற்படுகிறார், ஆசிரியர்.

*1.* தமிழில் பண்ணு, போடு, விடு, அடி, செய் முதலான தொடரில் வரும்போது இவற்றிற்கு முன் பெயர் தான் வரும் (கேலி பண்ணு, கரடி, விடு, சோறு போடு). இந்நிலை ஆங்கிலச் சொற்களை எடுத்தாளுகின்ற போது பின்பற்றப்படவில்லை. இதில் எல்லாவகையான சொற்களும் இடம்பெறுகின்றன. **idea** பண்ணு, எனப் பெயரும்; **accumulate** பண்ணு, **accuse** பண்ணு - என வினையும்; **nice** பண்ணு, **tight** பண்ணு, **strict** பண்ணு எனப் பெயரடையும்; **act** பண்ணு, **advice** பண்ணு எனப் பெயராகவும், வினையாகவும் வருவனவும்; **bluff** பண்ணு, **catch** பண்ணு எனப் பெயராகவும், வினையாகவும், பெயரடையாகவும் வருவனவும்; **in** பண்ணு, **off** பண்ணு, **on** பண்ணு எனப் பெயராகவும், பெயரடையாகவும், முன் ஒட்டாகவும், வினையடையாகவும் வருவனவும்; **like** பண்ணு, **out** பண்ணு எனப் பெயராகவும், வினையடையாகவும், முன் ஒட்டாகவும் வருவனவும் இவ்வினையோடு வருகின்றன.

***2.* போடு**

1. **drama** போடு - பெயர்.
2. **ball** போடு - பெயர் & வினையாக வருவன.
3. **glass** போடு - பெயர், வினை & பெயரடையாக வருவன.
4. **trunk** போடு - பெயர் & பெயரடையாக வருவன.
5. **light** போடு - பெயர், வினை, பெயரடை & வியைடை.

***3.* விடு**

1. **gap** விடு - பெயர்.
2. **dupe** விடு - பெயர் & வினை.

***4.* அடி**

1. **lottery** அடி - பெயர்.
2. **bore** அடி - பெயர் & வினை.
3. **cut** அடி - பெயர், வினை & பெயரடை.
4. **out** அடி - பெயர், வினை, பெயரடை, வினையடை & முன் ஒட்டு.

***5.* ஆக**

தமிழில் பெயரோடு இணைத்து *மெதுவாக* - என வினை அடையாக்குகிறோம். ஆங்கிலத்தில் பெயர்ச்சொல் (**accident** ஆக) பெயரடைச் சொல் (**bold** ஆக) பெயராகவும், வினையாகவும் வரும் சொல் (**cloud** ஆக), பெயராகவும் பெயரடையாகவும் வரும் சொல் (**active** ஆக), வினையாகவும் பெயரடையாகவும் வரும் சொல் (**busy** ஆக), பெயராகவும், வினையாகவும் பெயரடையாகவும் வரும் சொல் (**waste** ஆக), பெயராகவும், வினையாகவும் பெயரடையாகவும் வினையடையாகவும் வரும் சொல் (**bright** ஆக), வினையாகவும் வினையடையாகவும் பெயரடையாகவும் வரும் சொல் (**clean** ஆக), பெயராகவும் எச்சமாகவும் வரும் சொல் (**confusing** ஆக) ஆகிய சொற்களை அடுத்து இது அமையும்.

இங்ஙனம் வரும் ஆங்கிலச் சொற்கள் எவ்வகையினவாயினும், இவை தமிழில் மேற்கண்ட சொற்களோடு வரும்போது அவை பெயர்த்தன்மை பெறுகின்றன. இவ்விதி தமிழுக்கு மட்டுமின்றி மலையாளம் (arrange செய்), கன்னடம் (adopt மாடு (பண்ணு), தெலுங்கு (accuse சேயு, பண்ணு, bore கொட்டு அடி, bold கா (ஆக) வங்காளம், இந்தி முதலான மொழிகளுக்கும் பொருந்தும்.

குழுஉக் குறிபோல, அன்சகிக்கபிள் (un-able), சமாளிபை (-fy), சமாளிபையிங் (fying), சமாளிபிகேசன் (fication), பயங்கரமாட்டிக் (atic), பெரியாரிசம் (ism) முதலான சொற்களில் ஆங்கில ஒட்டுக்கள் சேர்ந்து வழங்குகின்றன.

Writer - written, Wardan - warder ஆகிய சொற்களும் ஒருமை, உயர்வு ஒருமை அடிப்படையில் வழங்குகின்றன. வில்லன் - வில்லியும் இவ்வகையில் அடங்கும்.

## 6. தமிழின் ஒலியனியல்

இன்று எழுதப்படும் தமிழில் 10 - உயிர்களும், 19 - மெய்களும் உள்ளன. உயிர் ஒலிகள் நாவின் உயரத்தால் மேல், கீழ், இடை எனவும், நா முன் பின் நகர்வது கொண்டு முன், நடு, பின் என்றும், இதழ் குவிதல் விரிதல் நிலையில் இரண்டாகவும் வகைப்படுத்தப் பெறும்.

வெடிப்பொலி உயிரிடை இரட்டித்து வரும்போது ஒலிப்பிலா நிலை பெறும். மொழி முதலிலும் க, ச, த, ப ஒலிப்பில்லா நிலையிலேயே அமையும். ச மொழி முதலிலும் உயிரிடையிலும் ஒலிப்பில்லா நுனியண்ண உரசொலியாகிறது. க, த, ப, ட, ற உயிரிடையே ஒலிப்புடை உரசொலியாகின்றன. ட உயிரிடை ஒலிப்புடை நாவளை வருடொலியாகிறது. க- இ முன் முன்கடையண்ண ஒலியாகவும், உ முன் பின் கடையண்ண ஒலியாகவும், பிற உயிர் முன், நடுக் கடையண்ண ஒலியாகவும் ஆகின்றது. மெல்லினத்தை அடுத்து எல்லா வெடிப்பொலிகளும் ஒலிப்புடை வெடிப்பொலிகளாக ஒலிக்கின்றன.

மொழி முதல் இடையில் எல்லா உயிர்களும் வருகின்றன. மொழியிறுதியில் எ, ஒ தவிரப் பிறவரும் ஈ, ஊ ஓரசைச் சொற்களான தீ, பூ என்பனவற்றில் மட்டுமே ஈறாகும்.

க, ச, த, ம, ன (ந்) மொழி முதலாகும். ம, ன, ண, ழ, ல், ள, ர, ய மொழி ஈறாகும். க, ச, த, ப, ட, ண, ன, ய, ல, வ, ள தனித்தும் இரட்டித்தும் மொழியிடை வரும். வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக வருவனவும் தொகுக்கப்பட்டன. இவ்வகையில் மூன்று மெய்கள் மயங்குதலும் உண்டு.

## 7. பெயர்

பெயர்ச் சொற்கள் உயர்திணை, அஃறிணை, விரவுப் பெயர் எனப் பகுத்து, உயர்திணைப் பெயர் ஆண், பெண், பலர் என்ற முப்பாலையும் அஃறிணைப் பெயர் ஒருமை, பன்மை எனவும், விரவுப் பெயர் ஆண், பெண், ஒருமை, பன்மை எனவும் அமையும் என வகைப்படுத்துவார் தொல்காப்பியர். ஆயின் இக்காலத் தமிழில் குறிப்பாகப் படித்தவர்கள் மேடைப் பேச்சிலும், வகுப்பில் பேசுகின்ற மொழியில் இப்பாகுபாடு சிறிது மாற்றம் அடைகிறது. இம்மாற்றம் உயர்திணைப் பெயர்ச் சொற்களில் மட்டுமே அமையும். அஃறிணைப் பெயர்ச் சொற்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

உயர்திணைப் பெயர்ச்சொற்களை அவை பால்காட்டும் தன்மைக்கேற்ப ஐந்தாக வகைப்படுத்தலாம்.

1. ஆண்பால், பெண்பால், ஆண் பெண் பலர்பால் காட்டுவன. இப்பிரிவு பழந்தமிழ்ப் பாகுபாட்டில் அடங்கும். இங்குப் பலர் பால் பெயர் ஆண் பன்மைக்கும் பெண் பன்மைக்கும் பொது.

(எ-டு) அவன், அவள், அவர்கள்.

2. ஆண்பால், பெண்பால், ஆண்பால் பன்மை, பெண்பால் பன்மை ஆண் பெண் பன்மை காட்டுவன.

(எ-டு) மாணவன், மாணவி, மாணவர்கள், மாணவிகள், மாணவ மாணவிகள்.
குறவன், குறத்தி, குறவர்கள், குறத்திகள், குறவன் குறத்திகள்.

...ன்றாவது வகையில் அடங்கும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் ஆண்ஒருமையுப் . ஆண் பன்மையு... ...வற்றில் பெண்பால் விகுதி சேராது.

(எ-டு) தந்தை, தந்தையார், தம்பி, தம்பியர்.

4. நான்காவது வகையில் பெண் ஒருமை, பெண் பன்மை மட்டும் காட்டுவன அடங்கும்.

(எ-டு) தாய், தாயர், தங்கை, தங்கையர்.
மனைவி, மனைவியர், அக்காள், அக்கையார்.

5. ஐந்தாவது வகைப் பெயர்கள் உயர்திணையில் ஒருமை, பன்மை மட்டுமே காட்டும். ஆண், பெண் எனப் பால் காட்டுவது இல்லை.

(எ-டு) அறிவாளி, அறிவாளிகள்.
வித்துவான், வித்துவான்கள்.

இதோடு ஆறாவது வகையில் அடங்கும் நண்பன், நண்பர்கள் என்ற சொல் அமையும். இது ஒருமையில் ஆண்பாலையும், பன்மையில் ஆண், பெண்பாலுக்குப் பொதுவாகவும் அமையும். இவ்வகையில் வேறு சொற்கள் கிடைக்கப் பெறவில்லை.

## 8. ஆக்கப் பெயர்கள்

பெயர்கள் ஆக்கப்படுகின்ற போது சில விகுதிகள் சேருகின்றன. இவை சுட்டு, வினா, பெயர், வினை பெயரடை முதலானவற்றோடு சேர்ந்து வந்து ஆக்கப்பெயராகின்றன. உருபுகள் அடிப்படையில் இவற்றை ஆறாக வகைப்படுத்தலாம்.

1. **பால் காட்டும் உருபு:** இவை சுட்டு, வினா, பெயரடை, பெயர், வினை ஆகியவற்றோடு வரும்
(எ-டு) அவன், அவள், அழகானவன், கள்ளன், திருடி.

2. ***மை* விகுதி:** இது பெயரடை, பெயர், வினை ஆகியவற்றோடு மட்டும் வரும்.
(எ-டு) பெருமை, பகைமை, வறுமை.

3. ***த்தனம்* விகுதி:** பெயரடை, பெயர், வினை இவற்றோடு வரும்.
(எ-டு) கஞ்சத்தனம், ஊதாரித்தனம்.

4. **பெயர், வினை, இரண்டுக்கு மட்டும் வரும் விகுதிகளாக** இ, அம், ஏறி, ஆளி, அடம், வி ஆகிய ஆறு உருபுகள் அமையும்.
(எ-டு) பாவி, பொறுக்கி, விருப்பம், வருத்தம், மரமேறி, வந்தேறி, ஊராளி, பீச்சாளி, நரவடம், கட்டடம், துணைவி, கல்வி.

5. **பெயரோடு மட்டும் வரும் உருபுகள்:** ஆடி, ஆட்டி, ஆளன், ஒட்டி, தின்னி, த்தான், க்காரன், க்காரி, காரி, காரன், வந்தன் ஆகிய பதினொன்று.
(எ-டு) வாயாடி, குரங்காட்டி, செயலாளன், தேரோட்டி, பிணந்தின்னி, கிராமத்தான், தயிர்க்காரி, தயிர்க்காரன், மீன்காரி, மீன்காரன், செல்வந்தன்.

6. **வினையொடு மட்டும் வருவன:** வினையால் அணையும் பெயர் உருபு, து, அணம், அல், கொள்ளி. ஈற்றயல் இ ஆ ஆதல், ஈற்றயல் உயிர் நீளல், ப்பது, பது, ப்பு, தி, த்தி, த்தல் - அல், த்தை, டு, து, த்து, சு, சி, ச்சி, ச்சல் கை, க்கை, க்கு, மானம், வது, வை, வு - ஆகிய 23 உருபுகள்.
(எ-டு) வந்தவன், கொலை, கட்டணம், கீறல், பயந்தாங்கொள்ளி, சாப்பாடு, கேடு, எடுப்பது, காண்பது, பகுப்பு, ஊர்தி, அடர்த்தி, அறிதல், பார்த்தல், தூண்டல், நடத்தை, திருட்டு, எழுத்து, நெய்த்து, ஏச்சு, காட்சி, உணர்ச்சி, காய்ச்சல், அழுகை, கிடக்கை, போக்கு, தீர்மானம், போவது, கறவை, பணிவு.

## 9. வேற்றுமை

வேற்றுமைகள் எட்டு என்று கணக்கிடுவதைக் காட்டிலும் பொருள் அடிப்படையில் அல்லது *ஐ* வேற்றுமை *ஆல்*வேற்றுமை என்று வரிசைப்படுத்துவது நலம். எழுவாய் வேற்றுமையைத் தொடரியல் அடிப்படையில் விளக்கலாம்.

### செயப்படுபொருள் வேற்றுமை

அஃறிணைப் பெயரோடு தொக்கியும், உயர்திணைப் பெயரில் தொகாமலும் வருமென்பர். ஆயினும் இதனைப் பொது விதியாகக் கொள்ள முடியவில்லை.

1. சில செயப்படுபொருளில் *ஐ* உருபு எப்போதும் விரிந்தே நிற்கும். (அதைக் கொடுத்தான், அவனைக் கண்டான், அந்த மோரைக் குடி, கதவை மூடு, ஜன்னலை அடை, மண்டையைப் போட்டான்)

2. சிலவற்றில் *ஐ* தொக்கியும் தொகாமலும் வரும். (ரூபாய் கொடு, ரூபாயைக் கொடு)

3. சிலவற்றில் *ஐ* தொக்கியே வரும். (அவனுக்குப் பெண் பார்த்தாய் விட்டது)

4. சிலவற்றில் தொக்கி வந்தால் ஒரு பொருளும் (நான் வீடு பார்த்தேன்) தொகாமல் நின்றால் ஒரு பொருளும் (நான் வீட்டைப் பார்த்தேன்) தோன்றுகிறது. ஆயின் *செயப்படு பொருள்* தரும் நிலையில் மாறுபடவில்லை.

இனி வேற்றுமை உருபுகளில் ஐ, ஆல், கு, இன் என்பனவற்றை அடிப்படை வேற்றுமையாகவும், பிறவாறு வருவனவற்றைத் துணை வேற்றுமை உருபுகள் என்றும் குறிப்பிடுவர். இவை பிற இடங்களில் தனிச் சொற்களாகவும் வரும். இந்நிலையில் ஐ - உருபின் துணை வேற்றுமைகளாக பற்றி, தவிர, விட, போல, ஒட்டி, குறித்துக் கொண்ட, வைத்து என்பன அமையும்; இன், கு உருபுகளின் துணை வேற்றுமையாக மேலே, கீழே, முன்னே, பின், உள்ளே, வெளியே, எதிரே என்பன அமையும்; இல் - இன் மாற்று வடிவமாக *இருந்து* அமையும். அது உடைய, உடன், கொண்டு, என்பன சொல்லுருபுகள். இவை அடிப்படை வேற்றுமை உருபு இன்றியும் அதன் பொருளை உணர்த்தும், ஆயின் துணை வேற்றுமை உருபுகள் அடிப்படை உருபுகளோடு சேர்ந்தே வந்து அப்பொருள் உணர்த்தும்.

## 10. வினையால் அணையும் பெயர்

வினையால் அணையும் பெயர் மூவிடம் முக்காலம் காட்டும். வேற்றுமை உருபு ஏற்கும். ஒன், ஒள், ஒர், ஓர் - முதலான விகுதிகள் வினையால் அணையும் பெயருக்கு அமைந்தன. சங்க இலக்கியத்தில் அன், அள், அர், வினைமுற்றுக்கே வந்தன; ஆன், ஆள், ஆர் எதிர் மறை வினைமுற்றுக்கே அமைந்தன. உடன்பாட்டில் வினையால் அணையும் பெயருக்கும் அமைந்தன. தவிரவும், நம், நன், நள், ந, தை - முதலானவும் வினையால் அணையும் பெயருக்கு வந்தன. இவையே பின்னர் அன்: அள்-ஆகத் திரிந்திருக்க வேண்டும். (அறியுநன் > அறியுனன்)

பெயரெச்சத்தோடு ஒன், ஆன்-விகுதி சேர வினையால் அணையும் பெயர் அமையும் (அறிந்தோன், அறிந்தான்; செய் செய்யூ என்னும் பெயரெச்சத்தோடு இவ்வகை வினை எச்சமே இலக்கண நூலார் குறிப்பர்) நர் தை முதலான விகுதி சேர இப்பெயர் அமையும் (அறிநை, அறிஞர், அறியுநர்). இன்று பெயரெச்சத்தோடு *அவன், அவள்* - முதலான சேர்க்க இப்பெயர் வரும். இவ்வகைப் பெயர் சங்க இலக்கியத்து அருகி வருகின்றது.

## 11. எதிர்மறைகள்

இக்கால உரைநடை, மேடை & வகுப்புத் தமிழில் காணப்படும் எதிர்மறைகளை நான்கு வகைப்படுத்தலாம்.

1. அஃறிணைப் பெயர்களைக் கருத்தாவாகக் கொள்ளும் போகாது, வராது, தூங்காது, கிடைக்காது, முடியாது, காணாது முதலான எதிர்மறைகள்.

2. ஐம்பால் பெயர்களையும் கருத்தாவாகக் கொள்ளும், கிடையாது, ஆகாது, கூடாது; இல்லை. அல்ல, வேண்டாம் முதலான.

3. உயர்திணைப் பெயர்களைக் கருத்தாவாகக் கொள்ளும் மாட்டான் என்பது.

4. கருத்தா பெறாதன - காணோம், தெரியாது முதலான.

இவை வருகின்ற நிலையில் இரண்டாக வகைப்படுத்தலாம். ஒன்று முன்னிலைக்கே வருவன, மற்றொன்று முன்னிலையில் வராதன. இவ் எதிர்மறைகள் சொல் நிலையில் வருவன, உருபன் நிலையில் வருவன என இரண்டு வகைப்படும். சொல் நிலையில் மாட்டா (ன்) இல்லை, அல்ல - ஆகியன அமையும்.

எதிர்மறை உருபுகள் மொழி இறுதியில் வருவன, மொழி இடையில் வருவன என இருவகைத்து *ஆம்* உருபு வேண்டாம் என்ற வினைமுற்றில் வரும் *ஓம்* உருபு காணோம் என்பதில் வரும். *ஆ* அஃறிணைப் பன்மையில் வரும்; *ஆது* பிறவிடங்களில் வரும்.

சொல் இடையில் *ஆத்* உருபு உயிரின் முன்னரும், *ஆ* மெய்யின் முன்னரும் வரும்.

எதிர்மறைகளில் கால உருபு இன்றேனும், இவ்எதிர்மறைச் சொற்கள் இன்று, நாளை, நேற்று முதலான காலக் கிளவிகளைப் பெற்றுக் காலம் உணர்த்தும்.

**1. நிகழ்வெதிர்வு:** நிகழ்கால, எதிர்காலத்திற்குரிய இன்று, நாளை என்னும் சொற்பெற்றுக் கூடாது, கிடைக்காது, தூங்காது, போகாது, வராது, வேண்டாம், மாட்டான் ஆகிய எதிர்மறைகள் மட்டுமே வரும்.

**2. நிகழ்விறப்பு:**

1. பெற்று வரும் *காணோம், இல்லை* என்னும் எதிர்மறைகள்.

(எ-டு) வந்த பாட்டைக் காணோம்
வந்த பாடில்லை நேற்று / இன்று

2. அகர ஈற்று வினை எச்சத்தோடு இயைந்தும் இயையாதும் வரும் *காணோம்* என்ற எதிர்மறை.

(எ-டு) வரக் காணோம்
அவனைக் காணோம் நேற்று / இன்று

3. *இருக்க* எனும் துணை வினை பெற்று வரும் *முடியாது, கூடாது, வேண்டாம், மாட்டான்* என்ற எதிர்மறைகள்.

(எ-டு) தூங்கி இருக்க முடியாது நேற்று / இன்று

4. வந்தது, போனது - என்ற இறந்தகாலத் தொழிற்பெயரை அடுத்து இல்லை, கிடையாது, கூடாது, தெரியாது, ஆகாது என்பன வரும்.

(எ-டு) வந்தது இல்லை நேற்று / இன்று

**3. நிகழ்காலம்:** *இல்லை* என்பது *வருகிறான்* என்றாற் போன்று வரும் நிகழ்கால வினைமுற்றை அடுத்து வரும் போது நிகழ்காலம் காட்டும்.

**4. முக்காலம்:** *இல்லை* என்பது முக்காலத்துக்கும் வரும்.

(எ-டு) அவர் வர இல்லை / இன்று, நேற்று, நாளை
வரப்போகிறது இல்லை / இன்று, நாளை, நேற்று
வருகிறது இல்லை / வருவது இல்லை / வந்தது இல்லை.

## 12. வினா

யார் வினாப் பெயர் உயர்திணைக்கும் என்ன என்பது அஃறிணைக்கும் வரும். எ, ஏ, ஓ, ஆ ஆகியன வினா உருபாக வரும்.

எ கா வினா உருபு எவன், எவள், எவர், எது, எவை, எவ்வளவு, எவ்வகை, எம்முறை, எவ்வாறு, எந்த, எங்ஙனம், எங்கு, என்ன, எங்கே, எத்தனை, எப்படி - என்றவற்றில் வரும்.

ஏ காரம் தான் என்ற தோற்ற உருபோடு தான் வரும். (அவன் தானே செய்தான்?

ஓ காரத்தை வினா உருபாகக் கொள்வார். (வந்தானோ, வரவில்லையோ), ஆயின் இக்காலத் தமிழில் இது ஐய உருபாக மாறிவிட்டது. வினாப்பொருளில் வரவில்லை.

ஆ காரம், தற்காலத் தமிழ் வினாவில் இவ்வுருபே மிகுதி. பெயரடை தவிரப் பிற எல்லாச் சொற்களோடும் வரும். பெயரடையும், பெயரடையாக வரும் பெயர், சுட்டுப்பெயர், எண்ணுப்பெயர், மூவிடப்பெயர், எதிர்மறை முதலானவும் ஆகார வினா உருபை ஏற்காது.

வினைச் சொற்களிலும் ஏவல் வினை, வினைத்தொகை, பெயரெச்சத்திற்கு அடையாக வரும் வினை எச்சம் (தொடர்ந்து படித்த புத்தகம்) விட்டு, கொண்டு ஆகியவற்றிற்கு முன்வரும் வினைச்செச்சம் (அடித்துவிட்டு) ஆகியவற்றோடு வினா உருபு வராது.

பெயர்ச்சொற்களில் *மாத்திரம்* என்ற சொல்வரின் அது வினா உருபு ஏற்காது (எனக்கு மாத்திரம்), இதோடு இரட்டிப்புச் சொற்களிலும் (நடுநடுங்கி), பக்கவாத்தியச் சொற்களிலும் (வாடிவதங்கி) எதிரொலிச் சொற்களிலும் (தந்துகிந்து) இவற்றின் இடையில் *ஆகார* வினா உருபு வராது.

சொற்றொடரில் ஒரு இடத்தில் மட்டுமே இவ்வினா உருபு வரும். ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் வந்தால் அத்தொடர் ஒன்றுக்கு மேற்பட்ட தொடராகிவிடும். தொடரில் *ஆல்* கொண்டு முடியும் நிபந்தனையில் வினா உருபு வராது. அதோடு எழுவாய்த் தொடரின் இறுதியில் வரும் போதும் அதில் வினா உருபு சேர்ந்து வராது.

## 13. உம்மைகள்

*உம்* உருபு பெயரடையிலும், வினை முற்றிலும் வராது. பெயர்களோடும், வினை அடைகளோடும் மட்டுமே வரும்.

**எண்ணும்மை:** எண்ணும்மைகள் பல்வகைப் பெயரோடும், வினையோடும் வரும். ஒரு வாக்கியத்திலுள்ள புதை வாக்கியங்களைக் கண்டறிய எண்ணும்மைகள் பயன்படுகின்றன.

(எ-டு) *பிள்ளையை அடித்தும் கண்டித்தும் வளர்த்தார்கள்* என்பது வினை எச்சத்தில் எண்ணும்மை வந்த ஒரு தொடர். இது பிள்ளையை அடித்து வளர்த்தார்கள், பிள்ளையைக் கண்டித்து வளர்த்தார்கள் எனப் புதைவடிவில் **(Deep Structure)** இரண்டு தொடர்களைக் கொண்டுள்ளது. இவ்வும்மை வாக்கியங்களை நீட்டிச் செல்லவும், அவ்வழி எழுத்தாளரின் தனித்தன்மை வாய்ந்த நடைச்சிறப்புணரவும் இது துணை நிற்கின்றது. எண்ணும்மையை எடுத்துவிட்டாலும் வாக்கியத்தில் பொருள் மாறுபடாது. இது ஒரே வாக்கியத்தில் இடம் பெறும்.

**தழுவு உம்மை:** இது வாக்கியத்தில் ஒரே ஒரு இடத்தில்தான் வரும். முன்பு கூறப்பட்ட அல்லது பின்பு கூறப்படுகின்ற செய்தியைத் தழுவி நிற்பது தழுவு உம்மை. இவ்வும்மையை எடுத்து விட்டால் வாக்கியத்தின் பொருள் புலப்பட்டுத் தோன்றாது. இவ்வும்மை ஒரு வாக்கியத்தில் வரவேண்டுமென்பதில்லை.

(எ-டு) *அப்படிப்பட்டவர்கள் புகழும் பெறுகிறார்கள். ஓயாத கைதட்டும் அவர்கள் பேச்சிற்குக் கிடைக்கிறது. பெருங்கூட்டமும் அவர்கள் பேச்சைக் கேட்பதற்கு வந்து விடுகிறது.* இதில் கூட்டமும் என்பதில் உள்ள உம்மை முன்னிரண்டு வாக்கியப் பொருண்மையைத் தழுவுகிறது. இதனை இறந்தது தழீய உம்மை என்பர். புகழும் என்பதிலுள்ள உம்மை பின்னிரு வாக்கியப் பொருண்மை தழுவுதலால் அது எதிரது தழுவிய உம்மை, கைதட்டும் என்பதில் உம்மை இருமுகம் தழுவியது.

**முற்றும்மை:** பெயரோடு வரும். வாக்கியத்தில் ஓரிடத்தில் தான் வரும். முற்றுப் பொருளைத் தரும். சகலம், எல்லாம் என்னும் சொற்களும், இத்தனை, இவ்வளவு எனச் சுட்டின் அடிப்படையில் பிற சொற்களும் முற்றும்மை ஏற்கும்.

(எ-டு) *எல்லோரும் அதிசயிக்கும்படி கேதாமாயின் தகப்பனார் நடித்தார்* - கல்கி.
*நாங்கள் இருவரும் உறவினர்கள் தான்;* என் உம் ஏற்றது.

**பொறுக்கும்மை:** எது, யார், எவர் என்ற வினாப்பெயரும், எங்கு, எப்படி, எவ்வளவு என்ற வினையடை வினாக்களும், எந்த என்ற பெயரடை வினாவும் *உம்* பெற்றுப் பொறுக்கும் r பொருளில் வரும். இங்கு ஏதாவது ஒன்று அல்லது சில என்ற பொருள் பெறப்படும்.

(எ-டு) எதுவும், எவரும், யாரும் வரலாம்.
எங்கும் செல்லலாம்.

*ஆகிலும், ஆனாலும்* என்பன யார், எவன், எவள், எவர், எது, எப்படி, எங்கே, எப்பொழுது, என்ன ஆகியவற்றோடு இணைந்து பொறுக்குப் பொருள் தரும்.

(எ-டு) யாராகிலும் / எவனாலும் வரலாம்.

**எதிர்மறைப் பொறுக்கும்மை:** ஒன்று, ஒரு, ஒருவித என்பன *உம்* பெறின் எதிர்மறை கொண்டே முடியும்.

(எ-டு) ஒன்றும் தெரியாது, ஒருநாளும் உடன்பட்டிருக்க மாட்டேன், ஒருவித உணர்ச்சியும் இல்லை.

**ஏமாற்றும்மை:** ஆயினும், ஆனாலும், இருந்தாலும், இருப்பினும் என்பன எதிர்பார்த்தது நடக்காத ஏமாற்றுப் பொருள் தரும்.
(எ-டு) *ஆயினும் அவர்களில் யாரும் அவனுடைய நோயின் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை* - கல்கி.

**பொறுக்கு முற்றும்மை:** *ஒவ்வொரு* என்பது *உம்* பெறும்போது முற்றுப் பொருளைத் தருகிறது.

(எ-டு) ஒவ்வொரு வருசமும் கேதாரி முதலாவதாகத் தேறி.

**எதிர்மறை விருப்பும்மை:** படைத்துக் கூறும்மை: *செய்து* வாய்பாட்டு வினை எச்சம் *உம்* பெற்று இப்பொருளில் அமையும்.

(எ-டு) வந்து / வராவிட்டாலும் பரவாயில்லை.

இது நடக்கமுடியாததை - விரும்பாததைப் படைத்துக் கூறுதலின் படைத்துக் கூறும்மையாயிற்று.

**மிஞ்சும்மை:** பார்க்கிலும், காட்டிலும் என்பன மிஞ்சும்மைகள்.

(எ-டு) நிலத்தினும் பெரிது.

**காரண காரிய உம்மை:** *செய்தது* என்ற வாய்பாட்டுத் தொழிற் பெயர் உம்பெற்றுக் காரண, காரியப் பொருண்மையில் அமையும்.

(எ-டு) விளம்பரத்தைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது.

## 14. இரட்டைக் கிளவியும், அடுக்குத் தொடரும்

இரட்டைக் கிளவி பிரிந்து வாரா, குறிப்புப் பண்பு குறித்து வரும் பிரிந்துவரின் பொருள் வேறுபடும். கலகல, கிடுகிடு, கணகண, கறுகறு, குடுகுடு, குளுகுளு, குறுகுறு, சுறுசுறு, தளதள, தொணதொண, படபட, பளபள, பரபர, முணுமுணு, மினுமினு, விறுவிறு, வெடவெட முதலான இக்காலத் தமிழில் வழங்கும் இரட்டைக் கிளவிகள்

**அடுக்குத்தொடர்:** இசைநிறை, அசைநிலை, பொருளோடு புணர்தல் என்ற மூன்று நிலையுடைத்து அடுக்குத்தொடர் என்பர் காப்பியர். சொல் முழுவதையும் அடுக்கி வருதல் **முழுதடுக்கு** என்றும், சொல்லின் ஒரு கூறு அடுக்கி வரல் **கூறடுக்கு** என்றும், தொடர் அடுக்கி வருவது **அடுக்குத்தொடர்** என்றும் பெயர் பெறும்.

முழுதடுக்கு வெறுப்பு (கருமம் கருமம்), அச்சம் (பாம்பு பாம்பு), வியப்பு (அப்பப்பா) அடிப்படையில் வரும். இந்நிலையில் சுட்டு (அவனவன்), வினா (யார் யார்), ஏவல் வினை (போ போ), முற்றுவினை (வரட்டும் வரட்டும்) வினா அடை (முதல் முதல் வந்தேன்), செய்த செய - என் எச்சங்கள் (வந்து வந்து, போக போக) ஆகியன அமையும் இவை சிலபோது ஆக, உம் முதலான உருபுகள் பெறுதலும் உண்டு (வேகம் வேகமாக, காதும் காதும்). கூறடுக்காக அப்படி இப்படி, அங்கே இங்கே, அக்கம் பக்கம், ஏச்சு பேச்சு, கோணல் மாணல் முதலான அமையும்.

## 15. தகுதியும் வழக்கும்

பேசுவோர் பெறுவோரிடையே தகுதி வழக்குச் சொற்கள் சாதி, வயது, பதவி, உறவு அடிப்படையில் 1. உயர்தகுதி, 2. சமநிலை, 3. உயர்தகுதிஇன்மை, 4. இழிதகுதி என நான்கு வகைப்படும்.

**சாதி:** உயர்ந்த சாதியாக அந்தணர், தாழ்ந்த சாதியினராகப் பள்ளர், பறையர் கருதப்படுவர். எஞ்சியோர் இடைப்பட்ட நிலையில் அடங்குவர். உயர் சாதியினர் உயர்தகுதிச் சொற்களைப் பெறுவர். அந்தணர், தம்மைவிடத் தகுதி மிகுந்தவர் அல்லது ஒத்தவருடன் (பிறசாதியினர்) பேசின் நீங்கள் என்று சுட்டாது என்ன முதலியார் அவாள் டாக்டர் அவாள் என்று சாதி அல்லது தொழிலைச் சுட்டுவர் அந்தணர்கள். சுவாமி ஐயர், ஐயங்கார் என்ற சொற்களைப் பிறசாதியினரிடமிருந்து பெறுகின்றன. அரிசனர், வெள்ளாளர்களை வயது ஏற்றத்தாழ்வின்றி நயினார், நாச்சியார் என்ற மதிப்புச் சொற்களில் அழைக்கின்றனர்.

**பதவி:** பதவி அடிப்படையில் தகுதி வழக்குச் சொற்கள் வேறுபடுகின்றன. பேசுவோர் ஆசிரியராயின் *மாணவ மாணவியர்களே* என்றும், பேச்சாளராக இருப்பின் *தலைவர் அவர்களே, பெரியோர்களே* என்றிவ்வாறு பேசுவார். கலைஞர்கள் மதிப்புக் காரணமாகச் செம்மங்குடி, சித்தூர், காருக்குறிசி என்று ஊர்ப்பெயரால் சுட்டப்படுவர். அதோடு *மதுரை சோமு* என்று குறிப்பிடலும் உண்டு. மேலும், டாக்டர் சார், வக்கீல் ஐயா, வாத்தியார் அம்மா எனத் தொழில் அடிப்படையில் உயர்தகுதிச் சொற்களில் பயன்படுத்துவர்.

**வயது:** வயதில் மூத்தவர்களை அண்ணாச்சி, அண்ணே, மாமா, நீங்கள், அக்கா, மாமி முதலான தகுதிச் சொற்களால் விளிக்கின்றனர். முதியவர்கட்குத் தாத்தா, பாட்டா, பாட்டி என்ற சொற்கள் அமையும். படித்தவர்கள் கிழவிகளைத் தவிர மற்றப் பெண்களை வயது வித்தியாசமின்றி, *அம்மா* என்று அழைக்கின்றனர். சிறியவராயின் *அப்பா* என்றும், பெரியவராயின் *ஐயா* என்றும் ஆண்களை விளிக்கின்றனர். மாணவர் உலகம் ஆணுக்குச் *சார்* என்பதையும் பெண்ணுக்கு *மிஸ்* என்பதையும் பயன்படுத்துகின்றது. அதோடு தம்பி, தங்கச்சி, அப்பா, டே, டீ, வாடா, வாடி, மச்சான் முதலானவும் வயது வேறுபாடு, நெருக்கம் காரணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**உறவு:** உறவுப் பெயர்களைச் சொல்லி அழைப்பதும், இதோடு நீங்கள் அவர்கள் முதலானவற்றைச் சேர்த்துக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது. மூத்த பரம்பரையினர் மதிப்புக் காரணமாகக் கணவன் பெயரையும், மாமனார் பெயரையும் எந்தச் சூழலிலும் சொல்ல மாட்டார்கள். இவர்தம் பெயரொடு தொடர்புடைய பெயரைச் சொல்ல நேரும் போது அதற்கு மாற்றுப்பெயர் குறிப்பிடுவர்; மேலும் கணவனை அழைக்க *இந்தாங்க, என்னங்க, ஏஞ்சாமி, மச்சான், ஏண்ணா, இஞ்சாரும்* முதலான சொற்களைப் பயன்படுத்துவர். கணவன் மனைவியை *அடியே, ஏண்டி, ஏ, பிள்ள* என்றிவ்வாறு அழைப்பர். கணவனை அஃறிணை ஒருமையில் சுட்டுவதும் (இப்பத்தான் வெளியே போச்சுது) தகுதி வழக்காக அமைகின்றது.

## 16. தொல்காப்பியர் பிறப்பியல் கோட்பாடு

தொல்காப்பியர் பிறப்பியலில் உயிர், மெல்லினம், யகரம் இவற்றை இசைஒலி என்கிறார். பிற இசையிலி என்பது அவர் கருத்தாகும். பிறப்புறுப்புக்களாக முதல்நா, நுனிநா, நாநுனி, நாவிளிம்பு, அண்ணம் இவற்றைக் குறிப்பர். இவ்வழிப்பிறக்கும் எழுத்துக்கள் பற்றிக் கட்டுரையில் குறிப்பர் ஆசிரியர்.

## 17. தொல்காப்பியர் கூறும் குற்றியல் உயிர்கள்

தொல்காப்பியர் குற்றியலுகரம், குற்றியல் இகரம், ஐகாரம் என்ற மூன்று குறிப்பர். குற்றியல் உகரம் மொழி முதலில் நுந்தை என்ற சொல்லில் வருவதாகக் குறிப்பர். இது உன் தந்தை என்பது ஒலியிடம் பெயரால் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இக்காலத் தமிழில் னுப்பன், நுப்பன், னொப்பன் என்பன இவ்வகையில் சிறப்பிடம் பெறுவன.

குற்றியல் இகரம் அசைச்சொல் மியாவில் வரும் ஒரு மொழிக் குற்றியலிகரம் (கேண்மியா), புணர்மொழிக் குற்றியலிகரம் (நாகியாது) என இருவகை யகரம் வரத் திரிந்த குற்றியல் உகரமே புணர்மொழிக் குற்றியல் இகரமாகும். இது (புணர்மொழி & ஒரு மொழிக் குற்றியல் இகரம்) மகரத்தை அடுத்து அல்லது வல்லெழுத்தை அடுத்து யகரம் மயங்குவதேயாகும் என்பர். இம்மயக்கம் இலக்கிய நிலையில் ஏற்றுக்கொள்ளப்படாததால் நாக்யாது > நாகியாது, கேண்ம்யா > கேண்மியா, பாக்யம் > பாக்கியம் என உரை நூலாரால் எழுதிக் காட்டப்படுகின்றது.

ஐகாரக் குறுக்கமும் பேச்சுத் தமிழில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும் என்பர். பேச்சு மொழியில் ஐம்பது > அம்பது, ஐயர் > அய்யர், படை > படெ - என ஒலிப்பதை அடிப்படையாகக் கொண்டே இலக்கண நூலார் ஐ மூவழியும் நையும் என்றும், ஓரளபாகும் இடனுமாருண்டே என்றும் நூற்பா யாத்திருக்க வேண்டும்.

## 18. ஙனமா? அனமா?

உடனிலை மெய்ம்மயக்காக வருவன வல்லினம் தவிர்ந்த பிற தொல்காப்பியத்தில் குறிலை அடுத்தே அமைகின்றது. எனவே ஆங்ஙனம் - என ஙகரம் நெடிலை அடுத்து உடனிலை மெய்ம்மயக்கமாக வர வாய்ப்பில்லை. தொல்காப்பியத்தில் மூன்றிடங்களில் ஆங்கனம் என்பது காணப்படுகிறது. ங்க் குறில் அடுத்தும், நெடிலை அடுத்தும் வருகின்றது. எனவே ஆங்கனம் > அங்ஙனம் ஆகியிருக்க வேண்டும். இம்மாற்றம் மலையாளத்தில் மிகுதியாகவின் இவ்வழக்கு குடநாட்டில் தோன்றியிருக்கலாம் எனக் கருதலாம். இருப்பினும் நெட்டுயிரை அடுத்து இவை வருவது இயல்பின்மையின், இதற்கு இணையாக அங்ஙனம், இங்ஙனம் வடிவம் தோன்றியிருக்க வேண்டும். இதனை *ஙனம், அனம்* எனப் பிரிப்பாரும் உண்டு. இதன் வழக்கு தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலக் கணிப்பிற்கு ஓரளவு துணை செய்வதாக உள்ளது. ஆங்கனம் முதலான தொல்காப்பியம் சங்க இலக்கிய வழக்கு. ஆங்ஙனம் காப்பிய காலத்தில் வழக்குமிகுந்து ஆங்கனம் வழக்குக் குறைகிறது. பின்னர் அங்ஙனம் என்ற வழக்கு மிகுகிறது.

## 19. வற்றென் சாரியை

தொல்காப்பியர் பன்னிரு சாரியைகள் பற்றிக் குறிப்பிடுவார். இவற்றில்,

1. அக்குச் சாரியை ஊன், ஈம், கம், தாழ் முதலான சொற்களில் =மட்டுமே வரும்.

2. அத்து - மக, நிலா, பணி, மழை, விண், வெயில், அருள், அழன், புழன், ஆயிரம், மகர ஈற்று நாட் பெயர்களில் வரும்.

3. அம் - புளி, எரு, செரு, பனை, அரை, கூவிரை, பீர், ஆல், வேல், குமிழ், ஈரெழுத்துமொழி, வல்லொற்றுத்தொடர், குற்றுகர மரப் பெயர், மக்கள், முறை தொடர்ப் பெயர்க்ளில் வரும்.

4. அன் - உகர ஈற்றில் - சுட்டு எண்ணுப் பெயரில் வரும்.

5. ஆன் - (இ), ஐ, ம, ஈறறு நாடபெயா தஙகட பெயால வரும.

6. இக்கு திங்கட் பெயரில் வரும்.

7. இன் - பனி, மக, ஆடூஉ, மகடூ சே, வண்டு, பெண்டு, பொருந், உரும், அழன், புழன், மனை, கா, பத்து - ஆகிய சொற்களில் வரும்.

8. உம் - எல்லாம், எல்லார், எல்லீர் சொற்களில் வரும்.

9. ஏ - அளவு நிறை எண்ணுப்பெயர் தம்முன் தாம் புணரின் வரும்.

10. ஒரு -ஒகார இறுதிச் சொற்களில் வரும்.

11. கெழு - வகர, னகர, ஈற்றுச் சொற்களில் வரும்.

12. வற்று - பல, சில, யா, எவை, இவை, எல்லாம் சொற்களில் வரும்.

இவற்றில் தொல்காப்பியர் வற்றுச்சாரியை சொல்ல நன்னூலார் அற்றுச்சாரியை குறிப்பார். இச்சாரியை பலவற்றைக் குறிக்கின்ற பெயர்ப்பதிலி (Indefinite Pronoun), சுட்டு (Demonstrative), வினாப் (Interagative) பெயர்களில் மட்டுமே அமையும். ஒருமையில் வராது. எனவே இதனைச் சாரியை என்பதை விடப் பன்மை உருபு எனலாம். பல என்பதில் *அ* பன்மை உருபாக நிற்க அதன் மேல் வற்று என்ற பன்மை உருபும் வந்து சேர்கிறது.

## 20. குற்றியலுகரமும் அற்றென மொழிப

தொல்காப்பிய புணரியலில் அவற்றுள், *மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்,* என்ற நூற்பாவிற்கு அடுத்துக் *குற்றியலுகரமும் அற்றென மொழிப* என்ற நூற்பா அமைகின்றது. இதற்கு உரையாசிரியர் தரும் விளக்கம் பொருந்தாது என்றும், மெய்எழுத்துக்கள் மொழி இறுதியில் புள்ளி பெற்று வருவதையும், அதைப்போல. குற்றியலுகரமும் மொழியிறுதியில் புள்ளி பெற்று வருதலையுமே இங்குத் தொல்காப்பியர் நினைவிற் கொள்ளுகிறார் என்பதும் நூற்பா வழிப் பெறப்படுகின்றது. இதனை வலியுறுத்துவன போல மலையாள மொழிக் குற்றுகா வரிவடிவம் அமைகிறது. இம்மொழியில் குற்றுயிருக்கு மேல் *பிறை*யிட்டு எழுதுவது வழக்கம்! இது புள்ளியின் வடிவே. இவ்வுகரம் *சம்வருதோகாரம்* எனப்படும்.

மொழி முதற் குற்றியலுகரம், மொழி முதல் மெய் போலப் புள்ளி பெறாது. இது முற்றியலுகரமாக ஒலிக்கப்பட்டாலும் பொருள் வேறுபடாது. எனவே மொழி இறுதிக் குற்றியலுகரம் முற்றியலுகரமாக ஒலிக்கப்பட்டால் பொருள் வேறுபடும் என்பது பெறப்படுகின்றது. *சுட்டு* பெயராகும் பொழுது குற்றியல் உகரம்; முன்னிலை வினையாகும் பொழுது முற்றியலுகரம். இவ்வரி வடிவில் இதனைப் பிரித்தறியவே புள்ளியிட வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

## தன் மதிப்பீடு - மாதிரி வினா

### இக்கால மொழியியல்

**காலம் : 3 மணி** **மதிப்பெண் : 100**

**எவையேனும் நான்கனுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.** **(4x10=40)**

1. மொழிக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவு யாது?
2. இடைக்காலத்தில் மொழியியலின் வரலாறு பற்றி எழுதுக.
3. ஒலியியல் - ஒலியனியல் - வேறுபாட்டை விளக்குக.
4. தமிழ் மொழி வரலாறுக்கான மூல ஆதாரங்கள் யாவை?
5. கிளைமொழியியல் - ஒரு விளக்கம் தருக.
6. உருபொலியனியல் - புணரியல் - ஒற்றுமைகளைச் சுட்டுக.

**எவையேனும் மூன்றினுக்கு 3 பக்க அளவில் விடை தருக.** **(3x20=60)**

1. இடம், முயற்சி அடிப்படை ஒலிப்பாகுபாடுகளை விளக்குக.
2. உருபன்களைக் கண்டறியும் முறை யாது?
3. கிளைமொழியியல் ஆய்வு முறைகள் யாவை?
4. ஒலியன்களை நிர்ணயிப்பதற்கான கோட்பாடுகள் யாவை?

# ஈ. கற்கும் நெறி முறைகள்

**முன்னுரை**

இலக்கணம் - எழுத்தும் சொல்லும் தொடர்பான மாதிரி வினா ஒன்றும், அதற்கு மாணவர்கள் விடை அளிக்க வேண்டியமுறையும் இப்பாட வழிகாட்டியில் தரப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வினாத்தாள் இம்முறையிலேயே அமையும். மாணவர்கள் இதனை மனதிற்கொண்டு, இத்தாளுக்குரிய வினாவிடைகளைத் தயாரித்துக் கொண்டு, தேர்வுக்கு ஆயத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும். காலவரையறை, மதிப்பெண் பகுப்பு, வினாக்களின் பக்க அளவு இவற்றை மனதிற்கொண்டு, வினாக்களுக்கு ஏற்ற விடைகளைக் குறிப்பிட்ட பக்க அளவில் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். அது தேர்வில் நல்ல வெற்றியைத் தேடித்தர வாய்ப்பாக அமையும். பக்க அளவில் மிகுந்த கவனம் தேவை. மிகுதியான பக்கங்கள் எழுதுவதால் யாதொரு பயனும் இல்லை. குறிப்பிட்ட அளவிற்குள் முடித்தல் நலம். சுருக்கமும், தெளிவும், செம்மையுமே தேர்வில் வேண்டப்படுவது. பயில்முறை வினா மாணாக்கரின் சிந்தனைத் திறத்தைச் சோதிப்பது எனவே மாணவர்கள் அவ் வினாக்களைச் சிந்தனைத் திறத்தோடு ஆய்வு நோக்கோடு அணுகுதல் வேண்டும். படித்ததை அப்படியே கொட்டுதல் என்பது இங்குப் பயன்படாது. எனவே வினாக்களை அணுகும்முறை, விடை எழுதும் திறம், எழுத்துத் தெளிவு, பிழை நீக்கம், குறிப்பிட்ட கால வரையறையைக் கண்டு பிடித்தல் முதலானவற்றில் மிகுந்த கவனம் செலுத்தித் தேர்வில் வெற்றி பெற முயலுதல் வேண்டும்.

## மாதிரி வினா

### மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

### இளங்கலை இரண்டாம் ஆண்டு (அல்பருவம்)

### சிறப்புப் பாடம்; -தாள்- - IV

### இலக்கணம் எழுத்தும் சொல்லும்

***நேரம்: 3 மணி*** ***மதிப்பெண் : 100***

***1. எவையேனும் நான்கனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக: (4 X 10 = 40)***

1:1 ***உரிச்சொல்***லின் பெயர்க் காரணத்தை ஆராய்க.

1:2 தொழிற்பெயர்கள் கிளைப் பெயர்கள் ஆகியவற்றின் புணர்ச்சிகளை வகுக்க.

1:3 சார்பெழுத்துக்கள் குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

1:4 வழக்குகள் எத்தனை வகைப்படும்? விளக்குக.

1:5 இக்காலத் தமிழில் அமையும் உம்மைகளை எங்ஙனம் வகைப்படுத்துகிறார் டாக்டர் முத்துச்சண்முகனார்?

1:6 உருபு-உருபன்-மாற்றுருபு குறிப்பு வரைக.

1:7 வேற்று நிலைக்கொள்கை, துணை நிலைக்கொள்கை, பன்மை நிலைக் கொள்கை குறிப்பு வரைக.

1:8 இருதிணைப் பொதுப்பெயர் குறிப்பு வரைக.

1:9 ஆய்தம் குறிப்பு வரைக.

***2. எவையேனும் மூன்றனுக்கு மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக. (3 X 20 = 60)***

2:1 மொழி இறுதி எழுத்துக்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2:2 இக்காலத் தமிழின் - கிளை மொழிகளை எங்ஙனம் வகைப்படுத்தலாம்? சான்றுடன் விளக்கு.

2:3 பொருள்கோள் என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?

2:4 எண்ணுப் பெயர்ப்புணர்ச்சி குறித்து நன்னூலார் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

2:5 சாம்சுகியின் 1957இன் மாற்றிலக்கணக் கோட்பாட்டிற்கும் 1962-இன் மாற்றிலக்கணக் கோட்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? இம்மாற்றிலக்கணக் கோட்பாட்டு விதிகளைத் (Transformation rules) தொகுத்துரைக்க.

2:6 வினையியலில் நன்னூலார் கூறும் கருத்துக்களை ஆராய்க.

2:7 வடமொழியாக்கம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## விடைக்குறிப்புகள்

### 1.1 உரிச்சொல்

*பொருளுக்கு உரிமை பூண்டது உரிச்சொல்* என்ற கருத்தை விளக்குவார் தொல்காப்பியர். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குத் தாமே உரிய ஆதலின் உரிச்சொல்லாயிற்று என்பது சேனாவரையர்தரும் விளக்கம்.

*பெரும்பான்மையும் செய்யுட்கு உரியனவாய் வருதலின் உரிச்சொல் என்று பெயர் பெற்றது* என்று கருதுபவரும் உளர். இவ்வழியிலேயே நன்னூலார், செய்யுட்கு உரியன உரிச்சொல் என்றார்.

நன்னூலுக்கு உரை எழுதிய சடகோபாராமானுசாச்சாரியார் முதலியோர் பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதால் உரிச்சொல் எனக் காரணப் பெயர் பெற்றது என்பர்.

*ஒரு சொல் பல பொருட்கட்கும், பல சொல் ஒரு பொருட்கும் உரிமைப்பட்டு வருவதால் உரிச்சொல்* என்றழைக்கப்பட்டது என்றும் விளக்குவதுண்டு.

உரிச்சொற்கள் வேர்ச்சொற்களாக இருப்பதால், அவற்றைச் *சொல்* பிறப்பதற்கு *உரிச்சொல்* என்று கூறுவார் திரு இலக்குவனார்.

மேற்கண்டவாறு உரிச்சொல் என்பதை உரிமைப்பட்ட சொல் உரிய சொல் என்று கொண்டு, பொருளுக்கு உரிமை, பண்பு இசை குறிப்புக்கு உரிமை, பெயர், வினை ஆகியவற்றுக்கு உரிமை, ஒன்று பலவற்றுக்கும் பல ஒன்றுக்குமான உரிமை. சொற்பிறப்புக்கு உரிமை என்றெல்லாம் விளக்கம் பெருகி அமைந்திருக்கக் காணலாம்.

### 1.4 வழக்குகள்

வழக்குகள் இருவகைப்படும். இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பன அவை. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

#### இயல்பு வழக்கு

இது மூன்று உட்பிரிவுகள் உடையது. அவையாவன. இலக்கணமுடையது. இலக்கணப் போலி மரூஉ, நிலம், நீர், தீ, காற்று முதலான சொற்கள் இலக்கணமுடையது என்ற பிரிவைச் சார்ந்தவை. இல் முன் என்பதனை முன்றில் என்றும், புறவுலா என்பதனை உலாப்புறம் என்றும் வழங்குதல் இலக்கணப் போலி; அருமருந்தன்ன பிள்ளை என்பதை அருமாந்த பிள்ளை என்றும் மலையமான் நாடு என்பதை மலாடு என்றும் கூறுவது மரூஉ ஆகும்.

இவை மூன்றும், தகுதி வழக்குப் போலவன்றி, எப்பொருட்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் கூறுதலின் இயல்பு வழக்கு எனப்பட்டது.

#### தகுதி வழக்கு

இது மூன்று உட்பிரிவுகள் உடையது. அவையாவன: இடக்கர் அடக்கல், மங்கலம், குழுஉக்குறி. கால்கழீஇ வருதும், பவ்வீ என்பன இடக்கர் அடக்கல், இடக்கர், என்பது மறைத்து மொழி கிளவி, எனவே அது தோன்றாவாறு அடக்கிக் கூறுவது இடக்கர் அடக்கல் எனப்பட்டது. செத்தாரைத் துஞ்சினார் என்றும் காசாட்டை வெள்ளாடு என்றும் கூறுதல் மங்கலம். இது இடக்கர் போலக் கூறத்தகாததன்று. எனினும் மங்கலமில்லாததை ஒழித்து மங்கலமாகக் கூறுதலின் இப்பெயர்பெற்றது. பொற்கொல்லர் பொன்னைப் பறியென்றலும், வெள்ளியைப் பசுமையென்றாலும், செம்பைப் பழுப்பு என்றலும் குழூஉக்குறி எனப்படும். ஒவ்வொரு குழுவின் உள்ளோர் ஏதேனும் ஒரு காரணத்தினால் ஒரு பொருளின் சொற்குறியை விட்டு வேறொரு சொற்குறியால் வழங்குதலால் இது குழூஉக்குறி எனப்பட்டது.

இம்மூன்றும், இப்பொருளை அறிவதற்கு அமைந்த இச் சொல்லால் கூறுதல் தகுதியன்று, வேறொரு சொல்லாற் கூறுதலே தகுதி எனக் கருதிக் கூறுதலால் தகுதி வழக்கு எனப்பட்டன.

## 1.5 இக்காலத் தமிழில் உம்மைகள்

இக்காலத் தமிழில் அமையும் உம்மைகளை 1. எண்ணும்மை, 2. தழுவுஉம்மை, 3. முற்றும்மை, 4. பொறுக்கும்மை, 5. எதிர்மறைப் பொறுக்கும்மை, 6. ஏமாற்றும்மை, 7. பொறுக்கு முற்றும்மை, 8. எதிர்மறை விருப்பும்மை படைத்துக் கூறும்மை, 9. மிஞ்சும்மை, 10. காரணகாரிய உம்மை என வகைப்படுத்துவர்.

இவற்றில் எண்ணும்மை, வாக்கியத்தின் புதைவடிவை (deep structure) அறிய உதவும். *பிள்ளையை அடித்தும் கண்டித்தும் வளர்த்தார்கள்* என்ற எண்ணும்மைத் தொடர், *பிள்ளையை அடித்து வளர்த்தார்கள், பிள்ளையைக் கண்டித்து வளர்த்தார்கள்* என்ற புதை அமைப்பின் புற நிலை அமைப்பாகும்.

முன்கூறப்பட்ட அல்லது பின்பு கூறப்படுகிற செய்தியைத் தழுவி நிற்பது தழுவு உம்மை. முற்றும்மை, பெயரோடு தான் வரும். பொறுக்கும்மையை வினா, வினை அடை, பெயரடை வினா-ஆகியன ஏற்கும்-எதுவும்/ எவரும்/எங்கும் வரலாம்-என்பது பொறுக்கும்மை. இது யாதாவது ஒன்று அல்லது சில என்ற பொருளைத் தரும்.

எதிர்பார்த்தது நடக்காததைக் குறிப்பது ஏமாற்றும்மை. இது *ஆயினும், ஆனாலும்,* இருந்தாலும், இருப்பினும் என வரும். எதிர்மறைப் பொறுக்கும்மை *ஒன்றும் தெரியாது, ஒரு நாளும் வாரேன், ஒருவித உணர்ச்சியும் இல்லை*-என அமையும். பொறுக்கு முற்றும்மை ஒவ்வொரு என்பதை அடுத்து உம் முற்றுப் பொருள் தரும் செய்தால் வாய்ப்பாட்டு வினை எச்சம் *உம்* பெறின் அது எதிர்மறை விருப்பும்மை. வந்தாலும் பரவாயில்லை என வரும்.

*பார்க்கிலும் காட்டிலும்* என்பன மிஞ்சும்மைகள். *செய்தது* என்ற வாய்பாட்டுத் தொழிற் பெயர் *உம்* பெறின் அது காரணகாரிய உம்மையாகும்.

(எ-டு) விளம்பரத்தைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது.

## 1.6 உருபு - உருபன் - மாற்று உருபு

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியனால் ஆயது உருபு. மேலும் பகுக்கமுடியாத மிகக் குறைந்த பொருள் தருகின்ற வடிவம் இது. இதனை மேலும் பிரித்தால் பொருளற்றுப் போய்விடும். இது வருகின்ற நிலையால் தனி உருபு கட்டு உருபு எனப்படும்.

ஒரு மொழியில் கிடைக்கின்ற பொருள் தருகின்ற தனி வடிவங்கள் அனைத்துமே *உருபு* எனப்படும். இங்ஙனம் ஒரு பொருள் தருகின்ற பல வடிவங்கள் ஒரு மொழியில் இருக்கலாம். காட்டாகத் தமிழில் இறந்த காலம் காட்ட த் த்த், ந்த், ற்த், ற்ற, ன்ற், ட்ட், ண்ட், ன், இன், இ, ச்ச், முதலான வடிவங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் இறந்த காலம் காட்டும் உருபுகளே (morphs). இவற்றில் *த்* - என்பதே மூலவடிவம் என்றும் இதுவே ஒலியனியல், உருபனியல் - சூழ்நிலை காரணமாக வெவ்வேறு வடிவங்களாக மாறியுள்ளது எனவும் விளக்கிவிடுவோமானால் *த்* என்பது உருபன் (Marpheme) எனக் கொள்ளப்படும். எஞ்சிய அனைத்தும் மாற்று உருபன்கள் (Allomorphs) என விளக்கப்படும்.

ஒரு மொழியில் ஒரு பொருள் தருகின்ற உருபன் ஒன்று தான் இருக்க முடியும். மாற்று உருபன்கள் ஒன்றுக்கு மேல் இருக்கலாம். உருபனை ஒரு கற்பனை வடிவாகவும் கொள்வர். மொழியின்கண் பயின்று வருவன உருபுகளே. எனவே ஒரு மொழியில், உருபனைக் கண்டறிவதற்கு முன்னுள்ள நிலை *உருபு* என்றும், உருபனைக் கண்டபின் அவை *மாற்று உருபு* என்றும் கொள்ளப் பெறும்.

## 2.3 பொருள்கோள்

### முன்னுரை

செய்யுள்களில் பொருள்கோள் மிக இன்றியமையாதது. பொருளைக் கொள்ளும் முறைக்குப் பொருள்கோள் என்று பெயர். இது பற்றி நன்னூல் பொதுவியலில் வரும் கருத்துக்களை இங்குக் காண்போம்.

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை, விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே. (60)

என்ற நூற்பா, பொருள்கோளின் பெயரும் தொகையும் உணர்த்துவது

யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரனிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள். அடிமறி மாற்றுப் பொருள்கோள் எனப் பொருள்கோள் எட்டாம் என்பது இதன்-பொருள்.

**யாற்றுநீர்ப் பொருள்கோள்**

மற்றைய நோக்கா தடிதோறும் வான்பொருள்
அற்றற் றொழுகும் அஃதியாற்றுப் புனலே (61)

என்பது நூற்பா மொழிமாற்று முதலியவை போலப் பிறழ்ந்து செல்ல வேண்டாது. ஆற்று நீரின் ஒழுக்குப்போல நெறிப்பட்டு அடிதோறும் சிறந்த பொருள் அற்று, அற்று ஒழுகுவதாகிய அப்பொருள்கோள், யாற்று நீர்ப் பொருள்கோள் எனப்படும். யாற்றுநீர், ஓர் ஒழுங்குபட்டுச் செல்வது போலப் பாட்டின் பொருளும் ஒரே தொடர்ச்சியாய்ச் செல்லும் என்பதாம்.

(எ-டு) சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

இதில் சொல் என்ற எழுவாய், முதலில் உள்ளது, அதனையடுத்து இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்கள் தொடர்ந்து வந்தன. இறுதியில், காய்த்தவே என்ற பயனிலை வந்தது. இங்ஙனம் ஆற்றுநீர் போல ஓர் ஒழுங்குபட்டு நடப்பதால் இது *யாற்றுநீர்ப் பொருள்கோள்* எனப்பட்டது.

**மொழிமாற்றுப் பொருள்கோள்**

ஏற்றபொருளுக் கியையு மொழிகளை
மாற்றியோ ரடியுள் வழங்கல்மொழி மாற்றே (62)

என்பது நூற்பா, ஏற்ற இரண்டு பயனிலைக்கும் பொருந்துமொழிகளை ஏலாத பயனிலைகளுக்குத் தனித்தனியே கூட்டி, ஓரடிக்குள்ளே சொல்லும் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது இதன் பொருள்

(எ-டு) சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலைஎன்ப
கானக நாடன் சுனை

இதில் சுரை மிதப்ப, அம்மிஆழ என்று ஓரடியில் வரும் மொழிகளை மாற்றிப் பொருளுரைக்க வேண்டும். இவ்வாறே அடுத்த அடியிலும், யானைக்கு நிலை, முயற்கு நீத்து என்று மொழிகளை மாற்றிப் பொருளுரைக்க வேண்டும். இங்ஙனம் ஓரடிக்குள் மொழிகளை மாற்றுவதே மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகுமேயன்றி, 2 அடிகள் மாற்றி உரைப்பது பொருந்தாது என்பர் சிவஞான முனிவர்.

**நிரனிறைப் பொருள்கோள்**

பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்
வேறு நிரனிறை முறையிலும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறி (63)

என்பது நூற்பா. பெயரும் வினையும் ஆகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையும் ஆகிய பயனிலைகளையும், வேறு வேறு வரிசையாக நிறுத்தி, முறையாகவோ, எதிராகவோ இதற்கு இது பயனிலை என்பது படக் கூறும் பொருள்கோள் நிரனிறைப் பொருள்கோள் என்பது இதன் பொருள்.

(எ-டு) கொடிகுவளை கொட்டை நுகப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்

இதில், முதலடியில் (1) கொடி (2) குவளை (3) கொட்டை என்பனவும் (1) நுகப்பு (2) உண்கண் (3) மேனி என்பனவும் வந்துள்ளன. இவற்றை நிரனிறையாக அஃதாவது வரிசையாகக் கொடிநுசுப்பு, குவணை உண்கண், கொட்டைமேனி எனக்கொண்டு *கொடி போன்ற நுகப்பு (இடை) குவளை மலர் போன்ற மையுண்ட கண், கொட்டைப்பாக்குப்போன்றமேனி* எனப் பொருள் உரைக்க வேண்டும். இவ்வாறே அடுத்த அடிகளிலும், மதிமுகம் பவளவாய், முத்த முறுவல், என்றும் பிடிநடை, பிணைநோக்கு, மஞ்ஞை சாயல் என்றும் நிரனிறையாகப் பொருள் கொள்ள வே'ண்டும். இங்ஙனம் கொள்வது *முறை நிரனிறை* எனப்படும்.

**பூட்டுவிற் பொருள்கோள்**

எழுவாய் இறுதி நிலை மொழி தம்முள்
பொருள்நோக் குடையது பூட்டுவில் லாகும் (64)

என்பது நூற்பா.

செய்யுளில், முதலிலும் இறுதியிலும் நிற்கும் மொழிகள் தம்முள் பொருள் நோக்கமுடைய பொருள்கோள், பூட்டுவிற் பொருள்கோள் ஆகும். என்பது இதன் பொருள். இருதலையும் சேரப் பூட்டி நிற்பது நாண். அது போலப் பொருள் நோக்கம் செய்யுளின் இருதலையும் பூட்டி; நிற்றலின் இது *பூட்டுவில்* ஆயிற்று.

(எ.டு) திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்துபடின் பெரிதாம் ஏதம் - உறந்தையர் கோன்
தண்ணார மார்பில் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு

இதில், திறந்திடுமின் என முதலில் நிற்கும் மொழியினையும், கதவு என இறுதியில் நிற்கும் மொழியினையும் இணைத்துத் *திறந்திடுமின் கதவு* எனப் பொருள் கொள்ள வேண்டும்.

**தாப்பிசைப் பொருள்கோள்**

இடைநிலைமொழியே ஏனை யீரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் த்ரப்பிசை (65)

என்பது நூற்பா.

*ஒரு பாட்டின் இடையில் நிற்கும் மொழியானது, எஞ்சிய முதலினும் ஈற்றினும் சென்று பொருளைக் கூடும் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோள் ஆகும்* என்பது இதன் பொருள், தாம்பு-ஊஞ்சல், இசை-சொல் நடுவில் நிற்கும் ஊஞ்சற் பலகை முன்பின் ஆகிய இருபுறமும் செல்வதுபோல், ஒரு பாட்டின் இடைநிற்கும் சொல் முதலிலும் இறுதியிலும் சென்று பொருந்துவது இது.

(எ-டு) உண்ணாமை உள்ள துயிர் நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு (65)

இக்குறள் வெண்பாவில் இடையில் உள்ள ஊன் என்பது ஊன் உண்ணாமையுள்ள துயிர்நிலை என்று முதலிலும், ஊன் உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது என்று இறுதியிலும் இணைத்துப் பொருள் காண வேண்டும்.

### அளைமறி பாப்புப் பொருள்கோள்

செய்யுள் இறுதி மொழியிடை முதலினும்
எய்திய பொருள்கோள் அளைமாறி பாப்பே (66)

என்பது நூற்பா.

*செய்யுளில் இறுதியில் நின்ற சொல்லானது, அதன் இடையிலும் முதலிலும் சென்ற பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆகும்* என்பது இதன் பொருள், அளை-புற்று; மறி-மடங்குதல் பாப்பு-பாம்பு. புற்றினுள் தலைகீழாக நுழைந்து பின்மடிந்து, உடலோடும் வாலோடும் ஒட்டி மேல்வரும் பாம்புபோல, ஒரு செய்யுளின் இறுதியில் நின்ற சொல்லானது, இடையிலும் முதலிலும் சென்று இயைந்து பொருள் தரும் என்பதாகும்.

(எ-கா) தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தாண்டுன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியில் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன் செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலாதாரே

இதில் 4-வது அடியிலிருந்து தொடங்கிப் பின்னர் இடையிலும் முதலிலும் ஆகப் பொருள் உரைக்க வேண்டும்.

### கொண்டுகூட்டுப் பொருள்கோள்

யாப்படி பலவினும் கோப்புடைபு மொழிகளை
ஏற்புழி இசைப்பதும் கொண்டு கூட்டே (67)

என்பது நூற்பா.

*செய்யுள் அடிகள் பலவற்றினும் சேர்க்கப்படுதலையுடைய சொற்களை எடுத்துப் பொருளுக்கு எற்ற இடத்துக் கூட்டும் பொருள்கோள் கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆகும்* என்பது இதன் பொருள்,

(எ-டு) தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்,
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார்வரின்

இதில் வங்கத்துச் சென்றார்வரின், அஞ்சனத் தன்ன பைங்கூந்தல் (உடையாள்) மாமேனி (மேல்) தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட கோழி வெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாமே எனப் பல்வேறு அடிகளிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு பல்வேறு சொற்களுடன் கொண்டு கூட்டிப்பொருள் உரைக்க வேண்டும்.

### அடிமறி மாற்றுப் பொருள்கோள்

ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறும் அடியவும்
யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை
மாட்சியும் மாறா அடியவும் அடி மறி (68)

என்பது நூற்பா.

பொருளுக்கு ஏற்குமிடத்து, எடுத்து நீங்காது கூட்டும் அடியினையுடையவையும், ஏதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி, நடு, முதல்களில் ஏதேனும் ஓரிடத்துக் கூட்டினாலும், பொருளோடு ஓசை

மாட்சியும், ஓசை வேறுபட்டுப் பொருள் வேறுபடா மாட்சியும் உடைய அடிகளை உடையவும், அடிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

கா) மாறாக் காதலர் மலைமறந் தனரே
யாறாக் கட்பனி வரலா னாவே
ஏறா மென்தோள் வளை நெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே

இதில் எந்த ஓர் அடியை எப்படிக் கூட்டி உரைத்தாலும் பொருளும் ஓசையும் வேறுபடா.

**முடிவுரை**

இக்கட்டுரை வாயிலாகச் செய்யுளுக்குப் பொருள்கோள், எத்துணையளவு இன்றியமையாதது என்பது நமக்குப் புலனாகின்றதன்றோ! இதனால்தான் பவணந்தியாரும் தம் நூலில் இப்பொருள்கோளின் இலக்கணத்தை இவ்வாறு விரித்துரைத்தார் எனலாம்.

## 2.4 எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

எண்ணுப்பெயர்களின் புணர்ச்சிகளை நன்னூலார் உயிரீற்றுப் புணரியலில் வகைப்படுத்திக் கூறுகின்றார். எண்ணுப்பெயர்களிற் பெரும்பாலானவை குற்றியலுகரங்களாக இருப்பதால் உயிரீற்றில் உகரவீற்றைக் குறிப்பிடும்போதே எண்ணுப்பெயர்களையும் தொகுத்துக் கூறுகின்றார்.

**எண்ணுப் பெயர்களின் பொதுப்புணர்ச்சி விதி**

ஒன்று முதலாக எட்டு வரையுள்ள எண்கள் நிலைமொழியாக நிற்க எண்ணுப்பெயர், நிறைப்பெயர், அளவுப்பெயர், பிறபெயர் ஆகியன வருமொழியாக வரும்போது பொதுவாகக் கூறத்தக்க சில புணர்ச்சி மாறுதல்கள் நிகழும். அவையாவன

1. ஒன்று இரண்டு என்பவற்றின் முதல் எழுத்து நீளும்.
2. மூன்று, ஆறு, ஏழு என்பவற்றின் முதல் எழுத்து குறுகும்.
3. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, எட்டு என்பனவற்றின் ஈற்று உயிர்மெய் கெடும்.
4. ஏழு என்ற எண்ணின் ஈற்றுயிர் கெடும், இவ்விகரங்கள் ஏற்புழி நிகழும்.

**ஒன்று இரண்டு**

ஒன்று என்பதன் ஈற்றுயிர் மெய்கெட்டு ***ஒன்*** என நிற்கும் ***ஒன்*** என்பதன் னகரம் ரகரம் ஆகும். எனவே ***ஒர்*** என நிற்கும் உகரம் ஈற்றில் சேர ***ஒரு*** என்றாகும். இரண்டு என்பது ஈற்றுயிர்மெய் கெட்டு இரண் என நிற்குமல்லவா? பின்னரும் அதன் ஈற்றுமெய்யும் முந்திய அகரமும் கெட ***இர்*** என நிற்கும். உகரம் சேரவே இரு என்றாகும்.

(எ-கா) ஒருபது, இருபது, ஒருகழஞ்சு, இருகழஞ்சு ஒரு நாழி, இருநாழி, உயிரெழுத்து வருமொழியில் வருமானால் ஓராயிரம், ஈராயிரம் என்று முதல் நீண்டுவரும்.

**மூன்று**

மூன்று என்பது ஈற்றுயிர் மெய்கெட்டு மூன் என்று நிற்கும் ஒற்றாகிய னகரம் கெடும். அல்லது வருமொற்றாக மாறும். இதனை மூன்றின் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும் என்பர் நன்னூலார்.

(எ-கா) மூவுழக்கு, மூவுலகு, மூவொன்று, தக்க இடத்தில் முதல் குறுகிப் புணரும் ஆதலால் முப்பது, முக்கழஞ்சு மும்மொழி எனவரும்.

**நான்கு**

*நான்கன் மெய்யே லற ஆகுமே* என்பது நன்னூல். நான்கு இறுதி உயிர்மெய்கெட்டு *நான்* என நிற்கும் ஈற்று னகரம் லகரமாகும். அல்லது றகரமாகும்.

(எ-கா) நாலொன்று நாலெடை, நான்மணி நாற்பது நாற்காலி நாற்கலம் என வரும்.

**ஐந்து**

ஐந்து என்பது ஈற்றுயிர் மெய்கெட்டு ஐந் என நிற்கும் ஐந் என்பதன் நகரம் கெடும் அல்லது வந்த ஒற்றாக மாறும் அல்லது அதற்கினமாகும்.

(எ-டு) ஐயாழாக்கு ஐவ்வட்டி ஐம்மூன்று ஐம்மஞ்சாடி ஐம்பொறி ஐங்கலம் என வரும்.

**ஆறு ஏழு**

முன்னரே சுட்டியப்படி ஆறு, ஏழு என்பன தக்கவிடத்தில் முதல் குறுகும். ஏழு என்பதன் ஈற்றுயிர் கெடும் அறுபது, எழுபது, அறுகழஞ்சு எழுநாழி ஆறாயிரம் ஏழ்கடல் என வரும்.

**எட்டு**

*எட்டன் உடம்பே ணவ்வாகும் என்ப* என்றதன்படி எட்டு என்ற எண்ணினது ஈற்றுயிர் மெய்கெட எட் என நின்றது, எண் என ஆகும். எ-டு எண்கழஞ்சு எண்கலம் எனவரும்.

**தொண்ணூறு தொள்ளாயிரம்**

ஒன்பது + பத்து = தொண்ணூறு, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என்று வகுக்கும் விதிகள் சிக்கலானவை, அவற்றுக்குச் சரியான வரன்முறை வகுக்க இயல்வதில்லை. எனவே முறையே பத்தை நூறு எனவும் நூற்றை ஆயிரம் என்வும் முறையேமாற்றிக்கொள்ளச் சொல்கிறார் நன்னூலார் ஒன்பது + பத்து ஒன்பது + நூறு தொன்பது + நூறு தொள் + நூறு தொண் + நூறு = தொண்ணூறு என்கிறார். பின்னர், ஒன்பது + நூறு ஒன்பது + ஆயிரம் தொண்பது + ஆயிரம் தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் என்று வகுக்கிறார், தொண்டு என்ற எண்ணே பழங்காலத்தில் ஒன்பதைக் குறித்தது. அவ்வெண்ணை மீண்டும் புதுக்கினால் இத்தகு குழப்பம் நிகழாது. தொண்டு + நூறு தொண்ணூறு தொண்டு - ஆயிரம் = தொள்ளாயிரம் என்று விதிகூறலும் எளிதாகும்.

**ஒன்று இரண்டு மூன்று . . . . . . . . . . பத்து**

ஒன்று முதலாக உள்ள எண்களோடு பத்து புணர்ந்தால் பத்து என்பதன் நடுவொற்றுக் கெடும் அல்லது ஆய்தமாகும்.

(எ-கா) ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, ஒருபஃது இருபஃது முப்பஃது எனவரும்.

**ஒன்பது, இருபது . . . . . . . . . . + பிற எண்கள்**

இருபது ஒன்று, முப்பது + ஒரு கழஞ்சு போன்ற புணர்ச்சிகளில் பத்தின் நடுவொற்றாகிய தகரம் மீண்டும் இடம்பெற இருபத்தொன்று, முப்பத்தொருகழஞ்சு என்றாகும்.

**பத்து + . . . . . . . . . . பிறஎண்கள்**

பத்து என்ற எண்முன் பிறஎண்கள் வரின் குற்றுயிர்மெய்கட்கு *பத்* என நிற்கும், இன், இற்று ஆகியசாரியைகள் வரும்.

**பத்து + இரண்டு**

இப்புணர்ச்சி மட்டும் சற்று வேறுபட்டு, *பத்* என்பதன் தகரம் னகரமாகத் திரியவே **பன்னிரண்டு** எனப் புணரும்,

**எண்கள் இரட்டல்**

ஒரே எண் இரட்டும்போது, ஒவ்வொன்று, இவ்விரண்டு, மும்மூன்றும், நந்நான்கு, ஐயைந்து, அவ்வாறு, எவ்வெழு, எவ்வெட்டு. பப்பத்து என இரட்டிவரும். இவ்வாறு எண்குறித்த பல்வேறு செய்திகளையும் தொகுத்துச் சுட்டுவார் நன்னூலார்.

## 2.6 வினையியலில் நன்னூலார் கூறும் கருத்துக்கள்

**முன்னுரை**

பெயர்ச் சொல்லின் சிறப்பியல்பு வேற்றுமையுருபு ஏற்றல். வினைச்சொல்லின் சிறப்பியல்புகாலங்காட்டுதல் எம்மொழியிலும், வினை சொல் சிறப்பிடம்பெறும். பொருளின் புடை பெயர்ச்சியைக் காட்டுவது வினையே ஆதலின், தமிழிலும் தொல்காப்பியரும் பவணந்தியாரும் வினைச் சொல்லின் சிறப்பினை மறவாமல் போற்றுகின்றனர். பவணந்தியார் தம் நன்னூல் வினையியலில் கூறும் செய்திகளை இங்கே ஆராய்வோம்.

**தெரிநிலை வினை**

காலத்தை வெளிப்படையாகக் காட்டுதல் தெரிநிலை வினையின் இலக்கணம், காலத்தோடு, கருத்தா, கருவி, நிலம், செயல் செயப்படுபொருள் என்ற ஐந்தும் புலப்டும் தன்மை உண்டு. இதனை நன்னூல்.

*செய்பவன் கருவி நிலஞ் செயல் காலம்*
*செய் பொருள் ஆறுந் தருவது வினையே* (320)

என்ற சூத்திரத்தால் குறிக்கின்றது.

**குறிப்பு வினை**

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்ற ஆறின் அடிப்படையில் தோன்றி கருத்தாவை மட்டும் விளக்குவது குறிப்பு வினை சொல்லினது இலக்கணமாகும். இதனையே நன்னூல்.

*பொருள் முதல் ஆறி னும் தோற்றிமுன் ஆறனுள்*
*வினைமுதல் மாந்திரை விளக்கல் வினைக்குறிப்பே* (321)

என்ற சூத்திரத்தால் விளக்குகின்றது.

(எ-டு) குளையினன், அகத்தினன் முதலாயின,

**வினைச் சொற்களின் வகை**

வினைச்சொற்களின் பாகுபாடு பின்னர்க் கூறப்படுகின்றன. முற்றுவினைச்சொற்கள், பெயரெச்ச வினைச்சொற்கள், வினையெச்ச வினைச்சொற்கள் என்பன அப்பாகுபாடுகள். அவையே வேறொரு வகையில் நோக்க, திணைபால் இடங்களுள் ஒன்றற்கு உரியனவும், பொதுவாகி நிற்பனவும் என ஆகும்.

தன்மை முன்னிலை என்பவற்றில் ஒருமை பன்மைகளும், படர்க்கையில் ஆண், பெண், பலர் ஒன்று பல என்ற பால்களும் ஆகியவற்றுடன் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்றினையும் தனித்தனியே கூட்ட.., முறையே ஆறு ஆறு பதினைந்து என இருபத்தேழு ஆகத் தெரிநிலை வினைமுற்று விரியும்.

**படர்க்கை விகுதிகள் பற்றிய செய்தி**

படர்க்கையின் ஐம்பால்களுக்கும் உரிய விகுதிகளைப் பின்பு நன்னூல் கூறுகின்றது. அன் ஆன் என்பன ஆண்பால் விகுதிகள்; அள் ஆள் என்பன பெண்பால் விகுதிகள்; ஆர்-ஆர் ப மார் என்பன பலர்பால் விகுதிகள், து று டு என்பன ஒன்றன்பால் விகுதிகள்; அ ஆ பலவின் பால் விகுதிகள் எனக்காட்டி, இவற்றுள் சிலவற்றிற்கு நன்னூலார் சிறப்பு விகுதிகளும் கூறுகின்றார். மார் ஈறு வினையொடு முடிதலும், டு ஈறு குறிப்பின் வருதலும் ஆ ஈறு எதிர்மறைக்கண் ஆதலும் அச்செய்திகளாகும்.

**இருதிணைப் பொது வினைகள்**

தன்மை, முன்னிலை வியங்கோள் வேறு இல்லை. உண்டு, பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய எட்டும், உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டிற்கும் பொதுவான வினைகளாகும் என்ற செய்தியை நன்னூல் அடுத்துக் கூறுகிறது.

**தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை**
**உண்(டு) ஈரெச்சம் இருதிணைப் பொதுவினை** *(330)*

என்பது சூத்திரம். பின்பு இவற்றைத் தனித்தனியே நன்னூல் விளக்குகிறது.

**தன்மை முன்னிலை விதிகள்**

தன்மை ஒருமைக்கும் (குடுதுறு அல் அன் என் ஏன்). பன்மைக்கும் (கும், டும், தும், றும், அம், ஆம், எம் ஏம், ஓம்) உரிய விகுதிகளைக் கூறியபின் முன்னிலைக்குரிய விகுதிகளை நன்னூல் கூறுகின்றது. ஐ, ஆய், இ என்பன முன்னிலை ஒருமைக்கும் இர், ஈர் என்பன முன்னிலைப் பன்மைக்கும் உரிய விகுதிகள் ஆகும்.

**வியங்கோள் வினைமுற்று**

ஐம்பால் மூவிடத்திலும் வரும். வியங்கோளை நன்னூல் பின்வருமாறு கூறுகின்றது.

**கயவோடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கும் என்ப** *(338)*

வியங்கோள் வினைமுற்று விகுதிகள் க, ய, ரகர வொற்று என்பன. இவற்றுள் ரகர வொற்று தனித்தியலாமல் யகரத்தோடு சேர்ந்தே வரும்.

(எ-டு) வாழ்க, வாழிய, வாழியர்.

இவ்வியங்கோள் முற்றுகள் , வாழ்த்துதல், விதித்தல், வேண்டல், வைதல் ஆகிய பொருள்களில் வரும்.

(எ-டு) வாழ்க, செல்க, அருளுக, கெடுக.

**வேறு இல்லை உண்டு**

இம்மூன்றும், தொடக்க காலத்தில், ஒன்றன்பாலுக்குரியவாய் விளங்கியவை காலப்போக்கில் ஐம்பால் மூவிடத்திற்கும் இவை உரியவாயின எனவே.

வே(று) இல்லை உண்(டு) ஐம்பால் மூவிடத்தன (339)

என்று நன். சூத்திரம் கூறுகின்றது.

**பெயரெச்சம்**

பெயரெச்சம் காலமும் செயலும் தோன்ற நிற்கும் அவ்வினை முற்றுவதற்குரிய பால், அறுவகைப் பொருட்பெயர் ஆகியன தோன்றாது. அதாவது, பெயர் எஞ்சி நிற்கும் செய்த செய்கின்ற செய்யும் என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றாய் வரும்.

**வினையெச்சம்**

தொழிலும் காலமும் புலப்படுத்தி பாலும் வினையும் எஞ்சி நிற்பது வினையெச்சம். அதன் இலக்கணத்தையும் வாய்ப்பாடுகளையும் நன்னூல் பின்வருமாறு கூறுகின்றது.

*தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை*
*ஒழிய நிற்பது வினையெச்சச் சம்மே (342)*
*செய்து செய்பு செய்யாச் செய்யூ*
*செய்தெனச் செயின் செய்யிய செய்யியர்*
*வான்பான் பாக்கிடை வினையெச்சம் பிற*
*ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும் (343)*

பின்பு இவ்வினையெச்சங்கட்குரிய முடிவுகள் கூறப்படுகின்றன.

**முடிவுரை**

ஆக்க வினைக்குறிப்பு ஆக்கமின்றியலாமை, செம்யும் என்னும் முற்று படர்க்கையில் நான்கு பால்களில் மட்டுமே வருதல். யார் எவன் என்னும் சொற்கள், முற்றெச்சம் ஆகியவறை பற்றிக் கூறி நன்னூல் வினையியல் முடிகின்றது. தொல்காப்பியம் கூறும் செய்திகளுள் பலவற்றை வழிமொழிந்தும் புதியன புகுதலாக வந்தவற்றைக் காட்டியும் நன்னூல் வினையியல் அமைந்துள்ளது.

# உ. முன்னைய ஆண்டு வினாத்தாள்கள்

B.A. Degree Examination, April 1982

Part III - Branch (a) Tamil

Second Year

தாள் - 3 இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

**வினாத்தாள் - 1**

**Time : Three Hours** **Maximum : 100 marks**

***1. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் நான்கிற்கு ஓரிரு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடை தருக.*** ***(4 x 10 = 40)***

அ) உகரம் குறுகி வருமாற்றை விளக்குக.

ஆ) போலியின் வகையும் விளக்கமும் தருக.

இ) ஆய்தக் குறுக்கம், முற்றாய்தம் இவற்றினை விளக்குக.

ஈ) சார்பெழுத்துக்களின் பிறப்பிடம் கூறி விளக்குக.

உ) பண்பிற்கியல்பாவன யாவை?

ஊ) காலங்காட்டும் விகுதிகளைத் தருக.

(எ) ஒன்பதுடன் பத்தும் நூறும் வந்து புணரும் விதிகளை விளக்குக.

***2. பின்வரும் எவையேனும் மூன்று வினாக்கட்கு மூன்று பக்க அளவில் ஆய்வுக் கட்டுரை எழுதுக.*** ***(3 x 20 = 60)***

அ) குற்றியலுகரம், மெய்ம்மயக்கங்கள் பற்றிய நன்னூலார் கருத்துடன் களை மொழிநூலார் கருத்துக்களுடன் ஒப்பிடுக.

ஆ) பதவியல் சிறப்புக்களைத் தருக.

இ) மெய்யொலிகள் உச்சரிப்பைப் பற்றிய நன்னூரார் கருத்துக் மொழி நூலார் கருத்தினை ஒப்பிடுக.

ஈ) சாரியை பற்றி நன்னூலார் கூறுவனவற்றை விளக்குக.

உ) நன்னூலார் புணரியலில் புறநடையாகக் கூறுவன யாவை?

B.A. Degree Examination, October 1982

Part III - (a) Tamil

Second Year

தாள் - 4 இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

**வினாத்தாள் - 2**

**Time : Three Hours** **Maximum : 100 marks**

**1. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் நான்கிற்கு ஓரிரு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடை எழுதுக.** ***(4 x 10 =40)***

அ) உயிர்மெய்யொலிகள் தோன்றி வரும் வழிகளை விளக்குக.

ஆ) இடைநிலை மெய்ம்மயக்கத்தின் வகையும் விளக்கமும் தருக.

இ) முதல் எழுத்துக்களின் பிறப்புணர்த்துக.

ஈ) . . . அம்முதல் நடத்தல்தானே முறை. . . . விள்க்கம் தருக.

உ) தெரிநிலை வினையின் விகுதிகள் யாவை?

ஊ) அகமுகனர்ச் செவிகைவரின் இடையன கெடும் விளக்குக.

எ) உடம்படு மெய்யினை விளக்குக.

**2. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் ஆய்வுக் கட்டுரை தருக.** *(3 x 20 = 60)*

அ) உயிரெழுத்துக்களின் பிறப்புப் பற்றிய நன்னூலார் கருத்துக்களுடன் மொழிநூலார் கருத்துக்களை ஒப்பிடுக.

ஆ) ஐகார ஔகார ஒலிகள் பற்றிய பவணந்தியார் கருத்தினை மொழிநூலார் கருத்துக்களுடன் ஒப்பிடுக.

இ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் குறித்து ஒரு கட்டுரை தருக.

ஈ) வினைச்சொற்கள் காலங்காட்டும் முறை பற்றிய நன்னூலார் கருத்துக்களை மொழிநூலார் கருத்துக்களுடன் ஒப்பிடுக.

உ) உயிரீற்றுப் புணரியல் என்னும் இயலின் சிறப்புக்களை விரித்துரைக்க.

## B.A. Degree Examination, April 1983

## Part III - (a) Tamil

## Second Year

### தாள் - 4 இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

### வினாத்தாள் - 3

**Time : Three Hours** **Maximum : 100 marks**

**1. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் நான்கிற்கு ஓரிரு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடை எழுதுக.** *(4 x 10 = 40)*

அ) சார்பெழுத்திற்கு இடமும் முயற்சியும் நன்னூலில் எங்ஙனம் கூறப்படுகின்றன.

ஆ) மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள் யாவை?

இ) *வெவ்வே றெழுத்தாய் வரல் பிறப்பே* - விளக்குக.

ஈ) பால்பகா அஃறிணைப் பெயரை விளக்குக.

உ) விளியேலாப் பெயர்களை யாவை?

ஊ) தொகை நிலைத் தொடரின் பொது இலக்கணம் யாது?

எ) அறுவகை வினாவினை விளக்குக.

**2. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் ஆய்வுக் கட்டுரை தருக.** *(3 x 20 = 60)*

அ) மெய்யெழுத்துக்கள் பிறப்புப் பற்றிய நன்னூலார் கருத்துக்களோடு இக்கால மொழிநூலார் கருத்துக்களோடு ஒப்பிட்டுக் காண்க.

ஆ) பகுபதம், பகாப்பதம் பற்றிய நன்னூலார் கருத்துக்களை இக்கால மொழி நூலார் கருத்துக்களை ஒப்பிடுக.

இ) எடுத்த படுத்த னலித வுழப்பிற்

றிரிபுந் தத்தமிழ் சிறி துள வாகும்

என்னும் நன்னூல் கருத்தை இக்கால மொழி நூலார் கருத்தோடு ஒப்பிட்டு விளக்குக.

## B.A. Degree Examination, October 1983

## Part III - (a) Tamil

## Second Year

### தாள் - 4 இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

### வினாத்தாள் - 4

**Time : Three Hours** **Maximum : 100 marks**

**1. கீழ்வரும் வினாக்களில் எவையேனும் நான்கிற்கு ஓரிரு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாதவாறு விடை எழுதுக.** *(4 x 10 = 40)*

அ) *பெயரோடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்* விளக்குக.

ஆ) உயிரளபெடை குறித்து நன்னூலார் கூறுவன யாவை?

இ) காலங்காட்டும் விகுதிகளை விளக்குக.

ஈ) திணை, பால் வழுவமைதிகளைப் புலப்படுத்துக.

உ) உம்மைத் தொகைக்குப் புறனடை விதி யாது?

ஊ) எண்வகை விடையினை விளக்குக.

எ) சுட்டுப் பெயர் அமையும் வகைகளைப் புலப்படுத்துக.

**2. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் ஆய்வுக் கட்டுரை தருக.** (3 x 20 = 60)

அ) பகுபதவுறுப்புகள் குறித்து நன்னூலார் கருத்தையும் இக்கால மொழி நூலார் கருத்தையும் ஒப்பிடுக.

ஆ) பெயரிடை நிலை, வினை இடைநிலை ஆகியவற்றை நன்னூலார் கருத்தோடு இக்கால மொழி நூலார் கருத்து வழி நின்று ஆய்க.

இ) மூவிடப் பெயர்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

ஈ) விளியுருபுகளையும், உயர்திணை அஃறிணைப் பெயர்கள் அவற்றை ஏற்கும் முறைகளையும் விளக்குக.

உ) வினை எச்ச வாய்ப்பாடுகளை நன்கு விளக்கி, விரிவான கட்டுரை வரைக.

## B.A. Degree Examination, April 1984

## Part III - (a) Tamil

## Second Year

## Paper IV - இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

## வினாத்தாள் - 5

**Time : Three Hours** **Maximum : 100 marks**

**1. கீழ்வரும் கேள்விகளில் நான்கிற்கு ஒன்று அல்லது இரண்டு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் பதில் எழுதுக.** **(4 x 10 = 40)**

(அ) முன்னத்தின் உணரும் கிளவி என்றால் என்ன?

(ஆ) தற்கிழமையை விளக்கு.

(இ) வினாவினும் செப்பிலும் சினைமுதல் விரவுமோ?

(ஈ) ஏவலுக்கும் வியங்கோளுக்கும் இடையே உள்ள ஒற்றுமை - வேற்றுமைகளைக் கூறுக.

(உ) ர, ல, ய என்ற எழுத்துக்களில் தொடங்கும் வடசொற்கள் தமிழில் எங்ஙனம் மாறும்?

(ஊ) *புள்ளும் வள்ளும் தொழிற்பெயர்மானும்* - பொருள் கூறுக.

(எ) எழுத்துப் போலிக்கு மொழியியல் முறைப்படி என்ன பெயர்?

**2. கீழ்வரும் கேள்விகளில் மூன்றிற்கு மும்மூன்று பக்க அளவில் பதில் எழுதுக.** **(3 x 20 = 60)**

(அ) பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே இச் சூத்திரத்தினால் அறியக் கிடக்கும் மொழியியல் தன்மையை விளக்கி வரைக.

(ஆ) பண்டைய இலக்கணங்களிலும் அவற்றின் உரைகளிலும் தமிழ்க் கிளைமொழிகள் பற்றிக் காணப்படும் குறிப்புகளைத் தொகுத்துத் தருக.

(இ) நன்னூலின் சிறப்பினைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(ஈ) சங்கர நமச்சிவாயரின் உரைத் திறத்தைப் பாராட்டி எழுதுக.

(உ) நன்னூலில் காணப்படும் உருபனியல் சிறப்பை விளக்குக.

B.A. Degree Examination, Octoper 1984

Part III - Branch XII (a) Tamil

Second Year

Paper IV - இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

வினாத்தாள் - 6

Time : Three Hours | Maximum : 100 marks

1. கீழ்வரும் கேள்விகளில் நான்கிற்கு ஒன்று அல்லது இரண்டு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் பதில் எழுதுக. (4 x 10 = 40)

(அ) எந்த எந்த எழுத்துக்களின் புணர்ச்சியினால் ஆ தம் தோன்றும்?

(ஆ) குற்றியலுகரம் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

(இ) உடம்படுமெய்கள் தோன்றும் இடங்கள் யாவை?

(ஈ) தீர்க்க சந்தியை விளக்குக.

(உ) *ஒருவன் ஒருத்திப் பெயர்வேல் எண்ணில்* பொருள் கூறுக.

(ஊ) காலம் கடந்த பெயரெச்சம் எது?

(எ) *ஒரு பொருட் பன்மொழி சிறப்பின வழா* - விளக்குக.

2. கீழ்வரும் கேள்விகளில் மூன்றிற்கு, மும்மூன்று பக்க அளவில் பதில் எழுதுக. (3 x 20 = 60)

(அ) தற்காலத் தமிழின் கிளை மொழிகளில் நகரமும் ழகரமும் அடைந்துள்ள திரிபுகளை விளக்குக.

(ஆ) சிவஞான முனிவரின் இலக்கணப்புலமை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

(இ) நன்னூலில் காணப்படும் ஒலியியல், ஒலியனியல் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

(ஈ) நன்னூல் ஐந்திற்கும் இலக்கணமாகுமா? ஆய்க.

(உ) தமிழில் காணப்படும் வடச்சொறகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி அவை அடைந்துள்ள திரிபுகளை விளக்குக.

B.A. Degree Examination, April 1985

Part III - Branch XII (a) Tamil

Second Year

Paper IV - இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

வினாத்தாள் - 7

Time : Three Hours | Maximum : 100 marks

1. கீழ்வரும் கேள்விகளில் நான்கிற்கு ஒன்று அல்லது இரண்டு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் பதில் எழுதுக. (4 x 10 = 40)

(அ) சார்பு எழுத்துக்களின் வகைகள் யாவை?

(ஆ) நன்னூலார் குறிக்கும் மொழி முதல் எழுத்துக்கள் எவை?

(இ) எழுத்ததிகாரத்துள் பதவியல் அமைந்ததன் காரணம் யாது?

(ஈ) ஓரெழுத்தொரு மொழிகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.

(உ) உருபு மயக்கம் என்றால் என்ன? விளக்குக.

(ஊ) *ஒரு மொழி ஒழிதன் இனங்கொளற் குறித்தே* பொருள் கூறுக.

2. கீழ்வரும் கேள்விகளில் மூன்றிறகு, மும்மூன்று பக்க அளவில் பதில் எழுதுக. (3 x 20 = 60)

(அ) நன்னூலார் கூறும் எழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தை மொழிநூலார் கூற்றோடு ஒப்பிட்டு விளக்குக

(ஆ) நன்னூலார் குறிப்பிடும் எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி விதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(இ) நன்னூலார் சுட்டும் பெயரச்ச இலக்கணம் பற்றி விளக்குக.

(ஈ) அறுவகைத் தொகைச் சொற்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(உ) சிவஞானமுனிவரின் உரை நயம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## B.A. Degree Examination, October 1985

## Part III - Branch XII (a) Tamil

## Second Year

## Paper IV - இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

### வினாத்தாள் - 8

**Time : Three Hours** **Maximum : 100 marks**

1. கீழ்வரும் கேள்விகளில் நான்கிற்கு ஒன்று அல்லது இரண்டு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் பதில் எழுதுக. **(4 x 10 = 40)**

(அ) எழுத்துக்களின் வடிவம் பற்றி நன்னூலார் கூறுவன யாவை?

(ஆ) ஒற்றளபெடை என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?

(இ) நன்னூலார் கூறும் பொதுப்புணர்ச்சி இலக்கணம் யாது?

(ஈ) எண்வகை விடைகள் யாவை?

(உ) இரட்டைக்கிளவி இரட்டிற்பிரிந் திசையா - பொருள் கூறுக.

(ஊ) முன்னத்தின் உணருங் கிளவியு முளவே - விளக்குக.

(எ) பொருள்கோள்கள் எத்தனை? விளக்குக.

2. கீழ்வரும் கேள்விகளில் மூன்றிற்கு, மும்மூன்று பக்க அளவில் பதில் எழுதுக. **(3 x 20 = 60)**

(அ) நன்னூலார் சுட்டும் இடை நிலை மெய்ம்மயக்கத்தினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(ஆ) நன்னூலார் கூறும் பதவியல் கருத்துக்களை விளக்குக.

(இ) நன்னூலில் காணப்படும் புணர்ச்சி விதிகளை மொழி நூலார் கோட்பாட்டோடு ஒப்பிட்டெழுதுக.

(ஈ) நன்னூலார் சுட்டும் வழு, வழுவமைதி பற்றி ஒரு கட்டுரை வரைக.

(உ) நன்னூலர் விளக்கும் அல்வழி வேற்றுமைத் தொடர்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## B.A. Degree Examination, April 1986

## Part III - Branch XII (a) Tamil

## Second Year

## Paper IV - இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

### வினாத்தாள் - 9

**Time : Three Hours** **Maximum : 100 marks**

1. எவையேனும் நான்கனுக்கு ஒவ்வொன்றினுக்கும் ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

**(4 x 10 = 40)**

1. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் தந்து, அவை நன்னூல் சிறப்புப் பாயிரத்திற்குப் பொருந்தி வருமாற்றைப் புலப்படுத்துக.

2. இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின - இந்நூற்பாவின் பொருள்களைச் சங்கர நமச்சிவாயர் வழி நின்று விளக்குக.

3. பண்புச் சொற்களுக்குக் கூறப்பெற்ற விதிகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

4. தேங்காய், அஞ்சிறை, வேட்மை, தெம்முனை, அஃகடிய, பானாட்டு, ஆதிபகவன் - இவற்றுள்

எவையேனும் ஐந்தனுக்குப் புணர்ச்சிவிதி கூறுக.

5. ஆகுபெயரின் இலக்கணமுணர்த்தி, அதன் வகைகளைக் காட்டுடன் விளக்குக.

6. வினையொடு முடியும் முற்றுகள் யாவை? காட்டுத் தந்து விளக்குக.

7. எல்லா இடத்துக்கும் உரிய அசைச்சொற்கள், முன்னிலை அசைச் சொற்கள் யாவை?

**2. எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் பதில் எழுதுக.**

**(3 x 20 = 60)**

1. எழுத்துக்களின் இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்புக்களை நன்னூலொடு மொழிநூலார் துணைக்கொண்டு விவரிக்க.

2. வருமொழி முதல் திரிபு (Progressive), நிலைமொழி ஈறுதிரிபு (Regressine), இருமொழித் திரிபு (Reciprocal) - ஆகியவற்றைப் புணரியல் துணைக்கொண்டு நன்கு விளக்குக.

3. வியங்கோள் - ஏவல் வினைகளைப் பற்றி விளக்கி வரைக.

4. நன்னூல் பொதுவியல் கூறும் வழுவமைதிகளைத் தொகுத்து வரைக.

5. பொருள்கோள் பற்றித் தக்க எடுத்துக்காட்டுகளுடன் கட்டுரை ஒன்று வரைக.

## B.A. Degree Examination, October 1986

## Part III - Branch XII (a) Tamil

## Second Year

## Paper IV - இலக்கணம் - எழுத்தும் சொல்லும்

### வினாத்தாள் – 10

**Time : Three Hours** **Maximum : 100 marks**

**1. எவையேனும் நான்கனுக்கு ஒவ்வொன்றினுக்கும் ஒரு பக்க அளவில் விடை எழுதுக.**

**(4 x 10 = 40)**

1. சூத்திரம் எத்தனை வகைப்படும்? எவையேனும் இரண்டு வகையைக் காட்டுத் தந்து விளக்குக.

2. சார்பெழுத்தின் வகை, விரிகளைக் குறிப்பிட்டுக் குற்றியலுகரம் ஆறாறு ஆயிற்ற விளக்குக.

3. காலங்காட்டும் இடைநிலைகள், காலங்காட்டும் விகுதிகள் ஆகியவற்றை உதாரணங்களுடன் தருக.

4. மகத்துக்கை, மூன்றில், வழுதுணங்கள், நாடுரி, பொற்றகடு, மருத்துப்பை, தெவ்வுக்கடிது - இவற்றில் எவையேனும் ஐந்தனுக்குப் புணர்ச்சி விதி தருக.

5. எட்டுவகை வேற்றுமைகட்கும் முடிக்கும் சொற்கள் யாவை? விளங்க வரைக.

6. அவற்றுள்

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும்

வினைமுதல் கொள்ளும் பிறவு மேற்கும் பிற - இந்நூற்பாவின் பொருளை சங்கர நமச்சிவாயர் வழிநின்று விளக்குக.

7. ஒருகுணம் தழுவிய உரிச்சொல், பலகுணம் தழுவிய உரிச்சொற்களை விளக்குக.

**2. எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று பக்க அளவில் பதில் எழுதுக.**

**(3 x 20 = 60)**

8. நன்னூலார் வைப்புமுறை பிறழாது நூற்பா யாக்கும் ஆற்றலர் என்பதனைச் சங்கர நமச்சிவாயர் உரை கொண்டு விளக்குக.

9. வேற்றுமைகள் பற்றிக் கட்டுரை வரைக. வேற்றுமை ஒன்பதென்னக் காரணம் யாது?

10. செயப்படுபொருள் எத்தனை வகைத்து? அஃது அகநிலையாகவும், தானே கருத்தாவாகவும் வருதல் யாங்ஙனம்? சிவஞானமுனிவர் வழி நின்று புலப்படுத்துக.

11. தொகைநிலைத் தொடர்மொழியை விளக்கி, வகைக்கோர் எடுத்துக்காட்டுத் தருக.

12. இடைச்சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, அவை வரும் பொருள்களையும் விளக்கி வரைக.

## B.A. DEGREE EXAMINATION, MAY 1995

### Second Year

### Part III - Branch XII (a) - Tamil - Main

### Paper IV - இலக்கணம் : எழுத்தும், சொல்லும்

Time : Three hours    Maximum : 100 marks

பிரிவு அ — (4 x 10 = 40 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் பற்றி எழுதுக.
   (ஆ) உயிர் எழுத்துக்களின் பிறப்புப் பற்றி விளக்குக.
   (இ) காலம் காட்டும் இடைநிலைகள், விகுதிகள் பற்றி விவரி.
   (ஈ) அங்கை, குண்டுக்கட்டு, எண்பது — புணர்ச்சி விதி கூறுக.
   (உ) சொல் எத்தனை வகைப்படும்? உதாரணத்துடன் விளக்குக.
   (ஊ) இரண்டாம் வேற்றுமை பற்றிய கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.
   (எ) தெரிநிலை வினைமுற்றின் பாகுபாட்டினை விவரி.
   (ஏ) தொகாநிலைத் தொடர் மொழிகள் பற்றி எழுதுக.

பிரிவு ஆ — (3 x 20 = 60 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் மூன்று பக்க அளவில் விடை தருக.

2. (அ) நன்னூலார் கூறும் சார்பெழுத்துக்கள் பற்றி விளக்குக.
   (ஆ) பகுபத உறுப்புக்கள் பற்றிய கருத்துக்களை விவரி.
   (இ) இடைச்சொல் இலக்கணம் பற்றிய செய்திகளைத் தெளிவுபடுத்துக.
   (ஈ) பெயரெச்சம், வினையெச்சம் பற்றி விவரி.
   (உ) வழாநிலை, வழுவமைதி பற்றி எழுதுக.

## B.A. DEGREE EXAMINATION, OCTOBER 1998

### Second Year

### Part III - Branch XII (a) - Tamil

### Paper IV - இலக்கணம் : எழுத்தும், சொல்லும்

Time : Three hours    Maximum : 100 marks

பிரிவு அ — (4 x 10 = 40 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.

1. (அ) உயிர் எனவும், மெய் எனவும் எழுத்துக்களுக்குப் பெயர் வழங்கக் காரணம் என்ன?
   (ஆ) பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
   (இ) உடம்படுமெய் என்பது யாது? விளக்கி வரைக.
   (ஈ) பண்டைக்காலம், கோறீமை, முன்றில், மும்மூன்று — புணர்ச்சி விதி கூறுக.
   (உ) பெயரின் பொது இலக்கணம் கூறி விளக்குக.
   (ஊ) வியங்கோள் வினைமுற்று விதிகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி வரைக.
   (எ) "முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே" — விளக்குக.
   (ஏ) ஓசை என்னும் ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் யாவை?

பிரிவு ஆ — (3 x 20 = 60 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் மூன்று பக்க அளவில் விடை தருக.

2. (அ) நன்னூலார் கூறும் எழுத்துகளின் பிறப்பிலக்கணத்தை மொழிநூலார் கூற்றோடு ஒப்பிட்டு விளக்குக.
   (ஆ) அகர ஈற்றுச் சொற்கள் ஆறன் முன்னும் வல்லெழுத்துகள் எவ்வாறு இயல்பாகும்?
   (இ) ஆகுபெயரை அதன் வகைகளுடன் விளக்குக.
   (ஈ) நன்னூல் பொதுவியல் கூறும் வழுவமைதிகளைத் தொகுத்து வரைக.
   (உ) எண்வகைப் பொருள் கோள்களை விளக்குக.